ம் நவமுட்டும்　　　மக்கள் அரசு, 24.10.77
சென்னை, அக். 24

மிழ் படித்த மக்கள் அவையின் கரங்களிலும்
ற அமைச்சர் பேராசிரியர் ராமச்சந்திரன்,
ாயப்பட்ட லஜபதிராய் அரங்கில்
விழா நடைபெற்றது. மழையையும்
ம் பொதுமக்களும், கட்சித்தோழர்களும்
புக்கு தமிழ்நாடு ஜனதாக் கட்சித்
மை தாங்கினார். மக்கள் அரசு முதல்
ள் வெளியிட்டார்.

[ISSUED 12-3-1973]

TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

OFFICIAL REPORT

SATURDAY, 3rd FEBRUARY 1973

Volume CIII—No. I

©
GOVERNMENT OF TAMIL NADU
1973

Legislative Council Department
Madras-9

Tamil Nadu Legislative Council Debates

Fourth

FORTY-~~FIRST~~ SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

3RD, 5TH, 6TH AND 7TH FEBRUARY 1973.

Volume CIII (Nos. 1 to 4)

TABLE OF CONTENTS

	PAGES
Personnel of the Government of Tamil Nadu ...	i–v
Principal Officers of the Tamil Nadu Legislative Council	vii
List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies	ix–xi
Saturday, 3rd February 1973.	
I. Obituary reference *re* demise of Thiru P. Gopal, Member, Legislative Assembly and Thiru T. S. Arunachalam, former Member, Legislative Council	1–2
II. Condolence resolution *re* demise of Thiru C. Rajagopalachariar, former Chief Minister of Tamil Nadu and former Governor-General of India	2–27
Monday, 5th February 1973.	
I. Questions and Answers	29–60
II. Announcement *re*—	
(i) Notice of amendments to the Motion of Thanks for the Governor's Address ...	60
(ii) Decision of the Business Advisory Committee.	60–61

63079

Monday, 5th February 1973—cont.

		PAGES
III	Panel of Vice-Chairmen	61
IV.	Statement by the Hon. the Minister for Food *re* correction of answer to a supplementary question under starred question No. 83 ...	61–62
V	Statement by the Hon. the Minister for Harijan Welfare *re* correction of answer to a supplementary question under starred question No. 223	62
VI.	Discussion on the Governor's Address ...	63–113
VII.	Papers laid on the table of the House	113–118

Tuesday, 6th February 1973.

I	Questions and Answers	135–163
II.	Adjournment motion	163
III.	Discussion on the Governor's Address—*cont.*	163-215
IV	Papers laid on the table of the House ...	215

Wednesday, 7th February 1973.

I.	Questions and Answers	217–248
II.	Adjournment motion *re*— Hardship caused due to electric power cut throughout the State and particularly in Thanjavur district	248–251
III.	Discussion on the Governor's Address—*cont.*	251–309
IV.	Papers laid on the table of the House	309–311
Index	... ...	315–346

PERSONNEL OF THE GOVERNMENT OF THE TAMIL NADU.

Governor of Tamil Nadu.

THIRU KODARDAS KALIDAS SHAH.

Members of the Council of Ministers.

1. THE HON. DR. M. KARUNANIDHI, Chief Minister in-charge of Public, Finance, Planning, General Administration, Matters relating to I.C.S. and I.A.S. Officers, District Revenue Officers, Police, Elections, Information and Public Relations; Cinematograph Act, Newsprint Control, Tamil Nadu Drainage and Water-supply Board, Slum Clearance Board, Film Technology, Operation Flood Project and Tamil Nadu Dairy Development Corporation and Youth Service Corps.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN, Minister in-charge of Education including Technical Education, Official Language, Legislature, Municipal Administration, Community Development, Panchayats and Panchayat Unions.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN, Minister in-charge of Public Health, Medicine and Animal Husbandry.

4. THE HON. THIRU N. V. NATARAJAN, Minister in-charge of Labour, Stationery and Printing, Government Press, Prosperity Brigade, Legislation on Weights and Measures, Statistics and Registration.

5. THE HON. THIRUMATHI SATYAVANI MUTHU, Minister in-charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggar's Home, Orphanages, Approved Schools and Vigilance Services, Indians Overseas, Refugees and Evacuees.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM, Minister in-charge of Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors, Commercial Taxes and Prohibition.

7. THE HON. THIRU S. MADHAVAN, Minister in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA, Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Waqfs.

9. THE HON. THIRU SL. PA. ADITANAR, Minister in-charge of Co-operation, Pots, Agricultural Refinance, Agricultural Engineering Wing of the Directorate of Agriculture except Soil Conservation Schemes, Passports, and Prices and Supplies of Goods Act.

10. THE HON. THIRU A. P. DHARMALINGAM, Minister in-charge of Agriculture.

11. THE HON. THIRU MANNAI P. NARAYANASWAMI, Minister in-charge of Food, Food Production, Khadi and Village Industries and Rural Industries Project.

12. THE HON. THIRU K. RAJARAM, Minister in-charge of Backward Classes, Tourism, Housing and Accommodation Control.

13. THE HON. THIRU O. P. RAMAN, Minister in-charge of Electricity, Legislation on Money Lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests and Cinchona.

14. THE HON. THIRU S. RAMACHANDRAN, Minister in-charge of Transport, Nationalised Transport and Motor Vehicles Tax.

15. THE HON. THIRU M. KANNAPPAN, Minister in-charge of Religious Endowments, Ex-Servicemen, Bhoodan, Gramdan and Milk excluding Operation Flood Project and Tamil Nadu Dairy Development Corporation.

தமிழ் நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

தமிழ் நாடு ஆளுநர்.

மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா.

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி (முதலமைச்சர்)**—கீழ்க் கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுத்துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், செய்தி-விளம்பரம், திரைப்படச் சட்டம், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, தமிழ் நாடு கழிவுநீர்-குடிநீர் வாரியம், குடிசை மாற்று வாரியம், திரைப்படத் தொழில் நுட்பவியல், பால் பெருக்குத் திட்டம், தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம், இளைஞர் அணி.

2. **மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர்)**—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, சட்ட மன்றம், நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்.

3. **மாண்புமிகு திரு. க. அன்பழகன் (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)**—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுச் சுகாதாரம், மருத்துவம், கால்நடை வளர்ப்பு.

4. **மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்)**—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழிலாளர், எழுதுபொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம், சீரணி, எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரம், பத்திரப் பதிவு.

5. **மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து (அரிசன நலத் துறை அமைச்சர்)**—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனளம்,

இராவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (வருவாய்த் துறை அமைச்சர்)—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வணிக வரிகள், மதுவிலக்கு, ஆயத்தீர்வை.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப்பொருள்கள், இரும்பு-உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்புப் பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச் சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (பொதுப்பணித் துறை அமைச்சர்)—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுப்பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (கூட்டுறவுத் துறை அமைச்சர்)—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—கூட்டுறவு, துறைமுகங்கள், வேளாண்மை மறு நிதி உதவி, மண் வளப் பாதுகாப்புத் திட்டங்கள் நீங்கலாக வேளாண்மை இயக்கத்தின் வேளாண்மைப் பொறியியற் பிரிவு, பயண அனுமதிச் சீட்டுகள், சரக்குகளின் விலைகள்-வழங்கல் குறித்த சட்டம்.

10. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் (வேளாண்மைத் துறை அமைச்சர்)—கீழ்க்கண்ட துறைக்கு பொறுப்பு வகிப்பார்:—வேளாண்மை.

11. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி (உணவுத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—உணவு, உணவு உற்பத்தி, கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம்.

12. மாண்புமிகு திரு. க. இராசாராம் (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பின்தங்கிய வகுப்பினர் நலன், சுற்றுலா, வீட்டு வசதி, இட வசதிக் கட்டுப்பாடு.

13. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்)—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா.

14. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) :—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி.

15. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அறநிலையத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—அறக் கட்டளைகள், பால் வழங்குத் துறை, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான-கிராமதான இயக்கங்கள், பால்பெருக்குத் திட்டம், தமிழ்நாடு பால்பண்ணை வளர்ச்சிக் கழகம் ஆகியவை நீங்கலாக பால் உற்பத்தி.

தமிழ்நாடு சட்ட மன்றத்தின் முக்கிய அலுவலர்கள்.

சட்ட மன்றத் தலைவர்.

மாண்புமிகு திரு. சி. பி. சிற்றரசு.

சட்ட மன்றத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. ம. பொ. சிவஞானம்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. கே. அறிவழகன்.
2. திரு. என். சுந்தரேசத் தேவர்.
3. திரு. அய்யண்ணன் அம்பலம்.
4. திரு. எஸ். நாராயணசாமி.

சட்ட மன்றச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

உதவிச் செயலாளர்.

திரு. த. பி. டெல்லி துரை, பி.எஸ்ஸி.

விவாதப் பதிப்பாளர்.

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களின்
(தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட பட்டியல்.)

தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
1 அப்துல் வகாப், கே. எஸ். ..	மாநிலச் சட்டப் பேரவை.
2 அய்யணன் அம்பலம்	மதுரை உள்ளாட்சி மன்றம்.
3 அறிவழகன், கே., எம்.ஏ. ..	சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர் தொகுதி.
4 அறிவுடைநம்பி, புலவர் ஓ. ..	வட ஆர்க்காடு-தென் ஆர்க்காடு ஆசிரியர் தொகுதி.
5 அனிபா, நாகூர், ஈ.எம்.	மாநிலச் சட்டப் பேரவை.
6 ஆதித்தன், எஸ்.டி., பி.ஏ.,பி.எல்.	திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
7 ஆறுமுகசாமி, எம்.	மாநிலச் சட்டப் பேரவை.
8 இராசகோபால், சி. வி.	மாநிலச் சட்டப் பேரவை.
9 இராசமாணிக்கம், எஸ்.ஏ. ..	மாநிலச் சட்டப் பேரவை.
10 இராஜாராம், கே. (எதிர்க் கட்சித் தலைவர்).	மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி.
11 இராணி அண்ணாதுரை	சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி.
12 இராமசாமி படையாட்சி, எஸ்.எஸ்.	தென் ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
13 இராமசுப்பையா, காரைக்குடி ..	நியமன உறுப்பினர்.
14 இராமநாதன், எம்.	கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
15 இராஜா அய்யர், எம்., எம்.ஏ., எல்.டி.	மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி.
16 இராஜூ, ஜி. என்.	மாநிலச் சட்டப் பேரவை.
17 ஈஸ்வர மூர்த்தி, வி., எம்.ஏ. (விஸ்வபாரதி), எம்.ஏ. (ஆக்ஸன்).	தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள்.
18 கணபதி, கே. எஸ்.	தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி ஆசிரியர்கள்.
19 கணேசன், சா.	மாநிலச் சட்டப் பேரவை.
20 காட்டூர் கோபால்	மாநிலச் சட்டப் பேரவை.
21 காளியண்ணன், டி.எம்., எம்.ஏ., பி.காம்.	சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.

தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். (1)	தொகுதி. (2)
22 கிருஷ்ணசாமி நாயுடு, ரா.	மாநிலச் சட்டப் பேரவை.
23 குன்றக்குடி அடிகளார், தவத்திரு.	நியமனம்.
24 கோலப்பா, சி. ஆர்.	மாநிலச் சட்டப் பேரவை.
25 சக்தி மோகன், ஆர்.	மாநிலச் சட்டப் பேரவை.
26 சங்கரலிங்கம், எம்.	திருநெல்வேலி-கன்னியாகுமரி ஆசிரியர்கள்.
27 சண்முகம், டி. கே.	நியமனம்.
28 சந்தோஷம், டி., எம்.ஏ., பி.எல்.	தமிழ்நாடு தெற்கு மத்திய பட்டதாரிகள்.
29 சாம்பசிவம், இரா.	தென் ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
30 சிவஞானம், ம. பொ. (துணைத் தலைவர்).	நியமனம்.
31 சிற்றரசு, சி.பி.(மாண்புமிகு தலைவர்).	மாநிலச் சட்டப் பேரவை.
32 சுந்தரேச தேவர், என்.	தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி.
33 சுவாமிநாதன், ஜி., பி. பார்மஸி	தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள்.
34 செங்கோட்டு வேலப்ப கவுண்டர், எஸ். சி.	கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
35 தங்கப் பாண்டியன், வி., பி.ஏ.,பி.டி.	மாநிலச் சட்டப் பேரவை.
36 தாமோதரன், ஏ. ஆர்., பி.எஸ்ஸி. (ஆனர்ஸ்).	தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள்.
37 திருஞானசம்பந்தம், பி.	இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி.
38 தென்னரசு, எஸ்.எஸ்.	நியமனம்.
39 தேவராஜ், வி. எம்.	வட ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
40 நடராசன், என். வி. (தொழிலாளர் நல அமைச்சர்).	மாநிலச் சட்டப் பேரவை.
41 நடராசன், எம். கே. டி.	திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
42 நாராயணசாமி, பி. (வேளாண்மை அமைச்சர்).	மாநிலச் சட்டப் பேரவை.
43 நாராயணசாமி, டி. வி.	நியமனம்.

தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். (1)	தொகுதி. (2)
44 நாராயணசாமி, எஸ்.	சென்னை மாவட்ட பட்டதாரிகள்.
45 நீல நாராயணன்	நியமனம்.
46 பக்கர், எம். எம்.	நியமனம்.
47 பராங்குசம், ஜி. (அரசாங்க கொறடா).	மாநிலச் சட்டப் பேரவை.
48 பலராமன், எல்.	வட ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
49 பொன்னுவேலு, டி. கே.	மாநிலச் சட்டப் பேரவை.
50 மணி, கே. எஸ்.	தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி.
51 மாசிலாமணி, எம்.	மாநிலச் சட்டப் பேரவை.
52 முத்து, பி. டி.	சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
53 முத்து, எஸ்.	மாநிலச் சட்டப் பேரவை.
54 முத்துகிருஷ்ணன், டி.வி.	மாநிலச் சட்டப் பேரவை.
55 முத்துசாமி, எஸ்.	சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர்-நீலகிரி ஆசிரியர்கள்.
56 வசந்த பாய், ஜி.	சென்னை மாவட்ட பட்டதாரிகள்.
57 வில்சன் அப்பலோஸ், என்.	கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
58 வெங்கடேஸ்வர தீக்ஷிதர், ஒய்.	திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
59 வெங்கா, வி.	செங்கல்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
60 வெள்ளப்பாண்டியன், எஸ்.	திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
61 ஜனார்த்தனம், ஏ.பி.	நியமனம்.
62 ஜார்ஜ் கோமகன்	மாநிலச் சட்டப் பேரவை.
63 ஜெயராம் ரெட்டியார், எஸ்.	இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கூடும் சட்ட மன்றத்தின் நாற்பத்தி நான்காவது கூட்டத் தொடர்.

சனிக்கிழமை, 1973 பிப்ரவரி 3.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு **சட்ட மன்றத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்)** அவர்கள் தலைமையில் சட்ட மன்றம் கூடியது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

1. இரங்கற் குறிப்புகள்

தமிழ்நாடு சட்டப் பேரவையின் உறுப்பினர் திரு. பி. கோபால், தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர் திரு. டி. எஸ். அருணாசலம் ஆகியோர் மறைவு குறித்து

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : தமிழ் நாடு சட்டப் பேரவையின் உறுப்பினர் திரு. பி. கோபால் அவர்கள் 1972 டிசம்பர் திங்கள் 28 ஆம் நாளன்று இயற்கையெய்தியது குறித்து ஆழ்ந்த வருத்தத்துடன் மேலவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோபால் 1971 முதல் கோவை மேற்கு சட்ட மன்றத் தொகுதியின் உறுப்பினராக இருந்து வந்துள்ளார்.

சட்ட மன்ற மேலவை உறுப்பினர் திரு. டி. எஸ். அருணாசலம் 1973 ஜனவரி 28 ஆம் நாளன்று மறைந்தது குறித்தும் நான் மிக ஆழ்ந்த வருத்தத்துடன் மேலவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1946–52 ஆம் ஆண்டுகளில் திரு டி. எஸ். அருணாசலம் திருச்சி-ஸ்ரீரங்கம் நகர்களின் பொது நகர்த் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் உறுப்பினராக இருந்து வந்தார். 1957–72 வரை தமிழ் நாடு சட்ட

[சட்ட மன்றத் துணைத் தலைவர்] [1973 பிப்ரவரி 3

மன்ற மேலவையின் உறுப்பினராக இருந்து வந்துள்ளார். நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் 1930 ஆம் ஆண்டு முதல் பங்கேற்று ஐந்து முறை சிறை சென்றுள்ளார்.

இந்த உறுப்பினர்களின் மறைவால் துயரில் ஆழ்ந்துள்ள அவர்களது குடும்பத்தினருக்கு மேலவை தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

மறைந்த இந்த உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் இரண்டு நிமிடம் மௌனமாக எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(அவையினர் எல்லோரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நின்றார்கள்.)

2. இரங்கற் தீர்மானம்.

தமிழக அரசின் முன்னாள் முதலமைச்சரும் இந்தியாவின் முன்னாள் கவர்னர்-ஜெனரலுமாகிய திரு. சி. இராஜகோபாலாச்சாரி அவர்கள் மறைவு குறித்து

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : தமிழக அரசின் முன்னாள் முதலமைச்சரும், இந்தியாவின் முன்னாள் கவர்னர்-ஜெனரலுமாகிய திரு. சி. இராஜகோபாலாச்சாரியார் அவர்களின் மறைவை இம்மன்றத்திற்கு ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரங்கல் தீர்மானத்தை முன்மொழியுமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட இரங்கல் தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"இந்திய நாட்டின் விடுதலைக்காக தியாகம் செய்த பெருந் தலைவர்களில் முதல் வரிசை வீரராக, தீண்டாமை ஒழிப்பின் வழிகாட்டியாக, சிறந்த ராஜ தந்திரியாக, ஆழ்ந்த பரந்த கூர்மையான நுண்ணறிவு பெற்ற தீர்க்கதரிசியாக, அஞ்சா

1973 பிப்ரவரி 3] [டாக்டர் மு. கருணாநிதி]

நெஞ்சம் படைத்தவராக, தன் கருத்துக்கள், நாட்டுக்கு நன்மை பயக்கும் என்ற நம்பிக்கை இருப்பின், அவற்றை அச்சமின்றி பலத்த எதிர்ப்புக்களுக்கிடையேயும் எடுத்துரைக்கும் வல்லமை பெற்றவராக தமிழ் மொழியில் சிறு கதைகளையும் பெருங் காப்பியங்களையும் தனக்கே உரிய எளிய நடையில் எழுதிய எழுத்தாளராக, இம் மன்றத்தின் உறுப்பினராக, இம் மாநிலத்தின் முதல்வராக, வங்கத்தின் ஆளுநராக, மத்திய அரசில் அமைச்சராக, இந்தியாவின் கவர்னர்-ஜெனரலாக பதவி வகித்து, எப்பதவியிலும் தன்னுடைய ஆற்றல் மிகுந்த திறன் என்றென்றும் நிலைக்கும் வண்ணம் பணி புரிந்து நாட்டுக்குச் சேவை செய்த ஒரு முதுபெரும் தலைவரையும், அரசியலையும் கடந்து நட்பு காட்டிய ஒரு உள்ளத்தையும் இராஜாஜியின் மறைவினால் நாம் இழந்துள்ளோம். அவரது மறைவு அவருடைய குடும்பத்தினருக்கு மட்டுமின்றி நாட்டிற்கே ஒரு பெரும் இழப்பாகும். அன்னாரது குடும்பத்திற்கு இந்த அவை தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது."

தலைவர் அவர்களே, முதுபெரும் அறிஞராக, தமிழகத்திற்கு மாத்திரம் அல்லாமல், இந்தத் தரணியில் உள்ள அரசியல் வல்லுனர்கள் அனைவரும் போற்றுகிற அளவுக்கு வாழ்ந்து, தன்னுடைய 95-வது வயதிலே நம்மை விட்டுப் பிரிந்து விட்ட பெரியவர் இராஜாஜி அவர்கள் நம்முடைய நாட்டின் சிறப்பைப் பல மடங்கு அனைத்து உலகிலே உயர்த்திக் காட்டியவர்கள் ஆவார்கள். அவர்கள் இந்திய நாட்டினுடைய விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற்ற பெரும் தலைவர்களோடு சிறைச் சாலைக்குச் சென்றும், அடக்கு முறைகளை ஏற்றுக்கொண்டும், விடுதலைப் போராட்ட வீரராகத் திகழ்ந்தார்கள். அவருடைய மறைவு குறித்து நாடே கலங்கியது என்பதை நாம் கண்டோம். முழுமையான வாழ்வினை அவர்கள் வாழ்ந்தார்கள் என்றாலும், அப்படிப்பட்ட பெரியவர்கள் மறைந்து விடுவதை, நம்மை விட்டுப் பிரிந்து விடுவதை, அவர்கள் முழுமையாக வாழ்ந்தார்கள் என்ற ஆறுதலோடு நாம் எண்ணிப் பார்ப்பதற்கில்லை. இன்னும் சில ஆண்டுக்காலம் நம்மிடையே இருந்து, சமுதாயத்திற்கும், நாட்டுக்கும் நல்ல பல ஆலோசனைகளைச் சொல்லியிருக்கக் கூடாதா, நம்மை வழி நடத்திச் சென்றிருக்கக் கூடாதா என்கிற ஏக்கம்

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 பிப்ரவரி 3

தான் நம்முடைய உள்ளத்திலே குடிகொண்டிருக்கிறது. இராஜாஜி அவர்களிடத்திலே பழகிடக்கூடிய பெரும் வாய்ப்பினை கடந்த 10, 12 ஆண்டுகளாக நான் பெற்றிருந்தேன். எவ்வளவு அடக்க உணர்வும், எவ்வளவு எளிய சுபாவமும், எவ்வளவு இனிய தன்மையும் அவர்கள் உள்ளத்திலே பெற்றிருந்தார்கள் என்பதைக் கண்டறியக் கூடிய பல வாய்ப்புகள் எனக்குக் கிடைத்திருக்கின்றன. கொள்கை மாறுபாடுகள், கட்சி வேறுபாடுகள் இவைகளை எல்லாம் கடந்த ஒரு தனித்த அன்பு நெஞ்சத்தை அவரிடத்திலே என்னால் காண முடிந்தது. இந்திய நாட்டினுடைய விடுதலை வெள்ளி விழா கொண்டாடப் பெற்ற போது, நடுவண் அரசு இந்தியாவில் உள்ள பழம் பெரும் தியாகிகளையெல்லாம் கௌரவிக்க வேண்டுமென்று கருதி, அவர்களுக்கு தாமிரப் பத்திர விருதுகளை வழங்குவதற்கான ஏற்பாட்டினைச் செய்யும்போது, தமிழ் நாட்டின் சார்பில் அந்த விருது பெற தகுதிபடைத்த தியாகிகள் பெயர்ப் பட்டியல் கொடுக்குமாறு வேண்டுகோள் விடுத்தது. அந்த வேண்டுகோளின் படி தரப்பட்ட தியாகிகள் பட்டியல் முதலில் ஏடுகளில் வெளி வந்தது. ஏடுகளில் வெளி வந்ததற்கு முன்பே—இராஜாஜி அவர்களுக்கும், அந்தத் தாமிரப் பத்திர விருது பெறத் தகுதி பெற்றவர்களுக்கும் அரசின் சார்பிலே எழுதப்பட்டிருந்தாலும், அவர் எனக்கு ஒரு மடல் தீட்டினார். "தாமிரப் பத்திர விருது எனக்குக் கொடுக்க இருப்பதாக நான் மாலைப் பத்திரிகையில் பார்த்தேன். நான் விழாவுக்கு வந்து வாங்கக்கூடிய நிலையில் என் உடல்நிலை இல்லை. ஆகவே நீயே எனக்காக தாமிரப் பத்திரத்தைப் பெற்று அனுப்பி வைக்கவும்" என்று கடிதம் எழுதியிருந்தார். எவ்வளவு பெரிய உள்ளம் இந்தக் காரியத்தைச் செய்யும் என்பதை நாம் எண்ணிப் பார்த்திடத் தவறக் கூடாது. நான் அவருக்காக தாமிரப் பத்திரத்தை வாங்குவதிலும் பெருமை பெற்றேன். அது மாத்திரமல்ல. அவருடைய இல்லத்திற்குச் சென்று அதை வழங்குவதிலும் பெருமை பெற்றேன். அப்படி வழங்குவதற்குச் சென்றபோதுகூட, தாமிரப் பத்திரத்தை வழங்கி, அவருக்கு மாலை அணிவிப்பதற்கு முன்பு, வயதிலும், அனுபவத்திலும், அறிவிலும், ஆற்றலிலும் எத்தனையோ மடங்கு சிறியவனாகிய எனக்கு அவர் முதலில் மாலை அணிவித்து தாமிரப் பத்திரத்தைப்

1973 பிப்ரவரி 3] [டாக்டர் மு. கருணாநிதி]

பெற்றுக் கொண்டார். ஆகவே நான் அவரிடத்தில் ஓர் அரசியல் பெரும் தலைவர் என்கின்ற முறையிலேகூட அல்ல, ஒரு பாச உணர்வோடு 10, 15 ஆண்டுகள் பழகக்கூடிய நிலையினைப் பெற்றிருந்தேன். தனிப்பட்ட முறையிலேகூட அவருடைய பிரிவு என்னுடைய உள்ளத்திலே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திய பிரிவாகும். அந்த ஒப்பற்ற தலைவர் தமிழகத்திலே இன்னும் நீண்ட நாள் வாழ்ந்திருக்க வேண்டும். அவருடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும், பொது வாழ்க்கையிலும் எவ்வளவோ இன்னல்களை அவர் கடந்திருக்கின்றார். எத்தனையோ சங்கடங்களை அவர் சந்தித்திருக்கின்றார். எல்லாவற்றிலும் மிகுந்த துணிவோடும், தெளிவோடும், அரசியல் பயணத்தை நடத்தி, 4-10 பி.ப.
மற்றவர்களுக்கு வழி காட்டியாக இருந்திருக்கின்றார். எதிர்ப்புகள் இருந்த காலத்தில், அவைகளைக் கேலியாகவும், சாதாரணமாகவும் கருதுகின்ற அந்த உள்ளத்தைப் பெற்றிருந்தார். அவர்கள் பொதுக் கூட்டங்களில் கலந்துகொண்ட நேரத்தில் சில கூட்டங்களில் கற்கள் வீசப்பட்டன. அப்படி வீசப்பட்டபோது, கல் வீசியவர்களைத் தேடி, கூட்டத்தில் உள்ளவர்கள் சென்ற போது, இராஜாஜி அவர்கள் எப்போதும் தனக்கே உரிய குறும்புத்தனமான, ஆனால் அறிவும், அடக்கமும் மிகுந்த வார்த்தைகளைச் சொன்னார். "ஏன் கல் வீசுபவர்களைப் பார்த்து பயப்படுகிறீர்கள்? அவர்களுக்குக் குறி பார்த்து கல் வீசத் தெரிந்திருந்தால், இந் நேரம் ஆங்கிலேயன் நம்மை விட்டுப் போயிருப்பான். கல் வீசுபவர்களைப் பற்றிக் கவலைப் படாதீர்கள்" என்று அன்றே சொன்னார். இப்படி பொது வாழ்க்கையிலே வருகின்ற எதிர்ப்புக்களை, அரசியலிலே, இந்தியப் பெரு நாட்டிலே பல்வேறு மாற்றங்களைச் சந்தித்த ஒரு பெரும் தலைவர், நிறை வாழ்வு வாழ்ந்து, முழு வாழ்வு வாழ்ந்து, 94 ஆண்டுக் காலம் இந்த நாட்டை வழி நடத்திச் சென்று கொண்டிருந்த, ஒரு பெரும் தானைத் தலைவராக விளங்கிய இராஜாஜி அவர்கள் மறைந்து விட்டார்கள் என்பதற்காக அவர்களுடைய குடும்பத்தினருக்கு நாம் இன்றைக்கு இரங்கல் செலுத்துகின்றோம் என்பதல்ல—நான் காலையிலே பேரவையிலே கூறியதுபோல்—அவரை இழந்து தவித்துக் கொண்டிருக்கின்ற கோடிக்கணக்கான மக்களுக்கு நாம் ஆறுதல் வழங்குகின்றோம்,

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 பிப்ரவரி 3

அல்ல அல்ல, ஒருவருக்கொருவர் ஆறுதல்களைப் பரிமாறிக் கொள்கின்றோம் என்கின்ற வகையிலே நானும் என்னுடைய அஞ்சலியைத் தெரிவித்துக் கொண்டு அமைகின்றேன். வணக்கம்.

*திரு. கே. ராஜாராம்: மாண்புமிக்க தலைவரவர்களே, நம் இராஜாஜி அவர்களை நாம் இழந்துவிட்டோம். முதலமைச்சர் அவர்கள் வெகு தெளிவாகவும் உருக்கமாகவும் அவரைப் பற்றிக் கூறினார்கள். நான் என்ன சொல்வதென்றே எனக்குப் புரியவில்லை. அவர் காலமான அன்று முதலமைச்சரவர்களும் மற்ற அமைச்சர்களும், எங்கள் தலைவர் திரு காமராஜர் அவர்களும் இராஜாஜியின் பக்கத்தில் கூடியிருந்தார்கள். நானும் அங்கே அவருடன் இருந்தேன். என்னுடைய வாழ்க்கையில் நான் பல பெரியோர்களுடன் பழகியிருக்கின்றேன். இராஜாஜியுடன் ஓராண்டுக் காலம் சிறையிலும் இருந்திருக்கின்றேன். நான் பல முறைகள் சிறை சென்றாலும், ஒரு முறை 1932-ம் ஆண்டு மட்டும் அவருடன் வேலூர் சிறையில் இருந்தேன். ஒவ்வொரு நாளும், ஒரு மணி நேரம் இராஜாஜி, அவர்கள் அவருடன் கூட இருக்கும் அரசியல் கைதிகளுக்கு ஏதேனும் ஒரு பொருளைப் பற்றிப் பிரசங்கம் செய்து கொண்டே காலத்தை நல்ல வழியில் கழித்துக் கொண்டிருப்பார். அவரைப் போன்று மனதில் பட்டதை—எவ்வளவு பொதுஜன விரோதமான அபிப்பிராயமாக இருந்தாலும், பல பேர்களுடைய எதிர்ப்பு தனக்கு வரும் என்று இருந்தாலும்கூட—அதைப் பொருட்படுத்தாமல்—பகிரங்கமாகச் சொல்வார். நம்மால் நினைக்கக்கூட முடியாத விஷயம், மகாத்மா காந்தி அவர்களுடைய அபிப்பிராயத்திற்கு தான் மாறுபட்டிருக்கிறோம் என்று உணர்ந்திருந்தாலும், தைரியமாக எதிர்த்துப் பேசக்கூடிய ஆற்றல் படைத்தவர் அப்போது இந்தியாவில் இல்லை. இராஜாஜி ஒருவர்தான் இருந்தார். மகாத்மா காந்தி அடிகளின் அபிப்பிராயம் சரியல்ல என்று சொல்லக்கூடிய ஆற்றல் அவர் ஒருவருக்குத்தான் இருந்தது.

அண்ணல் காந்தியடிகள் இந்த நாட்டிற்கு வந்து ஹரிஜன இயக்கத்தை ஆரம்பித்து ஹரிஜனங்களுக்காகப் பாடுபட்டது சரித்திரத்தில் ஏறிவிட்டது. ஆனால் காந்தியடிகள் இந்த

1973 பிப்ரவரி 3] [திரு. கே. ராஜாராம்]

ஹரிஜன இயக்கத்தை ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே, இராஜாஜி முனிசிபல் சேர்மனாக இருக்கும்போது, சேலத்தில் பொதுக் குடி தண்ணீர் வசதியை ஹரிஜனங்களுக்குச் செய்து கொடுத்தது மட்டுமல்லாமல், அவர்களுக்கு அவர் உதவி செய்தார் என்பதற்காகவும் சமூக பகிஷ்காரம் செய்யப்பட்டார். பிராமண சமூகத்தினர் அவருடைய குடும்பத்தில் ஒரு துக்க காரியம் ஏற்பட்டபோது பகிஷ்கரித்தார்கள். அப்படி இருந்தும்கூட துணிச்சலோடு அந்தக் காலத்திலேயே தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்காகப் பாடுபட்டவர். அவர் அரசியல் ரீதியில் ஒரு பெரிய மேதை, உலக அறிவாளிகளில் ஒருவர். காங்கிரஸ் ஸ்தாபனத்தைப் பொறுத்த வரையில், எத்தனையோ சிக்கல்கள். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக காங்கிரஸ் ஸ்தாபனமே உடைந்துவிடும் என்ற நிலைமையும், பெரிய நெருக்கடிகளும் ஏற்பட்டபோதெல்லாம், அதைத் தீர்த்து வைத்தவர் இராஜாஜி அவர்கள்தான். காந்தியடிகளே ஆச்சரியப் படும்படியான நிலைமையில் அவர்களுக்கெல்லாம் பொருள்கூறி, தனக்கே உண்டான பாணியில் விமர்சித்து, எல்லோரையும் ஒப்புக்கொள்ள வைக்கும்படியான ஒரு ஆற்றல் இராஜாஜி அவர்களுக்குத்தான் இருந்தது. அன்னாரது வயது 94 ஆனது. மிகவும் அதிகமான வயதுதான் என்று இருந்தாலும்கூட, நம்மைப் பொறுத்த வரையில், அவர்களுடைய அறிவும், அவர்களுடைய யோசனைகளும் இன்னும் பல காலத்திற்கு நமக்குத் தேவையாக இருக்கின்றன. நம் நாட்டில் ஜனநாயகம் வேரூன்றி விட்டாலும், அது சரியானபடி நடப்பதற்கு அவரைப் போன்றவர்களுடைய ஆலோசனை, அவரைப் போன்றவர்களுடைய முன்யோசனை நமக்கு அதிகமாகத் தேவையாக இருக்கின்றது. அவர் மறைந்தது நமக்குப் பேரிழப்பும் ஈடு செய்ய முடியாத ஒன்றுமாகும். இரண்டு ஆண்டுகள் அவருடைய அமைச்சரவையில் 1952-லிருந்து 1954 வரை ஆந்திரா பிரிவு ஆனதிலிருந்து அவருடன் கூட பார்லிமெண்டரி செக்ரட்டரியாகவும், பின்னர் அவருடைய அமைச்சரவையில் ஒரு அமைச்சராகவும் இருந்து அவரோடு நெருங்கிப் பழகும் படியான பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அந்தக் காலத்தில் அவருடைய துணிச்சல், நேர்மை, ஒழுங்கு என்பதற்காக—

அதைப் பாதுகாப்பதற்காக—எந்த விரோதத்தையும் அவர் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்தார். ஒழுக்கத்தையும், நேர்மையையும் பாதுகாப்பதற்காக, எவ்வளவு பெரிய ஆளுடைய விரோதத்தையும் கூட, சமாளிப்பதற்குத் தயாராக இருப்பார். அப்பேர்ப்பட்ட ஒரு துணிச்சல் மிக்க தலைவரைப் பார்ப்பது அரிது. அவர் நமக்கு வழி காட்டிக் கொண்டிருந்தார். இன்று முதலமைச்சர் அவர்கள், இன்றல்ல, அன்று சொன்னதுபோல, ஒரு பெரிய தீப ஸ்தம்பம், கலங்கரை விளக்கம் சாய்ந்ததுபோல அவர்கள் சாய்ந்து விட்டார்கள். அவர் எங்கிருந்தாலும் அவருடைய ஆலோசனைகளும், அவரது எழுத்துக்களும், அவருக்கே உண்டான பாணியில் அவர் சொல்லி வைத்துச் சென்ற சொற்கள், குட்டிக் கதைகள் இவைகளெல்லாம் நமக்கு என்றென்றைக்கும் இருக்கும். இந்த நேரத்தில் அவருடைய ஆன்மா சாந்தியடைய வேண்டுமென்று நான் பிரார்த்தித்துக் கொள்வதைத் தவிர வேறு ஒன்றும் சொல்வதற்கில்லை. என்னுடைய அனுதாபத்தை என் சார்பிலும் என் கட்சியின் சார்பிலும் சொல்லிக் கொண்டு அமைகின்றேன். வணக்கம்.

* **திரு. சா. கணேசன் :** தலைவரவர்களே, சுமார் 45 ஆண்டுகளுக்கும் மேலாக அவரோடு இணைந்து, அவர் நெறியிலே நின்று பணியாற்றிய எனக்கு, இராஜாஜியைப் பற்றி எண்ணுகின்ற போதெல்லாம் பெருமிதம்தான் தோன்றுகின்றது. வாழ்க்கையிலே நேர்மைக்கும் சீலத்திற்கும் எடுத்துக்காட்டாக விளங்கியவர் அவர். அவருடைய சிறப்புகள் என்று நான் கருதுவது, அவருடைய குறைகள் என்று பிறர் கருதுவது, அவரை அண்டியவர்களுக்கு அவர் இது வரையில் எதுவுமே செய்யாமலிருந்தது, முடிந்தால் அவர்களுக்கு வேண்டிய இடையூறுகள் என்று சொல்லக்கூடிய அளவுக்கு சிரமங்களை அவர் கொடுத்தது. அவர் வாழ்வு முழுவதும் அப்பழுக்கு இல்லாத திருமகனாக, பெருமகனாக வாழ்ந்தது, இன்று தமிழர்கள் அத்தனை பேரும் தலை நிமிர்ந்து நிற்கக் கூடிய ஒன்றாக இருக்கிறது. சேலத்திலே சிறிய முறையிலே வழக்கறிஞராகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, தேசப் பணியிலே நுழைந்த காலத்திலே தேசப் பணிக்கு வருவித்த நன்கொடைகளுக்குக் கூட, அவ்வப்போது அக்காலத்திலிருந்து

தினப் பத்திரிகைகளிலே வரவு செலவுக் கணக்கை வெளியிட்டு தம்முடைய நேர்மையைப் புலப்படுத்திக் கொண்ட ஒரு பெருமகன் அவர். முன்னே பேசிய நம்முடைய மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களும், எதிர்க் கட்சித் தலைவரவர்களும் இராஜாஜியின் பல சிறப்பியல்புகளைக் குறிப்பிட்டார்கள். காந்தியடிகள் மகிழுமாறு மட்டுமல்ல, ஏற்குமாறு அவர்களை மறுத்த ஒரே பெருமகன் இராஜாஜி என்பது மட்டுமல்ல, அத்தகைய பெருமகனாரை என் அறிவுக்கு எட்டிய வரையில் இரு முறை எமனிடத்திலிருந்து காத்த பெருந்தகை இராஜாஜி ஒருவர் தான். ஒன்று சொந்த முறையிலே, மற்றொன்று தேசிய முறையிலே. அவருடைய அறிவுத் திறமைதான் இந்த இரண்டு காலத்திலும் காந்தியடிகளை, காந்தியடிகளின் உயிரைக் காப்பாற்றியது என்பதை நாம் அறிவோம். ஒன்று ஆட்டுப்பால் உண்ணும்படியாகச் செய்து அவரைக் காப்பாற்றியது. மற்றொன்று பாகிஸ்தான் பிரேரணைக்கு மகாத்மா காந்தியடிகளை ஒப்புக்கொள்ளச் செய்து கையெழுத்துப் போடச் செய்தது ஒன்று.

இந்த நிலை மட்டுமின்றி, இதற்கு இடையிலே அம்பேத்கார் 4-20
சம்பந்தமாக ஏற்பட்ட உண்ணாவிரதத்திலிருந்து அவரை மீட்ட பி.ப.
ஓர் அரும் வினையும் அவருடைய அரிய சாதனையின் பயன் என்பதை நாம் அறிவோம். அவருடைய இந்தச் சிந்தனைத் தெளிவிற்கெல்லாம் காரணம் அவருடைய எண்ணம் தூய்மையாக இருந்தது தான், சுயநலம் பாராட்டாது, கொள்கை என்ற கலங் கோலை அடிப்படையாகக் கொண்டு அவர் அனைத்தையும் கண்ணோக்கத் தொடங்கியது ஒன்று தான். இந்த நெறியாலே தான் அவர்களுடைய பெரு வாழ்வை அகில உலகமும் போற்றும் படியாக பெரும் பேர் அறிவு நிறைந்த நிலையில் முழு மாந்தராக அவர்கள் விளங்கினார்கள். அவருடைய விருப்பத்திற்கு, ஏன் விரதத்திற்கு என்றும் சொல்லலாம், அதற்கு முற்றிலும் விரோதமாக, இறுதிக் காலத்திலே அந்நிய நாடுகட்குச் சென்று, அணு ஆயுத ஒழிப்பிற்கு அவர் போராடி இன்றைய பெரும் தலைவர்களையெல்லாம் அந்தக் கொள்கையை ஏற்கும்படி செய்த அந்தப் புனித, பவித்திரமான திருப்பணியை உலக வரலாற்றுப் பேராசிரியர்கள் மகிழ்ந்து பாராட்டவே செய்வார்கள். அத்தகைய

[திரு. சா. கணேசன்] [1973 பிப்ரவரி 3

ஒரு பெருமகனார் நமது வாழ்நாள் காலத்திலே நம்மோடு நமது மாநிலத்திலே நம்மவராக வாழ்ந்தார், வளர்ந்தார், நமக்கெல்லாம் வழி காட்டினார் என்பதிலே நாம் பெருமைப்பட்டுக்கொள்வதற்கு நமக்கு முழுக்க முழுக்க உரிமையுண்டு. இத்தகைய பெருமகனாரின் அடி நிழலிலே பணி செய்த பேற்றை என்னுடைய வாழ்விலே பெரும்பேறாக நான் கருதுகிறேன். அதே நேரத்தில் ஒன்றை நான் இங்கே குறிப்பிடுவதை என்னுடைய கடமை என்று கருதுகிறேன். இத்தகைய பெருமகனார் மறைந்தபொழுது, அவருக்குச் செய்ய வேண்டிய முழு மரியாதையையும் சிறிது கூட குறைவின்றிச் செய்த இந்தத் தமிழக அரசிற்கு இந்தச் சந்தர்ப்பத்திலே நான் மனமார நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். கடமை என்பதோடு மட்டுமல்லாமல், என்னுடைய நன்றியை இந்தச் சந்தர்ப்பத்திலே புலப்படுத்திக் கொள்ளவும் நான் முன் வருகிறேன். இத்தகைய ஒரு பெருமகனாருக்கு தன்னுடைய கடமையைச் செய்த அரசைப் பாராட்டுவதோடு, இந்தப் பெருமகனாருக்கு உங்கள் எல்லோருடனும் கூட நானும் என்னுடைய வணக்கத்தைச் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவரவர்களே, மாமேதை இராஜாஜி அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து விட்டார்கள். சில மனிதர்கள் எவ்வளவு பெரியவராக இருந்தாலும் சரி, அவர்கள் கொஞ்ச நீண்ட நாள் வசித்து விட்டால், அவர்கள் இந்த உலகத்தை விட்டுப் போகவில்லையே என்ற சலிப்பு, எண்ணம் மற்றவர்களுக்கு ஏற்படுவது உண்டு. ஆனால் இராஜாஜி அவர்கள் சம்பந்தப்பட்ட வரையில், அந்த எண்ணம் ஏற்பட்டதில்லை. அவர் நம்மிடையே வசித்து வந்த காலத்திலே ஒவ்வொரு நாளும் அவருடைய எழுத்துக்களினாலும், சொல்லினாலும் அவர் இந்த உலகத்திற்கு ஒரு வழி காட்டியாக இருந்த காரணத்தினாலே, எதிர்க் கட்சிக்காரராக இருந்தாலும் அவருடைய கருத்துக்களைத் தெரிந்துகொள்வதற்கு, அவர் என்ன சொல்கிறார், எந்த விஷயத்தைப்பற்றி என்ன பேசுகிறார் என்பதைத் தெரிந்துகொள்வதற்கு 'சுயராஜ்யா' பத்திரிகை வந்தவுடனே அதை வாங்கி நாட்டு மக்கள் ஆர்வத்தோடு படித்தார்கள். தூய சிந்தனையும், எதையும் தைரியமாக

1973 பிப்ரவரி 3] [திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்]

எடுத்துச் சொல்கிற வலிமையும் உடைய பெருமகனாராக அவர் நம்மிடையே விளங்கினார்கள். அவருடைய வாழ்நாளில் அவர் ஒரு கலங்கரை விளக்காக, கிடைக்கக் கூடிய அனுபவங்களை சலிப்படையாமல் எடுத்துச் சொல்கிற மனிதராக இருந்து வந்தார். அப்படிப்பட்ட பெருமகனார் நம்மிடையேயிருந்து போய் விட்டார். நமக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாக இருந்து வருகின்றாரே என்று எண்ணிக்கொண்டிருக்கும் நிலையில் அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து போய்விட்டார்கள். நமக்குள் ஒரு வழிகாட்டியாகத் தோன்றினாரே தவிர, ஒரு சுமையாகத் தோன்றியதில்லை. நம்முடைய பிரதம நீதிபதி அன்றைக்கு, "அசோகருக்குப் பிறகு இராஜாஜி மாதிரி தோன்றியதில்லை. சாக்ரடீஸ் மாதிரி இந்தக் காலத்திலே தோன்றியவர் இராஜாஜி என்று சொல்வேன்", என்று சொன்னார்கள். அப்பேர்ப்பட்ட பெருமகனாரை நாம் இழந்திருக்கிறோம். இது ஈடு செய்ய முடியாத நஷ்டம். நாம் நல்லறிவு பெற வேண்டும் என்பதற்காக இராஜாஜி அவர்கள் எழுதிய கட்டுரைகள், சிறு கதைகள், எழுதிய புத்தகங்கள் ஆகியவற்றை, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது போல, நம்முடைய பள்ளிக்கூடங்களில் பாடப் புத்தகங்களாக வைத்து அவருடைய வாசகங்களை, அறிவுரைகளை நம்முடைய சிறு குழந்தைகள் படிக்கும்படி செய்ய வேண்டும்.

ஒரு மாண்புமிகு உறுப்பினர் : இது ஒரு தேசியத் திட்டம் அவர்கள் ஏற்றுக்கொள்கிற நிலையில் தான் இதைச் செய்ய முடியும்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் தஞ்சாவூரிலே அவர்களுடைய கட்சி மாநாட்டிலே சொன்னது போல, இராஜாஜி எழுதிய புத்தகங்களை, அந்தப் புத்தகங்கள் இந்த அரசிற்கு ஒவ்வாததாக இருந்தாலும் கூட, கண்ணன் காட்டிய வழி போன்ற சிறு கதைகளை, சர்ச்சைக்குரிய விஷயம் இல்லாத நல்ல கருத்துள்ள புத்தகங்களை, பகவத் கீதை போன்ற புத்தகங்களைப் பாடப் புத்தகங்களாக வைத்து நம்முடைய பிள்ளைகள் தங்களுடைய சிறு வயதிலே இவைகளைத் தங்களுடைய மனதிலே வேரூன்றி வைத்துக் கொள்ள இந்த அரசு வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இராஜாஜி அவர்களுடைய நூல்களை பள்ளிக் கூடங்களிலே வைக்க வேண்டுமென்று நம்முடைய நண்பர் திரு. ஜெயராம ரெட்டியார் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். நான் விரும்புவது எல்லா ஆசிரியர்களும் இராஜாஜி அவர்கள் போதித்த முறையை அனுஷ்டிக்க வேண்டும் என்பது. அவர் ஆசிரியர்களுக்கெல்லாம் ஆசிரியராக வாழ்ந்தார். ஆயிரத்தில் ஒருவர் மனிதராக வாழ்கிறார், கோடியில் ஒருவர் மாமனிதராக வாழ்கிறார் என்று கூறுவார்கள் இதுமாதிரி ஒரு மாமனிதராக வாழ்ந்த அவருடைய நேர்மையையும், தூய்மையையும், செயலையும், வாழ்க்கையில் அவருடைய நெறியையும் பற்றி அவருடன் பழகிய பெரியவர்கள் எல்லோரும் எடுத்துக் கூறினார்கள். நான் ஒன்றே ஒன்றைக் கூற விரும்புகிறேன். ஆசிரியர்கள் போதிக்க வேண்டிய முறை என்ன என்பதை எடுத்துக் காட்டியதைக் குறிப்பிட விரும்புகிறேன். முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் எங்கள் பள்ளிக்கு அவர் வந்தபோது சிறுவர்களுக்குப் பேச வேண்டுமென்று கேட்டுக்கொண்டோம். உடனே பேசுகிறேன் என்று சிறுவர்களைக் கூட்டினார்கள். அவர் அன்று சொன்னது இன்றும் என்னுடைய காதுகளிலே ஒலித்துக் கொண்டிருக்கிறது. பிள்ளைகளையெல்லாம் தூபம் போடுவதாக நாங்கள் முதலிலே அஞ்சினோம். "குழந்தைகளே, இந்த ஆசிரியர்களைப் பார்த்து பயப்படாதீர்கள்," என்று அவர்கள் ஆரம்பித்தார்கள். அவர்களும் சாதாரன மனிதர்கள் என்று அவர் ஆரம்பித்தார். "கணித ஆசிரியரை நன்றாகக் கவனியுங்கள். ரொம்பத் தவறுகள் செய்வார்," என்று கூறினார். "அவர் சொல்வது தவறாக இருக்கும். நன்றாகக் கவனிக்க வேண்டும்," என்றார். "எனக்கெல்லாம் நடுக்கம், ஏன் இவரைப் பேசச் சொன்னோம்" என்ற எண்ணம் தோன்றியது. குழந்தைகளைப் பார்த்து, ஆசிரியர்களிடம் தைரியமாக எழுந்து நின்று கேள்விகள் கேட்கவேண்டும் என்றார். கணித ஆசிரியர் மூன்றும் இரண்டும், ஐந்து என்று போட்டால், "இல்லையே, சார், ஆறு அல்லவா ?" என்று ஆசிரியரைத் திருத்தப் பார்க்க வேண்டும் என்று எடுத்துக் கூறினார். அவர் எடுத்துச்சொல்லக் கூடிய தத்துவம் என்ன என்பதை எங்களால் பின்னால்தான் அறிந்துகொள்ள முடிந்தது.] மாணவர்கள் அஞ்சாது அவர்

களுடைய ஆசிரியர்களிடத்தில் சந்தேகங்களை, வினாக்களை எழுப்பிக் கேட்டால்தான், அறிவு வளரும் என்பதை ஆசிரியர்களாகிய நாங்களும் தெரிந்துகொள்கிற வகையில் எடுத்துக் காட்டினார். சிறு பிள்ளைகளுக்கு அவர் குறிப்பிட்டுச் சொன்னதாக நாங்கள் பின்னால் நினைக்கவில்லை. அவர்கள் முதலமைச்சராக இருக்கும் போது, ஆசிரியர்கள் கழகம் அவரிடத்திலே சென்று முறையிட்டது. ஹையர் கிரேட் பாஸ் பண்ணிய ஆசிரியர்கள் எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்த உடனேயே அவர்களுக்கு செகண்டரி கிரேடு தகுதி தர வேண்டுமென்று கேட்டோம். செகண்டரி கிரேடு தேர்வு பாஸ் பண்ணாமலேயே அவர்களுக்கு இதைக் கொடுக்க வேண்டுமென்று ஒரு பெரிய தீர்மானத்தைப் போட்டுக்கொண்டு போய் அவரிடத்திலே கொடுத்தோம். அதைப் பார்த்தார். உடனே, "ஆகா, நீங்கள் தாசில்தாராக ஆக வேண்டுமென்று கேட்டிருந்தால், நான் உத்தரவிட்டிருப்பேன். ஆசிரியர்கள் பரிட்சை எழுதிப் பாஸ் பண்ணாதபடியே அவர்களுக்குச் சலுகை கொடுக்க வேண்டுமென்று கேட்கிறீர்களா ?", என்று கேட்டார். எங்களுக்கு முதலில் புரியவில்லை. அதற்கு மேல் அந்தத் தீர்மானத்திற்கு ஒரு விளக்கமே தேவையில்லை! என்று அந்த முறையீட்டை தென்னிந்திய ஆசிரியர் கழகம் எழுப்பாமல் விட்டு விட்டது. அதற்குப் பிறகு எப்பொழுதும் இந்தக் கோரிக்கை எழுப்பப்படவில்லை. ஏனென்றால் அந்தத் தீர்மானத்தில் இருக்கக் கூடிய கருத்தை அந்த மாமேதை பார்த்தவுடனே "ஆசிரியர்களாகிய நீங்கள் பரிட்சை எழுதாதபடியே பாஸ் பண்ண வேண்டுமென்று விரும்புகிறீர்களா ?" என்று கேட்டதாக உணர்ந்தோம். இது அவருடைய அறிவைப் புலப்படுத்தியது. "ஆசிரியர்களாகிய நீங்கள் பாஸ் பண்ணாமலேயே போதிப்பதற்கு முன் வந்து, மற்றவர்கள் பாஸ் பண்ண வேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்களா ?", என்று கேட்டதாக உணர்ந்தோம்.

அவர்கள் திருச்செங்கோட்டில் ஆசிரமம் அமைத்து, அவருக்கு உயிர்நாடியாக இருந்த இரண்டு கொள்கைகளான தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு இரண்டையும் பரப்ப வேண்டும் என்பதற்காக யார் மதுவிலக்குக் கொள்கையை மனம் உவந்து ஏற்றுக் கொள்கிறார்களோ, அவர்களுக்கு அந்த ஆசிரமத்திலிருந்து அங்கு வரக்கூடிய பொருள்களையெல்லாம் பாதி விலைக்குக் கொடுப்ப

தாகச் சொன்னார். பலர் கையெழுத்திட்டுக் கொடுத்திருந்தார்கள். அப்படிச் செய்தவர்களுக்கு, ரூபாய்க்கு நாலு படி நெல் அன்றைக்கு வெளியிலே கொடுக்கப்பட்டால், மதுவிலக்குக் கொள்கையை ஏற்று பிரதிக்ஞை எடுத்துக்கொண்டவர்களுக்கு ரூபாய்க்கு 8 படி நெல் கொடுத்து வந்தார்கள். ஒரு நாள் ஒருவன் வந்தான். "ஐயா, ராமன் உங்களிடத்திலே குடிப்பதில்லை என்று கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருக்கிறான். ஆனால் தினசரி குடிக்கிறான். நானே இதைப் பார்த்தேன்," என்று கூறுகிறான். உடனே ராமனைக் கூப்பிடு என்று சொல்கிறார். அந்தச் சமயத்திலே அவனுக்கு ஒரு உபதேசத்தைக் கூறுகிறார், 'எப்போதும் பிறர் மேல் கோள் சொல்வது என்பது நல்லதல்ல." என்று பிளாட்டோவின் சரித்திரத்தைப் படித்திருக்கிறாயா என்று கேட்கிறார். இல்லை என்ற உடனே, "பிளாட்டோ ஒரு தத்துவ ஞானி. அவரிடம் ஒரு நாள் ஒருவன் வந்து நேற்று இரவு அந்த மூலை வீட்டில் இருக்கிறவன் உங்களைப்பற்றி மிகவும் தாக்குறைவாகப் பேசினான் என்று கூறினான். அதற்கு அவர் அப்படியா, தாக்குறைவாகவா பேசினான். வெறும் வார்த்தைகளாகவா பேசினான். ஒரு பெரும் கம்பை எடுத்து அடித்து என்னுடைய எலும்பை முறித்திருக்க வேண்டாமா? நான் தான் அங்கு இல்லையே என்று பிளாட்டோ சொன்னாராம். இல்லாத இடத்தில் ஒருவரைப்பற்றிக் குறைவாகக் கூறக்கூடாது" என்ற உண்மையை எடுத்துக் கூறுவதற்காக இந்தச் சம்பவத்தைக் கூறிவிட்டு, ராமன் வந்தவுடனே அவனிடம் கேட்டாராம். "நீ தினமும் குடிப்பாயாமே, தப்பாகப் பிரதிக்ஞை எடுத்துக் கொண்டிருக்கிறாயாமே, அவன் கூறுகிறான்," என்று சொன்னார். "அவன் பொய் சொல்கிறான் நான் குடிப்பதே இல்லை", என்று ராமன் சொல்கிறான். திருச்செங்கோட்டு அம்மன் முன்னால் சத்தியம் செய்வாயா என்று ராஜாஜி கேட்கின்றார். செய்வேன் என்று இரண்டு பேரும் கூறுகிறார்கள். இவன் அவன் சொல்வது
4-30 பி.ப. தப்பு என்கிறான். அவன் இவன் சொல்வது தப்பு என்கிறான். திருச்செங்கோட்டுக் கோவிலுக்கு முன் ராஜாஜி அவர்கள் செருப்பைக் கழட்டிவிட்டு வருகிறார். திடீரென இந்தச் செருப்பின் மீது சத்தியம் செய்வாயா என்று கேட்கிறார். அம்மன் முன்னால் சத்தியம் செய்கிறவன் செருப்பின்மீது சத்தியம்

செய்யத் தயங்குகிறான். ஏனென்றால், செருப்பைத்தான், அவனுடைய வாழ்க்கைக்கு, அவன் உயிர் வாழ்வதற்கு உள்ள தொழிலின் சின்னமாக அவன் கருதுகின்றான். அதனால் அந்தச் செருப்பின்மீது சத்தியம் செய்யத் தயங்குகின்றான். 'சர்வம் விஷ்ணுமயம் ஜகத்' என்பதற்கு தமிழ் நாட்டில் திகழும் சிறந்த உண்மைக்கு உதாரணம் இதைத் தவிர வேறு இருக்க முடியாது. அதை நாம் அவருடைய வாழ்க்கைச் சரித்திரத்தில் காண்கின்றோம். அதிலே அங்கங்கே கிடைக்கக்கூடிய சின்னப் பொருளை வைத்துக்கொண்டு பெரிய தத்துவத்தை போதிக்கக் கூடிய ஒரு மாமேதையாக அவர் திகழ்ந்தார். ஆசிரியர்கள் பெரும் உண்மைகளை எப்படிப் போதிக்க வேண்டும் என்பதற்கு அவர் காட்டிய உதாரணத்தை இந்தச் சமுதாயத்தின் இன்றைய சரித்திரத்தில் இடம் பெறவேண்டிய சாதனையாக நான் கருதுவேன். அவருடைய போற்றலை நாம் என்றும் மனதில் கொண்டு, அவர் கையாண்ட முறையை, மனதில் குழப்பம் இல்லாதபடி, சிந்தனைத் தெளிவுடன், அச்சம் இல்லாதபடி உண்மையில் இளைஞர்கள் மனதில் ஊக்கம் ஏற்படும்படியான விதிமுறைகளை அறிந்துகொண்டு, அவருடைய அறிவுக்கும், ஆற்றலுக்கும் பங்கம் இல்லாதபடி அவர் வளர்த்த நெறிகளைப் பரப்புவதற்கு சிறு குழந்தைகளின் ஆவலைத் தூண்ட நல்ல தொண்டு செய்ய வேண்டும். ஆசிரியர் உலகத்துக்கு பெரியதோர் பேராசிரியராகத் திகழ்ந்து மறைந்த அந்த மகானை ஆசிரிய உலகம் என்றும் போற்றும் என்று கூறிக்கொண்டு, அமர்கின்றேன்.

திரு எம். எம். பக்கர் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மறைந்த மூதறிஞர் ராஜாஜி அவர்களுக்கு இந்த மன்றம் அளிக்கின்ற இரங்கலில் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக நானும் பங்கு கொள்கின்றேன். மூதறிஞர் ராஜாஜி அவர்களுடைய திறமைகளையெல்லாம் பற்றி எனக்கு முன்னாலே பேசிய பெரியவர்கள் தெளிவாக எடுத்துரைத்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, ராஜாஜி அவர்களிடத்தில் இருந்த நெஞ்சுத் துணிவையும், திறமையையும், தெளிவையும் அவர்கள் பாராட்டினார்கள். நான் ராஜாஜி அவர்களிடத்தில் மிகவும் வியந்து பாராட்டிய ஒன்று, அவர்களிடத்திலிருந்த நெஞ்சுத் துணிவு. தனக்குச் சரி என்று பட்ட ஒன்றுக்காக, அவர் எந்தத் தயவையும்

[திரு. எம். எம். பக்கர்] [1973 பிப்ரவரி 3

பலனையும் எதிர்பாராமல், தன் வாழ்நாள் முழுதும் நண்பர்களாக இருந்தவர்களையும் எதிர்ப்பதற்குக் கொஞ்சம்கூட ராஜாஜி அவர்கள் தயங்கியதில்லை என்பதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே சொன்னார்கள். அவர் மகாத்மா காந்தியையே எதிர்த்தார். வாழ்நாள் பூராவும் அவருடைய நிழல்போல் இருந்த மகாத்மா காந்தியையே ராஜாஜி அவர்கள் எதிர்த்தார்கள். பண்டித நேரு அவர்களையும் எதிர்த்தார்கள். அது மட்டுமல்லாமல், ராஜாஜி அவர்களிடத்திலே இருந்த இன்னொரு பெரிய துணிவு, தான் செய்த காரியத்தையே, தவறு என்று கண்டாரானால், அதைத் திருத்திக்கொள்வதற்கும் கொஞ்சம் கூடத் தயங்கியதே கிடையாது என்பதையும் கண்டோம். 1937-ல் இந்தியைக் கட்டாயப் பாடமாகச் சென்னை மாகாணத்திலே கொண்டுவந்த ராஜாஜி, 1960, 64, 65-ஆம் ஆண்டுகளில் இந்தி மொழி சாதாரண வடநாட்டு மொழி மட்டுமல்ல, அது ஒரு ஏகாதிபத்திய மொழியாக உருவெடுத்துவிடுமோ என்று நினைத்து, தீவிரமாக அதை எதிர்க்க அவர் தயங்கவில்லை என்பதை நாம் காண முடிந்தது. அது மட்டுமல்ல, ஆவடி காங்கிரஸில், சோஷலிஸத் தீர்மானத்தை மௌலானா ஆசாத் அவர்கள் முன்மொழிய, அதை வழிமொழிந்து பேசிய ராஜாஜி அவர்கள், பிற்காலத்தில் சுதந்திரா கட்சியை ஆரம்பிப்பதற்கும் கொஞ்சங்கூடத் தயங்கியதில்லை. தனக்குச் சரி எது என்று பட்டதோ, தான் சரி என்று நினைத்த ஒன்றுக்காக, யாரை எதிர்ப்பதற்கும், எந்தத் தியாகத்தையும் செய்து அதில் வெற்றி காண்பதற்கும் ராஜாஜி அவர்கள் தயங்கியதே கிடையாது. ஆகையினால் தான் 1944-ல் புகழ் பெற்ற அமெரிக்க எழுத்தாளர் ஜான்குந்தர் தன்னுடைய 'இன்டியா இன் ஏஷியா' என்ற நூலில் இந்தியாவில் இருந்த அரை டஜன் அறிவாளிகளில் ராஜாஜி அவர்கள் தலைசிறந்த அறிவாளி என்று எழுதியிருக்கிறார். அப்படிப்பட்ட புத்திக் கூர்மையும் திறமையும் கொண்டவர் அந்த மகான். அவர் கவர்னர்-ஜெனரல் பதவியிலிருந்து விலகி, தமிழ் நாட்டில் ஓய்வு பெறுவதற்கு வரும் நேரத்தில் ஒரு சொற்பொழிவாற்றினார். அதை இப்போது நினைத்தாலும், நமது உள்ளமெல்லாம் கலங்குகிறது. "நான் இப்படிப்பட்ட மாளிகையில் வாழ்ந்து பழக்கப்பட்டவன் அல்ல, நான் குடிசையில் வாழ்ந்து தான் பழக்கப்பட்டவன். ஆனால் நான் அந்தக் கடமையைச்

1973 பிப்ரவரி 3] [திரு. எம். எம். பக்கர்]

செய்கிற சில ஆண்டுகளுக்கு மாளிகையில் வாழவேண்டிய துர்ப்பாக்கியம் இருந்தது. இந்த நாட்டுக்காக நான் அதைச் செய்தேன். இன்று நான் விடுதலை ஆகிவிட்டேன், மகிழ்ச்சியோடு ஊருக்குச் செல்கிறேன்" என்று ராஜாஜி அவர்கள் சொன்னார்கள். அதற்குப் பிறகு கூட, ராஜாஜி அவர்கள் ஒரு வேலையைச் செய்கின்றபோது, அந்த வேலையை இது உயர்ந்தது, இது தாழ்ந்தது என்று பிரித்துப் பார்த்ததில்லை. கவர்னர்-ஜெனரலாக இருந்த ராஜாஜி தமிழ் நாட்டு முதலமைச்சர் ஆவார் என்று பல பேர் எதிர்பார்க்கவில்லை. ராஜாஜி முதலமைச்சர் ஆனார். அப்போது அவர் சொன்னார் "எதைச் செய்தாலும், கடமை ஒன்று தான் முக்கியம். அது பெரிய வேலையா, சின்ன வேலையா என்பது முக்கியமல்ல. இது நாட்டுக்கு நாம் செய்ய வேண்டிய கடமை என்றால், அது எவ்வளவு சின்னக் காரியமானாலும், அதை நிச்சயம் செய்வேன்" என்று துணிவோடு சொன்னவர் ராஜாஜி. ராஜாஜி அவர்கள் 94 ஆண்டுகள் வாழ்ந்து மறைந்துவிட்டாலும், ராஜாஜி போன்றவர்கள் எந்த நாட்டில் பிறக்கின்றாரோ, அந்த நாடெல்லாம் பெருமைப்படத்தக்க வகையில் அவர் வாழ்ந்து விட்டுச் சென்றிருக்கிறார். இந்தியாவில் சாதாரணமாகச் சொல்வார்கள். அவர் தொடாததும் இல்லை, தொட்டுப் பொன் ஆகாததும் இல்லை என்று சொல்வார்கள். அதுபோல, இந்த நாட்டில் ராஜாஜி பார்க்காத உயர்ந்த பதவி எதுவுமில்லை. ராஜாஜி அவர்கள் பதவிகள் வகித்துப் பெருமைப்பட்டார். அதே மாதிரி, அவர் வகித்த பதவிகளுக்கும் பெருமை தேடித் தந்துவிட்டுத்தான்
சென்றிருக்கிறார் ராஜாஜி. அவர் அப்படிப்பட்ட ஒரு பெரிய 4-40
அறிவாளி, இந்தியாவின் பெருமையை, தமிழகத்தின் பெருமையை பி.ப.
உயர்த்திய ஒருவர், சத்தியத்தில் வாழ்ந்தவர், மக்களுக்கு சத்தியத்தைப் போதித்தவர், அவருடைய மறைவு குறித்து இந்தச் சபையின் இரங்கலில் நானும் எனது கட்சியின் சார்பாகப் பங்கு கொண்டு அமர்கின்றேன். வணக்கம்.

திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி: மாண்புமிகு மன்ற உப-தலைவர் அவர்களே, இன்று நம்மைவிட்டுப் பிரிந்து சென்ற ராஜாஜி அவர்களுடைய இரங்கல் தீர்மானத்தை ஒட்டிச் சில வார்த்தைகள் சொல்ல நான் விரும்புகிறேன். இங்கே பேசியவர்களில் பலர் அவருடைய சேவையையும் அவர் நாட்டிற்கு தன்னை

[திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி] [1973 பிப்ரவரி 3

அர்ப்பணித்துக் கொண்ட நிலையையும் அவருடைய உள்ள உறுதியையும் தைரியத்தையும் வெகுவாகப் பாராட்டிப் பேசியிருக்கின்றனர். இன்னும் அவரைப்பற்றி நாம் எத்தனையோ நாட்கள் கூடப் பேசினாலும் தீராது. அவ்வளவு தகுதியும் திறமையும் புகழும் பெற்று இருந்தவர். அவர் நம்முடைய மாநிலத்திலே முதலமைச்சராக ஒரு முறை பொறுப்பேற்று நிர்வாகத்தை நடத்தியிருக்கிறார். அப்போதெல்லாம் விவசாயிகளுக்கு எவ்வளவு பெரிய நன்மை செய்ய வேண்டுமோ அதையெல்லாம் அவர் செய்திருக்கிறார். கடன் நிவாரணச் சட்டம், விவசாயிகள் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் போன்றவைகளையெல்லாம் குறிப்பாகச் செய்து, அவர்களை வீழ்ச்சியிலிருந்து காப்பாற்றியிருக்கிறார். மாநிலத்தில் மட்டுமல்ல, அகில இந்தியாவிற்கும் கவர்னர்-ஜெனரலாகப் பதவி வகித்திருக்கின்றார். மத்திய அரசில் பெரும் பொறுப்பில் அமைச்சராக இருந்து பணியாற்றியிருக்கின்றார். கவர்னராக இருந்து சேவை செய்திருக்கின்றார். லீக் மெம்பர் சொல்லியபடி, அவர் வகித்த பதவிக்கெல்லாம் அவரால் ரொம்பப் பெருமை தேடித் தரப்பட்டது. அவ்வளவு பெரிய சிறந்த மேதை; அவர் நம்முடைய தமிழ் நாட்டைச் சேர்ந்தவர் என்று நாமெல்லாம் பெருமையோடு கூறிக்கொள்ளுகின்ற நிலையில், அவர் நம்மை விட்டுப் பிரிந்துவிட்டார். ஆனால் அவர் இன்னும் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்திருந்து, மேன்மேலும் அவருடைய அறிவுரைகளையெல்லாம் நமக்கு வழங்க வாய்ப்பு இல்லாமல் போய்விட்டதே என்று நான் வருத்தத்தோடும் வேதனையோடும் கூறிக்கொள்ளுகிறேன். ஆனால் வேறு வழியில்லை. அவர் கூறிய அறிவுரைகள், அவர் போற்றி வளர்த்த கருத்துக்களையெல்லாம் இன்னும் நாம் அந்தந்த வகையில் பின்பற்றி நாட்டுக்கு வழிகாட்டியாக்கிக் கொள்ள வேண்டும். அவர் தன் கடைசி மூச்சு வரையில் இந்த நாட்டு மக்களுடைய நன்மைக்காகவும் இந்த நாட்டு மக்களின் சுபிட்சத்திற்காகவும் எந்தவிதக் குழப்பமும், தொல்லையும் இல்லாமல் தமிழகத்திற்காக தன்னை அர்ப்பணித்துக்கொண்ட ஒரு சிறந்த தலைவர். அவருடைய மறைவு குறித்து முதல்வர் கொண்டு வந்திருக்கிற இந்த இரங்கல் தீர்மானத்திற்கு ஆதரவு கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

1973 பிப்ரவரி 3]

*திரு. ஆர். சக்தி மோகன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அருமைக்கும் பெருமைக்கும் உரிய இந்திய தேசிய காங்கிரஸ் அரசியலின் மூளையாக இருந்த மாபெரும் தலைவர் ராஜாஜி அவர்களின் மறைவிற்காக நடைபெறுகின்ற இந்த இரங்கல் கூட்டத்தில் ஃபார்வர்ட் ப்ளாக் கட்சியின் சார்பிலே நான் கலந்துகொண்டு சில வார்த்தைகள் கூறுகிறேன். ராஜாஜி அவர்களைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சரிலிருந்து திரு. படையாச்சி அவர்கள் வரையில் விரிவாகவும், விளக்கமாகவும் சொல்லியிருக்கிறார்கள். ராஜாஜி அவர்களைப் பற்றிப் பேசுவது என்றால், அவருடைய சேவைகளைப்பற்றி விளக்கங்கள் அளிப்பது என்றால், அது நீண்ட நெடும் தொடராக நெடியும். அரசியலின் அரசியலாகவும், காந்தியடிகளின் காந்தியாகவும், ஆன்மீகத்திற்கு ஆன்மீகமாகவும் ஏறத்தாழ 100 ஆண்டுக் காலம் வாழ்ந்த பெருமகனார் அவர். 19-ஆம் நூற்றாண்டின் ஒரு பகுதியிலும் 20-ஆம் நூற்றாண்டின் ஒரு பகுதியிலும் வாழ்ந்த பெருமைக்குரியவர். அரசியல் துறையிலே அவர் மாறுபட்ட பல இயக்கங்கள் உண்டு. மூதுபெரும் தலைவராக இருந்தாலும் கூட, அவரோடு நெருங்கி சில அரசியல் திருப்பங்களிலே கலந்துகொள்ளும் பாக்கியம் எனக்கு இருந்தது. அன்றைக்கு இருந்த காங்கிரஸ் ஆட்சியை மாற்றி அமைத்தே தீர வேண்டும், நடக்கும் ஆட்சி தேசியத்தை விட்டு மாறுபட்டுச் செல்லுகிறது, அதை மாற்றித்தான் ஆக வேண்டும், என்பதற்காக தனிக் கட்சி அமைக்கும் ஆர்வம் இருந்த காலத்தில், அன்றைக்கு மிகத் தீவிரமாகவும் மிகக் குறுகிய காலத்தில் மிக ஆக்கமும் வளர்ச்சியும் கொண்டிருந்த ஜனநாயகக் காங்கிரஸ் கட்சி என்ற கட்சியை, சுதந்திரக் கட்சியாக மாற்றுகிற காலத்தில் அவர் காட்டிய சுறுசுறுப்பு, அவர் கொடுத்த விளக்கங்கள் இவையெல்லாம் மிகமிகத் தீவிரமானவை. அவைகளைப் பார்த்த பிறகு தான், நாட்டிலே பல திருப்பங்களை உண்டாக்கக் கூடிய மாபெரும் தலைவர் இவர் தான், இவரால் தான் நிச்சயமாக ஆட்சி மாற்றம் மட்டுமல்ல, நாட்டிற்கே நல்ல காலம் விடியும் என்ற நம்பிக்கை என் போன்றவர்களுக்கு ஏற்பட்டது. அத்தகைய பெரியவர் ஒருவர் ஏறத்தாழ நூறு ஆண்டுக்காலம் வரை நம் வசம் இருந்தார். நம்முடைய துரதிருஷ்டம் இன்று காலத்தின் வயப்பட்டு விட்டார். அவரைப்பற்றி விரிவாக எழுத

வேண்டும், பாடப் புத்தகங்களில் எல்லாம் அவைகளை வைக்க வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். தமிழ் நாட்டு அரசியலில் ராஜாஜியைப்பற்றிப் பள்ளிக்கூடங்களில் பாடப் புத்தகங்களை வைத்துத் தான் அறிவுறுத்த வேண்டும் என்ற அவசியமில்லை. சாதாரணமாக, இளைய மாணவர்கள் விவரம் தெரிந்த 4, 5 வயது மாணவருக்குக் கூட, ராஜாஜி என்றால் யார் என்பது தெரியும், அந்த அளவிற்கு ஆரம்ப காலம் தொட்டே அவர் அத்தனை துறைகளிலும் சிறப்பாகச் சாதனைகளை புரிந்திருக்கிறார். தீண்டாமை ஒழிப்பு பற்றி நினைக்காத காலத்திலே அதைச் செய்து காட்டியவர் அவர். கலப்பு மணம் என்று யாரும் செய்யத் துணியாத காலத்தில் அவர் தன்னுடைய திருமகளை கலப்பு மணம் செய்து நாட்டிற்கு வழி காட்டியவர். அத்தகையவர் இன்னும் ஆயிரம் ஆண்டு காலம் நம்மிடையே வாழ்ந்தாலும்கூட அவருடைய சேவை நமக்குத் தேவை தான். ஆனால், அவருக்கு ஓய்வு கொடுக்க வேண்டும் என்று விரும்பியோ என்னவோ தன்னிடம் ஆண்டவன் அழைத்துக் கொண்டு விட்டார். அந்தப் பெருமகன் தமிழ் நாட்டில் பெரும் தலைவர்களில் தீவிரவாதத் தலைவர்களான சீனிவாச அய்யங்கார், சுப்பிரமணிய பாரதி, வ.வே.சு. அய்யர், வ.உ. சிதம்பரனார் போன்ற முக்கியமான நம் பாரத பெரும் தலைவர்களின் அடையாளச் சின்னமாக நடமாடும் அறிவாளியாக இருந்தவர், அந்த அடையாளச் சின்னம் இன்றைக்கு சுவடின்றிப் போய் விட்டார் என்றாலும் கூட, அவர் வைத்து விட்டுச் சென்ற அறிவாற்றல் மிக்க இயக்கங்கள், வழிமுறைகள், அவர் நடத்திக்காட்டிய தடங்கள் அனைத்தும் இருப்பதால், அதன் வழி சென்று நல்லதொரு தேசியத்தை உருவாக்கி நாட்டை நல்ல முறையில் அழைத்துச் செல்ல நம்மால் இயலும் என்ற தெம்பு ஏற்படுகிறது. அவரது ஆத்மா அமைதியுற நம்மால் இயலும் என்ற தெம்பு ஏற்படுகிறது. அவரது ஆத்மா அமைதியுற இந்த மன்றத்தின் சார்பாக நானும் இறைவனை வேண்டிக்கொள்ளுகிறேன். வணக்கம்.

4-50 பி.ப. * THIRU G. VASANTHA PAI: Hon. Deputy Chairman, Sir, I join the chorus of praise in memory of our revered leader Thiru C. Rajagopalachari. Sir, I consider him as the first founder of the Republic of India, though he was the last Governor-General. I think it was the astute understanding of Rajaji's mental equipment and ability that prevented his being made the first President

of the Republic, because he was by no means suited for that post. With his astute ability and with his intellectual attainment he would have made the President a virtual *de facto* Ruler. The persons probably understood it and that was the reason why he was not given the Presidentship. But one aspect, Sir, which he felt very strongly was that he had not been given the mantle of Presidentship and probably his slow departure from the Congress was because of the distress that this aspect caused him in his mind. Thiru Rajaji was available for all of us with his wit, with his ready sarcasm and with his parables which so often came out in the 'Swarajya' and other journals and on many occasions when we had the chance to meet him. Sir, for me, personally, it has been a matter of pride, though I was not in his party and though I was not in any way connected with him, to have been associated with him indirectly. When I was the president of the Presidency College Union, Thiru Rajaji came in 1939 to the Presidency College. Mr. H. C. Papworth was then the Principal and he was a Britisher. He had a jibe at the photographer who had not brought the umbrella to prevent the Sun coming on the face of the lens of the camera. He said, "How is it that there is no umbrella to-day?" Pat came the reply from Rajaji, "It might have been taken away by the British Prime Minister". It was Mr. Neville Chamberlain who usually carried an umbrella with him to every place he went in England. Mr. Papworth was not slow to realise the wit and sarcasm of Rajaji and he greatly appreciated the wit.

On another occasion, in 1942, Rajaji came to the Law College and the Principal of the Law College was very much afraid that he should have been invited to the College. Rajaji said: "The Britishers say that the hay-stack of freedom is before us but that we—the Hindus and the Muslims—are like donkeys and are quarelling with each other. They say 'The priceless freedom is before you. But, if you do not settle the quarrel, how can we give this freedom to you?' Rajaji continued: "Leave the hay-stack alone and quit instead of playing proverbial monkey and why not you leave the donkeys to settle the quarrel amongst themselves?" Such was the wit of Rajaji right through and during

the later years also, when he became the Governor-General of India and when he became the Chief Minister of the State. On all those occasions, we could see his simplicity depicted in every one of his movements. I do not think he ever used a State car of large dimensions. He went in his fiat car from his place of residence to the place of his office. He had also kept to his own house, No. 60, Bazlullah road for his office residence. One could always see that simple manner in which he conducted himself in the high offices he adorned.

Sir, lastly, before I conclude, I want to mention some personal reminiscences about him. On 3rd May 1968 he chose to write a letter to me and that was in connection with the Students versus Busmen agitation in Madras City. Thiru Annadurai, our Chief Minister, was then in the States. Rajaji was very much vexed that a High Court Judge had not been appointed for conducting this enquiry. I had then appeared on behalf of some students before the Enquiry Commission. As I read in the Souvenir Book somewhere and as Thiru Kamaraj had expressed about his own experience, I was surprised to find Rajaji in his Fiat car right in front of my house. I was thrilled because it was only a few months back that he had vehemently fought for the Swatantra Party against me in the elections in 1967. I was surprised to see Rajaji at the doors of my house waiting to call on me, when I rushed to his car and told him, " Sir, you should not have come here. If you had sent for me, I would have come and met you at your residence ". He said : " No, No, I wanted to come and give this letter to you ", and asked " Hasn't Mr. Sadasivam sent the leader which is going to appear on 11th May 1968 in the Swarajya? " I said, " I have not yet received it ". Shortly thereafter, I received the leader from Mr. Sadasivam. It was on 3rd May 1968 and the leader was to appear on 11th May. The leader was written to the effect that the enquiry must be held *in camera* by a High Court Judge, and that the proceedings in the Presidency Magistrate's Court should not be proceeded with till the judicial enquiry was completed. Immediately thereafter, at about 3 O'Clock I received another letter from Rajaji saying : " I have just had a conversation with Mr. Karunanidhi. He said that the Chief Minister was expected within 15 days from the States and that everything would

4—51
பிப

be well. Therefore, I have accepted his suggestion and I am not publishing this leader at all on 11th May ". Then I wrote to him: " I am not also publishing your views which you have disclosed to me and what you desider I should do on your behalf before the Enquiry Commission. " This incident showed the receptiveness of his mind and his willingness to speak out with persons who are holding views opposed to his. He was a great man in every respect. Many people did not agree with all his views and I was also one of those who did not agree in everything that he espoused. In three elections, I was pitched against the Swatantra Party candidate whom he vehemently supported as against me. Still, Sir, I hold him in respect and reverence. He is a great Son of India. Right from Vedaranyam where he undertook the Salt March down to the last day when he breathed his last, he was the Son of the Soil and an embodiment of several virtues; wisdom and goodness which seldom co-exist found themselves in abundance in this illustrious son of India. We can very well forget whatever lapses he had as he was wedded to truth, simplicity and such a degree of honesty which a person in political office could seldom lay claim to or hope to attain. Thank you, Sir.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், பிற கட்சிகளின் தலைவர்களும் தெரிவித்த அனுதாப உரைகளில் ஒவ்வொன்றையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். இன்று நாம் எந்தப் பெரியவருக்கு அஞ்சலி செலுத்துகிறோமோ, எவருடைய குடும்பத்திற்கு அனுதாபம் தெரிவிக்கிறோமோ, அவர் நம்முடைய வளர்ச்சிக்கெல்லாம், வாழ்வுக்கெல்லாம் நேர்முகமாகவும், மறைமுகமாகவும் காரணமாக இருந்தவர் என்பதை நன்றியுணர்வோடு இந்த நேரத்தில் நினைத்துக்கொள்கிறோம். அடிமைப்பட்டுக் கிடந்த இந்த நாட்டில் அங்கிங்கெனாதபடி அந்நிய ஏகாதிபத்தியம் எங்கெங்கும் ஆதிக்கம் செலுத்துகிற காலத்தில் உயர் குடும்பத்தில் பிறந்து, உயர் கல்வி கற்றிருந்து, செல்வாக்குள்ள வழக்கறிஞராக இருந்த அந்த நிலையில் ஒரு சாதாரண கிரிமினல் கைதியோடு சிறையில் தன்னை அடைத்துக்கொள்ள முன்வந்த குறிப்பிடத் தக்க சில சான்றோர்களில் தலைவர் ராஜாஜி அவர்கள்

ஒருவர் ஆவார். அவர் அன்று தொடங்கிய அந்தப் புனித யாத்திரையில் மறைகின்ற நாள் வரை தேசத்திற்குப் பாடுபடுவதிலே அவர்கள் தொண்டாற்றினார்கள். உலகமெல்லாம் போற்றக் கூடிய மனித ஆத்மாக்களில் சிறந்த மகாத்மா காந்தியடிகள், 'என் மனச்சாட்சியின் காவலர்' என்று ராஜாஜி அவர்களைப் பற்றிப் புகழ்ந்துள்ளார்கள். என் மனச்சாட்சி என் தெய்வம் என்று சொன்ன மகான், அந்த தெய்வமாகிய மனச்சாட்சிக்கு ராஜாஜியைக் காவலர் என்று சொல்லக்கூடிய அளவிற்கு பெரும் பேறு பெற்றவர் ராஜாஜி அவர்கள். இந்த நாட்டின் விடுதலைப் போரிலே காந்தியடிகளுக்கு வலது கரமாக நின்ற முன்னவர்களிலே ராஜாஜி அவர்கள் முதல்வராகத் திகழ்ந்தார்கள். காந்தியடிகள் தண்டி சத்தியாக்கிரகத்தைத் தொடங்கினால், தமிழகம் பின்வாங்கி விடாது என்பதற்காக வேதாரண்ய யாத்திரையை ராஜாஜி அவர்கள் துவங்கி வடக்கோடு தெற்கு இணைந்து நின்று விடுதலைப் போராட்ட வரலாற்றை அவர்கள் படைத்தார்கள். ராஜாஜி அவர்கள் பதவியேற்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர் தான் ஏற்றிருக்க முடியும் அதனை என்று சொல்லக் கூடிய சோதனை மிக்க சந்தர்ப்பத்தில் அவர் பொறுப்புக்களை ஏற்றார். இந்த மாநிலத்தில் இரண்டு முறை அவர் முதலமைச்சராக இருந்தபோது அவர் தான் இருந்து அந்தச் சங்கடங்களைத் தவிர்த்திருக்க முடியும் என்ற நிலையில் மாற்றுக் கட்சியினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலையில் அவர் முதல்வர் பதவியை ஏற்றார். வங்கத்தில் ஒரு முறை அவர் கவர்னராகச் சென்ற காலத்தில் அந்த மாநிலமே பிளவுபட்டு நவகாளியால் அந்த மாநிலம் நசிவுற்றிருந்த நேரத்தில் ராஜாஜி அவர்கள் அங்கு கவர்னராக இருந்து வழி காட்டி அந்த மாநிலத்தின் புனர்வாழ்வுக்கு உழைத்தார்கள். இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக அவர் பதவியேற்றபோது, கடைசி கவர்னர் ஜெனரல் என்ற பெயருக்கு கடைசி கவர்னர்-ஜெனரலாகவும், சுதந்திர இந்திய அரசின் தலைவர் என்ற பதவிக்கு முதல் தலைவராகவும் இருக்கின்ற பேறு அவருக்குக் கிடைத்தது. இன்று நாடு முழுவதும் நடைமுறையில் இருக்கின்ற அரசியல் சட்டத்தில் முதன்முதலாகக் கையொப்பமிட்டு பிரகடனம் செய்கின்ற பெருமை தமிழ் நாட்டவரான ராஜாஜிக்குக் கிடைத்தது என்பதில் நமக்கெல்லாம் பெருமையும் உரிமையும் இருக்கிற நிலையை

நாம் பார்க்கிறோம். அவர் பதவியில் இருந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சிற்சில புதுமைகளை, சிற்சில சாத்விகப் புரட்சிகளைச் செய்து தமிழ் நாட்டிற்குப் பெருமை தேடித் தந்தார்கள். இங்கு, இந்த மாநிலத்தில் அவர் முதல்வராக இருந்தபோது தீண்டாமை விலக்குச் சட்டத்தைக் கொண்டு வருவதிலும், மதுவிலக்குச் சட்டத்தைக் கொண்டு வருவதிலும், கடன் நிவாரணச் சட்டத்தைக் கொண்டு வருவதிலும் மற்ற மாநிலங்களுக்கு வழி நமக்கெல்லாம் மறவாத பெருமையைத் தேடித் தந்தார்கள். தமிழ் இனத்தின் புகழ் என்ற அளவிற்கு நமக்கெல்லாம் சிறப்புத் தேடி வரலாற்றில் ஒரு தனியிடத்தை அவர்கள் தேடிக் கொண்டதோடு நமக்கெல்லாம் மறவாத பெருமையைத் தேடித் தந்தார்கள். தமிழகத்தின் பண்பு என்று அடிக்கடி சொல்லி வருகிற ஒன்றினுடைய சின்னமாக, அடையாளமாக, ராஜாஜி வாழ்க்கையில் திகழ்ந்தார். 94 ஆண்டுக் காலம் அவர் வாழ்ந்தார் என்றாலும், அவரை முதலில் போய்ச் சந்திக்கின்றபோது ஒரு வயோதிகரைப் போய்ச் சந்திக்கிறோம் என்ற அச்சத்தோடு சந்தித்தோம். ஆனால் அவர் பேச, உரையாடத் தொடங்கிய பிறகு அவர் வயோதிகத்தை மறந்து, அவருடைய ஞாபக சக்தியையும், வாதிடும் திறமையையும், ராஜதந்திரப் போக்கையும் பார்த்து, அவரிடம் ஒரு ஐந்து நிமிஷம் உரையாடிவிட்டால், ஒரு முதுபெரும் கிழவரிடம் பேசுகிறோம் என்ற நிலையை மறந்துவிடக் கூடிய நிலையில் ஒரு அற்புத சக்தியை அந்த உடலில் காட்டிக் கொண்டிருந்தார்கள். அவர் 94 வயது வாழ்ந்து மறைந்தாலும் நமக்கென்னவோ அவர் அகாலத்தில் போய்விட்டார் என்ற எண்ணம் தோன்றுவதற்குக் காரணம் தன் பத்திரிகைகள் மூலம், அறிக்கைகள் மூலம் கருத்துப் போர்க்களத்தில் அவர் காட்டிய தீவிரமும் வீரமும் அவருடைய முதுமையை மறக்கும்படி செய்ததன் விளைவுதான். இது அவருடைய மறைவில் ஏற்பட்டிருக்கிற அதிகப்படியான வருத்தம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துகாட்டியது போன்று அவர் நிறை வாழ்வு வாழ்ந்தார். அதில் ஒன்றும் குறைவு இல்லை. பொறுப்புகளை ஏற்பதில், சேலம் நகர மன்றத் தலைவரிலிருந்து ஒரு மாநிலத்தின் தலைவர் பதவி வரை ஏற்று, இன்னொரு மாநிலத்தின் கவர்னராக இருந்து, அகில இந்திய அரசியலில் பல துறைகளில் அமைச்சராக இருந்து, இறுதியில்

தமிழ்நாடு சட்ட மன்றம்

திங்கட்கிழமை, 1973 பிப்ரவரி 5.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் சட்ட மன்றம் கூடியது.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

Rajah Mirasdar Hospital and Thanjavur Medical College Hospital.

* 3 *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state:—

(*a*) whether two different standards are now being followed regarding extra beds in Rajah Mirasdar Hospital and Thanjavur Medical College Hospital; and

(*b*) if so, the reasons therefor?

தஞ்சாவூர் ராஜா மிராசுதார் மருத்துவமனை & தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் ராஜா மிராசுதார் மருத்துவ மனையிலும், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலும் கூடுதலாகப் படுக்கை வசதிகள் அளிப்பது குறித்து இரண்டுக்கும் வெவ்வேறு முறைகள் தற்போது பின்பற்றப் பட்டு வருகின்றனவா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) வெளி நோயாளிப் பிரிவு ராஜா மருத்துவமனையில் மட்டுமே இயங்கி வருவதாலும் மற்றும் [illegible]பாக மருத்துவம், அறுவை சிகிச்சைகள் அளிக்கப்படவேண்டியுள்ள [illegible]ளும், மருத்துவ ஆய்வு செய்யப்பட

[சட்ட மன்றத் துணைத் தலைவர்] [1973 பிப்ரவரி 3

அதன் தலைவராக வீற்றிருக்கின்ற பெரும் பேறு பெற்று ஒரு சரித்திரத்தைப் படைத்தார். நமக்கு அவருடைய அரசியல் சாதனைகளில் கருத்து வேற்றுமை இருந்தாலும், அவருடைய அரசியல் கொள்கைகளில் கருத்து வேற்றுமை காட்டினாலும் அவருடைய இலக்கியத் தொண்டைப் பாராட்டாதவர்கள் யாரும் இருக்க முடியாது. அவருடைய எழுத்தோவியங்கள் என்றும் நிலைத்து நிற்கத் தக்கவை. அவை தமிழுக்கு ஒரு புகழைத் தேடித் தந்த இலக்கியங்கள் என்ற அளவில் இந்த அரசுக்கோ, முதல்வருக்கோ, அமைச்சரவைக்கோ, இந்த எழுத்தோவியங்களைப் பாராட்டுவதில் ஒரு தடையும் இருக்க முடியாது என்பதில் ஐயப்பாடு கிடையாது. அந்த எழுத்தோவியங்கள் என்றும் நிலைத்து நிற்கும். திரு. சா. கணேசன் எடுத்துச் சொல்லியது போன்று சில சிக்கல்கள் நாட்டுக்கு ஏற்பட்டபோது, சிக்கல்களைத் தீர்ப்பதற்கு அவரே முன் வந்து தீர்த்துக் கொடுத்த பெருமை அவருக்கு உண்டு. இந்த நாட்டின் கோடிக்கணக்கான அரிஜன மக்கள் இன்று அனுபவிக்கிற தனித் தொகுதி முறையும், சட்ட மன்றத்திலே அதிகப்படியான இடங்களும், பூனா ஒப்பந்தம் மூலம் கிடைத்தன. அப்போது காந்தியடிகள் உண்ணாவிரதம் தொடங்கினார். தன் உயிரைப் பணயம் வைத்து இந்த ஒப்பந்தத்திற்குக் காரணமானார் என்றாலும், அவருடைய உண்ணாவிரதத்தைப் புறங்கண்டு வைத்து, அவருடைய உயிர் என்னாகுமோ என்று இருந்த நிலையில் தன்னுடைய சாகசத்தால், ராஜ தந்திரத்தால் அம்பேத்கார் அவர்களுடைய அன்புக்கு உயர்வு கொடுத்து அவரை ஏற்றுக்கொள்ளச் செய்த இந்தப் பூனா ஒப்பந்தம் அவருடைய ராஜ தந்திர சாதனைகளில் மறக்க முடியாத ஒன்றாக இருக்க முடியும். கிரிப்ஸ் மிஷன் வந்தபோது, சிக்கல் ஏற்பட்டபோது, அதை தன் அறிவால் தீர்த்துக் கொடுத்து இந்த நாட்டில் பிரிட்டிஷ் ஆட்சி வெளியேறுவதற்கு வழி வகுத்துக் கொடுத்த அறிஞர்களில் அவர் ஒருவராகத் திகழ்ந்தார். 1937ல் சட்ட மன்றத் தேர்தல் முடிந்து பதவியேற்க வேண்டிய நிலையில் ரத்து அதிகாரத்தைக் கைவிடுவதில்லை என்று கவர்னர் இருந்தபோது அந்தப் பிடிவாதத்தைத் தகர்த்து கவர்னர் மூலம் விட்டுக் கொடுப்பதற்கான ராஜ தந்திர வெற்றி கண்டு, காங்கிரஸ் கட்சியைப் பதவியேற்கச் செய்தவர்களில் ராஜாஜிதான் முதல்வர் என்பதை மறக்க முடியாது.

1973 பிப்ரவரி 3] [சட்ட மன்றத் துணைத் தலைவர்]

தமிழகம் எளிதில் பெற முடியாத தலைவரைப் பெற்று இழந்து விட்டது. ஒரு நூற்றாண்டு காலம் அவர் வாழ்ந்தார் என்றாலும் அவரைப் போன்ற மேதைகள் கிடைப்பதற்கு எத்தனை தலைமுறைகள் ஆகுமோ. ஆனால் தமிழ் நாடு மேதைகளைக் கொடுப்பதில் பஞ்சம் காட்டியதில்லை. மேதைகளைத் தருவதில் தமிழ்த்தாய் கருமியாகிவிட்டதில்லை. ஆகவே, ராஜாஜி போன்ற மேதைகள் வாழையடி வாழையாகத் தோன்றுவார்கள் என்ற நம்பிக்கையோடு உங்கள் எல்லோருடனும் சேர்ந்து நான் அந்தப் பெரியவருக்கு, அந்த ஆன்ம ஞானிக்கு, ராஜ தந்திரிக்கு, அந்தப் பண்பின் சின்னத்திற்கு அஞ்சலி செலுத்துகிறேன்.

அன்னாரது மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இரண்டு நிமிடம் மௌனமாக எழுந்து நிற்குமாறும் இத்தீர்மானத்தை நிறைவேற்றுமாறும் இம்மன்ற உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

(அவையினர் எல்லோரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றார்கள்.) தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : மறைந்த ராஜாஜி அவர்களின் நினைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மேலவை இப்போது கலைந்து 1973 பிப்ரவரி 5 ஆம் நாள், திங்கட் பி.ப.
கிழமை மாலை 4 மணிக்கு மீண்டும் கூடும். 5–05

பின்னர், சட்ட மன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

வேண்டிய நோயாளிகளும் ராஜா மருத்துவ மனையில் அதிகப்படியாக அமைக்கப்பட்டுள்ள 160 படுக்கைகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டு பின்னர் தொடர் மருத்துவ சிகிச்சைக்காக தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு தேவைப்படுகிறவர்கள் மாற்றப்படுகின்றனர்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்த இரு மருத்துவ மனைகளும் மருத்துவக் கல்லூரியின் சார்புடையவையாக நடத்தப்படுகின்றன. ஒரு மருத்துவ மனையில், அதாவது ராஜா மிராசுதார் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ள படுக்கைகளுக்கு மேலாக, சில சமயங்களில் 400 படுக்கைகள் (கிட்டத்தட்ட 75 சதவிகிதம்) அதிகமாகச் சேர்க்கப்பட்டுள்ள தாகவும் நான் அறிகிறேன். ஆனால் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் உபரி படுக்கைகளே இல்லை என்ற நிலைமை இருக்கிறது. அதனாலே வசதி உள்ளவர்களும், டாக்டர்களுக்கு வேண்டியவர்களும்தான் தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் அனுமதிக்கப்படுகிறார்கள் என்றும், அது தனியாருடைய 'நர்சிங் ஹோம்' போல இயங்குகிறதாகவும், லஞ்சம் வாங்கு வதற்கு வாய்ப்புடையதாகவும் இயங்குகிறது என்று சொல்லப்படுவது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அங்கத்தினர் அவர்கள் சொன்னதுபோல, லஞ்சம் வாங்குகிற அளவுக்கு வசதியாக இருக்கிறதா என்பது எனக்குத் தெரியாது. கொடுத்தவர்களாக இருந்தால், அவர் களுக்குத் தெரியக்கூடும். ஆனால் அதற்கு மாறாக எந்த ஒரு மருத்துவ மனை யிலும் அதிகம் பேர் சேர விரும்புவது இயற்கை. ராஜா மருத்துவ மனை தஞ்சை நகரில் இருப்பதால், நகரத்தில் உடனடியாக சிகிச்சை பெறபலர் செல்கிறார்கள். உடனடி சிகிச்சைக்கு வருகிறவர்களில் சிலரைப் படுக்கையில் வைக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதற்காக ஏற்கெனவே உள்ளதைவிட 120 படுக்கைகள் 'எக்ஸ்டிரா' வாக அங்கே அமைக்கப்பட்டு அந்த வசதி அளிக்கப்படுகிறது. ஆனால் தொடர்ந்து சிகிச்சை அளிக்க வேண்டியிருந்தால், அவர்கள் தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு மாற்றப்படுகிறார்கள். இதுபற்றி மருத்துவக் கல்வித் துறை இயக்குநர் பரி சீலனை செய்கிறார்கள். மறுபடியும் ஏதாவது திருத்தம் செய்ய வேண்டு மானால் பரிசீலனை செய்யப்படும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்த முறையை மாற்றி, மற்ற மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளில் இருப்பதைப்போல, ஒரு நிலைமையை தஞ்சையில் உருவாக்க இருப்பதாக அமைச்சரவர்கள் இந்த அவையில் முன்பு

குறிப்பிட்டார்கள். அதற்காக அதிகாரிகளும் தஞ்சை வந்ததாக நான் அறி கிறேன். அவர்களும் நிலைமைகளை மாற்றுவது நல்லது என்று கருதியதாகச் சொன்னார்கள். ஆனால் தற்பொழுது அதில் ஏதோ தடங்கல் இருப்பதாக அறிகிறேன். அதனை அமைச்சரவர்கள் விளக்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, சில பகுதிகளை இந்த மருத்துவ மனையிலிருந்து அந்த மருத்துவ மனைக்கு மாற்றும்போது, அங்கு உள்ள பலதுறை டாக்டர்களின் பணியைக் கருத்தில் கொண்டு அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. கல்லூரி கட்டப்படுகிற நிலையில், இந்தத் துறைக்கு இவ்வளவு இடம் இருக்க வேண்டுமென்ற ஒரு கருத்து உருவாகி யுள்ளது. அந்த அளவு இடத்தைப் பிரித்து நீங்கள் பிறிதொரு பகுதிக்கு எடுத்துக்கொள்ளக் கூடாதென்று அங்குள்ளவர்கள் மறுப்பு தெரிவித்தார்கள். அந்த மருத்துவ மனையில் தங்கியிருந்த சட்டமன்ற உறுப்பினர் ஒருவர்கூட, "இந்த மருத்துவ மனை ஒன்றையாவது ஒழுங்காக அமைப்புடன் இருக்க உதவி செய்யுங்கள். இட நெருக்கடி மிகுந்த மருத்துவ மனையாக மாற்றி விடாதீர்கள். வேண்டுமானால் இங்கு புதிய கட்டிடங்கள் கட்ட வேண்டும்" என்று ஆலோசனை தெரிவித்தார்கள். இந்தப் பிரச்சினையில் இரண்டு விதமான கருத்துக்கள் இருக்கிற காரணத்தால், ஒரு முடிவுக்கு வர முடிய வில்லை. ஆனால் வசதிகளைப் பெருக்கி, ஏழை நோயாளியாக இருந்தாலும், கூடுமானவரையில் அவர்கள் நல்ல முறையில் சிகிச்சை பெறுவதற்கு வசதிகள் செய்து தரப்படும்.

Rajah Mirasdar Hospital, **Thanjavur.**

* 4 *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU N. SUNDARESA THEVAR): Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government have received any complaint that the patients in Rajah Mirasdar Hospital, Thanjavur, are undergoing hardship because of the non-availability of necessary medicines; and

(*b*) the steps taken thereon by the Government?

தஞ்சை இராஜா மருத்துவ மனை

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. என். சுந்தரேசத் தேவர் சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சை இராஜா மருத்துவமனையில் நோயாளிகட்குத் தேவையான மருந்துகள் கிடைக்காமல் இருப்பது குறித்து அரசுக்குப் புகார் வந்துள்ளதா?

(இ) இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) கேள்வி எழாது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, அந்த மருத்துவ மனையில் அண்மையில் கொடுக்கப்பட்ட ஊசிகள் காரணமாக சிலர் இறந்துவிட்டதாகப் பத்திரிகையில் செய்தி வந்தது. அதுபற்றிய தகவல்களைத் தெரிவிக்க வேண்டுகிறேன். அப்படி மேலும் நடக்காமலிருக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இந்தக் கேள்வியில் மருந்து கிடைக்கவில்லை என்ற கேள்வி எழுந்தது. மருந்து கிடைக்கிறதென்று பதில் சொல்லியிருக்கிறேன். போடப்பட்ட ஊசிபற்றித் தனியாகக் கேள்வி போட்டால், சரியான பதிலை அறிந்து சொல்ல முடியும்.

Government Erskine Hospital, Madurai.

*5 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Public Health be pleased to state:

(*a*) whether additional technical equipments for the treatment of cancer are to be installed at the Government Erskine Hospital, Madurai; and

(*b*) if so, the details thereof?

மதுரை அரசு எர்ஸ்கின் மருத்துவமனை

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை அரசு எர்ஸ்கின் மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சைக்காக கூடுதல் தொழில் நுட்பச் சாதனங்கள் நிறுவப்படவிருக்கின்றனவா?

(இ) ஆமெனில், அவற்றின் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) மதுரை அரசு எர்ஸ்கின் மருத்துவமனையில் 60 கோபால்ட் கதிர் வீச்சு நோய் சிகிச்சை இயந்திரக் கருவியை வாங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

சேர்த்துச் சொல்ல நான் விரும்புகிறேன். இந்த முயற்சியில் மத்திய அரசு வெளி நாட்டுச் செலாவணிக்கு இசைவு தராததன் காரணமாக, நீண்ட காலமாக தவிர்க்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து அரசு வேறு ஏற்பாடு செய்ய முடியுமா என்று முயற்சிக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, இந்த 'கோபால்ட் தெரபி' தற்சமயம் இந்திய நாட்டில் உற்பத்தியாகிறது. பம்பாயில் ஒரு நிறுவனம் அதை உற்பத்தி செய்து, அந்த 'கோபால்ட்'டையும் உடனடியாகத் தர ஏற்பாடு செய்கிறது. அதனாலே வெளிநாட்டுச் செலாவணி தேவையில்லை என்ற நிலைமை இப்போது உருவாகிறது.

Sir, will the Government consider the installation of Cobalt Therapy Units, instead of Deep X-ray, not only in Madurai Erskine Hospital but also in various other hospitals?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இப்பொழுது மதுரையில் 'டீப்-எக்ஸ்ரே தெரபி யூனிட் இருக்கிறது. அதுபோல 'கான்சர் கேமோதெரபி' முறை பயன்படுத்தப்படுகிறது. 'ரேடியம் நீடில்ஸ்' பயன்படுத்தப்படுகின்றன. அந்த மதுரை மருத்துவ மனை, சென்னைக்குத் தெற்கே இந்தச் சிகிச்சைப் பிரிவு உள்ள ஒரே மருத்துவ மனையாக இருப்பதால் 'கோபால்ட் தெரபி' தேவையெனக் கருதப்பட்டது. அதுவும் இப்போது இந்தியாவிலே கிடைக்குமென்ற சூழ்நிலை இருப்பது 10 நாட்களுக்கு முன்னர் எனக்குத் தெரியவந்தது. அதுபற்றி ஆராய்ந்து வருகிறோம். முடிந்த வரையில் அதைப் பெறுவதற்கு முயற்சிப்போம்.

THIRU G. SWAMINATHAN: Sir, is the Hon. Minister aware of the fact that the Deep X-ray Therapy Unit is not functioning in Madurai Erskine Hospital during the last one year?

THE HON. THIRU K. ANBAZHAGAN: Sir, whenever an equipment is not functioning in any hospital, that fact does not usually come to the notice of the Minister unless an hon. Member who is much interested in that brings it to the notice of the Hon. Minister or the Government Department.

Dean, Medical College.

* 6 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that there is no proper co-ordination between the Thanjavur Medical College and the two hospitals attached to the same for want of a Dean; and

(b) if so, the action proposed to be taken by the Government in the matter?

மருத்துவக் கல்லூரித் தலைவர்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மருத்துவக் கல்லூரித் தலைவர் ஒருவர் இல்லாத காரணத்தால், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியும், அதனோடு இணைந்துள்ள மருத்துவ மனைகள் இரண்டும் இணைந்து செயல்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், இது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்த மருத்துவக் கல்லூரியில் இருக்கிற மாணவர்கள் 'கிளினிகல்' என்று சொல்லப்படுகிற நோயாளிகளைப் பார்ப்பதற்காக ராஜா மிராசுதார் மருத்துவ மனைக்கு வர வேண்டியதாக இருக்கிறது. காரணம் சாதாரணமாக முற்றிய நிலையிலுள்ள ஏழை நோயாளிகள் அங்கிருக்கிறார்கள். அப்படி வருகிறவர்களுக்குச் சரியான முறையில் பாடம் சொல்லிக்கொடுக்கக்கூடிய நிலையில்லை என்று மாணவர்கள் சொல்கிறார்கள். 'டீன்' இல்லாத காரணத்தால், அங்கு இருக்கிற பேராசிரியர்கள் சரியாகச் சொல்லிக்கொடுக்கக்கூடிய நிலையில்லை என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அங்கத்தினர் அவர்களுக்கு கல்லூரியில் 'டீன்' இல்லாத காரணத்தால், அந்தக் குறை இருப்பதாகத் தெரிகிறது. எனக்கு 'டீன்' இருக்கிற இடத்தில் ஏற்படுகிற குறை தெரிகிறது. 'டீன்' இருப்பது மட்டுமல்ல. முறையைப் போக்குவது

ஆசிரியர்களுடைய கடமை உணர்ச்சியைப் பொறுத்தது. அதுபோல மாணவர்கள் இன்னொரு மருத்துவ மனைக்குச் சென்று நோயாளிகளைக் காண்பது, பயிற்சி பெறுவது இன்றைக்கும் சென்னையிலே கையாளப்படுகிற முறை. கீழ்ப்பாக்கம் மருத்துவ மனையிலிருந்து, ராயப்பேட்டை மருத்துவ மனைக்குச் சென்று பயிற்சி பெற்றாக வேண்டும். ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மாணவர்கள் அதற்குப் பக்கத்திலுள்ள ஆர்.எஸ்.ஆர்.எம். மருத்துவ மனையில் பயிற்சி பெற்றாக வேண்டும். அப்படி வெவ்வேறு மருத்துவ மனைகளிலே மாணவர்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கிற காரணத்தால், அவ்வாறு பயிற்சிக்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது. அது தவறல்ல. பொதுவாக மாணவர்களிடமும் ஆசிரியர்களிடமும் ஒருவிதமான கடமை உணர்ச்சி ஏற்படுமேயானால், எந்தவிதச் சூழ்நிலையிலும் பயிற்சி பெறுவார்கள்.

Panchayat School Buildings.

* 1 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) the names of the Panchayats in this State which do not own school buildings; and

(b) the steps taken to have such buildings?

ஊராட்சிகளுக்கு பள்ளிக் கட்டிடங்கள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் சொந்தக் கட்டிடங்கள் இல்லாத பள்ளிக் கட்டிடங்கள் உள்ள ஊராட்சிகளின் பெயர்கள் யாவை?

(இ) அத்தகைய ஊராட்சிகளில் பள்ளிக் கட்டிடங்கள் கட்ட எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின்படி தொடக்கக் கல்வியின் சிறு பள்ளிகளை நடத்தும் பொறுப்பும் அவற்றைப் பேணி வரும் பொறுப்பும் ஊராட்சி ஒன்றியங்களிடம்தான் ஒப்படைக்கப்பட்டுள்ளதே தவிர ஊராட்சிகளிடம் அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்படவில்லை. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள பள்ளிகளுக்கு கட்டிடம் கட்டிக் கொடுப்பதற்காக முனைப்புத் திட்டத்தை செயல்படுத்த ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடம் கடன் உதவி பெறுதற்காக

1971-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் சேகரிக்கப்பட்ட புள்ளிவிவரங்களின்படி, தற்போதுள்ள 21,929 பள்ளிகளில் 8,489 பள்ளிகளுக்குக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படவேண்டும்.

(இ) ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், பள்ளிகளுக்கான கட்டடங்கள் கட்டும் பணி தற்போது, கிராமப் பணித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படுகிறது. மேலும், பள்ளிகளுக்கான கட்டடங்கள் கட்டும் பணி, தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு விற்பனையிலிருந்து இதற்காக ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்தும் மேற்கொள்ளப்படுகிறது. இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்துடன் விரிவான பேச்சு வார்த்தைகள் நடத்திய பிறகு, இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகம், ஏனைய தேசிய வங்கிகள் அளிக்கும் கடன் உதவியை எந்த அளவுக்குப் பெற்று, பள்ளிகளுக்கான கட்டடங்கள் கட்டும் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, உள்ளாட்சி மன்றங்களுக்குக் கொடுக்க இயலும் என்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. எஸ். வி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர் : தற்போது மாண்புமிகு அமைச்சர் குறிப்பிட்டபடி, பள்ளிகளில் தனியார் பள்ளிகள் என்று இருக்கிறதா ? இது தவிர தனியார் பள்ளிக் கட்டிடங்கள் தனியாக இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதிலே ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் வருகின்ற பள்ளிகளுக்கு பங்கு இருக்கிறது.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : தலைவரவர்களே, 21 ஆயிரத்துச் சொச்சம் பள்ளிகளில் 8 ஆயிரத்துச் சொச்சம் பள்ளிகளுக்குத்தான் கட்டிடங்கள் இருக்கின்றனவா ? ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் வரக்கூடிய பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் கட்டுவதற்காக அரசு பரிசுச் சீட்டுத் திட்டத்தின் கீழ் இதுவரை எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறதென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 1971-72-ல் ரூ. 35 லட்சம் மொத்தத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1972-73-ல் ரூ. 50 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திரு. கே. ராஜாராம் : ஒரு ஊராட்சி ஒன்றியம் தன்னுடைய பள்ளி அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட விரும்பினால், அரசாங்கத்தின் மான்யம் எவ்வளவு தரப்படுகிறது ? ஏதேனும் கொள்கை ரீதியில் எவ்வளவுதான் கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பள்ளியைப் பொறுத்த வரையில், ஒரு துவக்கப் பள்ளி கட்டுவதற்கு அதாவது 12 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலே 4 ஆயிரம் ரூபாய் அரசு ஏற்றுக்கொள்ளுகிறது என்றும், 8 ஆயிரம் ரூபாய் ஊராட்சி ஒன்றியம் ஏற்றுக்கொள்ளுகிறது என்றும் ஏற்கனவே இருந்தது. 2 ஆண்டுகளுக்கு முன்பு, நிதிப் பற்றுக்குறை ஏற்பட்டிருக்கிறது என்று எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலிருந்தும் முறையிட்டு வந்ததிலிருந்து 4 ஆயிரத்திலிருந்து அரசின் தொகை 8 ஆயிரமாக உயர்ந்திருக்கிறது. அதாவது அரசுப் பங்கு 8 ஆயிரம் ரூபாய், ஊராட்சி மன்றம், ஒன்றியங்கள் பங்கு 4 ஆயிரம் ரூபாய் என்றும் தொகை மாறுகின்றது. உயர் துவக்கப் பள்ளிகளுக்கு ஏற்கனவே 8 ஆயிரம் ரூபாய் கேட்ட இடத்தில் 7 ஆயிரம் ரூபாய் ஏற்கனவே கொடுக்கப்பட்டு விட்டது. இப்போது 13 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படுகிறது. கிட்டத்தட்ட 18 ஆயிரம் ரூபாய், 19 ஆயிரம் ரூபாய் ஆகும். மீதி வேண்டிய தொகையை உள்ளூர் மக்களும், ஊராட்சி மன்றமும், ஒன்றியமும் கொடுத்து நிறைவேற்ற வேண்டும். ஊராட்சி அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டுவதற்கு ஊராட்சி ஒன்றியம்தான் அதன் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறது.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இதுபோன்ற கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய பஞ்சாயத்துப் பள்ளிகளில் இது நீண்ட பிரச்சினையாக இருந்துகொண்டிருக்கிறது. பஞ்சாயத்துத் தலைவர்கள் இது குறித்துத் தீர்மானங்களை அரசுக்கு அனுப்பினார்கள். அது குறித்து அரசு என்ன முடிவு எடுத்திருக்கிறது ? மேலும் இதற்காக அதிகமான நிதி ஒதுக்கீடு வேண்டுமென்று கோரியதற்கு அரசு என்ன பரிந்துரையை வழங்குகிறது என்று அறிய விரும்புகிறேன். மேலும் பரிசுச் சீட்டுத் திட்டத்தின் மூலம் வரும் பணங்கள் நல்ல முறையில் செலவு செய்யப்படவில்லை என்று ஏதாவது அரசுக்குத் தகவல் வந்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தற்போது 8,489 பள்ளிகளுக்குக் கட்டிடம் கட்டிக் கொடுக்க வேண்டும். ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பள்ளிகளுக்கான கட்டடங்கள் கட்டும் பணி தற்போது கிராமப்பணித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மேலும் பள்ளிகளுக்கான கட்டடங்கள் கட்டும் பணிக்கு தமிழ் நாடு அரசுப் பரிசுச் சீட்டு விற்பனையிலிருந்து வரும் தொகையிலிருந்து தொகை ஒதுக்கப்படுகிறது. இதற்காக இந்திய ஆயுள் ஈட்டு உறுதிக் கழகத்தோடு விரிவான பேச்சு வார்த்தை நடத்தி இந்திய ஆயுள் ஈட்டுக் காப்பு நிதியிலிருந்து தரப்படலாம் என்று பேசிவைக்கப்பட்டது. ஏற்கெனவே இருந்த தலைவர் இதற்குள்ளாக மாற்றலாகி விட்டார். மறுபடியும் பேச்சு வார்த்தை நடந்துகொண்டிருக்கிறது.

ஊராட்சி மன்றங்களுக்கு தனித் தனியாகத் தருகிறோம் என்று சொல்லுகிறார்கள். அரசாங்கத்திற்கு நேரடியாகத் தர மறுக்கிறார்கள். ஒவ்வொரு ஊராட்சி மன்றமும் தனித் தனியாகக் கேட்டுப் பெறுவது கடினம் என்று சொல்லி, அதற்காக ஊராட்சி ஒன்றியம், கார்ப்போரேஷன், ஏற்படுத்தி அதற்கு டி.ஆர்.டி. அவர்களே பொறுப்பாளராக இருந்து எல்லாப் பள்ளிகளுக்கும் சேர்த்தே, அவர் மூலமாக, அந்த வாரியத்தின் மூலமாக, திருப்பிக் கொடுப்பதை ஏற்றுக் கொள்ளுகின்ற அளவுக்குப் பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. ஏற்கெனவே இருந்தவர் ஒத்துக்கொண்டார். இப்போது இருப்பவரும் ஒத்துக்கொள்வார்கள் என்று நம்பப்படுகிறது. அந்தத் திட்டம் வருமானால் கடன் வசதி பெறலாம் என்று அவர்கள் சொன்னார்கள். அந்தக் கடன் வசதியைப் பெற்று எல்லா ஊராட்சி மன்றங்களும் ஒன்றியங்களும் உடனடியாகப் பள்ளிக்கூடக் கட்டிடங்களைக் கட்டும்படி செய்யலாம். இந்தப் பரிசுச் சீட்டுத் தொகையைப் பொறுத்தவரையில், எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும் சம அளவிலேதான் பார்த்துத் தரப்படுகின்றது. ஆகவே இதற்கு நேரடியாக எவ்வளவு தொகை என்று ஒதுக்கப்பட்டு, அந்தந்தத் தொகை ஆங்காங்கு பிரித்துத் தரப்படுகின்றது. இந்த மாதிரி ஒரு பள்ளியோ அல்லது இரண்டு பள்ளிகளோ இருக்கலாம். அந்தத் தொகை அங்கே போகிறதா என்பதை ஊராட்சி ஒன்றியங்கள் அளவிலே வைத்துக் கணக்கிட வேண்டும். இது எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் சுமுகமாக நடந்துகொண்டிருக்கிறது.

திரு. அய்யணன் அம்பலம்: தலைவரவர்களே, கிராமத்திலே தனியார் பள்ளிகள் கட்டட வசதி இல்லாமல் இருக்கின்றன. அதற்கு அரசாங்கம் நிதியுதவி ஏதாவது செய்யுமா? அல்லது கட்டடம் கட்ட வேண்டுமென்று அரசாங்கம் ஆணையிடுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அரசாங்கத்திலிருந்து தனியார் பள்ளிகளுக்கு பராமரிப்புச் செலவுக்கும் வேறு பல வகைகளிலும் தொகைகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

Pilot Intensive Rural Employment Project.

* 2 Q.—THIRU V. ISVARMURTI (on behalf of Thiru S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the details of the Centrally Sponsored Pilot Intensive Rural Employment Project in this State?

மும்முர கிராம வேலை வாய்ப்பு முன்னோடித் திட்டம்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இம்மாநிலத்தில் மத்திய அரசால் நடத்தப்படும் மும்முர கிராம வேலை வாய்ப்பு முன்னோடித் திட்டத்தின் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: முன்னோடி மும்முர கிராம வேலைவாய்ப்புத்திட்டம் பற்றிய குறிப்பு@ ஒன்று மேலவை முன் வைக்கப்படுகிறது.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: இந்தக் குறிப்பில் மங்களூர் என்ற வட்டாரத்தில் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்காக இந்த ஆண்டு ரூ. 10 லட்சம் ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஒரு வட்டாரத்தில் மட்டும் இந்த 10 லட்சம் ரூபாய் செலவு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இது முழுமையாக மத்திய அரசாங்கத்தின் திட்டம். ஆகவே ஒரே ஒரு ஊரைத்தான் தேர்ந்தெடுத்தோம். மாநில முழுவதற்கும் எடுத்துக்காட்டாக விளங்குவதற்கும் இலக்கணமாகவும், பின் தங்கிய மாவட்டத்தைச் சேர்ந்ததாகவும் இருக்க வேண்டுமென்ற காரணங்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே கடைசியிலே இந்தப் பகுதி திட்டப்பகுதி என்று தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு ரூபாய் 10 லட்சம், 1973-74-ல் ரூ. 15.79 லட்சம், 1974-75-ல் ரூ. 20.57 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதாக இருக்கிறது. இந்தத் திட்டத்தினை இந்திய அரசு ஏற்றுக் கொள்ளுகிறது. அதையே மாடலாக வைத்துக்கொண்டு மற்ற ஒன்றியங்களெல்லாம் பணியாற்ற வேண்டுமென்பது தான் குறிக்கோள். அந்த அளவில் தான் பல திட்டங்களை எங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். பல்வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளை உள்ளடக்கிய, மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைமையாகக்கொண்ட, ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே 2,800 பேருக்கு வேலைவாய்ப்பு கொடுக்கிற அளவுக்கு பல்வேறு திட்டங்கள் எல்லாம் வகுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஊராட்சி ஒன்றியத்தை மாதிரியாக, முன்னோடியாகக் கொண்டு மற்ற ஒன்றியங்கள் மாற வேண்டுமென்பதுதான் இந்திய அரசின் நோக்கம். இதற்காகத்தான் இந்த ஒன்றியம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

@ 91-94 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இது போன்ற திட்டத்தினால் கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பு ஏற்படும் என்ற நம்பிக்கையின் காரணமாக ஏற்படும் தவறுகளைக் கண்காணிக்க அரசு என்ன அதிகாரம் வழங்கியிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன். இந்தத் திட்டத்தினால் பணம் வீணடிக்கப்படுவதை நிரந்தரமாகக் கண்காணிக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்தத் திட்டம் 2,800 பேருக்கு வேலைவாய்ப்பளிக்கும். முதல் ஆண்டு 1,000 பேருக்கும், இரண்டாவது ஆண்டு 1,900 பேருக்கும், மூன்றாவது ஆண்டு 2,800 பேருக்கும் என்று வருகிறது. மாவட்ட அளவில் ஒருங்கிணைப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டு, அக்குழுவின் தலைவராக மாவட்ட ஆட்சித் தலைவர் இருப்பார். இதில் மாவட்ட ஆட்சித் தலைவரின்கீழ் (தொடர்புடைய) வருவாய்க் கோட்ட அதிகாரி, கோட்டப்பொறியாளர், (நெடுஞ்சாலை-கிராமப்பணிகள்), மாவட்ட வேளாண்மை அதிகாரி, மாவட்ட வேலை வாய்ப்பு அதிகாரி, மீனளத் துறை உதவி இயக்குநர், மாவட்ட நல அதிகாரி, தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழு, மங்களூர், அப்பகுதியைச் சேர்ந்த சட்ட மன்றப் பேரவை உறுப்பினர், கூற்ற (வட்டாரம்) தலைவர் சிரணி, வனத்துறை கோட்ட அதிகாரி, திட்ட அதிகாரி ஆகியவர்கள் எல்லாம் இருப்பார்கள். ஆகவே கொடுக்கப்படுகிற பணம் முறையாகச் செலவழிக்கப்படும் என்பதற்கு, ஒருவரை ஒருவர் தான் மேற்பார்வையிட்டுக் கொள்ளவேண்டியவர்களாக இருக்கிறோம் ஜனநாயக அமைப்பில். இவைகள் காரணமாகத்தான் இது கலெக்டர் தலைமையில் இருக்கிறது. நமது அரசும் மத்திய அரசுக்கு அவர்கள் கொடுத்த பணத்திற்குச் செலவுக் கணக்கு காண்பிக்க வேண்டிய பொறுப்புடையவர்களாக இருக்கிறது. இதிலே ஆடிட்டர்கள் மத்திய அரசாங்கத்தின் சார்பாகவும் பார்க்க வேண்டிய அவசியம் இருக்கின்றது. இந்தக் காரணங்களினால் திட்டத்தினுடைய கணக்கு முறைப்படி வைக்கப்படும் என்று நம்பலாம்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : இந்தத் திட்டத்தைப் பார்க்கும்போது 10 லட்சம் ரூபாய் செலவு செய்துவிடுகிறோம். அதுவரையில் அவர்களுக்கு அங்கே அவசியம் இருக்கும். இந்தப் பணம் செலவானவுடனே அந்த 2,800 பேரும் என்ன செய்வார்கள் என்று எந்தவிதமான தெளிவான குறிப்பும் இல்லை. இப்படி அல்லாமல், ஏதாவது தொழில் தொடங்குவது என்று வைத்தால் அது நிரந்தரமான ஏற்பாடாக இருக்கும். அதுபற்றி ஒரு குறிப்பும் இல்லாததினால், இந்தத் திட்டத்தைக் கவனமாக மீண்டும் அரசாங்கம்

பரிசீலனை செய்து மாண்புமிகு அங்கத்தினர் திரு. பலராமன் சொன்னது போல, தவறுகள் ஏதும் நடந்துவிடாமல் அவர்கள் பயனடைவதற்கேற்ப திட்டம் வகுக்க அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் சொன்னது போல, தொழில் வளர்ச்சிக்காக நிரந்தரமான முறையில் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டுமென்ற அளவுக்குத்தான் திட்டங்கள் வகுக்கப்பட்டு பின் பரிட்சார்த்தமாக மேற்கொள்ளப்படுகிறது. ஆகவே இந்த ஆண்டு 10 லட்சம் ரூபாய், அடுத்த ஆண்டு 15 லட்சம் ரூபாய், அதற்கு அடுத்த ஆண்டு 20 லட்சம் ரூபாய், அவற்றோடு நின்றுவிடும். 5 ஆண்டுத் திட்டத்திற்காக தொடர்ந்து மாநில அரசு பொறுப்பு ஏற்றுக் கொள்ளும். அந்த அடிப்படையில் தான் ஆரம்பச் செலவுகளுக்குப் பொறுப்பு வருகிறது. நடைமுறைச் செலவு எவ்வளவு ஆகும் என்பதைக் கணக்கிட்டு, அந்தப் பொறுப்புக்களை ஊராட்சி மன்றங்கள் ஏற்றுக்கொள்ளும். இதற்காக வேண்டியவற்றை ஆய்வு செய்து குழுவினர் ஆலோசனை கூற வேண்டும்.

Burma Repatriates.

*7 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state :

(*a*) whether a large number of repatriates are expected in this State from Burma during 1971–72 ; and

(*b*) the steps taken to rehabilitate them?

பர்மா அகதிகள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971-72 இல் இம்மாநிலத்திற்குப் பர்மா அகதிகள் பலர் வருவரென்று எதிர்பார்க்கப்படுகின்றதா ?

(இ) அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) 1971-72-ல் பர்மாவிலிருந்து 5,490 அகதிகள் வந்துள்ளனர்.

(இ) அகதிகள் வாணிகம் தொடங்குவதற்கும் வேளாண்மை நிலக்குடியேற்றத் திட்டங்களின் கீழ்க் குடியமர்வதற்கும், வீடுகட்டிக் கொள்வதற்கும் கடன் வழங்குதல், அவர்களுக்குத் தொழிற்சாலைகளில் பயிற்சியும் வேலை

வாய்ப்பும் அளித்தல், சொந்தத் தொழில் நடத்த ஏற்பாடு செய்தல் முதலியவற்றிற்கான திட்டங்கள் ஏற்கெனவே வகுக்கப்பட்டு இந்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, இந்த பர்மா அகதிகளுடைய நிலைமை, வந்தவர்களுடைய நிலைமை இப்போது எப்படியிருக்கிறது என்பதைப் பற்றி அமைச்சரவர்கள் ஏதாவது குறிப்பு சொல்ல முடியுமாவென்று அறிய விரும்புகிறேன். ஏனென்றால் அவர்கள் வந்தபோதே அரசாங்கத்திலிருந்து உதவிகளெல்லாம் கொடுக்கப்பட்டன. அதிலே பல பேர் அந்தப் பணத்தையெல்லாம் இழந்து விட்டு துர்பாக்கியமான நிலைமையில் இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அதைப்பற்றி சர்வே மாதிரி ஏதாவது எடுத்து அரசுக்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா, அரசுக்கு அவர்கள் நிலைமை இப்போது எப்படியிருக்கிறதென்று தெரியுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, இதற்கென தனியான சர்வே எடுக்கவில்லை. ஆனாலும் பொதுவாக என்னைப் பொறுத்த வரையில், சிலர் இந்தக் கடன்களைப் பெற்று, கடன் எந்த உதவிக்காக அளிக்கப்படுகிறதோ அதற்குப் பயன்படுத்திக்கொண்டு வாழ்வில் முன்னேறியிருக்கிறார்கள். பெரும்பாலோர் அந்தப் பணத்தை வாங்கி உடனே சொந்தச் செலவிற்குச் செலவழித்து விட்டு, பிறகு தொல்லைக்கு ஆளாகியிருக்கிறார்கள். மத்திய அரசாங்கம் எந்தெந்தக் கடன்களுக்கு என்னென்ன தொகை எவ்வாறு கொடுக்க வேண்டுமென்று முறை வகுத்துக் கொடுக்கிறதோ அந்த முறையில் மாநில அரசு கொடுக்கிறது.

Tamil Nadu Prevention of Begging Act, 1945.

*8 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state:

(*a*) whether there are proposals under the consideration of the Government to enforce strictly the Tamil Nadu Prevention of Begging Act, 1945 in this State; and

(*b*) if so, the details thereof?

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் தமிழ் நாடு 1945 ஆம் ஆண்டு பிச்சை எடுப்பதைத் தடுக்கும் சட்டத்தைக் கண்டிப்பாகச் செயல்படுத்துவதற்கான செயற் குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளனவா?

(இ) ஆமெனில், அவற்றின் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு 1945 ஆம் ஆண்டு பிச்சை எடுத்தல் தடுப்புச் சட்டத்தின் 3-வது பிரிவின் கீழ் வகை செய்யப்பட்டுள்ளதாவது.—பிச்சை எடுப்பதாகக் காணப்படுபவர்கள் அவர்கள் முதன்முறையாகக் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்கப்படும்போது ரூ. 50 அபராதத் தண்டனை அல்லது ஒரு மாதச் சிறைத் தண்டனை அவர்களுக்கு விதிக்கப்படலாம். இரண்டாவது முறையாக அல்லது அதற்குப் பின்னர் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டால், 6 மாத கால சிறைத்தண்டனை விதிக்கப்படலாம். உடல் வலுவுள்ள பிச்சைகாரர்களுக்காக காப்பு முகாம் அல்லது பணி இல்லம் அல்லது பிச்சைக்காரர் இல்லம் என அழைக்கப்படும் பிச்சைக்காரர் இல்லம் இருப்பின் ஓர் ஆண்டுக்குக்குறையாத, ஆனால் மூன்றாண்டுக்கு மேற்படாத கால அளவுக்கு காவலில் வைத்து வரப்படுவதற்காகப் பிச்சைக்காரர்கள் அங்கு அனுப்பப்படலாம். பிச்சைக்காரர் இல்லத்தில் ஒரு முறை காவலில் வைக்கப்படும் பிச்சைக்காரர் ஒருவர் மீண்டும் பிச்சை எடுப்பதாகக் காணப்பட்டால் அவர் மூன்றாண்டுக்கு குறையாத ஆனால் ஏழாண்டுக்கு மேற்படாத கால அளவுக்கு வைத்து வரப்படுவதற்காகப் பிச்சைக்காரர் இல்லம் ஒன்றுக்கு அனுப்பப்படலாம்.

தமிழ்நாடு 1945 ஆம் ஆண்டு பிச்சை எடுத்தல் தடுப்புச் சட்டம் மாநிலம் முழுவதிலும் செயலில் உள்ளது. இச்சட்டம் செயலில் உள்ள இடங்களைக் குறிப்பிடும் விபர அறிக்கை@ ஒன்று மேலவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

இச்சட்டத்தினை மாநிலம் எங்கனும் உள்ள நகரங்கள், வழிபாட்டு இடங்கள் அனைத்திலும் செயல்படுத்துவது குறித்து தமிழக அரசு சென்னையிலுள்ள காவல்துறை இன்ஸ்பெக்டர்-ஜெனராலுடன் கலந்து ஆலோசித்து வருகிறது.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: தலைவர் அவர்களே, பிச்சை எடுப்பவர்கள் யார் என்று கண்காணிப்பதற்கோ அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கோ செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் என்ன, அது யாருடைய பொறுப்பில் விடப்பட்டிருக்கிறதென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, எந்த இடத்தில் பிச்சை எடுக்கிறார்கள் என்று பார்த்து, நான் குறிப்பிட்ட சட்டத்தின்படி போலீஸ் மூலமாகத் தான் அவர்கள் கைது செய்யப்பட்டு முறைப்படி வழக்கு மன்றத்தில் நிரூபிக்கப்பட்டு, குற்றவாளிகளாக ஆக்கப்பட்டு, அதற்குப் பிறகு ஒவ்வொரு இல்லத்திற்கும் அனுப்பி வைக்கப்படுகிறார்கள்.

@ 123-126 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : தலைவரவர்களே, குற்றவாளிகளைப் பிடித்து, கோர்ட்டில் கொண்டுபோய் நிறுத்தி தண்டனை கொடுப்பதெல்லாம் சிரமமான காரியம். இப்போது அரசாங்கம் மேற்கொண்டுள்ள பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் இந்தச் சட்டத்தைச் சரியாக மாற்றியமைத்து, பிச்சைக்காரர்கள் இருந்தால் கொண்டுபோய், அந்த இல்லத்தில் அமர்த்தக்கூடிய பொறுப்பை காவலாளர்களுக்குக் கொடுப்பது எஃபெக்டிவ்வாக இருக்கும். இதை அரசு செய்ய முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, தமிழகத்தில் இன்றைக்கு ஆயிரக்கணக்கான பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள். அத்தனை பேரையும் கட்டாயமாகக் கொண்டுபோய் வைக்கக்கூடிய அளவிற்கு இல்லங்கள் இல்லை. தொழு நோய்ப் பிச்சைக்காரர்களுக்காக இல்லங்கள் கட்டிக்கொண்டிருக்கிறோம். அவர்களிலே கூட விரும்பி தாமாக வருகிற தொழு நோய்ப் பிச்சைக்காரர்களுக்குப் புகலிடம் தருகிறோம். சட்டப்படி போலீஸ் மூலமாகக் கைது செய்து கோர்ட்டில் குற்றவாளியாக நிரூபித்து அதன் பிறகு இல்லங்களிலே கொண்டு வைக்க வேண்டுமானால், ஊரிலுள்ள அத்தனை பிச்சைக்காரர்களையும் கொண்டுவைக்க நேரிடும். அந்த அளவிற்கு இல்லங்கள் தயாராக இல்லாத காரணத்தினால் கட்டாயமாக அவர்களைப் பிடித்து அவர்கள் மீது சட்டப்படி வழக்குத் தொடர்ந்து அவர்களைக் கொண்டு வைக்க முடியாத நிலைமை இருக்கிறது.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, இது காக்னிசபல் அஃபென்ஸா, நான்-காக்னிசபல் அஃபென்ஸா, போலீஸ்காரர்கள் தாங்களே இதைக் குற்றமாக எடுத்துக்கொள்ள முடியுமா அல்லது அவர்களிடம் புகார் மனு கொடுத்ததன் பேரில்தான் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, போலீஸ்காரர்கள்தான் அவர்கள் மீது வழக்குத் தொடருகிறார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, சென்னை நகரத்திலுடைய பல வீதிகளில் பல சந்தர்ப்பங்களில் இந்தப் பிச்சைக்காரர்களில் மிகுந்த நோயுற்றவர்களாக இருப்பவர்கள் நோயுடன் கூடவே இரண்டு மூன்று நாட்கள் அவஸ்தைப்படுத்த காட்சியைப் பார்க்க நேரிடுகிறது. அது மாதிரி நகரங்களில் சில சமயங்களில் 40, 50 பேர் கூட பல இடங்களில் இருக்கக்கூடும். அது மாதிரி நோயுற்று நகர முடியாமல் இருக்கிற பிச்சைக்காரர்கள் தென்பட்டால், உடனடியாக அவர்களுக்கு உதவும் வகையில் நோய்க்கு மருந்து கொடுக்கவோ, அவர்களை விடுதிகளுக்கு அழைத்துச் செல்லவோ ஏற்பாடு செய்யப்படுமா? மனிதாபிமான அடிப்படையில் அரசு உதவுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் முதல் கட்டமாக தொழு நோய்ப் பிச்சைக்காரர்களுக்கான இல்லங்கள் அமைக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அடுத்த மாதத்தோடு இந்த இல்லங்களின் எண்ணிக்கை 6 ஆக ஆகிறது. மீதமுள்ள 4 இடங்களிலும் இன்னும் இரண்டொரு மாதங்களிலே இந்த இல்லங்கள் கட்டி முடிக்கப்பட்டு விடும். முதலில் 5 ஆயிரம் தொழு நோய்ப் பிச்சைக்காரர்கள் தமிழ் நாட்டில் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கின்றது. இந்த 10 இல்லங்களும் கட்டி முடிக்கப்பட்டு விட்ட பிறகு, இந்த 5 ஆயிரம் தொழு நோய்ப் பிச்சைக்காரர்களை இந்த 10 இல்லங்களில் குடியமர்த்தி அவர்களுக்கு மறு வாழ்வளிப்பதென்று அரசு முடிவு செய்திருக்கிறது. அவர்களாக வந்து இந்த இல்லங்களிலே அவர்கள் தங்களுடைய மறு வாழ்வை உண்டாக்கிக்கொள்வதற்கு முன் வந்தால் சரி அல்லது இந்த 10 இல்லங்களும் கட்டி முடிக்கப்பட்டு விட்ட பிறகு அவர்களை சட்டப்படி இங்கே அழைத்து வந்து இங்கே அவர்களுக்கு மறு வாழ்வு அளிப்பதென்று அரசு உத்தேசித்திருக்கிறது. அந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனைகளெல்லாம் கவனிக்கப்பட ஏதுவாக இருக்கும்.

House-sites to the Harijans

* 9 Q.—THIRU S. C. SENGOTTUVELAPPA GOUNDER : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether any application has been received requesting the Government to acquire lands for the allotment of house-sites to the Harijans living in Kanchi Kovil, Kolathamvalasu, Chinnaiampalayam villages in Erode taluk; and

(b) if so, the details of the action taken thereon?

அரிசன மக்களுக்குக் குடியிருப்பு மனைகள்

திரு. எஸ். சி. செங்கோட்டுவேலப்ப கவுண்டர் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஈரோடு தாலுகா காஞ்சிக்கோவில் கிராமம், கொளத்தாம்வலசு, சின்னயம்பாளையம் ஆகிய பகுதிகளில் வாழும் அரிசன மக்களுக்குக் குடியிருப்பு மனைகள் ஆர்ஜிதம் செய்யக் கோரி மனு வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விபரம் என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஈரோடு தாலுகா காஞ்சிக் கோவில் கிராமம் கொளத்தான்வலசு பகுதியைப் பொறுத்தமட்டில் பிரிவு 4(1) முன்மொழிவும் பிரிவு 6 விளம்பலும் ஏற்கப்பட்டு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளன. முதல்நிலை மதிப்பீட்டைப் பெற்றவுடன் அவார்டு செய்து, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அரிசனங்களுக்குப் பட்டா வழங்குவார்.

(இ) ஈரோடு தாலுகா காஞ்சிக்கோவில் கிராமம் சின்னயம்பாளையம் பகுதியைப் பொறுத்தமட்டில் பிரிவு 4 (1) முன்மொழிவும் பிரிவு 6 விளம்பலும் வருவாய்த்துறையினரால் ஏற்கப்படடு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டன. முதல்நிலை மதிப்பீடு, அவார்டு, பட்டா வழங்கல் எனபன கோவை மாவட்ட ஆட்சியரால் கவனிக்கப்படும்.

Construction of Houses for the Harijans.

*10 Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state whether there is any proposal with the Government to construct houses for the Harijans living in Tirupangur, Thanjavur district where Nandanar was born ?

அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தல்

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தஞ்சை மாவட்டம், நந்தனார் பிறந்த திருப்பன்கூரில் வாழும் அரிசனங்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க அரசு திட்டமிட்டிருக்கிறதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: ஆம். நடப்பு ஆண்டில் இவ்வூரில் அரிசனங்களுக்காக 20 வீடுகள் கட்டித்தர உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

Employment Exchanges.

*11 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether efforts are being taken by the Employment Exchanges to find appointment at Star Hotels for candidates coming out of the Catering Institute; and

(b) if so, the steps taken during 1971-72?

வேலை வாய்ப்பு அலுவலகங்கள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உணவு விடுதி—சமையற்கலைப் பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெற்றுத் தேறிய மாணவர்களுக்கு வேலை தேடித் தர வேலை வாய்ப்பு அலுவலகங்களால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவா?

(இ) ஆமெனில், 1971-72-ல் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) 1971-72ல் காலியிடங்கள் எவையும் அறிவிக்கப்படாததனால், வேலை வாய்ப்பகங்கள் மூலமாக எவருக்கும் வேலைவாய்ப்பு அளிக்கப்படவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, எத்தனை மாணவர்கள் படித்துவிட்டு வேலை வாய்ப்பு இல்லாமலிருக்கிறார்கள் என்ற விவரத்தை அரசு கொடுக்க முன் வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, எம்பிளாய்மெண்டு எக்ஸ்சேஞ்சில் பதிந்துள்ளவர்கள் மிகக் குறைவாக இருக்கிறார்கள். 1970-72-ல் 1, 1971-72-ல் 2, அதற்குப் பின்னாலே 5, இப்படித் தான் இருக்கிறது. இதிலிருந்து எல்லோருக்கும் வேலை கிடைத்து விட்டதாக நான் யூகிக்கிறேன். எம்பிளாய்மெண்டு எக்ஸ்சேஞ்சைப் பொறுத்த அளவிற்கு வேறு தகவல் இல்லை.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: தலைவரவர்களே, இந்தப் பயிற்சி தரும் ஸ்தாபனங்கள் எங்கெங்கே அமைக்கப்பட்டிருக்கின்றன என அறிய விரும்புகிறேன். இந்த சமையற்கலை கற்றுத் தரக் கூடிய அமைப்புகள் எங்கே இருக்கின்றனவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, கேடரிங் இன்ஸ்டிடியூட் அடையாறிலே நடத்தப்படுகிறது.

*12 Q.—THIRU G. SWAMINATHAN (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Industries be pleased to state the number of Law Graduates and the jobs for which they have registered their names in the Employment Exchanges in our State up to 1st April 1972?

[1973 பிப்ரவரி 5

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

நமது மாநிலத்தில் 1—4—1972 முடிய வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்து கொண்டிருக்கும் சட்டக் கல்விப் பட்டதாரிகள் எத்தனை பேர்? அவர்கள் எந்தெந்தப் பணிகளுக்காகப் பதிவு செய்துகொண்டுள்ளனர்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நமது மாநிலத்தில் உள்ள வேலைவாய்ப்பகங்களில் 1—4—1972 வரையில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ள சட்டம் பயின்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை 101 ஆகும். அவர்கள் பதிவு செய்துகொண்டுள்ள வேலைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

1. பொது (பட்டதாரிகள்—கலை)—77
2. பொது (பட்டதாரிகள்—அறிவியல்)—8
3. பொது (பட்டதாரிகள்—வணிகவியல்)—4
4. சட்ட உதவியாளர்கள்—9
5. தொழிலாளர் நல அதிகாரி—3.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, இந்தச் சட்டக் கல்வி பட்டதாரிகள் பதிவு செய்து கொண்டவர்கள் 1970, 1971, 1972 ஆகிய ஆண்டுகளில் கூடுதலாகியிருக்கிறார்களா, குறைவாக ஆகியிருக்கிறார்களாவென்று அறிய விரும்புகிறேன். வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்து கொண்டு வந்தவர்கள் எண்ணிக்கை அதிகப்பட்டு வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துக்கொண்டு தான் இருக்கிறது. சட்டக் கல்லூரியிலும் அதிகமான மாணவர்கள் பயிற்சி பெறுவதற்கு முன்வருகிறார்கள். இங்கே நம் எம்பிளாய்மெண்டு எக்ஸ்சேஞ்சிலே பதிவு செய்கிறவர்களைப் பொறுத்த அளவிற்கு, 1969-70-ல் 73-ம், 1971-72-ல் 99-ம் என்று இருக்கிறது. இந்தத் துறையில் அதிகப்பட்டிருக்கிற நிலைதான் இருக்கிறது.

Indo-Italian Foot-wear Company.

* 13 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Indo-Italian Foot-wear Company in the State is to be wound up;

(*b*) if so, the reasons therefor;

(*c*) whether any financial assistance has been given to the above Company by the State-owned financial bodies; and

(*d*) if so, the details thereof ?

இந்திய-இத்தாலிய மிதியடி தயாரிப்பு நிறுவனம்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநிலத்தில் உள்ள இந்திய-இத்தாலிய மிதியடி தயாரிப்பு நிறுவனம் மூடப்படவிருக்கிறதா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

(உ) மேற்சொன்ன நிறுவனத்திற்கு மாநில நிதி வழங்கு அமைப்புகள் நிதி உதவி அளித்துள்ளனவா ?

(எ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை. அந்தக் கம்பெனி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

(இ) வினாவுக்கு இடமில்லை.
(உ) இல்லை.
(எ) வினாவுக்கு இடமில்லை.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: தலைவரவர்களே, மீண்டும் இந்த நிறுவனம் திறக்கப்படுமா. எப்போது திறக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தமிழகத்தில் இருந்த இந்தத் தொழிற்சாலை பல இடையூறுகளாலும், விலையை நிர்ணயிப்பதிலும், 'கொலாபரேஷன்' பெறுவதிலும் சில கஷ்டங்கள் ஏற்பட்டதாலும், மூடப்பட்டதாகத் தகவல் வந்திருக்கிறது.

Court-fee Stamps

* 14 *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the public are unable to get from the Stamp Vendors, Court-fee Stamps of the denomination they require ;

(*b*) if so, the reason for such scarcity ; and

(*c*) the action proposed to be taken by the Government in the matter ?

நீதிமன்றக் கட்டண முத்திரைகள்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) முத்திரைத்தாள் விற்பனையாளர்களிடமிருந்து பொதுமக்கள் தங்களுக்கு வேண்டியுள்ள தொகைக்கான நீதிமன்றக் கட்டண முத்திரை வில்லைகளைப் பெற முடிவதில்லை என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், முத்திரைத் தாள் பற்றாக்குறைக்கான காரணம் என்ன ?

(உ) இதுகுறித்து அரசு எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

(உ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலும், கோவை போன்ற சில மாவட்டங்களிலும் இந்த முத்திரைத்தாள் நாம் கேட்கிற படி கிடைப்பதில்லை. 1½ ரூபாய்க்கு வேண்டும் என்று கேட்டால், 15 பைசா தாளை 10 எடுத்துக்கொண்டு போங்கள் என்று சொல்லும் நிலைமை இருக்கிறது. இந்த மாதிரி நிலைமை 5, 6 மாதங்களுக்கு முன்னால் அதிகமாய் இருந்தது. இப்போது அது கொஞ்சம்தான் குறைந்திருக்கிறது. இதைத் தவிர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கோர்ட் பீஸ் ஸ்டாம்பு கிடைப்பதில் கஷ்டம் இருக்கிறது. ஆனால் இப்போது பத்திரப் பதிவுகள் பண்ணுவதில் முறைப்படி கோர்ட்டே அதை விதிக்கின்ற பொறுப்பை ஏற்கவேண்டும் என்று சொன்னோம். அதற்கு மறுத்துவிட்டார்கள். இது நாசிக்கிலிருந்துதான் வரவேண்டும் என்கிற காரணத்தால், இதிலே ஏறக்குறைய அண்மையில் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. மற்றக் காலங்களில் பற்றாக்குறை வேண்டுமென்றே ஸ்டாம்பு வெண்டர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் ஸ்டாம்பு வெண்டர்களிடம் எல்லா இடங்களிலும் கிட்டத்தட்ட 7 கோடி 90 லட்சம் ரூபாய்க்கு, ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்தக் கோர்ட் பீஸ் ஸ்டாம்புகள் [illegible] இருக்கிறது.

New Palakarai Overbridge

* 15 *Q*.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the estimate for the construction of New Palakarai Overbridge at Tiruchirappalli to be put up this year;

(*b*) the Central assistance given for the scheme;

(*c*) the details of the work done so far; and

(*d*) the part, if any, played by the National Highays in the execution of the scheme ?

புதிய பாலக்கரை மேம்பாலம்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இவ்வாண்டுக்குள் முடிக்கப்படவேண்டிய திருச்சிராப்பள்ளி, புதிய பாலக்கரை மேம்பாலம் கட்டுவதற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

(இ) இத்திட்டத்திற்கு மத்திய அரசு வழங்கியுள்ள உதவித் தொகை எவ்வளவு ?

(உ) இதுவரை நடந்துள்ள பணிகளைக் குறித்த விவரங்கள் யாவை?

(எ) இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் தேசிய நெடுஞ்சாலைத்துறையின் பங்கு யாது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ரூபாய் 50.60 இலட்சம்.

(இ) திருச்சி நகராட்சி எல்லைக்குள் தேசிய நெடுஞ்சாலையில் இந்த லெவல்கிராசிங் அமைந்திருக்கிறது. எனவே, மத்திய அரசின் நிதி உதவி பெற வாய்ப்பில்லை.

(உ) பணிகள் நடைபெற்று வருகின்றன.

(எ) இது மாநிலம் சம்பந்தப்பட்ட வேலை. மாநில அரசு, நகராட்சி, ரெயில்வே இலாக்காவினர் விதாசாரப்படி செலவை ஏற்று நிறைவேற்றிடும் திட்டம். இதில் தேசிய நெடுஞ்சாலை இலாக்காவுக்கு யாதொரு பங்குமில்லை.

Cyclone Warning Equipments

* 16 *Q*.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Public Works be pleased to state :—

(*a*) whether cyclone warning equipments from Japan are to be installed in this State; and

(b) if so, the details therefor ?

புயல் அறிவிப்புச் சாதனங்கள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஜப்பானிலிருந்து வரும் புயல் அறிவிப்புச் சாதனங்கள் இம்மாநிலத்தில் நிறுவப்படவிருக்கின்றனவா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: (a) & (b) Cyclone warning radar high power equipment imported from Japan, capable of detecting cyclone storms passing within 400 Kms. from Madras, has been installed over the Madras Port Trust Building and it is expected to go into operation shortly. The radar is part of the development plan of the India Meteorological Department in forecasting the movement of cyclonic storms and issuing warnings.

THIRU G. SWAMINATHAN: Sir, may I know from the Hon. Minister whether such a cyclone warning radar high power equipment is going to be installed at Nagapattinam also and whether there is any such proposal?

The Hon. THIRU S. J. SADIQ PASHA: Sir, there is no proposal to set up any more such equipments in Tamil Nadu. However, it appears that there is a proposal to set up such an equipment at Karaikal in the Union Territory of Pondicherry.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: தலைவர் அவர்களே, இந்தப் புயல் அறிவிப்புச் சாதனம் அமைப்பதில் ஏற்படும் செலவின் மதிப்பீடு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இப்போது நான் படித்த ராடாரின் மதிப்பீடு 30 லட்சம் ரூபாய். இண்டியன் மெடலர்ஜிகல் டிபார்ட்மெண்டால் வேலை நடைபெறுகிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: சென்னையில் ஒரே இடத்தில் மட்டும்தான் இந்தச் சாதனம் வைக்கப்படுகிறதா, வேறு எங்காவது உண்டா? இன்னும் இந்திய தேசத்தில் இது போன்ற ராடார்கள் எங்கே இருக்கின்றன என்று தெரிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்தியா தேசத்தைப் பற்றி எனக்குத் தெரியாது. தமிழ் நாட்டைப்பற்றித்தான் தெரியும். தமிழ் நாட்டில், சென்னை போர்ட் டிரஸ்டில் அமைக்கப்படும் இந்தச் சாதனம், 400 கிலோ மீட்டருக்குள் உள்ள புயல் நிலைமையையெல்லாம் அறிந்து தெரிவிக்கும் என்று தெரிவித்திருக்கிறார்கள். தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், ஒரே ஒரு இடத்தில்தான் இது அமைக்கப்படுகிறது. காரைக்காலில் இன்னொன்று வைப்பதாக எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

THIRU G. SWAMINATHAN: May I know whether it is a fact that the Central Government were prepared to have it at Nagapattinam and whether if we had properly negotiated, we would have got it? Now that one is going to installed at Karaikal, is there any necessity to have it at Madras?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: Sir, I am not awar of the Central Government's proposals. If the Central Government are willing to have another radar at Nagapattinam, we will welcome it.

THIRU A. R. DAMODARAN: Sir, considering the fact that Karaikal is only 220 miles along the coast-line from Madras, may I know the purpose of installing another equipment when the range of the Madras equipment is 400 Km.?

THE HON. S. J. SADIQ PASHA: Sir, I shall convey the representation of the hon. Member to the Government of India.

திரு. எல். பலராமன்: இந்தப் புயல் அறிவிப்புக் கருவிகளை மாநில சர்க்காரே அமைப்பதற்கு ஏதாவது உத்தேசம் உண்டா? இந்த விஷயத்தில் புயல் அபாயம்பற்றி விவசாயிகளுக்குக் கிராமங்களில் அறிவிப்பதற்கு மாநில அரசு எப்படித் தொடர்பு கொள்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன். மேலும், மாநில சர்க்கார் இது குறித்து என்ன நடவடிக்கை எடுப்பார்கள் என்று அமைச்சர் அவர்கள் கூற முடியுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்த அறிவிப்பெல்லாம் வானொலி மூலமாகத்தான் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களால் கிராம விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகிறது. மற்றும் தந்தி மூலமாகவும் மாவட்ட ஆட்சித் தலைவரால் அறிவிக்கப்பட்டு, கிராமங்களுக்குத் தந்தி மூலமாகவே தெரிவிக்கப்படுகிறது. இப்போது உடனடியாகத் தெரிவிக்கும்

சாதனமாக இருப்பது வானொலிதான். நமது கோவை மாவட்டத்தில் ஏற்பட்ட புயல், வெள்ளக் கொடுமைபற்றி வானொலி மூலமாகச் சொல்லித்தான் பலர் தப்பித்திருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது.

New water sources in North Arcot district

*17 Q.—THIRU L. BALARAMAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether any investigation was carried out in North Arcot district to establish new water sources; and

(b) the number of water sources (net) that had been recommended to the Government for being established?

வட ஆற்காடு மாவட்டத்தில் புதிய நீர் நிலைகள்

திரு. எல். பலராமன்: மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் புதிய நீர் நிலைகள் உண்டாக்க சோதனை செய்யப்பட்டதா?

(இ) சோதனை மூலம் நிகரமாக எத்தனை நீர் நிலையங்கள் உண்டாக்க அரசுக்கு சிபாரிசு செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) வட ஆற்காடு உட்பட தமிழ்நாடு முழுவதும் நிலநீர் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நீர் மட்ட ஏற்ற இறக்கங்கள், மண்ணியல் ஆகியவை குறித்த வரைபடம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. வட ஆற்காடு மாவட்டத்தில் முழு அளவில் ஆய்வு நடத்தி நில நீர் வளம் குறித்து அறிவியல் முறையில் மதிப்பிட மூன்று ஆண்டுகள் பிடிக்கும். இருப்பினும் அனைத்து நாட்டு வளர்ச்சிக் கழகத் திட்டத்தைச் செயல்படுத்த திருவண்ணமலை, செங்கம், குடியாத்தம், திருப்பத்தூர் வட்டங்களில் மின்சார விசையேற்றங்களுடன் கூடிய சுமார் 6,000 புதிய கிணறுகளை வெட்ட நில நீர் இயக்குநர் அலுவலகம் ஏற்கனவே தொழில் நுட்ப ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. எஞ்சியுள்ள வட்டங்களில் நிலநீர் ஆய்வு குறித்த விரிவான அறிவியல் ஆய்வுகள் முடிவுறு நிலையில் உள்ளன. விரைவான நிலநீர் அளவை நடைபெற்றுள்ளது. சுமார் 2,000 புதிய கிணறுகளை வெட்ட ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

THIRU G. VASANTHA PAI: Sir, will the Hon. Minister be pleased to state whether the Government are seeking any assistance or foreign collaboration, as has been done in Rajasthan, to locate ground water resources in this State?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்த நில நீர் ஆய்வுபற்றி ஏற்கெனவே ஐக்கிய நாட்டு உதவியோடுதான் மேற்கொள்ளப்பட்டது. இப்போது தனியாக நாம் ஒரு இயக்குநரை நியமித்து, அவர் மூலமாக தமிழ் நாடு பூராவும் நில நீர் வளம்பற்றி ஆராய்ச்சி செய்து வருகிறோம்.

திரு. எல். பலராமன்: ஏற்கெனவே ஐக்கிய நாட்டு ஒத்தாசையுடன் செய்த ஆராய்ச்சி என்ன ஆயிற்று? அதனால் நம்முடைய தமிழ் நாட்டுக்குப் பொருளாதார வசதி அதிகரித்து உள்ளதா? அது ஏன் துண்டிக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் குழாய்க் கிணறுகளை இன்னும் விரிவாக்கியிருக்கிறோம் என்றெல்லாம் நீங்கள் பிரச்சாரம் செய்கிறீர்களே. அதைப் பற்றி என்ன நடவடிக்கை இந்த அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன். தமிழகத்தில் குழாய்க் கிணறு அமைப்பதற்கு வேண்டிய வசதியில்லாமல் இன்று பல விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள் என்பது இந்த அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அந்தந்த மாவட்டத்தில் ஆய்வு செய்யப்பட்ட அதிகாரபூர்வமான அறிக்கை இன்னும் எனக்குக் கிடைக்காத காரணத்தால், அதைப்பற்றிய விவரத்தை என்னால் சொல்ல முடியாது. இப்போது சொல்லியிருக்கும் இந்தக் குழாய்க் கிணறு போடுவதற்கான விவரம் குறித்து, தனிக் கேள்வி போட்டிருந்தால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதற்குப் பதில் சொல்லியிருப்பார்கள்.

Lorry accidents

*18 Q.—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether there is any proposal with the Government to regulate lorry traffic during nights to avoid increasing accidents; and

(b) if so, the details thereof?

லாரி விபத்துக்கள்

திரு. வே. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) லாரி விபத்துக்கள் அதிகமாவதைத் தடுக்க, இரவு நேரங்களில் லாரி போக்குவரத்தை ஒழுங்குபடுத்த செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) & (இ) விபத்துக்கள் நடை பெறுவதைத் தடுக்கும் வகையில், இரவு நேரங்களில் லாரிப் போக்குவரத்தை முறைப்படுத்தும் கீழ்க்காணும் செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன :—

(1) ஒரு நாள் மாலை 6 மணிக்கும் மறு நாள் காலை 6 மணிக்கும் இடைப் பட்ட நேரத்தில் 200 கிலோமீட்டருக்கு மேல் செல்ல வேண்டியிருப்பின், சரக்கு லாரியில் இரண்டு வலவர்களை நியமிப்பதற்கு வகை செய்து, தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளைத் திருத்துதல்.

(2) சரக்கு லாரிகளுக்கு நெடுஞ்சாலை மஞ்சள் வண்ணம் பூசுவதற்கு வகை செய்து விதிகளைத் திருத்துதல்.

(3) இரவு நேரங்களில் உந்துகளின் போக்குவரத்தைக் கட்டுப்படுத்துதல்.

வண்டிகளின் மிகு வேகத்தைத் தவிர்க்க குற்றவாளிகளின் மீது நடவடிக்கை எடுப்பதன் மூலம் பரிசோதனை செய்யும் அதிகாரிகள் ஆவன செய்து வருகி றார்கள்.

THIRU G. VASANTHA PAI : Sir, is the Hon. Minister aware of the fact that the accidents mostly happen because the lorry-drivers keep to the middle of the road and they do not dim their lights? May I know whether anything could be done to remedy this?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, it is only a question of courtesy on the part of the drivers and the road sense they possess. The Department is taking necessary steps to book the defaulters whenever such defaults come to its notice.

THIRU A. R. DAMODARAN : Sir, the Hon. Minister has mentioned that there was a proposal to amend the Motor Vehicles Act to see that rest houses were built for the drivers on the highways. In view of the difficulties the private lorry operators may have in building such rest houses, may I know whether the Government could construct rest houses, at the rate of one for every 200 K.M. so that they could be taken on rent by the drivers of the lorries concerned?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, in fact, this suggestion has been examined by the Transport Department and this matter was placed before the Transport Authority Committee also. The Department mentioned this proposal of building some rest houses so that the drivers could avail themselves of their rest

time for relaxation and all that. But, unfortunately, there was another point of view mentioned, namely, that, we on the part of the Government might not be in a position to provide the drivers what all they were now getting on the way-side shops. There are also cases where such sheds were constructed but were not occupied by the drivers. So, it is only a question of the tastes of the drivers and we cannot force them to occupy the sheds which we construct. Then, it will be once again a problem facing the Government if the sheds constructed are not occupied?

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, லாரி விபத்தைத் தடுப்ப தற்கும் அவை 60 கிலோ மீட்டருக்கு மேல் போகாமல் தடுப்பதற்கும் ஸ்பீடா மீட்டரிலோ அல்லது ஆக்சிலரேட்டரிலோ தடை பொறுத்துவது சம்பந்தமான ஏற்பாடுகள் செய்வதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஸ்பீடாமீட்டரால் தடுத்து நிறுத்துவது என்பது இயலுகிற காரியம் அல்ல. இருந்தாலும் டேகோகிராப்பு களை அவைகளில் பொறுத்தலாம். ஏனென்றால் வேண்டும் என்கிறபோது அதன் மூலம் எந்த வேகத்தில் அவை வந்திருக்கின்றன என்பதைப் பரிசோதிப் பதற்கு ஏதுவாக இருக்கும். அந்த வகையில் அரசு ஆலோசனையில் அது இருந்து வருகிறது. அதிலும் என்ன கஷ்டம் என்றால், போதிய டேகோ கிராப்புகள் கிடைப்பதில்லை.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, இப்போது ஓடிக்கொண்டிருக்கிற லாரிகளில் எல்லாம் முன் பக்கக் கண்ணாடிகளில் ஏதாவது ஒரு தலைவர் படத்தை ஒட்டுவது என்கிற அளவிற்கு இருப்பதால், ஓட்டுகிற டிரைவருக்கு பாதை தெரியாமல் போகிறது. எனவே லாரிகளில் அம்மாதிரிக் கண்ணாடி களில் எந்தவிதமான படமும் ஒட்டக்கூடாது என்று அரசு உத்தரவு அனுப்பு வதற்குத் தயாராக இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அரசாங்கம் இதுபற்றி ஏற்கனவே நடவடிக்கை எடுத்து வருகிறது.

THIRU A. R. DAMODARAN : Sir, in other countries, no pedestrian or animal is expected to cross the National Highways from either side of those Highways. May I know, Sir, whether any arrangements would be made on our Highways to prevent this, because it is probably the main reason for most of the accidents that take place ?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, in fact, this is also one among the several factors that cause accidents on the National Highways. But, it is once again for the people concerned to take care of their own cattle and other things. I do not think the Government can enforce this measure as a measure of Act or Rule.

THIRU G. SWAMINATHAN : Sir, are the Government aware of the fact that many of the accidents take place because of the drunkenness of the drivers ? May I know whether the Government will take steps to see that the drivers are not drunk while driving the lorries ?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Yes, Sir. Whenever there are cases of drunkenness, that also is taken care of by the Government and wherever such defaulters are found, they are booked. But, here again, it is very difficult to find out the exact drunkenness and the intensity of the drunkenness also.

Lightning Express Buses

* 19 Q.—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether there is any proposal to remodel the seats in the lighthing Express Buses in such a way as to facilitate the passengers to recline in the seats and have relaxation ;

(b) whether any representation has been received from the passengers to fix safety rods on both sides of the seats ; and

(c) if so, the action taken thereon?

மின்னல் வேக விரைவு பேருந்துகள்

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மின்னல் வேக விரைவு போக்குவரவு ஊர்தியில் சாய்ந்து ஓய்வு பெறும் வகையில் இருக்கைகளை திருத்தியமைக்கும் உத்தேசமுண்டா ?

(இ) இருக்கைகளின் இருபுறமும் தடுப்புக் கம்பிகள் வைக்க வேண்டுமென்று பயணிகளிடமிருந்து முறையீடு ஏதேனும் வந்ததா ?

(உ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) வினாவிற்கு இடமில்லை.

திரு. எம். சங்கரலிங்கம் : மின்னல் வேக விரைவு வண்டிகளில் சாய்வு நாற்காலி அமைப்பதுபற்றி அரசு ஆராய்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இருக்கையின் இரு புறமும் கம்பிகள் தடுப்பு இருந்தால்தான், கார் வேகமாகத் திரும்பும்போது விழாமல் இருக்க முடியும். அப்படி இல்லாமலிருந்தால் வயது முதிர்ந்தவர் கீழே விழ ஏதுவாகி விடும். எனவே இதுபற்றி அரசாங்கம் கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இருக்கைகளில் கை வைப்பதற்கான அந்தக் கம்பிகள் இப்போது பொருத்தப்பட்டு வருகின்றன.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, மின்னல் வேக வண்டிகள் ஓட்டுகிற வேகம் என்ன, 60 கிலோ மீட்டரா, இல்லை அதற்குக் குறைவா, எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச் சந்திரன் : மின்னல் வேகம் எவ்வளவோ, அவ்வளவு வேகம்தான்.

Lightning Express Buses

* 20 Q.—THIRU R. SAKTHI MOHAN : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether there is any proposal to provide inclined seats with head-rest in the lightning Express Buses plying from Madras to Madurai and *vice versa;* and

(b) if not, whether any step will be taken in this regard?

மின்னல் வேக விரைவு பேருந்துகள்

திரு. ஆர். சக்தி மோகன் : மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னையிலிருந்து மதுரைக்கும், மதுரையிலிருந்து சென்னைக்கும் போய் வந்துகொண்டிருக்கும் மின்னல் வேகப் பேருந்துகளில் உறங்கும் வசதி

[1973 பிப்ரவரி 5

யுடன் கூடிய சாய்வு இருக்கைகள் அமைப்பதற்கான செயற்குறிப்புகள் ஏதேனும் உண்டா?

(இ) இல்லையெனில், அதுபற்றி நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப் படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) & (இ) சென்னைக்கும் மதுரைக்குமிடையே ஓடும் மின்னல் வேகப் பேருந்துகளில் தற்போதுள்ள இருக்கை அமைப்பு சாய்ந்து கொள்வதற்கும் உறங்குவதற்கும் போதுமான அளவு வசதியுடையதாகவுள்ளது.

THIRU G. VASANTHA PAI: Sir, are there any radar equipment in these lightning buses against lightning?

THE HON. THIRU S. RAMACHANDRAN: Sir, no such danger is envisaged now.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(1) ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கான திருத்தங்கள் குறித்து.

4-40 பி.ப. மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர்: ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கான திருத்தங்கள் பற்றிய அறிவிப்புகள் 6—2—1973 செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு முன்னதாகச் செயலாளரிடம் சேர வேண்டும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

(2) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர்: 1973-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் மூன்றாம் நாள் சனிக்கிழமையன்று மாலை 3-30 மணிக்கு நடைபெற்ற

1973 பிப்ரவரி 5]

அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் பின்வரும் சட்டமன்ற அலுவல்கள் குறித்த நிகழ்ச்சி நிரல் குறித்து முடிவு எடுக்கப்பட்டது:—

5—2—1973 முதல் 9—2—1973 வரை.	ஆளுநர் உரையின்மீது விவாதம்
10—2—1973	ஆளுநர் உரையின் மீதான விவாதத்திற்கு மாண்புமிகு முதலமைச்சரின் பதில்.
11—2—1973	ஞாயிற்றுக்கிழமை-விடுமுறை.
12—2—1973	கூட்டமில்லை.
13—2—1973	அரசினர் சட்ட முன் வடிவுகள்.

சட்ட மன்றக் கூட்டம் தினமும் மாலை 4 மணியிலிருந்து 7 மணி வரை நடைபெறும்.

3. துணைத் தலைவர் குழுப்பட்டியல்.

மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர்: இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் சட்ட மன்ற மேலவையின் 44-வது கூட்டத் தொடருக்கான துணைத்தலைவர் குழுப்பட்டியலில் சட்ட மன்ற மேலவையைச் சேர்ந்த கீழ்க் காணும் உறுப்பினர்களைத் தமிழ் நாடு சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 6-வது விதியின்கீழ் அவைத் தலைவர் அவர்கள் நியமித்துள்ளார்கள் என்று இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

1. திரு. கே. அறிவழகன்.
2. திரு. என். சுந்தரேசத் தேவர்.
3. திரு. அய்யணன் அம்பலம்.
4. திரு. எஸ். நாராயணசாமி.

4. மாண்புமிகு உணவு அமைச்சரது அறிக்கை—உடுக்குறியிட்ட வினா எண் 83-ன் துணை வினாவுக்கான விடைக்குத் திருத்தம்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: 6—12—1972 அன்று திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களின் 1733-ம் எண் (வரிசை எண் 83) நட்சத்திரக் குறியிட்ட வினாவிற்கு விடையளிக்கும்போது திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களும் அவைத் தலைவர் அவர்களும் எழுப்பிய வினாவிற்கு நான்

"தலைவரவர்களே, ஆகையினால் உறுப்பினர் அவர்கள் சொல்லுவது போல ஒரு சிலர் கொடுத்த வழக்குகளில் தீர்ப்பு கோரப்பட்டிருக்கிறது.

இன்னும் ஒரு சில தீர்ப்பு கூருமல் இருக்கிறது" எனக் கூறியதைக் கீழ்க் கண்டவாறு திருத்திக்கொள்ள வேண்டுகிறேன்.

"தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பின் நகல் இன்னும் அரசுக்கு வரவில்லை".

5. மாண்புமிகு அரிசன நல அமைச்சரது அறிக்கை—உடுக்குறியிட்ட வினு 223-ன் துணை வினுவுக்கான விடைக்குத் திருத்தம்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, 23—8—1972-ல் கேட்கப்பட்ட துணைக் கேள்விக்கு நான் கூறிய பதிலைத் திருத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

"ஆறு பிச்சைக்காரர் இல்லங்களுக்கும் சேர்த்து ரூபாய் 51.87 இலட்சம் செலவு ஆகிறது. நான் ஒரு இல்லத்திற்கு மட்டும் ரூபாய் 51.87 இலட்சம் என்று கூறியதை ஆறு இல்லங்களுக்கும் சேர்த்து 51.87 இலட்சம் என்று திருத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். அதேபோன்று ஒவ்வொரு இல்லத்திற்கும் 5 இலட்சம் ரூபாய் பராமரிப்புச் செலவு ஆகிறது. ஆறு இல்லங்களுக்கும் 30 இலட்சம் பராமரிப்புச் செலவு ஆகிறது. எனவே ஆறு இல்லங்களுக்கும் 30 இலட்சம் ரூபாய் என்று திருத்திக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்."

6. ஆளுநர் உரையின் மீது விவாதம்.

மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர்: ஆளுநர் உரை மீது திரு. காட்டூர் கோபால் அவர்கள் நன்றி அறிவிப்புத் தீர்மானத்தை முன்மொழி வார்கள்.

*** திரு. காட்டூர் கோபால்:** தலைவர் அவர்களே,

"1973 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 2 ஆம் நாள் ஆளுநர் அவர்கள் சட்ட மன்றத்தின் கூட்டுப் போவையில் உறுப்பினர்களுக்கு உரை @ நிகழ்த்தியதற் காக, தமிழ் நாடு சட்ட மன்ற உறுப்பினர்கள் தங்களுடைய நன்றியை ஆளு நருக்குத் தெரிவித்துக் கொள்கின்றனர்"

என்று நான் முன்மொழிகிறேன்.

தீர்மானம் வழிமொழியப்பட்டது.

@126-134 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

*** திரு. காட்டூர் கோபால்:** தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் 4-50
கடந்த 2-ம் தேதி அன்று சட்டமன்ற மேலவை, பேரவைக் கூட்டுக் கூட்டத்தில் பி.ப.
ஆற்றிய உரைக்கு, நன்றி தெரிவிக்கும் வகையில், நான் அந்த உரையின்மீது என்னுடைய கருத்துக்களைத் தொகுப்பதில் மகிழ்ச்சி கொள்ளுகிறேன். மேதகு ஆளுநர் அவர்கள், அவர்களுடைய உரையில் தி.மு. கழகத்தின் தற்போதைய ஆட்சியினுடைய நல்ல சாதனைகளை எடுத்துச் சொல்லுகிற வகையிலேயும், இந்த அரசு மேற்கொண்டுள்ள நல்ல பணிகளை எடுத்து விளக் கிடும் வகையிலேயும் பல்வேறு நிலைமைகளைச் சுட்டிக்காட்டியுள்ளார்கள். பருவ மழை காலந் தாழ்ந்து பெய்த காரணத்தால், ஏராளமான வேர்க்கடலைப் பயிர் பாழாகி, பாதிக்கப்பட்டிருந்தபொழுது, 1¼ கோடி ரூபாய் செலவில் துயர் துடைப்புப் பணிகளை நம் அரசு மேற்கொண்டது. அப்படி மேற் கொண்ட நேரத்தில், பெரிதும் ஒரு கோரமான புயல், வெள்ளம், ஆகிய வற்றின் சீற்றத்தின் விளைவால், நம் மாநிலத்தில் 10 மாவட்டங்களில் பெரிதும் சேதம் ஏற்பட்டது 1,80,000 மக்கள் வீடிழந்தும், 28,000 ஏக்கர் பரப்பில் வளர்ந்த பயிர் முழுமையான சேதத்திற்குள்ளாகும் வகையிலும், 1,70,000 ஏக்கரில் விளைந்த பயிர் ஓரளவு பெரும் பாதிப்பிற்கு ஆளாகும் வகையிலும் சேதம் ஏற்பட்டுள்ளது. இந்த பாதிப்பெல்லாம் கணக்கிடப்பட்டு, 40 கோடி ரூபாய் அளவில் அந்தச் சேதம் இருக்குமென்றும், இதற்கு 25 கோடி ரூபாய் கடனுகவும் மான்யமாகவும் மத்திய அரசு வழங்கிட வேண்டுமென்றும் இந்த அரசு கேட்டுக்கொண்டுள்ளது. புயல், வெள்ளத்தால் ஏற்பட்டுவிட்ட இந்தச் சேதங்களால் அண்மைக் காலத்தில், ஒரு 50 ஆண்டுகள் வரை, யாரும் பார்த்திராத, கேட்டிராத அளவுக்குப் பெரும் சோதனை நம் மாநிலத்தில் ஏற் பட்டிருக்கிறது. இந்தப் பெரும் சோதனை ஏற்பட்டிருந்தாலும் கூட, இதில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக, கழக அரசு மேற்கொண்ட உடனடி நடவடிக்கை கள், வேகமாகவும் விரிவாகவும் எடுத்திட்ட நடவடிக்கைகள், அவர்களுக்கு நல்ல ஆறுதலை வழங்குவதாக அமைந்திருந்தன. கோவை மாவட்டத்தில் பவானி ஆற்றில் ஏற்பட்ட சீற்றம், அந்தப் பகுதியிலிருக்கிற மக்களை, அவர் களில் ஒரு 60, 70 வயதானவர்களைக் கேட்டாலும், இதற்கு முன்னால் இப்படி அந்த ஆற்றில் ஒரு சீற்றமிருந்திருக்காது என்று சொல்லும் அளவுக்கு, பெரிய சோதனையாக இருந்தது. அதனால் ஒவ்வொரு வகையிலும் மக்கள் பாதிக்கப் படும் நிலைமை உள்ளது என்பதை எடுத்துச் சொல்கிற வகையில் பெரும் பதைப் பில் மக்கள் இருந்தார்கள். அந்தப் பாதிக்கப்பட்ட பகுதிக்கு நம்முடைய அரசின் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், அற நிலைய அமைச்சர் அவர்களும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களும் உடனடியாக வந்து மக்களுக்கு ஆறுதல் கூறினார்கள். அது மட்டுமல்ல,

அங்கே நடந்த ஒரு நிகழ்ச்சியை நான் இந்த மன்றத்தில் குறிப்பிடக் கடமைப் பட்டவன். முதலமைச்சர் அவர்களும் ஆறுதல் சொல்ல வருகிறார்கள், பாதிக் கப்பட்டவர்களுக்குப் பரிகாரம் காண வருகிறார்கள் என்ற அறிவிப்பைக் கேட்டு மக்களெல்லாம் பல்லாயிரக் கணக்கில் அங்கே திரண்டிருந்தார்கள். அந்த வகையில் திரண்டிருந்த மக்களுக்கு முன்னால், பாதிப்பு ஏற்பட்ட சில நாட்களுக்குள்ளாகவே உயிரிழந்தவர்களுக்கு எவ்வளவு தொகை, வீடிழந்தவர் களுக்கு, மாடு இழந்தவர்களுக்கு, பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்னின்ன பரிகாரம் என்று உடனடியாக அரசு அறிவித்து, அந்தப் பலனைப் பெற்ற மக்கள் குழுமியிருக்கிற கூட்டத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வந்து உரை யாற்றுகிற பொழுது, ஆற்றுகிற உரைக்கு முன்னால், அந்த ஆற்றில் சீற்றங் கண்டு மக்கள் வேதனைக்குள்ளானதையும், அந்த ஆற்றினுடைய சீற்றத்திற்கு ஏது காரணமென்பதையும் விவாதித்து, ஆற்றின் இரு கரையிலும் ஒரு தடுப்புச் சுவர் இருந்தாலொழிய இந்த ஆற்றில் இனிமேலும் இப்படியொரு சீற்றம் வந்து விடுமென்று எண்ணும் காரணத்தால், அந்தப் பகுதியிலிருக்கிற மக்களைப் பராமரிக்க நல்ல திட்டம் என்கிற வழியிலும் ஒரு தடுப்புச் சுவருக்கு அங்கே அடிக்கல் நாட்டினார்கள். நான் இந்தச் சம்பவத்தைச் சொல்லுகிற பொழுது, இந்த அரசு மக்களைப் பராமரிப்பது மட்டுமல்ல, ஏதாவது பாதிப்பு வந்துவிட்டால் பாதுகாக்கிற துணையாக மட்டுமல்ல, எதிர் காலத்தில் பாதிப்பு கள் வந்துவிடாமல் தக்க அரணாகவும் இருக்கும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அந்தத் தடுப்புச் சுவற்றுக்கு அடிக்கல் நாட்டியது அந்தப் பகுதி மக்களுக்காக தக்க தருணத்தில் அளித்த ஆறுதலாக அமைந்ததாகும். அந்தத் தடுப்புச் சுவர் வேகமாக முடிக்கப்பட, மேற்கொள்ளப்பட வேண்டிய பணியாகும் என்று இந்த நேரத்தில் கோடிட்டுக் காட்டிக் கொள்ளுகிறேன். அந்தத் தடுப்புச் சுவர் கட்டுவது வேகமாக நடைபெற்று, அது ஒரு அரணாக அமைந்தால்தான், அந்தப் பகுதி மக்களுக்கு நன்மை. இனியும் இப்படிப் பட்ட நிலைமை வராத அளவுக்குத் தற்காப்புச் செய்து கொள்ளுவதற்கு வாய்ப் பாக இருக்குமென்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டிக்கொள்ளுகிறேன். அப்படிப் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பரிகாரம் காண்பதற்கு, தக்க வழியைச் செய்வதற்கு அந்தப் பகுதியிலிருக்கிற அத்தனை பேரும் எந்த விதமான பேதமும் இல்லாமல் ஒத்துழைத்திருப்பதற்கு நன்றி சொல்லுவதற்குக் கடமைப் பட்டிருக்கிறோம். நமது முதலமைச்சர் அவர்கள் வேகமாகவும் விரிவாகவும் எடுத்த நடவடிக்கைகளுக்கும் இந்த அமைச்சரவைக்கும் பல்வேறு அமைச்சர் பெரு மக்கள், அதே போல அரசு நிர்வாகிகள், பல்வேறு வகையில் உதவிய வசதி படைத்தவர்களுக்கும், அதே போல பாதிக்கப்பட்ட தொழிலாளிக்கு ஒரு நாள், இரண்டு நாள் ஊதியத்தை நன்கொடையாகத் தந்த தொழிலாளப் பெருமக்களுக்கும், இந்தப் பராமரிப்புப் பணிகளில் ஈடுபட்ட அத்தனை

பேருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நன்றி தெரிவித்துக்கொள்ளு கிறேன். கடந்த ஒரு முறை வறட்சி வந்தபொழுது, டில்லியிலிருக்கிற பிரதமர் அவர்களை அழைத்து, இங்கே இருக்கிற சிரமங்களைக் காண்பித்து, கொஞ்சம் கூடுதலாக உதவி தர வேண்டுமென்று கேட்பதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக்கொண்டபொழுது, அங்கேயும் இங்கேயும் தமிழகத்தில் பச்சைப் பசேலென்று திட்டுக்கள் இருக்கின்றன என்று நாம் எடுக்கிற நல்ல நடவடிக் கைகளுக்கு குந்தகமான பேச்சு அப்பொழுது இருந்தது. இப்பொழுது அந்த நிலைமை இல்லாத காரணத்தால், அப்படிப்பட்டவர்கள் இப்பொழுது பேசாம லிருந்ததற்கும் நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டவன். ஆனால், ஒன்றைச் சுட்டிக் காட்டிக்கொள்ளுவேன். நல்ல பரிகாரங்களை, வேலைகளை, பாதிக்கப் பட்ட மக்களுக்குச் செய்துகொண்டு வருகிறோம். இந்த அருமையான வேலை களைப் பார்த்து அதையும் சகித்துக்கொள்ள முடியாமல், அதையும் அரசியல் பிரசாரத்திற்குப் பயன்படுத்திக்கொள்ள முடியுமென்று மக்கள் மத்தியில் குழப்புகிற வேலையை ஒரு சிலர் செய்து வருவதை நான் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. இந்த நேரத்தில் 25 கோடி ரூபாயை உடனடியாகக் கொடுப் பதற்கு மத்திய அரசு வழி செய்து தர வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நம்முடைய மாநிலத்தில் வேளாண்மை நிலை மன நிறைவு அளிப்பதாக அமைந்திருக்கிறது என்று மேதகு ஆளுநர் அவர்கள் தன் உரையில் தெளி வாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனாலும் வறட்சி நம் முன்னேற்றத்தைத் தடைப்படுத்தியிருக்கிறது. நம்முடைய தேவை போக, உபரியாகவுள்ள தானியத்தைக் கவனத்துடன் கணக்கிட்டு, விற்பனைக்கு என்று உபரி தானியம் பெருமளவில் அரசாங்கக் கட்டுப்பாட்டில் இருந்தாக வேண்டும். இதன்மூலம் இதுதான் நாம் கையாளும் அணுகுமுறை என்று ஆளுநர் அவர்கள் குறிப்பிட் டிருக்கிறார்கள். அந்தக் கட்டுப்பாடு மிக மிக அவசியம். இந்தக் கட்டுப்பாடு இருக்கிற காரணத்தால்தான், இப்பொழுது ஏழை, எளியவர்களுக்கும் இந்த உணவு தானியங்கள் கிடைத்து வருகின்றன. இந்தக் கட்டுப்பாட்டைச் சொல்லு கிற நேரத்தில், எனக்கு 1967-க்கு முன்னாலிருந்த தட்டுப்பாடு கவனத்திற்கு வரு கிறது. இப்பொழுதும், இவ்வளவு வறட்சி வந்த நேரத்தில் கூட, புயல், வெள்ள பாதிப்பு நேரத்தில் கூட, தமிழ்கத்தில் எந்த இடத்திற்குப் போனாலும், நம்மால் உணவு தானியங்களைப் பார்க்க முடிகிறது. கேட்டு விலைக்கு வாங்க முடிகிறது. ஆனால், 1967-க்கு முன்னால் அவைகளைக் கண்களால் பார்க்கக்கூட முடியாத அளவுக்கு தட்டுப்பாடு இருந்தது. எனவே தான், மேதகு கவர்னர் அவர்கள் தன்னுடைய உரையில் குறிப்பிட்டுள்ளது போல, இந்த உணவு தானியங்கள், உபரி தானியங்கள், பெருமளவில் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்க

வேண்டியது மிக மிக அவசியமானதாகும். அதற்கான வகையில் அரசாங்கத்தினர், உற்பத்தி, கொள்முதல், வினியோகம் இந்த மூன்று துறைகளிலும் தற்போது மேற்கொண்ட நடவடிக்கைகள் பாராட்டத் தக்கவை, வரவேற்கத் தக்கவையாகும். வணிகர்களிடமிருந்து 20 சதவிகிதம் அரசு கொள்முதல் செய்வதற்குத் திட்டமிட்டு, நிறைவேற்றி வருவதுபற்றி ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அதுவும் வரவேற்கத்தக்க ஒன்றாகும். உணவுப் பொருள்களை வழங்குகிற கழகம் அமைத்திடவும், அந்தக் கழகம் சில்லரைக் கடைகள் பலவற்றைச் சீராக பல்வேறு மாவட்டங்களிலேயும், சென்னையிலேயும் அமைத்து, தானியங்கள் கொடுக்கிற வகையிலேயும், சிறப்பு அங்காடிகள் அதனுடைய நிர்வாகத்தைச் சீர் செய்கிற வகையிலேயும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பாராட்டத்தக்கவையாகும். வணிகர்களின் வெறும் லாபம் கிடைத்தாக வேண்டுமென்ற நோக்கத்தின் காரணமாக, விலைவாசி ஏறி வருவது பற்றி மேன்மை தங்கிய ஆளுநர் அவர்கள் உரையில் குறிப்பிட்டிருந்தார்கள். ஏறி வருகிற விலைவாசியை பல்வேறு வகையில் சுட்டிக் காட்டி, இந்த விலைவாசிக்கு இந்த மாநில அரசுதான் சம்பந்தமோ என்று சந்தேகப்படும்படி அதையும் அரசியலாக்குகிற பிரச்சாரங்கள் வெளியில் நடத்தப்படுகின்றன. ஆனால் மாநில அரசு முயற்சியால் மட்டுமல்லாமல், மத்திய நிதி, வரி விதிப்புக் கொள்கை மூலமாகத்தான் விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியும் என்பதையும் ஆளுநர் உரையில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

5-00 பி.ப. நான் இதைச் சொல்கிறபோது, இந்த அரசு இவைகளை அறிவித்த வகையிலேயும், உணவு தானியங்கள் ஏழைகளுக்கு, இல்லாதவர்களுக்கு, பாட்டாளிகளுக்குக் கிடைக்காமல் போகக்கூடாது என்கிற வகையிலேயும் எடுத்திருக்கிற முயற்சிகள் பாராட்டக்கூடியவை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த விலைவாசி ஏற்றத்திற்கு வரி விதிப்புக் கொள்கை ஒரு முக்கிய காரணமாகும். இந்த வரி விதிக்கிற கொள்கையை நாம் பார்க்கிறோம். கழக அரசு அமைந்தவுடன், இந்த அரசு ஒவ்வொரு ஆண்டும் வெளியிட்ட பட்ஜெட்டில், வரவு செலவுக் கணக்கில், தாங்கக்கூடியவர்கள் மீது மட்டுமே வரி போட்டும், தாங்க முடியாத, ஏற்கெனவே பாதிக்கப்பட்டிருக்கிற ஏழைகளுக்கு இந்த வரிச் சுமையே இல்லாமல் தவிர்த்தும் வருகிற காரணத்தால், அதனையும் நாம் பாராட்ட வேண்டியது அவசியம் என்பதைத் தெரிவித்துக்கொள்வேன். வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கித் தீர வேண்டும். நியாயமான, நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு வேளாண்மை உற்பத்தி மிக மிக அவசியம். நிரந்தரமான வேளாண்மை உற்பத்திக்கு, நிலையான உற்பத்திக்கு உரம் அவசியமானதாகும். இந்த உர உற்பத்தித் தொழில்களை உள் நாட்டிலே துவக்க வேண்டியதற்கும், வெளி நாட்டிலிருந்து உரத்தை இறக்குமதி செய்வதற்கும் நீண்ட காலத் திட்டம் மிக அவசியம் என்றும் ஆளுநர் அவர்கள், அவர்களுடைய

உரையிலே குறிப்பிட்டுள்ளார்கள். அதனுடைய அவசியத்தை மத்திய அரசு உணர்ந்து மிக அவசரமான, அவசியமான இந்தக் காரியத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்வேன்.

அண்மையிலே உரப் பஞ்சம் ஏற்பட்டிருப்பதும், அதனால் உழவர் பெரு மக்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியிருப்பதும் நாம் பார்க்கிற ஒன்றாகும். இந்த அரசு ஏற்கெனவே மத்திய அரசைத் தூண்டிக்கொண்டிருக்கிறது. அந்த நிலைமையை மத்திய அரசு உணர்ந்து இந்த உரப் பஞ்சம் தருகிற வகையில் நடவடிக்கைகளை எடுத்திட வேண்டுமென்று நான் கோடிட்டுக் காட்டிக்கொள் கிறேன். இந்த மாநிலத்திலுள்ள நீர் வளங்கள் பெரிதும் பயன்படுத்தப் பட்டுள்ளன. இருந்தாலும் அண்மையிலே ஏற்பட்டிருக்கிற வெள்ளப் பெருக்கு நமக்குச் சில படிப்பினையைத் தந்திருக்கிறது. நாம் பாசன ஏற்பாடுகளை மேலும் நல்ல முறையில் பேண வேண்டும் என்கிற படிப்பினையை மட்டுமில்லாமல், நம்முடைய பாசன வசதிகளை மேலும் சீராக்கிட வேண்டும், காலத்திற்கு ஏற்றவாறு அவைகளை மாற்றியமைக்க வேண்டுமென்று நமக்குப் புரிய வைத்திருக்கிறது. எனவேதான் காவேரி பாசன ஏற்பாட்டைக் காலத்திற் கேற்றவாறு மாற்றியமைக்க, இந்திய அரசு மூலம் உலக வங்கியிடமிருந்து நிதி உதவி கோருகிற நம்முடைய அரசினுடைய செயற் குறிப்புகள் மத்திய அரசினுடைய விரிவான பரிசீலனைக்கும், பரிகாரத்திற்கும் எடுத்துக்கொள்ளப் பட வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மைசூர், தமிழ் நாடு, கேரளம், ஆந்திரப் பிரதேசம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து இந்த வட்டாரம் முழுவதிலும் கிடைக்கின்ற நீர் வளத்தைப் பயன்படுத்தத் திட்டமிட வேண்டுமென்றும், மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுக் கழகம் ஒன்றை அமைப்பது குறித்தும் ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதனை நான் குறிப்பிட்டுப் பேசுகிறபோது நம்முடைய மாநிலத்தில் பாசன வசதிக்குத் தேவைப்படுகிற நீருக்கு மட்டுமல்லாமல், சில நேரங்களில் குடிநீருக்கு வந்து விடுகிற தட்டுப்பாடு பெரிய அளவில் இருக்கிறது. கோவை மக்கள் குடிநீர்ப் பஞ்சத்தை ஆண்டாண்டுதோறும் அனுபவிக்கிறார்கள். இப்போது கூட பிப்ரவரி மாதம் நடக்க நடக்க, மார்ச் வந்து விடுமே குடிநீர்ப் பஞ்சம் வந்து விடுமேயென்று அஞ்சுகிற நிலைமை தொடர்ந்து இருந்து வருகிறது. அண்டையில் இருக்கிற கேரள அரசோடு நம்முடைய மாநில அரசு பல கட்டங்களில் பேச்சு வார்த்தை நடத்தியும், இரு தரப்பு அதிகாரிகளும் பல முறை பேச்சு வார்த்தை நடத்தியும், கேரளாவில் இருக்கிற சிறுவாணித் தண்ணீர் கடலுக்குள் கலந்தாலும் கலக்குமே தவிர, கோவை மக்களுக்குக் குடிநீர் கிடையாது என்ற நிலைமையைத்தான் நாம் தொடர்ந்து பார்க்கிறோம். எனவே நான் இந்தக் கட்டத்தில் நான் கேட்டுக்கொள்வேன், சிறுவாணி வகையிலோ அல்லது வேறு எந்த வகையிலோ கோவை மக்களுடைய குடிதண்ணீர்

தட்டுப்பாட்டைப் போக்குவதற்கு இந்த அரசு எடுத்துக்கொண்டு வருகிற நல்ல நடவடிக்கைகளை மேலும் வேகமாக எடுத்து, புதிய மாற்றுத் திட்டத்தின் மூலமாவது பரிகாரம் காண வேண்டுமென்று இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டுள்ளபடி, மேற்கு மலைத் தொடரில் இருக்கிற இந்த 4 மாநிலங்களையும் ஒன்றாக்கி இந்த மேம்பாட்டுக் கழகம் அமைப்பதன் மூலம் இந்த நீர் வசதிகளை, நில வசதிகளை, இயற்கை வளங்களை ஒருங்கே பயன்படுத்திக்கொள்ள, முறைப்படுத்திக்கொள்ள வாய்ப்பு இருக்கும். அது அமைய வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த சில ஆண்டுகளாக நம்முடைய மாநிலத்தில் மின் வெட்டு இல்லை. பல ஆண்டுகளாக தொடர்ந்து ஆண்டாண்டுதோறும் மின் வெட்டு இருந்தது. ஆனால் 1966-க்குப் பின்னால், 1967 துவக்கத்திலிருந்து மின் வெட்டே இல்லாத காரணத்தால், இந்த மக்களுக்கு அந்த மின் வெட்டில் இருக்கிற பாதிப்பு கூட, பரிதவிப்பு கூட மறந்து போகிற நிலை இருந்தது. ஆனால் கடந்த ஆண்டு ஏற்பட்டுவிட்ட இயற்கைக் கோளாறு, இந்த ஆண்டில் ஒரு மின் வெட்டு சோதனையை நம்முடைய மாநிலத்தில் கொண்டுவந்திருக்கிறது. இப்படி வந்திருக்கிற மின் வெட்டுக்குக் கூட, பல இடங்களில் அரசியல் சாயம் பூசுகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்று நான் குறிப்பிட்டுக் கொள்வேன். மேதகு ஆளுநர் அவர்கள் தெளிவாக அவரது உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். மின் வெட்டு உலகம் முழுவதும் இருக்கிறது. உலகம் முழுவதும் இருக்கிற பாதிப்பு நம்முடைய மாநிலத்திலும் ஒரு பாகமாக—பகுதியாக—இருக்கிறதென்றால், இந்தப் பாதிப்பிலிருந்து மக்கள் பாதுகாக்கப்பட, வருகிற ஆண்டுகளில் இத்தகைய மின் வெட்டே வராத அளவுக்கு முறையான திட்டங்களை நாம் முன் கூட்டி செய்திட வேண்டும். அதற்காகத்தான் ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையில் சில திட்டங்களைச் சொல்லி, இவைகளெல்லாம் உடனே தேவை, விரைவாகத் தேவை, அவசியமாகத் தேவை என்பதனைக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். நெய்வேலியில் 2-வது சுரங்கம் வெட்டி எடுக்கப்பட்டு, இந்த அனல் மின் விசை செயல்படுமேயானால், அதிலே இருக்கிற பரிகாரத்தினை, லாபத்தைச் சுட்டிக்காட்டி, இது மாநிலத்திற்கு மட்டுமல்ல, நாட்டுக்கே நன்மை பயக்கும் என்று குறிப்பிட்டுள்ளார். மத்திய அரசுகூட கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஒவ்வொன்றையும் மத்திய அரசிலிருந்து, கேட்டுக் கேட்டுச் செய்கிற, வேண்டிவேண்டிச் செய்கிற, அவர்கள் அனுமதித்தாலொழிய அங்கே ஆசைப்பட்டாலொழிய இங்கே வேறு வழியில்லை என்கின்ற, அதிகாரப் பஞ்சம் இருக்கிற இந்த அரசு மேலும் மேலும் எடுத்துக்கொள்கிற இந்த முயற்சிக்கு மத்திய அரசினர் உதவவேண்டும். உடனடியாக நெய்வேலியில் அந்த இரண்டாம் சுரங்க வெட்டுக்கு அனுமதி தந்தாக வேண்டும்.

நாட்டு மக்கள் இப்போது பெரும் பாதிப்பிலே இருக்கிற, மின்வெட்டுக் பி.ப. 5–10
காலத்தில், முன்கூட்டியே திட்டமிட்டு எதிர் நாட்களிலே இருக்கிற ஆபத்தைத் தடுக்கவும் விபத்தைத் தடுக்கவும், தங்களைப் பாதுகாத்துக்கொள்ளவும் எதிர் நாட்களில் சமுதாய லாபத்தையும் கருதிக் கேட்டுக் கொள்கிறேன். அம்மாதிரிப் பிரச்சினையாகக் கருதி இதற்கு மத்திய அரசு அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல கல்பாக்கத்தில் அனல் மின் திறனை உயர்த்திட வேண்டுமென்று ஆளுநர் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்கள். மேட்டூர், தூத்துக்குடி இரண்டு அனல் மின் நிலையங்களும் அமைந்தாக வேண்டிய அவசியத்தையும் தெரிவித்து இதிலேயும் மத்திய அரசு அனுமதி அளித்திட வேண்டுமென்று அவரே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார். சேலம் உருக்காலை வேண்டும், வேண்டுமென்று கேட்டுக் கிடைத்து, நிர்வாக இயக்குநர் நியமிக்கப்பட்டு விட்டார்கள், முன்னேற்பாடுகள் நடைபெற்று வருகின்றன, 'மகிழ்ச்சி' என்ற வகையிலே ஆளுநர் அவர்கள் தங்களுடைய உரையிலே குறிப்பிட்டார்கள். நானும் சொல்லிக்கொள்வேன், சேலம் மாவட்டத்தில் அமைந்து முன்னேற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிற அந்த உருக்காலைத் திட்டம் மிக மிக அவசியமான தேவை, அவசரமான தேவை. தாமதத்தினால் பல்வேறு உப தொழில்கள், துணைத் தொழில்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றன. பல்வேறு இன்ஜினிரிங் தொழிற்சாலைகள் தமிழ் நாட்டில் உருக்கை எதிர்பார்த்து ஏங்கிக் கிடக்கின்றன. கோவை மாவட்டத்தில்கூட 150-க்கு மேற்பட்ட இன்ஜினீரிங் தொழிற்சாலைகள் இந்த உருக்கை நம்பி பல்வேறு நிறுவனங்களில் பல்வேறு தடவைகளில் பெரும் பாதிப்புக்கு, சோதனைக்குள்ளாகியிருக்கின்றன. எனவே, இந்த உருக்காலைத் திட்டத்தினுடைய உடனடிப் பணிகளுக்கு மத்திய அரசு வேகமான, விரைவான பரிகாரத்தைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த 150 இன்ஜினியரிங் தொழிற்சாலைகள், இது வரையிலும், மோட்டார் பம்புசெட் ஆகிய பொருள்களை மட்டும் உற்பத்தி செய்கிற தொழிற்சாலையாக இயங்கி வந்திருக்கின்றன. அண்மைக் காலத்தில் அதற்கு ஏற்பட்டிருக்கிற சந்தைக் குறைவு காரணமாக அந்த உற்பத்திப் பொருள்களை இனியும் தயாரித்தால், அந்தத் தொழிற்சாலைகள் தொழிலையே நடத்த முடியாத அளவுக்கு நிர்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அந்தத் தொழில்களை நம்பியிருக்கிற பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் பாதிப்பிற்கு உள்ளாகிற நிலைமை அச்சுறுத்திக்கொண்டிருக்கிறது. எனவே 150 இன்ஜினியரிங் தொழிற்சாலைகளிலும் மோட்டார் பம்புசெட்டு உற்பத்தி தவிர வேறு வகையான மாற்று உற்பத்தித் திட்டங்களுக்கு முறையான திட்டங்களை, ஆலோசனைகளை நம்முடைய மாநில அரசு வழங்கிடவும், இதில் முழு அதிகாரமும், முழுவாய்ப்பும் படைத்த மத்திய அரசினர் இதிலே வேகமான கவனத்தைக் காண்பித்திட வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மேதகு ஆளுநர் அவர்கள் நொடிந்த பஞ்சாலைகளை நல்ல நிலைமைக்குக் கொண்டுவருவதைப் பொறுத்தவரையில், தமிழ் நாட்டில் பஞ்சாலைக் கழகம், ஏறத்தாழ 9,962 பேர் பணி புரிகின்ற 13 ஆலைகளை எடுத்துக்கொண்டதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எடுத்துக்கொண்ட 7 ஆலைகளில், 5 பஞ்சாலைகள் லாபத்தோடு நடப்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற இந்தப் பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய பிரச்சினைகளைக் குறிப்பிடுகிறபோது, ஒரு சம்பவத்தை என்னாலே மறக்க முடியவில்லை. இப்போது தமிழகத்தினுடைய முதல்வராக இருக்கிற டாக்டர் கலைஞர் அவர்களும், இப்போது கல்வி அமைச்சராக இருக்கிற டாக்டர் நாவலர் அவர்களும், ஒரு 15 ஆண்டுகளுக்கு முன்னாலே, இன்று அல்ல, எங்கள் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க் கட்சியாக இருந்தபோது, மதுரை மாவட்டத்தில் திருப்பரங்குன்றத்தில் ஒரு கழக மாநாடு, அரசியல் மாநாடு நடத்தினார்கள். அந்த மாநாட்டில் தமிழ் நாட்டில் பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய நிலைமைகளைப் பற்றி ஆய்வு நடத்தினோம். இதனைப் பற்றி ஒரு பெரிய உரையாற்றி இன்னின்ன வகைகளில் பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய நிலைமை இந்தத் தமிழ் நாட்டில் இருக்கிறது என்றும் தமிழ் நாட்டிலே இருக்கிற ஆலைத் தொழிலுக்கு எதிர் நாட்களிலே கேடு வந்துவிடுகிற நிலை உள்ளதையும் செய்யவேண்டிய காப்பு நடவடிக்கைகளையும், 15 ஆண்டுகளுக்கு முன்னாலேயே—அந்த நாட்களிலேயே—முன்கூட்டி நுகர்ந்து திட்டமிட்டு, தீர்மான வடிவிலே, பேச்சு வடிவிலே, இந்த நாட்டுக்கும் நாட்டை ஆளுகிற அரசுக்கும் தெரிவித்திருந்தோம். 15 ஆண்டுகளுக்கு முன்னாலே தெரிவித்தோம். இந்தத் தமிழ் நாட்டில் 200 க்கும் மேலே இருக்கிற பஞ்சாலைகளில் பெரும்பாலான பஞ்சாலைகள் நூலை மட்டும் நூற்பதைத் தவிர, நெசவை முடிப்பதில்லை. நெசவு முடிகிறவகையில், முழுமையான உற்பத்தி செய்கின்ற வகையிலே மாற்றப்பட வேண்டுமென்று அப்போதே தெளிவாக்கப்பட்டது. அது மாத்திரமல்ல—நலிந்த பஞ்சாலைகள் என்று சொல்லுகிறோமே, அந்தத் தொழிலுக்கே மொத்தமாக நெருக்கடி ஏற்பட்டுவிடவில்லை. 1964-65-க்குப் பின்னாலே ஏற்பட்டிருக்கின்ற நிலைமைகளைப் பார்த்தால், பஞ்சாலைத் தொழிலுக்கே நெருக்கடி என்பது ஒத்துக்கொள்ள முடியாதது. ஆலைகள் பலவற்றில் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. ஜவுளி ஆலைத் தொழிலில் பழைய கணக்குப்படியும், இப்போதைய கணக்குப்படியும் ஒரு நபருக்குத் தேவையான துணி அளவினை விட சரிபாதி தான் இந்த நாட்டிலே உற்பத்தியாகிறது. 1964-ம் ஆண்டு கணக்குப்படி ஒரு நபருக்கு 32 கெஜம் உபயோகத்திற்குத் தேவையென்று கணக்கிடப்பட்டிருந்தது. ஆனால் என்ன உற்பத்தி? 18 கெஜம் தான் அப்போதே உற்பத்தியிருந்தது. என்றாலும் கூட தேக்க நிலை இருந்ததற்குக் காரணம் வாங்குகின்ற சக்தி குறைந்திருந்தது. நூற்பாலைகளிலே திட்டமிடப்படாமல், அன்றா

திறமையற்ற வகையிலேயும் இயந்திரங்கள் புதுப்பிக்கப்படாமலும் இருந்த கோளாறுகள் காரணமாக ஆலைகள் பாதிப்பிற்குள்ளாயின. அப்போதே 1965 ஆம் ஆண்டு நலிந்த ஆலைகள் என்று சொல்லப்பட்ட ஆலைகளுக்கு நெருக்கடி வந்தபோது, உடனடியாகப் பரிகாரம் என்ன, நீண்ட காலத்திற்கு உள்ள பரிகாரம் என்ன, என்பவைகளைப்பற்றி ஆய்வு நடத்துகிற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனாலும் 1967 ஏப்ரலிலே தான் இப்போது கல்வியமைச்சராக இருக்கிற டாக்டர் நாவலர் அவர்கள், தொழிலாளர் நலத்துறை அமைச்சராக இருந்தபோது, இந்த நலிந்த நிலைமைகளை, எத்தனையோ பாட்டாளிகள் பாதிக்கப்படுகிற நிலைமைகளைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு, அவைகளை நிவர்த்திப்பதற்கு டாக்டர் லோகநாதன் அவர்கள் தலைமையிலே ஒரு குழுவை அமைத்தார். அந்தக் குழு இந்தத் தமிழ் நாட்டில் எவ்வளவு பஞ்சாலைகள் நலிந்துபோய் மூடப்பட்டிருக்கின்றன, இனிமேலும் ஆலைகள் மூடப்படாமல் இருப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டும், மூடிய ஆலைகளைத் திறந்து நடத்துவதற்கு என்ன செய்ய வேண்டுமென்று பரிசீலித்து, பல ஆலைகளுக்கு இந்த அரசாங்கத்தின் மூலம் உத்தரவாதக் கடன் உதவி செய்தது. உத்தரவாதக் கடன் உதவி செய்த காரணத்தாலேதான் மூடுகிற கட்டத்திலே இருந்த ஆலைகள்கூட மூடப்படாமல் நடக்கிற நிலைமை ஏற்பட்டது. பாட்டாளிகள் பாதிக்கப்படுவதிலிருந்து தப்புவிக்கப்பட்டார்கள். அதேபோல், பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கும் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, இந்தியாவிலே இன்னும் எங்கேயும் தரப்படாத நிவாரண உதவியை ஒரு கட்டத்தில் செய்தார்கள். நம்முடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களும் இரண்டு கட்டங்களில், பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் எல்லாம் வறுமையின் வாட்டத்தில் வாடியபோது, ஒரு துணையாக அள்ளித் தந்தார்கள். இப்படிப்பட்ட காரியங்களின் விளைவாக பஞ்சாலைத் தொழிலாளர்கள், ஒரு பத்தாயிரம் பேர் இந்த மூடப்பட்ட ஆலைகளிலிருந்து காக்கப்பட்டு, இப்போது பணியாற்றுகின்ற நிலைமையை, பாங்கான நிலைமையை நாம் பார்க்கிறோம். இந்தப் பஞ்சாலைகளைப்பற்றி நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்கள் தம்முடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். நலிந்த ஆலைகளை, நாடாளுகிற அரசு மேற்கொண்டிருக்கிறது. வளமுள்ள ஆலைகளை இப்போது தனியார் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆலைகள் நலிய நலிய, ஆரோக்கியம் கெடக் கெட, ஆரோக்கியம் கெட்டவைகளையெல்லாம் அரசு எடுத்துக்கொள்கிறது. இந்த நடவடிக்கைகள் நாம் போகிற சமதர்ம நோக்குக்கு, சமதர்மப் பார்வைக்கு உகந்தவைதானா, சரியானவைதானா என்பதை எண்ணிப் பார்த்திட வேண்டிய அவசியம் இப்போதிருக்கிறது. அதற்குரிய வழிகளை, அதற்குரிய வகைகளை இந்த மாநில அரசு மேற்கொள்ள முடியாதா என்ற

என்பது எனக்குத் தெரியுமென்றாலும், மேற்கொள்ள வேண்டிய மத்திய அரசினருக்கு ஒரு தன்மையை நான் சுட்டிக் காட்டுவேன். கடந்த 6 மாதங்களுக்கு முன்னால் தமிழ் நாட்டிலேயிருக்கிற எல்லா அரசியல் கட்சிகளைச் சேர்ந்த, எல்லாத் தொழிற்சங்கங்களைச் சேர்ந்த, பஞ்சாலைத் தொழிலாளர்கள் பல
5–20 பி.ப. நாட்கள் ஒரு கடுமையான போராட்டத்தை நடத்தினார்கள். பல நாட்கள் வேலை நிறுத்தம் நடந்து, ஆலைகள் மூடிக்கிடக்கின்ற நிலைமையில், ஒரு பேச்சு வார்த்தை நடந்தது. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர், மாண்புமிகு முதல்வர் மூவரும் இருந்து அந்தப் பேச்சுவார்த்தையை நடத்தினார்கள். ஒரு கட்டம் வந்தது. டாக்டர் கலைஞர் அவர்கள் தொழிலாளர்கள் கேட்கிற நியாயமான கோரிக்கையில் ஒரு குறிப்பிட்ட அளவைச் சொல்லி நிர்வாகத்தினிடத்திலே, 'இதை நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள்' என்று சொன்னார்கள். நிர்வாகத்தினர் தயக்கம் காட்டினார்கள். வேலை நிறுத்தம் நடத்தியபோது, ஏகோபித்த வேலை நிறுத்தம், ஒருமித்த வேலை நிறுத்தம் பல நாட்கள் நடக்கிறபோது, தயக்கம் காட்டினார்கள். தர மறுத்தார்கள். அந்த வேலை நிறுத்தத்தினால் அவர்கள் பயப்படவில்லை. மறுத்தார்கள். அப்போது டாக்டர் கலைஞர் நிர்வாகத்தினரைப் பார்த்து, இதே நிலை நீடிக்குமானால் இந்தத் தனியார் ஆலைகள், இப்போது உங்களிடம் இருக்கிற ஆலைகள் நாட்டுடைமை ஆகிவிடும், கவனத்தில் வைத்துக்கொண்டு இதை ஒத்துக்கொள்கிறீர்களா, அல்லது நான் சொன்ன, தொழிலாளர்களுக்கு லாபம் தருகிற இதை ஒத்துக்கொள்கிறீர்களா வென்று அவர்களிடத்திலே கேட்டார்கள். மறுநாள் காலை 10 மணிக்குப் பேச்சுவார்த்தை என்றால், 9½ மணிக்கே முதல்வர் சொன்ன, தொழிலாளர்களுக்குப் பணம் தருகிற அதை ஒத்துக்கொள்கிறோம் என்று நிர்வாகத்தினர் இசைந்து வந்தார்கள். இதை நான் குறிப்பிட்டுக் காட்டுவது, நாம் போகிற சமதர்ம பாதைக்கு, சமதர்ம நோக்குக்கு, நலிந்த ஆலைகள், ஆரோக்கியம் கெட்ட ஆலைகள், நஷ்டம் இருக்கிற ஆலைகள், வளம் கெட்ட ஆலைகள், பழைய இயந்திரத்திலே இயங்கி லாபம் வர முடியாது என்று கைவிடப்பட்ட ஆலைகள், இவைகளையெல்லாம் அரசு மேற்கொள்கிற தன்மைகள் மட்டும் போதாது. வள மிக்க ஆலைகள் தனியார் கையில் இருக்கின்றன. இவைகளை யெல்லாம் கோடிட்டு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேதகு ஆளுநர் குறிப்பிட்டபடி, இந்த 10 ஆயிரம் தொழிலாளர்கள் வாழ வேண்டும், அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்பதற்காக, அவர்கள் ஜீவிதத்திற்காகத்தான் இந்தத் தமிழ் நாடு ஜவுளி கார்ப்பரேஷன் இந்த ஆலைகளை மேற்கொண்டது என்றாலும், பாராட்டத்தக்க வகையில், நல்ல வகையில் லாபம் வந்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். இது வரவேற்கத்தக்கதாகும். நான் இதைச் சொல்கிறபோதே, பஞ்சாலைத் தொழிலில் நூற்றுக்கு மேற்பட்ட பஞ்சாலைகளில் நூற்கப்படுகிற

நூல்கள் வட மாநிலத்திற்கு அனுப்பப்படுகின்றன. அங்கே விசைத் தறியிலே இந்த நூல்கள் விசைத் தறித் துணிகளாக மாற்றப்பட்டு, அந்தத் துணிகள் நம்முடைய சந்தைக்கு, நம் மாநிலத்திலே இருக்கிற பல்வேறு மாவட்டங்களுடைய விற்பனைச் சந்தைகளுக்கு வருகின்றன. எனவேதான், நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்வேன். தமிழகத்திலே ஒரு பெரிய அளவிலே பிளீச்சிங் பேக்டரி, டையிங் பேக்டரி அமைக்கப்பட வேண்டுமென்பதை இந்த நேரத்திலே நான் கோடிட்டுக் காட்டிக் கொள்வேன். இது கோவை மாவட்டத்திலே அமைந்து விடுமானால் வரவேற்கத் தக்கதாகும், பயனுடையதாகும் என்று குறிப்பிட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

வேளாண்மைத் துறை, தொழில் துறை இவைகளிலே நாம் எவ்வளவோ முயற்சிகளைச் செய்திருந்தாலும், வேலையில்லாப் பிரச்சினையும், வறுமையும் வாட்டிக்கொண்டுதான் இருக்கின்றன. மேன்மேலும் நம்மை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன. ஆனால் மேதகு ஆளுநர் அவர்கள் நிரம்பவும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இது அனைத்திந்தியப் பிரச்சினை என்றாலும், நம்மால் முடிந்ததை நாம் செய்து வருகிறோம் என்று கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். ரூபாய் 3 கோடி செலவில் கிராம வேலை வாய்ப்பு முனைப்புத் திட்டம், ரூபாய் 3 கோடி செலவில் கிராமச் சாலைகள் திட்டம், ரூபாய் 61 லட்சம் செலவில் இளைஞர் அணித் திட்டம், ரூபாய் ஒரு கோடியே முப்பத்தோறு லட்சம் செலவில் வறட்சியால் பாதிக்கப்படுகிற பகுதிகளுக்கு நிவாரணம் அளிக்கும் திட்டம், பொறியாளர்கள் தொழிற் பயிற்சித் திட்டம் இந்த வகைகளில் 10 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருப்பதை அவர்கள் அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். நேற்றையதினம் கூட நம்முடைய அரசின் முதல்வர் அவர்களும், ஏனைய அமைச்சர் பெருமக்களும் இந்த சென்னை மாநகர மக்களே வியக்கத்தக்க வகையில், பாராட்டத்தக்க வகையில் போற்றத்தக்க வகையில், கூவம் மாற்றத்தை, கூவம் சீரமைப்புத் திட்டத்தை நிறைவேற்றி, அதனுடைய விழாவில் பங்கு கொண்டார்கள். கூவம் பெரும் நாற்றமாக, சென்னைக்கே ஒரு சாபக் கேடாக, இந்த சிங்காரச் சென்னையை சீர் கெடுத்து விடுகிற நிலைமையில் இருந்து வந்தது. இந்தச் சீரமைப்புத் திட்டம் இந்தச் சென்னை நகருக்கு எழிலை உருவாக்கியிருக்கிறது. படகுச் சவாரி மூலமாக உல்லாசப் பயணிகளை ஈர்க்க வேண்டும். அதிலே கூட அந்நியநாட்டுச் செலாவணி வருகிற வகையில் வரவேற்கத்தக்க நிலைமைகள் இருப்பதைப் பார்க்கிறோம். நான் இங்கே குறிப்பிட விரும்புவது; இந்தச் சீரமைப்புத் திட்டம் மூலமாக 3 ஆயிரம் தொழிலாளர்கள் 3 ஆண்டுக் காலமாக வேலை செய்துகொண்டு வந்தார்கள். இந்தக் கூவம் இன்றைய தினம் பலரும் பாராட்டுகிற வடிவம் எடுத்திருக்கிறது. ஆனால் இந்த வேலைகளைச் செய்கிற

போது எவ்வளவு இடையூறுகள், எத்தகைய எதிர்ப் பிரச்சாரங்கள் இருந்தாலும், முதலைகள் இங்கே, மற்றவைகள் எங்கே என்றெல்லாம் பலர் பேசினாலும் கூட, இதைச் செய்தே தீர வேண்டுமென்று இந்த அரசும், முதல்வர் அவர்களும், பொதுப் பணித்துறை அமைச்சரவர்களும் மேற்கொண்ட வேகமான நடவடிக்கைகள் மூலம் கூவம் நல்ல வகையில் மாறி ஒரு நல்ல விழாவாக நேற்றைய தினம் நடந்தது.

* **திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, கூவத்தைப் பொருத்து நேற்றைய தினம் நடந்த விழாவிற்கு நானும் சென்றிருந்தேன். அமைச்சர்களெல்லாம் இந்தக் கூவத்தில் படகில் சென்றார்கள். மேலவை உறுப்பினர்களும் இப்படிப் படகிலே செல்வதற்குரிய வாய்ப்பினை அரசு, தலைவரவர்களே, உங்கள் மூலம் ஏற்பாடு செய்து தருவார்களாவென்று அறிய விரும்புகிறேன். முன்பு கூவம் திட்டத்தை பார்ப்பதற்கு இப்படி ஏற்பாடு செய்து தந்தார்கள். அந்த மாதிரி ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, 120 படகுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினரின் விருப்பத்தை விரைவிலே சுற்றுலா இலாகா நிறைவேற்றித் தரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* **திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, மேலவை உறுப்பினர்கள் அனைவரையும் அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. காட்டூர் கோபால் : நேற்றையதினம் அமைச்சர் பெருமக்கள் ஆற்றிய உரையில் குறிப்பிட்டார்கள். முன்பு கூவம் விஷயமே பாவம் என்ற நிலைமை இருந்தது. ஆனால் இந்தக் கூவத்தால் அடையவிருக்கின்ற லாபம் என்ன வென்று அடுக்கிச் சொன்னார்கள். இந்தக் கூவம் சீரமைப்புத் திட்டம் வரவேற்கத் தக்க திட்டம், இந்தத் திட்டத்தை முடித்து களிப்போடு இருக்கிற இந்த நாளில் நான் ஒன்றைக் குறிப்பிட்டுக் கொள்கிறேன். 3 ஆயிரம் தொழிலாளர்கள் இந்தத் திட்டத்தில் 3 ஆண்டுக் காலம் பணியாற்றியிருக்கிறார்கள். முன்பெல்லாம் இப்படி ஒரு திட்டத்திலே ஊழியர்கள் பணியாற்றினால், தாற்காலிக தினக் கூலிகளாகப் பணியாற்றுகிற அவர்கள் திட்டம் முடிந்தால் வீட்டிற்குச் செல்வது தவிர வேறு வழியில்லை, வகையில்லை. ஆனால் கழக அரசு ஏற்பட்டு 1967-க்குப் பின்னால் இதிலே ஒரு நல்ல மாற்றத்தைச் செய்திருக்கிறது. பின் வரிசையில் 1967-க்கு முன்னாலே இருந்த தாற்காலிக தினக் கூலித் தொழிலாளர்களில் பல ஆயிரக்கணக்கான பேர்களுக்குக் கடந்த

மாதம் நிரந்தர வேலை வாய்ப்பிற்கு வழி வகை செய்யப்பட்டுள்ளது. அதேபோல பொதுப்பணித் துறையிலே 5 ஆண்டுகளுக்கு மேற்பட்டு வேலை செய்தவர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்புக்கு இநத அரசு வழி வகைகளைச் செய்திருக்கிறது. இவைகள் எல்லாம் பாராட்டத்தக்க, போற்றத்தக்க, குறிப்பிட்டுச் சொன்னால் பாட்டாளி மக்கள் காலம் உள்ளளவும், நிலம் உள்ளளவும், நீர் உள்ளளவும் இந்த அரசை, கழக அரசை நினைத்துப் போற்றத் தக்க வகையில், பாராட்டுக்குரிய நடவடிக்கைகளாகும். அதேபோல இந்த அரசு கூவம் சீரமைப்புத் திட்டத்தில் பணியாற்றிய இந்த 3 ஆயிரம் தொழிலாளர்களை வேறு வகையில் வருகிற திட்டங்களிலேயும் பயன்படுத்திக் கொள்வதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும், இவர்களுக்கு வாய்ப்புத் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். எதிர்நாட்களிலே இந்தத் தொழிலாளர்களை வேறு வகையான பணிகளில் பயன்படுத்துவதற்குரிய அவசியத்தை நம்முடைய முதல்வர் அவர்களின் கருணை மிக்க கவனத்திற்கு இந்த நேரத்தில் கொண்டு வருகிறேன்.

அதுபோல தேசிய நெடுஞ்சாலைகளைப் பாராமரிக்கிற தொழிலாளர்கள் 14,000 பேர் நிரந்தரமற்ற வகையில் இன்று நேற்று அல்ல, 20 ஆண்டுகள், 25 ஆண்டுகளாகப் பணிபுரிகிறவர்கள் கவனிப்பாரற்று இருக்கிறார்கள். 5-30 பி.ப. அவர்களை யார் கவனிப்பது? கழக அரசு ஒன்றுதான் கவனிக்க வேண்டும், கலைஞர்தான் கவனிக்க வேண்டும். முதலமைச்சர் நடவடிக்கை எடுத்து, இந்த 14,000 பேர்களுக்கும் நல்ல பரிகாரத்தைச் செய்துதர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல மேதகு ஆளுநர் அவர்கள் மத்திய அரசு ஊழியர்களுக்கும், மாநில அரசு ஊழியர்களுக்குமிடையே உள்ள ஊதிய முரண்பாட்டை நீக்க சீரமைப்பின் அவசியத்தை வலியுறுத்தி, அதற்காக மத்திய அரசு ஒரு மான்யத்தை வழங்க வேண்டும், ஊதியச் சீரமைப்பு மான்யம் வழங்க வேண்டுமென்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இது மிகவும் அவசரமானது, அவசியமானது என்பதை நான் கோடிட்டுக் காட்டுகிறேன். இப்போது அரசு ஊழியர்களை எப்படி இந்த அரசு அணுகுகிறது என்பதற்காக 2 சான்றுகள் நான் தெரிவித்தாக வேண்டுமென்று கருதுகிறேன். ஒரு தடவை மறைந்த முதல்வர் நம்முடைய பேறிஞர் அண்ணா அவர்கள் முதன்முதலில் அரசு ஊழியர்களிடத்தில் உரையாற்றுகிறபோது தெரிவித்தார்கள். நெஞ்சோடு நெஞ்சு பழகுவதுபோல், மனிதாபிமான உறவுகள் மலரத்தக்க வகையில், இந்த அரசு ஊழியர்களும், நிர்வாக அதிகாரிகளும் இருக்க வேண்டுமென்று வலியுறுத்தி, மிகத் தெளிவாக அந்த மனிதாபிமான முறையின் அவசியத்தைச் சொன்னார்கள். இரண்டாவது கட்டமாக, நம்முடைய தற்போதைய முதல்வர் அவர்கள் மிகவும் துணிச்சலாக, வேறு எவரும் அஞ்சிய, ஆங்கிலேயன் ஆண்ட காலம் முதல் அமுலில் இருந்துவந்த ரகசியப் பதிவேடு

முறையை, இது வேண்டாம் என்று இந்த அரசு ஊழியர்களுடைய நெடுநாள் கோரிக்கை தீருகிறவகையிலே, ஒரு நல்ல பரிகாரத்தைச் செய்திருக்கிறார்கள். இவைகள் எல்லாம் பாராட்டத்தக்கவை. ஒரு கட்டத்தில், இந்த மாநில அரசுக்கு நிதியே இல்லாதபோதுகூட, சிரமம் இருந்தபோதுகூட, 21 கோடி ரூபாய் அவர்களுக்குத் தர வேண்டுமென்ற, வாரித் தருகிற நல்லெண்ணம், நல்ல உள்ளம் அவருக்கு இருந்தது. அள்ளித் தந்தார்கள் என்றாலும் நம்முடைய அரசு ஊழியர்களைவிட மத்திய அரசு ஊழியர்கள் இன்னும் அதிகச் சலுகைகளை, இன்னும் அதிக ஊதியத்தைப் பெறுகிறார்கள். இதைத் தருவதற்கு இந்த அரசுக்கு மனம் இருந்தாலும், பணமில்லை. எனவேதான், மத்திய அரசு, இந்த அரசு ஊழியர்களுக்கிடையே இருக்கிற இந்த வேற்றுமையை, இந்த மாறுபாட்டைக் களையத்தக்க வகையில், இந்த மான்யத்தைக் கண்டிப்பாகத் தரவேண்டும் என்பது மட்டுமல்ல, உடனே தர வேண்டுமென்று கோடிட்டுக் காட்டிக்கொள்கிறேன். என்ன காரணம்? இரண்டாவது ஊதியக் குழு விரைவிலே வரவிருக்கிறது. எனவேதான், இது மிகவும் அவசியம் மட்டுமல்ல, அவசரமும், அவசியமும் வாய்ந்தது என்பதை நான் கோடிட்டுக் காட்டிக் கொள்கிறேன்.

வறுமை, வேலையின்மை இவைகளைச் சமாளித்து, சமூக ஏற்றத் தாழ்வுகளைப் போக்குவதை முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ளோம் என்று நமது மேதகு ஆளுநர் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தக் குறிக்கோளை அடைவதற்கு, இந்தியாவிலேயே வேறு எங்கும் இல்லாத அளவுக்கு, மாநில ரீதியில் அமலாகிற ஒரு திட்டக் குழு நம்முடைய மாநிலத்திலேதான் அமைந்திருக்கிறது. கிராமிய மக்களை ஆங்காங்கே இன்னும் முன்னேற்றுவதற்கு, சுதந்திரம் கிடைத்து 27 ஆண்டுகளுக்குப் பின்னாலும் கூட, வறுமையில், வாட்டத்தில், வேதனையில் இருக்கிற குக்கிராமங்களை முன்நிலையிலே வைத்து, அங்கே வாழ்கிற—இல்லாதவர்களை, ஏழைகளை, விவசாயிகளை முன்னாலே வைத்து, இந்த நோக்கிலிருந்து நாடு வளர நம்முடைய மாநிலக் குழு திட்டங்கள் தீட்டியிருக்கிறது. அதிலே ஒரு பரிந்துரையைத் தந்திருக்கிறார்கள். இதற்கு மத்திய அரசு நல்ல வழியினைச் செய்திட வேண்டுமென்று கோடிட்டுக் காட்டிக் கொள்வேன்.

மத்தியதர வர்க்கத் தொழில் முனைவர்கள் சம்பந்தமாக நமது தமிழக முதல்வர் அவர்கள், முதலமைச்சர்கள் மாநாட்டில், தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் ஒரு அரிய ஆலோசனை வழங்கியிருப்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். சேமித்து முதலீடு செய்வதற்கு ஊக்கம் அளிக்கிற வகையில், வரி விதிப்பு முறையை மாற்றியமைப்பதை ஆராய்வதற்கு வரி விசாரணைக் குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்பதுபற்றி அவர்கள் விளக்கியிருக்கிறார்கள்.

எல்லோருமே வேலை வாய்ப்புக்காக அரசாங்கத்தை எதிர்பார்த்திருப்பது நல்லதல்ல, உடனடி சாத்தியமும் அல்ல. எனவே, சேமித்து, தொழிலில் முதலீடு செய்ய மத்தியதர வர்க்கத் தொழில் முனைவர்கள் பலர் உருவாக வேண்டுமென்று இதை எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள் என்று மேதகு ஆளுநர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கருத்தை ஏற்பதன் மூலம் வரி ஏய்ப்பைத் தவிர்க்கவும், கறுப்புப் பண நடமாட்டத்தைத் தடுக்கவும் உதவும் நடவடிக்கையாக நம்முடைய முதல்வர் அவர்கள் அந்த அரிய ஆலோசனையைத் தந்திருக்கிறார்கள். இந்த ஆலோசனையைக்கூட தவறாகவும், திரித்துக் கூறவும் குறை சொல்பவர்கள் சிலர் இருக்கிறார்கள். நான் இந்தத் திட்டத்தைக் குறிப்பிடுகையில், ஒரு விஷயத்தை நினைவூட்டுவது அவசியம் என்று கருதுகிறேன். நம்முடைய மாநில அரசுதான், இந்தியப் பொருளாதாரத்திலே, சில ஆண்டுகளுக்கு முன்னால், கூட்டுத்துறை இருக்கலாம், தொழில் முதலீடுகளில் அரசும், தனியாரும் சேர்ந்து நடத்துகிற கூட்டுத் துறை இருக்கலாம் என்பதை அறிமுகம் செய்தது. அது இப்போது மத்தியிலும் வரவேற்கப்படுகிறது, வரவேற்பது மட்டுமல்ல, பல திட்டங்களுக்கு அது பயன் அளிக்கும் வகையிலே ஏற்பாடுகள் அமைந்துள்ளன. எனவேதான், இப்போது தெரிவித்துக்கொள்கிறேன். முதல்வர் அவர்கள் தெரிவித்திருக்கிற இந்த ஏற்பாட்டின்படி மத்தியதர வர்க்கத்தினர் சேமித்து வைத்திருக்கிற பணத்தையும் பயமின்றி, முதலீடு செய்து தொழில் வளர்வதற்கு அந்த வரி விதிப்புக் கொள்கைகளை நிச்சயமாக மாற்றியாக வேண்டும். ஆனால் இந்த வரிவிதிப்புக் கொள்கையைச் சொல்கிறபோது, ஒன்றைக் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. இப்போது 3 மாத காலமாக தமிழ் நாட்டு மக்கள் மத்தியில், கணக்கு, கணக்கு என்று சத்தம் கேட்கிறது. மக்கள் மத்தியில் ஒரு கணக்கைக் குறிப்பிட்டுக் கேட்கிறார்கள். வரி கொடுக்கிற மக்கள், ஏழை மக்கள், பாட்டாளி மக்கள் ஏதாவது சிறு வரி கட்ட வேண்டுமென்றாலும் கூட, கஷ்டப்பட்டு வரிகளைக் கட்டி வருகிறார்கள். இப்போது வரி கட்டாமல் இருக்கிறவர்கள் யாரென்றால், சில தனிப்பட்ட நபர்கள். அவர்கள் பல லட்சக் கணக்கில் வரிகளைப் பாக்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதையே புரட்சி என்று நினைக்கிறார்களோ என்னவோ, அவர்கள் தான் வரி கட்டாமல் இருக்கிறார்கள். அதைப் பார்த்துத்தான் இந்த நாட்டு மக்கள் கணக்கு, கணக்கு என்று பலர் கேட்கும் நிலைமைகளைப் பார்க்கிறோம். ஏராளமான வரிகளைக் கட்டாதவர்கள் எவ்வளவு பேர், எத்தனை லட்சம் ரூபாய் பாக்கி என்று அந்தப் பட்டியல் போட்டே காட்டுகிறார்கள். கம்பெனிகளில் பாக்கி இருப்பதுகூட அது ஒரு வியாபார கம்பெனி. சில தனிப்பட்ட நபர்கள் படங்களிலே நடிப்பவர்கள் லட்சம், லட்சமாக வாங்குபவர்கள், பல லட்ச ரூபாய் வரியைப் பாக்கி வைத்திருக்கிறார்கள். வருமான வரி இலாகா

வுக்கும், மத்திய அரசுக்கும் இன்னும் கட்டாமல் பாக்கி வைத்திருப்பவர்களை ஏன் விட்டு வைத்திருக்கிறார்கள்? இவர்களைத் தடுக்க முடியாததற்கு என்ன காரணம்? அவர்களுக்குப் பணம் கட்ட மனம் இல்லையா? அல்லது பணம் இல்லையா? இந்தக் கணக்கை மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புவது, வருமான வரியை ஏய்க்கும், தனிப்பட்ட நபர்கள், படத்துறையில் இருப்பவர்கள் பல லட்சக் கணக்கில் வரி பாக்கியை பல ஆண்டுகள் வைத்திருப்பதற்கு எப்படி சமாதானம் தரப் படுகிறது? எப்படி இந்த ஒரு நிலைமை இருக்கிறது? ஒரு சமதர்மப் பாதையில் வேகமாகப் போகிற இந்த அரசின் சார்பிலே இருக்கிற ஆளும் கட்சி உறுப்பினர் என்ற முறையில் மட்டுமல்ல, இந்த நாட்டிலே இருக்கிற பிரஜை என்ற வகையிலும், ஒவ்வொரு குடிமகனும் எண்ணுகிற நிலைமை இருக்கிறது என்பதை நான் கோடிட்டுக் காட்டிக்கொள்கிறேன்.

அடுத்து, பேருந்துப் போக்குவரத்தை நாட்டுடைமை ஆக்குகிற திட்டம். இந்தக் கழகம் தன்னுடைய தேர்தல் அறிக்கையிலே சொல்லியது போல், படிப்படியாகப் பேருந்துகளை நாட்டுடைமை ஆக்குகிற வகையில், முதல் கட்டமாக 75 மைலுக்கு மேலேயிருக்கிற வழித்தடங்களை நாட்டுடைமை ஆக்கியது. 10 பஸ்களுக்கு மேற்பட்டு எவரும் வைத்திருக்கக்கூடாது என்று சொல்லப் பட்டது. இரண்டாவது கட்டமாக 50 பஸ்களுக்கு மேற்பட்டு வைத்துக் கொள்ளக் கூடாது என்று அமுலாக்கினோம். கழக அரசின் நாட்டுடைமை யாக்கும் திட்டங்களை இந்த நாட்டு மக்கள் சென்ற ஆண்டு வரை வரவேற் றார்கள். ஆனால் இந்தத் தடவை பொங்கல் பரிசாக, நாட்டு மக்கள் மக்கள் மகிழ்ச்சி பெறத்தக்க வகையில், நல்ல திட் டத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்களும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் இந்த நாட்டிற்கு அறிவித்திருக்கிறார்கள். ஐந்தாண்டில் பேருந்து வழித்தடம் அத்தனையும் நாட்டுடைமை ஆகும் என்கிற போது, இதைவிட புரட்சிகரமான, முற்போக்கான சமதர்மத்தை நோக்கி, சமத்துவத்தை நோக்கி வேகமாகச் செல்லுகிற போக்கு வேறு எதுவும் இருக்க முடியாது. எனவேதான் இவைகளெல்லாம் வரவேற்கத்தக்க நல்ல திட்டங்கள் ஆகும். அது மாத்திரம் அல்ல, பஸ்கள் தேசியமயமாகும் என்று சொல்லுகிற போது, அடுத்த வரியிலேயே சொல்லியிருக்கிறார்கள். அங்கே பணியாற்றும் தொழிலாளர்களுக்கு நான் இருக்கப் பயமேன்? உங்களுக்கு வேலை வாய்ப்பு மாறாது, அதிலேயே பணி தருகிறோம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இதனை அங்கு பணியாற்றுகிற பாட்டாளிகள் பெரிதும் வரவேற்றிருக்கிறார்கள். இந்தத் திட்டம் உள்ளபடியே இந்த ஆண்டு பொங்கல் பரிசாக, இந்த அரசு முற்போக்கான திட்டங்களைச் செயலாற்றுகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது. எனவேதான் இந்த அரசின் பல்வேறு காரியங்களில்

குறிப்பிடத்தக்க முதல் கட்ட சாதனை என்று சொல்லத்தக்க வகையில், இந்தக் கொள்கை இருக்கிறது என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நம்முடைய மேதகு ஆளுநர் அவர்கள் இறுதியில் சொல்லியிருக்கிறார். இரண்டு விஷயங்களை மட்டும் நான் படித்து விடுகிறேன். மக்கள் ஆட்சியின் வளர்ச்சிப் பாதையில் அவ்வப்போது இன்னல்களும் இடுக்கண்களும் வரத் தான் செய்யும். அந்த இன்னல்களையும் இடுக்கண்களையும் களைந்து சீரான முன்னேற்றத்திற்கான வழியில் தம்மால் ஆன ஏற்பாட்டைச் செய்யவேண்டு மென்று தெரிவித்திருக்கிறார். அவர் தெரிவித்த அந்தக் கருத்து இந்தக் காலத்திற்கு உகந்தது, இந்த நேரத்திற்கு உகந்தது, இந்தச் சந்தர்ப்பத்திற்கு உகந்தது. மக்கள் ஆட்சிப் பாதையில் என்னென்ன இடுக்கண்கள் வரு கின்றன என்பதற்கு வேறு எங்கும் பார்க்க வேண்டாம். இந்த மூன்று மாதங்களில் நடந்தது சான்றாகும். மக்கள் ஆட்சியில் ஜனநாயகத்தை வளர்க்கும் வகையில் ஐந்தாண்டிற்கு ஒரு முறை தேர்தல் வரும்; எல்லோரும் ஓட்டு போடுவார்கள். பலம் பெறுகிற கட்சி ஆளுகிற பொறுப்பை ஏற்கும். இதுதான் நாட்டிலே இருக்கிற நடைமுறை, ஆனால் மூன்று மாதங்களில் ஆட்சி கவிழும், மூன்று நாட்களில் ஆட்சி கவிழும் என்ற வகையில் கல்லெறி, கலகம், குழப்பம் இவைகள் மூலம் ஒரு மாறுதலை ஏற்படுத்த, முயன்று பார்த்த ஜனநாயக மரபுகளுக்கு விரோதமான போக்கை அண்மையில் பார்த்தோம். எனவேதான் மேதகு ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற வகையில், இந்தச் சீரான முன்னேற்றத்தை உண்டாக்க, எவ்வளவு இடுக்கண் வந்தாலும், எவ்வளவு இன்னல் வந்தாலும், எதையும் தாங்கும் இதயத்தை—தைரியத்தை மறைந்த அண்ணா அவர்களிடத்திலே பெற்றுள்ள முதலமைச்சர் அவர்கள் வழி நடத்திச் செல்லுகிற நல்ல துணை இருக்கிறது. உண்டாக்க முடியும் என்ற நம்பிக்கையும் இருக்கிறது.

மேதகு ஆளுநர் அவர்கள் கடைசியில் இன்னும் ஒன்றைச் சொல்லியிருக் கிறார். தமிழ் நாட்டு சட்டமன்றம் மரபு காத்து, ஜனநாயக நேர்மை போற்றி நாட்டிலே நீதியுடன் நல்வளங் கொழிக்கச் செய்ய ஜனநாயக அமைப்புகளே ஏற்ற கருவியாகும் என்பதை மெய்ப்பிக்கும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை என்று கூறியிருக்கிறார். இப்படி அழகாகச் சொல்லியிருக்கும் போது, வெளியேயிருந்து இன்னொரு சத்தமும் வருகிறது. சட்டமன்றம் செத்து விட்டது என்கிற சத்தம் அது. நான் யாரைக் குறிப்பிட்டுச் சொல் கிறேன் என்பது தெரிந்த விஷயம். இப்படியும் சிலர் தமிழ்நாட்டில் இருப்ப தற்கு நான் மெத்த வருத்தப்பட்டாலும், இந்த அரசு தமிழ் நாட்டின் சட்ட மன்ற மரபுகளை, ஜனநாயகத்தை, நல்ல மக்கள் ஆட்சி தத்துவத்தை, கட்டிக்

காப்பாற்றும். இந்த அரசு முடிகிற அத்தனை சாதனைகளையும் சாதித்திருக்கிறது. நாட்டு மக்களைப் பராமரித்து வருகிறது. எத்தனை எதிர்ப்பு வந்தாலும் கூட, உறுதியாக இருக்கிறது என்பதையெல்லாம் தெரிவித்து, மேதகு ஆளுநர் உரைக்கு இந்தச் சட்டமன்றத்தின் அனைவருடைய நன்றியையும் காணிக்கையாக்கி, நன்றி தெரிவித்து, இந்தத் தீர்மானத்தை முன் மொழிந்து விடை பெறுகிறேன். வணக்கம்.

* THIRU M. RAJAH IYER : Hon'ble Deputy Chairman, Sir, I have great pleasure in offering a few remarks endorsing the motion for vote of thanks to the Governor so ably moved by the young and dynamic hon. Member who just preceded me. Sir, as I was listening to the speech of the Governor the other day, I did not know that it contained so much till it was actually so brilliantly paraphrased by the hon. the Mover of this resolution. I thought it was a short and sweet speech ever on record till we heard the Mover's Speech underlining most of the sentiments there, hardly leaving anything for others to follow up with. I thought it was a very short and sweet speech, highly realistic, but for that single sentiment about the formation of the Western Ghat Development Corporation, Sir, which to me appears as a counsel of perfection hardly attainable within the foreseeable future, that is, that the four Southern States could come together to equitably share the natural resources in water and power of the western ghats may remain a dream for a long time to come. It does not seem feasible of realisation quite early. We saw a great State formed over the blood of a martyr hoping that a language could unify the people, but who today have been so distraught. We see bloodshed there and we are afraid that the State may split over the blood of many. We see that language is not a unifying feature. Bangla Desh has proved that religion cannot be a unifying force either. In the mad world in which we live where could we look forward to for such forces of integration in the foreseeable future? It fills many hearts with dismay. Anyway, it is well to dream. It is well to have an objective before us. But we cannot forget the fact that we four States have lived together as brothers even though we spoke four different languages in the Madras State, in the Madras province of old, without any bickering, without any faction, without these feuds and bloodshed that we see today. We have lived as brothers. Have not the Punjabis lived together as brothers, Sir, the Sikhs and the Hindus there professing different religions, speaking two different languages? Have they not lived together as bold stalwart

champions of our country, of liberty and freedom? But, today, unfortunately, ugly forces are at large. So, much as I endorse almost all the sentiments that His Excellency the Governor has expressed, I am afraid, Sir, that this dream of a Western Ghat Development Corporation is going to be a counsel of perfection.

Secondly, Sir, I should refer to the concern which the Governor has expressed about the service conditions of our State employees. It greatly behoves us to evince that sympathy. It redounds to the sympathy of the Government that they should be keen that conditions of service and the scales of salary which the Government servants are getting today in our State, should not compare unfavourably with those that the Central Government servants get. That is only a laudable objective before us and I am very happy that the Governor has pinpointed this particular anomaly which is bound to be there if the Centre goes on increasing the emoluments of its servants however reasonably, however necessarily. Sir, in this connection, I just want to say one thing. While we are so full of solicitude about the servants who continue to serve us to-day, it looks as though we are apt to forget he lot of pensioners. I was extremely happy to find a leaderette in "The Hindu" this morning about the pitiable lot of the pensioners and the need to redress their grievances. The pension that they get is a meagre amount that got fixed up quite long ago at the time of their retirement. That that quantum of pension should remain unchanged for long is one of those inexplicable anomalies. In our pension scheme there must be a built-in formula according to which, as salaries of the Government servants go on getting revised, the pension amount also should be revised correspondingly. We must think of a foolproof formula. We must think of an objective formula. It must not depend upon the sympathy of the Government. It must not depend upon the sympathy of the employers. It is something which the employees must look forward to objectively. I must plead with the Government to see that the pensioners do not suffer any more with the meagre pension that they are getting all along in these days of high cost of living and in these days of social changes when the joint family as a unit has ceased to exist; when old men are thrown to the wolves, when these pensioners are thrown on their own resources, that the quantum of their pension should remain so meagre, is an injustice, that must be set right. In this particular context, Sir, I should draw

the pointed attention of the Government to the pitiable plight of the so-called teacher-pensioners as though the needs of the teacher pensioners should be quite different from the needs of the other pensioners. Whereas after 2nd October 1970 there is no distinction between a teacher -pensioner and a Government pensioner,
5-50 பி.ப. those who retired much earlier, earlier than 2nd October 1970 and 1st July 1962 who, fortunately or unfortunately, are still in our midst are getting but a pittance as pension. Just a couple of days back my own old teacher, nearly 80 years old—he is a teacher by name Parameswara Iyer who retired from the Periyakulam High School nearly 25 years ago—came tottering into my room to point out that the pitiable poor minimum pension that he got was just as much as what a lower grade teacher who retired from an elementary school got today. That that great teacher, an idealist who has shaped many parliamentarians—he could claim Mr. Mookiah Thevar to be an old student of his- who has put very many men on their feet and made men of the stuff he came across, should along with others get such a pittance of pension is something which is there in the scheme of pension which I am anxious to point out. So, may I on this occasion, Sir, plead with the Government to see that there is no distinction between the teacher-pensioner and the Government pensioner in the formula of pension that they get, whatever might be their date of retirement ? I quite agree that a pensioner who retired earlier than 2nd October 1970 cannot get as much as what the Government pensioner who retired after 2nd October 1970 gets. But, should not a teacher-pensioner get what the Government pensioner who retired prior to 2nd October 1970 gets? But, how many teacher-pensioners get what any other Government pensioner who retired prior to 2nd October 1970 gets ? Let there be a uniform formula and let all these distinctions between one set of pensioners and another set of pensioners go on humanitarian considerations which I am anxious to drive home to the Government today, Sir.

The Governor has mentioned so many things, but, unfortunately, there is a very grave omission. There is no mention about education at all. I find, Sir, there is a mention about the Task Force and the Report of the State Planning Commission that has been placed before the House and the public. I do not know how far it is correct. I have not seen any Report of the State Planning Commission and as such I do not know if it has

been placed before the State Legislature. But, it has indeed been placed in parts before the public. Certain small bits have leaked through in the columns of the dailies and if the Government have made up their mind about the recommendation of the Task Force on Education, without giving these two Houses of Legislature a chance to discuss and advise the Government, it would be extremely unfortunate. Before deciding whether it should be 10 plus 2 plus 3 year pattern or 11 plus 2 plus 2 year pattern—after all, it will be only 15 years on the whole—I do hope, Sir, that this House would be given an opportunity to discuss the recommendations of the Task Force and to make its recommendations thereon.

I congratulate the Government on their sympathy towards their servants. I am quite happy that the Government want to raise their material comforts, their service conditions and their scales of salary and put them at ease so that they may give of their best to serve the State. At the same time, we cannot be a party to any indiscipline. I was deeply humiliated, I was ashamed when I read in the papers that a fourth grade Nursing Orderly had the temerity to manhandle one of the greatest Doctors in South India, a senior Surgeon in the Erskine Hospital, under whom the hon. Members, Thiru Saw. Ganesan and Thiru S. Jayarama Reddiar have been patients, a doctor devoted to his duty. If he stated that a patient was all right and he should quit so that another waiting in the mile-long queue might take his place in that patient's bed, we must understand the doctor's strictness. He is a man famous for his great devotion to duty, in his service to the sick and the suffering. He has been treated like this at the hands of the nursing orderlies there. If they could have the courage to treat a senior Surgeon like that, how other lesser-placed folk are safe in the hands of the hospital orderlies, I wonder, Sir. Dismissing them from service is a very light punishment, considering the heinous nature of the crime done to such a great doctor. I am very happy that the conscience of civilisation, if I may say so, was stirred and that all people rose up against this affront to human dignity. When the fourth grade servants called for a metting, I was very happy to find that none of the fourth grade servants responded to the call and that these four nursing orderlies who were responsible for this unseemly act were left severely alone. I find that they have been dismissed from service. That is a very light punishment, con-

sidering the heinousness of the crime. I hope criminal action would be taken against them. I hope it would be seen that doctors who discharge their duties are at least guaranteed the safety of their person in the course of the high duty which they are performing. I would particularly appeal to the Government to see to it that there is discipline in the hospitals on which we are spending crores of rupees today.

Allied to this is the problem of druggists and chemists. I do not know what my hon. Friend Thiru G. Swaminathan would say. I, for one, should like to see that the exemptions granted to the servants in the Tamil Nadu Shops and Establishments Act do not apply to druggists and chemists. These shops must be kept open all the days of the week and all the hours of the day, if I may say so. After all, death and disease make no distinction between the hours of the day and the days of the week. On particular days, Sundays, life-saving drugs become necessary and if in a small place the only chemists and druggists' shop is closed. . . . .

THIRU G. SWAMINATHAN: MR. Deputy Chairman, Sir, just now I have represented to the Hon. Minister that the chemists and druggists may be allowed to have their shops open on all the days of the week and the Hon. Minister for Labour has also stated that he would do his best in the matter.

THIRU M. RAJAH IYER: Sir, I wish I had spoken to the hon. Member before and saved my breath over this issue. I hope it would be granted ere long.

Just a couple of things more, I wish to say, before I sit. I would like the Government to lay it down as a matter of policy that educational institutions should not be made grounds where hundi-boxes are sent round for collection. Not a month passes without some collection, some infliction, however noble the cause may be, being imposed upon the young children in schools. It may be for the Teachers' Welfare Fund, Flag Day, T.B. Seals or Red Cross Campaign, something, this or that. I could give a catalogue even. The months do not even go by their names in the calendar and we can call them by the names of the Welfare Fund that sends a hat round. There could not be many students who could make contributions to such funds. There are a very few students, fractional percentage of the students, who are affluent enough to save and contribute. So, the majority have

to go and worry their parents. This is something alien to the purposeful functioning of educational institutions. I am not speaking about teachers being involved in such lofty endeavours. But that must be done outside the campus of educational institutions.

Just one more thing. I feel it a very happy augury that the 6-00
Hon. the Minister for Revenue has just come in. I thought I பி.ப
must make this appeal to him. Ramanathapuram is an ancient place. That Revenue division has been a very famous division and it has been manned by I. C. S. Officers. Most of the Chief Secretaries to the Government of Tamil Nadu began their career or did their service in Ramanathapuram division. To mention a few, Thiruvalargal S. V. Ramamurthi, T. A. Varghese, S. K. Chettur and R. A. Gopalaswami were all our very esteemed Sub-Collectors. That has all along been a Sub-Collector's Division and in the new set-up, it was the I.A.S. Officer's Division. I now find that all of a sudden, it has been down-graded. Two divisions are considered not fit enough for that high honour to have an I.A.S. Officer.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அய்யர் அவர்கள் குறிப்பிடுவது இரண்டு டிவிஷன்கள் கொண்ட ஐ.ஏ.எஸ். டிவிஷனை ஆர்.டி.ஓ. டிவிஷனாக மாற்றியிருக்கிறோம் என்பது. அதில் இராமநாதபுரம் மாற்றப்பட்டிருக்கிறது. அந்தத் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திடம் இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இரண்டு டிவிஷனில் மாற்றியதன் நோக்கம் வேறு இரண்டு ஆர்.டி.ஓ. டிவிஷன்களை ஐ.ஏ.எஸ். ஆக மாற்றுவது. அப்படி வந்ததே தவிர, ஏதோ ஆர்.டி.ஓ. டிவிஷன் மீது தனிப்பட்ட கோபம் கிடையாது. ஐ.ஏ.எஸ். டிவிஷனாக இருக்க வேண்டுமென்று அந்தப் பகுதியில் இருக்கிற ஒரு சிலர் சொல்லுவதாகக் கேள்விப்பட்டேன். இன்று காலை கூட முதலமைச்சரிடத்தில் அதைப்பற்றிப் பேசி, அது வருகிறபொழுது அரசாங்கம் பரிசீலிக்குமென்று ஒரு கருத்தைச் சொன்னேன். பகுதி மக்கள் மீது கோபம் கொண்டு கருத்துத் தெரிவிக்கிறேன் என்று நினைப்பது சரியல்ல. ரொடேஷன் மூலமாக, ஐ.ஏ.எஸ்.ஸுக்கு இரண்டு டிவிஷனை மாற்றி வேறு இரண்டு ஐ.ஏ.எஸ். டிவிஷனை ஆர்.டி.ஓ. டிவிஷன் ஆக மாற்ற வேண்டும். வேறு பகுதிகளுக்கு ஐ.ஏ.எஸ். போட வேண்டும், அந்த வசதி இருக்க வேண்டுமென்று செய்யப்பட்டது. ஐ.ஏ.எஸ். ஆபீசராக இருந்தாலும், ஆர்.டி.ஓ. வாக இருந்தாலும் டிவிஷன், டிவிஷனாக இருக்கும். இதை அந்தப் பகுதி மக்களுக்குச் சொல்வோம். அந்தப் பகுதியிலிருக்கிறவர்களுக்குத் தெரியும், குறைத்து மதிப்பிடவில்லை என்று இந்த நேரத்தைப் பயன்படுத்தித் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

THIRU M. RAJAH IYER: Sir, I am extremely grateful to the Hon. the Minister for Revenue for the clarification. With these words, I have great pleasure in supporting the Motion of Thanks.

* **திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு:** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது எனது சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு கிடைத்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஆளுநர் அவர்களுடைய உரையில் தமிழ்நாட்டில் தற்போதுள்ள கவலைக்குரிய நிலவரங்கள்பற்றி ஏதும் குறிப்பிடவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். அவைகள்பற்றி இறுதியில் நான் கூறிக்கொள்ளுகிறேன். வறட்சியின் வடுக்கள் எல்லாம் மறைந்தன, சமீபத்தில் பெய்த பெரு மழையின் காரணமாக வறட்சி நீங்கி கஷ்டங்கள் எல்லாம் நீங்கி விட்டன என்ற நிலைமையில் ஆளுநர் அவர்களுடைய உரை காணப்படுகிறது. துரதிருஷ்ட வசமாக அந்த வறட்சி எங்கள் பகுதியில் கடந்த பல ஆண்டுகளைப் போலவே இந்த ஆண்டும் மூன்று ரெவின்யூ பிர்க்காக்களில் நீடித்து வருகிறது என்பதை வருத்தத்தோடு கூட மட்டும் அல்ல, வெட்கத்தோடு கூற விரும்புகிறேன். ஸ்ரீவில்லிபுத்தூர், மல்லி, சோழபுரம் இந்த மூன்று பிர்க்காக்களிலும் கடந்த நான்கு ஐந்து வருடங்களாக இதே நிலைமை நீடித்து வருகிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். கடந்த ஆண்டில் இந்த பிர்க்காக்களின் நிலைமை பற்றி எடுத்துக் கூறியபோது வருவாய்த் துறை அமைச்சர் அதை மறுத்தார். ரெவின்யூ போர்டு அதிகாரிகள் போய்ப் பார்த்த பிறகு நான் எடுத்துக் கூறியது உண்மை, அந்தப் பகுதியில் வறட்சி இருக்கிறது, அதற்கு இன்னின்ன அரசுச் சலுகைகள் அளிக்க முடியுமோ அவையெல்லாம் அளிக்க வேண்டும் என்று கூறியபின் அதற்கான உத்தரவும் அரசு இட்டது. அதே முறையில் இந்த ஆண்டும் சில அதிகாரிகளை அனுப்பி, இந்த மூன்று பிர்க்காக்களிலும் இன்றுள்ள நிலைமை என்ன என்பதை அரசு கேட்டறிவது நலம் என்று கருதுகிறேன். கூட்டுறவுத் துறை மூலம் கடன் சலுகைகள், கடன் வசூல் தள்ளிவைப்பு இப்படிப்பட்ட சலுகைகள் பெறுவதற்கு நிலைமைகளைக் கண்டறிந்து வறட்சிப் பகுதி என சான்று அளிக்க வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அவ்வாறு அந்தப் பகுதியில் வறட்சி நிவாரணம் அளிப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு, அதைக் கண்டறிவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், கடந்த காலங்களில் எடுக்கப்பட்ட வறட்சி, துயர் துடைப்புப் பணிகள் சம்பந்தப்பட்ட மட்டில், எவ்வளவு பலனளித்தது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். கவர்னருடைய

உரையில் அது காணப்படுகிறது. அந்தப் பகுதியில் எந்தக் காரணத்தைக் கொண்டாவது ஆரம்பிக்கப்பட்ட பணிகள் அந்தப் பகுதிக்கும், அந்தப் பகுதி மக்களுக்கும் எதிர்காலத்தில், நிரந்தரமாகப் பலனளிக்கக் கூடிய வகையில் அந்தத் தொகை செலவழிக்கப்பட வேண்டும். இதை அரசு இப்பொழுதே கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம். இதைப் பிரதம மந்திரி அவர்கள் கூட கடந்த சில தினங்களுக்கு முன் வற்புறுத்தி டில்லியில் பேசியிருப்பதாகப் பத்திரிகைகளில் பார்த்தேன். அவ்வப்பொழுது மட்டுமல்ல, எப்பொழுதுமே இத்தகைய பணிகளுக்காக அந்தப் பின் தங்கிய பகுதிகளிலே கஷ்டப்படும் மக்களுக்காகச் செலவிடப்படும் பணம், எந்தெந்த வகைக்காகச் செலவிட்டாலும், எதிர் காலத்தில் நிரந்தரமாக, அந்தப் பகுதிக்குப் பலனளிக்கக் கூடிய வகையில் செலவிடப்பட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். ரூ. 2 கோடித் திட்டம் என்ற பெயரால் சாலைகள் திருப்பு முனைகளில் எல்லாம் பெரிய விளம்பர போர்டுகள் வைத்து, இன்ன பணிகள் இவ்வளவு செலவு என்பது எழுதப்பட்டிருந்தது. இராமநாதபுரம் ஜில்லாவில் இப்படி நடந்தது, முடிக்க வேண்டிய வேலைகள் அரைகுறையாக விடப்பட்டன. அதன்பின் இப்பொழுது எங்கள் பகுதியில் அந்த போர்டுகளை கடந்த சில மாதங்களுக்கு முன் எடுத்து விட்டார்கள். 'மெடல்' கற்கள் அங்கே சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன. கிராவல் சேகரிக்கப்பட்டிருக்கிறது. எல்லாம் ரோட்டிற்குப் பக்கத்தில் குவிந்து கிடக்கின்றது. ஆனால், இன்னும் சில காலம் சென்ற பின் கிராவலும், மெட்டலும் கண்ணுக்குத் தெரியாமல் மண்ணிற்குள் மறைந்து விடுமென்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பணிகள் நிறைவேறாமலிருக்கின்றன. ரூ. 2 கோடித் திட்டம் என்ற பெயரால் ஆரம்பிக்கப்பட்ட பணிகள் இராமநாதபுரம் ஜில்லாவில், பல இடங்களில் இன்னமும் நிறைவேறாமலிருக்கின்றன என்பதை நான் . . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இராமநாதபுரம், தர்மபுரி மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருப்பவைகளென்று மத்திய சர்க்கார் ஒப்புக்கொண்டு, மாவட்டம் ஒன்றுக்கு 2 கோடி ரூபாய் ஒதுக்கி, துயர் துடைப்புப் பணிகளுக்கு அளித்துள்ளது. அதில், எந்தெந்தத் துறைக்கு எவ்வளவு செலவழிக்க வேண்டுமென்று மத்திய சர்க்கார் நிர்ணயம் செய்யச் சொன்னார்கள். ஆனால், இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், புதிய சாலைகளை அமைக்க எவ்வளவு பணம் ஒதுக்க வேண்டுமோ அதை விடக் கூடுதலாகச் செய்யப்பட வேண்டிய வேலைகள் இருக்கின்றன. தவறாகச் சொல்லவில்லை. செய்ய வேண்டிய வேலைகளாக இருந்தாலும், மத்திய சர்க்கார் ஒப்புக் கொள்ள முடியாத அளவுக்கு அதிகமான பணம் செலவழிக்கத் திட்டமிட்டு, வேலைகளைத் துவக்கி விட்டார்கள். ஆனால் மத்திய சர்க்கார் இங்கேயுள்ள சீப் செக்ரடரி தலைமையில் பரிசீலனை செய்கிறபொழுது, ஒப்புக்கொள்ளவில்லை,

அதிகமாகச் செலவு செய்கிறீர்களென்று சொல்லி விட்டார்கள். மாநில அரசு அதன் நிதியிலிருந்து ரூ. 5 லட்சம் சமீபத்தில் கொடுத்து சாலைகளைச் சீர்படுத்தியது. ஆனால், இன்னும் போதவில்லை என்ற குறிப்பும் தகவல்களும் வந்து கொண்டிருக்கின்றன. அங்கே இருப்பவர்கள், ஆர்வம் காரணமாக அதிகப் பாதைகளை ஏற்படுத்தி, நிதியில் நெருக்கடியை ஏற்படுத்தி விட்டார்கள். அரசாங்கத்தைக் குறை கூறுவது சரியல்ல. செய்த வேலைகளை அதிகாரிகளும், கலெக்டர்களும், மற்றவர்களும் ஆர்வம் காரணமாகச் செய்திருக்கிறார்கள். யாரையும் குறை சொல்லிப் பிரயோஜனமில்லை. எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் செய்யப்பட வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்க நிதி நிலைமையைப் பார்த்து, பணம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். மத்திய சர்க்காரின் 2 கோடி திட்டத்திற்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

* **திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு**: அமைச்சர் அவர்கள் கூறிய விளக்கம் மூலமாக சில விவரங்கள் தெரிந்து கொண்டேன். மாவட்ட கலெக்டர் அவர்களும், மாவட்டத்திலுள்ள பல்வேறு துறை அதிகாரிகளும் ஒவ்வொரு தாலுக்காவிலும் ஒரு மத்திய இடத்தில் கூடி எல்லா சட்டமன்ற அங்கத்தினர்கள், சட்டப் பேரவை அங்கத்தினர்கள், அதிகாரிகள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், அவ்வளவு பேரையும் வைத்துக் கொண்டு, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் பகுதியிலும் ஒவ்வொரு வேலையிலும் எவ்வளவு, என்னென்ன வேலையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று, ஒன்றிரண்டு முறை ஆற அமர்ந்து, பேசித் தான் அந்தத் திட்டத்தை அமைத்தார்கள். மொத்தம் எவ்வளவு பணம் கிடைக்கும், இந்த ஜில்லாவிற்கு, இன்ன டிவிஷனுக்கு என்று பார்த்து, சாலைக்கு இவ்வளவு, இதற்கு இவ்வளவு செலவு என்று கணக்கிட்டு, கொடுத்திருந்த திட்டங்களில் கூட பலவற்றைக் கைவிட்டுவிட்டு, அந்தத் தொகைக்கு சமமாக எவ்வளவு வேலைகள் நடைபெற முடியுமோ அவ்வளவு வேலைகளை மட்டும் ஏற்றுக்கொண்டு நிர்ணயிக்கப்பட்டதே தவிர, அதற்கு மேலே அன்றைய தினம் நிர்ணயம் செய்யப்படவில்லை. காரணம் எதுவாக இருந்தாலும், ஆரம்பிக்கப்பட்ட வேலைகளை நிறைவேற்றுவதில் சீக்கிரம் கவனம் செலுத்த வேண்டும். ஏதோ அரசு பெரிய திட்டத்தை, கிராமப் பகுதிகளில் நிறைவேற்றப் போகிறது என்று பெரிய விளம்பரமும், பல இடங்களில் அதற்கான ஏற்பாடுகளையும் செய்து விட்டு, அந்த வேலைகளைச் செய்ய முடியாத பொழுது, பொது மக்களுக்கு அதனால் ஏமாற்றமேற்படும். அது மட்டுமல்ல. செலவழிக்கப்பட்ட பணம் பயன் பெறாமல் போகக் கூடிய நிலையில் அந்தத் திட்டங்கள் இருக்கின்றன என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, விற்பனையாகத் தக்க உபரி தானிய இருப்பில் போதிய அளவு அரசாங்கக் கட்டுப்பாட்டில் விற்க வேண்டுமென்பது அரசாங்கத்தின்

நோக்கம் என்று ஆளுநர் அவர்கள் குறிப்பிடுவது பொருத்தம் தான். அரசாங்கக் கட்டுப்பாட்டில், இருப்பில் வைத்திருக்கக்கூடிய தானியங்களைக் கடந்த வருஷமும், அதற்கு முந்தைய ஆண்டுகளிலும் மில்காரர்களுக்கும், ஹோல்சேல் வியாபாரிகளுக்கும் அரிசியாக அரைத்துக் கொடுக்கவும் விநியோகம் செய்வதற்கும் கொடுத்த தானியம் அடைந்த கதி என்ன? எத்தனை ஹோல்சேல் வியாபாரிகள் நேராக வாங்கிக்கொண்டு போய் அரசுக்குக் கொடுக்காமல் இருந்தார்கள், கொடுத்த அளவு எவ்வளவு என்பவைகளைக் கண்காணிக்க முடியாமல் அரசு இருந்து கொண்டிருக்கின்றது. அப்படிப்பட்ட நிலைமைகள் மேலும் தோன்றுதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். ஏழை மக்களுக்கு அரசு உணவு தானியங்களைச் சேமித்து வைத்து, அவற்றை அரிசியாக மாற்றிக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்பொழுது, இடையில் வியாபாரிகள் அரசை ஏமாற்றுகின்ற வகையில், தாங்கள் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு மாறாக நடந்துகொண்டு, அதன் மீது தீவிரமான ஒரு நடவடிக்கையும் இல்லாத ஒரு நிலை ஏற்பட்டால், எதிர் காலத்தில் நிலைமை என்னாகும் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, தீவிரமாக நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லுவது சரியல்ல. அரசுக்கு 1967, 1968, 1969 ஆம் ஆண்டுகளிலே அரசினுடைய நெல்லை கை இருப்பு வைத்திருந்தவர்கள் அதற்கான பணத்தையோ அல்லது அரிசியையோ திருப்பிக் கொடுக்க 6–10
வில்லை. கொடுக்க வேண்டியவர்கள் அரிசியாகக் கொடுத்திருக்க வேண்டும். பி.ப.
உதாரணமாக, 64 சதம் நெல்லுக்கு 64 சதம் அரிசி கொடுக்க வேண்டுமென்று ஒரு ஒப்பந்தம் இருக்கிறது. ஆனால் 64% ஐக் குறைத்து 62% கொடுங்கள் என்று சொன்னோம். அதையும் கொடுக்காமல் சில இடங்களில் 30%, 40% என்று கொடுத்திருக்கிறார்கள். இவர்கள் மீதெல்லாம் கடுமையான நடவடிக்கை எடுத்தோம். திண்டுக்கல்லில் ஒரு வியாபாரியை அரசாங்கம் கைது செய்து, வழக்குப்போட்டு, தவணை முறையில் கொடுக்கிறேன் என்று எழுதிக் கொடுத்து, அவர் சொத்தை அடமானம் செய்த பிறகு, அரசாங்கம் அனுமதித்து, வியாபாரி தவணையில் கட்ட வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். மாநிலத்தில் இருக்கிற யாரையும் விடுவதாக இல்லை என்று உறுதியாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென்று இந்தத் துறையை நான் வகித்த பொழுது சொன்னேன். இப்பொழுது பொறுப்பு வகிக்கும் உணவு அமைச்சர் அவர்களும் அதே கொள்கையோடு இருக்கிறார்கள். யாராக இருந்தாலும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். யாராக இருந்தாலும், அரசுக்குத் தரப்பட வேண்டிய நெல்லையும், அதற்குண்டான பணத்தையும் தன்னுடைய

இல்லாமல் வசூல் செய்யும். நியாயத்தைப் பார்த்து, எந்த அளவுக்கு ஒப்புக் கொள்ள முடியுமோ, அதைச் செய்து, மிச்சத் தொகையை நிச்சயமாக வசூல் செய்ய வேண்டும். தயவு, தாட்சண்யம் இருக்காது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். இன்னும் சில நாட்களில் பலரைக் கைது செய்து விட்டார்களென்று புகார் வருமே தவிர, விட்டு விட்டார்களென்று வராது. நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்பதை மட்டும் தெரிவித்துககொள்ளுகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: அமைச்சர், அவர்கள் மீது நடவடிக்கைகளைத் தீவிரமாக எடுத்துக் கொள்ளுவதாகச் செய்திகள் எங்களுக்கு வருமென்பதைத் தெரிவித்ததற்காக மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆனால், சில வாரங்களுக்கு முன், கூட்டுறவுத் துறையில் பல சங்கங்கள் மீது நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுகிற தகவல்கள் இந்த மன்றத்தில் வைக்கப்பட்ட பொழுது, ஒரு சங்கத்தின் மீது, இதே காரணத்திற்காக எடுத்த நடவடிக்கை கைவிடப்பட்டிருப்பதாகக் கூட நான் பார்த்தேன். ஒரு கோவாபரேடிவ் சீனியர் இன்ஸ்பெக்டரும், மற்றும் ரெவின்யூ அதிகாரிகளும, ஒரு மில்லில் இருக்க வேண்டிய நெல்லை, பிளாக் மார்க்கெட்டில் விற்ற இடத்தில் கண்டு பிடிக்கப்பட்டு, அவர்கள் மீது எடுத்த நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருக்கின்றன. ஆகையினால், இத்தகைய நிலைமைகள் எதிர்காலத்தில் இருந்தால், அவர்கள் மீது மட்டும் அத்தகைய நடவடிக்கைகளை எடுத்து . . . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: எந்த ஊர் என்று சொல்லுங்கள்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: சொல்லுகிறேன். ஸ்ரீவில்லிபுத்தூரே தான். இதைப் போன்றே, இன்னும் சிலர் அரசாங்கம் கொடுத்த நெல்லை முற்றிலும் விற்று விட்டார்கள், பணமாக்கிக் கொண்டார்கள். பணம் செலுத்தப்படவுமில்லை. அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறபொழுது கூட நடவடிக்கைகள் காலதாமதமாகக் காரணம் என்னவென்று சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சொஸைடியா?

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ். நான் சொல்லித் தான் தெரியும் போலிருக்கிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, நான் சொல்லித் தான் தெரிய வேண்டுமா என்கிறார்கள். தமிழ் நாட்டில், நூற்றுக்கணக்கில் அரசாங்க ஏஜெண்டுகள் பணியாற்றுகிறார்கள். அவர்கள் தகவலுக்காக இங்கே சொல்லுகிறேன். சேலத்தைச் சேர்ந்த பிரபல வியாபாரி, அரசாங்க நிலத்தை எடுத்து விற்று விட்டு, சென்னையில் பங்களா கட்டிக்கொண்டு விளையாடிக்

கொண்டிருந்தார். சமீபத்தில் கைது செய்யப்பட்டு, கடைசியில் பார்த்தால், சொத்து இல்லை என்று சொல்லும் அளவுக்கு வந்திருக்கிறது. வழக்கு தீவிரமாக நடக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: இப்படியே பல இடங்களில் நடக்கும். நான் சொல்லித் தான் தெரிய வேண்டுமென்று சொல்லுவது சரியல்ல. ஸ்டோர்ஸ் என்று சொல்லுகிறார்கள். சென்டிரல் ஸ்டோர்ஸிலும் அங்கேயும் இங்கேயும் வைத்த நெல் எப்படிப் போயிற்றென்று எனக்குத் தெரியாது. ஒரு வேளை உணவு அமைச்சர் பரிசீலித்து நாளைய தினம் சொல்லுவாரென்று நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இது போல, தமிழ் நாட்டில் நடக்கும் விவகாரங்களைப்பற்றி அங்கத்தினர் மூலமாகவும், இலாகா மூலமாகவும் தகவல் தந்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்கிறோம். தகவல் சொல்லலாம்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: தலைவரவர்களே, கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் முன்னொரு கூட்டத்திலே எந்தெந்த சங்கங்களின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கைவிடப்பட்டன என்று கூறிய பட்டியலைப் பார்த்து நான் அதைக் குறிப்பிட்டதற்கு, 'நான் சொல்வதிலிருந்து தான் தெரிந்துகொள்ள முடிகிறதா' என்பதைத்தான் அப்படி நான் சொன்னேனே தவிர, பொதுவாக அரசை அம்மாதிரி நான் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது ஒரு கூட்டுறவுப் பண்டகசாலை. அது ஒரு நெல் அரைக்கக்கூடிய மில்லை வாடகைக்கு அமர்த்தியிருந்தது. அதிலே அரிசி அரைப்பதற்கு நெல் கொடுக்கப்பட்டது. அந்த நெல் போன விதத்தைத்தான் நான் சொன்னேன். அங்கு ஒரு சீனியர் இன்ஸ்பெக்டர் இருந்தார். அவர் எத்தனையோ சிபாரிசுகளுக்கெல்லாம் இடம் கொடுக்காமல் தீவிரமாக நடவடிக்கை எடுத்தார். கடைசி வரை நடவடிக்கை எடுத்தாக வேண்டுமென்ற நிலையிலே, அவர் அந்த 'இன்வெஸ்டிகேஷன்' எல்லாம் முடிக்கும் தருவாயில், வழக்கு போடும் தருவாயில், அவர் மாற்றப்பட்டு விட்டார். ஆகவே, அதற்குப் பிறகு என்ன நடந்தது என்று தெரியாது.

அடுத்தபடியாக, சில்லரை விற்பனைக் கடைகள். இனிமேல் ஏற்படக்கூடிய தமிழ் நாடு உணவுப் பொருள் வழங்கும் கழகம் என்ற போல், அது எதிர்
காலத்தில் செயல்படப் போகிறது என்பதைப்பற்றி ஆளுநர் குறிப்பிட்டுள் பி.ப. 6–20
ளார்கள். இம்மாதிரிப் பொதுக் காரியங்களுக்கு கழகங்களோ, இம்மாதிரி அமைப்புகளோ இன்றியமையாததுதான். ஏதேனும் ஒரு விதத்திலே ஒரு ஸ்தாபனத்தைக் கொண்டுதான் இதனைச் செய்ய முடியும். ஆனால் ஒரு கட்டுப்

பாடும், விநியோகமும் இன்று நடைமுறையில் வந்துவிடுகிற போதுதான், இத்தகைய தன்மைகள் எல்லாம் வருகின்றன என்பதை அரசு கவனத்திலே கொள்ள வேண்டும். சர்க்கரை விநியோகம் என்றும் இருக்கிறது. கண்ணுக்கு நமக்கு நன்றாகத் தெரிகிறது. எல்லா நகரங்களிலும் 'கியூ' வரிசையில் நின்று சர்க்கரை வாங்குகிறார்கள். பக்கத்திலேயே சாக்கும், பணமும் வைத்துக் கொண்டு, வாங்குகிறவர்களிடத்தில் கிலோவுக்கு இவ்வளவு என்று அதிகம் கொடுத்து, வாங்கி சாக்கில் கொட்டிக் கொள்கிறார்கள். இது யாருக்குத் தெரியாது? எல்லோருக்கும் தெரியும். பார்த்துக்கொண்டே இருக்கிறோம். அப்படி சர்க்கரை வாங்குகிறவர்களும், அவர்களுக்குக் கொடுக்கிறார்கள். அங்கே வாங்கிக் கொள்வதற்குக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்வேன். இப்படிப் புகார் பொதுவாகச் சொல்வதை விட்டு, அவர்களைப் போன்று இருப்பவர்கள் சர்க்கரையை இந்த ஊரில் விற்கிறார்கள் என்று சொன்னால், நிச்சயமாக நடவடிக்கை எடுத்து, யாருக்குச் சர்க்கரை கொடுக்கிறோமோ அவர்களுக்கு நிறுத்திவிட்டு, இன்னொரு ஸ்தாபனத்திற்குக் கொடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது. விற்கிறார்கள், விற்கிறார்கள் என்று சொல்வது சரியல்ல. இந்த ஊரில் விற்கிறார்கள் என்று சொல்லட்டும். அது கூட்டுறவு ஸ்தாபனமாக இருந்தால், அதை நிறுத்தி ஊராட்சி மன்றத்திற்குத் தரலாம். ஊராட்சி மன்றத்தில் அப்படிச் செய்வதாக இருந்தால், அதை உடனே நிறுத்தி வேறு ஒரு ஏற்பாட்டினைச் செய்யலாம். அப்படி நடந்ததாகச் சொல்கிறார்கள். நான் அவரைத் தவறாகச் சொல்லவில்லை. அவர் தவறாகச் சொல்ல மாட்டார்கள் என்று நம்புகிறேன். நடப்பதைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவரம் தெரியாமலிருந்தால், நடவடிக்கை எடுக்க முடியாமல் போய்விடும். விவரங்களைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: தலைவரவர்களே, விவரங்கள் தெரிந்து கொள்ள அமைச்சரவர்கள் விரும்பியதற்காக எனது நன்றி. என்றால் நம்ப முடியவில்லை. நான் சொல்லித்தான் ஊர் பெயர் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறதா? தமிழ் நாட்டிலே எங்கும் நடைபெறுவதில்லையா? யாரும் பார்த்ததேயில்லையா? தமிழ் நாட்டிலே ஒரு சில தினங்களுக்கு முன், பொறுப்புள்ள பத்திரிகையில் சர்க்கரை விநியோகத்தைப்பற்றி, 'க்யூ' வில் நின்று வாங்குவதைப் பற்றி எழுதப்பட்டிருந்தது. (உறுப்பினர் ஒருவர் குறுக்கிடு) ஸ்ரீவில்லிபுத்தூரில் நடந்ததைத்தான் சொல்கிறேன். நான் இருக்கிற ஊரில் நடந்ததைத்தான் சொல்கிறேன். எல்லா ஊர்களிலும் சர்க்கரை விநியோகம் இம்மாதிரிதான் நடந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, 'க்யூ'வில் நின்று சர்க்கரை வாங்குவதை நான் தவறாகக் கருதவில்லை. அது தான் முறை. 'க்யூ' வில் நின்று தான் வாங்க வேண்டும்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: 'க்யூ'வில் நின்று வாங்கக்கூடிய சர்க்கரையை அதே இடத்தில் ஹோட்டல்காரர்களுக்கோ அல்லது அதிக விலை கொடுத்து வாங்குகிறவர்களுக்கோ—அதாவது வாங்கிய விலையைவிட 8 அணா, 1 ரூபாய் அதிகம் வாங்கிக்கொண்டு விற்கிறார்கள்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற குற்றச்சாட்டு சர்க்கார் பேரில் இல்லை. பொது மக்கள் அதைச் செய்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஸ்ரீவில்லிபுத்தூர் பொது மக்கள் காசு கொடுத்து வாங்கியதைப்பற்றிச் சொல்கிறார்கள். சர்க்கார் விநியோகம்பற்றிச் சொல்லவில்லை. நாயுடு போன்ற வசதி படைத்தவர்களுக்கு வீட்டிலேயே கொண்டுபோய்க் கொடுத்து விடலாம். ஆனால் இல்லாதவர்களெல்லாம் மாலையிலே, ஒரே சமயத்திலே வந்து வாங்குகிறார்கள். அவர்கள் தங்களுடைய தேவை போக, மீதியை விற்கிறார்கள். பொது மக்களிடம் சென்று, அவர்களிடத்தில் தவறு செய்ய வேண்டாமென்று சொல்ல வேண்டியதை இங்கே பேசிப் பிரயோசனமில்லை.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, பொதுவாக ஸ்ரீவில்லிபுத்தூர் மக்களைப்பற்றி இப்படிக் குறை சொல்வதை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: தலைவரவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள எல்லா பொது மக்கள் மீதல்ல. "இது மாதிரி நடைபெறுகிறதென்று நான் சொன்னேன்" என்று இன்னொரு பக்கத்திலே என்னைப்பற்றி அவர்கள் பேசிக் கொள்வதற்கு இது ஒரு அனுகூலம். எனவே இதை அவர்கள் நம்பவில்லையென்று சொல்கிறார்கள். ஸ்ரீவில்லிபுத்தூரில் இருக்கக்கூடிய சாராயக் கடை பிரதானமான இடத்தில் இருக்கிறது. வேறு இடத்திற்கு அதை மாற்ற வேண்டுமென்று சொன்னால், கலெக்டரும், டி.ஆர்.ஓ.வும் அந்தக் கள்ளுக் கடை வைப்பதற்கு இன்னொரு கட்டிடத்தை வாடகைக்குப் பாருங்கள் என்று சொல்கிறார்கள். நான் கள்ளுக் கடைக்கு இடம் பார்க்க வேண்டும்; சாராயக் கடைக்கு இடம் பார்க்க வேண்டும். அதிகாரிகளுடைய பொறுப்புகளும், நடவடிக்கைகளும் எப்படி இருக்கின்றன என்பதை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதே போல அங்கே நடைபெறக்கூடிய நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கு நானே ஏற்பாடு செய்வதா? ஓரிரு தினங்கள் முன்பு

இன்ஸ்பெக்டர் மற்றும் போலீஸ் அதிகாரிகள் தலை காட்டி, இது சரியான முறையல்லவென்று எச்சரித்து அதைக் கண்டித்திருப்பார்களானால், அதைத் தவிர்ப்பதற்கான ஏற்பாடுகளை அவர்கள் செய்திருக்க முடியும்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது பொது மக்கள் செய்வதைப் பற்றித்தான். அவர்கள் வாங்கிய பொருளை அவர்களுக்கு வேண்டியவர்களுக்குக் கொடுக்கிறார்களோ அல்லது எப்படிக் கொடுக்கிறார்களோ. அதைப் போய் . . .

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: 'வேண்டியவர்' என்று மறைக்கவில்லை, விற்கிறார்கள்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனமாகப் பேச வேண்டும். 'நீ', 'நான்' என்று பேசக்கூடாது. அது அவருக்கு வழக்கம். இது பொது மக்கள் செய்கின்ற தவறு. இதற்கு எப்படி நடவடிக்கை எடுப்பது, எத்தனை மக்கள் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற நிலைமையை எல்லாம் உணர வேண்டும். எனவே மாண்புமிகு உறுப்பினர் தயவுசெய்து ஒரு முயற்சி எடுத்து, பொதுமக்கள் கூட்டம்போட்டு, விற்காதீர்கள் என்று சொல்லி, அதற்குப் பின் அவ்வாறு நடந்தால் கார்டை 'கேன்சல்' பண்ணலாம்.

* **திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு:** தலைவரவர்களே, அமைச்சரவர்களிடமிருந்து வேறு பதிலை எதிர்பார்க்க முடியாது. நான் இப்போது சொல்லத்தகாத வார்த்தைகளையோ அல்லது புண்படுத்தும் முறையிலோ, கண்ணியத்தைக் குறைக்கும் வகையிலோ ஒன்றும் பேசவில்லை. 'வழக்கம் போல்' என்று சொல்கிறார்கள். வழக்கமாக நான் அம்மாதிரிப் பேசுபவனல்ல. ஆகவே அமைச்சரவர்கள் அம்மாதிரி நினைக்க வேண்டாமென்று இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். நான் பேச வேண்டிய விஷயங்கள் அதிகமாக இருக்கின்றன. இம்மாதிரி வாதப் பிரதி வாதங்களில் நேரம் அதிகமாகிவிடுமோ என்ற பயமிருக்கிறது.

தமிழ் நாடு சிமிண்ட் 'ஓல் சேலில்' விற்கிறார்கள். ரயிலில் எந்த இடத்திற்கும் அனுப்பிவிடுகிறார்கள். அப்படிப் போக முடியாத இடங்களுக்கு, லாரியில் அனுப்புகிறார்கள். எந்த இடத்திலே 'ஓல் சேலர்' இருக்கிறாரோ, அங்கு தமிழ் நாடு சிமிண்ட் போக வேண்டும். அவர் வர வேண்டிய அவசியமே கிடையாது. ஆனால் அவர்கள் அங்கே வருகிறார்கள். இங்கேயிருந்து லாரியில் கொண்டுபோய் விடுகிறோம் என்று சொல்கிறார்கள். எங்களுக்கு ஏற்படும் அந்தச் செலவை பில்லில் கழித்தால் போதும், அதை ஒத்துக்கொண்டால் போதும் என்று கேட்கிறார்கள். அதை நம்பி அவர்கள் செய்கிறார்கள்.

சில தினங்களுக்கு முன் அந்தத் தமிழ் நாடு சிமிண்ட் பகுதியில் இருக்கிறவர்களும், ராஜபாளையம் பகுதியில் இருக்கிறவர்களும் சொன்னார்கள். வெகு தொலைவில் உள்ளவர்கள்கூட இங்கே வந்து லாரிகளில் சிமிண்ட் மூட்டைகளை, மொத்தக் கோட்டாவை எடுத்துக்கொள்கிறார்கள். மேலும் அவற்றை இங்கேயே பணமாக்கிக்கொண்டு போகிறார்கள் என்று சொல்கிறார்கள். அரசின்மீது ஏதோ குற்றம் கற்பிக்க வேண்டுமென்ற கருத்தோடு இதைப்பற்றி நான் சொல்லவில்லை. இதைப்பற்றியெல்லாம் நாம் அதிகம் கண்காணிக்க வேண்டும். இன்று 18 ரூபாய் வரை ஒரு மூட்டை சிமிண்ட் விற்கப்படுகிறதென்று சொல்லப்படுகிறது. ஆகவே இதுபற்றியெல்லாம் கவனம் செலுத்த வேண்டும். வினியோகம் சம்பந்தப்பட்டமட்டில் நாம் எவ்வளவு கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டியிருக்கிறது என்பதற்காக நான் குறிப்பிட்டேன். வேறொன்றுமில்லை. நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு வேளாண்மை உற்பத்தி அவசியம் என்பதை கவர்னர் அவர்கள் குறிப்பிட்டது மிகவும் பொருத்தமானது. உறுதியான பாசன வசதி அதற்கு இன்றியமையாதது. மற்றும் உரங்கள், மருந்துகள், வினியோகம் இவைகள் எல்லாம் நன்றாக இருக்க வேண்டுமென்பது அவசியம். உர வினியோகம் சம்பந்தப்பட்டமட்டிலே நடைபெறக்கூடிய குறைகளைக் களைய வேண்டும். இதுபற்றி சென்ற கூட்டத்திலே கூட தெரிவித்திருந்தேன். இது பற்றிப் பரவலாகப் பேசிக்கொண்டிருப்பதாக ஒருவர் வந்து என்னிடத்திலே சொன்னார்கள். செங்கற்பட்டு ஜில்லாவிலே உள்ள பஞ்சாயத்து யூனியனிலே, சென்னையிலிருந்து கொடுக்கப்பட்ட உர மூட்டைகள் அத்தனையும், அந்த யூனியனிலே உள்ள விவசாயிகளுக்கே கொடுக்காமல் ஒரே நாளில் வியாபாரிகளுக்கு விற்றுவிட்டார்கள் என்றும் 'அட பாவிகளே, இந்த மாதிரிச் செய்தீர்களே' என்று பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்றும் என்னிடத்திலே வந்து சொன்னார்கள். அது எவ்வளவு தூரம் உண்மையோ, அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்பதற்காகத்தான் இதை நான் சொல்லுகிறேன். பஞ்சாயத்துக்களாகட்டும், பஞ்சாயத்து யூனியன்கள் ஆகட்டும், வினியோகிப்பவர்களிடத்தில் ஆகட்டும், இது நடைமுறையிலே எப்படி நடக்கிறது என்பதைப்பற்றி அரசாங்கத்தின் முக்கிய கவனம் இருக்க வேண்டும். பொது மக்களும் இவைகளையெல்லாம் பார்த்து, அதிருப்தி அடைந்திருக்கிறார்கள். அவர்களுடைய மனதிலே கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

* **மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** நான் ஒன்று கேட்டுக்கொள் பி.ப. 6-30
கிறேன். உர வினியோகத்தைப்பற்றி உறுப்பினர் அவர்கள் சீர்கெட்டிருக்கிறதாகச் சொன்னார்கள். ஆனால் அதேசமயம் அதை எப்படிச் சீர்திருத்தலாம் என்பதைப்பற்றியும் அவர்கள் கருத்தைச் சொன்னால், எங்களுக்கெல்லாம் பயனுள்ளதாக இருக்கும்.

* திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: ஸ்ரீவில்லிபுத்தூர் மார்க்கெட்டிங் சொஸைட்டியிலே பூவானி என்ற ஒரு கடன் கூட்டுறவுச் சங்கத்திற்கு உரங்கள் யூரியா மூட்டைகள் சங்கத்தினுடைய லாரியிலே ஏற்றி அனுப்பப்பட்டன. அந்தச் சங்கத்தினுடைய காரியதரிசியே கூட இருந்துகொண்டு போனார். ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து 5, 6 மைல்களுக்குள்ளே இருந்த தன்னுடைய கிராமத்திற்குக் கொண்டு போய் கோடவுனிலே வைக்காமல் ஸ்ரீவில்லிபுத்தூரிலே தனியார் வீட்டிலே அந்த மூட்டைகளை இறக்கி வைத்தார். ஸ்ரீவில்லிபுத்தூரிலே விற்றுவிட்டது. மறுநாள் அந்தச் சங்கத்தின் மெம்பர்களுக்கு இன்னின்னாருக்கு எத்தனை எத்தனை மூட்டைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று புத்தகத்திலே பில் போட்டு அந்த உர மூட்டைகள் செலவழித்த மாதிரியிலே போடப்பட்டிருந்தது. அது கண்டுபிடிக்கப்பட்டது. அந்தக் காரியதரிசி ஜில்லா பாங்கினுடைய சூப்பரவைசர். அவரிடத்திலிருந்து வாக்குமூலமே வாங்கப்பட்டது. அவரும், "வாஸ்தவம்தான், என் புத்தியை கடன் கொடுத்து விட்டேன். பிரசிடென்ட் சொன்னார், அவர் சொன்னார், இவர் சொன்னார். ஸ்ரீவில்லிபுத்தூரில் இறக்கி வைத்து பிளாக் மார்க்கெட்டிலே விற்றுவிட்டேன்" என்று ஒப்புதல் கடிதமும் அவர் கொடுத்திருக்கிறார்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: ஸ்ரீவில்லிபுத்தூர் மார்க்கெட்டிங் சொஸைடி உங்களிடத்திலே தானே இருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: எங்களிடத்திலே இருக்கிறதோ என்னவோ. குற்றம் பூவானி பிரசிடென்ட்டும் செக்ரட்டரியும் செய்ததாகச் சொல்லுகிறார்கள். செக்ரட்டரி பாங்கினுடைய சிப்பந்தி என்று சொல்லுகிறார்கள். அவர்மீது நடவடிக்கை எடுப்பதற்கு இன்னும் பாங்கு தயங்குகிறது. கட்சித் தலையீட்டினால் தயங்குகிறது என்று பகிரங்கமாக இந்த இடத்திலே நான் சொல்லுகிறேன். தூண்டிவிட்டார்கள். நான் இதை இங்கே சொல்லுவதாக இல்லை. தனியே சொல்லலாம் என்றுகூட இருந்தேன். ஆனால் இந்த நிலை ஏற்பட்டுவிட்டது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: உர வினியோகத்தைச் செய்வது மார்க்கெட்டிங் சொஸைடி. அதைக் கொண்டு போவது கிராம நாணய சங்கத்துக்காரர்கள். நீங்கள் மார்க்கெட்டிங் சொஸைட்டிக்கு கொடுக்கும் போது உங்களுடைய சிப்பந்திகளைக் கூட அனுப்பி ஒழுங்காக விற்கும்படி நீங்கள் ஏன் பார்க்கவில்லை?

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: அமைச்சர் அவர்கள் இவ்வாறு கேட்பதற்கு நான் வருத்தப்படுகிறேன். மார்க்கெட்டிங் சொஸைட்டி ஒல்சேலர்கள் ஆகும். வினியோகிப்பவர்கள் கிராம விற்பனைச் சங்கம். அந்தக் கிராமத்தில் யார் யாருக்கு எத்தனை எத்தனை மூட்டைகள் வினியோகிக்க வேண்டும் என்று

அந்தந்த பஞ்சாயத்து யூனியன் கமிஷனரும் மற்றவர்களும் தீர்மானிக்கிறார்கள். இன்னின்ன சங்கத்திற்கு இத்தனை இத்தனை மூட்டைகள் கொடுங்கள் என்று தீர்மானித்து விடுவார்கள். அங்கே கொடுப்பது தவிர இவர்களுக்கு வேறு வேலை இல்லை. வினியோகம் செய்வது சங்கங்கள். அது அந்தச் சங்கத்தினுடைய பொறுப்பாகும்.

* மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இது அரசின் தீவிரமான ஆலோசனையிலிருக்கிற காரணத்தினால் இதைப்பற்றி நேரம் செலவாகிறது என்று எண்ணாமல் கொஞ்சம் தெளிவாகச் சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாயத்து மூலமாக உர வினியோகத்தை நிறுத்திவிட்டால், உங்கள் மார்க்கெட்டிங் சொஸைட்டியிலேயே வினியோகம் செய்ய ஏற்றுக்கொண்டு நடத்தினால், அது தவறு இல்லாமல் நடக்கும் என்பது உங்கள் கருத்தா?

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: மார்க்கெட்டிங் சொஸைடி சம்பந்தப்பட்ட மட்டிலே, எந்தெந்தப் பகுதிக்கு எவ்வளவு எவ்வளவு தேவை இருக்குமென்பதைக் கண்டு அனுப்பவும், சரிவர நிர்வகிக்கவும் முடியும். அதுபற்றிச் சந்தேகமேயில்லை. வினியோகம் செய்யும் இடத்திலேயே நன்றாகக் கண்காணிக்க வேண்டும். அந்தத் தவறு அங்கு நடந்தால், உடனடியாக டிபார்ட்மெண்டும், பாங்கு அதிகாரிகளும் அதைத் தடுப்பதற்கு எங்களுக்குத் துணை இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது. பின்னால் அங்கு மூட்டைகள் அனுப்பவில்லை. வேறு ஒரு காரியதரிசி அனுப்பியிருக்கிறேன், மறுபடியும் அங்கே மூட்டைகள் அனுப்புங்கள் என்று பாங்கியிலிருந்து கடிதம் வருகிறது. அதன்மீது நடவடிக்கை என்ன ஆயிற்றோ தெரியவில்லை. அது மட்டுமல்ல, அந்தச் சங்கத்தினுடைய செக்ரட்டரி எழுதிக் கொடுத்த கடிதம், ஒப்புதல் கடிதம் மிரட்டி வாங்கப்பட்டது என்று அவரைச் சொல்லும்படி செய்ய சிலர் முயற்சி செய்கிறார்கள். எங்கள் பக்கத்தில் டிப்பார்ட்மென்ட் ஆட்கள்; சி.எஸ்.ஆர். செக்ரட்டரி, சீனியர் இன்ஸ்பெக்டர்கள் இருவர். அஸிஸ்டெண்ட் செக்ரட்டரிகள் இவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்கள்தான் அங்கேயிருந்து மூட்டைகளை அனுப்பியவர்கள். இவர்கள் பாங்கு சிப்பந்தியான அந்த செக்ரட்டரியிடம் ஒப்புதல் கடிதம் வாங்கியதை மிரட்டி வாங்கியதாகச் சொல்லி ஒப்புக்கொள்ள மறுத்துவிடு என்று அந்த செக்ரட்டரியைத் தூண்டுவதற்கு வேறு சில சூப்பிரவைசர்கள், சூப்பிரவைசிங் யூனியன் மேனேஜர் ஆகியோர் ஒரு முயற்சி எடுத்து வருகிறார்கள். இவைகள் எல்லாம் ஏதோ குற்றத்தைச் சுமத்த வேண்டும். ஏதோ கவுரவத்தைக் குறைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு சொல்லவில்லை. இருக்கக்கூடிய நிலவரத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இது முக்கியமாக வரக்கூடியது. இதை எப்படிச் சீர்திருத்தலாம் என்று அரசு யோசனை செய்துகொண்டிருக்கிறது. மாண்புமிகு அங்கத்தினர் ஒரு மார்க்கெட்டிங் சொஸைடி வைத்திருக்

கிறார்கள். அவர்களுக்கு ஒரு 200, 300 டன் அனுப்பிவிடுகிறோம். அவர்கள் அதை கிராம நாணயச் சங்கத்தின் மூலமாக விநியோகிக்கிறார்கள். அதிலே ஏற்படுகிற தவறுக்கு மார்க்கெட்டிங் சொஸைட்டி தலைவர், நமது மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் தான் பொறுப்பு. அவர்கள் அதை ஒழுங்காக விநியோகிக்க வேண்டும். கிராமத்தில் தவறு எப்படி எப்போது நடக்கிறது என்று யாரும் சொல்ல முடியாது. உறுப்பினர் அவர்கள் அனுபவமுள்ளவர்கள். யாராவது கிராமத்திற்குப் போய்ப் பாருங்கள், தவறு நடப்பதில்லை. கிராமத்திற்கு 20 டன், 40 டன் உரம் அனுப்புகிறோம். அங்கே எல்லோரும் கூடிவிடுகிறார்கள். யாருக்கு எவ்வளவு கொடுக்கப்பட்டது என்று நன்றாகத் தெரியும். அங்கத்தினர் நடத்துகிற மார்க்கெட்டிங் சொஸைட்டி போல், தமிழகத்தில் 120 சொஸைட்டிகள் இருக்கின்றன. அவைகளிலே இந்தத் தவறு நடந்துகொண்டிருக்கிறது இப்போது. பல புகார்கள் என் கையிலே இருக்கின்றன. தாங்கள் நிர்வாகம் செய்கிற இந்த மார்க்கெட்டிங் சொஸைட்டி போன்ற சொஸைட்டிகளிலே தவறு நடப்பதாகவும் எனக்குத் தகவல் வருகிறது. நேராக மாவட்ட சங்கத்திலிருந்து, மாவட்ட ஸ்டோரிலிருந்து, நேராகக் கிராமத்திற்குப் போய் விடுமானால் அந்தக் கிராமத்திலே விநியோகம் செய்யும்போது எல்லோரும் கூடியிருப்பார்கள், தவறு நடக்காது என்று இப்போது சொல்லப்படுகிறது. மார்க்கெட்டிங் சொஸைட்டிதான் காரணம் என்று சொல்லுகிறார்கள். ஏறத்தாழ ஒரு லட்சம் ரூபாய்க்கு இதிலே பிளாக் மார்க்கெட் செய்து அதிக விலைக்கு விற்றார்கள் என்று கூடத் தகவல். இப்படி மார்க்கெட்டிங் சொஸைட்டி மேல் ஏராளமான குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. கிராமத்தில் என்ன மேல் ஏராளமான குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன. கிராமத்தில் என்ன என்று சொல்லுகிறார்கள்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்கிற மாதிரி மிரட்டுகிறார்கள் என்று நான் கருதுகிறேன். என்னை வேண்டுமென்றே மிரட்டுகிறார்கள். இந்த மிரட்டலை நான் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. பாங்கு அதிகாரிகள் அவர்களுடைய சிப்பந்திகள் மீது சரியான நடவடிக்கைகள் ஏன் எடுத்துக்கொள்ளவில்லை என்று கேட்கிறேன். பாங்கு செய்வது சரி என்று அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா? நான் அரசாங்கத்தைக் குற்றம் சொல்லவில்லையே. அந்தக் குறைகளைக் களைவதற்கான வழிவகை என்ன? அங்குள்ளவர் பாங்கு சிப்பந்தி என்கிற வகையிலே பாங்கு நிர்வாகம் ஒத்துழைக்கவில்லை. மார்க்கெட்டிங் சொஸைட்டிகள் லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள உரங்களைக் கையாடிவிட்டன. அப்படி இருக்கும்போது, அதை மாற்றிவிட்டு வேறு சங்கங்கள் மீது நீங்கள் குறை சொல்கிறீர்கள் என்றும் மார்க்கெட்டிங் சொஸைட்டிகளின் 'பேரிலேகூட பல்வேறு குறைகள்

இருப்பதாகவும் அதற்குத் தகவல் இருப்பதாகவும் அமைச்சரவர்கள் என்னை மறைமுகமாக மிரட்டுகிறார்கள் என்று அவருடைய வார்த்தைகளிலிருந்து அறிகிறேன்.

* மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : யாரையும் மிரட்டவில்லை. தவறு செய்ததாகச் சொல்லவும் விரும்பவில்லை. இதை எப்படிச் சீர்திருத்தி அமைப்பது? ஏறத்தாழ 40 கோடி ரூபாய்க்கு உர விநியோகம் நடக்கிறது. அதிலே ஏராளமாகத் தவறு நடக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். அதைச் சீர்திருத்துவது எப்படி என்று அனுபவம் வாய்ந்தவர்கள், உறுப்பினரைப் போன்றவர்கள் சொன்னால், மிகுந்த பயனுள்ளதாக இருக்கும். பாங்கு மூலமாக உர விநியோகம் செய்வதா? பாங்கு பணத்தைத் தொடுமே தவிர உரத்தைத் தொடாது. ஆகையால் பாங்கு மூலம் உர விநியோகம் செய்யலாமா? வேறு எப்படிச் செய்வது? எப்படி நடத்துவது என்பதை நன்றாக ஆலோசித்து யாருக்கும் பயனளிக்கக்கூடிய விதத்தில் திருத்த வேண்டிய அவசியம் இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். தாங்களும் அதற்கான நல்ல கருத்துக்களை அனுபவ ரீதியில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, உரத் தட்டுப்பாடு நாட்டில் இருக்கிற இந்த நேரத்தில் இருக்கிற உரத்தைப் பொது மக்களுக்கு விநியோகிப்பதில் அரசு அதிக அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைப்பற்றிச் சந்தேகப்படமாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். இப்போதிருக்கிற முறைப்படி ஆங்காங்கிருக்கிற ஊராட்சி ஒன்றியங்களிலோ, மன்றங்களிலோ வேலை செய்கிற கிராம சேவகர்கள் அல்லது விவசாய இலாகா அதிகாரிகள் கையெழுத்துப் போட்டு சர்டிபிகேட் கொடுத்தால் தான், உரம் கொடுக்கலாம் என்று விதி வகுத்திருக்கிறோம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் ஏதோ ஒரு சொஸைடி கொண்டு வந்து பி. ப.
இறக்கினார்கள். கிராம மக்களுக்குக் கிடைக்கவில்லை; கொடுத்து விட்டதாகப் 6-40
'பில்' போட்டு விட்டார்கள், அது அப்படியே போய் விட்டது, வழக்கு என்னு யிற்றோ என்று இப்போது சொல்கிறார்களே, இது ஒரு குற்றச்சாட்டு. உள்ளபடி இது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததாகத் தெரியவில்லை. நான் உரத் தொழில் சம்பந்தப்பட்ட ஃபுட் ப்ரொடக்ஷன் அமைச்சரைக் கேட்டேன், தெரியவில்லையென்று தெரிவிக்கிறார். நான் அவரிடம் தெரிவித்துக் கொள்வது, அப்படி எங்கேயாவது சொஸைடியில் தவறு நடந்திருக்கக் கூடும், அதற்காக கூட்டுறவு இலாகா செய்வதே தவறு என்று சொல்ல முடியாது. கூட்டுறவு இலாகாவில் பணியாற்றுகிற அத்தனை பேரும் தவறு செய்தவர்கள் என்று சொல்லிவிட முடியாது. அப்படி நடந்திருக்கிற இடத்தை அவர்கள் சொல்வார்களானால், விசாரித்து நடவடிக்கை எடுப்பதற்கு வசதியாக இருக்கும். அவர் ஒரு இடத்தைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அதை நிச்சயமாகப்

பரிசீலிக்கிறோம். இதில் ஒருவரையொருவர் மிரட்டுவதற்கோ அல்லது ஒருவருக்கொருவர் ஆத்திரப்படுவதற்கோ இல்லை. இருக்கிற பிரச்சினை, இருக்கிற உரத்தை வைத்து சீராக வினியோகிக்க வேண்டுமென்ற நல்ல நோக்கமே தவிர வேறு அல்ல.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: தலைவரவர்களே, ஜில்லா பாங்கு உர வினியோகத்தைச் செய்தது என்று நான் சொல்லவில்லையே, நான் சொல்லாத ஒன்றைச் சொன்னதாக வைத்துக்கொண்டு, பதில் அளிக்க அமைச்சரவர்கள் முன் வருவானேன் என்பதை உங்களுடைய இருதயங்களுக்கு விட்டு விடுகிறேன். என்னுடைய நேரம் போய்க்கொண்டிருக்கிறது. ஆகவே, இதைப் பற்றிய ஆலோசனைகளைச் சொல்வதென்றால் இன்னொன்று கூடச் சொல்லலாம். மற்ற ஜில்லா பாங்குகளிலே என்ன நடக்கிறதென்று எனக்குத் தெரியாது. மகாசபை கூடுகிறது, ஜில்லா பாங்குகளில் நிகழ்ச்சி நிரலில் உள்ளவாறு நிர்வாக அறிக்கை, வருடாந்திரத் தணிக்கை அறிக்கை வைக்கப்படுகிறது. அங்கு அதிகாரிகள், இன்னும் யாரேனும் அமைச்சர்கள் வருகிறார்கள். ஆரம்பத்திலே மாலைகள் போடுவது, அப்படியே அந்த நிர்வாகத்தைப்பற்றிப் புகழ்ந்து பேசுவது, இப்படி நேரம் போய்விடுகிறது. ஆனால் அறிக்கையைப் பற்றியோ, அல்லது அஜெண்டாவில் இருக்கிற மற்ற விஷயங்களைப்பற்றியோ பேச நேரமில்லை. எல்லோரும் கூட்டத்தோடு கூட்டமாக எழுந்து சென்று விடுகிறார்கள். அஜெண்டாவில் இருக்கிறவைகள் படிக்கப்பட்டன, நிறைவேற்றப்பட்டன என்று சொல்லிவிடுகிற நிலைமை, நேரமில்லாத காரணத்தினால் ஏற்படுகிறது. இப்படிப் போகிறது நேரம். கூட்டுறவு பாங்கியில், ஸ்தாபனங்களில் அதனுடைய வேலைகளை மகா சபையில் கவனிப்பதற்கு நேரமில்லாமல், இப்படி நிறைவேற்ற முடியாமல் போய்விடுகின்றது. இதைக் கவனத்தில் கொள்ளவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நீர் வளங்கள் சம்பந்தப்பட்ட மட்டில்—நம்முடைய மராமத்துத் துறை அமைச்சர் இங்கே இல்லை—எங்கள் ஸ்ரீவில்லிபுத்தூரிலே பிளவைக்கல் அணை வேலை நடைபெறுகிறது. அழகர்கோயில் அணை வேலைக்கு ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது. இந்த வேலைகளைத் துரிதப்படுத்த வேண்டும். பிளவைக்கல் அணை சம்பந்தப்பட்ட மட்டில், அந்தப் பகுதிகளைப் பார்த்து, ஒரு அணையாகவா, இரண்டு அணையாகவா, எந்தெந்த வாலிகளிலிருந்து தண்ணீர் வருகின்றன என்பதை ஆராய்வதற்கு அதிகாரிகள் சென்றபோது நானும் அந்த நேரங்களில் பல சந்தர்ப்பங்களில் சென்றிருக்கிறேன். சில தினங்களுக்கு முன் அப்பகுதி ஊருக்குச் சென்றேன். அங்கே மக்கள் சொன்னதைச் சொல்கிறேன். அங்கே வேலைகள் துரிதமாக நடைபெறவில்லையென்று மக்கள் அதிருப்தி தெரிவிக்கிறார்கள். அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகளுக்குச் சௌகரியமாக

VR11,32.N73 N73-10332

63079

இருப்பதற்காக வீடுகள், ஏற்ற வசதிகள், சுகாதார வசதிகள் எல்லாம் செய்து முடித்துக்கொண்டார்கள். அவர்களுடைய பிள்ளைகள் 13 பேர்கள் வத்திராயிருப்பு போய்ப் படிக்கச் சொல்வதற்கு தனியான பஸ் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மற்ற நேரங்களில் எல்லாரும் சினிமாவிற்கு வந்து பேசுகிறார்கள் என்றார்கள். அணை வேலை சீக்கிரமாக நடைபெறவில்லை என்று பொறுமையிழந்த காரணமாகவோ என்னவோ சொல்கிறார்கள். அந்த வேலை வேகமாக நடைபெறவில்லை. அந்த வேலைகளிலே கவனம் செலுத்த வேண்டும்.

நில வளங்களைப் பயன்படுத்துதல் சம்பந்தமாக கவர்னர் உரையில் கூறப்பட்டிருக்கிறது. டிராக்டர்களின் வாடகைகள் திடீரென்று உயர்த்தப்பட்டிருக்கின்றன. மணிக்கு 35 ரூபாய், 25 ரூபாய் என்று இருந்தது, இப்போது மணிக்கு 60 ரூபாய் அளவிற்கு உயர்ந்து விட்டது. இதனால் இதை உபயோகப் படுத்தக்கூடிய சாதாரண விவசாயிகள் கஷ்டப்படுவார்கள். இதை அரசு ஆலோ 6–50
சித்துப் பார்க்க வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள் பி. ப.
கிறேன். ஆறுகள், கால்வாய்கள் தண்ணீர் வரக்கூடிய இடங்களிலே எல்லாம் பெரிய சக்தி வாய்ந்தவர்கள் நிலங்களை ஆக்ரமித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களை நிலத்திலிருந்து வெளியேற்ற வேண்டும் என்று பல்லாண்டுக் காலமாக சிறு விவசாயிகள் பலரும் ரெவின்யூ அதிகாரிகளுக்குத் தெரிவித்து வந்திருக்கிறார்கள். ஆக்கிரமிப்பு இருக்கிறதென்று அவர்களுக்குத் தெரியும். ஆக்கிரமிப்புகளை அகற்றுவதில் அவர்கள் தைரியமாக நடந்துகொள்ள முடியவில்லை. இதில் இருக்கக்கூடிய சிக்கல்கள் என்னவென்று எனக்குப் புரியவில்லை. இது பொதுவாக இருக்கிற நிலவரம். இதைச் செய்தாலொழிய சரிவரத் தண்ணீர் வராது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, பிரச்சினையைக் கிளப்பியதற்காக அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆற்றுக் கால்வாய் ஓரங்களிலும், மேட்டூர் அணையின் கண்டூர் பகுதிக்குள்ளும், மற்ற வாய்க்கால் ஓரங்களிலும், நீர்ப் பிடிப்பு இருக்கிற இடங்களிலும் தமிழ் நாட்டில் நிறைய ஆக்கிரமிப்பு இருக்கிறது. இது பல ஆண்டுகளாக இருக்கிறது என்ற உரிமையைக் கொண்டாடிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் மூன்றால் ஒத்துக்கொள்கிறேன். இவைகளை அப்புறப்படுத்துவதில் தைரியம் வேண்டுமென்று சொல்கிறார்கள். . எனக்கு வேண்டியது தைரியமல்ல. அது தேவையில்லை. அது நிரம்ப இருக்கிறது. எனக்கு வேண்டியது ஒன்றே ஒன்று. சர்வ கட்சியின் ஒத்துழைப்பு இருக்குமானால், அதைச் செய்யலாம். அரசு தலையிட்டு ஆக்கிரமிப்பை அகற்றும்போது, அரசியல் வராமல் இருக்குமானால், அரசாங்கத்திற்குச் சங்கடமில்லை. ஆனால் அரசியல் வந்துவிடுகிறது. அது தான் ஆபத்தாக இருக்கிறது. அரசியல் வந்து விடுமோ என்ற அச்சத்தின்

காரணமாக, கொஞ்சம் கொஞ்சமாக எடுக்க வேண்டியிருக்கிறது. எல்லாக் கட்சியினரும் ஒத்துக்கொள்கிறார்கள். அப்படி எல்லாக் கட்சியினரும் ஒத்துழைப்பார்களானால், கொஞ்சங்கூட சலுகை காட்ட முடியாது, அரசியல் தலையிட முடியாது, எந்தக் கட்சியினராக இருந்தாலும், அப்புறப்படுத்தித்தான் தீர வேண்டுமென்று நாம் முடிவிற்கு வந்துவிட்டால், நமக்குச் சங்கடம் கிடையாது. அப்புறப்படுத்திவிடலாம்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: தலைவரவர்களே, ஒன்றை விண்ணப்பித்துக் கொள்கிறேன். நான் பேச வேண்டிய நேரத்தில் பாதி நேரத்தை அவர்கள் எடுத்துக்கொண்டார்கள்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர்: தகவல் கொடுக்கப்படுவதால் உங்கள் பாரம் குறைந்து போய்விட்டது அல்லவா.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: தலைவரவர்களே, இன்னும் பாக்கியிருக்கிறது. நாளைக்கு 10, 15 நிமிஷம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆக்கிரமிப்புகளை அகற்றும் விஷயத்தில், நான் அறிந்த வரையில், அரசியல் கட்சியினர் தலையிடுவதாக எங்கள் பக்கத்தில் இல்லை. ஒரு சில கேஸ்களிலே ஆக்கிரமிப்புகளை அகற்றுவதில் ஆளும் கட்சியினர் தலையிட்டார்கள் என்ற காரணத்தினால், அகற்றுவதற்கு ரெவின்யூ அதிகாரிகள் தயங்கினார்கள் என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அங்கத்தினர் அவர்கள் தவறான தகவலை தயவு செய்து சொல்ல வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். இது பல ஆண்டுகளாக இருக்கிறதென்று சற்று நேரத்திற்கு முன்பு தான் சொன்னார்கள். ஆளும் கட்சியாக நாங்கள் வந்திருப்பது 1967-க்குப் பிறகுதான். ஆகவே இப்போது ஒன்றும் ஆக்கிரமிப்பு இல்லை. ஏற்கெனவே இருந்த அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் தான் இருந்தார்கள் என்று சொல்வது எனக்கும் சுலபம். நான் உதாரணத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மேட்டூர் பகுதியில் இருக்கிற கண்டூர் பகுதி நீர்ப்பிடிப்பிற்குள்ளே நிலத்தை உழுதுகொண்டிருக்கிறார்கள். தகவல் வேண்டுமானால் சொல்கிறேன். ஏறக்குறைய 4 ஆயிரம் ஏக்கர்களுக்கு மேல் உழுகிறார்கள். இதை எப்படி அப்புறப்படுத்துவதென்று அரசாங்கத்திற்குப் புரியவில்லை. கேட்டால், 10, 20 வருஷமாக இருக்கிறோம் என்று அந்தப் பகுதி சட்ட மன்ற உறுப்பினரே—அவர் இன்னொரு அரசியல் கட்சியிலே இருக்கிறார்—வாதிட்டுக்கொண்டிருக்கிறார். அவர் இந்தப் போராட்டத்திற்குத் தலைமை வகிக்கத் தயாராக இருக்கிறார். அவர் உண்ணாவிரதம் கூட இருந்தார். அதனால் நான் சொன்

னேன், அரசியல் இதிலே கூடாது. அப்புறப்படுத்துவதில் அரசியல் இல்லையென்றால், சீக்கிரத்தில் செய்துவிடலாம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: ஆகவே இந்த சந்தர்ப்பத்தில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நிலத்தடி நீர் கண்டு அறியப்படுவதற்கான ஏற்பாடுகள் இருக்கின்றன. ஒரு விவசாயி கிணற்றை வெட்டுவதற்கு 15, 16 ஆயிரம் ரூபாய் செலவழிப்பதற்கு முன்னால் சோதனைக் குழாய்கள் மூலமாக சீக்கிரமாக ஒரு 100 அடி, 150 அடி அந்தச் சோதனைக் குழாய் போட்டு தண்ணீர் இருக்கிறதா, இல்லையா என்ற விவரங்களைத் தெரிந்து கொள்வதற்கு பல இடங்களிலும் இதற்கான கருவிகளோ, வசதிகளோ இல்லை. பல இடங்களிலும் இதற்கான வசதிகளை ஏற்படுத்துவது மிகவும் அவசியம் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நீர் வளம், இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதற்காக மண்டல அளவில் அதற்கென கழகம் ஒன்று, மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுக் கழகம் அமைக்கும் யோசனை ஆளுநர் உரையில் இருக்கிறது. இது நல்ல முயற்சி தான். ஆனால் கழகங்கள், வாரியங்கள், குழுக்கள் என்று நாம் அமைத்துக் கொண்டே போனாலும், அதன் மூலம் சரியான பலன் சீக்கிரமாகப் பெற முடியாத நிலைமையில் போய்க் கொண்டிருப்பதில் பிரயோசனமில்லை. மைசூர், தமிழ் நாடு, கேரளம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இருக்கக்கூடிய மலை வளங்கள், பாரஸ்டுகள் இவைகளைப் பயன்படுத்துவதற்கு இத்தகைய கழகம் ஒன்று அமைக்கப்படும்போது, தமிழ் நாடு சம்பந்தப்பட்ட மட்டில், இவைகள் வெகுவாகக் கட்டுப்பாடில்லாமல், பாதுகாப்பில்லாமல் அழிந்து கொண்டு போவதைத் தடுத்து இயற்கை வளத்தை மேலும் வளப்படுத்துவதற்கு அரசு தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மின்சாரப் பற்றாக்குறை சம்பந்தப்பட்ட மட்டில், பத்திரிகைகளில் பல விவரங்கள் எல்லாம் வந்தன. சேதாரம் பதினேழா, முப்பதா, முப்பத்தைந்தா, நாற்பதா, நாற்பத்தைந்தா என்று தெரியவில்லை. இப்படிப் பலவிதமாகப் பேசப்படுகிறது.

தமிழ் நாட்டில் தென்னிந்திய வர்த்தக சபைக் கூட்டத்தில், அதனுடைய தலைவர் பேசியபோது, இப்போது மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதற்குக் காரணமில்லை, 45% வரை சேதாரம் இருக்கிறது, அதிலே திருடும் போகிறது, இதைக் கண்டுபிடித்து ஆராய வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார். ஆகவே இதில் ரொம்ப ஆராய வேண்டும். மின்சாரம் 17% தான்

சேதாரம் என்று நம்முடைய தமிழ் நாடு மின்சார வாரிய அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள். எவ்வளவு வெளியே போகிறது என்று அவர்கள் சொல்லவில்லை. 'டிரான்ஸ்பார்மர்' போன்ற நல்ல சாதனங்கள் இருப்பதால் ஹைடென்ஷன் உபயோகிப்பாளர்களுக்கு விசை நஷ்டம் சொற்பமே ஏற்படுகிறது என்றார் அவர். சேதாரம் என்ற வகையிலே, எவ்வளவு வெளியே போகிறது, எவ்வளவு திருடு போகிறது என்பதையெல்லாம் நன்கு கண்காணிக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன். நமக்கு மின்சார உற்பத்தி அதிகரித்திருக்கிறது. அதுபோல், செலவும் ஒரு யூனிட்டுக்கு எவ்வளவு அதிகமாகிறது என்று சொல்வதற்கும், ஏதாவது ஒரு காரணம் சொல்கிறார்கள். தென்னிந்திய வர்த்தக சபைத் தலைவர் மின்சார வாரிய ஊழியர்களில் வேலையே இல்லாமல் 16 ஆயிரம் பேர் இருக்கிறார்கள் என்று சொன்னார். 30 ஆயிரம் பேரில் 1/5 பகுதி, அதாவது 20 சதவிகிதம் பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்கிறார். 30 சதவிகிதம், அதாவது 24,000 பேருக்கு நாள் 1-க்கு 2 மணி நேரத்துக்கு மேல் வேலையில்லை என்கிறார். இவ்வளவு பேர் வேலை செய்யாத ஊழியர்கள் இருக்கிறார்களா என்பதையும் ஆலோசித்துப் பார்க்கவேண்டும். அவர்களுக்கு வேலை இருக்கிறதா என்பதைக் கண்டறிந்து வேலை கொடுக்க முன்வர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். நெய்வேலியில் பல்வேறு காரணத்தால் உற்பத்தி குறைந்திருக்கிறது என்கிறார் ஆளுநர். நான் ரயிலில் போகும் போது, ஒரு என்ஜினியரைச் சந்தித்தேன். அவர் என்னிடம் சொன்னார், "தொழிலாளர்களுக்கு பல்வேறு கஷ்டங்கள் இருக்கலாம். இருந்தாலும்கூட, அவர்கள் நிர்வாகிகளிடத்தில் மரியாதையாக நடந்து கொள்வதில்லை. அவர்களுடைய பயமுறுத்தலும் இருக்கிறது. அவர்கள் மத்தியிலே இது வளர்ந்திருக்கிறது. எங்களுடைய வார்த்தையைச் சட்டை செய்ய யாருமில்லை, ஒழுங்காக வேலையும் செய்வதில்லை. அதிக நேரம் வேலை செய்ததாக, அதைப் பதிந்து கொள்ள வேண்டுமென்று கேட்கிறார்கள். கேட்டுக்கொண்டுதான் இருக்கிறோம். கேட்காவிட்டால் கேரோ செய்கிறார்கள். நாங்கள் குடும்பத்தோடு அங்கே இருக்கிறோம். நாங்கள் என்ன செய்வது?" என்று அவர் பரிதாபமாக என்னிடத்திலே கூறினார். ஆகையினாலே தொழில் அமைச்சர் அவர்களும், அரசும் இதிலே கவனம் செலுத்த வேண்டும். அங்கே தி.மு.க. சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் பெரும்பான்மையாக இருப்பதாகவும், அவர்களுடைய செல்வாக்கும், ஆதிக்கமும் வளர்வதற்காகவே அங்கே அப்படி நடைபெறுவதாக நான் கேள்விப்படுகிறேன். அந்த உண்மையை எடுத்துச்சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் இங்கே ஒரு தவறான தகவலைத் தந்திருக்கிறார். தி.மு. கழகத் தொழிலாளர்களின் மீது பழியைப் போடுவது நல்லதல்ல என்று அவருக்குச் சொல்லிக் கொள்கிறேன். எந்தத் தொழிலாளர்கள் மீதும் குற்றம் சாட்டுவது சரியாக

இருக்க முடியாது. இது பத்திரிகையில் வெளியே வந்தால், அவருக்கேகூட நன்றாக இருக்காது. தொழிலாளர்கள், அவருடைய கட்சியைச் சார்ந்தவர்கள் கூட அவரைப்பற்றித் தவறாகக் கருதுவார்கள். அப்படிப் பேசுவது முறையல்ல. நெய்வேலியில் உற்பத்தி குறைந்திருப்பதற்கு தொழிலாளர்கள் காரணம் அல்ல. 'எக்ஸ்கவேடர்' சரியாக இல்லை. 'எக்ஸ்கவேடர்' வெட்டுகின்ற கருவிகள் 'ஸாப்ட் ஸாயிலை' வெட்டினால் தான் பயனிருக்கும். ஆனால் 'ஹார்டு ராக்'கை வெட்டுவதாக இல்லை. அங்கே 'மானேஜிங் டைரக்டர்' என்னிடம் தெரிவித்ததைத்தான் நான் அறிந்து சொல்கிறேன். வெட்டினால் சரிவரப் பலன் தருவதாக இல்லை. அதை மாற்றினாலொழிய அங்கே உற்பத்தி பெருகுவதற்கு வழியில்லை. ஆனால் தொழிலாளர்கள் மீது பழியைப் போட வேண்டாம். தி.மு.க. தொழிலாளர்கள் அங்கே பெரும்பான்மையாக இருப்பது உண்மைதான். அதனாலேயே அவர்கள் மீது பழிபோட வேண்டாம். இப்படி ஓவர்டைம் இருப்பதாக ஒரு அதிகாரி சொன்னதுபோல, ஒரு நிலைமை அங்கே கிடையாது. யாரோ அதிகாரி தவறுதலாகச் சொல்லியிருக்கிறார். அப்படி ஒரு அதிகாரி சொன்னால், அதற்கான ஏற்பாடு செய்யப்படும் என்றும் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: உண்மை தான் நான் சொன்னேன். அரசு தான் இதைக் கவனித்து ஆவன செய்ய வேண்டும். ஆளுநர் உரையில் பஞ்சாலைகள் லாபகரமாக வேலை செய்கின்றன என்று கூறியதுபற்றிச் சந்தோஷம்தான். லாபகரமாக வேலை செய்வதென்றால், நாம் ஆலை நிர்வாகத்தை எடுத்துக்கொள்ளும்போது, அரசு எவ்வளவு பணம் அதில் முதலீடு செய்திருக்கிறார்களோ, அந்தப் பணத்தை மட்டும் ஆலையின் முதலீடாக வைத்துக் கொண்டு நிகரம் கிடைப்பதைத்தான், லாபம் என்று சொல்கிறோம். ஆகையினாலே, அந்த ஆலையின் அமைப்புக்கு வரவுசெலவுக்கு எவ்வளவு மொத்தம் முதலீடு செய்யப்படுகிறதோ அதற்குத்தான் லாபக் கணக்கைப் பார்க்க வேண்டும். அதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு பார்த்தால், லாபமாக வர வேண்டுமென்றுதான் நாம் விரும்புகிறோம். இன்றைன்று. நூல் விலை ஏறுகிறது. ஆனால் பஞ்சு பருத்தி விலை ஏறவில்லை என்றால், இதற்கு என்ன காரணம்? இதைக் கண்டுபிடிக்க முடியாதா? 7 கூட்டுறவு ஆலைகள் தமிழ் நாட்டில் இருக்கின்றன. இவை நெசவாளர்களின் நலனுக்காகவே நிறுவப் பட்டன. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் இதில் பெருமளவில் முதலீடு செய்தன. நெசவாளர்களுக்கு இந்தக் கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்து நூலைக் குறைந்த விலைக்குக் கொடுக்க முடியாதா? அப்படிச் செய்தால்தான் அவர்களுக்கு இது பரிகாரமாகும். விலையை நம் சர்க்காரே நிர்ணயிக்க வேண்டுமென்று நான் நினைக்கிறேன். அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய நூல்களைக் குறைந்த விலையில் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்கு மத்திய

அரசு பொறுப்பு என்று சொல்ல முடியாது. எல்லாக் கூட்டுறவு நெசவாலை சேர்மென்கள், மானேஜிங் டைரக்டர்கள், ஹாண்ட்லூம் டைரக்டர்கள் இத்தனை பேரும் சேர்ந்து மாதம் ஒரு முறை இந்த நூலுக்கு இந்த விலை என்று நிர்ணயம் செய்கிறார்கள். அதைக் குறைந்த விலைக்கு நெசவாளர்களுக்குக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய முடியும். இது ஏன் முடியவில்லை என்று எனக்குத் தெரியவில்லை. நம்முடைய நெசவாளர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுடைய தொழிலில் அவர்கள் முன்னேற முடியவில்லை. அவர்கள் மற்ற ஆலைத் தொழில்களோடு போட்டிபோட வேண்டியிருக்கிறது. இதை முடிவுக்குக் கொண்டுவந்து, அவர்களுக்கு நல்வாழ்வளிப்பதற்கு யோசிக்க வேண்டும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்ற விஷயத்திலே, வேலையில்லா பிரச்னை பற்றியும், வறுமை, விவசாயிகளுக்கு உர விலை அதிகமாகியிருக்கிறது என்றும் சொல்கிறோம். இதையெல்லாம் தீர்க்க முடியாததற்குக் காரணமில்லை. நோய் இருக்கிறது, அது தலைவலியா அல்லது வயிற்றுவலியா என்பதை மட்டும் சொல்லிவிட்டு, பெரிய டாக்டர்கள் தான் பார்த்துத் தீர்க்க வேண்டும் என்று சொல்வதால் பயன் என்ன? மத்திய அரசாங்கம்தான் இதைச் செய்ய வேண்டும், அதைச் செய்ய வேண்டும் என்று மாநில அரசு அவர்களைக் காட்டுவதும், அவர்கள் இவர்களைக் காட்டுவதுமாக இருந்தால், என்ன பயன்? அதற்கான வழிவகைகளைச் செய்தாக வேண்டும். நாம் சமதர்மத்தைப்பற்றிப் பேசுகிறோம். அதற்கான நிலைமைகளைச் செய்வதற்கு நமக்குப் பெரும் பொறுப்பு இருக்கிறது. எதையும் காலாகாலத்தில் செய்தால்தான் பயன் தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டிய நெல் விலை மிகவும் குறைந்திருக்கிறது. இந்த விஷயம் குறித்து, அவர்களுக்கு ஒரு நியாயமான விலையை நிர்ணயம் செய்வது குறித்து இந்த அரசு தீவிர கவனம் செலுத்தியாக வேண்டும். வியாபாரிகளிடம் ஏமார்ந்து போகும் அப்பாவிகளாக விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்கள் அறியாமையால் பலவகைகளிலும் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமை பரிதாபகரமாக இருக்கிறது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயப் போராட்டத்தில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை, அது பற்றி யோசியுங்கள் என்று தான் சொல்லுகிறேன். பதில் இப்போது வேண்டாம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தவறான ஸ்டேட்மென்ட் கொடுத்துவிட்டால், பத்திரிகைக்காரர்கள் போட்டு விடுகிறார்கள். விவசாயிகள் ஒப்பந்தத்தில் கொடுக்கப்பட்ட 11, 12 வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டு விட்டன.

சமீபத்தில் திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் இங்கு வந்து முதலமைச்சரைச் சந்தித்து, திருப்தி தெரிவித்திருக்கிறார். எந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்படவில்லை என்று சொல்லட்டும். எல்லாம் நிறைவேற்றப்பட்டு விட்டிருக்கிறது. இன்னும் அவகாசம் தருகிறேன். நாளைகூடச் சொல்லட்டும். பதில் சொல்லுகிறேன். சமீபத்தில் திரு. நாராயணசாமி நாயுடு வந்திருந்தார். வந்து பேசி விட்டுத் திரும்பியிருக்கிறார். எல்லாம் நிறைவேற்றப்பட்டு விட்டன.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: வேறு சந்தர்ப்பங்கள் ஏற்படுகிறபோது சொல்லுகிறேன். விவசாயிகள் குறைகள் அரைகுறையாக நிறைவேறாமல் இருக்கின்றன.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மறுபடியும் சொல்லுகிறேன். ஒரு விவசாய மாநாட்டில் கூட பெரும் தலைவர் அவர்கள் பேசியதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அந்த ஒப்பந்தத்தின் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை, எடுக்கத் தவறிவிட்டது, செய்யவில்லை, எச்சரிக்கை செய்கிறேன் என்ற பாணியில் பேசியிருக்கிறார். போடப்பட்ட ஒப்பந்தங்களில் அத்தனையையும் நிறைவேற்றியிருக்கிறோம், நடவடிக்கை எடுத்திருக்கிறோம். ஆதாரத்தோடுதான் சொல்லுகிறேன். நிறைவேற்றவில்லை என்று மொத்தமாக தமிழக அரசாங்கம் மீது பெரும் தலைவர் அவர்கள் குற்றச்சாட்டு சொல்லக் கூடாது. அவகாசம் கொடுக்கிறேன். எந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்படவில்லை என்று உறுப்பினர் பி.ப.
அவர்கள் சொல்லட்டும். 7-00

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: சில நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. மற்றவைகள் அரைகுறையாக இருக்கின்றன. நில அடமான வங்கியில் வாங்கப்பட்ட கடன், கிணறு வெட்ட, ஆழப்படுத்த, வறட்சிப் பகுதியில் வழங்கப்பட்ட கடன் அவைகளுக்குப் பயன்படாமல் கிணறு வெட்டியும் தண்ணீர் இல்லாமல், வாங்கிய கடன் பயனில்லாமல் போய்விட்டது. இதற்கு நிவாரணம் வேண்டுமென்று கேட்டோம். ரிசர்வ் பாங்க் கூட கலந்து முடிவுகளைச் சொல்லுகிறோம் என்று சொல்லப்பட்டது. விவசாயத் துறை அமைச்சர் திரு. அன்பில் தர்மலிங்கம் கூட அது நியாயம் என்று வெளியிடங்களில் பேசியிருந்தார்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அவரே சொன்னார் ரிசர்வ் பாங்கிற்கு எழுதியிருக்கிறோம் என்று. நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது, ரிசர்வ் பாங்கோடு கடிதப் போக்குவரத்து நடத்தி வருகிறோம்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: மற்றொரு கோரிக்கை வழக்குகள் வாபஸ் பெறப்பட வேண்டும் என்பது. ஸ்ரீவில்லிபுத்தூரில் சிவலிங்கபுரத்தில் இருவர்,

மீது வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக நான் எழுதியிருக்கிறேன். விளக்கம் கொடுத்தும் இன்னும் அவை ஸ்ரீவில்லிபுத்தூர் சப் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் பெண்டிங்காக இருக்கிறது.

திரு. கோ. சி. மணி: மாமன்றத் தலைவர் அவர்களே, இன்றைய தினம், சென்ற இரண்டாம் தேதி மேலவை, பேரவை, இரண்டு அவைகளிலும் உள்ள உறுப்பினர்கள் அடங்கிய கூட்டத்தில் மேதகு கவர்னர் பெருமகனார் ஆற்றிய உரைக்கு ஆதரவு தெரிவித்து அந்த உரைக்கு நன்றி தெரிவிக்கும் முகத்தான் நான் இங்கே பேசுகிறேன். இப்படி ஒரு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் வருகிறபோது, ஒரு நிதிநிலை அறிக்கையை விவாதிக்கும் அளவிற்கு இந்த மாமன்றம் கூடி மூன்று மணி நேரத்திற்குள் மூன்றே மூன்று பேர் மட்டும் தான் பேசியிருக்கிறார்கள். இறுதியில் பேசுகிற நான் இன்றைய தினம் கூறுவது, கவர்னர் பெருமான் ஒரு ஆண்டிற்கு ஒரு முறை உரையாற்றுகிற நேரத்தில் இடைவெளிப்பட்ட 12 மாதங்களில் இந்த நாட்டில் என்னென்ன அத்யாவசியமான பிரச்னைகள் தோன்றியிருக்கின்றனவோ அவைகளை நினைவுறுத்தி இறுதியாக அதற்கு அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளைக் கோடிட்டுக் காட்டி உரையாற்றுவது வழக்கமாக இருந்து வருகிறது. ஆனால் அந்த உரையை ஆதரித்துப் பேசியவர்களும் அதை எதிர்த்துப் பேசியவர்களும் அந்த உரையில் காணப்படுகிறவைகளைக் குறிப்பிட்டு, அவைகளிலே இருக்கிற குறைபாடுகளை நினைவுபடுத்துவது கொஞ்சம் சாலச் சிறந்த மரபாக இத்தனை நாளும் இருந்து வருகிறது. ஆனால் இன்றைய தினம் ஒரு நிதி நிலை அறிக்கையில், "டிஸ்டிரிக்ட் அட்மினிஸ்டிரேஷன் டிமாண்ட்"ல் பேசுகிற அளவிற்கு ஒரு நீண்ட நாழிகை தந்திருப்பதால், பேசிய பேச்சுக்களுக்கு மட்டுமே பதில் சொல்லுகிற நிலையில் அல்லது விளக்கம் கேட்கும் நிலையில் இருக்கிறேன். கவர்னர் உரையில் இந்த ஆண்டு தமிழ் நாட்டில் இயற்கையால் என்னென்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதையும் அது எப்படி சமாளிக்கப்பட்டிருக்கிறது, இனிமேல் அப்படி வராமலிருக்க எதிர்காலப் பணி எப்படி இருக்கப் போகிறது என்பதையும் ரொம்பத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். குறிப்பாக, இப்போது பெய்த பெரும் மழையில் அடித்த புயல் காற்றில் வீடிழந்த மக்களுக்கு, ஏறத்தாழ 1 லட்சத்து 80 ஆயிரம் வீடிழந்த மக்களுக்கு, உதவித்தொகை தந்திருப்பதைப் பார்க்கும்போது, இவ்வளவு உதவியை எந்தக் காலத்தில் செய்திருக்கிறார்கள் என்பதை நம்மால் உணர முடிகிறது. இதற்கு முன் அடித்த புயல், பெய்த பெரும் மழை, இவை அனைத்திலும் ஒரு குடிசை விழுந்தாலும், எத்தனை குடிசைகள் விழுந்து விட்டன என்று லிஸ்ட் தாசில்தார் எடுத்து, குடிசை ஒன்றுக்கு ரூபாய் 30 உயர்ந்த பட்சம் என்றும் 15 ரூபாய் குறைந்த

பட்சம் என்றும், 15 ரூபாயில் ஆரம்பித்து 30 ரூபாய் வரை வழங்கியதை எல்லோரும் அறிவர். ஆனால் இந்த அரசு வந்த பிறகுதான் இப்படிப்பட்ட விபத்துகளினால் உண்மையான நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று ஆராய்ந்தறிந்து, ஒரு சிறிய வீடாவது கட்டிக்கொள்ளத் தக்க அளவிற்கு உதவியளித்து பல இடங்களில் வீடுகளைப் புதுப்பிக்கும் வாய்ப்பை இந்த அரசு தந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் நினைவூட்ட விரும்புகிறேன்.

இங்கே நம்முடைய திரு. ஆர். கே. அவர்கள் பேசுகிறபோது, இருக்கிற குறைபாடுகளை எல்லாம் சொல்லுகிறபோது, இப்படி எல்லாம் கேள்விப்படுகிறோம், இப்படி எல்லாம் தெரிகிறது, உண்மை என்றால் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். நான் சட்டமன்றத்தில் ஒரு உறுப்பினராக இருந்து வருகிறேன். இதற்கு முன்னால், இந்த அவையில் அவர் எந்த இயக்கத்தைச் சேர்ந்தவராக இப்போது இருக்கிறாரோ, அந்த இயக்கம் 20 ஆண்டுக் காலம் தமிழ் நாட்டை ஆண்டிருக்கிறது. எதிர்க் கட்சி வரிசையில் நான் இருக்கும்போது, குறிப்பிட்ட பல குற்றச்சாட்டுக்களைச் சொன்னேன். இந்த ஊரில் இன்னின்னார் இன்னின்ன காரியங்களைச் செய்திருக்கிறார்கள் என்று சொன்னேன். இப்போது அதைக் கூறக் காரணம் இதுதான். நடந்த கலவரங்களைப் பூசி மறைக்கிறார்கள், காலதாமதம் செய்கிறார்கள், நடவடிக்கை எடுப்பதை விட்டுக் கொடுக்கிறார்கள், கட்சிக் கண்ணோட்டத்தோடு பார்க்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை அவர்கள் சொன்னார்கள். நான் இன்று நினைவுபடுத்துகிறேன். அரிசிப் பஞ்சம் வந்தது. காரணம் அரசாங்கம் வைத்திருக்கிற கட்டுப்பாடு என்று சட்டமன்றத்தில் ஒரு முறை சொன்னேன். சொல்லிவிட்டவுடன் இந்தக் கட்டுமுட்டைக்கு என்ன காரணம் என்று அன்று இருந்த முதலமைச்சர் கேட்டார். நான் அன்றே தெளிவாகச் சொன்னேன். "நீங்கள் வைத்திருக்கும் கட்டுப்பாட்டில் சிலவற்றைக் கடைப்பிடிக்க முடியாமலிருப்பதும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமலிருப்பதும், எடுத்த நடவடிக்கை தடுக்கப்பட்டதும், அரசாங்கப் பதிவேடுகளில் பதிவு பெறாமல் உற்பத்தியான உணவுப் பொருள்கள் அடுத்த மாநிலத்திற்குப் போவது வாடிக்கையாக இருப்பதும் எனக்குத் தெரியும் என்று சொன்னேன். அப்படிச் சொல்லியவுடன், எந்த ஊரில் யார், எப்படி, என்பதைச் சொன்னால் தானே, நடவடிக்கை எடுக்க முடியும், எனக்குத் தெரியாது என்று சொல்லி விடமுடியுமா என்று அவையிலே கேட்டார்கள். அதுவே இன்றும் திரும்பக் கேட்கப்படுகிறது. நான் சொல்லித்தான் தெரியுமா என்று கேட்கிறார்கள். யார் செய்தார்கள், எங்கே செய்தார்கள் என்று என்னைக் கேட்டார்கள். நான் சொன்னேன். தஞ்சாவூர் ரயில்வே ஸ்டேஷனின் கிழக்கே மாயூரம் ரயில்வே ஸ்டேஷனுக்கு மேற்கே இருக்கிற அத்தனை புகைவண்டி நிலையங்களிலும், ஒவ்வொரு நிலையத்திலும், ஒரு நாளைக்கு 300 மூட்டை அரிசி மாவாக அரைத்து கிழங்கு மா என்ற

பெயரால் திண்டுக்கல் ஸ்டேஷனில் இறங்குகிறது என்று சொன்னேன். அப்படிச் சொல்லிய பிறகு, அத்துணை ரயில்வே ஸ்டேஷனுக்கும் என்னேடு அதிகாரிகளை அனுப்பினுல், அவர்களை அழைத்துக்கொண்டு போய் காட்டுகிறேன் என்று சொன்னேன். ஆனுல் அதைக் கேட்கவில்லை. சுதேசமித்திரனில் அது நியாயமான கோரிக்கை என்றும், அரசு நடவடிக்கை எடுக்கத் தவறியதாகவும் எழுதப்பட்டது. பிறகு, அதிகாரிகளைப் போட்டு விசாரித்த அளவில், பல நூற்றுக்கணக்கான மூட்டைகள் கைப்பற்றப்பட்டன. கிழங்கு மாவு மூட்டை என்று எழுதப்பட்டு, பிரித்த பிறகு அரிசி மா மூட்டை என்று தெரிந்தது. அதற்குப் பிறகு, ஏற்றியவர் யார் என்று விலாசம் தெரியாத காரணத்தால், நடவடிக்கை எடுக்க முடியவில்லை என்று நான் கேட்ட கேள்விக்கு சட்ட மன்றத்தில் பதிலளிக்கப்பட்டது. கேட்டது இன்னுர், நடவடிக்கை எடுக்கப் படவில்லை என்பதைத் தான் நினைவுபடுத்துகிறேன். நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்பது குற்றமில்லை. இன்னென்று, இந்த மூட்டையை விட இன்னும் அரிசியை அரைத்து, தவிட்டை வாங்கி, 6 மரக்கால் அரிசியைக் கொட்டி, பிறகு ஒரு மூட்டை அளவுக்கு வெயிட் எவ்வளவு இருக்குமோ அந்த அளவுக்கு 6 மரக்கால் அரிசி போக மீதியைத் தவிடாகக் கொட்டி, தவிட்டு மூட்டை என்று திண்டுக்கலுக்கு ஏற்றினுர்கள். இதற்குப் பெயர் தவிட்டு மூட்டை. ஒவ்வொன்றிலும் 6 மரக்கால் அரிசி இருந்தது. யார் தெரிவித்தது என்கிறுர்கள். நான் சொன்னேன். சொன்னது மட்டுமல்ல. ஏற்றியிருந்த

பி.ப. 7-10 மூட்டைகள் இருந்த புகை வண்டி நிலையத்தில், கூட்ஸ் ரெயில் நிலையத்திற்கு அதிகாரிகளை அழைத்துச் சென்று, காட்டி 'சீல்' வைக்கப்பட்டு, மறு நாள் எடுத்துப் பார்க்கப்பட்டு, ஒவ்வொரு மூட்டையிலும் அரிசி இருப்பு தெரிவிக்கப் பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அது எதிர்க்கட்சிகளின் கடமை. தவறு எது என்று எதிர்க்கட்சியாக இருந்தபொழுதும், ஆளும் கட்சியாக இருக்கிற பொழுதும், குறை சொல்லும் முன் ஒன்றைச் சொல்லிக்கொள்ளுவேன். கூட்டுறவு ஸ்தாபனம் பூராவும் இப்பொழுது ரொம்பவும் சங்கடமான நிலைமை யில் இருக்கிறது, நடவடிக்கை எடுக்கவில்லை, ஊழல் நடக்கிறது, உரத்தை விற்றதைக் கண்டுபிடிக்க சில நாட்களாகின்றன, இன்னும் சூபர்வைசர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை, மத்திய வங்கி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லுகிறுர்கள். எடுக்காமலிருந்தால் எடுக்க வேண்டும். ஒப்புக்கொள்ளு கிறேன். திரும்பவும் சொல்லுகிறேன். நடவடிக்கை எடுத்து, ஒருவரையாவது ஏதாவது தண்டனைக்கு உட்படுத்தினுல், அதையும் திரும்ப 'துக்ளக் தர்பார்' என்கிறுர்கள். இந்தச் சாதாரண விஷயத்திற்கும் வேலையிலிருந்து நீக்கி விட்டார்கள் என்று சொல்லுகிறவர்கள் இந்த நாட்டில்தான் இருக்கிறுர் களென்று நினைவுபடுத்த முடியும். குறிப்பிட்டுச் சொல்லக் காரணம், இந்த அரசு இப்பொழுது நடவடிக்கை எடுத்து வழக்குகள் போடுகிற காரணத்தால்,

இந்தக் குற்றம் அதிகமாக நடப்பது போல எண்ணுகிறுர்கள். அந்தக் காலத்தில், வழக்குகள் போடப்படாத காரணத்தால், பல குற்றங்கள் கண்டு பிடிக்கப்படாத காரணத்தால், நாட்டு மக்களுக்குத் தெரியாமற் போய் விட்டது. பல இடங்களில் இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. தஞ்சையில், சீர்காழி வட்டத்தில், கூட்டுறவுச் சங்கத்தில் 1963-ம் வருஷத்தில் இறந்து போனவர்கள், 1966-ம் வருஷம் கடன் வாங்கியிருக்கிறுர்கள். 1971-ம் வருஷத்தில் நான் போய்க் கண்டுபிடித்திருக்கிறேன். செத்தவன், யம லோகத் திற்குப் போனவன் என்று சொல்லுகிறுர்கள். கைலாசத்தில் இருக்கிறுன் என்று சொல்லுகிறுர்கள். அங்கே இருக்கிறவன் பூலோகத்தில் இருக்கிற கூட்டுறவுச் சங்கத்தில் கடன் கட்டியிருக்கிறுன், 3 வருஷம் கழித்து, அது கால தாமதம் அல்லவா?

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: அதற்குப் பதில் இதுவா? எந்தக் காலத்தில் நடந்தது?

திரு. கோ. சி. மணி: நான் சொல்லுவது நடவடிக்கை எடுப்பதில் கால தாமதமில்லை. உடனே நடவடிக்கை எடுத்தோம்.

மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர்: தயவு செய்து என்னைப் பார்த்துப் பேசுங்கள்.

திரு. கோ. சி. மணி: நடவடிக்கை எடுக்கப்பட்டு நிறுத்தப்பட்டதால் மூடி மறைக்கப்பட்டு விட்டதென்று கூட அறியாமல், உடனடியாகக் கை விடப் பட்டது என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன். பல வருஷங்களுக்கு முன் செத்துப் போனவன் கடன் வாங்கியதாகக் கணக்கு எழுதப்பட்டு, கண்டுபிடிக்கப்படாம லிருந்தது, கழக அரசு வந்த பிறகு கண்டுபிடிக்கப்பட்டது. அதற்காகவாவது நன்றி தெரிவிக்க வேண்டாமா? இருப்பதை இருக்கிறதென்று ஒப்புக் கொண்டு, மீதியை இல்லையென்று ஒப்புக்கொண்டு, குற்றம் நடந்திருந்தால் விளக்கிச் சொல்லி, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுவது எதிர்க்கட்சிகளின் கடமை. எல்லாவற்றிற்கும், கூட்டுறவுச் சங்கத்திலிருந்து, மார்க்கெட்டிங் சொஸைடியிலிருந்து உரத்தை வாங்கிப் போனுர்களென்று சொல்லுகிறுர்கள். வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளு கிறேன். மார்க்கெட்டிங் சொஸைடியின் கடமை, கூட்டுறவுச் சங்கத்திற்கு லாரியில் ஏற்றிக்கொண்டு போய், இன்வாய்ஸைக் கொடுத்து, அங்கே இருக்கிற செயலாளரிடம் கையெழுத்து வாங்கி, திரும்பவும் கூட்டுறவுச் சங்கத்தில் பத்திரம் எழுதி, பிறகு சங்கத்தில் 'கேஷ்' வாங்க வேண்டியது, பணத்தைத் திரும்ப வாங்க வேண்டியது மார்க்கெட்டிங் சொஸைடியின் கடமை. கூட்டுறவுச் சங்கம் அவசரப்பட்டு, சங்கடப்பட்டு, மார்க்கெட்டிங் சொஸைடி கட்டி

கேட்டால், உரத்தைக் கேட்க வந்தால், கொடுத்தது குற்றம், வாங்கிப் போனது குற்றமில்லை. இதைத் தெளிவாகச் சொல்லிக்கொள்ளுகிறேன். இன்றைய தினம் நடைமுறையில் இருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: அதிகாரிகள், கூட்டுறவு இலாகா, பாங்க் இவர்களெல்லாம் சேர்ந்து உர வினியோகம்பற்றிச் செய்த நடை முறையில் எதையும் சங்கம் மீறவில்லை. இன்னொருவருக்குக் கொடுக்க வேண்டிய மூட்டை இவருக்குக் கொடுக்கப்பட்டது. யார் தந்தது? கிராமச் சங்கமா? காரிய தரிசி மூட்டைகளை எடுத்துக்கொண்டு லாரியில் போனார் என்பதைத் தெரிவிக்கிறேன்.

திரு. கோ. சி. மணி: லாரியில் போட்டுப் போனார்களோ இல்லையோ, கூட்டுறவுச் சங்கத்தில், அலுவலகத்தில் சொல்லி, மார்க்கெட்டிங் சொஸைடியில் ஒப்படைத்து, கையெழுத்துப் பெற்றுக்கொண்டு, இவ்வளவு ரூபாய் பெறுமானம் என்று எழுதி, காஷ் பில் போடப்பட்டு கணக்குத் தருவது தான் நடைமுறையில் இன்று இருக்கிறது. இவர்கள் வந்து வாங்கிப் போனார்கள், அதிகாரிகள் வந்தார்கள், அவர்களிடத்தில் கொடுத்தோம், அவர்கள் கொண்டு விற்றார்கள் என்று சொல்லுவது எப்படி வழி முறை? இதனைக் கண்டுபிடிக்க வேண்டும். கூட்டுறவுச் சங்கத்தில் இருக்கிறவர்கள், தனிப்பட்டவர்கள் வீட்டில் இறக்கப்பட்டதாகக் குறிப்பிட்டார்கள். யார் இறக்கினார்கள்? மார்க்கெட்டிங் சொஸைடியைச் சேர்ந்தவர்கள் தானே?

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: காரியதரிசி கூடச் சென்றார்

திரு. கோ. சி. மணி: காரியதரிசி சொல்லிய இடத்தில் அந்த மார்க்கெட்டிங் சொசைடி உரத்தைக் கண்டிருக்க வேண்டும். இந்தச் சங்கத்தைச் சேர்ந்த செயலாளர் மார்க்கெடிங் சொசைடிக்கு வந்து உரத்தைக் கேட்டார், கொடுத்தோமென்று சொல்லுவது தப்பு. அது என்னுடைய ஆபீசில் கொடுக்கக் கூடாது.

திரு. ஜி. சுவாமிநாதன்: மேலவைக் கூட்டம் எத்தனை மணி வரை நடக்க இருக்கிறது?

மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர்: 7-15 வரை. இல்லையென்றால் நாளை தொடரும்.

திரு. கோ. சி. மணி: இத்துடன் முடித்து, பட்ஜெட் கூட்டத்தில் மற்றவற்றைச் சொல்லிக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர்: இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. மன்றம் மீண்டும் நாளை பிற்பகல் 4 மணிக்குக் கூடும்.

பின்னர், சட்ட மன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

7. மன்றத்தின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

* 1. Notification issued with G.O. Ms. No. 1139, Home, dated the 19th April 1972, exempting the mini bus bearing Registration No. GTE 748 belonging to the National Institute of Design, Ahmedabad, from payment of tax during the stay in Tamil Nadu. [Laid on the table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

* 2. Notification issued with Memorandum No. 113872-J2/72-3, Revenue, dated the 3rd November 1972, in regard to an amendment to the Revenue Department Notification II-1 No. 1061 of 1965, dated the 12th March 1965, published at pages 1-6 of Part II—Section 1 of the Tamil Nadu Government Gazette Extraordinary, dated the 15th March 1965. [Laid on the table of the House under section 73 (5) of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Roytwari) Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963).]

* 3. Order issued with G.O.R. No. 2275, Revenue, dated the 13th October 1972, exemption from liability to Entertainments tax of cinematograph film show organised by the Principal, Voorhees College, Vellore on the 17th October 1972 at 10-30 a.m. to raise funds for the developmental plans of the College. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

* 4. Notification issued with G.O. Ms. No. 2278, Rural Development and Local Administration, dated the 27th October 1972, in regard to term of office of the members of the Mettur Township Committee being extended up to the mid-night of the 3rd February 1973. [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

* 5. Notifications issued with G.O. Ms. No. 258, Excise and Prohibition, dated the 20th September 1972 in regard to amendments to the Madras Denatured Spirit Methyl Alcohol and Varnish (French Polish) Rules, 1959 and the Madras Distillery Rules, 1960. [Laid on the table of the House under section 34 (5) of the Tamil Nadu Excise Act, 1971 (Tamil Nadu Act 34 of 1971).]

*6. Notification issued with G.O. Ms. 2351, Home, dated the 13th September, 1972 exempting on and from the first October 1972, the ambulance Van bearing Registration number TMP 821 belonging to the Blue Cross of India, Madras, from payment of tax leviable under the Tamil Nadu Motor Vehicles Taxation Act, so long as the Motor Vehicle is used exclusively as an Ambulance Van for transport of animals for treatment to hospitals without letting it for hire or reward. [Laid on the table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

* 7. Notification issued with G.O. Ms. No. 2352, Home, dated the 13th September 1972 exempting the vehicle bearing registration No. TMC 3861 belonging to the Sri Kanchi Kamakoti Sankaracharyar Swami Mutt from payment of tax leviable under the Tamil Nadu Motor Vehicles Taxation Act, so long as the motor vehicle is owned and used for philanthropic purposes without letting it for hire or reward. [Laid on the table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

* 3. Notification issued with G.O. Ms. No. 2102, Rural Development and Local Administration, dated 3rd October, 1972 in regard to an amendment to the Tamil Nadu Panchayat Establishment (Appointment and Punishment) Rules, 1965. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

* 9. Notification issued with Memorandum No. 141600/CT-II-(2)-70, Revenue, dated the 23rd March 1971 in regard to list of persons convicted under the Tamil Nadu General Sales Tax Act for the quarter ended 30th September 1970. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

* 10. Notifications issued with G.O. Ms. No. 375, Food, dated the 3rd October 1972 in regard to inclusion of Agro-Chemicals in the schedule to the Tamil Nadu Warehouses Act, 1951. [Laid on the table of the House under section 27 (4) of the Tamil Nadu Warehouses Act, 1951 (Tamil Nadu Act XV of 1951).]

* 11. Notification issued with G.O. Ms. No. 2198, Agriculture, dated the 19th August, 1972 relating to declaration of notified market area for Theni market in respect of paddy, cotton, groundnut and chillies. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

*12. Notification issued with G.O. Ms. No. 2412, Public (Services-A), dated the 4th October 1972 in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 for inclusion of certain posts in Tamil Nadu State Transport Subordinate Service within the Commission's purview. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India.]

* 13. Notification issued with G.O. Ms. No. 2197, Public (Services-A), dated the 4th September 1972 in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 for exclusion of the posts of Translation Officers in the Tamil Nadu General Service from the Commission's purview. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India.]

14. Notification issued with G.O. Ms. No. 3136, Revenue, dated the 30th November 1972 in regard to an amendment to the Revenue Department Notification II-1 No. 1303 of 1965, dated the 20th March 1965, published at page 526 of Part II—Section 1 of the Tamil Nadu Government Gazette, dated the 24th March 1965. [Laid on the table of the House under section 26 (2) of the Tamil Nadu (Transferred Territory) Ryotwari Settlement Act, 1964 (Tamil Nadu Act 30 of 1964).]

15. Notification issued with G.O. Ms. No. 2363, Rural Development and Local Administration, dated the 9th November 1972 in regard to alteration of the name of the "Palayam Panchayat

Union " as the " Guziliamparai Panchayat Union ". [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

16. Notification issued with G.O. Ms. No. 2393, Home, dated the 16th September, 1972 in regard to an amendment to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

17. Notification issued with G.O. Ms. No. 2191, Rural Development and Local Administration, dated 19th October 1972 in regard to amendments to the rules relating to the personal conduct of officers and servants of Municipal Councils. [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

18. Notification issued with G.O. Ms. No. 2374, Home, dated the 14th September 1972 in regard to an amendment to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957. [Laid on the table of the House under section 10 (3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955).]

19. Notification issued with G.O. Ms. No. 2258, Home, dated the 30th August 1972 in regard to an amendment to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957. [Laid on the table of the House under section 10 (3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955).]

20. Notification issued with G.O. Ms. No. 1438, Labour and Employment, dated the 31st December 1972 in regard to appointing the 1st January 1973, as the date on which the Tamil Nadu Labour Welfare Fund Act shall come into force. [Laid on the table of the House under section 41 (5) of the Tamil Nadu Labour Welfare Fund Act, 1972 (Tamil Nadu Act 36 of 1972).]

21. Order issued with G.O. Rt. No. 2569, Revenue, dated the 29th November 1972 exempting from liability to entertainments tax and additional surcharge on entertainment tax, one cinematograph film show organised by Dr. R. J. Rajasekhar Reddy, Hony. Surgeon, Government Stanley Hospital, Madras at 10 a.m. on 17th December 1972 at Devi Paradise Theatre,

in connection with raising funds for a Rural Hospital. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

B. *Reports, Notifications and Other Papers.*

* 1. Notification issued with G.O. Ms. No. 2956, Revenue, dated the 15th November, 1972 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899), in respect of the settlement deed to be executed by the Archbishop of Madurai in favour of the De-La-Salle College, Karumathur, Madurai district.

* 2. Notification issued with G.O. Ms. No. 2861, Revenue, dated the 1st November 1972 in regard to an amendment to the table of fees, published with the late Judicial Department Notification No. 177, dated the 30th March 1909, at pages 316–319 of Part I of the *Tamil Nadu Government Gazette*, dated the 30th March, 1909, as subsequently amended.

* 3. Notification issued with G.O. Ms. No. 2705, Revenue, dated the 13th October 1972 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899, in respect of the mortgage deed to be executed by Thiru K. S. Chandrasekharan, I.A.S., in connection with the additional house building advance of Rs. 15,000 (Rupees fifteen thousand only) sanctioned to him by the Government of Orissa.

* 4. Notification issued with G.O. Ms. No. 2753, Revenue, dated the 20th October 1972 in regard to an amendment to the Revenue Department Notification II-1 No. 2901 of 1972, dated the 19th May 1972, published at page 659 of Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette*, dated the 21st June, 1972.

5. Fifth Annual Report of the Tamil Nadu Vigilance Commission for the period from 1st April 1970 to 31st March 1971.

* 6. Notification issued with G.O. Ms. No. 3015, Revenue, dated the 20th November 1972 in regard to an amendment to the table of fees, published with the late Judicial Department Notification No. 177, dated the 30th March 1909, at pages 316–319 of Part I of the *Tamil Nadu Government Gazette*, dated the 30th March 1909, as subsequently amended.

7. Notification issued with G.O. Ms. No. 3146, Revenue, dated the 30th November, 1972 in regard to an amendment to the table of fees published with the Judicial Department Notification No. 177, dated the 30th March 1909, at pages 316–319 of Part I of the *Tamil Nadu Government Gazette*, dated the 30th March 1909, as subsequently amended.

8. Notification issued with G.O. Ms. No. 3122, Revenue, dated the 28th November 1972 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899), in respect of five endowment deeds to be executed by the Muslim Orphanage Committee, Tirunelveli represented by its President in favour of the Sadakathulla Appa College Managing Committee, Palayamkottai, Tirunelveli district.

9. Notification issued with G.O. Ms. No. 460, Revenue, dated the 16th February 1972 in regard to an amendment to the Tamil Nadu Village Officers Service Rules, 1970.

£ 10. The Tamil Nadu Stage Carriages and Contract Carriages (Acquisition) Ordinance, 1973 (Tamil Nadu Ordinance No. 1 of 1973).

& 11. Reply to the Memoranda presented to the President of India by Thiru M. G. Ramachandran and others. (Tamil)

12. Returns of Assets of the following Members of the Tamil Nadu Legislative Council as on 31st March 1972 placed on the table in pursuance of the Resolution passed by the Tamil Nadu Legislature on the 28th August 1969 :—

1. Thiru G. Parangusam
2. Thiru M. Arumugaswami.
3. Thiru G. Swaminathan.

@13. Address by the Governor of Tamil Nadu to both Houses of the Tamil Nadu Legislature assembled together on 2nd February 1973.

---

* Sent by post to all M.L.Cs. on 18th January, 1973.

£ Circulated to all M.L.Cs. on 25th January 1973.

& Circulated to all M.L.Cs. on 3rd February 1973.

@ Circulated to all M.L.Cs. on 2nd February 1973.

இணைப்பு I

[38-ஆம் பக்கத்தில் 2-ஆம் எண்ணுள்ள உடுக்குறியிடப்பட்ட வினாவின் விடையைக் காண்க.]

தெரிந்தெடுத்த மாவட்டங்களில் அடைவாயுள்ள சில பகுதிகளில் சில முன்னோடித் திட்டங்களை மேற்கொள்ள இந்திய அரசு முடிவு செய்துள்ளது. அப்போதுதான், இந்த முன்னோடித் திட்டங்கள் வளர்ச்சியின் எல்லாக்கூறுகள் பற்றியும் கவனித்து, அந்தப் பகுதியில் 15 வயது முதல் 59 வயது வரையுள்ளவர்களில் வேலை செய்ய முன்வருகின்ற ஒவ்வொருவருக்கும், ஆதாயந்தருகிற பல்வேறு தொழில்களில் படிப்படியாக வேலைவாய்ப்பு அளிக்க இயலும். அதன்படி, இந்திய அரசு இந்த மாநிலத்திற்கு ஒரு முன்னோடித் திட்டத்தை ஒதுக்கியுள்ளது; இந்த முன்னோடித் திட்டம் தென்னார்க்காடு மாவட்டம் மங்களூர் வட்டாரத்தில் செயற்படுத்தப்படும்.

2. அரசு, இத்திட்டத்தைத் தென்னார்க்காடு மாவட்டம் மங்களூர் வட்டத்தில் செயற்படுத்த ஆணை பிறப்பித்துள்ளது. இத்திட்டப் பணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் பொறுப்பு ஏற்பார். கிராம வேலைவாய்ப்புக்கான விரைவுத் திட்டத்தின் கீழ் உள்ள பணித்திட்டங்களைத் தற்போது நிறைவேற்றி வருகின்ற பணியாளர் அமைப்பால் இத்திட்டம் நிறைவேற்றப்படும். இத்திட்டத்தின் கீழுள்ள பணிகள் அனைத்தும் அரசு நிலத்தில் அமைக்கப்படும்; அவ்வாறு ஏற்படுத்தப்பட்ட சொத்துக்களின் மீது சமுதாயம் முழுவதும் உடைமையுரிமை, நிர்வாக உரிமை, பயன்பாட்டுரிமை ஆகியவற்றைப் பெற்றிருக்க வேண்டும். இருப்பினும் கீழ்வருவனவற்றை போன்ற தனி நேர்வுகளில் விலக்களிக்கப்படலாம் :—

(அ) சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கென்று குறிப்பாகவுள்ள சொத்துக்கள்; எடுத்துக்காட்டாக, அரிசனக் குடியிருப்புகள், அரிசனக் குடியிருப்பிடங்களில் உள்ள கிணறுகள், சிறிய, ஆதாயம் அற்ற உழவர்கள் அடங்கிய தொகுதிகளுக்கான பொதுப்பாசனக் கிணறுகள்;

(இ) சிறிய நிலவுடைமைகளை ஒருங்கு தொகுத்தல், மண்வளப் பாதுகாப்பு, நிலத்தைப் பண்படுத்தல் முதலியன; இத்தகு பணிகள் தொழில்நுட்ப நிர்வாகக் காரணங்களுக்காக கிராம அளவில் அல்லது பகுதி அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ள பணிகளாகும்.

இத்திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படக்கூடிய பணிகளின் தன்மை வருமாறு :—

(அ) வேளாண்மை உற்பத்தியுடன் நேரடித் தொடர்புடைய பணிகள் :

சிறு பாசனம்.

மண்வளப் பாதுகாப்பு.

காடுவளர்ப்பு/பண்ணைக்காடு.

நிலத்தைப் பண்படுத்தலும் மேம்படுத்தலும்.

வடிகால் வசதி, கரைகள் அமைத்தல் முதலியன.

நீர்ப்பாதுகாப்பும், நிலத்தடி நீர்வளம் மீண்டும் பெருக ஆவன செய்தலும்.

(இ) வேளாண்மை உற்பத்திக்கு மறைமுகமாக உதவும் பணிகள் :

மீன்வளர்ப்புக் குளங்கள்.

மேய்ச்சல் நில மேம்பாடு.

மரங்கள் நடுதல்.

கிராமச் சேமிப்புக் கிடங்குகள்.

(உ) பகுதியின் பொது வளர்ச்சிக்குத் தொடர்பான பணிகள் :

சாலை அமைத்தல்.
கிராமக்குடிநீர் வழங்கல்.
சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்க்கு வீட்டு வசதி.
பள்ளிக் கட்டிடங்கள்.

இப்பணித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பணிக்கும் ஆகும் செலவு ரூ. 30,000-உம் அதற்கதிகமாகவும் இருக்கும்; ஆனால், சில நேர்வுகளில், இச்செலவு ரூ. 10,000 ஆக இருக்கக்கூடும்.

3. இத்திட்டம், பின்வருமாறு 2,800 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்க வகை செய்கிறது :

முதல் ஆண்டு	..	1,000
2-வது ஆண்டு	..	1,900
3-வது ஆண்டு	..	2,800

மூன்றாவது ஆண்டுக்குள், வேலை தேடிக்கொண்டிருக்கும் அனைவருக்கும் இத்திட்டத்தின்கீழ் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

4. இப்பணித் திட்டத்தின்கீழ் ஊதிய வீதம், அதே வகைப்பணிக்கு உள்ளூரில் நிலவும் ஊதிய வீதத்தைக் காட்டிலும் உயர்ந்த அளவாக இருக்க வேண்டும். ஊதிய வீதம் ஒரு தொழிலாளிக்கு ஒரு நாளைக்கு ரூ. 4 ஆக இருக்கும். வாரத்தில் ஒருநாள் விடுமுறையாக இருக்கும். ஊதியம் வாரத்துக்கு ஒருமுறை வழங்கப்படும்; ஒரு வாரத்தில் அல்லது ஒரு மாதத்தில் ஒரு தொழிலாளி சம்பாதிக்கக்கூடிய ஊதியத்துக்கு உச்சவரம்பு ஏதும் இராது.

5. இத்திட்டத்துக்கு, இந்திய அரசால் மூன்றாண்டுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை விவரம் வருமாறு :—

1972–73	..	ரூ. 10.00 லட்சம்.
1973–74	..	ரூ. 15.79 லட்சம்.
1974–75	..	ரூ. 20.57 லட்சம்.

இத்திட்டத்துக்காகும் செலவு முழுவதும் இந்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்படும். நிதி ஒதுக்கீட்டில் 5 சதவீதம் பணியாளர் நியமனத்துக்குச் செலவிடப்படலாம். தொழிலாளர் அணிகளை அமைப்பதற்குத் தொழிலாளர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக ரூ. 20,000 தொகையும் ஒதுக்கப்பட்டுள்ளது.

6. மாவட்ட அளவில் பின்வருமாறு ஒருங்கிணைப்புக்குழு ஒன்றை அமைப்பதற்காகவும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது; அக்குழுவின் தலைவராக மாவட்ட ஆட்சித் தலைவர் இருப்பார் :—

1. மாவட்ட ஆட்சித் தலைவர்	தலைவர்.
2. (தொடர்புடைய) வருவாய்க் கோட்ட அதிகாரி	உறுப்பினர்.
3. கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை–கிராமப்பணிகள்)	„
4. மாவட்ட வேளாண்மை அதிகாரி.	„
5. மாவட்டப் புள்ளி விவர அதிகாரி.	„
6. மாவட்ட வேலைவாய்ப்பு அதிகாரி.	„
7. மீனளத்துறை உதவி இயக்குநர்.	„
8. மாவட்ட நல அதிகாரி.	„
9. தலைவர், ஊராட்சி ஒன்றியக்குழு, மங்களூர்.	„
10. அப்பகுதியைச் சேர்ந்த சட்டமன்றப் பேரவை உறுப்பினர்.	„
11. கூற்றத் (வட்டாரம்) தலைவர், சிரணி.	„
12. வேளாண்மை கோட்டப் பொறியாளர்.	„
13. வனத்துறைக் கோட்ட அதிகாரி.	„
14. திட்ட அதிகாரி.	„

குழு இயன்றவரை அடிக்கடி கூடும். இத்திட்டத்தின்கீழ் பணியாளர்களை தேர்ந்தெடுப்பதற்கும் திட்டப்பணிகளை நிறைவேற்றுவதற்கும் இக்குழு பொறுப்புடையதாகும்.

7. மாநில அளவில், கிராம வேலைவாய்ப்புக்கான விரைவுத் திட்டம் குறித்த மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழுவும், முன்னோடி மும்முர கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தைச் செயற்படுத்துவதில் கண்டுள்ள முன்னேற்றத்தைச் சீர்தூக்கிப் பார்க்கும், தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் மேற் சொன்ன குழுவின் கூட்டத்திற்குச் சிறப்பு அழைப்பின்பேரில் பங்கு கொள்வார்.

8. முன்னோடி மும்முர கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ்க் கிடைக்கக் கூடிய நிதியைப் பயன்படுத்தி, மங்களூர் வளர்ச்சி வட்டாரத்துக்கெனப் பகுதி வளர்ச்சித் திட்டம் ஒன்றை வகுக்கும் கருத்துடன், ஏனைய துறைகளின் வளர்ச்சித் திட்டப்பணிகளையும், சமுதாய வளர்ச்சித் திட்டப்பணிகளையும் ஒருங்கிணைப்பதன் மூலம் மங்களூர் வளர்ச்சி வட்டாரத்தை மாதிரி வளர்ச்சி வட்டாரமாக மாற்றுவதென இவ்வரசு கருதியுள்ளது. இந்த நோக்கத்தைக் கருத்திற்கொண்டு, முன்னோடி மும்முர கிராம வேலைவாய்ப்புத் திட்ட நிதியையும், ஊராட்சி ஒன்றியங்களுக்கான அரசு மானியங்களையும் ஊராட்சி ஒன்றியப் பங்குத் தொகைகளையும், ஏனைய துறை நிதிகளையும் ஸ்டேட் வங்கி 9 சதவீத வட்டியில் அளிக்க ஒப்புக்கொண்டுள்ள ரூ. 75.89 லட்சம் கடன் உதவியையும் ஒருங்கிணைத்து திட்ட அறிக்கை ஒன்று வரையப்பட்டுள்ளது. இத்திட்ட அறிக்கைக்கு ரூ. 175.54 லட்சம் செலவில் அரசு ஒப்புதலளித்து ஆணை பிறப்பித்துள்ளது.

9. இத்திட்டப்பணியை நிறைவேற்றும் பொருட்டு, 28-2-1973 வரையிலான கால அளவுக்குக் கீழ்க்கண்ட பணியாளர்களை நியமித்துக்கொள்ள அரசு அனுமதி வழங்கியுள்ளது :

	எண்ணிக்கை.
1. திட்ட அதிகாரி (கோட்ட ஊராட்சி அதிகாரி பதவித்தரத்தில்)	1
2. இளநிலைப் பொறியாளர்	1
3. மேற்பார்வையாளர்	1
4. ஊராட்சி வளர்ச்சிக் கணக்கர்	1
5. உதவியாளர்	1
6. சாலை இன்ஸ்பெக்டர்	2
7. ஜீப் வலவர்	1
8. இளநிலை உதவியாளர்	1
9. தட்டச்சர்	1
10. ஏவலாட்கள்	2

10. இத்திட்டம் 1972-73-இல் தொடங்கி மூன்றாண்டுகளுக்குச் செயலில் இருக்கும்.

இணைப்பு I

ஆம் பக்கத்தில் 8 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிடப்பட்ட வினாவின் விடையைக் காண்க.]

இம்மாநிலத்தில் தமிழ்நாடு 1945 ஆம் ஆண்டு பிச்சை எடுத்தல் தடுப்புச் சட்டம் நீட்டிக்கப்பட்டுள்ள ஊர்களைக் காட்டும் விவர அறிக்கை :

தொடர் எண்.	மாவட்டம்	ஊர்களின் பெயர்கள்
(1)	(2)	(3)
1.	செங்கற்பட்டு கிழக்கு.	பூவிருந்தவல்லி (ஸ்ரீபெரும்பூதூர் வட்டம்), திருமழிசை (ஸ்ரீபெரும்பூதூர் வட்டம்), ஆலந்தூர், ஆதம்பாக்கம், நங்கநல்லூர், பழவந்தாங்கல், தலக்கணஞ்சேரி, புழுதிவாக்கம், வேளச்சேரி, நந்தம்பாக்கம் (எல்லாம் சைதாப்பேட்டை வட்டத்தில் உள்ளன), பரங்கிமலை-பல்லாவரம் பாளையம், ஜமீன் பல்லாவரம், உதிஸ்லா பல்லாவரம் உட்பட ஆனால் பல்லாவரம் பாளையம் பகுதி நீங்கலாக பல்லாவரம், தாம்பரம், குரோம்பேட்டை, டி.பி. சானடோரியம், திருநீர்மலை, அம்பத்தூர், அத்திப்பட்டு, மன்னூர், பட்டர்வாக்கம், பாடி, கொரட்டூர், மொகப்பேர், மீனம்பேடு, காக்கபள்ளம், வில்லிவாக்கம், மாதவரம், புழல், செங்குன்றம் (நாராவாரி குப்பம்), சோழவரம், பொன்னேரி, ஆரம்பாக்கம், மீஞ்சூர், கும்முடிப்பூண்டி, ஆவடி.
	செங்கற்பட்டு மேற்கு.	காஞ்சிபுரம் நகரம், ஸ்ரீபெரும்புதூர், திருவள்ளூர் நகரம், திருத்தணி நகரம், செங்கற்பட்டு நகரம், மதுராந்தகம் நகரம், திருக்கழுக்குன்றம், மாமல்லபுரம், வாலாஜாபாத்.
	வடஆர்க்காடு	திருப்பத்தூர், ஆம்பூர், வாணியம்பாடி, திருவண்ணாமலை நகரம், வேலூர் நகரம்,

[1973 பிப்ரவரி 5

தொடர் எண்.	மாவட்டம்.	ஊர்களின் பெயர்கள்.
(1)	(2)	(3)
4.	தென்ஆர்க்காடு	கடலூர், விழுப்புரம், திண்டிவனம், விருத்தாசலம், உளுந்தூர்பேட்டை, சிதம்பரம், நெய்வேலி, செஞ்சி.
5.	திருச்சிராப்பள்ளி	திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை ராட்சி.
6.	அரசு இரயில்வே காவலர், திருச்சிராப்பள்ளி	எழும்பூர் இரயில் நிலையம் செங்கற்பட்டு இரயில் நிலையம் திண்டிவனம் இரயில் நிலையம் விழுப்புரம் இரயில் நிலையம் உளுந்தூர்பேட்டை இரயில் நிலையம் விருத்தாசலம் இரயில் நிலையம் திருச்சி இரயில் நிலையம் ஜீயபுரம் இரயில் நிலையம் பேட்டைவாய்த்தலை இரயில் நிலையம் குழித்தலை இரயில் நிலையம் மாயனூர் இரயில் நிலையம் கரூர் இரயில் நிலையம் மணப்பாறை இரயில் நிலையம் வையம்பட்டி இரயில் நிலையம் ஸ்ரீரங்கம் இரயில் நிலையம் திருவெறும்பூர் இரயில் நிலையம் பொன்மலை இரயில் நிலையம் புதுக்கோட்டை இரயில் நிலையம் காரைக்குடி இரயில் நிலையம் சிவகங்கை இரயில் நிலையம் இராமநாதபுரம் இரயில் நிலையம் பரமக்குடி இரயில் நிலையம் இராமேஸ்வரம் இரயில் நிலையம் மதுரை இரயில் நிலையம் திருப்பரங்குன்றம் இரயில் நிலையம் சங்கரன் கோயில் இரயில் நிலையம் விருதுநகர் இரயில் நிலையம்

1973 பிப்ரவரி 5]

தொடர் எண்.	மாவட்டம்.	ஊர்களின் பெயர்கள்.
(1)	(2)	(3)
6.	அரசு இரயில்வே காவலர் திருச்சிராப்பள்ளி—தொடர்ச்சி.	தூத்துக்குடி இரயில் நிலையம் பாளையங்கோட்டை இரயில் நிலையம் சாத்தூர் இரயில் நிலையம் கோவில்பட்டி இரயில் நிலையம் போதனூர் இரயில் நிலையம் பொள்ளாச்சி இரயில் நிலையம் உதகமண்டலம் இரயில் நிலையம் குன்னூர் இரயில் நிலையம் கோயம்புத்தூர் இரயில் நிலையம் மேட்டுப்பாளையம் இரயில் நிலையம் பழனி இரயில் நிலையம் திண்டுக்கல் இரயில் நிலையம் தஞ்சாவூர் இரயில் நிலையம் மாயூரம் இரயில் நிலையம் திருவாரூர் இரயில் நிலையம் கும்பகோணம் இரயில் நிலையம் சிதம்பரம் இரயில் நிலையம் சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் அரக்கோணம் இரயில் நிலையம் ஆத்தூர் இரயில் நிலையம் சேலம் நகரம் இரயில் நிலையம் வேலூர் இரயில் நிலையம் திருப்பத்தூர் இரயில் நிலையம் ஈரோடு இரயில் நிலையம்
	தஞ்சாவூர் கிழக்கு	நாகப்பட்டினம், நாகூர், வேளாங்கண்ணி, மாயூரம், சீர்காழி, வைத்தீஸ்வரன் கோயில், திருவாரூர்.
	தஞ்சாவூர் மேற்கு	தஞ்சாவூர் நகரம், கும்பகோணம் நகரம், மன்னார்குடி, பட்டுக்கோட்டை.
	கோயம்புத்தூர்	மாவட்டம் முழுவதும்.
	சேலம்	நாமக்கல் உட்கோட்டம், நீங்கலாக மாவட்டம் முழுவதும்.

[1973 பிப்ரவரி 5

தொடர் எண்.	மாவட்டம்.	ஊர்களின் பெயர்கள்.
(1)	(2)	(3)
11.	தருமபுரி	செயலில் இல்லை
12.	மதுரை வடக்கு	பழனி நகராட்சி, அந்த நகராட்சியின் எல்லையிலிருந்து 5 மைல்களுக்குள் உள்ள பகுதிகள்.
13.	மதுரை நகரப்புரம்	மதுரை நகரம், திருப்பரங்குன்றம், அழகர் கோயில்.
14.	திருநெல்வேலி	பாளையங்கோட்டை நகராட்சி, ஊத்துக்குடி நகராட்சி இவற்றின் 5 மைல்சுற்றளவிற்குள் உள்ள பகுதி.
15.	நீலகிரி	உதகமண்டலம், குன்னூர், நகராட்சிகள்.
16.	இராமநாதபுரம்	தேவகோட்டை நகரம், இராமநாதபுரம் நகரம், விருதுநகர், அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைகள், காரைக்குடி நகராட்சி எல்லைகள்.
17.	கன்னியாகுமரி	நாகர்கோயில், பத்மநாபபுரம், கொளச்சல், குழித்துறை, நகராட்சிகள்.

இணைப்பு III.

[62 ஆம் பக்கத்தில் இனம் 6 க்கான அடிக் குறிப்பைக் காண்க.]

Address by Thiru K. K. Shah, Governor of Tamil Nadu, to the Members of the Tamil Nadu Legislative Assembly and the Tamil Nadu Legislative Council, assembled together at the Assembly Chambers, Fort St. George at 11 a.m. on Friday, the 2nd February 1973.

Hon'ble Members of the Legislature,

I deem it a pleasant privilege to welcome you all to this joint session of the Legislature.

2. I consider it my duty to refer, at the outset, to the grievous loss suffered by the State in particular and India as a whole, in the demise of Thiru C. Rajagopalachari, affectionately

1973 பிப்ரவரி 5]

known as Rajaji. In his passing away, we lost a guide, a philosopher and a prophet of dissent. Over the years, he strode the stage of the World like an intellectual colossus. A great force in the days of the independence movement and after, he led the State as Premier in the pre-independence days and later as Chief Minister. We will not see the like of him for many years. We should consider ourselves privileged that he lived and worked amongst us in this State.

3. During the year gone by, the State had more than its share of natural calamities. An unseasonal South-West monsoon threatened us with drought. The delayed rainfall in many areas led to loss of a major part of the groundnut crop and resulted in many districts facing a shortage of drinking water. Promptly, Government sanctioned relief measures at a cost of Rs. 1.25 crores. Fortunately, with the onset of the North-East monsoon, the effects of drought were got over and the situation ameliorated. No sooner had we recovered from this, than there was a severe cyclonic storm, causing extensive damage to roads, houses, buildings, irrigation dams and fields, in the districts of South Arcot, Coimbatore, Tiruchirappalli, Thanjavur, Nilgiris, Chingleput, North Arcot, Dharmapuri, Salem and Madras. Nearly 1,80,000 families lost their houses and the paddy crop was damaged totally in 28,000 acres and partly in 1,70,000 acres. Our estimate of losses, as a result of this cyclonic outburst, runs to Rs. 40 crores. We have made a detailed assessment of the damage and requested Government of India to assist us with loans and grants to the extent of about 25 crores of rupees to repair roads, irrigation works, to help our farmers to reclaim their sand-cast lands and to rebuild their houses. The Government of Tamil Nadu, in anticipation of assistance from the Government of India sanctioned immediately Rs. 5 crores for relief works. The entire administration was geared to help those affected by the floods and should be congratulated for their dedicated work. I am confident that generous assistance will be coming forth from the Central Government, whose team of officials has already inspected the damages and submitted its report.

4. The floods and the drought have affected an otherwise rosy agricultural picture. We have, therefore, to proceed carefully in assessing our marketable surplus. Our general approach is to

have a controlling share of the marketable surplus in Government hands, so that the vagaries of trade may not create imbalances in distribution. We have, therefore, decided to impose a levy of 20 per cent on the purchases by dealers in certain areas of the State which contribute largely to the marketable surplus. This will enable us to get sufficient stocks for assisting the distribution system for the benefit of the weaker sections and to fulfill our commitment to the Central Government.

5. The Tamil Nadu Civil Supplies Corporation has made arrangements for procuring pulses from major producing States and has also established a number of retail shops in Madras City and other urban centres of the State. This net-work for direct retail distribution of essential commodities will be extended. At present, the shops are distributing sugar, dhalls, wheat and wheat products, apart from rice in Madras and Coimbatore. The Consumer Co-operative movement is also being revitalised and the managements of the Super markets are being reorganised. This type of controlled distribution is intended to safeguard against the malpractices of trade and curb the tendency to push up prices. The phenomenon of price-rise can be controlled by the State only with the help of Central monetary and fiscal policies.

6. Increase in agricultural production is a condition precedent to attainment of growth with stability. But, this depends on assured supply of water, fertilisers and pesticides. Fertilisers have been very much in short supply. Whereas our requirement is 2.74 lakhs tonnes of nitrogen, we have received only 1.30 lakhs tonnes from the Government of India during 1972–73 as against a supply of 2.14 lakhs tonnes of nitrogen during 1971-72. We have requested the Government of India to take immediate measures to increase indigenous production of fertilisers and to import additional quantities of fertilisers on a fairly long-term basis.

7. Water resources of the State have been almost fully exploited. The recent floods have underlined the imperative need for better maintenance of our irrigation systems. We have to go in for rationalisation and modernisation of these systems. We have, therefore, made proposals for aid from the World Bank for modernisation of the Cauvery irrigation system, through the Government of India who, we hope, will clear them as early as

possible. Simultaneously with better use of surface water, we have to explore proposals for conjoint use of groundwater and surface sources. We have a massive programme for digging open wells and tube-wells with the aid of the Agricultural Refinance Corporation and the World Bank. This programme had faced a few problems in regard to details of implementation. These problems are now in the process of being resolved. Thanks to the helpful attitude of the Agricultural Refinance Corporation in understanding and resolving our difficulties, I am now confident that the programme will gather momentum. We have submitted a proposal costing Rs. 11 crores to the Government of India to locate and estimate our groundwater resources scientifically. I hope this will be cleared and assisted by the Government of India.

8. Planning for utilisation of water resources as well as other natural resources has to be on a regional basis and cannot be confined within a State's boundaries. The States of Mysore, Tamil Nadu, Kerala and Andhra Pradesh have to plan for utilisation of the water resources of the region on an intergrated basis. I would suggest for the consideration of all these four States, the formation of a Western Ghat Development Corporation to exploit the untapped water and power resources in this region.

9. During the last year both the Industrial and Agricultural sectors in the State were affected on account of shortage of power. Failure of the south-west monsoon, particularly in the catchment areas, had led to the depletion of storage in the hydel reservoirs in our State as well as in the neighbouring States. With the withdrawal of supply of power that was available from other States, the power supply situation has become very critical. A sharp fall in power generation at Neyveli, due to a variety of reasons, multipled our difficulties. The cumulative impact of all these difficulties has compelled us to impose a power cut, the adverse effect of which on the economy as a whole is yet to be fully assessed. One thing, however, is clear. Bhabha's famous dictum "No power is as costly as no power" has been brought home to us. The shortage of power is a world-wide phenomenon. But we have to plan ahead, benefiting from the lessons of recent history. As a short-term measure, steps should be taken immediately to improve the produc-

tion of power at Neyveli. Our representations to the Centre, in this regard, have not gone in vain. I am happy to report that the management at Neyveli has taken steps to improve the production of lignite and the generation of power. In addition, the conversion to fuel oil of some of the thermal units at Neyveli, which are lying idle at present for want of sufficient lignite, will improve the position. Clearance has been given by the Government of India for this conversion, which is estimated to take eighteen months.

10. As a long-term measure, we have pressed for a second mine-cut at Neyveli with a view to setting up another thermal complex of 1,000 M.W. capacity. The second mine-cut will take nearly eight years to be completed and the sooner a decision is taken, the better for the future of the State and the country. I would, therefore, request the Government of India to give early clearance for this project. Equally important are the expansion of the capacity of the Kalpakkam Atomic Power Plant and the establishment of two new thermal stations at Mettur and Tuticorin respectively. We are looking forward to early clearance of these Pproposals.

11. Turning to the industrial sector, the year gone by has been one of consolidation. But, shortage of power and raw material has handicapped all our industrial units. In spite of this, many of them have made progress. One important development during the year was the incorporation of Salem Steel Plant Limited as a separate company to undertake the construction of the Steel Plant at Salem. The Managing Director has also been appointed.

12. In regard to revival of sick mills, I am glad to inform you that the Tamil Nadu Textile Corporation has so far taken over thirteen mills, employing 9,962 persons. This includes six units which have been taken over recently. These will be commencing production shortly. I am glad to say that out of the seven units taken over earlier, five are working at a profit.

13. In spite of all that has been done on the agricultural and industrial fronts, the problems of unemployment and under employment and related poverty continue to cause concern. This is an All-India problem. Whatever is possible is being done by the State. We have initiated programmes costing nearly Rs. 10 crores including the crash scheme for rural employment at a cost of

Rs. 3. crores, the rural roads programme at a cost of Rs. 3 crores, the youth service corps scheme at a cost of Rs. 61 lakhs and the drought prone areas programme at a cost of Rs. 1.31 crores. Mention may also be made of the special apprenticeship programme for engineers and loan assistance scheme for craftsmen. These programmes are in addition to the substantial labour intensive labour intensive schemes included in our normal plan and non-plan investment.

14. For the year 1972–73, the annual plan was fixed at about Rs. 115 crores. The schemes are being implemented and it is expected that the plan for 1972–73 will be fulfilled. During the discussions held between Chief Minister and the Planning Commission, the Plan for 1973–74 has been fixed at Rs. 120 crores. The total five-year outlay will now come to Rs. 534 crores as against Rs. 519 crores earlier approved by the Central Planning commission.

15. In this context, considerable importance should be attached to the visit of the Sixth Finance Commission to the State in January 1973. Our views regarding the allocation of resources have been placed before them. I would like to draw your attention to a few important points, urged by us. We have pleaded, for restoring the primacy of the Finance Commission as a channel for routing resources to States. Our view is that all the needs of the States, both plan and non-plan including the minimum need programmes approved by the National Development Council, should be gone into by the Finance Commission, in consultation with the planning Commission. The Finance Commission should recommend grants-in-aid and devolution of taxes taking into account the overall picture. So far as the plan grants are concerned, the FFinance Commission should recmmend the principles on which grants-in-aid should be given. The Planning Commission should work on the basis of these principles from year to year.

16. We have urged that the criteria for central assistance for Plan Schemes should be reconsidered in the light of the adoption of a national minimum needs programme. The National Development Council has accepted a minimum needs programme to bring up all areas of the country to specified norms. This means that the plans of various States will include adequate provision for this

programme. Once this is done, and the needs of backward tracts of various States have been taken care of through such a programme, there is no justification to adopt other criteria of backwardness such as per capita income either for extending central assistance or for devoluing central taxes.

17. We have requested the Finance Commission to consider the need to give adequate debt relief to all States. Considerable outlays obtained as loan from the Centre have to be utilised for provision of infra structural facilities and no tangible revenue can be expected from such expenditure. Such loan assistance should be treated as grants so that the debt burden on the States can be reduced.

18. Another important point we have raised concerns the need to remove disparity of emoluments between the Central Government employees and the employees of the State Government. The resources of the State are relatively inelastic. We have, therefore, pleaded with the Finance Commission to give a pay equalisation grant to all States to ensure parity between the State and Central emoluments. I do hope that these aspects will be duly taken into account by the Finance Commission. This becomes particularly urgent in view of the forthcoming report of the Central Pay Commission.

19. We are committed to the goals of removal of poverty and unemployment, and elimination of social and economic backwardness. We have set up a State Planning Commission to draw up a perspective plan for the State for the ten years covering the Fifth and Sixth Plans. A draft Plan frame drawn up by the State Planning Commission has been placed before the Legislature and the public Active work is going on in regard to the finalisation of the Fifth Five-year Plan and the perspective plan covering the Fifth and Sixth Plan periods. In this context, I would like to refer to the emphasis laid by the Chief Minister in his speech before the National Development Council on the assurance of adequate supplies of raw materials and power as necessary inputs for implementation of the Plan. Equally important is the suggestion made by him to set up a National Taxation Enquiry Commission to look into the incidence of taxes and provide for incentives to save and

invest. I attach particular importance to the idea that people should not look up to Government all the time for jobs. There should be middle class entrepreneurs ready to save and invest. It is with a view to restoring he incenives to them to save and invest that Chief Minister has made the suggestion that the income-tax structure be reorganised. This will also enable Government to reduce the evils of unaccounted money.

20. Before I conclude, I would like to refer to the vital question of prices and wages. Price policy has to be settled on the basis of national decisions in regard to monetary and fiscal matters. While we agree on the emphasis laid on food prices, we would like to urge that availability of industrial raw materials, money supply, wage policy and the structure of Central taxes have equally important roles to play in determining prices. All these levers should be operated so as to ensure stability of prices. A comprehensive wage-price income policy should be evolved and implemented. In evolving this policy, care has to be taken to ensure that the problems of those who have no jobs are continually kept in mind. The large masses of our people below the poverty line should be kept always in the picture.

21. One of the important bills that are to be considered by this session relates to nationalisation of bus transport. As you are aware, Government of Tamil Nadu have taken a decision to nationalise all bus transport in the State on the basis of a phased programme. This represents yet another step forward in the progress of the State towards socialism. I hope the House will welcome this measure.

22. The path of evolution of democracy does not always run smooth and is strewn with obstacles and difficulties. We should all do our best to get over these difficulties and ensure smoother progress and order by evolution. I am confident that the Tamil Nadu Legislature in conformity with its long and glorious traditions will continue to conform to the norms of democratic and parliamentary processes and provide demonstrative proof that parliamentary institutions are the best instruments of accelerating the pace of prosperity with justice.

23. We have yet to travel a long way. In these troubled days, if we can be the torchbearer of determined dedication to strengthening of force of understanding, co-operation and sustained hard work in the service of teeming masses, posterity will bless us. May your efforts and wise counsels be the harbinger of an era of peace and prosperity.

Vanakkam

தமிழ் நாடு சட்ட மன்றம்

செவ்வாய்க்கிழமை, 1973 பிப்ரவரி 6.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்ற மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் [திரு. ம. பொ. சிவஞானம்] அவர்கள் தலைமையில் சட்ட மன்றம் கூடியது.

1. வினாக்கள்–விடைகள்.

Unemployed Craftsmen

* 31. Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(a) whether the unemployed craftsmen passed out from the Industrial Training Institutes were directed to contact the Assistant Directors of Industries and Commerce in organising Industrial Co-operative Societies and Enterprises; and

(b) if so, the details thereof?

வேலையற்றிருக்கும் கைவினைஞர்கள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) தொழில் பயிற்சிப் பள்ளிகளிலிருந்து தேர்வு பெற்று வேலையற்றிருக்கும் கைவினைஞர்கள் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்—நிறுவனங்கள் ஆகியவற்றை அமைக்க தொழில்-வணிகத் துறையின் உதவி இயக்குநரோடு தொடர்பு கொள்ளுமாறு கூறப்பட்டனரா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) 10 பயிற்சியாளர்கள் ஒன்றாகச் சேர்ந்து ஆளுக்கு ரூ. 10 முதல் ரூ. 1,000 வரை பணமாக முதலீடு செய்யவேண்டும். பிறகு அவர்கட்கு தொழில் கூட்டுறவு வங்கி, முதலீட்டுப் பணத்தைப்போல் பத்துப் பங்கு பணமும் கடனாக உதவி, தொழிற் கூட்டுறவு அமைப்பு ஏற்பட உதவி செய்யும்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : தலைவரவர்களே, ஆண்டு ஒன்றுக்கு இந்தப் பள்ளியிலிருந்து பயிற்சி பெற்று வெளியே செல்லக்கூடியவர் எண்ணிக்கை எவ்வளவு? அவர்களில் எவ்வளவு பேர் இந்தத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்துப் பணி புரிகிறார்கள் என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

[1973 பிப்ரவரி 6

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, படித்து வெளியேறியவர் பற்றிய கணக்கு என்னிடமில்லை. ஆனால் இந்தத் திட்டத்தை யாரும் இதுவரை பயன்படுத்தி வந்ததாகத் தெரியவில்லை. பின்னாலே இதுபற்றி மறுபடியும் பரிசீலனை செய்யப்பட்டதில், இந்த ஆயிரம் ரூபாய் ஒரு தனி நபருக்கு, ஐ.டி.ஐ. படித்த மாணவருக்குக் கொடுக்கலாம் என்ற திட்டம் போதவில்லை யென்ற முடிவுக்கு வந்து, இப்போது 5,000 ரூபாய் வரை அந்தக் கடனைத் தரலாம் என்று அரசு முடிவெடுத்திருக்கிறது.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : தலைவரவர்களே, எத்தனை ஆண்டுகள் இந்தப் பரிசோதனை நடந்து இந்தத் திட்டம் செயல்படவில்லையென்ற உண்மையைக் கண்டுபிடிக்க முடிந்தது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே இதை முடிவு செய்தோம். அதற்குப் பின்னாலே 1972-வது வருடம் 7-வது மாதத்திலே இந்த மாதிரி ஒரு திட்டத்திற்கு யார் வேண்டு மானாலும் மனுச் செய்யலாமென்று அறிவித்திருந்தது. அதற்குப் பின்னாலே இதுபற்றிய முடிவை மாற்றிக்கொண்டிருக்கிறோம்.

Recruitment of apprentices through the Employment Exchanges

* 32. *Q*.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government of India have informed the Director of Employment and Training not to compel the recruitment of apprentices through the Employment Exchanges; and

(*b*) if so, the details thereof?

வேலை வாய்ப்பு நிலையங்கள் மூலம் தொழில் பழகுவோரைச் சேர்த்துக்கொள்ளுதல்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தொழில் பழகுவோர் வேலை வாய்ப்பு நிலையங்கள் மூலம் தான் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்று கட்டாயப்படுத்த வேண்டாம் என வேலை வாய்ப்பு-பயிற்சித் துறை இயக்குநருக்கு இந்திய அரசு தெரிவித்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

1973 பிப்ரவரி 6]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) : 1961-ஆம் ஆண்டுத் தொழில் பழகுவோர் சட்டத்தின் விதித் துறைகளை விளக்குகையில், தொழில் பழகுவோர்களை வேலைவாய்ப்பு அலுவலகங்களின் வாயிலாக வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று தொழிலதிபர்களைக் கட்டாயப் படுத்த இயலாதென மட்டுமே 1971-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் இந்திய அரசு வேலைவாய்ப்புப் பயிற்சித் துறை இயக்குநருக்குச் சுட்டிக்காட்டியுள்ளது.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : தலைவரவர்களே, கட்டாயப்படுத்த வேண்டா மென்று மத்திய அரசு சொன்னதற்கான காரணங்கள் யாவை ? இந்த அரசி னுடைய கணிப்பிலே அது சரியான யோசனை என்று கருதுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, தொழிற்சாலைகளிலே 'அப்பான்டிஸ் ஆக்ட்' படி 'அப்பரன்டிஸ்' எடுக்கப்படுகிறார்கள். இந்த 'அப்பான்டிஸ்'கள் இப்போது எம்பிளாய்மென்ட் எக்ஸ்சேன்ஞ் மூலம் எடுக்கக் கட்டாயப்படுத்த விரும்பவில்லையென்று தான் தெரிகிறது. ஆங்காங்கு உள்ள ஐ.டி.ஐ. நிறுவனத்தை நடத்துகிறவர்கள் அடிக்கடி இந்தத் தொழிற் சாலைகளுக்குச் சென்று பார்த்து, 'கோ ஆர்டினேஷன்' மூலம் இந்த அப்பரன் டிசை ஐ.டி.ஐ. பயிற்சிப் பள்ளியிலிருந்து எடுக்கக்கூடிய ஒரு முயற்சியை நாம் செய்து வருகிறோம்.

Industrial Refinery

*33. *Q*.—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN) : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether the Tamil Nadu Industrial Development Corporation has applied for the issue of a licence for opening an Industrial Refinery in Tuticorin ; and

(*b*) if so, the details thereof?

தொழிற் பொருள்களைத் தூய்மைப்படுத்தும் தொழிற்சாலை

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தூத்துக்குடியில் தொழிற் பொருள்களைத் தூய்மைப்படுத்தும் தொழிற்சாலை (Industrial Refinery)ஒன்றைத் தொடங்குவதற்கு உரிமம் வழங்கும்படி தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் விண்ணப்பித்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ): தூத்துக்குடியில் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை ஒன்று நிறுவுவதற்கு முன்னுரிமை பெற தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் இந்திய அரசுக்கு விண்ணப்பித்துள்ளது. இந்திய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

Self-employment Scheme

* 34 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) the number of persons who received assistance during 1971–72 under self-employment scheme, introduced by the Government in Salem district;

(*b*) the amount disbursed to them;

(*c*) the amount earmarked for this purpose during 1971-72; and

(*d*) whether the scheme is found fruitful?

சொந்தத் தொழில் திட்டம்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—.

(அ) சேலம் மாவட்டத்தில் அரசால் தொடங்கப்பட்ட சொந்தத் தொழில் திட்டத்தின் கீழ் சென்ற நிதியாண்டில் (1971-72) உதவி பெற்றவர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களுக்கு வழங்கப்பட்ட தொகை எவ்வளவு?

(உ) இதற்காகச் சென்ற நிதியாண்டில் (1971-72) ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(எ) இத்திட்டம் பயனளித்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஒருவருமில்லை.

(இ) ஏதுமில்லை.

(உ) ரூ. 2,00,000.

(எ) தொழிற்பயிற்சிப் பள்ளிகளில் பயின்று வேலையின்றி இருக்கும் 3,000 பேருக்கு தலா ரூ. 1,000 பெறுமான கருவிகளும் உபகரணங்களும் கொடுத்து அவர்கள் சுயமாக வேலை ஏற்றுச் செய்வதற்கான ஒரு திட்டத்திற்கு அரசு 1971-ஆம் ஆண்டு ஒப்பளித்தது. அண்மையில் இத்திட்டத்தை மறு

ஆய்வு செய்து, கடன் உதவித் தொகையை தொழிலுக்குத் தக்கவாறு 5,000 ரூபாய் அல்லது 2,000 ரூபாய் அல்லது 1,000 ரூபாய் என அதிகப்படுத்தி திருத்திய திட்டமொன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தை வேலையில்லா கைத்திறன் வினைஞர்கள் தங்கள் நன்மைக்கும், சுயமாக வேலை ஏற்றுக் கொள்ளவும் பயன்படுத்திக்கொள்வார்கள் என்று அரசு நம்புகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, ஒருவருக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்பதாகச் சொன்னதாக அறிகிறேன். ஆயிரம் ரூபாய் கொடுப்பதாக இருந்த நிலைமையில் பலர் வரவில்லையென்று அமைச்சரவர்கள் கூறினார்கள். ஏன் வரவில்லை என்பதை அமைச்சரவர்கள் கூறுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, கூட்டுறவுத் துறையிலே வரவில்லையென்று சொன்னேன். இதற்கும் அதே கதிதான். சேலத்திலே 15 பேர் வந்திருக்கிறார்கள். 12 ஆயிரம் ரூபாய் செலவாகியிருக்கிறது. பொதுவாக நாம் பணத்தைக் கொண்டு 'டூல்ஸ்' வாங்கிக் கொடுத்தோம். சிறு 'ஒர்க்ஷாப்', 'ரிப்பேர் ஷாப்' வைக்க வேண்டுமென்று கொடுத்தோம். தேவையான அளவுக்குப் பணம் போதவில்லை என்பதுதான் சரியான காரணமாக இருக்குமென்று கருதுகிறேன். ஆகவேதான் ரூ. 5 ஆயிரமாக உயர்த்திக் கொடுத்தால் வரலாமென்று முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. கிட்டத்தட்ட இந்த ஆண்டு சேலத்தில் மட்டும் 46 பேருக்கு 1 லட்சத்து 85 ஆயிரம் ரூபாய் கொடுப்பதற்கு நாம் தொகையை உயர்த்தியிருக்கிறோம். இந்தத் திட்டம் பெரும்பாலும் ஏற்கப்படுமென்று நம்புகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்தப் பள்ளியை விட்டு வெளியே வருகிற மாணவர்கள் தனியாகத் தொழில் வைத்து இயக்குவதற்காக அந்தப் பணம் அளிக்கப்படுகிறது. தனியாகத் தொழில் செய்ய முடியுமா என்ற ஐயம் அந்த மாணவர்கள் பலருக்கு இருக்கிறது என்பது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா? அதோடு அவர்கள் பள்ளியில் இருக்கிற நேரத்திலேயே தனியாகத் தொழில் நடத்துவதற்குரிய ஒரு பாடத் திட்டத்தை அவர்களுக்கு அளிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, அதற்குப் பெயரே தொழிற் பயிற்சிக் கல்வி தான். அந்தப் பள்ளியில் படித்தாலே தொழில் செய்கின்ற பயிற்சி ஏற்படும். இன்னும் எந்த அளவுக்கு அவர்களுக்கு அதிகமாகப் பயிற்சி கொடுப்பது என்பது வேறு பிரச்சினை. உண்மையிலேயே ஐ.டி.ஐ. பாய்ஸ் கூட இல்லை, இன்ஜினியரிங் படித்தவர்களே தனியாகத் தொழில் என்றால் தயக்கம் காட்டுகிறார்கள். அதற்குப் பல காரணங்கள்

இருக்கின்றன. முதல் போட வேண்டும், சீட் கேப்பிடல் போட வேண்டும். நாமே சீட் கேபிடல் கொடுத்து, நூற்றுக்கு நூறு நாமே கடன் கொடுக்கிறோம். இடம், கட்டிடம் வேண்டும். அதை நாம் கொடுப்பதாக ஏற்பாடு செய்திருக்கிறோம். இயந்திரங்களை நாமே வாங்கிக் கொடுக்கிறோம். அதை விட சந்திக்க வேண்டிய பிரச்சினை எல்லாம் மூலப்பொருள், மார்க்கெட்டிங் இவைகள் தான். 'பைனான்சை'ப் பொறுத்த அளவில் எந்தவிதமான கஷ்டமும் கிடையாது. இந்த உண்மையான காரணத்தால்தான் எத்தனையோ பேர் தொழில் தொடங்க தயக்கம் காட்டுகிறார்கள். இந்த இரண்டும் நம்முடைய மாநில அரசாங்கத்தின் அதிகாரத்தில் இல்லை. இதுதான் உண்மையான காரணம். கொஞ்சம் சம்பளம் கிடைத்தாலும் சரி, எங்கேயாவது ஒரு இடத்தில் மாதச் சம்பளம் வாங்க வேண்டுமென்ற உணர்வுதான் இருக்கிறது. இதற்கு ஊக்கமில்லையென்று கூட காரணம் சொல்ல முடியாது. இப்படிப்பட்ட சிக்கல்கள் தனியாகத் தொழில் ஆரம்பித்தால் இருக்கின்றனவென்று நாம் கண்டுபிடித்திருக்கிறோம். இதை மாற்றியமைப்பதற்கு நாம் ஒரு திட்டம் தயாரித்து, தமிழ் நாட்டிலுள்ள பெரிய பெரிய தொழிற்சாலைகளில் எங்கெங்கே இந்தத் துணைத் தொழிற்சாலைகள் (ஆன்சிலரி இண்டஸ்டிரீஸ்) ஏற்படுத்த முடியுமென்று நாமே அறிக்கை தயாரித்து, நாமே அவர்களுக்குத் திட்டம் போட்டுக் கொடுத்துச் செய்யலாமோ என்று முயற்சி எடுத்து வருகிறோம். எந்த அளவுக்கு வெற்றி தருமென்று நாம் அனுபவத்தில் பார்க்கலாம்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: தலைவரவர்களே, எத்தனை பேர் இந்தத் தொழிற்சாலைகளை ஏற்று நடத்திருக்கின்றார்கள் என்ற விவரம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, இதிலே வெற்றி அதிகமாக எதிர்பார்க்க முடியாது. சேலத்தில் 15 பேர் வாங்கியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில், கிராமங்களிலே சிறுசிறு பட்டரைகள் (ஓர்க்ஷாப்புகள்) வைத்து, டிராக்டர்கள் பழுது பார்க்கவும், ஆட்டமோபைல்ஸ் ஓர்க்ஷாப் சிறிய அளவில் வைக்கவும் ஏற்பாடு இருக்கிறது. இதிலும் வெற்றி சரியாக ஏற்படவில்லை. அங்கேயுள்ள பயிற்சி பெற்ற மாணவர்கள் அதிக ஆர்வம் காட்டுவதாக நமக்குத் தெரியவில்லை.

திரு. சா. கணேசன்: தலைவரவர்களே, 2 ஆயிரம், 3 ஆயிரம் ரூபாயோடு மட்டுமல்லாமல், 5 ஆயிரம் ரூபாய் வரை இந்தத் தொழில் செய்யக்கூடிய நபர்களுக்குத் தொகை கொடுப்பதோடு மட்டுமின்றி அல்லது மூலப்பொருள்கள் கொடுப்பதோடு மட்டுமின்றி, அவர்கள் இன்னின்ன பண்டங்களைச் செய்ய வேண்டும் இன்னின்ன மாதிரிச் செய்யவேண்டும் இன்னின்ன துறைகள் அவற்றைப் பயன்படுத்த வேண்டுமென்று இரண்டுக்கும் ஒரு 'கோஆர்டி

னேஷன்' ஏற்படுத்தி, அதற்கு இதைத் துணைத் தொழிலாக்கி, நட்டு, போல்டு மாதிரி சப்ளை செய்யக்கூடியதாக அமைத்து, பல பெரும் தொழில்களுக்கு இந்தச் சிறு தொழில்களை, உப-தொழில்களாக்க வழி வகைகளை அரசு செயல்படுத்தி, கால் கோலிவிடுமானால் இந்தத் துறை செம்மையாகப் பயன் தருமென்பதை அரசு உணர்ந்து, அந்த நெறியிலே செயல்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, அதைத்தான் இப்போது செய்து வருவதாக விளக்கிச் சொன்னேன். ஆங்காங்கே பெரிய தொழிற்சாலைகள் இருக்கின்றன. திருச்சியில் ஹெவி பாய்லர் தொழிற்சாலை இருக்கிறது. அதற்குப் பக்கத்திலே ஒரு இன்டஸ்டிரியல் எஸ்டேட்டை உருவாக்கியிருக்கின்றோம். அங்கே தொழில் செய்ய முன்வருபவர்களுக்கு அந்த வசதிகள் செய்து கொடுக்கின்றோம். அதே போல அம்பத்தூரில் செய்கிறோம். இப்படிப் பெரிய தொழிற்சாலைகள் இருக்கிற இடங்களில் எளிதாக முடிந்துவிடுகிறது. ஆனால் பரவலாக இருக்கும் தொழிற்சாலைகளுக்குத் தான் தனியாக ஒரு திட்டம் போட்டு எல்லாத் தொழில் அதிபர்களையும் அழைத்து, அவர்களுடைய தேவைகளைக் கணித்தெடுத்து, நாமே இதற்கு 'பீசிபிள் ரிப்போர்ட்' தயாரித்து, அதை மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். unempoyment scheme என்ற திட்டத்தின் அடிப்படையில் அவர்களின் உதவி கிடைத்தால், குறைந்தபட்சம் இன்ஜினியர்களுக்காவது சொந்தத் தொழில் கொடுத்துவிடலாமென்ற நம்பிக்கை இருந்து வருகிறது.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, இது போன்ற பயிற்சி பெற்ற நபர்கள் என்னென்ன தொழில்களைச் செய்யலாம் என்று அரசாங்கம் சிபாரிசு செய்கிறது என்று அறிய விரும்புகிறேன். இதற்கான மூலப் பொருள்கள் தமிழ் நாட்டிலே கிடைக்கின்றனவா? இதற்குக் கொடுக்கக்கூடிய மான்யத்தை மத்திய சர்க்கார் வழங்குகிறதா, மாநில சர்க்கார் வழங்குகிறதா? விவசாய சம்பந்தமான பயிற்சி பெற்ற பிறகு, டிராக்டர் போன்றவைகளுக்கு தமிழ் நாடு அரசாங்கம் என்ன உதவி செய்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்தத் திட்டத்தினைப் பொறுத்த வரையில், நம்முடைய பணம் தான் கொடுக்கப்படுகிறது. இதை நாம் சிறிய சிறிய பட்டரை வைக்கக் கொடுக்கிறோம். பணத்தைக் கொடுக்கும்போது அவர்களுக்கு 'டூல்ஸ்' அரசு வாங்கிக்கொடுக்கிறது.

Administrator-General of Tamil Nadu

* 35. *Q.*—THIRU M. ARUMUGASWAMI: Will the Hon. the Minister for Industries be pleased to state the number of trusts now administered by the Administrator-General of this State?

[1973 பிப்ரவரி 6

தலைமை நிர்வாக அதிகாரி, தமிழ்நாடு

திரு. எம். ஆறுமுகசாமி : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இம்மாநிலத்தின் தலைமை நிர்வாக அதிகாரியால் தற்போது எத்தனை அறக்கட்டளைகள் நிர்வகிக்கப்படுகின்றன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசுப் பொறுப்புச் சொத்தின் ஆட்சியாளர் அவர்களால் தற்போது நிர்வகிக்கப்பட்டு வரும் டிரஸ்டுகளின் எண்ணிக்கை 145 ஆகும்.

திரு. எம். ராஜா அய்யர் : இந்த அறக்கட்டளைகளின் மூலதனம் எல்லாம் கட்டாயமாக இங்குதான் இருக்கவேண்டுமென்று நிபந்தனை ஏதாவது இருக்கின்றதா ? அல்லது எந்த வங்கியிலும் மூலதனத்தைப் போடலாமா ? ஏனென்றால் அரசாங்கத்தில் இந்த மூல்தனத்தைக் கொடுத்தால், மிகக் குறைவான வட்டி கொடுக்கப்படுகிறது. பிற வங்கிகளில் அந்த மூலதனத்தைக் கொடுத்து அறக் கட்டளையை ஏற்படுத்தினாலும், அதையும் இந்த நிர்வாக அதிகாரி அவர்களுடைய நிர்வாகத்திற்குள்ளே ஏற்றுக்கொள்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது உயர்நீதி மன்றங்கள் நிர்வகிக்கின்ற பொறுப்பாகும். எதெதற்கு அந்தப் பணத்தை இன்வெஸ்ட்மென்ட் செய்கிறார்கள் என்ற விவரம் இல்லை.

Raids on Cinema Houses

* 28. *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN) : Will the Hon. the Minister for Revenue be pleased to state the details of the raid conducted by the officials of the Commercial Taxes Department on Cinema Houses in Madras City during March and April 1972?

திரைப்பட அரங்குகளில் திடீர் சோதனைகள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்) : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சென்னை மாநகரில், 1972, மார்ச்-ஏப்ரல் திங்களில், திரைப்பட அரங்குகளில் வணிக வரித் துறை அதிகாரிகள் நடத்திய திடீர் சோதனைகளின் விவரங்கள் யாவை ?

1973 பிப்ரவரி 6]

THE HON. THIRU P. U. SHANMUGAM : The Commercial Tax Officials conducted 15 raids on cinema houses in Madras City during March 1972 and no irregularities were noticed. No raid was conducted during April 1972.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, தமிழகத்திலுள்ள சினிமாக் கொட்டகைகளை எல்லாம் அரசுடைமையாக்கப் போவதாக முதலமைச்சரவர்கள் அண்மையிலே கூறியிருப்பதாகப் பத்திரிகையிலே பார்த்தேன். அப்படி ஒரு கருத்து அரசுக்கு இருக்கிறதா என்பதையும், அப்படி இருக்குமானால் எப்போது எடுத்துக்கொள்வதாக உத்தேசம் என்பதைப்பற்றியும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அப்படி ஒரு காலம் வரலாம் என்று சொன்னதாகத்தான் தகவலே தவிர, நான் செய்யப்போகிறேன் என்று சொன்னதாகத் தகவல் இல்லை. அப்படியெல்லாம் தேசியமயமாக்கப்படுகின்ற நாளில் சினிமாக் கொட்டகைகளை தேசியமயமாக்கப்படுகின்ற காலம் வரலாமென்றுதான் சொன்னதாக எனக்குத் தகவல்,

15 Acre Ceiling.

* 29. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state :

(*a*) whether it is a fact that the Government of India have recommended to the State Government that the 15 acre ceiling for agricultural lands in the State may be reduced further; and

(*b*) if so, the details of the recommendation?

15 ஏக்கர் உச்ச வரம்பு.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் வேளாண்மை நிலங்களுக்கான 15 ஏக்கர் உச்ச வரம்பு மேலும் குறைக்கப்படலாம் என்று மாநில அரசுக்கு மத்திய அரசு பரிவுரை செய்துள்ளது உண்மையா ?

(இ) ஆமெனில், அப்பரிவுரையின் விவரம் என்ன ?

THE HON. THIRU P. U. SHANMUGAM : (*a*) and (*b*) The Union Minister for Agriculture, Government of India had forwarded in his letter No. 11-16/70, LRU, dated 18th September 1971

addressed to the Chief Minister of Tamil Nadu the recommendations of the Central Land Reforms Committee and desired to know the action taken by this Government. A reply was given to the Union Minister on 7th February 1972. One of the recommendations was that the ceiling for a family of five members might be fixed within the range of 10–18 acres of perennially irrigated land or irrigated land capable of growing two crops, taking into account soil conditions, productivity of land, nature of crop grown, etc. The recommendations were very general, intended for all the States and had no particular bearing on the 15 standard acre ceiling enforced in this State by the Tamil Nadu Land Reforms (Reduction of Ceiling) Act, 1970 (Act 17 of 1970).

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவாவர்களே, மத்திய விவசாய இலாக்காவினுடைய துணை அமைச்சர் திரு. ஏ. வி. ஷிண்டே அவர்கள் ராஜ்ய சபையில் இதைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள். அதில் தமிழ் நாடு அரசு 15 ஏக்கருக்கும் குறைத்து உச்ச வரம்பு வைக்க வேண்டுமென்று மத்திய அரசு சிபார்சு செய்திருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே தமிழ் நாட்டைப் பொறுத்து அந்தக் கருத்து இருப்பதாக அவர்களுடைய பேச்சிலிருந்து நான் அறிந்தேன். தமிழக அரசு அக்கருத்தை ஏற்றுக்கொள்ள இருக்கிறதா! அப்படிப்பட்ட ஏதாவது கருத்து இருக்குமோ என்கின்ற அச்சம் தமிழகத்திலே பலருக்கு எழுந்துள்ளது. நிலைமையை அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தினால் நன்றாக இருக்குமென்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்த அமைச்சர் அவர்கள் ராஜ்ய சபையிலே இப்படி ஒரு கேள்விக்குப் பதில் தெரிவித்தார் என்ற செய்தியைப் பத்திரிகையிலே படித்தபின் தமிழக அரசின் சார்பிலே விளக்கங்கள் எழுதியிருக்கிறோம். தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில், 15 ஏக்கர் என்று நான் சொல்லியிருக்கிறேன். ஆனால் இந்த நிலச் சீர்திருத்தக் குழு மத்திய அரசால் அமைக்கப்பட்டது. இந்த நில சீர்திருத்தத்தில் 10 ஏக்கரிலிருந்து 18 ஏக்கர் வரையில் வைத்துக்கொள்ளலாம், அது 'பொரன்னியலி இர்ரிகேடட்' ஆக இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. அந்த 'பொரன்னியலி இர்ரிகேடட்.' என்று சொன்னவுடன், நான் அந்தக் குழுவிலே அந்த விவகாரத்திலே எழுப்பிய கேள்வி 'பொரன்னியலி இர்ரிகேடட்' என்பதற்கு அவர்கள் சொல்கின்ற முழு விளக்கம் என்ன என்று கேட்டேன். 12 மாதம் தண்ணீர் பாய்வதற்கு வாய்ப்புள்ள பூமி என்று அவர்கள் தெரிவித்தார்கள். அப்படி எடுத்துக்கொண்டால், தமிழ் நாட்டிலே ஒரு சென்ட் கூடக் கிடையாது என்று நான் தெரிவித்தேன். அதற்குப் பிறகு எப்படி அதைப்

போடலாமென்று யோசித்து, இரு போக விளைச்சல் தரக்கூடிய பூமியாக இருந்தால், அதற்குச் சமமாக இருக்கிறதென்று கொள்ளலாம் என்று கருத்துத் தெரிவித்தார்கள். நான் ஆட்சேபிக்கவில்லை. 10-லிருந்து 18 ஏக்கர் வரை ஒன்று "பொரன்னியலி இர்ரிகேடட்" ஆக இருக்க வேண்டும் அல்லது இரு போக பூமியாக இருக்க வேண்டுமென்று அவர்கள் போட்டார்கள். நாம் 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று போட்டிருக்கும்போது, நிலத்தீர்வையை அடிப்படையாக வைத்து, ஸ்டாண்டர்டு ஏக்கரை நிர்ணயிப்பது என்பது ஏற்கனவே போடப்பட்டிருக்கிற சட்டத்தில் இருப்பது. நாம் அப்படியே ஒப்புக்கொண்டிருக்கிறோம். 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று சொல்லும்போது, குறைந்த பட்சம் 12 ஏக்கரும் 15 ஸ்டாண்டர்டு ஏக்கராக வரும், 60 ஏக்கரும் 15 ஸ்டாண்டர்டு ஏக்கராக வரும். அது நிலத்தீர்வையைப் பொறுத்திருக்கிறது. நமக்கும் அவர்களுக்கும் அதிக வித்தியாசம் கிடையாது. ஏனென்றால் அவர்கள் சொல்லியிருப்பது 54 ஏக்கர் வரையில் போகலாம் என்பது. இங்கு 60 ஏக்கர் வரையில் இருக்கிறது. 6 ஏக்கர்தான் வித்தியாசம். அவர்கள் 10 ஏக்கர் குறைந்தது இருக்க வேண்டுமென்று சொல்வது நம்மிடம் குறைந்தது 12 ஏக்கர் என்ற அளவில் இருக்கிறது. அங்கேயும் வித்தியாசம் அதிகமாக இல்லையென்பதை அந்தக் குழுவிலே முதலமைச்சர் அவர்கள் அதற்கு அடுத்து நடத்திய மகாநாட்டில் விளக்கம் சொன்ன பிறகு, மாண்புமிகு உறுப்பினர் அப்போது திட்டக் குழுவிற்கு அமைச்சராக இருந்த திரு. ஸி. சுப்பிரமணியம் அவர்கள்கூட தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில் அவர் சொல்வது சரிதான் என்று ஒத்துக்கொண்டார்கள். எனவே மாற்றம் தேவையில்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

THIRU A. R. DAMODARAN : Sir, considering the fact that this question of fixing a ceiling on agricultural lands comes within List II and the Central Government have no jurisdiction over the administration of agricultural lands, may I know whether this Government have accepted that the Government of India have the right to recommend anything so far as agricultural lands are concerned?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : சிபாரிசு செய்வதிலே ஒன்றும் தவறு இல்லை என்று கருதுகிறேன். ஆனால் ஆணையிட்டு இதைத்தான் செய்ய வேண்டுமென்று அவர்களும் சொல்லவில்லை. இப்படிச் செய்வது பொருத்தமாக இருக்கும் என்று சிபாரிசு செய்தார்கள். அதை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறதே தவிர, வேறு ஒன்றும் நான் தெரிவிப்பதற்கில்லை.

Tribunals

* 30 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the number of Tribunals constituted for disposal of appeals under section 8 (1) of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Act XXVI of 1963) and under section 7 (1) of the Tamil Nadu Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Act XXX of 1963);

(b) the number of appeals pending before such Tribunals for more than one year; and

(c) whether the Government have any proposal to increase the number of such Tribunals for expeditious disposal of these appeals?

நடுவர் மன்றங்கள்

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (சட்ட எண். 26/1963) 8(1) பிரிவின் கீழும்; தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு சிறு இனாம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (சட்ட எண் 30/1963) 7(1) பிரிவின் கீழும் செய்து கொள்ளப்படும் மேல் முறையீடுகளை விசாரணை செய்ய அமைக்கப் பட்டுள்ள நடுவர் மன்றங்கள் எத்தனை?

(இ) அத்தகைய நடுவர் மன்றங்களிடம் ஓராண்டுக்கு மேல் விசாரணையில் உள்ள மேல் முறையீடுகள் எத்தனை?

(உ) இம்மேல் முறையீடுகளை விரைவில் விசாரணை செய்து முடிக்க இத்தகைய நடுவர் மன்றங்களின் எண்ணிக்கையை உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) 17 நடுவர் மன்றங்கள்.

(இ) 2,711 மேல் முறையீடுகள்.

(உ) ஆம்.

மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர்: வினாக்கள் 23 முதல் 27 வரை ஒத்திவைக்கப்படுகின்றன.

Water Supply in Delta Area

* 36. THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to introduce the turn system for water supply in Delta area in the State this year; and

(b) if so, the details thereof?

கயவாய்ப் பகுதியில் பாசன நீர் வழங்குதல்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் கயவாய்ப் பகுதியில் பாசனத்திற்கு நீர் வழங்க இந்த ஆண்டு முறை வைத்துப் பாசனம் பெறும் நடைமுறையைச் செயலுக்குக் கொண்டு வரும் செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையிலுள்ளனவா?

(இ) ஆமெனில், அவற்றின் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Traffic Survey

* 37. Q.—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) the amount spent on the purchase of Scientific equipment for conducting traffic survey by the Highways Research Station, Madras, during the last five years; and

(b) whether they are being utilised?

போக்குவரத்து ஆய்வு

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கடந்த ஐந்தாண்டுகளில், போக்குவரத்து ஆய்வினை நடத்துவதற்காக அறிவியல் சாதனங்களை வாங்க சென்னை, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் செலவிட்ட தொகை எவ்வளவு?

(இ) அந்தக் கருவிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றனவா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ரூபாய் எண்ணூறு.

(இ) ஆம்.

Drying Facilities for Groundnuts

* 38. *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government are aware that Agriculturists of Tiruchirappalli district who raise groundnuts are harassed for want of drying facilities for their crop which is harvested during November–December monsoon season; and

(*b*) if so, whether the Government consider the installation of suitable driers for their use?

வேர்க்கடலையை உலரவைப்பதற்கான வசதிகள்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நவம்பர்-டிசம்பர் பருவ காலத்தில் அறுவடை செய்யப்படும் வேர்க்கடலையை உலரவைப்பதற்கான வசதிகள் இல்லாமையால், வேர்க்கடலை விளைவிக்கும் திருச்சிராப்பள்ளி மாவட்ட உழவர்கள் அவதியுறுகின்றனர் என்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், அவர்களுடைய பயனுக்காக தகுந்த உலர வைக்கும் இயந்திரங்களை அரசு நிறுவக் கருதியுள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) பொதுவாக நவம்பர்-டிசம்பர் மாதங்களில் பெய்யும் பருவ மழை கடலை காய வைக்க முடியாத அளவிற்கு பெய்வதில்லை. எனவே விவசாயிகள் அறுவடை செய்த கடலையை காயவைக்க

கஷ்டப்படுவதில்லை. 1971-ம் ஆண்டு டிசம்பரில், முசிறி வட்டாரத்தில் அசாதாரண முறையில் மிக அதிக மழை பெய்ததால் நிலக்கடலை உலர்த்துவதில் கஷ்டம் ஏற்பட்டது. அப்பொழுது நிலக்கடலை நீண்ட நாட்களுக்கு நிழலில் உலர்த்தப்பட்டது.

(இ) இப்போதைக்கு அது மாதிரியான திட்டம் இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, குறிப்பாக திருச்சி மாவட்டத்தில் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது இதுமாதிரி சிரமம் ஏற்பட்டு கடலையை காய வைக்க முடியாமல் நஷ்டம் ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். தஞ்சை மாவட்டத்திலே நெல்லைப் பொறுத்து பல இடங்களில் உலர வைக்கிற சாதனங்களை மத்திய அரசாங்கத்தார் அமைத்தார்கள். அம்மாதிரி சில இடங்களில் திருச்சியிலே அமைப்பதற்கு மத்திய அரசுக்கு ஏதேனும் சிரமம் ஏற்படுகிறதா என்று தெரியவில்லை. நம்முடைய மாநில அரசு இப்படிப்பட்ட ஆலோசனையை அவர்களுக்கு வழங்குமா என்று அறிய விரும்புகிறேன். ஏனென்றால் கிட்டத்தட்ட 20 லட்சம் ஏக்கரிலே கடலை நமது மாநிலத்தின் பல பகுதிகளிலே பயிரிடப்பட்டு நமக்கு வெளி நாட்டுச் செலாவணிகளும் கிடைக்கக் கூடிய வசதியிருக்கிறது என்பதையும் அமைச்சர் அவர்கள் கருத்திலே கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, திருச்சி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், நான் முதலிலே குறிப்பிட்டது போல, ஒரு சில காலங்களிலேதான் அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதிலே 'டிரையர்ஸ்', அதைத்தான் அவர்கள் அங்கத்தினர் குறிப்பிட்டார்கள் என்று நினைக்கிறேன், உலர வைக்கும் திட்டம் இப்போது இல்லை என்பதைத்தான் நான் இப்போது குறிப்பிட்டேன்.

திரு. அய்யணன் அம்பலம்: தலைவரவர்களே, இப்போது மதுரை மாவட்டத்தில் பெரியார் பாசனப் பகுதியில் நெல் அறுவடை காலங்களில் உலர வைப்பதற்கு களங்கள் இல்லாமல் ஈரமிருப்பதால், ஊராட்சி ஒன்றியங்களில் களங்கள் அமைப்பதற்கு அரசாங்கம் ஏதாவது மானியம் கொடுத்து ஊக்கம் அளிக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலுமே களம் வைப்பதற்கு ஊராட்சி ஒன்றியங்கள் திட்டம் தயாரித்து அனுப்ப வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி அவைகள் அனுப்புமானால், கவனிக்கப்படும்.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, மாநிலத்திலே அதிகமாகக் கடலை உற்பத்தி செய்யப்படும் மாவட்டம் வட ஆற்காடு மாவட்டம் என்று புள்ளி

விவரம். அந்த மாவட்டத்திற்குக் கடலை உலர வைக்கும் கருவி அமைக்க அரசு மேலும் பரிசீலிக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, அதிகமாக நிலக் கடலை விளைகிற மாவட்டம் வட ஆற்காடு மாவட்டம் என்று அந்த மாவட்ட உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். கோவை மாவட்டத்திலேயும் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, அப்படி தற்சமயம் எதுவுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN: Sir, in view of the unhappy experience in Thanjavur district where such dryers which were installed for drying paddy were not utilised, will the Government consider the desirability of not putting up dryers in any district?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, அப்படி ஒன்றும் வரவில்லை. அப்படி வருமானால், அதைப்பற்றிப் பரிசீலனை செய்யப்படும்.

Banana Cultivation.

* 39. Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether the Department of Horticulture of the Coimbatore Agricultural University has entered into collaboration with the Indian Council of Agricultural Research for Banana cultivation; and

(b) if so, the details thereof?

வாழைச் சாகுபடி

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் தோட்டக் கலைத் துறை, வாழைச் சாகுபடிக்காக, வேளாண்மை ஆராய்ச்சி இந்தியக் கழகத்துடன் உடனுழைப்பு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) ஆம்.

(இ) மத்திய விவசாய ஆராய்ச்சிக் கழகம், நான்காவது ஐந்தாண்டு திட்டத்தின்கீழ் அனைத்திந்திய ஒருங்கிணைக்கப்பட்ட பழ ஆராய்ச்சித் திட்டம் ஒன்றை நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட பல்வேறு பாகங்களில் ஆரம்பித்திருக்கிறது. அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு இடமும், முக்கிய பழப்பயிர்கள் வளரக்கூடிய இடமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. வாழை, பப்பாளி, திராட்சை ஆகிய பழங்கள் பயிரிடுவதற்கு சிறந்த இடமாக தமிழ்நாடு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் கோவையில் 1-6-1971-ல் ஆரம்பித்ததின் காரணமாக, இந்தத் திட்டம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, இப்படிப் பயிரிடப்படுகிற வாழை எந்தெந்த நாடுகளுக்கு அனுப்பப்படுகிறது என்ற செய்தியை அமைச்சரவர்கள் சொல்ல முடியுமாவென்று அறிய விரும்புகிறேன். பி.ப. 4–20

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, தனியாகக் கேள்வி போடவும். ஏனென்றால், இப்போது இதிலே கேட்கப்பட்டிருப்பது, இங்கிருந்து எப்படி ஏற்றுமதி செய்யப்படுகிறது என்பதுதான். எனவே, தனியாகக் கேள்வி போடுவார்களானால், அதைப்பற்றி விளக்கமாகச் சொல்கிறேன்.

THIRU A. R. DAMODARAN: Sir, is there any proposal to use bananas for the manufacture of banana wine which, I believe, is very popular in the West Indies?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, வாழைப் பழத்தின் மூலமாக ஒயின் உற்பத்தி செய்வதில்லை. ஆனால், திராட்சையின் மூலமாகச் செய்வதற்கு இப்போது திட்டம் இருக்கிறது.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவரவர்களே, பொப்பளிக் காய் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்தப் பழத்தை உற்பத்தி செய்கிறார்களே, அதை மக்கள் வாங்குகிறார்களா? அந்தப் பழம் மிக சீப்பாகக் கிடைக்கிற காரணத்தினால், அதை எந்த வகையில் பயன்படுத்துகிறார்கள்? இந்தப் பொப்பளிக் காயை வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்து, அதன் வாயிலாக நமக்குப் பணம் கிடைக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, பொப்பளி அல்ல, பப்பாளிப் பழம் உற்பத்தி செய்கிற திட்டம் இருக்கிறது. பொப்பளி பற்றி விளம்பரம் செய்து அங்கத்தினர் அவர்கள் தெரிவிப்பார்களானால், அதைப்பற்றிக் கவனிக்கப்படும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: தலைவரவர்களே, இப்படி ஆராய்ச்சி செய்வதற்காக 4 இடங்கள் ஒதுக்கப்பட்டிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். எந்த 4 இடங்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, வாழையில் தமிழ் நாட்டில் மத்திய வாழை ஆராய்ச்சி நிலையம் ஆடுதுறை, தஞ்சை மாவட்டத்திலும், தோட்டக்கால் வாழை ஆராய்ச்சி நிலையம், உய்யங்கொண்டான் திருமலை, திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலும், மலை வாழை ஆராய்ச்சி நிலையம், மங்களகொம்பு, மதுரை மாவட்டத்திலும், வாழை ஆராய்ச்சி நிலையம் வேலூரிலும் இருக்கின்றன.

* 40 Q.—THIRU L. BALARAMAN: Will the Hon. the Minister for Agriculture be pleased to state the acreage in which banana has been cultivated under intensive export scheme in North Arcot district?

திரு. எல். பலராமன்: மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

வட ஆற்காடு மாவட்டத்தில் தீவிர ஏற்றுமதி திட்டத்திற்கான வாழை எத்தனை ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: வட ஆற்காடு மாவட்டத்தில் தீவிர ஏற்றுமதித் திட்டத்திற்கான வாழை சுமார் 3,300 ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்டுள்ளது.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, இதற்கு மத்திய அரசாங்கம் என்ன மானியம் வழங்குகிறது? இந்த அதிகாரிகள் தனிப்பட்ட விவசாயிகளிடம் எவ்வளவு நபர்களிடம் தொடர்பு கொண்டார்கள் என்ற தகவல் அரசுக்கு இருக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, தனியாக அப்படிப்பட்ட உதவிகள் எதுவும் செய்யப்படவில்லை. கூட்டுறவுத் துறை மூலமாக அவர்களுக்குக் கடன் கொடுக்கிற திட்டம் இப்போது வந்திருக்கிறது.

Byracon Medicine

* 41 Q.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether it is a fact that 'Byracon' medicine used to kill the red-nosed insects which attack the Cocoanut seedlings is not available now;

(b) whether the growth of cocoanut trees has been affected thereby; and

(c) if so, the action taken thereon?

"பைரகோன்" மருந்து

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தென்னங்கன்றுகளைத் தாக்கும் சிவப்பு மூக்கு பூச்சிகளை கொல்லும் "பைரகோன்" என்ற மருந்து தற்போது கிடைப்பதில்லை என்பது உண்மையா?

(இ) அதனால் தென்னை வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளதா?

(உ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

(உ) வினாவிற்கு இடமில்லை.

Scheme to Reorganise the District set-up of the Agricultural Department

* 42 Q.—THIRU L. BALARAMAN: Will the Hon. the Minister for Agriculture be pleased to state:

(a) whether the Government have formulated any scheme to reorganise the District set-up of the Agricultural Department; and

(b) if so, the details thereof?

மாவட்ட விவசாயத் துறையை மாற்றியமைக்கும் திட்டம்

திரு. எல். பலராமன்: மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) மாவட்ட விவசாயத் துறையை மாற்றி அமைக்க அரசு திட்டம் ஏதும் வகுத்துள்ளதா?

(இ) ஆமெனின், அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஆம். விவசாயத் துறையை வட்டார அடிப்படையில் மாற்றியமைக்கும் திட்டத்தில் மாவட்ட அமைப்பை மாற்றியமைக்கும் திட்டமும் சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டம் பரிசீலனை செய்யப்பட்டு, நிர்வாக சீரமைப்புக் குழுவின் அறிக்கை வெளிவந்த பிறகு மேல் நடவடிக்கை எடுக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, இந்த அறிக்கை எப்போது வெளிவரும் என்று அமைச்சரவர்கள் கூறுவார்களா? இந்த அமைப்பினால் அரசாங்கத்திற்கும், பொது மக்களுக்கும் என்ன நன்மை என்பதையாகிலும் சுருக்கமாக அவைக்கு அமைச்சரவர்கள் கூறுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, இந்தத் திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்று சொன்னேன். இதற்கு முதல் கட்டமாக இன்றையதினம் திருச்சி மாவட்டத்தில் இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது. திருச்சி மாவட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டதற்குக் காரணம் அங்கே அதிகமாகச் செலவில்லாமல், இருக்கின்ற மாவட்ட வேளாண்மை அதிகாரிகளை வைத்துக்கொண்டே ஒவ்வொரு வட்டத்திற்கும் அவர்களை நியமித்து அதன் மூலம் செய்யலாமா என்பதைப் பரிசீலனை செய்து வருகிறோம். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு இந்த அறிக்கையை இப்போது பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். அது வந்ததற்குப் பிறகு மிக நலமாக இருக்கும். இந்தத் திட்டத்தினுடைய நோக்கம் இதுதான். பொதுவாக ஒரு விவசாயி எல்லா பயிர்களையும் செய்கிறார். ஆனால் அந்த விவசாயி சம்பந்தப் பட்ட வேளாண்மைத் துறை அதிகாரிகளைச் சந்திக்கிறபோது ஒருவர் பருத்திக் காகவும், ஒருவர் காய்கறிக்காகவும், ஒருவர் பழ வகைக்காகவும் தனித்தனியாக இருப்பதால், அவர்கள் ஒவ்வொருவரையும் சந்திப்பது கஷ்டமாக இருக்கிறது. அதனாலே மாவட்டத்திலே இருக்கிற மாவட்ட வேளாண்மைத் துறை அதிகாரிகள் வட்டங்களுக்கு அனுப்பப்பட்டு, அதாவது தாலுகாவிற்கு அனுப்பப்பட்டு, அங்கே அந்த மாவட்ட வேளாண்மை அதிகாரிகளின் கீழ் மற்றவர்கள் வேலை செய்வார்களானால், விவசாயிகளுக்கு நலமாக இருக்கும் என்ற காரணத்தினால், அந்தத் திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. அய்யணன் அம்பலம்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொல்லும் போது, நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் அறிக்கையில் இருப்பதாகச் சொன் னார்கள். அந்தக் கமிஷன் ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்களையெல்லாம் அழைத்து, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு தலைவரை அழைத்து, விசாரணை செய்தார்கள். இந்த ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து இதைத் தனியாக எடுத்து விடுவதா அல்லது ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக விவசாய இலாகா செயல்படுமா என்பதை அமைச்சரவர்கள் விளக்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, இதைத் தான் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம் என்று சொன்னேன். ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் எப்படிக் கொடுப்பது என்பதை யோசித்துக்கொண்டிருக் கிறோம். ஏனென்றால் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள் 3, 4 பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் கிராமங் களுக்குச் சென்று எப்படி பணியைக் கவனிக்க வேண்டும், எப்படி அவர்களை ஒருங்கிணைத்து வேலை செய்யலாம் என்று தயார் செய்யப்பட்டது. அவர்கள்

ஒவ்வொருவரும் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களைப் பரிசீலனை செய்து, எந்த வகையில் செய்யலாம் என்பதைப்பற்றி முடிவெடுத்த தற்குப் பிறகு தான் சொல்ல முடியும்.

திரு. என். சுந்தரேசத் தேவர்: தலைவரவர்களே, விவசாயத் திட்டமானது உற்பத்தியைப் பெருக்குவதற்கு பெரு உதவியாக இருந்தது பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்கள். இந்தத் திட்டத்தை பஞ்சாயத்துக் கூட்டு மன்றத்திட மிருந்து எடுத்தால், விவசாய உணவு உற்பத்தி பெரிதும் பாதிக்கப்படும் என்று அஞ்சுகிறேன். பொதுவாக உணவு உற்பத்தித் திட்டத்திலே அதிகமான பிரச்சாரம் தேவையாக இருக்கிறது. பலவிதமான மக்களுடைய தொடர்பு தேவையாக இருக்கிறது. அதிகாரிகளின் தொடர்பு தேவையாக இருக்கிறது. இவைகளையெல்லாம் ஒருங்கிணைத்திருக்கிறது. ஆகவே கூட்டு மன்றத்தை விட்டு எடுப்பது சரியில்லை என்பதை அமைச்சரவர்கள் ஆலோசிப்பார்களா வென்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, அந்தத் திட்டத்தை இப்போது பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம் என்றுதான் குறிப்பிட்டேன். ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து எடுத்து விடுவதா இல்லையா என்ற முடிவிற்கு இன்னும் வரவில்லை. அதனாலே பல சிக்கல்கள் இருக்கின்றன என்பதை ஊராட்சி ஒன்றியப் பெரும் தலைவர்களான மாண்புமிகு திரு. சுந்தரேசத் தேவர் அவர்களும் திரு. அய்யணன் அம்பலம் அவர்களும் நன்றாக அறிவார்கள். ஏன், எனக்குக் கூடத் தெரியும். முன்பு ஊராட்சி ஒன்றியத் தலைவராக நான் இருந்த காரணத்தினால், எனக்குக் கூடத் தெரியும். அது எப்படிச் செயல்பட்டு வருகிறது என்பது அவர்களுக்கும் தெரியும். எந்த முறையில் செயல்படுவது என்பதில் தான் கஷ்டம் இருக்கிறது. எனவே பரிசீலனை செய்து இன்றைய தினம் எப்படிச் செய்யலாம் என்ற முடிவெடுத்து அதற்குப் பிறகு கூடச் செய்ய லாம். ஏனென்றால் இப்போது ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகத்தான் இந்த வேலைகள் மிகத் திறம்பட நடைபெற்று வருகிறது என்பதை நான் நிச்சயமாக உணர்கிறேன். எனவே எந்த முறையில் செயல்படுத்துவது என்பதே தவிர, ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து எடுப்பது என்பதல்ல பிரச்சினை. எப்படிச் செயலாற்றுவது என்பதைப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம்.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, இந்தப் பஞ்சாயத்து யூனியனில் பணி புரியும் விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகளை கெஜடட் போஸ்ட், பதிவு பெற்ற அதிகாரிகளாக ஆக்கிய பின்னால், அங்கே இருக்கிற ஆணையர் பதிவு பெறாதவராக இருப்பதால், அவர்களுக்குள் மன வித்தியாசம் ஏற்பட்டு தொழிலை

நல்ல முறையில் செய்ய மாட்டார்கள் என்ற ஐயப்பாடு பரவலாகப் பேசப்படு கிறது. இதைப் பற்றி அமைச்சரவர்கள் என்ன கருதுகிறார்கள், அரசாங்கம் இதில் என்ன முடிவு செய்யும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, சமீபத்தில் நம் முடைய முதலமைச்சரவர்கள் அவர்களைப்பற்றிப் பரிசீலனை செய்யப்படும் என்று சொன்னது அவர்களுக்குத் தெரிந்திருக்கும் என்று கருதுகிறேன். எனவே பி.டி.ஓ., வட்டார வளர்ச்சி அதிகாரிகளை கெஜடட் ஆக்குவதுபற்றி அறிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அய்யணன் அம்பலம்: தலைவரவர்களே, இந்த விவசாய இலாகா ஊராட்சி ஒன்றியங்களின் சார்பாகச் செயல்படும்போது, பசுமைப் புரட்சி வெற்றிகரமாக நடைபெற்றிருக்கிறது, நல்ல வெற்றி கண்டிருக்கிறோம் என் பதை அரசாங்கம் மறுக்க முடியாது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அப்படி இருக்கும்போது விவசாய அதிகாரிகள் தாங்கள் சுயமாகச் செயல் படவேண்டும், ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து பிரித்து விடவேண்டும் என்று அதற்காக அரசாங்கம் கோரி அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகிறதா, அதற்காக அந்தக் கமிஷன் நடவடிக்கை எடுக்கிறதாவென்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, மூலக் கேள் விக்கும் இதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. வேளாண்மைத் துறை எப்படிச் செயலாற்ற வேண்டும், அதற்கு அந்தக் கமிட்டி என்ன சொல்லியிருக் கிறது என்ற இரண்டையும் இணைத்து எது நலமாக இருக்கும் என்று பார்த்துச் செயல்பட வேண்டும். இதிலே வேளாண்மைத் துறை இப்போது ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கிற காரணத்தினால், நன்றாகச் செயல்படுகிறது என்பதை ஒத்துக்கொண்டு முன்பே சொன்னேன். அதை எப்படிச் செய லாற்றுவது என்பதுதான் பிரச்சினை. மாண்புமிகு உறுப்பினர் திரு. பலராமன் அவர்கள் குறிப்பிட்டதுபோல, பி.டி.ஓ. நான்-கெஜடட் ஆகவும், வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள் கெஜடட் ஆகவும் இருக்கிற காரணத் தினால், அவர்களுக்குள்ளே ஏற்றத்தாழ்வு இருப்பதைப் போலவே, அவர்கள் பி.டி. ஓ.-க்கள் எல்லாம் டெக்னிகல் மென் அல்ல என்று சொன்னார்கள். நிர்வாக சம்பந்தமாக அதைப்பற்றிப் பரிசீலனை செய்து எப்படி நிறைவேற்றவேண்டு மென்பதில் அதிகக் கவனம் செலுத்தி வருகிறோம். 4 வளர்ச்சி அலுவலர்கள் இருப்பார்களானால், ஒவ்வொரு பிளாக்குக்கும் 4 பேர்கள் இருப்பார்களானால், அந்த 4 பேர்களும் ஆளுக்கு 10 பஞ்சாயத்துக்களை எடுத்துக்கொண்டு அங்கே சென்று பணியாற்ற வேண்டும். அவர்கள் சரியாகப் பணியாற்றுகிறார்களா

வென்று இப்போது உத்தேசிக்கப்பட்டிருக்கிற மாவட்ட வேளாண்மை அதிகாரி அவர்கள் கண்காணிப்பார்கள். அவர்கள் பணியாற்றுவது அங்கேதான் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். சுந்தரேசத் தேவர்: தலைவரவர்களே, நிர்வாக விஷயத்தில் தலைமை அதிகாரியாக இருப்பவர் ஒரு டெக்னிகல் பட்டம் பெற்றவராக இருக்க வேண்டும் என்பது அரசின் கொள்கையாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, அப்படி ஒன்று மில்லை.

Expenditure for the Prime Minister's Tour

* 21 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Chief Minister be pleased to state— 4–30 பி.ப.

(a) whether it is a fact that the Prime Minister of India made an election tour in Tamil Nadu during January and February 1971; and

(b) if so, the expenses incurred by the State Government in this regard?

இந்தியத் தலைமை அமைச்சருக்கான சுற்றுப் பயணச் செலவு

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971 ஜனவரி, பிப்ரவரித் திங்களில் இந்தியத் தலைமை அமைச்சர் தமிழ் நாட்டிற்குத் தேர்தல் சுற்றுப் பயணம் நடத்தியது உண்மையா?

(இ) ஆமெனில், மாநில அரசுக்கு இது தொடர்பாக ஏற்பட்ட செலவு எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) ரூ. 3,42,284.22.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, தலைமை அமைச்சர், இந்திய நாட்டுப் பிரதமர் அவர்கள் தமிழகத்தில் சுற்றுப் பயணம் செய்ததற்கு மூன்று லட்சம் ரூபாய் ஆயிற்று என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த செலவினத்தை மத்திய அரசாவது அல்லது அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அல்லது மாநிலத்திலே இருக்கிற காங்கிரஸ் கமிட்டியாவது ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற கருத்தை, வேண்டுகோளை முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்குத் தெரிவிப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அப்படி ஒரு வேண்டுகோள் விடுவ தற்கு வழி இல்லை. ஏனென்றால், தேர்தல் சுற்றுப் பயணங்கள் மாத்திரம் அல்லாமல், பிரதமர் வருகிற நேரத்தில், மாநிலங்களில் அவருடைய கட்சிக் கூட்டங்களுக்கு வந்தாலும், அதற்கு ஆகும் செலவினங்களில் பெரும் பகுதியை அரசாங்கம்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற விதிமுறை வகுக்கப்பட்டு, எல்லா மாநில அரசுகளும் பின்பற்ற வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

திரு. மு. இராமநாதன்: தலைவர் அவர்களே, தலைமை அமைச்சர் அவர்கள் இங்கே வந்தபோது, தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களிலும் காங்கிரஸ் கட்சிக் கூட்டங்களிலும் கலந்து கொண்டார்கள் என்பது உண்மையா? அவ்வாறு அவர் கலந்துகொண்டது உண்மை என்றால், அந்தத் தொடர்பான செலவுகளை யார் ஏற்றுக்கொண்டார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கேள்வியும், துணைக் கேள்விகளும் அதில் ஒன்றாகத்தான் இருந்தன. அவர் காங்கிரஸ் கட்சித் தேர்தல் பிரச் சாரக் கூட்டங்களில் கலந்து கொள்ளாமல், சுதந்திராக் கட்சித் தேர்தல் கூட் டங்களில் கலந்துகொள்ள இங்கு வரவில்லை. அவருடைய கட்சிப் பிரச்சாரக் கூட்டங்களுக்கு அவர் இங்கே வந்தாலும், அரசாங்கம்தான் செலவை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று இருக்கிறது.

திரு. எஸ். எஸ். தென்னரசு: தலைவர் அவர்களே, தலைமை அமைச்சர் அவர்கள் தேர்தல் சுற்றுப் பயணத்துக்காக மாநிலத்திற்கு வரும்போது, அர சாங்கம் செலவை ஏற்றுக்கொள்கிறது என்ற முறையை முதலமைச்சர் தெரி வித்தார். அது போல, மாநில அமைச்சர்கள் தேர்தல் பிரச்சாரத்துக்குப் போகும்போது, அந்தச் செலவையும் ஏற்க, இந்த அடிப்படையில் மாநில அரசு முயற்சி எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தேர்தல் பிரச்சாரக் கூட்டங் களுக்குச் செல்வதாக இருந்தால், முதலமைச்சர் அல்லது வேறு அமைச்சர்கள் எல்லாம் சொந்தச் செலவில்தான் செல்ல வேண்டும், அல்லது கட்சித் தலைமை தான் செலவு செய்ய வேண்டுமென்ற உத்தரவு முதலமைச்சரால் பிறப்பிக்கப் பட்டு, அவர்கள் அதை அப்படியே பின்பற்றுகிறார்கள்.

திரு. கே. எஸ். அப்துல் வஹாப்: தலைவர் அவர்களே, பிரதமர் அவர்கள் தமிழ் நாட்டில் தேர்தல் பிரச்சாரம் சார்பாக, சுற்றுப் பயணம் செய்த சந்தர்ப்பத்தில், சில ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு முறை இதே போன்ற கேள்வி வந்த சமயத்தில், காங்கிரஸ் சார்பிலே, 'முழுச் செலவை நாங்கள்

ஏற்றுக் கொள்கிறோம்' என்று சொன்னார்கள். ஒரு பகுதி செலவழித்த தாகவும், சேர்த்துத் தந்ததாகவும் சொல்கிறார்களே, எவ்வளவு செலவழித் தார்கள், சேர்த்துத் தந்தார்களா, கொடுக்கவில்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதிலே அவர்கள் தருகிறோம் என்று முன்பு ஒரு முறை, அதாவது 1971-க்கு முன்பு, பிரதமர் அவர்கள் சுற்றுப்பயணம் செய்தபோது, காங்கிரஸ் ஒன்றாக இருந்த காலத்தை அவர் குறிப்பிடுவதாக நான் கருதுகிறேன்—ஒரு லட்சத்து 23 ஆயிரத்து 411 ரூபாய் கொடுப்பதாகக் குறிப்பிட்டிருந்தார்கள். இப்போது அவர்கள் போட்டிருக்கிற புதிய உத்தரவைப் பார்க்கும்போது, இந்தப் பழைய கடனைக்கூட வசூலிக்க வேண்டுமா என்று தோன்றுகிறது.

திரு. சா. கணேசன்: இந்தக் கேள்வியைத்தான் நான் கேட்க வேண்டு மென்றிருந்தேன். ஏற்கனவே தருகிறேன் என்று சொல்லி, அதைக் கொடுக் காமல் இருக்கும்போது, அதையும், இதையும் சேர்த்து நமது மாநில ஆட்சிக்கு அல்லது அரசுக்கு ஏற்பட்டிருக்கிற செலவைக் கேட்பதற்கு நமக்கு உரிமை இருக்கிறபோது, அதைக் கேட்பதற்கு, அரசு கொஞ்சம் தீவிரமாக முயற்சி செய்யுமா என்றுதான் நான் அறிய விரும்புகிறேன். நான் கேட்பது டெல்லியிலிருந்து வருவதுபற்றி.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: டெல்லியிலிருந்து பிரதமர் வருவ தற்குத்தான் அந்தந்த மாநிலத்தில் இருக்கிற அரசு, செலவை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று விதிகளை வகுத்திருக்கிறார்கள். ஆகவே, விதி அப்படி இருக்கிறது. என்ன செய்வது?

திரு. எல். பலராமன்: தலைவர் அவர்களே, இந்த அரசாங்க ஆணை எந்தத் தேதியில் பிறப்பிக்கப்பட்டது? அந்த ஆணையைத் தமிழக அரசு பின்பற்றி, அவர்களும் பிரச்சாரம் செய்வதற்கான செலவை இந்த அரசு ஏற்றுக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: 1972-ம் ஆண்டில்தான், இந்த விதி பிறப்பிக்கப்பட்டு ஆணைகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஒரு கட்சியைச் சேர்ந்த பிரதமர் அப்படி அரசாங்கச் செலவில் செல்லும்போது, மற்ற அமைச்சர்களும் ஏன் செல்லக் கூடாது என்கிற இந்தக் கேள்விக்கு, எல்லாக் கட்சிக்காரர்களும் சேர்ந்து விடை அளித்தால், இந்த மாநிலமும் தன்னுடைய உரிமையைக் காப்பாற்றிக்கொண்டிருக்கிறது என்பதற்கு ஒரு வழியாக இருக்கும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்த மாதிரியான நிலைமை வந்தபோது, பீகார் மாநிலத்தின் முதலமைச்சர் திரு. தாகூர் அவர்கள், இப்படிப்பட்ட செலவை மத்திய அரசு அல்லது காங்கிரஸ் ஸ்தாபனம் தான் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறார் என்பதை அரசு அறியுமா ? வேறு மாநிலத்துக்குப் போகும் ஒரு முதலமைச்சருக்கு ஆகும் செலவு குறித்து மத்திய அரசைக் கேட்கலாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பீகார் முதலமைச்சர் என்ன எழுதியிருக்கிறார் என்பது எனக்குத் தெரியாது. நான் அந்தக் கேள்விக்குப் பதிலிலேயே சொன்னேன். மத்திய அரசு அவ்வாறு நினைத்திருக்கலாம். முதலமைச்சர் ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்துக்குச் செல்லும் போது, அந்தச் செலவை அந்த அரசு ஒத்துக்கொள்ளவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. சுவாமிநாதன் சொல்லி, அதை டெல்லி ஒத்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். அவர்கள் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். மாநிலத்தில் முதலமைச்சர் சுற்றுப் பயணச் செலவை ஏற்கும்படி செய்ய, எல்லாக்கட்சித் தலைவர்களும் ஒன்றாகச் சேர்ந்தால், அதுபற்றி யோசிக்கலாம்.

திரு. கே. ராஜாராம் : முதலமைச்சர் அவர்கள் எல்லாக் கட்சிக்காரர்களும் ஒத்துக்கொண்டால், செலவை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதுபற்றி யோசிக்கலாம் என இங்கே சொன்னார்கள். அதுபோல் எல்லாக் கட்சித் தலைவர்களும் சுற்றுப்பயணம் செய்யும்போது, அந்தச் செலவை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்தச் செலவை அரசாங்கத்தில் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

'Hijacking' of Taxis

* 22 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether a number of cases of 'Hijacking' of taxis in Madras City have been reported to the Police; and

(b) if so, the steps taken in this regard?

வாடகை மோட்டார் வண்டிகளை கடத்திச் செல்லுதல்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரில் வாடகை மோட்டார் வண்டிகள் பல கடத்திச் செல்லப்பட்டது பற்றி காவல் துறைக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) வாடகை மோட்டார் வண்டிகள் 1971-ல் நான்கு முறை இடையே கடத்திச் செல்லப்பட்டது என்றும், 1972-ல் (ஆகஸ்டுவரை) எட்டு முறை கடத்திச் செல்லப்பட்டன என்றும் காவலருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ) பின்னிரவில் டாக்சிகளில் ஏறும் சந்தேகத்திற்குரிய பயணிகளிடம் எச்சரிக்கையுடன் இருக்குமாறும், அவசியமாயின், அருகில் உள்ள காவல் நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் வாடகை மோட்டார் வண்டி வலவர்களுக்குக் காவல்துறைக் கமிஷனர் அறிவுரைகள் கூறியுள்ளார். 24 மணி நேரமும் ரோந்து வரும் காவலர் ரோந்து வண்டிகள் எப்போதும் விழிப்புடன் செயல்பட்டு வருகின்றன.

மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர் : வினாக்கள் 43, 44 ஒத்தி வைக்கப்படுகின்றன.

Tiruvalluvar Temple.

* 45 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state with reference to the answer given on the floor of the Legislative Council for Question No. 89 on 8th September 1970—

(a) the present stage of the renovation work of Tiruvalluvar Temple at Mylapore, Madras; and

(b) the probable date on which the work will be completed?

திருவள்ளுவர் கோயில்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் 8—9—1970-ஆம் நாளன்று சட்டமன்ற மேலவையில் 89-ம் எண் வினாவிற்கு அளித்த விடையினையொட்டி கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை–மயிலை திருவள்ளுவர் திருக்கோயிலைப் புதுப்பிக்கும் வேலை தற்போது எந்த நிலையில் இருக்கிறது ?

(இ) அது எப்போது நிறைவுறும் ?

[1973 பிப்ரவரி 6

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) & (இ) இக் கோயிலின் திருப் பணி இன்னும் தொடங்கப் பெறவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தற்போதுள்ள வேலையை விரிவாகச் செய்ய இருப்பதாகவும், இதற்கான பணிகளுக்கு அரசு ஏற்பாடு செய்திருப்ப தாகவும் நான் பத்திரிகையில் படித்தேன். எந்த முறையில் அதுபற்றி ஆராயப்படும் என்பதையும் அதுபற்றிய விவரங்களையும் அமைச்சர் அவர்கள் தெரியப்படுத்துவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே அந்தக் கோவிலில், மைலாப்பூரில் இருக்கிற திருவள்ளுவர் கோவிலில் சுமார் 2 லட்சம் 40 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு திருமண மண்டபத்தைக் கட்ட வேண்டுமென்று திட்டம் தயார் செய்யப்பட்டு, அந்த வேலை பாதியிலேயே கொஞ்ச காலத்துக்கு முன்னால் நின்றுபோய்விட்டது. அப்படிப்பட்ட திருமண மண்டபத்தைத் தொடர்ந்து கட்டி முடிக்கவும், திருவள்ளுவர் கோவில் என்று தமிழ் நாட்டில் ஒரே ஒரு ஆலயம்தான் இருக்கிறது. சுமார் 10 லட்சம் ரூபாய் செலவில் திட்டமிட்டு இந்தக் கோவிலைப் புதிதாக உரு வாக்குவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதற்காக நம் தமிழ்நாட்டு முதலமைச்சர், கலைஞர் அவர்கள் புரவலராகவும், திருப்பணித் தலைவராக தவத்திரு குன்றக்குடி அடிகளாரும், செயலாளராக திரு. என். மகாலிங்கம் அவர்களும், பொருளாளராக திரு. ஈஸ்வர அய்யர் அவர்களும், உறுப்பினராக முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்களும், அதேபோல் உறுப்பினராக சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர் மாண்பு மிகு சிலம்புச் செல்வர் அவர்களும், டாக்டர் மு. வரதராசனார், சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. என். டி. சுந்தரவடிவேலு, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. முரசொலி மாறன், சட்டப்பேரவை உறுப்பினர் திரு. இராம. அரங்கண்ணல், சட்டமன்ற உறுப்பினர் திருமதி டி. என். அனந்தநாயகி, மாநகராட்சி மன்ற உறுப்பினர் திரு. துள்சிங்கம் அவர்கள் அறங்காவலராகவும், இப்படி திருப்பணிக் குழு உறுப்பினர்களாக ஏற்கெனவே நியமிக்கப்பட்டு, திருவள்ளுவர் ஆலயப் பணியைச் செய்யும் முயற்சியில் தற்போது அவர்கள் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

திரு. சா. கணேசன் : திருவள்ளுவர் கோயிலைச் செம்மைப்படுத்துவது பற்றிய கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விடையில், திருமண மண்டப வேலை தொடங்கப்பட்டு, பகுதி வேலை இடையில் நிற்பதாகக் கருத்து தெரிவித்தார்கள். திருமண மண்டபம் கட்டுவது பற்றிக் குறை சொல்லவில்லை. நன்றாகக் கட்டட்டும். அங்கே திருமண மண்டபத்திற்குப் பதிலாக அறவுரை மண்டபம் என்று பெயரை வைத்து; அந்த மண்டபத்தில்

1973 பிப்ரவரி 6]

அறவுரைகள், சொற்பொழிவுகள் நடக்காதபொழுது, திருமணங்களுக்கு விட ஏற்பாடு செய்கிற முறையில் அந்தக் கோயிலில் அறவுரை மண்டபம் அமைத்து, அதைத் தொடங்கி நிறைவேற்றி, கோயிலைச் செம்மைப்படுத்தி, சிறப்பாக எல்லோரும் தமிழ் முறையில் வழி படும்படியான முறையில் அமைப்பதற்கு தக்க வகைகளைச் செய்து, அதை எவ்வளவு விரைவில் முடிக்க முடியும் என்பதற்குத் திட்டங்கள், வரைகள் அல்லது வரை படங்கள் போடப்பட்டிருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, பாதியில் நின்று போன திருமண மண்டபத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப் பிட்டது போல, குறளில் வந்திருக்கின்ற பண்புகளை எல்லோரும் தெரிந்து கொள்ளும் வகையில் வரை படங்கள், ஓவியங்கள், இன்னும் பல நல்ல தெளி வுரைகளைக் கொடுக்கும் வகையில் கட்டிடங்கள், மண்டபங்கள் எழுப்ப வேண்டுமென்று வரை படம் தயார் செய்யப்பட்டு, அவைகளைப்பற்றியெல்லாம் திருப்பணிக் குழுவில் பேசி முடித்திருக்கிறார்கள். அதுவெல்லாம் சீக்கிரம் துவங்குவதற்கான ஏற்பாடுகளை தற்போது அலுவலாளர்கள் மேற்கொண்டிருக் கிறார்கள்.

மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர் : வினாக்கள்–விடைகள் முடி வுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்

மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. 4–40
என். சுந்தரேசத் தேவர் கொடுத்துள்ள ஒத்திவைப்புத் தீர்மானம் நாளைக்கு பி.ப.
எடுத்துக்கொள்ளப்படும்.

3. ஆளுநர் உரையின் மீது விவாதம்

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பரமசிவன் அவர்கள் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்துக் கான திருத்தத்தைப் பிரேரேபிப்பார்.

திரு. எல். பலராமன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட திருத்தத்தைப் பிரேரேபிக்கிறேன் :—

" That the following be added at the end :—

' but regret to note that no mention has been made—

1. about any concrete steps to bring down the ever rising prices of foodgrains and other essential commodities;

2. about any concrete steps to solve the unemployment problem in the State; and

3. about the unrest and frequent closure of the educational institutions. '

திரு. எஸ். சி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர் : மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, நான் இதை வழிமொழிகிறேன்.

THIRU G. VASANTHA PAI : Sir, I beg to move the following amendment to the Motion of Thanks moved by my hon. Friend Thiru Kattoor Gopal :—

" That the following be added at the end :—

" but regret to note that the Governor's Address does not refer—

(1) to the Scheme of Afforestation which should be undertaken by the Government to meet water scarcity in the State;

(2) to the provision of more parks and tree-planted play grounds within crowded cities to counteract air pollution;

(3) to the provision of coastal roads to relieve congestion of vehicular traffic through towns; and

(4) to diversion of sewage in coastal towns into the sea by pipes laid undergound."

THIRU A. R. DAMODARAN : Sir, I second it.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட திருத்தத்தை நான் முன்மொழிகிறேன் :

" That the following be added at the end;

" but regret to note—

(1) that the Governor's address does not refer to removal of anomalies in pay scales of Higher Grade and Secondary Grade Teachers;

(2) that the Governor's address is silent about the report of the One-Man Commission constituted under the Chairmanship of Thiru P. Sabhanayagam, I.A.S., Chief Secretary to Government;

(3) that the Governor's address is silent about the enhancement of D.A. to the teachers and N.G.G.Os. on a par with Central Government rates;

(4) that the Governor's address does not mention about the payment of salary to the teachers working in Municipalities;

(5) that the Governor's address does not refer to the payment of medical allowances to the teachers and N.G.G.Os.;

(6) that th Governor's address is silent about the payment of House Rent Allowance to *all* places;

(7) that the Governor's address is silent about the payment of C.C.A. to the whole of Chingleput district;

(8) that the Governor's address is silent about the payment of bonus for all the teachers and Government employees;

(9) that the Governor's address is silent about the constitution of Education Board. "

திரு. எம். ராஜா அய்யர் : நான் இதை வழிமொழிகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : ஆளுநர் உரைக்கு நன்றி அறிவிப்புத் தீர்மானமும் அதன்மீதான திருத்தங்களும் அவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

* திரு. எல். பலராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் அவர்கள் உரையில் எத்தனையோ கொள்கை விளக்கங்களைக் காண முடியுமென்று நானும், பொதுமக்களும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம். ஆனால், இங்கே ஆளுநர் அவர்கள் அறிக்கை, வெறும் புஸ் வாணமாக, கொள்கை விளக்கமில்லாத ஒரு அறிக்கையாக இருப்பதைப் பார்க்கும்பொழுது, மிக வேதனையாகவும் வருத்தமாகவும் இருக்கிறது. ஆண்டாண்டு தோறும். 1967-க்குப் பின்னால் எதை அவர்கள் கூறினார்களோ, அதையே தான் இன்றைக்கும் கொள்கைகளாகக் கூறியிருக்கிறார்கள் என்று இன்று பரவலாகப் பேசப்படுகிறது. அவசியமாக இன்று மனிதனுக்குத் தேவையானது விலைவாசிகள் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பது. உணவு தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்க வேண்டும் என்பது தான் நம்முடைய ஆதாரபூர்வமான

[திரு. எல். பலராமன்] [1973 பிப்ரவரி 6

கொள்கை. மனிதனுக்கு வேண்டியது உணவு, உடை, இருக்கை என்ற முறையில் உணவுப் பொருளின் விலை இன்றைக்கு எட்டாத அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. அதற்கு என்ன பரிகாரம் என்றால், ஆண்டு தோறும் கூறி வந்ததையே தான் இன்றைக்கும் ஆளுநர் உரையில் கூறியிருக்கிறார்களே தவிர, அதற்குத் திட்டவட்டமாக மதிப்பீடுகள், கோரிக்கைகள் என்னவென்பது இன்னமும் கூறப்படாமல் இருக்கிறது என்பதை நாம் ஒப்புக்கொள்ளும் நிலையில் இருக்கிறோம். இன்றைக்கு விலைவாசிகள் ஓரளவு பெருவாரியாக உயர்ந்திருக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. நாம் வாங்கி உண்பவர்கள்தான். எத்தனை பொருள் வாங்கினாலும் அவ்வளவும் விலை உயர்ந்துகொண்டுதான் இருக்கிறது என்பதை மறுக்க முடியாது. இதில், மத்தியில் உற்பத்தியாளருக்கும் உபயோகிப்போருக்கும் இடையே, விலைவாசி உயர்ந்திருக்கிறது என்பதை நாம் இன்று கண்கூடாகக் கண்டுகொண்டிருக்கிறோம். மத்தியில் யாரும் உயர்த்தவில்லை. யார் கட்டுப்படுத்துவது, எப்படிக் கட்டுப்படுத்துவது என்று பார்க்கும் பொழுது, இன்றைக்கு அதற்கு விளக்கமான கொள்கை இன்னமும் இந்த அறிக்கையில் காணவில்லை என்பதை நான் வருத்தத்துடன் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். உணவுப் பொருள்களை விவசாயிகள் உற்பத்தி செய்கிறார்கள். ஆனால், அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய அளவுக்கு அவர்களுக்கு இன்று கட்டுபடியாகிறதா என்று பார்த்தால், இல்லவே இல்லை.

பி.ப. 4-50 உணவு உற்பத்தி என்று கூறுகிறபோது, நெல்லை எடுத்துக் கொண்டால், கொள்முதல் விலை ரூபாய் 40 ஆக இருந்தாலும், அது உபயோகிக்கிறவர்களிடம் வருகிறபோது அதிக விலைக்கு விற்கப்படுகிறது. இடையில் யார் அதனால் பயன் அடைகிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, மிக்க வேதனையாகவும் வருத்தமாகவும் இருக்கிறது. இதை நியாயமான அடிப்படையில் தேசிய உணர்வோடு சமுதாய வளர்ச்சியில் அனைவரும் ஒப்புக்கொள்ளுகிற நிலையில் பரிசீலிக்க வேண்டுமென்று கூறிக்கொள்ளுகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருமுன்பு விலைவாசிப் போராட்டத்தில் இறங்கி ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு போராட்டம் ஆரம்பித்தது. அந்தப் போராட்டம் இன்றைக்கு எங்கே இருக்கிறது என்று பார்த்தால், அந்தப் போராட்டம் ஆட்சிக்கு வந்த பிறகு எங்கோ மறைந்து விட்டது என்று தான் கூற முடியும். விலைவாசிகள் இந்த அளவிற்கு ஏறியிருக்கின்றன என்று பொதுமக்கள் சொல்கிற போது, எங்களால் அல்ல, மத்திய அரசாங்கம் தான் காரணம் என்று இன்று கூறுகிற நிலையில் தான் நம்முடைய முதலமைச்சர் அவர்களும் மற்றவர்களும் இருக்கிறார்கள் என்பதை யாரும் மறைக்க முடியாது. இந்த விலை உயர்வைத் தடுக்க வழி தேடாமல், மத்திய அரசாங்கத்தின் மீது பழி போட்டிருப்பது நல்ல ஜனநாயக மரபு அல்ல

1973 பிப்ரவரி 6] [திரு. எல். பலராமன்]

என்பதை உணர வேண்டுமென்று கூறிக்கொள்ளுகிறேன். இதை அன்றைக்குக் கூறியிருந்தால், அன்றைக்கு போராட்ட நேரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு முன்பு மறியல் செய்யாமல் மத்திய அரசாங்க அலுவலகங்கள் முன்பு மறியல் செய்திருக்க வேண்டும். அன்று மாநில அரசாங்கத்திற்கும் பங்கு உண்டு என்ற முறையில் தான் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகங்கள் முன்பு மறியல் செய்தார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. அத்தகைய போராட்டங்கள் இன்று என்ன நிலையில் இருக்கின்றன என்பதை இங்கே விளக்கிக் கூறவில்லை. வளருகிற சமுதாயத்தில் விலைவாசி உயருவது என்பது நியாயமான நிலை தான். ஆனால் அவை திடீர் திடீரென்று உயரக் காரணமில்லை என்பதைப் பொருளாதாரம் அறிந்தவர்கள் உணருவார்கள். அந்த முறையில் சாதாரண ஏழைகள் வாங்கி உபயோகிக்கும் பொருள்களின் விலை உயர்ந்திருக்கிறது. நல்லெண்ணெய் விலை இரண்டு மாதங்களுக்கு முன்பு ரூ. 5.90 ஆக இருந்தது இன்று ரூ. 6.70 ஆக உயர்ந்திருக்கிறது. சாதாரண சீயக்காய் தூள் போன்றவைகள் கூட ஜனவரி 1972-ல் ரூ. 1.85 ஆக இருந்தது இந்த அக்டோபர் மாதத்தில் ரூ. 4-30-ஆக உயர்ந்திருக்கிறது. கடலைப்பருப்பு லிட்டர் ரூ. 1.60 ஆக இருந்தது அக்டோபரில் இரண்டு ரூபாயாக உயர்ந்திருக்கிறது. உளுத்தம் பருப்பு விலை ஜனவரியில் ரூ 2.80 ஆக இருந்தது அக்டோபர் மாதத்தில் ரூ. 3.40 ஆக உயர்ந்திருக்கிறது. பொது மார்க்கெட்டில் ஒரு கிலோ சர்க்கரை ரூ. 3-10 ஆக இருந்தது தற்போது ரூ. 3-60 ஆக உயர்ந்திருக்கிறது. ஒரு ஆண்டுக்கு முன்பு பொது மார்க்கெட்டில் சர்க்கரை இரண்டு ரூபாயாக விற்கப்பட்டது. இந்த அளவில் விலைவாசிகள் பல சதவிகிதம் உயர்ந்து போவதைப் பார்க்கும்போது, இந்த சர்க்காரின் கொள்கைதான் இதற்குக் காரணம், ஒரு நிரந்தரமான ஸ்திரமான கொள்கை இல்லாததுதான் இது போன்ற சாதாரண மக்கள் உபயோகிக்கும் பொருள்களின் விலைவாசி ஏறுவதற்குக் காரணம் என்பதை யாரும் மறுக்க முடியாது. சர்க்கரை வினியோகத்தில் பல சீர்கேடுகள், நிர்வாக ஊழல்கள் ஏற்பட்டிருக்கின்றனவோ என்ற ஐயம் ஏற்படுகிறது. பொதுவாக பஞ்சாயத்திற்குக் கொடுக்கப்படுகிற சர்க்கரை கூட கிராமங்களில் 2 ரூபாய், ரூ. 2-10 என்று நிலைமைக்கேற்றவாறு விற்கப்படுகிறது. ஒரே ரீதியில் இல்லை என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: எந்தெந்த ஊரில் இவ்வாறு விற்கப்படுகிறது என்று சொன்னால் நலம். இந்திந்த ஊரில் இப்படி இப்படி தவறாக விற்கப்படுகிறது என்று கூறினால், நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்கும். பொதுவாகக் குறை கூறுவதை விட்டுவிட்டு, உறுப்பினர் அவர்கள் புள்ளி விவரத்துடன் சொன்னால், உடனடியாக நடவடிக்கை எடுத்து அக்குறையை நிவர்த்திக்க முடியும்.

திரு. எல். பலராமன் : மாண்புமிகு அமைச்சர் அளித்த பதிலுக்கு நன்றி. எங்களுடைய மாவட்டத்தில் பஞ்சாயத்துக்களுக்கு ஒதுக்கப்பட்ட சர்க்கரை விலைகளில் வித்தியாசங்கள் இருக்கின்றன என்பதை மாவட்ட வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் புள்ளிவிவரத்தோடு கூறியிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பிய பதிலைப்பற்றிச் சொல்லவில்லையே, மற்றும் எந்த ஊழல் யார் யார் இப்படி விற்கிறார்கள் என்கிற விவரம் கொடுத்தால், மேல் நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்கும். அரசு நிர்ணயித்த விலையில் விற்றிருக்க முடியும்.

திரு. எல். பலராமன் : ஒவ்வொரு கிராமத்திலும் பல தரப்பட்ட விலையில் விற்கப்படுகிறது என்பது எனக்குக் கிடைத்த தகவல். அதோடு அல்லாமல் ஒதுக்கப்பட்ட சீனியில் பஞ்சாயத்து மூலமாகவோ, அல்லது கூட்டுறவு மூலமாகவோ கொடுக்கப்பட்டதில் சரியாக வினியோகம் ஆகவில்லை என்பது பரவலாக பல மாவட்டங்களிலிருந்து தகவல். எனவே முறையாக மக்களுக்குப் போய்ச் சேரவில்லை என்பதைக் கூறிக்கொண்டு வேலையில்லாத் திண்டாட்டம்பற்றிக் கூற விரும்புகிறேன்.

வேலையில்லாத் திண்டாட்டம் என்ற நிலைபற்றிப் பார்க்கும்போது, பரவலாக மாநில வட்டத்தில் எங்கு பார்த்தாலும் பட்டதாரிகள் போட்டியிடுகிற நிலை தான் இருக்கிறது. இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு கொள்கை ரீதியாக அரசாங்கத்திடம் என்ன கொள்கை இருக்கிறது என்று பார்த்தால், சற்றும் இல்லையென்று தான் இந்த அறிக்கை மூலம் காணப்படு கிறது. இதுபற்றி தினமணியில் கூட ஒரு விளக்கம் கேட்டு வந்திருக்கிறது. தலைவர் அனுமதி அளித்தால், அந்தப் பத்திரிகையைச் சமர்ப்பிக்கின்றேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : இது மாதிரி வழக்கம் இல்லை, ஆகவே வேண்டாம்.

திரு. எல். பலராமன் : ஒரு நிறுவனத்திற்கு பல பட்டதாரிகள் மனுச் செய்திருப்பதாகவும் அந்தப் பட்டதாரிகளுக்கு ரூபாய் 100 முதல் 110 வரை சம்பளம் கிடைக்கிற அளவில் கூட மாநில அளவில் வேலை வாய்ப்பில்லை என்ற நிலையைப் பார்க்கும்போது, அதைக்கண்டு பரிதவிக்கும் நிலைதான் ஏற்படு கிறது என்பதை இங்கே சுட்டிக்காட்டுகிறேன். வேலையில்லாதவர்கள் நம் மாநிலத்தில் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் அதிகம் என்பதற்கு அரசாங்கப் புள்ளிவிவரம் சான்றாக இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. 1972 ஜூன் 30-ம் தேதி முடிய ஆந்திர மாநிலத்தில் வேலை தேடும் ஸ்தாபனத் திற்கு மனுப் போட்டவர் மெட்ரிக்குலேஷன் பாஸ் செய்தவர் 575, எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர் 1,278, மலைஜாதியினர் 430, பின்தங்கியவர் 67

என்றும், மைசூரில் அவர்கள் முறையே 8,805, 688, 145, 11 என்றும், கேரளத்தில் 7,447, 318, 145 என்றும் தமிழ் நாட்டில் அரிஜனங்கள் மெட்ரிக் படித்தவர் 662 என்றும், அதிலே எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர் 2,223, மலை ஜாதியினர் 122 என்றும் இருப்பதால், மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ் நாட்டில் 17,641 மெட்ரிகுலேஷன் படித்தவர்கள் இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, அது பல மடங்கு மற்றவர்களைக் காட்டிலும் என்பதை மறுக்க முடியாது. இந்த அளவிற்கு அரசாங்கப் புள்ளிவிவரப்படி வேலை இல்லாதோர் எண்ணிக்கை பெருகிக்கொண்டு போகிறது என்பதைத் தான் பார்க்கிறோம். தொழில் வாய்ப்பு இருக்கிறதா என்றால், அது இருப்பதாகத் தெரியவில்லை. குறிப்பாக, காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில், மதிப்பிற்குரிய மாபெரும் தலைவர் திரு. காமராசர் காலத்தில், இந்த வேலைவாய்ப்பு, தொழில் வாய்ப்பு ஏற்பட்டிருந்தது என்பதை மறுக்க முடியாது. அந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்டு, இன்றைக்கு ஏழை எளிய மக்கள், பின் தங்கிய அரிஜனமக்கள் எல்லாம் படித்துவிட்டு வேலை பி.ப.
வேண்டும், வேலை வேண்டுமென்று தேடி அலையும்போது, அவர்களுக்கு வேலை 5–00
வாய்ப்பு இருக்கிறதாவென்று பார்த்தால், இல்லை. நீலகிரி மாவட்டத்திலே ஒரு விஞ்ஞானப் படிப்பு படித்த பட்டதாரி ஒரு 'கேங்க்' கூலியாக இருந்தான் என்ற செய்தி அந்த நிர்வாகத்தின் தலைவரவர்களால் கூறப்பட்டிருக்கிறது. அதைப் பத்திரிகை வாயிலாகத் தெரிந்து கொண்டிருக்கிறோம். இதுபோன்ற பட்டதாரிகளெல்லாம் சாதாரணக் கூலி வேலை, மண் எடுக்கக் கூடிய வேலை இப்படிப் பல வேலைகளுக்கு மனுச் செய்துகொண்டிருப்பதை இன்றைக்குச் சமுதாயத்தில் பார்க்கக்கூடிய ஒரு நிலையில் இருக்கிறோம். இன்று படித்த பட்டதாரிகள்தான் நக்சலைட்டுகளாகவும், மற்றைய புரட்சிகரமான, தீவிரமான திட்டங்களிலே, சமுதாயத்திற்கு விரோதமான செயல்களிலே ஈடுபடுகிறார் ளென்பதைப் பார்க்கும்போது, அவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாத ஒரு நிலைதான் அதற்குக் காரணம் என்பது தெரிகிறது. அதற்கு அரசாங்கம் நல்ல ஒரு திட்டத்தைத் தீட்டவில்லை. இதற்கெல்லாம் காரணம் மத்திய சர்க்கார் தான் என்று பொதுவாக மாநில சர்க்கார் குறைகூறக்கூடிய ஒரு நிலையைப் பார்க்கிறோம். மாநில சர்க்காருக்கு முழுப் பொறுப்பா அல்லது மத்திய சர்க்காருக்கு முழுப் பொறுப்பா என்பது ஒரு பக்கமிருந்தாலும், நாமும் இதை எப்படி நிவர்த்திக்கலாம், சமூகத்தில் ஏற்படக்கூடிய கேடுகளை நாம் எப்படி நிவர்த்திக்க வேண்டுமென்று தீவிரமாகச் சிந்திக்கவேண்டிய ஒரு நிலையில் இருக்கிறோம் என்பதைக் கூறிக் கொள்கிறேன். மற்றும் மாணவர் களிடத்திலே இன்றைக்கு அமைதியில்லாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. பெற்றோர்கள் எல்லாம் தங்களுடைய மகன் பெரிய பட்டதாரியாகமாட்டானா, படித்துப் பெரும் புகழ் அடையமாட்டானா என்று ஒரு கனவு கண்டு, தங்களுடைய மகனை கல்லூரிக்கும், பள்ளிக்கும் அனுப்பும்போது, அங்கே கல்லூரி

களும், பள்ளிகளும் மூடப்பட்டிருக்கின்றன. அந்தப் பள்ளிகளும், கல்லூரிகளும் என்று திறக்கப்படுமோ என்கிற ஒரு நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. அந்த நிலையை அரசாங்கம் போக்குவது மிகமிகச் சாதாரணம். ஆனால் இதற்கு மத்திய அரசாங்கம்தான் காரணமென்று மாநில அரசாங்கம் கூறவில்லை. இதை எப்படி நிவர்த்திப்பதென்பதை இந்த அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும். எதிர்கால சந்ததியினர் நல்ல முறையில் படித்து, நல்ல பண்பாடு உள்ளவர்களாவதற்கு அரசாங்கம்தான் வழி காட்ட வேண்டும். அதற்கு பொது மக்களுடைய ஒத்துழைப்பைக் கோரியோ அல்லது எப்படி நிவர்த்திக்க வேண்டுமோ அந்த முறையில் அணுக வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத் துறையில் இன்றைக்குப் பார்க்கும்போது, விவசாயத்திலே ரசாயன உரங்கள் பற்றுக்குறை இருக்கிறதென்று கூறக்கூடிய ஒரு நிலையை நாம் அறிக்கையிலே காண்கிறோம். அந்த அளவுக்கு இன்றைக்கு பசுமைப் புரட்சி, பசுமைப் புரட்சி என்று வெறும் விளம்பரத்திற்காகக் கூறக்கூடிய ஒரு வார்த்தையை, ஒரு ஸ்லோகனை நாட்டிலே கேட்டாலும், விவசாயிகள் மத்தியிலே காணவில்லை என்பதை நாம் பார்க்கிறோம். எங்களுடைய மாவட்டத்திலே கடந்த 4, 5 நாட்களாக மின்சாரமே முழுமையாக, இரவு பகலாக இல்லையென்பதைப் பத்திரிகைவாயிலாக அறிகிறோம். நானே கடந்த சனிக்கிழமை, அமாவாசையன்று இருட்டு எப்படியிருக்கும் என்பதை நான் சென்றிருந்த கிராமத்தில் அனுபவித்தேன். அந்த அளவுக்கு எங்கள் மாவட்டத்தில் மின்சாரமே இல்லாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கின்றது. எங்கள் வட ஆற்காடு மாவட்டத்தில் மின்சாரத்தைக் கொண்டு கிணற்று நீரைப் பயன்படுத்தி விவசாயம் பரவலாகச் செய்கிறார்கள். தஞ்சாவூர் மாவட்டத்திற்கு அடுத்தபடியாக நெல்லை அதிகமாக உற்பத்தி செய்கிறார்களென்று வேண்டுமானால் ஏட்டளவில் பாராட்டிக்கொள்ளலாம். ஆனால் அதற்கெல்லாம் அடிப்படையான காரணம் மின்சாரம் தான். அதற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றதென்பது மிகமிக வேதனைக்குரிய விஷயமாகும். விவசாயிகள் எல்லாம் தங்களுடைய நிலத்தை காயவைத்திருக்கக் கூடிய ஒரு நிலையில் இருக்கின்றார்கள் என்பதை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அந்த மாவட்டத்திலே மின்சாரம் இல்லையென்றால், விவசாயமே இருக்க முடியாதென்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதற்கு விரைவாக ஒரு பரிகாரத்தை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும். அதிலும் குறிப்பாக நகரப் புறங்களில் அலங்கார விளக்குகள் எரியும்போது, கிராமப்புறங்களில் அத்தியாவசியத் தேவையான உணவுப் பொருளின் உற்பத்திக்குத் தேவையான மின்சாரம் இல்லாத ஒரு நிலையைப் பார்க்கும்போது, மிக மிக வருத்தத்துக்கும், வேதனைக்கும் உரிய விஷயமாகத் தோன்றுகிறது. அதிலும் கிராமங்களில் மக்கள் இரவு

நேரங்களில் கூட, கைதிகள் அடைக்கப்பட்டிருப்பது போல், மின்சார இணைப்பில்லாமல், இருட்டில் இருக்க வேண்டிய நிலை இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் நகர்ப்புறங்களில் மின்சாரம் வழங்கப்படுவது ஏதோ ஆடம்பரத்திற்காகத்தான் இந்த அரசு இருக்கிறதென்பதைக் காட்டுகிறது. அப்படிப்பட்ட ஒரு நிலையில்லாமல், விவசாய மக்களுக்கு இந்த மின்சாரத்தை வழங்கிடுமாறு அரசைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த இரசாயன உர வினியோகத்திலே ஊழல்கள் ஏற்பட்டிருக்கிறதென்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அமைச்சரவர்களுக்கும் தெரியுமென்று நான் கருதுகிறேன். எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த மட்டில், பல ஊழல்கள் ஏற்கெனவே ஏற்பட்டன. அதையெல்லாம் ஓரளவுக்கு நிவர்த்தித்து, இன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் ஒரு ஏக்கருக்கு 25 கிலோ என்று வினியோகிக்க வேண்டுமென்று ஒரு உத்தரவைப் போட்டிருக்கிறார்கள். அந்த 25 கிலோ உரத்தையும், 'ஹை ஈல்டிங் வெரைட்டி' என்று கூறக்கூடிய புது ரக நெல்லை உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுக்குத்தான் கொடுக்கிறார்கள். மற்ற 'கார்' போன்ற பழைய நெல்லை உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு உரமே கிடைக்காதென்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. இதைப் பார்க்கும்போது, புதிய நெல்லைப் பயிரிடக் கூடிய விவசாயிகள் கூட, இந்த 25 கிலோவை வைத்துக் கொண்டு எப்படி விவசாயம் செய்ய முடியுமென்று கூறுகிறார்கள். விவசாயிகளுக்கு வேண்டிய அளவுக்கு புதிய இரசாயன உரம் கிடைக்காததாலே, இருக்கின்ற பயிரும் அழிந்துவிடக் கூடிய ஒரு நிலையை நாம் காண்கிறோம். அந்த அளவுக்கு இந்த இரசாயன உரங்கள் தட்டுப்பாடு அங்கே ஏற்பட்டிருக்கின்றது. இந்த வினியோகத்திலே இருக்கிற ஊழல்களைப் பற்றிப் பல புகார்கள் அரசாங்கத்திற்கு வந்திருக்குமென்று கருதுகிறேன். அந்தப் புகார்கள் எல்லாம் மேலும். . .

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, பொதுவாக ஊழல், ஊழலென்று சொல்வது நல்லதல்ல. இன்ன ஊழல் நடந்திருக்கிறதென்று சொல்லுங்கள். அதுவும் உங்கள் மாவட்டத்தில் தொடர்ந்து ஊழல் நடந்ததாகச் சொல்கிறீர்கள். யார் யார் செய்திருக்கிறார்கள் என்று சொன்னால், நடவடிக்கை எடுக்கலாம். உரம் போட்டிருக்கிற விகிதப்படி எல்லோருக்கும் கொடுக்கப் பட்டிருக்கிறது. இன்றைக்கு உர வினியோகத்தைப்பற்றிக் கேட்டிருக்கிறோம். எல்லா மாவட்டத்திலும் சரியான அளவு இருக்கின்றது. அப்படி ஏதாவது தட்டுப்பாடு இருந்தால், உடனடியாக உரம் கொடுக்க ஏற்பாடு செய்யப்படும்.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் எங்கே ஊழல் என்று கேட்டார்கள். அது மாவட்ட ஆட்சித் தலைவருக்கும்

சென்றிருந்ததால், வெளிப்படையாகக் கூறவேண்டுமென்று விட்டு விட்டேன். நமது மதிப்பிற்குரிய அமைச்சர் மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் அவர்களுடைய ஊரிலே ஒரு 'பி. டி. ஓ.' கைது செய்யப்பட்டிருக்கிறார். அவர் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அங்கே ஊழல் நடந்திருக்கிறது. மேலும் பல ஊழல்கள் நடந்திருக்கின்றன என்பதைத்தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மேலும் பல கிராம சேவக்குகள் இது சம்பந்தமாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இப்படிப் பல ஊழல்கள் இருக்கின்றன. விவசாயிகளுக்கு உரம் கிடைக்க முடியாத ஒரு நிலை அந்த மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கிறதென்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொண்டு, இந்தமாதிரி நிலைமைகள் ஏற்படாமல் நல்ல முறையில், சீரிய முறையில் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 'விலைவாசியைக் குறைத்து, வசதியைப் பெருக்குவோம்' என்று மக்களிடம் கூறிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையை அமல்படுத்துவதன் மூலம் விலைவாசியை என்றைக்குக் குறைக்கப் போகிறீர்கள், வசதிகளை என்றைக்குப் பெருக்கப் போகிறீர்கள் என்று கேட்டுக் கொண்டு, நான் கொடுத்த திருத்தத்தை வலியுறுத்தி, நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, என் தொகுதியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். என் தொகுதியில் ஏதோ உர ஊழல் நடந்ததாகவும், 'பி.டி.ஓ.' கைது செய்யப்பட்டதாகவும் சொன்னார்கள். அப்படி எதுவும் என் தொகுதியில் நடக்கவில்லை. வேலூர் தொகுதியிலே, செங்கம் தாலூகாவிலே 2 கிராம சேவக்குகள் உரத்தை விற்று விட்டார்களென்று, தென் ஆற்காடு கலெக்டர் மூலமாக, வட ஆற்காடு கலெக்டருக்குத் தகவல் வந்து, அந்தக் கிராம சேவக்குகளைக் கைது செய்து, 'சஸ்பென்ட்' செய்திருக்கிறார்கள். கைது செய்து நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். ஊழல் நடந்திருக்கிறதென்று சொன்னால், எதையும் விட்டு விடுவதாக இல்லை. அது என் தொகுதியில் இல்லை. யார் எங்கே இப்படி உரத்தைத் தவறுதலாகப் பயன்படுத்தினாலும், அரசால் கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும். இது விஷயத்தில் அரசு தயக்கம் காட்டாது. தவறு இருந்தால் சுட்டிக் காட்டுங்கள். குற்றத்தை மாத்திரம் தயவு செய்து சொல்லிக்கொண்டிருக்க வேண்டாம். எங்கு நடந்திருக்கிறதென்று சொன்னால் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர்: ஆளுநர் அவர்களின் உரையின் மீது அதிகமான அங்கத்தினர்கள் பேச ஆர்வத்துடன் பெயர் கொடுத்திருப்பதால், மாண்புமிகு அங்கத்தினர்கள் பேசும்போது 10 நிமிட அளவுக்கு அதிகம் எடுத்துக்கொள்ளாமல் பேசினால்தான் இந்தக் குறிப்பிட்ட நாட்களில் எல்லோருக்கும் வாய்ப்பளிக்க முடியுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையின் பேரில், அவருக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிந்து நண்பர் திரு. காட்டூர் கோபால் அவர்கள் சிறந்த சொற்பொழிவை ஆற்றினார்கள். ஆளுநர் உரையிலே என்னென்ன கஷ்டங்கள் நம்முடைய மாநிலத்தில் இருக்கின்றன, அதற்கு என்னென்ன பரிகாரங்கள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைப் பற்றி ஒவ்வொரு அம்சமாக, விளக்கமாகக் கொடுத்திருக்கிறார்கள். முதலிலேயே மின்சாரப் பற்றாக்குறையைப் போக்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறதென்று சொல்லியிருக்கிறார்கள். இந்த மின்சாரப் பற்றாக்குறையானது மாநிலத்தில் இன்னும் 4 மாதங்களுக்குள் என்னென்ன விளைவுகளை ஏற்படுத்தப் போகிறதோ என்று கவலைப்படக்கூடிய ஒரு நிலையை என்னிடம் உண்டாக்கியிருக்கிறது. விவசாயிகளுக்கு மாத்திரமல்லாமல், பருத்தி ஆலைகளுக்கும், நூல் ஆலைகளுக்கும் மின்சாரம் கிடைக்காததாலே, 'லே-ஆப்' என்கிற நிலை இருக்கிறது. ஆதலினால் நூல் விலை ஏறுகிறது. அதே சமயம் நான் பருத்தி உற்பத்தி செய்கின்ற விவசாயி, என்னுடைய பருத்திக்கு விலை கிடைக்கவில்லை. இதுதான் இப்போதிக்கிற நிலைமை. நேற்று திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் சொன்ன மாதிரி, 80-ம் நம்பர் நூல் 100 ரூபாய் என்று இருந்தது, 3 வாரங்களுக்குள் 150 ரூபாயாகிவிட்டது. அதே சமயத்தில் விவசாயி உற்பத்தி செய்யும் பருத்தி விலையானது 20 ரூபாய் குறைந்து விட்டது. இப்படிப்பட்ட பல நிலைமைகள் இருக்கின்றன. நமது மாநிலத்தில் வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களிலும், கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சி தாலுகாவிலும் ஏராளமாகச் சாகுபடி செய்யக்கூடிய ஒரு நிலை, இந்த வருடம் பூஜ்யம் ஆகிவிட்டதென்று இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதன் காரணமாக நிலக்கடலை எண்ணெய் விலையானது அதிகமாக ஏறிவிட்டதென்று 'மார்க்கெட்டிங் ரிப்போர்ட்'டில் தினமும் 5–10
பார்த்துக் கொண்டிருக்கிறேன். வேகமாக ஏறிக்கொண்டிருக்கிறது. அது பி.ப.
சாதாரணமாக மக்கள் உபயோகிக்கின்ற சாமான். அதை எப்படி உணவு அமைச்சர் அவர்கள் மக்களுக்குக் கொடுத்து சரி செய்யப் போகிறார் என்பது எனக்கு ஒரு வினாக்குறியாகவே இருந்துகொண்டிருக்கிறது. அது மாதிரியாக பருப்பு வகைகள் அங்கு இருந்து வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பருப்பு வகைகளை எப்படி சாதாரண மக்களுக்கு வினியோகம் செய்வது? சாதாரணமாக எடுத்துக்கொண்டால், உளுந்துதான் எங்கள் பக்கத்திலே நன்றாக விளைகின்றது. 60 படி மூட்டை உளுந்து இன்று 200 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அதனாலே ஒரு படி உளுந்து 3½ ரூபாய் விலையாகிறது. அவ்வளவு உயர்ந்த விலையிலே விற்கப்படுகிறது. ஆனால் மற்ற பருப்பு தானியங்கள் எதுவுமே இந்த வருஷம் விளையவில்லை. அப்படி இருக்கின்ற நேரத்திலே, வட இந்தியாவிலிருந்து கொண்டு வருகின்ற தானியங்களைச்

[திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்] [1973 பிப்ரவரி 6

சரிவர வினியோகம் செய்கின்ற ஒரு முறையை நீங்கள் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சமயத்திலே சமீபத்திலே ஒரு சர்ச்சை எழுந்தது. இந்த உர வினியோகம், சர்க்கரை வினியோகம் சம்பந்தமாகப் பல தப்புகள் நடக்கின்றன. அதைக் கண்டுபிடித்துக் கொடுத்தால், நடவடிக்கை எடுக்கலாம் என்று சொல்கிறார்கள். நான் மார்க்கெட்டிங் சொஸைடித் தலைவனாக இருந்து 6 பஞ்சாயத்துக்களுக்கு உர சப்ளை செய்திருக்கின்றேன். என்னிடத்திலே யார் யாருக்குக் கொடுக்கவேண்டுமென்று விவரம் வருகிறது. அதன்படி 'சப்ளை' செய்துகொண்டிருக்கிறேன். ஒவ்வொரு சொஸைட்டியும் எடுத்துச் சென்றுவிட்ட பிறகு, கிராமத்தில் மூட்டை வந்து சேரவில்லை என்று சொல்கிறார்கள். உண்மையாக, குறிப்பாகச் சொல்லப்போனால், இரண்டு டன் கேட்டால், அங்கே கொடுத்து விட்டோமென்று ஏதோ கணக்கு எழுதிவிடுகிறார்கள். குறிப்பாகச் சொல்லப்போனால், எங்கள் ஊருக்கே சென்ற மாதம் நான் 2 டன் யூரியா, 1 டன் நைட்ரேட் போட்டேன். எங்கள் ஊருக்கே வரவில்லை. என்னைப் போன்றவர்கள் 'கம்ப்ளெயிண்ட்' செய்துகொண்டிருப்பது நல்லதல்ல. மாவட்ட ஆட்சியாளர் அவர்களிடம் சொன்னேன். அதற்கு ரெகமன்டேஷன் பண்ணுவது என்று ஒரு திட்டம் போட்டார். அதிலே கூட எவ்வளவோ ஊழல்கள் நடந்துகொண்டிருக்கின்றன. இதையெல்லாம் நம் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். சென்ற மாதம் அவர் மதுரைக்கு வந்தபோது, எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, தங்களுடைய கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி, இந்த ஊழல்கள் விஷயத்தில் ஏதாவது செய்தார்கள் என்றால், கண்டிப்பாக நடவடிக்கை எடுப்பேன் என்று அவர் உத்தரவாதம் தந்திருக்கிறார். அந்த உத்தரவாதத்தின் அடிப்படையிலே, நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆனால் பொது ஜனங்கள் மனு எழுதிக்கொடுக்க யோசிக்கிறார்கள். நான் ஊரிலே இரண்டு மனு எழுதிக்கொடுங்கள், கொண்டுபோய்க் கொடுப்போம் என்றால், மனு எழுதிக்கொடுக்க அவர்கள் யோசிக்கிறார்கள். அந்த முறையிலே இருக்கிறது. அதனாலே இதிலே கெட்ட பெயர் வராதபடி இருக்க வேண்டும். சர்க்கரையும் அப்படித்தான் இருக்கிறது. எங்கள் ஊருக்கு தீபாவளிக்குத்தான் சர்க்கரை வருகிறது. அதற்கு அப்புறம் வரவில்லை. இந்த மாதிரி ஒரு உண்மையான நிலைமை இருக்கிறது. அதைச் சரிப்படுத்தி, கெட்ட பெயர் வாங்காதபடி, அதை ஒரு நல்ல முறையிலே, நல்ல பெயர் வாங்குகின்ற வகையிலே அமைத்தால், நன்றாக இருக்கும். ஏழை எளியவர்களுக்கு, விவசாயிகளுக்கு, உபயோகிப்பவர்களுக்கு அது போய்ச் சேருமாறு செய்ய உணவு அமைச்சர் அவர்களும் விவசாய அமைச்சர் அவர்களும் ஒரு திட்டத்தினை வகுத்து, கீழே இருக்கின்ற ஆபிஸர்களுக்கும் சொல்லி, அதைச்

1973 பிப்ரவரி 6] [திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்]

செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் என்னவென்று கேட்டால், 49 ரூபாய்க்கு வருகின்ற யூரியா மூட்டையானது ரூ. 80, 85-க்கு விற்கிறது. திருச்சிராப்பள்ளியிலேயிருந்து ஒருவர் வந்திருந்தார். 95 ரூபாய் விற்கிறது என்றார் அவர். விருதுநகரிலே இருக்கிற வியாபாரிகள் அங்கேயே பக்கத்திலே வைத்து விற்கிறார்கள். அதைப் பார்த்தால், நமக்கு வயிற்றெரிச்சலாக இருக்கிறது. நாமும் 49 ரூபாய்க்குக் கொடுத்தோமே, நம்முடைய விவசாயிகளுக்கு இல்லையே, இந்த ஊரிலேயே அதிகமாக விற்கிறதே என்று பார்க்கும்போது, வருத்தமாக இருக்கிறது. அதனாலே இது விஷயத்தில் முதலமைச்சர் அவர்கள் நேரடி கவனம் செலுத்தி, அவருடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களை நியமித்து, அது எப்படி நடக்கிறதென்று விசாரிக்கவேண்டுமென்று நான் அவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கிராம வேலை வாய்ப்புத் திட்டம், சாலைகள் அமைத்தல், மண் வேலை செய்வது ஆகியவற்றில் அதிக அக்கறை காட்டவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தச் சமயத்தில் அதிலே அக்கறை காட்டவேண்டுமென்று சொன்னால், என்னுடைய அனுபவத்திலே சொல்கிறேன், சாதாரணமாக காண்ட்ராக்டர்களை எடுத்துக்கொண்டால், அவர்கள் அதிகமாக பில்டிங் காண்ட்ராக்டுக்கு வருவதில்லை, அதிலே அதிகமாக மோசடி செய்யமுடியாது என்கின்ற வகையிலே மண் வேலை செய்வதிலே ஆசைப்படுகிறார்கள். மண் வேலை செய்வதிலே மோசடியெல்லாம் நடக்காதபடி பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கொஞ்சம் கண்காணிப்பாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய அனுபவ ரீதியில் சொல்கிறேன். முன்பு ராஜாஜி அவர்கள் " P.W.D. is my enemy No. 2 " என்று அந்தக் காலத்திலே 1952-ம் வருஷம், சட்டசபையிலே சொன்னார்கள். இந்த மாதிரிக் காரியங்களுக்கு நாம் எவ்வளவு ரூபாய்களை அள்ளி அள்ளிக் கொடுக்கிறோம். அந்த ரூபாய் எல்லாம் சரிவரச் செலவு செய்யப் படுகிறதா, கீழ் மட்டத்திலே இருக்கின்றவர்கள் சரியாக நடக்கின்றனரா என்பதை நீங்கள் கவனிக்க வேண்டுமென்று நான் தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறேன்.

வரி ஏய்ப்பைத் தடுக்க, வரி விகிதத்தைக் குறைத்தால், கள்ளப்பணம் சேர்ப்பதைத் தடுக்க முடியும் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்ஸிலிலே சொன்னதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். அந்தமாதிரி முறை இருந்ததால்தான், கள்ளப் பணம் ஏற்பட்டது. 100க்கு 95 ரூபாய் போய்ச் சேர்ந்துவிட்டால், ஏதாவது வகையில் ரூபாய் சம்பாதிக்கலாம் என்ற எண்ணம் வந்துவிடுகிறது. ரூபாய்க்கு அரை ரூபாய் நமக்குப் போகிறதென்றால், வரி ஏய்க்கின்ற மனப்பான்மை வரும். அதேமாதிரி இப்போது விற்பனை வரி விஷயத்திலும்

[திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்] [1973 பிப்ரவரி 6

நான் அனுபவபூர்வமான ஒரு விஷயத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இப்போது உளுந்து மூட்டை 200 ரூபாய். அதற்கு 3½ பர்சென்ட் வரி. 6 ரூபாய் விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கிறது. அங்கே வாங்குகிறவர்களும் களுக்கும் பெயர் பெற்றது; ஊர் பூராவும் சுற்றி செக்-போஸ்ட் போட்டிருக்கிறார்கள். நான்கு புறமும் செக்- போஸ்ட் போட்டிருக்கிறார்கள். நான் நிதர்சனமாகப் பார்க்கிறேன், ஒரு மூட்டை உள்ளே போனால் ஒரு ரூபாய் கொடுத்துவிட்டு உள்ளே போய்விடவேண்டியது. சீட்டு இல்லாமல், அதாவது கணக்கு இல்லாத வெள்ளைச் சீட்டிலே போட்டு விற்றுவிடுகிறார்கள். அதனாலே 6 ரூபாய் விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கிறது. அங்கே வாங்குகிறவர்களும் வெள்ளைச் சீட்டு என்றால்தான் வாங்குகிறார்கள். அதாவது வெள்ளைச் சீட்டு என்றால், கணக்கு எழுதாதது. 'வெ'னா சீட்டுக்கு, 'க'னா சீட்டுக்கு என்று கேட்கிறார்கள், கேட்கிறபோதே. இந்த மாதிரி நிலைமை அங்கே இருக்கிறது.

(குறுக்கீடு)

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இது எவ்வளவு நாளாக இருக்கிறது என்று சொல்லவேண்டும்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : ரொம்ப நாளாக இருக்கிறது. நான் 1952-லிருந்தே, ராஜாஜி அவர்கள் காலத்திலிருந்தே சொல்லிக் கொண்டிருக்கின்றேன். அப்படிச் சொல்லும்போது, தென்னட்டி விஸ்வநாதம் அவர்கள், "உங்களுடைய சிஷ்யப் பிள்ளையையே கேளுங்கள். என்ன சொல்லுகிறார்கள்" என்றார்கள். நானும் மறுபடியும் சொன்னேன். அதனாலே முதலமைச்சர் அவர்களுடைய இம்மாதிரியான ஒரு நல்ல அடிப்படைக் கருத்தை வரவேற்கிறேன். வரி விகிதம் ஜாஸ்தியாக இருந்தால், வரி செலுத்துவதற்கு மனது இடம் கொடுக்காது. அதேபோல் வரி விகிதம் ஜாஸ்தியாக இல்லாமலிருந்தால், இதற்காக இந்த சிறு வரி கட்டாமல் ஏன் குற்றம் செய்யவேண்டும், கெட்ட பெயர் வாங்கவேண்டும் என்ற எண்ணம் உண்டாகும். அந்த முறையில் விற்பனை வரி விகிதத்தை உணவு அமைச்சர் அவர்களும் யோசித்து சீரமைக்க வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நமது தேசிய வளர்ச்சிக் கழகத்தில் சொன்ன வரிக் கொள்கை மாற்றத்தை தாங்கள் ஏற்றுக்கொண்டிருப்பது தனிப்பட்ட முறையிலா, அல்லது தங்கள் கட்சி முறையிலா ?

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : நான் கட்சியைக் கலக்கவில்லை. என்னுடைய அனுபவ பூர்வமான அபிப்பிராயத்தைச் சொல்கிறேன். நிதிக் கமிஷன் சம்பந்தமான ஒரு விஷயத்தைச் சொல்லியிருக்கிறார்கள். நிதிக்

1973 பிப்ரவரி 6] [திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்]

கமிஷன் சிபார்சின் அடிப்படையிலே பிளானிங் கமிஷன் மாநிலங்களுக்கெல்லாம் நிதி ஒதுக்க வேண்டும். மாநிலங்கள் என்ன சொல்கிறார்களோ அந்த அடிப்படையில்தான் ஒதுக்கப்படும் என்று சொல்கிறார்கள். நான் சமீபத்திலே முதலமைச்சருடைய கல்யாணத்திற்கு முன்னால் நான் என் பழைய நண்பராகிய திரு. பிரம்மானந்த ரெட்டி அவர்கள் இங்கே வந்திருந்போது சந்தித்துப் பேசினேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : முதலமைச்சர் மகனுக்குத்தான் கல்யாணம்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : அவர் என்னுடைய பழைய நண்பர் என்ற காரணத்தாலே எதற்காக வந்திருக்கிறாய் என்று கேட்டேன். ஊருக்குப் போகவில்லையா என்று கேட்டேன். "நான் இதற்காக வந்தேன். நாளைக்கு முதலமைச்சர் மகன் கல்யாணத்திற்குச் சென்று பார்த்துவிட்டு, பின் என் அண்ணாச்சி மகன் கல்யாணத்திற்குப் போக வேண்டும்" என்று சொன்னார்கள். நான், "கூடுமானவரையில் மாநில சர்க்கார் மக்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்ய முயற்சிக்கிறது. நீ ஜாஸ்தியாகச் சிபாரிசு செய்ய வேண்டும்" என்று கேட்டுக்கொண்டேன். அதேபோல் செய்வார்கள் என்று நம்புகிறேன். அப்படிச் செய்தால்தான் நம்முடைய மாநிலத் தேவைகளை நாம் பூர்த்தி செய்ய முடியும் என்று நினைக்கிறேன். இது ஒரு நல்ல கருத்து என்று அதை நான் வரவேற்கிறேன். நான் அதிகமாக நேரம் எடுத்துக்கொள்ளவில்லை.

பேருந்துகளை அரசுடைமையாக்கும் விஷயமாக நம்முடைய பேருந்து அமைச்சர் அவர்களுக்கு, போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு வார்த்தை சொல்ல ஆசைப்படுகிறேன். பேருந்துகளை எடுப்பதுபற்றி எனக்கு ஒரு ஆட்சேபணையும் இல்லை. ஏனென்றால் நான் 1948-லேயே சட்ட சபையிலே பேருந்தை எடுக்க வேண்டுமென்று சொல்லிய கட்சியைச் சேர்ந்தவன். நானும் அதிலே நம்பிக்கை உடையவன். ஆனால் அரசு பேருந்தை எடுத்ததிலிருந்து நஷ்டம் ஆகிறதே, அது நல்ல முறையிலே நடக்கவில்லையே என்கிற வருத்தம்தான் எனக்கு. இப்போது நல்ல ஒரு வாலிப மந்திரி இதற்கு வந்து சேர்ந்திருக்கிறார். இன்ஜினியரிங் வேலையில் இருந்து எனக்குச் சொந்தக்காரராக இருந்தவரிடத்திலே இருந்தவர்கள். கெட்டிக்காரர். அவர் இந்த வேலையை நன்றாகச் செய்ய வேண்டும். அவர்கள் டி.வி.எஸ். காரர்கள் நடத்துகிற மாதிரி இல்லாவிட்டாலும்கூட, சாதாரண மக்கள், கவர்ன்மென்ட் எடுத்தபின் இப்படி இருக்கிறதே, பல இடங்களிலே பேருந்து விழுந்துவிடுகிறதே என்று சொல்லாத அளவுக்கு நல்ல முறையிலே நடத்த வேண்டும். அதே சமயத்தில் இன்னொரு விஷயத்தைச் சொல்ல

5–20 பி.ப. ஆசைப்படுகிறேன். பஸ் ஆபரேட்டர்கள் சொன்னதைச் சொல்கிறேன். இந்த பஸ்களை எப்போது எடுக்கப்போகிறார்கள், எந்த நேரத்தில் சுருக்குக் கயிறு போடப்போகிறார்கள் என்று அவர்களுக்குச் சொல்லிவிட்டால் நல்லது. இல்லாவிட்டால், டயர் போடமாட்டார்கள். பஸ் மோசமாக இருக்கும். நான் சொல்வது ஒரே நாளில் எடுத்துவிடுங்கள் என்பது. 5 வருஷம் என்பது வேண்டாம்.

* **மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்பதுபோல, டயத்தைச் சொல்லிவிட்டால், போட்ட டயரை எடுத்துவிடக்கூடாது அல்லவா, அதனால் நாம் அதைச் சொல்லாமலிருக்க வேண்டியுள்ளது.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : ஒரு விஷயத்தை நண்பர் ஒருவர் வந்து சொல்லிவிட்டுப் போனார். 25-வது அமெண்ட்மெண்டு விஷயமாக சென்னை ஹைகோர்ட்டிலே புதிதாக ஜட்ஜுமெண்டு சொல்லியிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். டயம் பிக்ஸ் பண்ணவேண்டும், சொல்ல வேண்டுமென்று சொல்லப் பட்டதாக 5 நிமிஷத்திற்கு முன்னால் கேள்விப்பட்டேன். இந்த விஷயத்தில் நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்களோடு பேசலாம் என்று நினைக்கிறேன். டயம் கொடுத்து விட்டால், அவர்கள் அதுவரை நன்றாக நடத்துவதற்கு என்னென்ன வழி வகைகளைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எடுப்பதைப்பற்றி ஆட்சேபணை இல்லை. நன்றாக நடத்துங்கள். எடுக்கிற வரைக்கும் சாதாரண மக்கள் கஷ்டப்படக் கூடாது. இதை ஆராய்ந்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, நம்முடைய நாட்டில் எங்கு பார்த்தாலும் பஸ்களைக் கொளுத்துவது போன்ற குழப்பமான நிலைமை இருக்கிறது. போன தடவை எதிர்க் கட்சித் தலைவரவர்கள் ஒரு யோசனை சொன்னார்கள். ஒவ்வொரு கட்சித் தலைவரையும் வைத்துப் பேசி, ஒரு சுமுகமான முடிவை ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். முதலமைச்சர் அவர்கள் அதற்கு முயற்சி எடுத்துச் செய்வார்களென்று எதிர்பார்த்தேன். ஆனால் இங்கேயிருக்கிற சூழ்நிலையைப் பார்த்தால் இத்தகைய முயற்சி எடுபடாது என்று தோன்றுகிறது. இதிலே மனதைத் தளரவிடாதபடி எல்லோரையும் கலந்து நல்ல முடிவிற்கு வந்து நாட்டிலிருக்கிற அராஜக நிலைமையையும், நல்ல நிலைமை இல்லாததையும் மாற்றி, நல்ல சூழ்நிலையை உண்டாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வருஷத்திலே நாம் மிகப் பயங்கரமான சூழ்நிலையில் இருக்கிறோம். மின்சார வெட்டு இருக்கிறது. உணவுப் பற்றாக்குறை இருக்காது என்று நம்புகிறேன். 'சைக்ளோன்' வந்தது நல்லதாகப் போயிற்று. விவசாய

அமைச்சர் மாண்புமிகு திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்கள் 3 ஜில்லாக்களில் இரண்டு லட்சம் ஏக்கரில் ஐ. ஆர். 8 விவசாயம் செய்யப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். எங்கள் பக்கத்தில் வைகை அணைக்கட்டிலிருந்து இரண்டு போகத்திற்குத் தண்ணீர் விடுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். விலையெல்லாம் போய்விடுமென்று நினைக்கிறேன். ஆனால் மற்றப் பொருள்களின் விலை, விவசாயிகள் வாங்கக் கூடிய பொருள்களின் விலை ஏறுகின்றது. இவைகளையெல்லாம் கட்டுப்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு மின்சாரத்தை மாத்திரம் விவசாயிகளுக்குத் தட்டுப்பாடு இல்லாமல் கொடுக்க வேண்டும், மற்ற எதை வேண்டுமானாலும் குறைக்கட்டும், மின்சாரத்தைக் குறைக்க வேண்டாம். விவசாயிகளுக்கு விவசாயம் செய்வதற்கு மின்சாரம் தட்டுப்பாடு இல்லாமல் கிடைப்பதற்கு, அதற்கு ஃபர்ஸ்ட் சார்ஜ் என்று முதலில் கொடுத்து விட்டு, மற்றவைகளுக்குப் பிறகு என்ற நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். எஸ். தென்னரசு : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையை வரவேற்று, என்னுடைய கருத்தை வழங்க அனுமதிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன். நம்முடைய நண்பர் திரு. பலராமன் அவர்கள் ஆளுநர் உரையில் கொள்கையில்லையென்று இங்கே எடுத்துச் சொன்னார்கள். இந்த ஆளுநர் உரைதான் திராவிட முன்னேற்றக் கழக அரசின் கொள்கையைப் பரிபூரணமாக வலியுறுத்தியிருக்கிறதென்பதை அங்கத்தினர் அவர்களுக்குச் சொல்லி என்னுடைய கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

எத்தனையோ முறை நம்முடைய முதலமைச்சரவர்கள் தேசிய வளர்ச்சிக் குழுவில் பங்கு பெற்றிருக்கிறார்கள். 1947-க்குப் பிறகு பல தேசிய வளர்ச்சிக் குழுக்கள் அமைந்திருந்தாலும், அந்த வளர்ச்சிக் குழுக்களெல்லாம் ஒரு கட்சியின் காரியக் கமிட்டி கூட்டம் போலவே நடைபெற்றுக்கொண்டுவந்தன. பொதுவாக, தலைமை அமைச்சர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருக்கிறாரோ அந்தக் கட்சியைத்தான் மாநில முதலமைச்சர்களும் சேர்ந்திருந்தார்கள். ஆகையினாலே தலைமை அமைச்சர் அவர்களுடைய கருத்தை மறுத்துப் பேசுவதற்கோ, எதிர்த்துப் பேசுவதற்கோ, அதை இடைமறித்துப் பேசுவதற்கோ அப்போதிருந்த முதலமைச்சர்கள் விரும்பவில்லை. ஆனால் இன்றையதினம் தென்பிராந்தியத்தில் தமிழ் நாட்டை ஆண்டுகொண்டிருக்கக் கூடிய திராவிட முன்னேற்றக் கழக அரசு மத்திய அமைச்சரவைக்கு மாறுபட்ட கொள்கையுடைய அமைச்சரவை என்பதை இங்கே கவனப்படுத்த வேண்டுமென்று விரும்புகிறேன். இந்தத் தேசிய வளர்ச்சிக் குழுவில் பங்கு

பெற்ற நம் முதலமைச்சர் அவர்கள் வளர்ச்சிக் குழுவில் உரையாற்றிய பிறகு,
மற்ற மாநில முதலமைச்சர்கள் நம்முடைய முதலமைச்சரைக் கை குலுக்கி
யிருக்கிறார்கள், பல இடங்களில் பத்திரிக்கைகளில் வந்ததைப் பார்த்திருக்க
லாம். ஏற்கெனவே நடைபெற்ற தேசீய வளர்ச்சிக் குழுவிற்கும் இப்போது
நடைபெற்ற தேசீய வளர்ச்சிக் குழுவிற்கும் உள்ள அடிப்படை வித்தியாசம்,
மற்ற மாநில முதலமைச்சர்கள் தெரிவிக்க முடியாத கருத்தை, சொல்வதற்கு
அஞ்சிக்கொண்டிருந்த கருத்தை, நம்முடைய முதலமைச்சரவர்கள் அந்தத்
தேசீய வளர்ச்சிக் குழுவில் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். இதைப்
பற்றித்தான் திரு. ஜெயராம ரெட்டியார் அவர்கள் ஒன்றை மட்டும் இங்கே
எடுத்துச் சொன்னார்கள். நிதி ஆணைக்குழுவிற்கு அதிகப்படியான அதிகாரம்
வேண்டுமென்று முதலமைச்சரவர்கள் தேசீய வளர்ச்சிக் குழுவில் எடுத்துச்
சொன்னது எல்லோராலும் வரவேற்கத் தக்கதாக இருந்தது. ஃபினான்ஸ்
கமிஷன் என்று சொல்லப்படுகிற நிதி ஆணைக்குழுவிற்கும் திட்டக் குழுவிற்கும்
எந்த விதமான நல்ல தொடர்பும் இல்லாத வகையில் இருப்பதை மாற்றி
யமைத்து, நிதி ஆணைக்குழுவிற்கு அதிகப்படியான அதிகாரம் தர வேண்டு
மென்று முதலமைச்சரவர்கள் தெரிவித்திருப்பதை தமிழ் நாட்டு மக்கள்
அத்தனை பேரும் வரவேற்றிருக்கிறார்கள். நிதி ஆணைக்குழு வருமான
வரிகளுக்கேற்ற வகையில் மாநில வருமானங்களுக்குகந்த வகையில், திட்டங்
களுக்கு ஒதுக்குவதற்கு, திட்டக் குழுவிற்கு இருக்கிற அதிகாரத்தைப் போல்,
இக்குழுவிற்கு அதிக அதிகாரம் இருக்க வேண்டுமென்று தெரிவித்திருக்
கிறார்கள். மத்திய வரிகளிலிருந்து மாநில சர்க்காருக்குப் பிரித்துக்
கொடுக்கக் கூடிய முறையிலும், மானியம் வழங்கும் முறையிலும் அதிகமாகத்
தலையிடுவதற்கு நிதி ஆணைக்குழுவிற்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று
எல்லா மாநில முதலமைச்சர்கள் சார்பில் தெரிவித்திருப்பது மிகுந்த
மகிழ்ச்சியைத் தருகிறது.

இன்னொரு முக்கியமான அம்சம், பொதுவாக மத்திய சர்க்கார் மாநில
சர்க்காருக்குக் கடன் கொடுக்கிறபோது, அடிப்படைத் தேவைக்காகக்
கொடுக்கப்படுகிற கடன் வேறு, ஒரு குடும்பத்தை வளர்ப்பதற்குக் கொடுக்கப்
படுகிற கடன் வேறு என்று இரண்டாகப் பிரித்து, நம் முதலமைச்சரவர்கள்
அடிப்படைத் தேவைக்காகக் கொடுக்கப்படுகிற கடன் மூலமாக எந்தக் குடும்
பமும் வாழாது, ஆக இன்றியமையாத் தேவைக்காகக் கொடுக்கப்படுகிற கடனை
மானியமாக எடுத்துக்கொள்ள வேண்டும், மானியமாகக் கருத வேண்டுமென்று
தேசீய வளர்ச்சிக் குழுவில் தெரிவித்திருப்பது மாநிலத்திற்குப் பெருத்த
உதவியாக இருக்குமென்பதைச் சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறோம்.

பொதுவாக தமிழ் நாட்டில் மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கும் மாநில
சர்க்கார் ஊழியர்களுக்கும் வருவாய்த் துறையில் அதிகமான வேறுபாடு

இருப்பதை பன்னெடுங்காலமாகப் பார்த்து வருகிறோம். ஒரு நாட்டில் வாழக்
கூடிய மக்களுக்கு ஒரே விலைவாசி உயர்வு இருக்கக் கூடிய இந்தக் காலத்தில்
மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு அதிக ஊதியமும், மாநில சர்க்கார் ஊழியர்
களுக்குக் குறைந்த ஊதியமும் இருப்பதைத் தவிர்ப்பதற்கு ஒரு சீரான
ஏற்பாட்டினைச் செய்ய வேண்டுமென்று தேசீய வளர்ச்சிக் குழுவில் முதல
மைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இது தலைசிறந்த கொள்கை என்பதை
ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். திரு. ஜெயராம ரெட்டியார் அவர்கள்
இதை வரவேற்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால் வெளியில் வாழக்கூடிய
பெரிய கட்சியைச் சேர்ந்தவர்கள் பணக்காரனுக்கு ஆதரவாக முதலமைச்சர்
பேசுகிறார் என்று குறிப்பிட்டு வந்தார்கள். இது பொது மக்களுக்கு நன்றாகத்
தெரியும். யார் பணக்காரர்களுக்காகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பது
பொது மக்களுக்கு நன்றாகத் தெரியும். அப்படிப்பட்ட நிலைமைகளை எண்ணிப்
பார்க்கிறபோது, எத்தனை முறை ஆளுநர் உரையைப் படித்தாலும், இந்த முறை
தான் திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தினுடைய கொள்கையை நாம்
பார்க்கிறோம். நண்பர் திரு. பலராமன் ஒரு உண்மையைச் சொன்னார்கள்.
1967-க்கு முன்பு திராவிட முன்னேற்றக் கழகம் வெளியே எதைப் பேசிக்
கொண்டு வந்ததோ அதைத்தான் உள்ளே பேசுகிறதென்று குறிப்பிட்டார்கள்.
வெளியே பேசுவதைத்தான் உள்ளே பேசுவது, திராவிட முன்னேற்றக் கழ
கத்தின் மரபு என்பதை இந்த ஆளுநர் உரை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டு
கிறது. இந்த உரையைப் படித்துப் பார்த்த பின்னால், இந்த திராவிட
முன்னேற்றக் கழக அரசாங்கம் மாநில சுயாட்சிக்காகப் போராடக் கூடிய
அரசாங்கம் என்பதையும், மத்திய சர்க்கார் அதிகாரத்தைப் பகிர்ந்து
கொள்ளக் கூடிய அரசாங்கம் என்பதையும் புரிந்துகொள்ளலாம். இரண்டு
தினங்களுக்கு முன்பு வழக்கறிஞராகிய திரு. பல்கிவாலா அவர்கள்
சென்னையில் ஒரு பெரிய கூட்டத்தில் பேசினார்கள். இந்த அரசாங்கத்தை
அவர் தாக்கிப் பேசுவார், அதைப் பத்திரிகையிலே படித்துப் பார்க்கலாம்
என்று ஆசைப்பட்ட ஒரு சிலர் அவரை இங்கே வரவழைத்தார்கள். அவர்
பேசியது என்ன? இந்தியாவில் எத்தனை மாநிலங்கள் இருந்தாலும், தமிழ்
நாடு சர்க்கார்தான் மத்திய சர்க்காரை எதிர்த்துப் போராடுவதில் தலைமை
தாங்குகிறது என்ற உண்மையை இங்கே சொல்லிவிட்டுப் போனார்கள். வர
வேற்றவர்களுக்கெல்லாம் கொஞ்சம் ஆத்திரமாக இருந்தாலும், திரு. பல்கிவாலா
அவர்கள் பேச்சுக்கும் இந்த ஆளுநர் அவர்கள் உரைக்கும் நெருங்கிய
தொடர்பு இருக்கிறது. திரு. பலராமன் அவர்கள் இன்னொன்றைச் சொன்
னார்கள். விலைவாசி உயர்வைப்பற்றி ஒரு காலத்தில் பேசி மறியல் செய்தார்
கள், அவர்களே ஆட்சிக்கு வந்த பிறகு அதைப்பற்றிப் பேசவேயில்லையென்று
சொன்னார்கள். அவருக்கு நான் ஒன்றைக் கவனப்படுத்துவேன். மதிப்பு
மிகு திரு. ராஜாராம் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அப்போது விலைவாசி

உயர்வை எதிர்த்து நாங்கள் சிறைக்குப் போனோம். மாவட்ட ஆட்சியாளர்களுடைய அலுவலகங்களுக்கு முன்னால் மறியல் செய்தோம். விலைவாசி உயர்ந்துவிட்டது, அதைக் குறைக்க வேண்டுமென்று சொன்னோம். அன்றைக்கிருந்த அரசாங்கம், இந்த அரசாங்கத்தைப் போல மத்திய அரசாங்கம் பொறுப்பு என்று சொல்லியிருந்தால், நாங்கள் கலெக்டர் அலுவலகங்களுக்கு முன்பாகச் செய்த மறியலை போஸ்டாபீஸ்களுக்கு முன்னால் செய்திருப்போம். அவர்கள் அப்போது என்ன சொன்னார்கள்? "விலைவாசி உயர்வு ஏற்பட்டிருப்பது உண்மைதான். ஆனால் அரிஜனச் சேரிகளில் தகர சாமான்களுக்குப் பதில் சில்வர் சாமான்கள் இருக்கின்றன, இது பொருளாதாரம் வளர்ந்து விட்டது என்பதைக் காட்டுகிறது. யாரும் வாங்கக்கூடிய நிலைமைக்கு பொருளாதாரம் இருக்கிறது" என்று அன்றைய முதலமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். அதை யாரும் மறந்திருக்க முடியாது. அன்றைய
5-30 பி.ப. காங்கிரஸ் அமைச்சர் திரு. கக்கன் அவர்கள் மனைவியே இந்த விலைவாசி உயர்ந்தது உண்மை என்று சொன்னதையெல்லாம் பத்திரிகையில் பார்த்திருப்பீர்கள். அந்த நிலைமையையெல்லாம், அரசியல் உண்மைகளை காங்கிரஸ் அரசாங்கம் அன்றைக்கு மக்களுக்குத் தெரிவித்திருக்க வேண்டும். இதெல்லாம் அன்றைக்கு முதலமைச்சராக இருந்தவர்கள் மக்களுக்குச் சொல்லியிருக்க வேண்டும். 1967-க்குப் பிறகுதான் இந்த நிலைமை எல்லாம் தமிழ் நாட்டு மக்களுக்குத் தெரிகிறது. இந்த உண்மையை அன்றைக்கு இருந்த அரசு ஏன் சொல்லவில்லை? பிரதமரைத் திருத்தக்கூடிய, திருத்தி கொள்கையை உருவாக்கக்கூடிய அளவில் அன்றைக்கிருந்த முதலமைச்சர் இல்லை. ஏனென்றால், ஒரே கட்சி ஆட்சி மத்தியிலும் மாநிலத்திலும் இருந்தது என்ற காரணத்தால், மத்தியிலிருந்த ஆட்சியை அன்றைக்கிருந்த மாநில அரசு கேட்க முடியாது, அதன் கருத்தை மாற்ற முடியாது. அதன் காரணமாக இந்த நிலைமைகள் ஏற்பட்டன என்பதையும் மறந்துவிடக் கூடாது.

அடுத்து, வேலையில்லாத் திண்டாட்டம்பற்றி, இந்த அரசாங்கம் நடிக்கிறது என்று திரு. பலராமன் அவர்கள் சொன்னார்கள். நான் அதைப்பற்றி விளக்க வேண்டும். திரு. காமராஜர் அவர்கள் மதுரைக் கூட்டத்திலே சொன்னார்கள். "கருணாநிதி போய் நான் வந்தாலும் இந்த வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கத்தான் செய்யும். பெரியவர்கள், படித்தவர்கள், மாணவர்கள் ஒத்துழைத்தால் ஒழிய, இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தை அவ்வளவு எளிதில் நீக்கிவிட முடியாது", என்று காமராஜர் அவர்கள் சொன்னார்கள். அதை இந்த நோக்கில் கூறிக்கொள்வது, இதுதான் உண்மையான கொள்கையுள்ள ஆளுநர் உரை என்பதை வலியுறுத்துவதற்காகத்தான். விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையின்மீது, என்னுடைய ஒரு சில கருத்துக்களைச் சொல்லியாக வேண்டும். கவர்னர் பெருமான் உரையின் இறுதியிலே, தமிழ் நாட்டினுடைய போற்றத்தக்க ஜனநாயக மரபினை மேலும் தமிழ்நாட்டு மக்கள் காப்பாற்ற வேண்டும் என்ற ஒரு கருத்தினைச் சொல்லியிருக்கிறார்கள். இந்த நோக்கில் கவர்னர் பெருமானின் உரை பற்றிப் படிக்கக்கூடிய பொதுமக்கள் தமிழ்நாட்டினுடைய இந்த உயர்ந்த ஜனநாயக மரபினை இந்த அரசாங்கம் காப்பாற்றியது என்று நிச்சயமாக ஒத்துக்கொள்ள மாட்டார்கள். எனவே, ஜனநாயக மரபினைப் போற்றக்கூடிய, ஜனநாயக மரபு மேலும் வளர வேண்டுமென்று நம்பிக்கை கொண்ட நாம் அனைவரும் இப்போது ஒரு கசப்பான உண்மையை மனதில் வைத்துக் கொண்டுதான், கவர்னருடைய உரைபற்றி நாம் சிந்திக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். கவர்னருடைய உரை இத்தனை நாள் இருந்ததைப்போல் இல்லாமல், பெரும் ஏமாற்றம் அளிக்கக்கூடிய உரையாக இருந்தது என்பதை நான் எடுத்துச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதுபற்றி விரிவாகப் பல கருத்துக்களைச் சொல்லலாம் என்றாலும், குறிப்பாக நான் இங்கே ஒன்றிரண்டு முக்கியமான விஷயங்களைக் கூற விரும்புகிறேன். இந்த அரசாங்கம் பல நேரங்களிலே, பல இடங்களிலே பலவகையான மக்களுக்குப் பல வாக்குறுதிகளைக் கொடுத்து வந்திருக்கிறது. அந்த வாக்குறுதிகளை எல்லாம் இந்த அரசாங்கம் காப்பாற்றியிருக்கிறதா என்று யோசித்துப் பார்த்தால், நிச்சயமாக அவைகளைப்பற்றிக் கேட்கிற நேரத்தில் மறைக்கப்பட்டன, மறுக்கப்பட்டன என்பதை நான் சொல்லாமல் இருக்கமுடியாது. குறிப்பாக நான் தொடர்பு கொண்டுள்ள பட்டதாரி ஆசிரியர்கள்பற்றி இங்கே சொல்ல வேண்டுமென்றால், இந்த அரசாங்கம் அவர்களுக்குப் பல வாக்குறுதிகளைக் கொடுத்தது. சென்ற ஆண்டு, போராட்டம் நடத்திய பின்பு, அவர்களுடைய சம்பள உயர்வு குறித்து மீண்டும் பரிசீலனை செய்வோம், இப்போது அவர்களுக்குக் கொடுத்திருக்கக்கூடிய வாக்குறுதி ஒரு பாதுகாப்பு, எங்களுடைய நல்லெண்ணத்தின் ஒரு அடையாளம், அதை எப்போதும் மாற்றப்போவதில்லை என்பதை முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் அந்த வாக்குறுதி, அவருடைய அந்த எண்ண உறுதிபற்றி மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று பட்டதாரி ஆசிரியர்கள் ஒரு கோரிக்கை மாநாடு நடத்தினார்கள். அந்த மாநாட்டில் இந்த அரசாங்கத்தைச் சேர்ந்த எந்த அமைச்சரும் பங்கு கொள்ளவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்களுடைய கோரிக்கையை மீண்டும் பரிசீலனை செய்து, ஒரு நியாயமான முடிவைப் பண்ணவிட்டால், அவர்கள் போராடக்கூடிய சூழ்நிலை ஏற்படும் என்பதைப்பற்றி, திருச்சியில் அவர்கள் நடத்திய கூட்டத்தில் முடிவெடுத்திருக்கிறார்கள். எனவே இந்த அரசாங்கம் அந்தப் பிரச்சினை முடிந்து

விட்டது என்று நினைத்துவிடாமல், மேலும் ஒரு தெளிவான அறிக்கையை வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நேரத்திலே பட்டதாரி ஆசிரியர் ஒருவர் 1—4—70-க்குப் பின் தொடங்கப்பட்ட . . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: முதலில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய வாக்குறுதியைக் காப்பாற்றியிருக்கிறார்களா என்பது தான் கேள்வி.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களுடைய கேள்விக்கு நான் பதில் சொல்ல முடியும். ஆனால் நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது. நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறபோது, நான் கொடுத்த வாக்குறுதிபற்றி நான் இங்கே சொல்வது முறையாகாது, அவ்வளவு பண்பும் ஆகாது என்று சொல்லிக்கொள்வேன். ஆனால் முதலமைச்சர் அவர்களிடம் தனியாக வேண்டுமானால் சொல்லிக்கொள்கிறேன்.

1—4—1970-க்குப் பிறகு தொடங்கப்பட்ட பள்ளிகளில் நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களின் நிலைமை குறித்து ஒரு தெளிவான கொள்கையை இன்னும் அரசாங்கம் பின்பற்றவில்லை. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் 2 ஆண்டுகளுக்கு மேலாக அந்தப் பள்ளிகளிலே பணிசெய்து வரக்கூடிய பட்டதாரி ஆசிரியர்களின் நிலைமை இன்னும் நிச்சயமற்ற நிலைமையாக இருந்துகொண்டிருக்கிறது. இந்த 1--4--1970-க்குப் பிறகு நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் எல்லாம் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் அவர்களுடைய வேலைக்கு உத்தரவாதம் பெற வேண்டும் என்ற ஆணையை அரசாங்கம் பிறப்பித்த பின்பும், அதே சர்வீஸ் கமிஷன் மூலமாக பல 100 பட்டதாரி ஆசிரியர்கள், குறிப்பாக, சேலம், தர்மபுரி மாவட்டங்களிலுள்ள ஆசிரியர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுவார்கள் என்று அவர்களுக்கு ஆணை பிறப்பிக்கப்படுகிறது. குறிப்பாக, பொருளாதாரம், பூகோளம், காமர்ஸ் போன்ற துறைகளில் பட்டம் பெற்றவர்கள், பணி செய்துவரும் ஆசிரியர்கள் வேலை இழக்கும் அபாயம் இருக்கிறது. இது குறித்து அரசாங்கத்துக்கு நான் சட்டமன்றத்தில் செய்த பிரசங்கத்தில் சொல்லியிருக்கிறேன். அதையே இப்போது எழுப்புகிறேன். இதில் அரசாங்கம் முடிவு எடுக்காமலிருந்தால், இது நீதிமன்றத்துக்குப் போகக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். நீதிமன்றத்துக்குப் போனால், அரசாங்கம் நீதிமன்றத்துக்குப் போனாலும், பாதிக்கப்பட்ட மக்கள் நீதிமன்றத்துக்குப் போனாலும், அது ஒரு சாதாரண காரியம் ஆகாது. என்றாலும், குறிப்பாக, ஆசிரியர்கள் நீதிமன்றத்துக்குப் போய் போராடக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அவர்களுக்கு இந்தக் கொடுமையைக் கொடுக்கக்கூடாது. அவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் அரசுப் பள்ளிகளில் வேலை செய்து வருகிறார்கள். ஆகவே

ஏதாவது ஒரு அடிப்படையில் தனியாக ஒரு விதியை வகுத்து, அவர்களையெல்லாம் நிரந்தரமாக்க விதி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், இந்தத் துறையில் 30 வயதைத் தாண்டியவர்கள்கூட இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இது ஒரு பெரிய பேரிடியாக இருக்கிறது. ஆகையினால், அவர்களது பிரச்சினையில் நியாயமான முடிவு எடுத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்குத் தனியாக விதியை உருவாக்க வேண்டுமென்று அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். மேலும் இந்தப் பணிக்கால அடிப்படையில் பட்டதாரி ஆசிரியர்களின் அவல நிலைமையைப் போக்க வேண்டியிருக்கிறது. இந்தப் பணிக்கால அடிப்படையில் வேலை செய்கிற இந்தப் பட்டதாரி ஆசிரியர்கள் தங்களுக்குக் கொடுக்கப்படும் சம்பள விகிதம் ஒரு புதிய சம்பளமாக இருக்கவேண்டுமென்று நினைக்கிறார்கள். அந்த அடிப்படையில் சுமார் 7, 8 ஆண்டுகள் வேலை செய்த ஊதியத்தைக் கொடுக்க வேண்டுமென்பது அவர்களுடைய கோரிக்கை. அந்தக் கோரிக்கையை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக, தமிழ் ஆசிரியர்களுக்குத் தலைமை ஆசிரியர் பதவி கொடுப்பது பி.ப.
பற்றி ஆசிரியர்கள் மகாநாட்டில் கூறினார்கள். இரண்டு மாதங்களில் கொடுப் 5–40
போமென்று சொன்னார்கள். விரைவிலேயே வரும் என்றார்கள். அது என்னவாயிற்று என்று கேட்க விரும்புகிறேன். அதுபோல, முதல் நிலை, இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள் என்ற பாகுபாடு இருக்கிறது. இதைப் போக்க வேண்டுமென்று கூட இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள், நேரு அவர்கள் பிறந்த தினம் என்று நினைக்கிறேன், அன்று சென்னையில் உண்ணாவிரதம் இருந்தார்கள். ஆகவே, இந்தப் பாகுபாடு குறித்த சிக்கலை அரசாங்கம் உடனடியாகத் தீர்க்க வேண்டும். இதிலே ஏன் உறுதியாகச் சொல்லுகிறேன் என்றால், இன்று கல்வி இலாகா நிர்வாகத்தைக் குறித்து எத்தனையோ பிரச்சினைகள் இருக்கின்றன. கல்வி இலாகா நிர்வாகம் சீராக இல்லையென்று அண்மையில் ஐதராபாத்திலிருந்து வெளிவந்த கல்லூரி நிர்வாக அறிக்கை தெளிவாகக் கூறியிருக்கிறது. அதை அரசாங்கம் என்ன காரணத்தாலோ சட்டமன்றத்தின் முன் வைக்க முன்வரவில்லை. அதை வைக்கவேண்டும். பல கோடி ரூபாய் இருக்கிற காரணத்தாலோ என்னவோ நிர்வாகம் இன்று சீர்கெட்டிருக்கிறது. நிர்வாகச் சீர்கேட்டால், அரசியல், கல்வி நிலையங்களில் புகுந்து விளையாடுகிறது. அதற்கு எவ்வளவோ உதாரணங்கள் சொல்லலாம். இந்த நேரத்தில் பொதுவாகச் சொல்ல விரும்புவது, தயவுசெய்து கல்வி நிர்வாகம் பற்றிய அறிக்கை சட்டமன்றம் முன் வைக்கப்பட்டு, அதைப்பற்றிச் சட்டமன்றம் இறுதியாக விவாதம் நடத்தி, கல்வி நிர்வாகத்தைச் சீர் செய்யவேண்டும். அப்பொழுதுதான் ஆசிரியர்கள் பிரச்சினை

முடியும். அதுவும் ஒரு அம்சம்தான். மாணவர்கள் பிரச்சினை தனியாக இருக்கிறது. தனியார் பள்ளி நிர்வாகம் இருக்கிறது. அரசினர் பள்ளிகளில்கூட ஆசிரியர்களுக்கு உத்தரவாதமில்லாத நிலை இருக்கிறபொழுது, தனியார் பள்ளிப் பிரச்சினைபற்றி ஆதரித்துப் பேச முடியாது. அதில் பல பிரச்சினைகள், குறைகள் இருக்கின்றன. அவைகளைச் சீர்செய்ய வேண்டுமென்றால் கல்வி இலாகாவைத்தான் முதலில் சீர் செய்ய வேண்டும். அதைத் தெரிந்துகொள்ளத்தான் நான் இந்த அறிக்கையை சட்டமன்றத்தின் முன் வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதை அரசாங்கம் நல்ல திறந்த மனத்துடன் ஏற்று, அந்த நடவடிக்கையை எடுப்பார்களென்று நம்புகிறேன். முக்கியமான பிரச்சினையாக இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புவது, இந்த அவல நிலைமையைப் போக்க அரசாங்கம் வகுத்த பல திட்டங்களும் போதாது. தொழில் இலாகா மேலும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வகுத்த திட்டங்கள் தோல்வியடைந்தன. குறிப்பாக, டாக்டர்கள் போன்று நன்றாகப் படித்து, உடனடியாக வேலை கிடைப்பவர்களுக்குக்கூட நிதி நிலைத்திட்டம் என்று தொழில் இலாகா திட்டத்தை வகுத்துள்ளது. அதுவும் தோல்வியடைந்தது. ஏன் இவை தோல்வியடைந்தன என்பதற்கு நல்ல உதாரணம் வேண்டுமென்றால், நேற்று இதே சட்டமன்றத்தில் மாண்புமிகு அமைச்சரவர்கள் கிராமப்புற வேலைபற்றிச் சொன்னார்கள். அதை விரிவாக ஆராய்ந்தபொழுது, திட்டத்தில் கோளாறு இருக்கிறது, நாம் போடுகிற திட்டங்கள் பணம் செலவு செய்யும் திட்டங்கள், அவை என்றைக்கும் என்று தெளிவாக விளக்கவுமில்லை. இந்தத் திட்டத்தின்படி ஒரு ஆண்டுக்கு 10 லட்சம் ரூபாய் செலவு செய்து, 1,000 பேர் தினம் ஒன்றுக்கு 4 ரூபாய் கூலி பெறும்படி வேலை கிடைக்கத் திட்டமிட்டால், 10 லட்சம் ரூபாயை 1,000 பேருக்குக் கொடுத்தால் ஒருவருக்கு 100 ரூபாய் என்று வருகிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன். இந்தத் திட்டத்தை வகுத்தது இந்திய அரசு. நாம் செலவழிக்கும் பணத்தை யோசித்து நாம் காம்பிரிஹென்ஸிவாக ஒரு திட்டம் போட்டால், "நாங்கள் சொல்கிறபடி நடத்த வேண்டும், தனிக் கணக்கு வைக்கவேண்டும்" என்று இந்திய சர்க்கார் வற்புறுத்துகிறது. அதன்படி செய்து, திட்டத்தில் இன்னின்ன இடர்பாடுகள், இடையூறுகள் இருக்கின்றன என்று சுட்டிக்காட்டியிருக்கிறோம். ஆகவே, காம்ப்ரிஹென்சிவ் ஆக நாம் போடுகிற பல்வேறு திட்டங்களோடு இதை இணைத்தால், அதிகமாக லாபம் வருமென்று கருத்து தெரிவித்திருக்கிறோம். கடிதப் போக்குவரத்தில் இருக்கிறது. முடிவு தெரிந்த பிறகுதான் நிலைமை தெரியும்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: சொல்லக்கூடிய காரணம், மாநில அரசைக் குறை சொல்லவில்லை. திட்டம் இருக்கிறது, அதை ஏற்றிருக்கிறோம். திட்டத்தில் கோளாறு இருக்கிறது என்பதை மாமன்றத்திற்குத் தெரிவிக்கும் நோக்கத்தில் சொல்கிறேன். ரூ. 10,00,000 செலவு செய்து 1,000 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்க அவர்கள் திட்டத்தின்படி, ஒரு நாளைக்கு 4 ரூபாய் கூலிக்கு 10 மாதம் வேலை செய்கிறார் ஒருவர் என்றால், அவருக்கு ரூ. 120 கூலி கொடுக்க வேண்டும். இப்படியே ரூ. 10 லட்சத்தைப் பிரித்துக் கொடுத்தால், 130 ரூபாய்தான் கிடைக்கும். நிச்சயமாக ஒரு ஆண்டுக்கு இருவருக்கும் கூட வேலை கொடுக்க முடியாதென்று திட்டம் இருக்கிறது. இதன்படி 5% பணியாளருக்கு, 20,000 ரூபாயில் ஒரு ஆளுக்கு ஒரு ஆண்டுக்கு ரூ. 930 தான் கிடைக்கிறது என்று திட்டம் சொல்லுகிறது. ஒரு ஆண்டுக்கு வேலை கொடுக்கக்கூடச் செயல்படுத்த முடியாது. பணம் செலவு செய்த உடனே, மீண்டும் வேலை செய்தவர்கள் வேலை இல்லாதவர்களாக மாறும் அபாயம் இருக்கிறது. இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், வேலை வாய்ப்புக் கொடுக்க போடக்கூடிய திட்டங்கள், தினக் கூலி கிடைப்பதாக மட்டும் அமைந்தால், நிச்சயமாக அது 'பர்மனென்ட் சொல்யூஷன்' ஆக அமையப் போவதில்லை. இந்த நேரத்தில் நான் அரசாங்கத்திற்குச் சொல்லக்கூடிய யோசனை என்று எடுத்துக்கொண்டால், இன்று பத்திரிகையில் பார்த்தேன். தர்மபுரியில் என்னென்ன வேலை வாய்ப்புக்கு திட்டங்கள் போடலாமென்று அறிக்கை வந்திருக்கிறது. உதாரணமாக, தர்மபுரியில் ஒரு கூட்டுறவுப் பால் பண்ணை இருக்கிறது. அது தனியார் துறையாக இருக்கலாம். தர்மபுரி மாவட்டத்திற்கு 45,000 லிட்டர் பால் தேவைப்படுகிறது. பெங்களூருக்கு ஒரு நாளைக்கு 25,000 லிட்டர் தேவை. இந்த 1,000 ரூபாயைத் தனி மனிதனுக்குக் கொடுத்து, கறவை மாடு, எருமை வைத்துக்கொள்ளலாம் என்று திட்டம் வைத்தால், அதன் மூலம் அவர்கள் தொடர்ந்து அந்தத் தொழிலில் இருக்கும் வாய்ப்பு ஏற்பட்டால், அந்தத் தொழிலுக்கு மார்க்கெட் இருக்கிறது. அவர்கள் தினக் கூலியை மட்டும் நம்பாமல் இது மிக நல்ல தொழிலாக, இண்டஸ்ட்ரியாக மாறுகிறது. இந்த வேலை வாய்ப்புத் திட்டமும் ஒரு தொழிலாக, நிரந்தரமான தொழிலாக மாற்றப்பட்டால்தான், பணம் செலவு செய்யும் அளவுக்கு வேலை வாய்ப்புக்களை உண்டாக்கும். இந்த நேரத்தில், கடைசியாக வேலையில்லாத் திண்டாட்டம் பற்றிய ஒரு கருத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

பின்தங்கிய நாடுகளில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள்பற்றி பேராசிரியர் ஒருவர் ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார். ஏன் படித்தவர்களிடையே கூட பின்தங்கிய நாடுகளில் வேலையில்லாத் திண்டாட்டம் நிலவுகிறது என்றால், எம்.எஸ்.சி. படித்தால்,

[திரு. வ. ஈஸ்வரமூர்த்தி] [1973 பிப்ரவரி 6

எம்.ஏ. படித்தால் கலெக்டர் வேலை எனக்கும் கிடைக்கும், கலெக்டர் வேலை கிடைக்காவிட்டாலும், டிபுடி கலெக்டர் வேலை கிடைக்கும் என்று காத்திருக்கிறோம். வேறு வேலைகள் இருந்தாலும், நாம் உடனே அந்த வேலைக்குப் போகாமல் 5 ஆண்டுகள் காத்திருக்கிறோம். அப்படியானால் அந்த ஐந்து ஆண்டுகளில் வேலை இல்லாதோர் பட்டியலில் இவர்கள் பெயர் இருக்கிறது. இப்படிப்பட்டவர்களுக்கு நல்ல தொழில் கல்வி கொடுத்து வேறு தொழிலில் அமர்த்தலாம். இதன் மூலம், இனிமேல், எம்.எஸ்.சி., பி.எஸ்.சி., பி.டி படித்தவர்களுக்கு மேல்மட்டத்தில் வேலை கொடுத்து அவர்களில் வேலை இல்லாதோரின் தொகையைக் குறைத்துவிட முடியும். அந்த அளவுக்கு நல்லது. உதாரணமாக, எவ்வளவோ அம்சங்கள் இருக்கின்றன. படித்தவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்க வேண்டுமென்றால் புதியதாக என்ன வேலை கொடுக்கலாம் என்று வைத்திருக்கிற திட்டங்களில் 2, 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை கல்வித் தகுதிகளை உயர்த்திக்கொண்டு போக வேண்டும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : பி.ஏ., பி.டி.,பி.எஸ்.சி. படித்து, மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு மேற்கொண்டு படிக்கும் நிலை வந்தால், அப்பொழுது நிலை என்னவென்று உறுப்பினர் விளக்கினால் பரவாயில்லை.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : ரிடையர் ஆன பிறகு அவர்கள் பிரச்சினை இல்லை. ஒரு ஆண்டுக்கு இவ்வளவு பேர் விலகுகிறார்கள் என்றால், அடுத்த ஆண்டு வருகிறவர்களுடைய பிரச்சினை தீரும். பிறகு பாதிக்கும் அளவு நிலைமை இருக்காது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறும் யோசனை, வேலை வைத்திருப்பவர்களுக்கு இந்தத் தகுதியை உயர்த்துவதன் மூலம் சமாளிக்கலாம். குறிப்பிட்ட வேலைக்கு 10 பேர் இருக்கிற இடத்தில், 100 பேர் விண்ணப்பம் செய்தால், பி.ஏ., எம்.ஏ., டாக்டரேட் 6 பேர் வருவார்கள். அதை வைத்து நாம் சமாளிக்கலாம். ஆனால், பி.ஏ., பி.ஈ., எம்.எஸ்.சி., படித்தவர்களிடையே கூட வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது. அவர்கள் குறித்த வேலைக்கே செல்ல வேண்டுமென்று எண்ணிக்கொண்டிராமல் "ஓர்க் ஓரியண்டட் எஜுகேஷன்" என்பதுபோல வேலை வாய்ப்போடு சேர்ந்த கல்வி அவர்களுக்குக் கற்பிக்க வேண்டுமென்ற அடிப்படையில் கல்வி வரவேண்டுமென்று சொல்லுகிற யோசனை உள்ளபடியே வரவேற்கத் தக்கதாக இருக்கும். இந்த முறையில் தகுதியை உயர்த்திக்கொண்டு போனால், வேலையில்லாத் திண்டாட்டம் இருக்க முடியாது, நாம் சமாளிக்கலாம்.

1973 பிப்ரவரி 6]

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : நீங்கள் சொல்லுகிற யோசனை படித்தவர்களிடத்திலே உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்கும் ஒரு பரிகாரம் தான். அதுவே முழுப் பரிகாரம் அல்ல. வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு இன்று இந்த அரசாங்கம் போட்டுள்ள திட்டங்கள் வெற்றிகரமான திட்டங்கள் என்று கூற முடியவில்லை. அதற்காக திட்டம் போடக் பி.ப.
கூடாது என்று சொல்லவில்லை. திட்டம் போட வேண்டும். ஆனால் அந்தக் 5-00
திட்டம் சரியாகச் செயல்படவில்லை என்றால், பயனில்லை. உதாரணத்திற்கு, கிராமங்களுக்கு ரோடு போடுவதற்கு ரூபாய் 3 கோடி ஒதுக்கீடு என்றால், அதோடு அந்தத் திட்டம் முடிந்து விடுகிறது. அதனால் வேலையில்லாத் திண்டாட்டம் குறைவதில்லை என்பதைச் சொல்லிக்கொள்ளுகின்றேன்.

தொழில்களைத் தொடங்கினாலொழிய வேலையில்லாத் திண்டாட்டம் குறைவதற்கு மார்க்கம் இல்லை. இதற்குக்கூட இங்கிலாந்தில் இப்போது "செலக்டிவ் எம்ப்ளாய்மெண்ட் டாக்ஸ்" என்று விதிக்கிறார்கள். சலுகையும் அளிக்கிறார்கள். ஒருவர் தொழில் தொடங்கினால், அதிலே ஒவ்வொரு ஆண்டும் எத்தனை பேருக்கு வேலை கொடுக்கிறார்களோ, அந்த அளவிற்கு வரிச் சலுகை கொடுக்கிறார்கள். அதன் மூலம் ஒரு நிரந்தரமான வேலை வாய்ப்பை உண்டாக்கியிருக்கிறார்கள். தற்போது இங்கு கூறப்பட்ட பரிகாரம் "எம்ப்ளாய்மெண்ட் பிராபிளம்" என்ற பெரிய நோயைத் தடுக்கும் "எபக்டிவ் மெடிசினாய்" இல்லாமல், இப்போது வைத்திருக்கும் மாத்திரையைச் சாப்பிட்டுவிட்டு அதனால் கொஞ்ச காலத்திற்கு நோயில்லாமல் இருக்கும், ஆனால் நோய் மீண்டும் பெரிய அளவில் வரும் என்ற கருத்தைச் சொல்லிக் கொண்டு இந்த உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

Thiru A. R. DAMODARAN : Hon. Deputy Chairman, Sir, the Governor's Address is a very sombre address because most of the points that have been mentioned in it refer to the shortages that exist in our country and more particularly in our State; and everybody is most concerned about the power shortage that exists in our State. When the State Electricity Board Budget was discussed in the last session, I had occasion to refer to it in greater detail. Although I may not go into all the details that have led to the power shortage, I think it is essential for us to analyse the reasons why this power shortage has developed not only in Tamil Nadu but all over our country. There are proponents of the theory that planning would cure all the ills of our country. We still have a number of annual Plans and Five-Year Plans. I think it is necessary for us to ask someone in authority—and in this case, the authority is the Central Water and Power Commission—why,

in our country, after 22 years of planning, after experts have sat in committees year after year and when we have one of the best technocrats in charge of the Ministry of Power, we have seen almost countrywide shortage in 1972. If my friend will not mistake me, in spite of all the best efforts that our planners may put forth in the coming five years, India is going to be short of power until 1980 or 1982, to envisage the immediate decade that is before us. The unfortunate plight has been caused, I think, by very faulty planning, although our planners may not accept this idea. In fact, in every field of activity, Sir, it is criminal bad planning that has been responsible for shortages. If we analyse the period prior to 1966, when we had to import more than 10 million tons of wheat and a few lakh tons of rice to tide over the very difficult food situation that existed, all those in the Planning Commission came forward with the brilliant idea that they had discovered only very recently that during the First, Second and Third Plans, they had given too much importance to heavy industry and that they had not devoted attention to agricultural progress. This was sought to be corrected in the Fourth Plan. Sir, in the case of power, I think, it is not the Tamil Nadu Government that should be held responsible, although they are in a very unfortunate position today and the Hon. the Minister for Electricity is not going to be a very popular figure for the next four or five months, until the power cut is removed. I can still sympathise with the Tamil Nadu Government and with our State Electricity Board, because, ever since I have been a Member of this Council from 1966, when Thiru Ramaiah was the Minister for Electricity, every year, the State Electricity Board has submitted plans for the expansion of power generation in our State, and every year, the plan that was suggested by the State has been cut by 30 or 40 per cent, resulting in the very bad situation that has come about in our State on this occasion. The only State in India—Maharashtra—has got a greater installed capacity as in November 1972 than Tamil Nadu. The figures are reproduced from the "Eastern Economist" which has indicated that Maharashtra has an installed capacity of 2,174 MW as in November 1972 and Tamil Nadu comes as very close second with 2,171 MW. This has been achieved in spite of the restrictions that have been placed by the Planning Commission; and the credit must be taken by our State Government,—to whichever party they may belong and whether it be before 1967 or after 1967,—and by our State Electricity Board, because they have tried to do everything possible to see that the

power generation copes with the increasing demands of today. Still we are in the unfortunate position that irrespective of whatever arrangements may be thought of at the present time, we are not going to tide over the power shortage. Our source of power generation includes the Neyveli Lignite Corporation where originally the production was to have been 650 MW. In fact, a couple of years ago, they did touch the mark of 500 or 550 MW. For the past five years ever since 1966, we have been pleading in this House,—and, in fact, we have also forwarded a resolution to the Government of India, if my memory is correct, in 1968 pleading—that the second mine cut must be taken up at Neyveli. But, Ministers of Steel and Mines have slept over this matter. I do not attribute any political motive. Perhaps they were more interested in developing the Bokaro Steel Project or probably they did not have funds to expand the Neyveli Lignite Project. But the fact remains, Sir, that this shortage in power generation has been brought about by criminal neglect of the Thermal Stations that existed in our State. I was glad to see in the Governor's Address that the Government of India had at last accepted the idea that the Neyveli Lignite generators should be switched over from lignite to furnace oil or oil furnaces. But, even that is going to take another 14 months and that is not going to relieve our present shortage. Expansion of nuclear plants, whether at Kalpakkam or at other places, is not going to help us now, because it will take seven or eight years for a nuclear plant to generate and to generate electricity. It is in this unfortunate position, Sir, although persons may not like me to express, I think, that somebody's head must roll because of this bad planning. Railway Ministers have resigned if a train goes off the track. But, we have Power Ministers there who refuse to budge and I have nothing against Dr. K. L. Rao who is a technocrat. But, unfortunately, all the weighty words of advice and wisdom that he has tried to din into the heads of the other Members of the Cabinet have failed, because sufficient allocation has not been made to power generation. The point now is that while we may seek to lay the responsibility on someone else, what are we to do to tide over the power cut that has been imposed? Members have referred and they have blamed the Electricity Board and it is quite true that apart from the 25 per cent cut, the 40 per cent cut for Heavy Industry is going to cause loss of production, lay-off of labour, loss of wages to labour, loss of production and shortage of essential commodities like fertilizers, cement, steel products, etc. In spite of all this,

there is no doubt that in our State, we are going to have a difficult period until the next monsoon sets in and even for the next one or one and a half years. It is in this context that I particularly welcome, although my hon. Friend Thiru Rajah Iyer stated that it was a counsel of perfection, the formation of the Western Ghats Development Corporation, because I have always believed in the idea that the four Southern States must join together in planning the development of their resources, whether it be water, power, minerals or any other natural resources that have to be exploited. There may be people, Sir, who may make fun against the Dravida Munnetra Kazhagam Government because they have always been proponents of the individual State and they have not cared about the other regions that existed in the South. But, I think this is a very healthy idea and I hope the Hon. the Chief Minister will go ahead with it. People may not think that Tamil Nadu is on the receiving end, because, of the four States that are concerned more particularly with power generation, Andhra Pradesh, in spite of its vast area—and we can understand something of the troubles that are taking place today in Telangana and other regions—has the total installed capacity of only 670 MW; the total installed capacity of Kerala is only 572 MW; and the total installed capacity of Mysore is only 966 MW. Out of a total installed capacity of 4,379 MW, Tamil Nadu occupies nearly 43 to 44 per cent and has 2,171 MW capacity. So, when the suggestion is now made by the Hon. the Chief Minister that we could think in terms of a Western Ghats Development Corporation for the development of natural resources, it is not because we alone are in difficulty but it is because all the four Southern States stand to benefit. I hope that the Government of India will take note and try to influence their respective party leaders in power in those States. In Mysore, the Chief Minister happens to belong to the ruling party and the Prime Minister would undoubtedly have great influence on him. But in Andhra Pradesh, we will have to wait for further development. I think this is a very sound idea and I would commend it for a suitable approach to be made.

Sir, I would like to refer to the problem of shortages that have been caused by the power cut. I would like the Hon. the Minister for Civil Supplies to investigate whether these shortages have really been caused by power cuts or whether there is something else being done by the manufacturers, which has escaped the attention of the Government. One of my hon. Friends referred to

the serious shortage of cement that exists in Tamil Nadu. In fact, I have also brought it to the notice of the Civil Suplies Department. The power cut that has been imposed on Cement Factories was—I am not aware of it exactly and the Hon. the Minister for Electricity must elucidate, but I was under the impression that it was—25 per cent, until 1st February. But, in spite of that, the quota of cement for dealers all over Tamil Nadu has been cut by more than 65 per cent and they are getting only 35 per cent of what they were getting in November or December. When such is the situation, what is the point in the Hon. the Minister for Civil Supplies saying that he will take over certain things for distribution, when the product does not exist for distribution? I am sure the Hon. the Minister for Civil Supplies has sufficient power to ask all the Cement Factories in Tamil Nadu as to the quantity of their production during the past six months and their distribution in Tamil Nadu, and to find out for himself whether cement which has become a scarce commodity is being exported across our borders without being distributed in Tamil Nadu. I know he has only limited powers as far as this is concerned, because cement is a decontrolled commodity and, at the same time, I am sure he will be able to exercise some degree of control over this.

Sir, my hon. Friend referred to groundnut oil, namely, the high price of edible oil. There is no doubt that the price of edible oil and the price of groundnut oil have gone up enomously. I would request the Hon. the Minister for Civil Supplies to find out whether it would be possible for us to prevent groundnut cake from being sent out of our State without satisfying the requirements of Tamil Nadu itself. I think a certain ban was imposed in Maharashtra a couple of years ago, when they suggested that the movement of groundnut cake, groundnut oil and groundnut itself should be controlled by the State. I make this request because groundnut oil is absolutely essential and it is one of the essential commodities for the weaker sections of our society and if we allow the prices of edible oils to go up, it will be extremely difficult to keep the cost of living down.

Sir, a very cautious approach has been outlined by the Minister for Civil Supplies and at a time when reckless slogans rent the air stating that if there is a shortage, the whole problem will be solved by Government taking over the wholesale trade. I am very glad that the Hon. the Minister for Civil Supplies has adopted a very cautious approach to the problem of taking over of trade in பி.ப. 6–00

foodgrains. Any Government, when it takes over this responsibility, will have a limited life in office. It is my firm belief that this Government are not so unfortunate as to think of taking over the wholesale trading in foodgrains and surviving the 1976 elections. With all my limited political knowledge, Sir, I am sure that it would be suicidal for any Government to take over the wholesale trade in foodgrains. This may be the sterile slogan—pardon me for using this phrase—of socialism by some of our great administrators in Delhi who are absolutely great theoreticians but have no practical knowledge of the trade. I would, therefore, request the Government of Tamil Nadu to continue this extremely cautious approach and as was so ably pointed out in the Governor's Address, the controlling power should be with the State Government. As we are interested in seeing that the weaker sections of our society are protected from indiscriminate price increase, we would support the Government in the limited powers they have taken for this and in procuring a certain percentage of the marketable surplus. I am very glad, Sir, that the Tamil Nadu Government have not fallen a prey to the enticement and inducement of those who want the State Governments to take over the wholesale trade in foodgrains. All State Chief Ministers have expressed concern and it is only those who are far away from the actual administration of the State that are extremely anxious that the Chief Ministers should dig their own graves by taking over wholesale trade in foodgrains. I congratulate the Government of Tamil Nadu on their cautious approach. We will support them in their endeavour to procure essential commodities, whether it is edible oil, whether it is foodgrains, whether it is pulses or kerosene oil, but doing it within the limited scope for Government bodies to distribute.

Sir, I now come to a very important point which has been stressed in the Governor's Address—I hope you will give me five minutes more—and this has a reference to the Fifth Finance Commission. We have been stating for the past five or six years in this House and we have been almost vociferous in respect of our claims. Unfortunately, we have not received the support of other Chief Ministers. But I think within their hearts they support us, but they are a little afraid of coming out supporting the Chief Minister of Tamil Nadu. But the *ad hoc* approach for the devolution of grants and loans must go if we are going to have political peace in our country. I have always been against the Central Government acting as the alms-giver and the State Government going with a

begging bowl and asking 'please give me 4 crores for this and 5 crores for that'. We must have some sort of statutory approach to the devolution of funds so that the area of patronage may be completely locked off. Patronage is required in politics, but as between Governments, if patronage is there to be exercised, then the entire question becomes highly political. Viewed from this angle, Sir, this Government have tackled this problem and want it to be placed on the statute-book so that these unnecessary irritations may not occur between two Governments which should really work together for the development of our country. The Hon. the Chief Minister, as I read it in the newspapers, has given evidence before the Commission. The statement of the evidence he has given has not been placed before the House. I would request him to do so. It is not a confidential document, I think. One should note that one of the specific items that was excluded from the purview of the Commission was the Corporation tax. Hitherto we have been raising the question of getting a share in the Corporation taxes. In this particular Fifth Finance Commission, in the terms of reference itself, it was stated that this Finance Commission would not go into the question of sharing of the Corporation taxes. So, we are left only with income-tax and excise duties. Probably, the Hon. the Chairman, Mr. Brahmananda Reddy, might recommend that 20 per cent of the excise duties might go up to 25 per cent. This is not going to solve the problem at all, Sir, and I fully endorse the approach of the Government in suggesting that *ad hoc* approach should go, and that this artificial distinction between plan expenditure and non-plan expenditure should be completely taken away and that there should be a complete review and reappraisal of the principles on which grants and loans are given so that the irritation that exists between the State and Central Governments may disappear.

Sir, one last point and I have done. In the Governor's Address, in the last but one paragraph, a slight mention has been made that the path of evolution of democracy does not always run smooth and is strewn with obstacles and difficulties. I would like to appeal to the leaders of all political parties—of course, nowadays it is very difficult to say that they truly lead the people because so many people do not follow them—but nonetheless I will make this appeal with due respect and humility that the quality of life is very important. For the past few months I have been noticing a degeneration in the political

activities in our State. This is unfortunate because Tamil Nadu has been proud of its traditions. Whatever differences we may have in politics—we must have *differences* in politics, whether they are ideological—some of which personal or some of which may be related to personalities, at the same time, our life has become rather coarse and vulgar and it is difficult for me to envisage how we are going to continue to work the system of democracy if meetings are to be disturbed and stones are thrown and unnecessary law and order forces are invited to supervise these political party meetings. It is not as if ruling party meetings alone are disturbed, but some very enthusiastic members of the ruling party themselves try to provoke incidents. With due respect to the Hon. the Chief Minister, I would request him to call back the dogs of war and he should see that some degree of political stability is restored. Public meetings must be held and criticisms must be made. One should not fight shy of this. Once we enter political life, not only is our public life open to question, but our entire private life is also open like a book and read out to the public. It is unfortunate, but this is where it has come to. Even in the United States of America, during the course of Presidential election everything is known and as you know, one prospective candidate for Vice-Presidentship was disqualified. It is unfortunate that private life should be dragged in to set low levels in politics. I would feel that some degree of sanity should be restored. Frequent strikes take place; stoppages, slowdown strikes, lightning strikes take place from small incidents. It is unfortunate that our people are so full with an atmosphere of violence that they believe that if a petition is sent today and an answer is not received tomorrow, they cust start a strike to convince the Government that they have something reasonable to say. If we have to have sanity in our political life, if there should be some reason and logic and argument in our way of life, I would plead not only with the members of the ruling party but with members of all parties, that we must see that the fine traditions that we have built up in safeguarding democracy in our State are preserved for many more years to come. Thank you, Sir.

திரு. சி. வி. ராஜகோபால்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் உரையின் மீது நன்றி தெரிவிக்கும் தன்மையில் அதிலே பேசுகின்ற வாய்ப்பு எனக்கு அளித்தமைக்கு முதலில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். கவர்னர் அவர்கள் உரையிலே மிக முக்கிய

மாக ஒரு 50 ஆண்டுக் காலம் நமக்கென வாழ்ந்து மறைந்த இராஜாஜி அவர்கள் செய்த சேவைகளையும், அவர் நாட்டிற்குத் தந்திருக்கும் பெரும் செல்வத்தையும், எதிர்கால சமுதாயம் வாழ அவர் கூறிய கருத்துக்களையும் புகழ்ந்து பாராட்டியிருப்பது குறித்து பெருமைப்படுகிறேன். அதற்காக முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இராஜாஜி அவர்கள் பல காரியங்களைச் செய்திருக்கிறார் என்பதால் மட்டுமல்ல. இந்த நாடு எதிர்காலத்தில் அழிந்து விடுமோ என்னவோ என்று பயந்து ஒரு நேரத்தில் சட்டமன்றத்தில் அவர் முதலமைச்சராக இருந்த போது, அங்கே அமர்ந்திருந்த ஏறக்குறைய நான்கு மாநிலங்களுக்கு உடையவர்கள்—ஆந்திரம், கர்நாடகம், தமிழகம், கேரளம் அத்தனை சட்டமன்ற உறுப்பினர்கள்—மத்தியிலே அவர் ஒரு தடவை கூறியது எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. கம்யூனிஸ்டுகள் இந்த நாட்டிற்கு மிக ஆகாதவர்கள், அது எதிர் காலத்தில் தெரியாமல் இருக்காது என்பதற்காக அந்தச் சட்டமன்றத்தில் அவர் எழுந்ததோடு அல்லாமல், ஏறக்குறைய 60, 70 கம்யூனிஸ்ட்களைப் பார்த்து மிகத் தைரியமாக "You are my enemy No. 1" என்று உள்ளத் துடிப்போடு, இந்த நாட்டைக் காப்பாற்ற வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு கூறினார். அதையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டிய நேரம் இது என்று கூறிக்கொள்ளுகின்றேன்.

அவர் நமக்கு அறிவித்து விட்டுப் போன 'கமர்சியல் டாக்ஸ்", காமதேனு என்ற பெரிய வரம்—இன்னொருவர் சொல்லி அவருடைய கற்பனையிலே தோன்றியது. அந்தக் காரணத்தால் இப்போது நம்முடைய ஆட்சி நிம்மதியாக நடக்கிறது என்று சொல்லுகிறேன். செழிப்பு என்று சொல்லுகிறார்கள். செழிப்பு என்ன இதில் இருக்கிறது? செழிப்பு வேறு வகையிலிருக்கிறது. ஆகவே அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்ததை நான் மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன்.

இப்போது நடக்கிற முன்னேற்றக் கழக ஆட்சியைப் பற்றிப் பெருமையாகப் பேசக்கூடாதென்று எவ்வளவுதான் அடக்கிக் கொண்டாலும், என்னால் முடியவில்லை. நமது நண்பர் திரு. பலராமன் அவர்கள் "முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வராத முன்னால் நாட்டு மக்களிடத்திலே இன்னின்ன கொள்கைகளை விளக்கினீர்களே, வந்த பிறகு அந்தக் கொள்கைகளை நிறைவேற்றியிருக்கிறீர்களா?" என்று ஒரு கேள்வியை இந்த அவையில் கொண்டு வந்ததன் காரணத்தால்தான், நான் மறுபடியும், மறுபடியும் முன்னேற்றக் கழக ஆட்சி மக்களுக்கு இன்னின்ன செய்திருக்கிறதென்று சொல்வதற்கு ஒரு நிலையான சந்தர்ப்பத்தை எழுப்பி விடுகிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முன்னேற்றக் கழகம் நாட்டு மக்களிடத்திலே 1967-க்கு முன்னாலே சொன்ன பல கருத்துக்களை, பல கொள்கைகளை அமுல் செய்திருக்கிறது. 1967-க்கு முன்னாலே காங்கிரஸ் கட்சி நாட்டை ஆண்டு வந்தது. தமிழ் மக்கள் மானத்தோடு வாழ வேண்டும்; தமிழ் மகன் நாடோடியாக இருக்கக் கூடாது; அவர்களுக்கு ஒரு தனி நாடு இருக்க வேண்டும்; அதற்காக 'தமிழ் நாடு' என்று பெயர் வையுங்கள் என்று அவர்கள் கேட்டதை நாங்கள் பொது மக்களிடத்தில் கூறினோம். அப்போதிருந்த காங்கிரஸ்காரர்களிடம் 'தமிழ் நாடு' என்று பெயர் வையுங்கள் என்று சொன்னோம். தமிழ் மகன் தன் நாட்டில் வாழ வேண்டும், அவனுக்கென்று ஒரு நாடு வேண்டுமென்று கூறினோம். ஆனால் அப்போதிருந்த முதலமைச்சரவர்கள், 'தமிழ் நாடு என்று வைத்தால், மற்ற ஊர் உலகத்திற்குத் தெரியாதே' என்று கூறினார்கள். மேலும் 'அதை வைக்கச் சொல்கிறீர்களே, அதை நாங்கள் வைக்க மாட்டோம்' என்று அவர்கள் இந்த விஷயத்தில் உறுதியாக இருந்தார்கள். ஆனால் தமிழ் மகன் மானத்தோடு வாழ்வதற்கு ஒரு நாடு வேண்டுமென்று நாங்கள் நாட்டு மக்களிடத்தில் சொன்னோம். நாங்கள் 1967-ல் ஆட்சியை எடுத்துக் கொண்ட பிறகுதான் தமிழ் மக்களுக்கு, தமிழன் தன்மானத்தோடு வாழ்வதற்கு 'தமிழ் நாடு' கிடைத்தது.

* **திரு. கே. ராஜாராம்:** தலைவரவர்களே, தமிழ் நாடு என்ற பெயர் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயே வைக்கப்பட்டுவிட்டது. தமிழைப் பொறுத்தவரையில் தமிழில் 'தமிழ் நாடு' என்று இருந்தது. அப்படி அப்பொழுதே ஆக்கி விட்டோம். ஆங்கிலத்தில் 'மெட்ராஸ் ஸ்டேட்' என்று இருந்ததென்பதை அங்கத்தினரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ் ரிகார்டுகளிலும், தமிழ் கெஜட்டிலும் 'தமிழ் நாடு' என்று முன்பே போட்டுவிட்டார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவரவர்களே, மன்னிக்க வேண்டும். அவர் சொன்னதுமாதிரி, இதிலே இருக்கிற கஷ்டங்களை இதற்கு முன்னால் இருந்த முதல்வரவர்கள், திரு. பக்தவத்சலம் அவர்கள் சொன்னார்கள். அதை மாற்ற வேண்டுமென்றால், இவ்வளவு செலவாகும், அவ்வளவு செலவாகுமென்று சொல்லிவிட்டார்களே தவிர, எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கூறிய பிரகாரம், 'தமிழ் நாடு' என்று கூறினாலும், 'மெட்ராஸ் ஸ்டேட்' என்று ஆங்கிலத்தில் இருந்ததை அவர்கள் அப்புறப்படுத்தவில்லை. 'மெட்ராஸ் ஸ்டேட்' என்று இருந்துகொண்டுதான் இருந்தது. ஆனால் நாங்கள் வந்த பிறகு, 'மெட்ராஸ் ஸ்டேட்' என்று இருந்ததை எடுத்துவிட்டு, 'தமிழ்நாடு' என்று பெயர் வைத்தோம். தமிழனுக்குரிய, தமிழன் வாழக்கூடிய இடமாக நாங்கள் செய்திருக்கிறோமென்பதற்காகத்தான் கூறுகிறேனேயொழிய வேறொன்றுமில்லை.

திரு. பலராமன் அவர்கள், கொள்கைகளை வெளியே சொல்கிறீர்கள், ஆனால் இங்கு ஒன்றும் செய்யவில்லை என்று கூறியதற்காகத்தான் இதைக் கூறினேன். நாங்கள் ஆயிரக்கணக்கான நிலைமைகளை மாற்றியிருக்கிறோம். திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டுமானால், "லட்சக்கணக்கான மக்களுக்கு பட்டா கொடுத்திருக்கிறோம், வீடில்லாத ஏழைகளுக்கு வீட்டு மனைகள் கொடுத்திருக்கிறோம், விவசாயத்தில் உங்கள் காலத்தில் 40 லட்சம் டன், 50 லட்சம் டன் நெல் உற்பத்தி செய்ததை, பசுமைப் புரட்சி மூலம் 75 லட்சம் டன் அளவுக்குக் கூட்டியிருக்கிறோம்." இதையெல்லாம் சொல்வதற்கு அடிப்படைக் காரணமாக நீங்கள் இருக்கிறீர்கள். இவைகளெல்லாம் தமிழ் நாட்டுக்கு ஒரு பெருமைதானே. இந்தப் பெருமையைச் சொல்லிக்கொள்வதில் ஏன் தயக்கமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

உணவுப் பொருள்களின் விலைவாசி ஏறிவிட்டது என்று அருமை நண்பர் அவர்கள் கூறுகிறார்கள். உண்மைதான். இல்லையென்று நான் சொல்லவில்லை. விலைவாசிகள் ஏறித்தான் இருக்கின்றன. இதற்கு முன்னாலும் ஏறிற்று. இப்போது "எதற்குக் கேட்டாலும் மத்திய அரசைக் காட்டுகிறீர்கள். அதற்கு அவர்கள் தானே பலியாக வேண்டியவர்கள். நீங்கள் அங்கே மறியல் செய்யாமல், கலெக்டர் ஆபீசில் செய்தீர்கள்" என்ற ஒரு குற்றச்சாட்டையும் நண்பரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். உண்மையாகச் சொல்கிறேன். நாங்கள் விலைவாசிப் போராட்டம் நடத்தியபோது நானும் வேலூருக்குச் சென்றிருந்தேன். சுமார் 700, 800 அல்லது 900 பேர் தண்டிக்கப்பட்டார்கள். என்னோடு அடியார் என்ற ஒருவரும், மற்றும் பலரும் சிறைக்கு வந்தார்கள். நண்பர் அவர்களுக்கு இது தெரியும். வேடிக்கைக்காகச் சொல்லவில்லை. அவர்களெல்லாம் 6 மாத சிறைத் தண்டனை பெற்றார்கள். நானும் தண்டிக்கப்பட்டேன். ஆனால் தண்டனைக் காலம் முடிவடைவதற்கு 2 நாளைக்கு முன்னால், வெளி வருவதற்கு இன்னும் இரண்டு நாட்கள்தான் இருக்கின்றன, வெளியே போய்விடலாமென்று நான் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, விலைவாசிப் போராட்டத்தில் சிறைக்குச் சென்றவர்களுக்கு வருங்காலத்தில் ஏதாவது மானியம் கொடுப்பதாகத் தீர்மானம் வந்து, அப்போது 6 மாத காலமாவது ஜெயிலுக்குப் போயிருக்க வேண்டுமென்று ஒரு நிபந்தனை போட்டால், அதற்கு வாதாடுவதற்காக, இப்போது தான் 6 மாதம் போனதாக 'ரிகார்டு' செய்கிறார். அவர் போனது 3 மாதம்தான், 6 மாத காலமல்ல.

திரு. சி. வி. ராஜகோபால்: மன்னிக்க வேண்டும். 5 மாதத்திற்கு மேல் இருக்கும். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்ன மாதிரி, அது

[திரு. சி. வி. ராஜகோபால்] [1973 பிப்ரவரி 6

எனக்குக் கிடைக்க வேண்டுமென்பதற்காக நான் அதைக் குறிப்பிடவில்லை. ஏறக்குறைய ஆயிரம் பேருக்கு மேல் சிறைக்குச் சென்றோம். தண்டனைக் காலம் முடிந்தவுடன் வெளியே வந்துவிடலாமென்று நான் சந்தோஷப் பட்டேன். ஆனால் என்னோடு இருந்தவர்கள் 'எங்களை வெளியே விட்டு விடுகிறார்களாமே; நாங்கள் எங்கே போய் சோற்றுக்கு அல்லாடுவோம்; உள்ளேயிருந்தால் மணி அடித்த நேரத்திலே சோறு போடுகிறார்களே; வெளியே எவ்வளவு பெரிய வறுமை தாண்டவமாடுகிறது; ஒரு வேளை சோறு கூட கிடைக்காது போல இருக்கிறதே' என்று அழுதவர்கள் இருக்கிறார்கள். நாங்கள் சிறைக்குச் சென்றபோது 10,000 பேருக்கு மேல் வந்தார்கள். வேண்டுமானால் என்னுடைய அருமை நண்பர், திரு. பலராமன் அவர்கள் 'விலைவாசி ஏறிவிட்டது, வாருங்கள் சிறைக்கு' என்றால் யாரும் வரமாட்டார்கள். கொஞ்சம் வசதிகள் இருக்கிற காரணத்தால், அவர்களால் வாங்க முடிகிறது. முன்மாதிரி அவ்வளவு பெரிய கூக்குரலில்லை. அதனால் விலைவாசி முன்னால்விட கொஞ்சம் குறைவாகத்தான் இருக்கிறது. உதாரணத்திற்கு நீங்கள் ஒரு மறியல் ஆரம்பித்தால், எந்தக் கட்சியாக இருந்தாலும், எங்கள் முன்னேற்றக் கழகமாக இருந்தாலும், 'விலைவாசி அதிகமாகியிருக்கிறது, வாருங்கள் அதற்கு மறியல் செய்கிறோம், சிறைக்குச் செல்லலாம்' என்றால், 10 பேர்கூட வரமாட்டார்கள். அது நிச்சயமாகத் தெரியும். ஆகையினால் எந்த இயக்கம் ஆரம்பித்துப் பார்த்தாலும், தமிழ் நாட்டில் 500 பேர்களுக்கு மேல் கிடைக்கமாட்டார்கள். ஆகவே, வறுமை குறைந்திருக்கிறது என்பதற்காகத்தான் இந்த ஆதாரத்தைச் சொல்கிறேனேயொழிய, மற்றக் காரணத்திற்காக அல்ல. அதிலும் வாங்குகின்ற சக்தி மக்களுக்கு ஓரளவுக்கு வளர்ந்திருக்கிறது என்பதற்காகத்தான் கூறுகிறேன். வேறு எதற்குமில்லை.

வேலையில்லாத் திண்டாட்டம் நாட்டிலேயிருக்கிறது. கவர்னர் பெருமான் அவர்களே, இந்த வேலையில்லாத் திண்டாட்டம் இங்கு மட்டுமல்ல, இந்தியா பூராவிலுமே இருக்கிறதென்று கூறுகிறார்கள். மக்கள் வேலைக்காகவே படிக்க வேண்டுமென்று படிக்கிறார்கள். நாம் பெரியவர்களாகிப் பெற்ற குழந்தைகளை நாமும் அப்படித்தான் செய்கிறோம். பி.ஏ., எம்.எஸ்.சி., பி.எஸ்சி. படித்தவர்களெல்லாம் படித்துவிட்டு நல்ல வேலைக்குப் போகவேண்டுமென்று கேட்டால், எத்தனை பேருக்குத்தான் ஒரு ஆட்சியாளர் வேலை தர முடியும்? பற்பல மாதிரியாகப் படிக்கின்ற நேரத்திலே, அவர்கள் இதைப் படிப்பிற்காக மட்டும் படிக்கக்கூடாது. சொந்தத் தொழில் செய்வதற்கேற்றபடி திருப்புவனங்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அப்படி நாட்டுமக்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். இல்லாவிடில், எவ்வளவு பேருக்கு வேலை கிடைக்க முடியும்? ஏறக்குறைய நலிந்து கிடக்கும் மில்கள் . . ..

1973 பிப்ரவரி 6]

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர்: இங்கே தலைவரவர்களைப் பார்த்துப் பேசுங்கள்.

திரு. சி. வி. ராஜகோபால்: வேலையில்லாத் திண்டாட்டம், வேலையில்லாத் திண்டாட்டம் என்கிறார்கள். திண்டாட்டம் தீர்வதற்கு சர்க்கார் பெரிய திட்டங்கள் போடுகின்றபோது கூட குறையிருப்பதாக நம்முடைய நண்பர்கள் எல்லாம் பேசினார்கள். நம்முடைய அங்கத்தினர் திரு. ஈஸ்வரமூர்த்திகூட பேசினார். நமக்கும், மத்திய சர்க்காருக்கும் எந்த மாதிரியான தொடர்பு இருக்கிறது என்பதை ஒருகணம் நாம் எண்ணித்தான் பார்க்க வேண்டும். பார்க்கிறீர்களே, நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டத்திற்கு நம்முடைய மாநில முதலமைச்சர் அவர்கள் பறந்து ஓடுகிறார்கள். முதலமைச்சர்கள் மகாநாட்டிற்குப் பறந்து ஓடுகிறார்கள். அங்கே உட்கார்ந்து அவருடைய கருத்தைச் சொல்லி இந்த நாட்டு மக்களுக்கு வாழ்வு அளிப்பதற்குப் பணம் கொடுங்கள் என்று கேட்பதற்கு ஓடுகிறார்கள். அவர் மட்டுமா? கூடவே தொழில் அமைச்சர் அவர்களையும் அழைத்துப் போகிறார். இத்தனையும் பத்திரிகைகளிலே பார்த்துக்கொண்டிருக்கிறோமே. மண்டையோடு மண்டை இடிக்க வேண்டிய இடம் டெல்லியிலே இருக்கிறதே. நாம் இங்கே இடிக்கிறோம். அவர்கள் அங்கே போய் இடிக்கிறார்கள். இடிக்காமலா வந்துவிடுகிறார்கள்? பறந்து ஓடுகிறார்களே. இந்த நிலையை நாம் ஒருகணம் இந்த அவையிலே எண்ணிப் பார்க்கவேண்டுமேயொழிய அதை மறந்துவிடக்கூடாது. நம்முடைய தமிழ்நாட்டிலே சர்க்கார் இதைச் செய்யவில்லை, அதைச் செய்யவில்லை என்றெல்லாம் சொல்லுகிறோம். எல்லாம் செய்யலாம். இந்த மக்களில் பெரும் பணக்காரர்கள், பெரும் செல்வந்தர்கள், சீமான்கள் இவர்கள் கொடுக்கும் எக்சைஸ் வரி எல்லாம் அங்கே போகிறதே. திரும்பத் திரும்ப நாம் என்ன வரி வாங்குகிறோம்? மிளகாய்க்கும் உப்புக்கும் 2 பைசா கொடு என்றால், கத்துகிறோம். இதைத்தானே நாம் செய்கிறோம். முக்கியமான வரி இல்லையே. அந்த வரியெல்லாம் வடநாட்டிற்குச் செல்லுகிறதே. நாம் எதற்குப் பயப்பட வேண்டும்? இதற்குமுன் காங்கிரஸ் ஆட்சி இருந்தது. அப்போது மத்தியிலும் காங்கிரஸ் ஆட்சி இருந்த காரணத்தால், அதைத் தட்டிக் கேட்க தைரியம் இல்லாமல் இருந்தது. நல்ல பல காரியங்கள் செய்ய வேண்டுமென்ற நல்லெண்ணம் காங்கிரஸ்காரர்களுக்கு இருந்திருக்கிறது. இல்லாமலில்லை. ஆனால் அவர்களால் தட்டிக் கேட்க இயலாமல் போய்விட்டது. அங்கேயும் காங்கிரஸ் ஆட்சி. இங்கேயும் காங்கிரஸ் ஆட்சி. எப்படித்தான் அங்குள்ள காங்கிரஸ்காரர்களைத் தட்டி நாம் கேட்பது என்ற ஒரு நிலை இருந்தது. இந்தக் காரணத்தால் இதை தைரியமாகச் சிலர் செய்ய முடியவில்லை. இப்போது ஏராளமாகச் செய்து கொண்டிருக்கிறபோது எதிர்க்கட்சிக்காரர்களும் ஒத்துழைப்பைத் தந்துதான்

ஆகவேண்டும். தராமல் போனால் எதுவும் நடக்காதே. குறைகள் மட்டும் சொன்னால் போதாதே. ஒரு திட்டம் சொல்லுகிறபோது, இந்தத் திட்டத்திற்கு இந்த வடிவம் இட்டிருக்க வேண்டும். இந்தத் திட்டத்தினால் இவ்வளவு பயன்கள் இருக்குமென்று அறிவுரை கூறியிருப்பார்கள் என்றால், நான் உள்ளபடியே அதற்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர்: நேரம் ஆகின்றது.

திரு. சி. வி. ராஜகோபால்: கடைசியாக, மின்சாரம் பற்றிப் பேசிவிடுகிறேன். மின்சாரப் பற்றாக்குறை இந்த நாட்டிலே ஏராளமாக இருக்கிறது. அது தெளிவாக இருக்கிறது. அந்தக் குறைகள் எப்படி எப்படி ஏற்பட்டிருக்கின்றன, அவைகளை எப்படி நிவர்த்திப்பது என்பது குறித்து எனக்கு
6-30 பி.ப.
முன்னாலே பேசிய திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் மிக அழகாக, மிகத் தெளிவாகச் சொன்னார்கள். இந்த நாட்டிற்கு மின்சாரம் கிடைக்கவேண்டுமென்றால், தடைப்படுகின்ற இடம், தடைகள் ஏற்படுகின்ற இடம் மத்திய சர்க்கார் என்பதனை மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். நாட்டு மக்களுக்கு நல்லது செய்ய மத்திய சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். நெய்வேலி திட்டமும் அது செய்யவேண்டிய ஒன்றாகும் என்று எண்ணுகிறேன். இந்த மின்சாரம் நமக்கு அதிகமாகக் கிடைக்க வேண்டுமென்பதற்கு முன்னாலேயே, நெய்வேலி மற்ற இடங்களில் வேலை ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே காஞ்சிபுரத்திலே ஒரு ஜெனரேட்டர் தனியாக வைத்து, இருக்கிற மின்சாரத்திற்கும், ஜெனரேட்டரில் உற்பத்தி செய்கின்ற மின்சாரத்திற்கும் சம்பந்தமில்லாமல், டவுன்களுக்கு, ஊருக்கு, வீடுகளுக்கு, சின்னஞ்சிறு இடங்களுக்கு கரண்ட் தந்திருக்கிறார்கள். இந்த மாதிரி மேட்டூர் அல்லது நெய்வேலி போன்ற இடங்களிலிருந்து நமக்கு மின்சாரம் கிடைக்கவில்லையானால் தனியாக எங்காவது டெம்பரரியாக, முட்டுக்கட்டை ஏற்படும்போது, இப்படி ஜெனரேட்டர் வைத்து ஏதாவது கரண்டு அதிகமாக உற்பத்தி செய்வதற்கு வழிவகையிருக்கிறதா, அதற்கு வழிவகைகள் கிடைக்குமா என்பதையாவது மின்சார அமைச்சர் அவர்கள் கண்டுபிடித்து, இப்போது கூக்குரலிடுகிறார்களே, 'இல்லையே இல்லையே' என்று, அவர்களுக்கு, கரண்டு இருந்தால் தாராளமாகக் கொடுப்பார்கள். அவர் என்ன 'கரண்டை' மடியிலா வைத்திருக்கிறார்கள்? மத்திய சர்க்கார் மனமிருந்தால் இன்னும் தாராளம் காட்டலாம். எல்லாம் மத்தியிலே இருக்கிறதென்று உங்களுக்குத் தெரியும். அந்தத் தலையெழுத்தை மாற்றுவதற்கு நீங்கள் கைகொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்த துணைத் தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்கள் உரைமீது நன்றி நவிலும் தீர்மானத்தினை ஆதரித்து எனது கருத்தை நான் சொல்ல இருக்கிறேன். ஆளுநர் அவர்களுடைய உரையில் இந்த ஆண்டு நமது மாநிலம் சந்தித்த பல இயற்கைக் கேடுகளையும் இந்த அரசு அவைகளை எவ்வளவு சிறப்பாக ஆற்றல்மிகு நிலையில் சந்தித்து இந்த நாட்டு மக்களுடைய துயரைத் துடைத்திருக்கிறது என்பதையும் பல தலைப்புக்களிலே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அவைகளில் ஒவ்வொன்றினைப் பற்றியும் நான் விளக்கமாகச் சொல்ல விரும்புவதனால், இறுதியான பகுதியில் நான் முன்னால் வர விரும்புகிறேன். ஆளுநர் அவர்களுடைய உரையிலே 13-ம் பக்கத்தில் இறுதி பாராவில், 22-வது பாராவில் மக்கள் ஆட்சி வளர்ச்சிப் பாதையில் அவ்வப்போது இன்னல்களும் இடுக்கண்களும் நேரத்தான் செய்யும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நமது மாநிலத்திலே சென்ற சில மாதங்களிலே, மக்கள் ஆட்சி நெறியை மாய்த்து விடுவதற்கு ஏற்பட்ட சதிகளை குறிப்பாகச் சுட்டிக்காட்டி, அந்த இன்னல்களையும் இடுக்கண்களையும் களைந்து, சீரான முன்னேற்றம் நேரிய வழியில் காண நம்மால் ஆனவைகளையெல்லாம் செய்வதற்கு இந்த அரசு எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சிகளைச் சுட்டிக்காட்டி, மற்ற எல்லா மக்களும் எடுத்துக்கொள்ளவேண்டிய முயற்சிகளைப்பற்றியும் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார் என்று கருதுகின்றேன். இந்தத் தலைப்பிலே சில நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். ஒரு செய்தி. நம்முடைய நாட்டிலே இப்போது மக்கள் ஆட்சி நெறியைப் பாதுகாப்பதற்கு முக்கியமான அம்சங்களில் ஒன்று செய்தித்தாள், பத்திரிகைகள். பத்திரிகைகள் மக்கள் ஆட்சி நெறியைக் காப்பதற்கு தங்களை அர்ப்பணித்துக் கொள்ளவேண்டும். அதற்கு அவர்கள் உண்மையான செய்திகளைப் பிரசுரிக்க வேண்டும். உண்மைக்கு மாறான செய்திகளைப் பிரசுரிப்பது ஒரு நாட்டில் மக்கள் ஆட்சி நெறியை இல்லாமல் ஆக்குவதற்குச் செய்கின்ற சதியின் ஒரு பகுதி என்பதை யாரும் மறந்துவிட முடியாது. ஜனநாயக நாடுகளில், மேலை நாடுகளில் எல்லாம் இங்கிலாந்து, சுவிட்ஜர்லாந்து நாடுகளில் எல்லாம் இந்த பார்ட் ஆஃப் பிரஸ், பத்திரிகைகளுடைய பங்கு என்ன என்பதை மிக அழுத்தந்திருத்தமாகச் சொல்லுகிறார்கள். பத்திரிகைக்காரர்கள் அதை நெறியாகப் பார்த்து வருகிறார்கள். நான் இந்த சந்தர்ப்பத்தில் ஒரு பத்திரிகையில் வந்த நிகழ்ச்சியைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அது கன்னியாகுமரி மாவட்டத்தைப் பற்றியது ஆனதனால், நான் சொல்வது பொருத்தமாக இருக்குமென்று நினைக்கின்றேன். 18—1—1973 குமுதம் பத்திரிகையிலே ஒரு செய்தி "கல்லூரி திறந்தாயா? கட்டு அபராதம்" என்று ஒரு தலைப்பு. அந்தத் தலைப்பைப் போட்டுவிட்டு இரண்டு கல்லூரிகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடர்ந்து நடைபெற்றன. ஆட்சியாளர் கல்லூரியைத் திறக்கக்கூடாது என்று கட்டளை

பிறப்பித்தார்கள். அதை மீறி கல்லூரிகள் தொடர்ந்து நடந்தன. அதற்காக ஆட்சியாளர் 3 ஆயிரம் ரூபாய் ஒரு கல்லூரிக்கும் மற்றொரு கல்லூரிக்கு 1500 ரூபாயும் அபராதம் விதித்தார் என்ற ஒரு செய்தி கொடுக்கப்பட்டிருக்கிறது. 18—1—1973-ந் தேதி குமுதத்தில் 87-வது பக்கத்தில் இந்தத் தலைப்பைப் போட்டு, அதற்கு ஒரு கோட்டு போட்ட பட்டதாரி போல ஒருவருடைய படத்தையும் போட்டு, இறுதியாக அதிலே "மாணவ மாணவியர்களின் படிப்பைக் கருதி திறந்து வைக்கப்பட்ட கல்லூரி, கல்வி நிலையங்கள், கல்விக் கூடங்களுக்கு அபராதம் விதிப்பது தமிழ் நாட்டில் இதுதான் முதல் தடவையாக இருக்குமோ" என்று செய்தி இருக்கிறது. நான் கேட்கிறேன். நாமெல்லாம் எந்த உலகத்தில் வாழ்கிறோம் என்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒரு கல்லூரிக்கு அபராதம் விதிக்கிற அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இல்லை. அப்படி ஒரு விஷயம் நடக்கவும் இல்லை. பல்கலைக் கழகத்தின் கீழ் "ஆடானமஸ் பாடி" என்று சொல்கிற ஒரு சுதந்திர அமைப்புடைய பல்கலைக் கழகத்தின் கீழ் ஒரு "கான்ஸ்டிட்யூவண்ட் காலேஜ்" சுதந்திர அமைப்புடையது. கல்லூரித் தலைவர்கள் செயல்படுகிறோம் என்றால், எங்களைக் கேட்பது, எங்களைக் கட்டுப்படுத்துவது பல்கலைக் கழகம். அரசு மானியம் வழங்குகிற ஒரு முறையை மாத்திரம் கையில் வைத்துக்கொண்டு இந்தக் கல்விக்குத் துணை புரிகிறது. கட்டிடங்களுக்கு மானியம் வழங்குவது, ஆசிரியர்களுக்குச் சம்பளத்தில் மானியம் வழங்குவது, பலவிதமான கருவிகள் வாங்குவதற்கு மானியம் வழங்குவது, இவை அந்த முறையில் செயல்படுகின்றனவா என்று பார்ப்பது, அதைத் தவிர பள்ளிகள் திறப்பது, அடைப்பது பாடத் திட்டங்களை வகுப்பது இவைகளில் அரசு தலையிடுவதில்லை. பல்கலைக் கழகங்களில் எல்லா கல்லூரி முதல்வர்களும், செனெட் மெம்பர்களாகவும், அகெடமிக் கவுன்சில் மெம்பர்களாகவும் குழுமியிருந்து நாங்களே ஆலோசனை செய்து தீர்ப்பு எடுத்துக்கொள்கிற ஒரு ஜனநாயக சுயாட்சி அமைப்பு முறையில் அமைந்திருக்கிறது. மாநிலம் முழுவதும் பரவலாக, விரிவாக விற்பனையாகிற ஒரு பத்திரிகையிலே இவ்வளவு தவறான செய்தியைச் சொன்னால் யார் நம்புவார்கள் என்று நம்பிக்கொண்டிருந்தேன். இரண்டு தினங்களுக்கு முன்னால் நான் வந்தவுடன் சென்னை உயர்நீதி மன்றத்திலே எனது நண்பர் வழக்கறிஞர் ஒருவரைக் காண்பதற்குப் போய் அவருடைய ஓய்வறையில் பேசிக்கொண்டிருக்கிறபோது, பல வழக்கறிஞர்கள் "உங்களுடைய கல்லூரிக்கு ஃபைன் போட்டார்களாமே" என்று என்னைக் கேட்டார்கள். இரண்டு கல்லூரிகள்; ஒன்று அறிஞர் அண்ணா கல்லூரி, ஆலவாய்மொழியில் உள்ளது, ஒவ்வொரு நாளும் செயல்பட்டது. அந்த நிகழ்ச்சிகள் நடைபெறுகிற போது, அது எந்த நாளும் அடைக்கப்பட்டதில்லை, மாணவர்களுடைய ஒத்துழைப்போடுதான். நாம் மாத்திரம் கல்லூரியை நடத்திக்கொண்டிருக்க முடியாது. 700 மாணவர்கள் பயிலுகிற அந்தக் கல்லூரியில் மாணவர்கள்

தலைவர்கள் கூடி, இது தேவையற்ற கிளர்ச்சி, ஈடுபடவேண்டிய தேவையில்லை என்று சொல்லி, எல்லா நாட்களும் செயல்பட்டார்கள். அதுபோல ஹோலி கிராஸ் கல்லூரி செயல்பட்டது. மதுரையில் லேடி டோக் கல்லூரி எல்லா நாட்களும் செயல்பட்டது. குற்றாலத்தில் இருக்கிற கல்லூரி எல்லா நாட்களும் செயல்பட்டது. இப்படி பல கல்லூரிகள், மதுரைப் பல்கலைக் கழகத்தின் எல்லையிலுள்ளவை, ஒழுங்காகச் செயல்பட்டன. ஒரு சில கல்லூரிகள் அரசியல் மாச்சரியங்களினால், ஒரு சிலருடைய தூண்டுதலால், குழப்பவாதிகளுடைய கையில் அகப்பட்டுக் கொண்டிருப்பதன் காரணமாக, ஆங்காங்கு தடைப்பட்டு நடந்துகொண்டிருந்தன. ஆனால் இந்தக் கல்லூரிகள் தொடர்ந்து நடைபெறுவதைப் பார்த்தவுடன், மற்றக் கல்லூரிகளில் பயிலுகிற மாணவர்கள், இவர்கள் பாடங்களை முடித்து விடுவார்கள், பல கல்லூரிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன, ஆகவே தேர்வை மாற்றி வைக்க மாட்டார்கள், நாம் அகப்பட்டு விடுவோம், ஆகவே நம்முடைய கல்லூரிகளைத் திறந்து விடுவோம் என்று போகிறார்கள். அப்படிப் போவதைத் தடுப்பதற்கு இப்படிப் பொய்ச் செய்தி போடப்படுகிறது. கல்லூரி திறந்தால், 1,500 ரூபாய் ஃபைன், 3,000 ரூபாய் ஃபைன், மாவட்ட ஆட்சித் தலைவர் போடுகிறார் என்று அப்பட்டமான பொய்ச் செய்தியைப் போடுகிறது. இப்படி ஒரு செய்தி அல்ல, பல செய்திகள், நிகழ்ச்சிகளைச் சொல்ல முடியும். கல்வித் துறையைப் பொறுத்தவரை, ஒரு செய்தியை இப்படி வெளியிடுகிறார்கள். இந்தச் செய்தி பொய் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. அந்த மாவட்டத்திலே ஆளுகிற மற்றவர்களுக்கும் சந்தேகம் இருக்க முடியாது. ஏனென்றால் எல்லோருக்கும் தெரியும். சென்னையில் இருக்கிற வழக்கறிஞர்கள் உள்ள இடத்தில் இப்படிச் செய்தியைப் போட்டதனால், அவர்கள் என்னைப் பார்த்து, என்ன ஃபைன் போட்டார்கள், எப்படிக் கட்டினீர்கள் என்று கேட்டார்கள். நான் அவர்களிடத்தில் நீங்கள் சட்டம் பயின்ற நிபுணர்கள், சட்டத்தை விவரித்துக் கொண்டிருக்கிறவர்கள், ஒரு ஆடானமஸ் யூனிட்டாக இருக்கிற கல்லூரிக்கு, பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்குகிற கல்லூரிக்கு, மாவட்ட ஆட்சித் தலைவர் ஃபைன் போடுவதற்கு எங்கே அதிகாரமிருக்கிறது, அவர்கள் செய்தியைப் போட்டார்களென்றால், நீங்கள் எப்படி நம்பினீர்கள் என்று கேட்டேன். முக்கியமான பத்திரிகையில் ஒரு செய்தி வந்தால், அதை நம்பாமல் இருக்க முடியுமாவென்று சொன்னார்கள். ஜனநாயக அமைப்பிலே கல்வி கற்றவர்கள் வாழ்கிற நாட்டில் பத்திரிகைகளுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நாம் அறிகிறோம். ஏன் நம்புகிறார்கள் என்றால், இந்தப் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறதென்றால், இது முக்கியமான பத்திரிகை, பல ஆண்டுகளாக நடைபெறுகிறது, பல லட்சம் பிரதிகள் அடித்து பரப்பிக் கொண்டிருக்கிறார்கள்,

அவர்கள் பொய் சொல்வார்களா என்று இந்த நாடும், நாட்டிலுள்ள நல்லவர்களும், படித்தவர்களும், ஜனநாயக வாதிகளும் இந்த அளவிற்கு நம்பிக்கொண்டிருக்கிறபோது, பத்திரிகை ஆசிரியர்கள் அந்த நம்பிக்கைக்குரியவர்களாக தங்களை ஆக்கிக்கொள்ள வேண்டுமென்று, உரக்கச் சொன்னாலும்கூட, மிகப் பணிவோடு கேட்டுக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே பத்திரிகையில் அதே தேதியில் 18—1—1973 இதழில் தான் தலையங்கம் 'புதுக்கோட்டைக்கு நன்றி' என்று பொய்ச் செய்தியைப் போட்டார்கள். அதை என்னால் நல்ல முறையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் பயன்படுத்திக்கொள்ள முடிந்தது. இந்தப் பத்திரிகையையே எடுத்துப் போய் பல இடங்களில் கல்லூரிக்கு ஃபைன் போட்டிருக்கிறது, அபராதம் விதித்திருக்கிறது என்று பொய்ச் செய்தி போட்டார்கள், இது எவ்வளவு தூரம் பொய், அதே மாதிரி தலையங்கமும் பொய். நானும் புதுக்கோட்டையில் முழு அளவில் இருந்தேன். 'புதுக்கோட்டைக்கு நன்றி' என்று சொல்லி பொய்த் தலையங்கம் எழுதியிருக்கிறார்கள். இப்படி பத்திரிகைக்குள்ளே எவ்வளவு பொய் இருக்கிறதென்று கண்டுபிடிக்க வேண்டிய அவல நிலைக்கு கற்றவர்கள், பத்திரிகை படிக்கிறவர்கள், நாட்டு மக்கள் ஆக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நாம் மறப்பதற்கில்லை. இந்த நிலையிலிருந்து பாதுகாக்கவேண்டிய பொறுப்பு அரசுக்குரியது என்பதை அமைச்சரவர்களுக்கும், முதலமைச்சரவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு தக்க கண்காணிப்புக் குழு ஒன்றை அமைக்க வேண்டுமென்ற ஆலோசனையை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்லூரி முதல்வர்களுடைய கழகத்திலும், ஆசிரியர்கள் கழகத்திலும் நான் உறுப்பினராகவும், செயற்குழுவிலும் இருக்கிறேன். பல்கலைக் கழக முதல்வர்கள் சங்கத்தின் சார்பில் இந்தப் பத்திரிகை ஆசிரியருக்கு நாங்கள் எழுதியிருக்கிறோம். பதில் இதுவரை வரவில்லை. ஆனால் நாங்கள் வழக்கிற்குப் போக முடியாது. ஒரு கல்லூரி என்று இருக்கிறது, நாங்கள் இல்லையென்று தப்பித்துக்கொள்ள முடியும். ஆட்சியாளர்கள் வழக்கிற்குப் போகலாம். ஆனால் நான் என்ன சொல்கிறேன் என்றால், எங்கோ ஒரு பத்திரிகை சில நேரங்களில் பத்திரிகை எண்ணிக்கையை விற்பதற்காக சில பொய்களைச் சொல்லிக்கொண்டு வந்தது. அதை விட்டு விட்டு வந்தார்கள். நாம் கவனக் குறைவாகக் கூட இருந்தோம். இன்று அப்படியல்ல. திட்டமிட்டு, அவலமான செய்தியைப் பரப்புவதற்கு, இந்த அரசு கல்விக் கூடங்களுக்கெல்லாம் தண்டனை வழங்குகிறது, கல்வியைத் தடுக்கிறது, படிக்க விரும்புகிற மாணவர்களைப் படிக்க விடாமல் தடுக்கிறது என்று ஒரு அப்பட்டமான பழியைச் சுமத்துவதற்கு செய்தியை வெளியிடுகிறார்கள். ஆகவே, நான் ஏதோ பத்திரிகை சுதந்திரத்திற்குள்ளே அரசு நுழைய வேண்டுமென்று நினைக்கிறவன் அல்ல, பத்திரிகைக்கு எவ்வளவு சுதந்திரம் கொடுக்க

வேண்டுமோ அவ்வளவு சுதந்திரம் கொடுக்க வேண்டுமென்று நினைக்கிறவன். ஆனால் சுதந்திரம் என்ற பெயரால், அவர்களுக்கிருக்கிற உரிமை என்ற பெயரால், பொய்ச் செய்திகள் போடுவார்களானால், செய்திகள் திரித்து விடப்படுமானால், அதனுடைய விளைவு என்னவாகும் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். எனவே, இதைக் கண்காணிப்பதற்கு ஆங்காங்கே ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒருவர் குழு, அது அதிகாரியோ அல்லது நான்-அபிசியலோ, எப்படி வேண்டுமானாலும் சரி, போடுவதைப்பற்றிச் சிந்திக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களையும் முதலமைச்சரவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். இதைப்பற்றிச் சிந்தித்து, என்ன செய்ய வேண்டும், சட்டம் என்ன இடம் கொடுக்கிறது என்று பார்த்து, ஒரு குழு அமைத்து, அதன் மூலம் ஒரு தண்டனை தரவேண்டும். அவர்கள் கோர்ட்டுக்குப் போக வேண்டுமென்றுகூட சொல்லவில்லை. இந்த மாதிரியாகப் பொய்ச் செய்தி போட்டோம் என்று ஒரு 10 பிரதியாவது போட வேண்டும், அப்படியாவது அது விளம்பரமாக வர வேண்டும். கோர்ட் தண்டனை அளிக்கிறது, அது அல்லது கோர்ட்டில் போய் மன்னிப்பு கேட்டுக்கொண்டு விடுகிறார்கள். அது சர்வ சாதாரணமாக இருக்கிறது. ஆங்கில நாகரிகத்தில் நாம் பெற்றது என்னவென்றால், எந்தத் தவறையும் செய்து விட்டு, 'எக்ஸ்க்யூஸ் மி' என்று சொன்னால் விட்டு விடவேண்டும் என்று நாம் வைத்திருக்கிறோம். என்ன பாரம்பரியமோ என்னவோ தெரியவில்லை. அதிலே தப்பித்துக்கொள்கிறார்கள். ஆகவே ஒரு கண்காணிப்புக் குழு இருந்து, இப்படிப் பொய்ச் செய்தி வருமானால், திட்டமிட்டு, செய்தி வருமானால், தக்க நடவடிக்கை எடுப்பதற்கு நாம் தயங்கக் கூடாது என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எனவே, இன்னும் இதைப்போல பல செய்திகள் பத்திரிகையில் வருவதைச் சொல்லிக்கொள்ள முடியும். நேற்று வந்த நாளிதழில் சொல்ல முடியும், முந்தா நாள் வந்த நாளிதழில் சொல்ல முடியும். இப்படி தினம் தினம் வருகிறது. இப்போது பத்திரிகை படிக்கிறவர்களெல்லாம் முதலில் எது பொய், எது உண்மை என்று கண்டுபிடிக்கிற ஆற்றலோடு பத்திரிகைக்குப் பக்கத்தில் போக வேண்டுமென்ற சூழ்நிலைமை உருவாகிவிட்டது. இதைத் தடுத்து நிறுத்தாவிட்டால், ஜனநாயகம் பாதிக்கப்படும். அவர்கள் ஜனநாயகத்தைக் கேலிக் கூத்தாக ஆக்கிவிட முடியுமென்று நினைக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய தலைமையில் அமைந்திருக்கின்ற இந்த அரசு அத்தகைய ஒரு நிலைமைக்கு தமிழகத்தை விட்டு விடாது என்று நம்புகிறேன் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். பி.ப. 6–40

அடுத்தாற்போல, கல்வித் துறையைப் பொறுத்த அளவில், இந்த நமது அரசு மிக முக்கியமான சீர்திருத்தமாகிய ஆசிரியர்களுடைய பதவிப் பாது

காப்புச் சட்டத்தை உருவாக்கியிருக்கிறது. அது வெளியே வரவும் இருக்கிறது. நான் இந்த சந்தர்ப்பத்தில் ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். இதே மன்றத்தில் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் இருக்கிறபோது, ஒரு தனியார் தீர்மானம் கொண்டுவந்தேன். அப்போது அவர்கள் "இப்போது ஆசிரியர்கள் பதவிக்கு எந்தவித ஆபத்தும் இல்லை. இப்போதிருக்கிற சட்டமே போதும்," என்று அவர்கள் சொன்னார்கள். பின்னால் இன்னொரு தடவை பதவிப் பாதுகாப்புச் சட்டம் வேண்டுமென்று நானே தீர்மானம் கொண்டு வருகிறபோது, நமது மாண்புமிகு கல்வியமைச்சர் நாவலர் அவர்கள் எழுந்து, இது மிகத் தேவையானது, இதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொல்லி, அதற்குக் குழு அமைத்து அதற்கு வேண்டிய ஒரு ஆய்வுக் குழு ஏற்படுத்தி, அது பல இடங்களுக்குச் சென்று ஒரு அறிக்கையைக் கொடுத்தது. அந்த அடிப்படையிலே சட்டத்தில் ஒரு தீர்மானம் கொடுத்து அதை சட்டசபை ஆய்வுக் குழு பரிசீலித்தது. அதற்கு அரசியல் சட்டங்கள் எந்த விதமெல்லாமோ இடையூறு கொடுக்கிறது. நிர்வாகங்கள் எந்தெந்த விதமெல்லாமோ இடையூறு கொடுக்கிறது. இத்தனை இடையூறுகளையும் தாங்கிக்கொண்டு, ஆசிரியர்களைப் பாதுகாப்பது என்று இந்த அரசு துணிந்து நல்ல சட்டத்தை உருவாக்கிக்கொண்டிருக்கிறது. கேரளத்தில் கொண்டுவரப்பட்ட சில சட்டங்கள் செல்லுபடியாகாது என்றும், சில ஷரத்துக்கள் செல்லுபடியாகாது என்றும் உயர்நீதி மன்றங்களால் சொல்லப்பட்டது. அதனையெல்லாம் உணர்ந்து அந்த நிலை வாராமலிருக்கிற வகையில், ஏற்ற நிலையில் சட்டத்தை உருவாக்கிக்கொண்டிருக்கிறது. அப்படி நல்ல முறையில் சட்டத்தை உருவாக்கிக்கொண்டிருக்கிற நமது அரசுக்கு நான் ஆசிரியர்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் எல்லாப் பகுதிகளிலும் தனியார் பள்ளி ஆசிரியர்கள் பாதிக்கப்படுகிறார்களாவென்றால், சில இடங்களில்—நான் அறிகிறேன்—அந்த ஆசிரியர்களுடைய சர்டிபிகேட் நிர்வாகிகள் கையில் இருக்கிறது. ஒரு ஆசிரியர், எம்.ஏ., பி.ஏ., பி.டி. என்று படித்துவிட்டு வருகிறார். அவருக்குக் கொடுக்கப்படுகிற சர்டிபிகேட் அவர் எந்த அளவிற்குப் படித்திருக்கிறார் என்று பார்ப்பதற்குத்தான். நிர்வாகி அவருக்கு வேலை கொடுக்கும்போது அந்த சர்டிபிகேட்டைப் பார்த்துக் கொள்ளவேண்டியது, பிறகு அதற்கு 'ட்ரு காபி' எடுத்து, 'அட்டஸ்டு' பண்ணி வைத்துக்கொண்டு, ஒரிஜினல் சர்டிபிகேட்டை அவரிடத்திலேயே கொடுத்துவிட வேண்டியது. அந்த சர்டிபிகேட் அவர் 14 வருஷம், 17 வருஷம் படித்துப் பெற்ற ஒரு செல்வம். ஆனால் பல பள்ளிகளில் அந்த சர்டிபிகேட் அந்த நிர்வாகிகள் கையில் இருக்கிறது. பல பள்ளிகள் என்று நான் சொல்லும்போது, நான் குறிப்பாகவும் சொல்ல முடியும். சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈஸ்வரமூர்த்தி

அவர்கள் நடத்துகிற தனிப் பள்ளியில்கூட 16 ஆசிரியர்களுடைய சர்டிபி கேட்டை அவர்கள் கையில் கொடுக்கவில்லை.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன தையே ஒரு வாய்ப்பாகக் கருதி, ஒரு உண்மையைச் சொல்ல விரும்பு கிறேன். 5–8–1972-ம் தேதியன்று, மாவட்டக் கல்வி அதிகாரி அவர்கள், அங்கே தலைமையாசிரியர், எழுத்தர், இன்னும் சில ஆசிரியர்களை அனுப்பி, நான் இல்லாதபோது, பள்ளி ஆபிசை உடைத்து, கதவைத் திறந்து, சர்டிபி கேட்டை எல்லாம் அகற்றிக்கொண்டு போய், அலுவலகத்தில் பூட்டைப் பூட்டிக்கொண்டு, அந்தப் பள்ளி அலுவலகம் இன்னும் திறக்கப்படாமல் இருக் கிறது. அந்த வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. இப்படி பகிரங்கமாகப் பட்டப் பகலில் திருட்டை நடத்திய வழக்கு நீதிமன்றத்தில் இருக்கும்போது, அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொஞ்சங்கூட சிந்தித்துப் பார்க் காமல், இங்கே தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேசியது முறையா என்பதைப் பற்றி தலைவர் அவர்கள் தான் தீர்ப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம்: தீர்ப்பு வழங்குகையில் என்னுடைய பக்கத் தையும் கேட்டுவிட்டு தீர்ப்பு வழங்குங்கள் என்று சொல்கிறேன். நான் சொல்வது, ஆசிரியர்களுக்குச் சொந்தமான சர்டிபிகேட், உடனடியாக திரும்ப ஆசிரியர்களிடத்தில் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படிக் கொடுக்கப்படவில்லை என்று நான் அறிந்ததை எடுத்துச் சொன்னேன். ஆசிரி யர்களின் சொந்த சர்டிபிகேட்டை பள்ளியில் சேர்ந்த பிறகு திரும்பக் கொடுத்திருக்க வேண்டும் என்றுதான் சொன்னேன். உடைத்து எடுத்துக் கொடுத்து விட்டார்கள் என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். உடைத் தார்களா, இல்லையா என்ற கோர்ட் வழக்கு விஷயத்துக்கு நான் வரவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் அந்த சர்டிபிகேட்டை வைத்துக்கொள்வதே தவறு என்று சொல்கிறார். நிர்வாக அதிகாரி பற்றி அல்ல.

திரு. எம். சங்கரலிங்கம்: நான் சொல்ல வந்தது, சான்றிதழை தலைமை ஆசிரியர் வைத்துக்கொள்வதற்கும் உரிமையில்லை, நிர்வாகியும் வைத்துக்கொள் வதற்கு உரிமையில்லை. ஆசிரியர்களுக்கு அங்கே வேலையில்லையென்றால், வேறு வேலை பார்ப்பதற்காகக் கேட்கிறார்கள். அப்படிப் போக வேண்டு மென்றால், அவர்கள் சர்டிபிகேட்டுக்கு 'அட்டெஸ்டட் காப்பி' எடுப்பதற்காக அந்த சர்டிபிகேட் அவர்களுக்குத் தேவைப்படுகிறது. அதனால்தான் அவர்கள் கையில் இருக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். கையில் வைத் திருந்தால், இவர்களுடைய தயவில்லாமல் அவர்கள் வெளியே போக முடியும்.

வேலை வாங்குவதற்கு 2 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும், வெளியே போக வேண்டுமென்றால் 2 ஆயிரம் ரூபாய் வாங்கவேண்டும் என்பதற்காக அவர்கள் செய்கிற சூழ்ச்சி இது. வேறு பள்ளிகளில் போய் அவர்கள் சேருகிறார்கள். ஆகவே இந்த முறையை மாற்றவேண்டுமென்று தான் நான் கேட்டுக்கொள்கிறேன். கோர்ட்டில் இருப்பதைப்பற்றி நான் சொல்ல வரவில்லை. இத்தகைய சூழ்நிலைக் கொடுமைகளை எதிர்த்து ஆசிரியர்கள் போராடுபவர்களாக இருக்கிறார்கள் என்று சொல்லிக் கொள்வதோடு, இந்த நாட்டில் ஆசிரியர்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது என்பதைத்தான் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மீண்டும் விளக்கிச் சொன்ன பிறகும், என்னைக் குறித்தே சொல்கின்றார். இது இந்தச் சபையின் கௌரவத்துக்கு நாகரீகமாக இல்லை. தயவுசெய்து இந்த விதிகளுக்கு முரணான இந்தப் பொய்க் குற்றச்சாட்டை இந்த மன்றத்தில் சொல்ல வேண்டாம் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. ராஜாராம்: தலைவர் அவர்களே, சபையின் அங்கத்தினர்கள் ஒருவருக்கொருவர் தனிப்பட்ட முறையில் இந்த மாதிரிப் பேசிக்கொள்வது இந்தச் சபையின் பண்புக்கு அழகல்ல, நல்லதுமல்ல. பொதுவாகப் பேசிக் கொள்ளலாம். நேரடியாக, தனிப்பட்ட முறையில் ஒருவரைப்பற்றி ஒருவர் பேசவேண்டாமென்று இரு தரப்பினரையும் நான் கேட்டுக்கொள்கிறேன். நல்லதொரு சூழ்நிலையை வளர்ப்பதில் இந்த சபைக்கு ஒரு தனியான முக்கியத்துவம் உண்டு, ஒரு பண்பாடு உண்டு. தவிர, நமது விதிகளில் கூட, ஒரு அங்கத்தினர் இன்னொரு அங்கத்தினர் புண்படும்படியாகத் தாக்கிப் பேசுவது தவறு என்றிருக்கிறது. ஆகவே இம்மாதிரிப் பேசவேண்டாம் என்று நான் இரண்டு பேர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம்: நான் யாருடைய மனதையும் புண்படுத்துவதாக நினைக்கவில்லை, விரும்பவும் இல்லை. அப்படி ஏதாவது மனம் புண்பட்டிருந்தால், அவர் வருந்த வேண்டாம் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல், நமது கல்விச் சட்டத்தில் பல நல்ல திட்டங்களை நாம் கொண்டுவந்திருக்கிறோம். நமது மாநில ஆளுநர் அவர்களுடைய அறிக்கையில்கூட, மத்திய அரசு ஊழியர்களுக்கு எப்படி சம்பளத்தை உயர்த்துகிறார்களோ, அதையே மாநில அரசு ஊழிர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று நமது முதலமைச்சர் அவர்கள் வற்புறுத்தியதை இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். எனக்கு முன்னால் பேசிய பல நண்பர்கள் குறிப்பிட்டார்கள். அதற்கு இந்த அரசு என்ன செய்தது என்றுகூட குறிப்பாகச்

சுட்டிக்காட்டினார்கள். நான் என்ன சொல்கிறேன்? மாநில அரசு ஊழியர்களுடைய நிலை இந்த ஆட்சியில் எப்படி இன்றைக்கு உயர்த்தி வைக்கப்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறுத்துச் சொல்ல முடியாது. ஆசிரியர்களுடைய நிலையையும் உயர்த்தினார்கள். மற்ற அலுவலர்களின் நிலையும் உயர்ந்திருக்கிறது. இன்னும் எந்தெந்த நிலையில் உயர்த்துவது என்பதை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் யோசித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த அலுவலர்களுக்கெல்லாம் இது ஒரு பொற்காலம் என்று நாம் கருத வேண்டும். ஏனென்றால், மத்திய அரசுச் சம்பளக்குழு அறிக்கை வரப் போகிறது. அது வந்ததும் எப்படி அலுவலர்களுக்கு உயர்த்திக் கொடுப்பது என்று மாநில அரசு வலியுறுத்தும் இந்தக் கொள்கையை எல்லோரும் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை வெளிப்படையாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

6-50 பி.ப.

அடுத்தாற்போல், பஸ்களையெல்லாம் தேசியமயம் ஆக்கவேண்டும் என்ற கொள்கையை இந்த அரசு அமுலாக்குகிறது என்று கவர்னருடைய உரையில் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். நான் ஒரு உண்மையை இந்த நாட்டு பொதுமக்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன், நாகர்கோவிலிலிருந்து திருநெல்வேலி வருவதற்கு அரசு பஸ்களில் 2 ரூபாய் சார்ஜ். 2 ரூபாய் கட்டணம். கொஞ்ச நாட்களுக்கு முன்னால் ரூபாய் 1-10 அணா அல்லது ரூ. 1-60. அரசுப் போக்குவரத்துத் துறை நாட்டுடைமை ஆக்கப்படாமல் இருந்தால், இந்தக் கட்டணம் எப்படியிருக்கும் என்பதை நாம் கற்பனை செய்து பார்க்க வேண்டும், அல்லது சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மூன்றரை அல்லது 4 ரூபாயாக உயர்ந்திருக்கும். இப்போது எல்லாப் பொருள்களுக்கும் விலை ஏறுகிறது, பெட்ரோலுக்கு 2, 3, 4 மடங்கு விலை ஏற்றப்பட்டிருக்கிறது. அரசுப் போக்குவரத்துத் துறை ஈடுபட்டதன் காரணமாக, லாபத்தைக் குறிக்கோளாகக் கொண்டு செயல்படாமல், பொதுமக்களுக்கு நன்மை செய்வதையே குறிக்கோளாக மட்டும் கருதியதால் தான், 2 ரூபாயாக மட்டும் உயர்ந்திருக்கிறது என்பதை நாம் உணர்ந்து பார்க்க வேண்டும். அரசுப் போக்குவரத்துத் துறை நாட்டுடைமை ஆக்கப்படுவதை ஊக்குவித்து, அது எல்லோருக்கும் சொந்தமான சொத்து, இதைப் பாதுகாக்கும் முறையில், இதை நாசம் செய்யாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதை நாட்டு மக்களுக்கு உணர்த்த நாம் கடமைப்பட்டிருக்கிறோம். தொழில் துறையில் இருக்கிறவர்களும், மாணவர்களும் இந்த உண்மையை உணர்ந்து போக்குவரத்துத் துறைத் தொழிலாளர்களுக்கும், மாணவர்களுக்குமிடையே போராட்டமில்லாமல், அரசுப் போக்குவரத்துத் துறையை நாட்டுடைமை ஆக்கிக் கொள்வதால், முழு அளவில் அதனால் பெறுகிற நன்மை பொதுமக்களுக்கு உண்டு. ஒரு ஆபத்தும் இல்லாமலில்லை.

தமிழகத்தில், போக்குவரத்துத் துறை ஊழியர்கள் நினைத்தால், ஒரு சங்கட நிலைமையை உருவாக்க முடியும். அப்படிப்பட்ட நிலைமை வாராமல் பாது காத்துக்கொள்ள பொது மக்கள் துணிந்து செயல்படத் தயாராக இருக்க வேண்டுமென்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படு கிறேன்.

இன்னொன்று, செலக்ஷன் கிரேட் பற்றி எனக்கு முன் பேசிய நண்பர்கள் சிலர் குறிப்பிட்டார்கள். அண்மையில், செலக்ஷன் கிரேடை ஆசிரியர் களுக்கு நம் அரசு வழங்கியிருக்கிறது. இருக்கிற முறையை வருஷ அடிப் படையில் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். எல்லோரும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கருத்தளவில் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். வரைவு கொண்டு வருவார் என்று நம்புகிறேன். வருஷ அடிப்படையில் வைப்பதுதான் ஒரு நியாய அமைப்பாக அமைய முடியும் என்று அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது. இதற்கு முன்னர், இந்த ஆசிரிய உலகில் செலக்ஷன் கிரேடை அரசு ஊழியர் கள் மட்டும் அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். தனியார் பள்ளிகள், டிஸ் டிரிக்ட் போர்டு ஆசிரியர்களுக்கு வழங்கப்படவில்லை. அவர்கள் ஆசிரியராக சேர்ந்தால், இறுதி வரை அப்படியே ஓய்வு பெறும் சூழ்நிலை இருந்தது. நமது அரசு பட்டதாரி ஆசிரியராக இருந்தாலும், செகண்டரி கிரேடாக இருந் தாலும், எலிமெண்டரி கிரேடாக இருந்தாலும், எல்லாத் துறை ஆசிரியர் களுக்கும் செலக்ஷன் கிரேட் என்று பதவி உயர்வு வழங்கியிருக்கிறது. அதை ஒழுங்குபடுத்த வேண்டுமென்று ஒப்புக்கொள்ளுகிறேன். அரசுப் பரிசீலனை யில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இன்னொரு செய்தியையும் சொல்லுகிறேன். இப்பொழுது சொல்லக் காரணம், இன்னும் சில நாட்களில் வேறு சிலர் அதை ஒரு குறையாகச் சொல்லக்கூடாது என்பதற்காக நம் அரசு தலைமை ஆசிரியருக்கு என்று ஒரு சம்பள விகிதத்தை இரண்டாவது பே கமிஷன் அறிவித்தது. 450 உயர்நிலை பள்ளித் தலைமையாசிரியர்கள் அதைப் பெறுகிறார்கள். அரசுப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், கம்பைன்ட் கேடர், பர்ஸ்ட் கிரேட் டீச்சர், டெபுடி இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ், ஹெட் மாஸ்டர் மூன்றும் சேர்ந்த கம்பைன்ட் கேடர். 225 ரூபாய் சம்பளம் ஆரம்பம் என்றிருந்தது. ஹெட்மாஸ்டருக்கு மட்டும் 30 ரூபாய் அலவன்ஸ் கொடுக்கிறார்கள். இதை மாற்றி, இரண் டாவது பே கமிஷன் தலைமை ஆசிரியருக்கு ரூ. 450 ஆரம்பம், ஒரு செலக்ஷன் கிரேட் பி.டி.-க்கு ரூ. 400 ஆரம்பம், பட்டதாரி ஆசிரியருக்கு ரூ. 300 ஆரம்பம் என்று சொல்லியிருக்கிறது. ஆகவே அந்த நிலைமை ஏற்பட்டிருக் கிறது. இதை 2—1—1970-லிருந்து அமுலுக்குக் கொண்டு வந்திருக்கிறோம்.

ஆனால், இப்பொழுது 'ஏ' அரசுப் பள்ளியில் தலைமை ஆசிரியருக்கு இந்த மட்டத்தில் சம்பளம் வழங்கப்பட வேண்டும், இதுவரை ரூ. 450-ல் இருந்தது. பின்னர் சம்பளம் நிர்ணயம் செய்து ரூ. 600, 700 என்று வாங்கிக்கொண்டிருந் தார்கள். சர்வீஸ் ரூல்ஸ்படி ஹெட்மாஸ்டருக்கு கிரேட் இல்லை. இதற்கு முன்னிருந்த அரசும் விதி முறைகளில் அரசாங்கப் பள்ளிகளில் தலைமை ஆசிரி யருக்கு கிரேட் என்று வைக்கவில்லை. ஆனால், இரண்டாவது பே கமிஷன் தலைமை ஆசிரியருக்குச் சம்பளம் வைத்திருக்கிறது. தலைமை ஆசிரியர் என்ற கிரேடை நீங்கள் உற்பத்தி செய்யும் முன் இந்தச் சம்பளம் வாங்கக் கூடாதென்று ஏ.ஜி. ஆபீசிலிருந்து அப்ஜெக்ஷன் ரெய்ஸ் பண்ணியிருக்கிறார் கள். அப்படி திருத்தப்படாத முறையை மாற்றி, இவர்கள் தலைமை ஆசிரி யர்கள் என்று சம்பளம் வாங்கிக் கொடுக்கப் போகிறோம். இது சம்பந்த மாக, நிதி இலாகா செயலாளரையும், டிபுடி இயக்குநரையும் கண்டு பேசி, உடனடியாக "ஸ்டே ஆர்டர்" போட்டாக வேண்டும். இதை ஒரு பிரச்சினை யாகச் சொல்லியிருக்கிறார்கள். பிறகு பேச வாய்ப்பிருந்தால், அப்பொழுதே சொல்லியிருக்க முடியும். பிறகு சொல்லுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இதற்கான வழி முறைகளை அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிறது.

திரு. எம். சங்கரலிங்கம்: எந்த முறை செலக்ஷன் என்று இந்த அரசைப் பொறுத்த வரையில், மக்கள் குறைகளைக் களைந்து, நிலையான வழி காண சட் டத்தைச் செய்ய வேண்டும். இந்த விதியைத் தளர்த்துவதில்லை, சட்டம் சொல்லுகிறது, அதனால் ஒன்றும் செய்வதற்கில்லையென்று இந்த அரசும் மாண்பு மிகு அமைச்சர் அவர்களும் சொன்னதுதான். நான் சொன்னதாக இல்லை என்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன். மற்றவர்களும் வாய்ப்பு இறுதியாகப் பெற்றிருப்பார்கள். மற்றவர்களும், அரசுப் பணியில் இருப்பவர்களும், தனியார் பணியில் இருப்பவர்களும் அனுபவிக்காதவற்றை, இந்த நல்ல காரியத்தை இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது. இதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்டுவது என்னுடைய கடமை என்று குறிப்பிடுகிறேன். நமது கல்வித் துறையில் சில திட்டங்கள் போட்டு, பல இடங்களில் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். இன்று நமது மாண்புமிகு உறுப்பினர் குறிப் பிட்டது போல, எம்.ஏ. படித்தவர்களுக்கிடையேயும், பி.ஏ. படித்தவர்களுக்கு இடையேயும் வேலை இல்லாத நிலைமை குறையலாம். ஆனால் பி.ஏ. படித்த வர்கள் பர்செண்டேஜ் அதிகமாகும். எம்.ஏ. படித்தவர்களிடையே பர்செண் டேஜ் குறையும். ஆக, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க ஒரே முறை நம் கல்வித் திட்டம் தொழிற் கல்வியோடு இணைந்ததாக இருக்க வேண்டும். பயில்வதற்கு வாய்ப்பும் அப்பொழுதே ஏதாவது வேலையில்

சேர்ந்து பணத்தைச் சம்பாதிக்கவும் வசதி வேண்டும். நம்மிடையே எம்.ஏ., பி.ஏ. படித்தவர்கள் அமெரிக்காவில் போய் எம்.எஸ்., எப்.ஆர்.சி.எஸ். படிக்கப் போகிறார்கள். அவர்களுக்குத் திடீரென்று ரூ. 500 தேவையென்றால், மாலை நேரத்தில் பத்திரிகைகளைப் பார்த்து, இந்த ஓட்டலில் 'கிளீன்' செய்தால் கிடைக்குமென்று போகிறார்கள். இங்கே வேண்டுமென்றால், யாரிடம் கடன் கேட்பது என்று யோசிக்கிறார்கள். காரணம் ஓட்டலில் 'கிளின்' செய்தால் இங்கே ரூ. 1.50, அங்கே ரூ. 500. ஆகவே, இந்த மாதிரி உடலுழைப்பு வேலைகளுக்குச் சம்பளம் உயர வேண்டும். இதை நான் சொன்னால், ஒப்புக் கொள்ளுவார்களா என்பது தெரியாது. உடலுழைப்பு வேலைக்கும் நியாயமான சம்பளம் வேண்டும். இப்பொழுதைய சூழ்நிலை அமைப்பில் மூளை உழைப்பு கஷ்டம் என்று அதிகமாகக் கொடுக்கிறார்கள். ஆகவே அங்கே போய் மோதுகிறார்கள். உண்மை சூழ்நிலையைக் கவனிக்கிறபொழுது, அந்தச் சூழ்நிலையைக் கொண்டுவரவேண்டும். அப்பொழுது உடலுழைப்பு வேலையைக் கல்வியோடு இணைக்க வேண்டும். பி.ஏ. படிக்கிறவன் வெளியில் வருகிறபொழுது, ஒரு தொழிலிலோ, விவசாயத்திலோ வேலை செய்யவேண்டும். அதைத்தான் முன்பும் சட்டசபையில் குறிப்பிட்டேன். என்னுடைய கல்லூரியில் கூட இதை அடுத்த ஆண்டு மாதிரியாக வைக்கத் திட்டமிட்டிருக்கிறோம். கோவை பல்கலைக் கழகத்தோடு தொடர்பு கொண்டிருக்கிறோம். பி.ஏ. படிக்கிறவர்கள் ஒருநாள் விவசாய வேலை முழுவதையும் செய்து சர்டிபிகேட் கொடுக்க முனைந்திருக்கிறோம். இண்டஸ்ட்ரியல் யூனிட் கல்லூரிகளை ஏற்படுத்தி, ஒருநாள் விவசாய வேலையிலும், இன்னொரு நாள் தொழிற்சாலையிலும் வேலை செய்து சம்பளம் பெற்று, சர்டிபிகேட் எக்சாமினேஷன் எழுதி அத்துடன் வெளியில் வருகிறார்கள். ஒரு வாரம் என்றால், இப்பொழுதைய பாடத் திட்டத்தில் 30 வகுப்புகள் ஹியுமானிடீஸ், பி.ஏ. (எகானமிக்ஸ்)-க்கு 24 பீரியட் போதும். இப்பொழுது அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால் ஒவ்வொரு நாளும் இரண்டு பீரியட் கட் செய்து ஸ்டிரைக், சினிமா என்று போகிறார்கள். அதைத் தடுத்து முக்கிய வேலைகளில் ஈடுபடுத்தலாம். ஒவ்வொரு விவசாயக் கல்லூரியையும் ஒரு விவசாயத் தொழிற்சாலையாக மாற்றவேண்டும். பள்ளிகளோடு தொழிற்சாலைகளும் வரவேண்டும். இந்த மாதிரியான திட்டங்கள் வரவேண்டும். இவைகளை ஆராய்ந்து, அரசும் மற்றவர்களும் செய்து கொடுக்க வேண்டுமென்று கூறிக்கொண்டு இந்த ஆளுநர் உரையில் எனக்கு இடம் தந்து, கருத்துச் சொல்ல அனுமதித்த துணைத் தலைவருக்கு நன்றி தெரிவித்து, ஆளுநர் அவர்களின் உரை இந்த அரசின் நல்ல சாதனைகளை நாட்டுக்கும் மக்களுக்கும் வெளி உலகிற்கும் எல்லோருக்கும் திறந்து காட்டுகிற நல்ல அமைப்பாக அமைந்திருக்கிறது. இதை பயன்படுத்தி இந்த அரசை ஊக்குவித்து நல்ல பலன் பெற முயலலாமென்று கூறி விடை பெறுகிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர்: இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. மன்றம் மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும். 7-00 பி.ப.

பின்னர், மன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

4. மன்றத்தின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

22. Order issued with G.O. R. No. 2597, Revenue, dated the 4th December 1972 in regard to exemption from liability to entertainments tax and additional surcharge on entertainments tax to the film show organised by N. S. N. Children's School, Madras-44 at 10 a.m. on 5th December 1972 at Devi Paradise Theatre for raising funds for providing midday meals etc., to poor students. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

23. Notification issued with G.O. Ms. No. 20, Transport dated the 14th January 1973 making the rules of the Tamil Nadu Stage Carriages and Contract Carriages (Acquisition) Ordinance, 1973. [Laid on the table of the House under section 32 (4) of the Tamil Nadu Stage Carriages and Contract Carriages (Acquisition) Ordinance, 1973 (Tamil Nadu Ordinance 1 of 1973)].

B. Reports, Notifications and other Papers.

Nil.

தமிழ்நாடு சட்ட மன்றம்

புதன்கிழமை, 1973 பிப்ரவரி 7

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் சட்ட மன்றம் கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

Sterilisation

* 50. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that it is not permissible to sterilise a married woman without the consent of her husband ;

(*b*) if so, whether the same is an impediment for carrying out sterilisation operation among women ; and

(*c*) if so, whether there is anv proposal to recommend to the Central Government to remove this lacuna ?

கருத்தடை அறுவை சிகிச்சை

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருமணமான பெண்ணிற்கு அவளது கணவனின் இசைவைப் பெறாமல் கருத்தடை அறுவை செய்வது அனுமதிக்கத் தக்கதல்லவென்பது உண்மையா ?

(இ) ஆமெனில், பெண்களுக்குக் கருத்தடை அறுவை சிகிச்சையை மேற்கொள்ளுவதற்கு இது தடையாயுள்ளதா ?

(உ) ஆமெனில், இக்குறையை நீக்க மத்திய அரசுக்குப் பரிவுரை செய்யும் செயற்குறிப்பு ஏதேனுமுள்ளதா ?]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) திருமணமாகியுள்ள பெண் தன் கணவனின் எழுத்து மூலமான இசைவைப் பெறாமலேயே அறுவை சிகிச்சை செய்துகொள்ள தற்பொழுது செயலிலுள்ள ஆணைகளின்படி இயலும்.

(இ) & (உ) வினாக்களுக்கு விடை தரக் காரணமில்லை.

Sales Tax

* 52. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have realised the Sales Tax due from the Food Corporation of India ;

(*b*) the amount pending collection; and

(*c*) the action proposed to be taken by the Government in the matter ?

விற்பனை வரி

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இந்திய உணவுக் கழகம் செலுத்த வேண்டிய விற்பனை வரி பாக்கியை (மாநில) அரசு வசூலித்து விட்டதா ?

(இ) இன்னும் வசூலிக்கப்பட வேண்டிய தொகை எவ்வளவு ?

(உ) இது குறித்து அரசு எடுக்கக் கருதியிருக்கும் நடவடிக்கை யாது ?

THE HON. THIRU P. U. SHANMUGAM : (*a*) An ad hoc payment of Rs. 47 lakhs has been made so far by the Food Corporation of India.

(*b*) & (*c*) As regards the balance of amounts pending collection, action is being taken to work out the actual amount due and to collect the amounts in pursuance of the agreement reached between the officers of this Government and the Officers of the Government of India at New Delhi on 26th May, 1972.

THIRU G. SWAMINATHAN : Sir, may I know from the Hon. Minister the amount outstanding from the Food Corporation of India and the nature of dispute regarding the payment of the same and also the period of delay in terms of months or years in the payment of the tax ?

THE HON. THIRU P. U. SHANMUGAM : The total demand was Rs. 160.25 lakhs and the tax collected so far is Rs. 80.99 lakhs. The balance outstanding is Rs. 79.26 lakhs. They say that they will pay only from 1st September 1964. We are arguing that they should pay from 18th August 1962 to 15th December 1968 and there is correspondence going on between us.

THIRU G. SWAMINATHAN : Sir, may I know whether the tax is levied on fertilisers only or on any other commodity also?

THE HON. THIRU P. U. SHANMUGAM : It is not only on fertilisers but also on foodgrains.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : தலைவரவர்களே, பாக்கியுள்ள தொகைக்கு, காலங்கடந்த நாட்களுக்கு ஏதாவது வட்டி நிர்ணயிக்கப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, சட்டப்படி நாம் அவர்களிடத்தில் வசூலிக்க முடியுமென்று சொன்னாலும், மத்திய அரசோடு இதைப்பற்றிச் சுமுகமான பேச்சு வார்த்தை மூலம் தீர்த்துக்கொள்ளலாமென்று கருதி, டெல்லியிலே தமிழக அரசு அதிகாரிகளை வரவழைத்து, அவர்கள் பேசி, இப்போது நாம் சொன்ன அந்தத் தொகையை ஒத்துக்கொண்டு, கொடுத்திருக்கிறார்கள். மிச்சமிருப்பதுபற்றிப் பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. அதுபற்றி நாம் கடிதம் எழுதியிருக்கிறோம். சீக்கிரம் அவைகள் செட்டிலாகிவிடுமென்று நம்புகிறோம்.

Cannon Balls

* 53. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that hundreds of cannon balls were discovered during August 1972 at Palayamkottai; and

(*b*) if so, the nature of the findings?

[1973 பிப்ரவரி 7

பீரங்கிக் குண்டுகள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பாளையங்கோட்டையில், 1972 ஆகஸ்டு திங்களில் நூற்றுக்கணக்கான பீரங்கிக் குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், என்னென்ன பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) 125 பீரங்கிக் குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

(இ) திருநெல்வேலி மாவட்ட காவல்துறை அதிகாரியின் அலுவலகத்தின் நிழற்பட பிரிவுக்கான கட்டடம் கட்டுவதற்கு கடைகால் தோண்டும்பொழுது, 125 பீரங்கிக் குண்டுகள் புதைந்து கண்டெடுக்கப்பட்டன.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்த பீரங்கிக் குண்டுகள் எந்தக் காலத்தவை என்பதைப் பற்றி ஆராய்ச்சி நடந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, என்னிடத்தில் தகவலில்லை.

திரு. சா. கணேசன் : தலைவரவர்களே, பீரங்கிக் குண்டுகள் என்று சொல்லப்படுகின்றவை பழங்கால முறையிலே பட்டிருக்கு வெளியே இரும்பு பால்கள் போன்ற குண்டுகள்தானே அவை? அல்லது வேறு மருந்துகள் அடைக்கப்பட்ட குண்டுகளாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அவர்கள் சொல்வது போல் பால்கள் போன்ற குண்டுகள் தான். பால் என்றால் குண்டு தான், குண்டு என்றாலும் பால் தான்.

1973 பிப்ரவரி 7]

Defence Fund

*54. Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether it is a fact that the Tahsildar, Kumbakonam has not deposited with the Government a sum of Rs. 8,000 which was collected from the Village Officers of the Kumbakonam Revenue Division for the purpose of Defence Fund; and

(b) if so, the action taken by the Government in the matter?

தேசியப் பாதுகாப்பு நிதி

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தேசியப் பாதுகாப்பு நிதிக்காக கும்பகோணம் வருவாய்க் கோட்டத்தைச் சேர்ந்த கிராம அதிகாரிகளிடமிருந்து வசூலித்த ரூ. 8,000 தொகையை கும்பகோணம் தாசில்தார் அரசுக்குக் கட்டாதது உண்மையா ?

(இ) ஆமெனில், இது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) கும்பகோணம் வட்டத்தைச் சேர்ந்த கிராம அதிகாரிகளிடமிருந்து ரூ. 4,865 மட்டுமே வசூல் செய்யப்பட்டது. தேசியப் பாதுகாப்பு நிதி வசூல் 15—1—1972-ம் நாளோடு நிறுத்தப்பட்டு விட்டதால் இதில் 50 ரூபாயைத் தவிர, எஞ்சிய தொகை முழுதும் திருப்பிக் கொடுக்கப்பட்டது அல்லது, கிராம அதிகாரிகளின் சம்மதத்தோடு தேசியப் பாதுகாப்புப் பத்திரங்கள், வளரும் மாதச் சேமிப்புத் திட்டப் பத்திரங்கள் போன்றவற்றை வாங்குவதற்காக முதலீடு செய்யப்பட்டது. 5 கிராம அதிகாரிகள் ஒவ்வொருவரிடமிருந்தும் ரூ. 10 வீதம் வசூலிக்கப்பட்ட தொகையான ரூ. 50 இன்னும் கும்பகோணம் தாசில்தாரிடம் உள்ளது.

(இ) கிராம அதிகாரிகளுக்கு இத்தொகையைத் திருப்பிக் கொடுக்கத் தாமதப்படுத்தியதற்குப் பொறுப்பானவர்கள் மீது, கும்பகோணம் மாவட்டத் துணை ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, தேசியப் பாதுகாப்பு நிதிக்காக அந்தத் தாசில்தார் கிராம உத்தியோகஸ்தர்களிடமிருந்து பணம் வாங்கியிருக்கிறார். கிட்டத்தட்ட 8 ஆயிரம ரூபாய் அளவிலே அந்தப பணம் வாங்கியதாகவும், அந்தப பணத்தை பல மாதங்கள் கட்டவில்லையென்றும், சொந்தமாக அவர் உபயோகித்துக் கொண்டார் என்றும், கிராம உத்தியோகஸ்தர்களுடைய சங்கத்தின் சார்பில் அவர்கள் ஒரு தீர்மானம் போட்டு அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். இப்படி வசூல் செய்த பணத்தை அரசு, தேசிய பாதுகாப்பு நிதிக்கு அளிக்காமல், அந்தக் கிராம உத்தியோகஸ்தர்களிடம் திருப்பிக் கொடுக்க வேண்டிய அவசியம் என்ன வந்தது என்பதையும், அப்படி அந்தப் பணத்தைச் சொந்த உபயோகத்திற்கு எடுத்துக் கொண்டதாகச் சொல்லப்படுகிற அந்தத் தாசில்தார் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டதென்றும் அறிய விரும்புகிறேன். இந்தகைய பாதுகாப்பு நிதிக்கு வசூல் செய்து, சொந்த உபயோகம் செய்வதென்பது மிகவும் தவறான காரியமென்பதை அரசு உணரும் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, தேசிய பாதுகாப்பு நிதிக்காக வசூல் செய்யப்பட்ட பணத்தை இப்படி ஒரு தாசில்தார் கையாண்டது கடுமையான குற்றம்தான். அது பற்றி மாவட்டத் துணை ஆட்சித் தலைவர் (சப்-கலெக்டர்) அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அது அரசாங்கத்திற்கு வருமென்று நம்புகிறேன். வந்ததற்குப் பிறகு அரசு தொடர்ந்து நிச்சயம் நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இப்போதே 6 மாதங்களுக்கு மேலாகிவிட்டது. இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இப்படி முக்கியமான காரியத்தைப்பற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்காமல், சப் கலெக்டர் காலதாமதம் செய்ததன் காரணத்தை அரசு ஆராயுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, சப்-கலெக்டர் நடவடிக்கை எடுத்திருப்பதாகத்தான் என்னிடத்தில் தகவலிருக்கிறது. நான் இப்போதுதான் முழு விவரத்தைத் தெரிந்துகொண்டிருக்கிறேன். சீக்கிரம் இதுபற்றி நடவடிக்கை எடுக்கும்படி எனது அதிகாரிகள் மூலம் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

Travelling Allowance and Dail Allowance for Teachers

* 48. *Q.*—THIRU S. MUTHUSWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether any Travelling Allowance and Daily Allowance are given to the teachers, when they are asked to go over to the Panchayat Union Offices on duty; and

(*b*) if not, the steps taken by the Government to sanction such allowances?

ஆசிரியர்களுக்கு பயணப்படி, நாட்படி

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆசிரியர்கள், ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்கு அலுவலாக அழைக்கப்படும்போது அவர்களுக்கு பயணப்படி, நாட்படி வழங்கப்படுகின்றனவா ?

(இ) அப்படி வழங்கப்படாவிடில், வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, ஆசிரியர்களுக்குப் பயணப்படி கொடுக்க வேண்டுமென்று பொதுவாக பஞ்சாயத்து யூனியன் ஊழியர்களின் விதிப்படி இருந்தாலும் கூட, ஆசிரியர்களுக்கு என்று தனியாக இல்லையென்று, சில ஊராட்சி ஒன்றியங்களிலே இது தாப்பாக நடைமுறை இருந்து வருகிறது. அதோடல்லாமல், ஆசிரியர்கள் அலுவல் காரியமாக அழைக்கப்பட்டாலும், தவறாமல் பயணப்படி கொடுக்க வேண்டுமென்று தனி உத்தரவு, ஆசிரியர்களுக்காக ஆர். டி. அண்டு எல். ஏ. டிபார்ட்மென்ட்டிலிருந்து வழங்கப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள், ஒன்றிய அலுவலகத்திற்கு அலுவல் காரணமாக வரும்போது பயணப்படி, நாள் படி

ஆகியவை முறைப்படி அளிக்கப்படுகிறது. இதர ஒன்றிய அலுவலர்களுக்கு இருக்கிற சலுகைகள் ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன. யாருக்காவது வழங்கப்படாத சூழ்நிலை ஏற்படுமேயானால், அவர்கள் விண்ணப்பம் கொடுப்பார்களேயானால், அது கவனிக்கப்பட்டு, வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யலாம்.

Underground Railway in Madras City

* 49. Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that there was a discussion during July 1972 between National Planning Commission and Officials of the Tamil Nadu Government on the construction of underground Railway in Madras City; and

(b) if so, the details thereof?

சென்னை மாநகருக்கு பாதாள ரயில்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரில் பாதாள ரயில் அமைப்பது குறித்து தேசிய திட்ட ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கும், தமிழ்நாடு அரசு அதிகாரிகளுக்கும் இடையே 1972 ஜூலையில் விவாதம் நடைபெற்றது என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: திட்ட ஆணைக்குழுவைச் சேர்ந்த பெருநகரப் போக்குவரத்துக் குழு 27—7—1972-ல் மாநில ஆய்வுப் பிரிவைச் சந்தித்து விரிவான போக்குவரத்து ஆய்வுகளைச் செய்வதில் மாநில ஆய்வுப்பிரிவு எய்தியுள்ள முன்னேற்றத்தைச் சீர்தூக்கிப் பார்த்தது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, அவர்களுடைய பேச்சு வார்த்தையின் காரணமாக இந்தப் பாதாள ரயில் அமைக்கும் திட்டம் எப்போது வரப்போகிறது என்பதையும், மாநில அரசு அதற்கு எவ்வளவு செலவு செய்யும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அந்தக் கேள்விக்கு விடையளிக்க வேண்டிய பொறுப்பு என்னுடையதாக இருக்கிறது. இந்தப் பாதாள ரயில் அமைப்பதுபற்றி சென்னை மாநகர வளர்ச்சித் திட்டத்தை யொட்டி மத்திய அரசிடம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 5 ஆண்டுகளுக்கு மேலாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதை அமைக்க முடியுமா, முடியாதா என்ற அடிப்படையிலே ஒரு சந்தேகத்தை எழுப்பி வருகிறார்கள். அதற்கான நியாயத்தையும், அவசியத்தையும் தமிழக அரசின் சார்பாக சொல்லியிருக்கிறோம். ஆனால் வேறு புள்ளி விவரத்தை ரயில்வே இலாகாவைச் சேர்ந்தவர்கள் சேகரித்துக் கொண்டிருக்கிறார்கள். அதுபற்றி மத்திய அரசினுடைய அமைச்சரவர்கள் விரைவில் தெளிவுபடுத்துவார் என்று நம்புகிறோம்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: தலைவரவர்களே, புதிய பாதாள ரயில் சென்னை நகரத்திலே எவ்வளவு நீளம் போடுவதாக திட்டம் இருக்கிறது என்பதையும், எந்தெந்த ரூட்களில் (வழிகளில்) போடவேண்டுமென்ற திட்டத்தையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, சென்னை நகரத்தினுடைய போக்குவரத்து மிகுதியாக உள்ள பகுதிகளென்ற அடிப்படையில், வடக்கு, தெற்கு திசைகளில் ஏறத்தாழ திருவொற்றியூருக்கு அப்பாலேயிருந்து திருவான்மியூர் வரை ரயில் கடற்கரையிலிருந்து ½ மைலுக்குள்ளாக அந்தக்கடல் ஓரப் பகுதி வழியாக அமைக்கப்பட வேண்டுமென்பதுதான் மிகத் தெளிவாக வலியுறுத்தப்பட்டு வருகிற பாதாள ரயில் திட்டம். ஏறத்தாழ 4-10
25 மீட்டர் அல்லது 20 மைல் தூரம் அந்தப் பாதை அமைய பி.ப.
வேண்டி வரும்.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, அதற்கு என்ன விதமான ஆட்சேபணை கிளம்பியிருக்கிறது? ஒருகால் கடற்கரை

நகரமாக இருப்பதனால், பாதாள ரோடு போடுவதில் கஷ்டம் இருக்கிறதா? கல்கத்தாவில்கூட பாதாள ரயில் போடுவதற்கு இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆகவே நமது சென்னை நகரத்திற்கு, தலைநகரத்திற்கு பாதாள ரோடு போடுவதற்குத் தடை இருப்பதற்குக் காரணமில்லை. எந்த விதமான ஆட்சேபனை இருக்கிறது என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சரியான தடை என்று சொல்லத்தக்க தடை எதுவும் எழுப்பப்படவில்லை. ஐயம் என்ற அடிப்படையிலே தான் அந்தத் தடைகளை அவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் அதைப் பரிசீலிப்பார்களேயானால், ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்பப்படுகிறது.

திரு. சா. கணேசன் : நம்முடைய மாநில அரசு தயாரித்திருக்கிற திட்டத்திற்கும் புள்ளி விவரத்திற்கும் மத்திய அரசு கணித்திருக்கிற திட்டத்திற்கும் உள்ள தொகையிலே பெரிய அளவு வேறுபாடு ஏற்பட்டதன் காரணமாக தடைப்பட்டிருக்கிறதா? அல்லது நமது மாநில அரசைச் சேர்ந்த அதிகாரிகள் தங்களுடைய விருப்பு வெறுப்பு காரணமாக, செய்யும் தலையீடு, சில இடையூறுகள் என்ற பரவலான ஒரு புகார் இருக்கிறதே அதன் காரணமாக, இந்தப் பணி தடைப்பட்டு நிற்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, தமிழக அரசின் சார்பாக போக்குவரத்து நெருக்கடி மிகுதியாக உண்டாகிற பகுதியினுடைய புள்ளிவிவரம் எடுக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் ரெயில்வே அமைச்சகத்தின் சார்பாக, தனியாகவே புள்ளி விவரங்களைச் சேகரிப்பதற்கு என்று அமைப்பு ஏற்படுத்தினார்கள். அந்த அமைப்பிலே உள்ள அலுவலர்கள் இந்தப் புள்ளி விவரத்தைப் போலவே, ஏறத்தாழ அதே விதமாக, விவரம் தயாரித்திருக்கிறார்கள். ஆனால் அதிலே உள்ள அதிகாரி ஒருவர் மிகுதியாகப் போக்குவரத்து உள்ள நேரத்திலுள்ள எண்ணிக்கை விவரத்தை எடுத்துக்கொள்ளக்கூடாது, குறைவாக இருக்கிற நேரத்திலே உள்ள எண்ணிக்கை விவரத்தைதான் எடுத்துக் கொள்ளவேண்டுமென்பதாக நினைக்கிறார். அதனால் அவர் கருத்து மாறுபட்டவராக இருக்கிறார். இதுபற்றி மத்திய அமைச்சருக்கே விவரம் தரப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக நியாயம் கிடைக்கக்கூடும் என்று எதிர்பார்க்கிறேன்.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இந்தத் திட்டம் செயல்படுவதற்கு விசேஷமாக ஏதாவது மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறதா? அப்படி என்றால் எவ்வளவு செலவழிக்கும் என்று அரசு கூறுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட கேள்வியைத் தனிக் கேள்வியாகப் போடுவாரானால், எல்லா விவரத்தையும் சேகரித்துத் தர நான் முயற்சி எடுத்துக் கொள்வேன்.

Deputy Commissioner of Labour, Mylapore

* 51. *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether it is a fact that no Deputy Commissioner of Labour has been posted to the Labour Office at Mylapore, Madras from February 1972 onwards;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) the action taken or proposed to be taken to fill the post?

தொழிலாளர் நல துணை ஆணையாளர், மயிலை

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை, மயிலாப்பூரில் உள்ள தொழிலாளர் நல அலுவலகத்தில் 1972 பிப்ரவரியிலிருந்து தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் எவரும் நியமிக்கப் படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

(உ) அந்தப் பதவியை நிரப்ப எடுக்கப்பட்டுள்ள அல்லது எடுக்கத் திட்டமிடப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) & (இ) சென்னையில் தொழிலாளர் நலத்துறைத் துணை ஆணையாளராகப் பணியாற்றிய திரு. சி. ஆர். விஸ்வநாதன் தொடக்கத்தில் 21—2—1972 முதல் ஒரு மாத காலத்துக்கு மட்டுமாகக் குறுகிய காலத்துக்கு மருத்துவ விடுப்பில் சென்றார். தொழிலாளர் நலத் துறைத் துணை ஆணையர்களாகப் பதவி உயர்வு பெறுவதற்குத் தகுதியுடைய தொழிலாளர் நலத் துறை உதவி ஆணையர்களின்

[1973 பிப்ரவரி 7

பெயர்கள் அடங்கிய பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டு வந்ததால், அப்பதவி தொழிலாளர் நலத்துறைத் துணை ஆணையாளரது (ஆய்வுகள்) கூடுதல் பொறுப்பில் வைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து திரு. விஸ்வநாதன் தனது மருத்துவர்களுடைய ஆலோசனைப்படி தமது விடுப்பை நீட்டித்தபடியால், அப்பதவி தொடர்ந்து கூடுதல் பொறுப்பில் வைக்கப்பட்டிருந்தது.

(உ) அப்பதவி நிரப்பட்டுள்ளது.

Railway Wagons for Salt Movements

*55. Q.—THIRU G. SWAMINATHAN and THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that salt has piled up during the month of August, 1972 at Vedaranyam, consequent on non-availability of wagons to move the same from that place; and

(b) if so, the action proposed to be taken by the Government in the matter?

உப்பை எடுத்துச் செல்வதற்கு இரயில் பெட்டிகள்

திரு. ஜி. சுவாமிநாதன் :

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) வேதாரண்யத்திலிருந்து உப்பை எடுத்துச் செல்வதற்குச் சரக்கு இரயில் பெட்டிகள் (Wagons) இல்லாத காரணத்தால் அந்த இடத்தில் 1972, ஆகஸ்ட் திங்களில் உப்பு எடுத்துச் செல்லப்படாமல் குவிந்துள்ளது என்பது உண்மையா?

(இ) ஆமெனில், இது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) வேதாரண்யம் பகுதிகளில் இருந்து உப்பு ஏற்றுமதிக்கு போதுமான இரயில் வேகன்கள் (wagons) ஒதுக்க வேண்டிதென் இயில்வே நிர்வாகத்தினரைக் கேட்டுக் கொள்ளப்பட்டது. இதன் விளைவாக தற்போது நிலைமை மிகவும் அபிவிருத்தியடைந்துள்ளது.

1973 பிப்ரவரி 7]

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, கிட்டத்தட்ட 6 மாதங்களுக்கு இந்த வாகன்கள் கிடைக்காத காரணத்தாலே உப்பு உற்பத்தியே பாதிக்கப்பட்டிருக்கிறது. உற்பத்தி செய்யப்பட்ட உப்பும் விற்கப்படமுடியாமல் கிட்டத்தட்ட 15 ஆயிரம் தொழிலாளர்கள் இன்றைய தினத்திலே அங்கே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இது அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன். இரண்டாவதாக, இது வரையிலே உற்பத்தி செய்த உப்பு பல மாதங்களாகத் தங்கியிருந்தபடியால், அதை வாங்குவதற்கும் யாரும் வரவில்லை என்பதும் மேலும் உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதும் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? தொழிலாளர்களுடைய நலம் பாதிக்கப்படுகிற காரணத்தாலே, அமைச்சர் அவர்கள் உடனடியாக மத்திய அரசிடம் கேட்டு வாகன்கள் சப்ளை செய்ய வழிவகைகள் செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தப் பிரச்சினை அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வந்தவுடன் அரசாங்கமே முயற்சி எடுத்து எப்படியாவது அப்போதைக்கப்போது வாகன்கள் உடனடியாகக் கிடைக்கக்கூடிய முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். இது உப்புக்கு மட்டுமல்ல, பொதுவாகவே வாகன்கள் மூவ்மெண்டில், சரியான ஒரு கோஆர்டினேஷன் இல்லாத காரணத்தாலே, அடிக்கடி சிக்கல்கள் ஏற்படுகின்றன. இது நம்முடைய கவனத்திற்கு வரும்போது, ரெயில்வேத் துறைக்கும், ரெயில்வே போர்டுக்கும் அடிக்கடி தெரிவித்துக் கொண்டிருக்கிறோம்.

Open Air Cinema Theatres

*46 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to permit open air cinema theatres in this State; and

(b) if so, the details thereof?

திறந்த வெளி திரைப்பட அரங்குகள்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இம்மாநிலத்தில் திறந்தவெளி திரைப்பட அரங்குகளுக்கு அனுமதியளிப்பது குறித்து செயற்குறிப்புகள் எவையேனும் அரசின் பரிசீலனையில் உள்ளனவா ?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) அத்தகைய செயற்குறிப்பு எதுவும் இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : சினிமாத் தியேட்டர்களை அரசாங்கம் எடுத்துக்கொள்வதாக ஒரு கருத்தினை முதலமைச்சர் அவர்களே கூறினார்கள். அந்தத் திட்டம் எப்போது எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் கூறும்போதே அதைப்பற்றி விவரம் கூறியிருக்கிறேன்.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இந்த சினிமாத் துறை அதிகமான மக்களை ஈடுபடுத்துவதால், செமி-பெர்மனென்ட் என்ற விதமான தியேட்டர்களைக் கிராமந்தோறும் ஏற்படுத்த வேண்டும். அதற்கு அரசாங்கம் கடன் வழங்க வேண்டுமென்று ஒரு திட்டத்தை தமிழக அரசு ஏற்படுத்தியிருக்கிறதா ? இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு பணம் கடன் வழங்கியிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதற்கு 25 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலே 10 லட்ச ரூபாய் பங்குத் தொகையாகவும், 15 லட்ச ரூபாய் கடனுதவியாகவும் வழங்க அரசாங்கம் சம்மதித்திருக்கிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : ' ஓபன் சினிமா தியேட்டர்ஸ்" தமிழகத்திலே எங்கேயாவது இருக்கின்றனவா ? அப்படி இருந்தால், எத்தனை எத்தனை, எங்கெங்கே இருக்கின்றன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படி இல்லை.

Drinking Water Supply Scheme for Sivaganga Town

* 47. Q.—Thiru M. SANKARALINGAM (on behalf of Thiru P. THIRUGNANASAMBANDAM): Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Scheme for the provision of Drinking Water Supply for Sivaganga Town has been taken up for execution; and

(b) if so, when it will be executed?

சிவகங்கை நகர குடிநீர் திட்டம்.

திரு. எம். சங்கரலிங்கம் (திரு. பி. திருஞானசம்பந்தம் சார்பில்) : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சிவகங்கை நகர குடிநீர் திட்ட வேலை தொடங்கப்பட்டு விட்டதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது முடிவடையும் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம். இந்த வேலை 6—9—1971-ல் தொடங்கப்பட்டது.

(இ) சிவகங்கை குடிநீர்த் திட்டம் 1974-ம் ஆண்டு முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : இன்னும் எத்தனை நகராட்சிகளிலே குடிதண்ணீர் திட்டம் தொடங்கப்பட்டிருக்கின்றது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மொத்தம் நகராட்சிகள் 99. அதிலே குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட்ட நகராட்சிகள் 80. இன்று வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கிற நகராட்சிகள் 10. எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய நகராட்சிகள் 9 ஆகும்.

Bogus Consent Letters from the Engineering Graduates and Diploma-holders

* 56. Q.—Thiru G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether it is a fact that Contractors obtain bogus consent letters from the Engineering Graduates and Diploma-holders for the purpose of claiming full amount on bills; and

(b) if so, the action proposed to be taken by the Government to avert such misdeeds?

பொறியியல் பட்டதாரிகளிடமிருந்தும், பொறியியல் பட்டயதாரர்களிடமிருந்தும் போலி இசைவுக் கடிதங்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பணைப்பட்டிகளின் பேரில் முழுத் தொகையும் கேட்டுப் பெறுவதற்காக, ஒப்பந்தக்காரர்கள், பொறியியல் பட்டதாரிகளிடமிருந்தும், பொறியியல் பட்டயதாரர்களிடமிருந்தும் போலி இசைவுக் கடிதங்களைப் பெறுகிறார்கள் என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அத்தகைய ஒழுங்கீனங்களைத் தவிர்ப்பதற்காக அரசு மேற்கொள்ளக் கருதியிருக்கும் நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) அரசின் கவனத்திற்கு இது மாதிரிச் செய்வதாக வரவில்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்த அரசாங்க பி.டபிள்.யூ. காண்ட்ராக்ட் எடுப்பவர்கள் ரூ. 50 ஆயிரத்துக்கு மேலாக வேலை செய்ய வேண்டுமென்று சொன்னால், அவர்கள் பொறியியல் பட்டதாரிகள், பட்டயதாரர்களை வேலைக்கு அமர்த்த வேண்டும். அப்படி யாரையும் வேலைக்கு வைக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆனால் அவர்களை வேலைக்கு அமர்த்துவதாக பொய் சர்டிபிகேட் கொடுத்து, பணம் பூராவையும் வாங்கிக் கொண்டு போய்விடுவார்கள் என்று பலமாக பலர் பத்திரிகையிலே கருத்து தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, இதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இந்த மாதிரி நிலைமை இருப்பதைத் தவிர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு அங்கத்தினருடைய கேள்வியைப் பொறுத்த வரையில் நான் தலைமைப் பொறியாளர்களைக் கேட்டபோது, அது போன்று ஒரு புகாரும் வரவில்லை என்று சொல்லுகிறார்கள். ஏற்கனவே விதிமுறைகள் போட்டு

"The rules stipulated in the above G.O. do not require that the Contractors should produce any consent letter from the technical personnel as a condition to the contract".

அப்படி கன்செட் லெட்டர் வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று விதிமுறை எதுவும் இல்லை. ஆனால் காண்ட்ராக்ட் கொடுக்கும் போது ரூ. 50 ஆயிரத்திற்கு மேல் உள்ள காண்ட்ராக்ட்டிலே டெக்னிக்கல் அஸிஸ்டென்ட்டாக டிப்ளமோ ஹோல்டர்ஸ், டிகிரி ஹோல்டர்ஸ் இவர்களைத் தான் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று விதிமுறை இருக்கிறது. அப்படி விதிமுறை இருக்கும் போது அந்த டெண்டரை பைனலைஸ் செய்யும்போது, அந்த ஒரிஜனல் சர்டிபிகேட்டைக் கொண்டுவரச்சொல்லி அதைப் பரிசீலித்து வருகிறார்கள். இதிலே அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுவதில்லை என்று ஒரு தலைமைப் பொறியாளர் ஒருவர் அல்ல, சீப் இன்ஜினியர், ஜெனரல் சீப் இன்ஜினியர், ஹைவேஸ் சீப் இன்ஜினியர், நேஷனல் ஹைவேஸ் ஆகிய மூன்று தலைமைப் பொறியாளர்கள் சொல்லுகிறார்கள். வேறு விவரம் எதுவும் இல்லை. அப்படி யாராவது குறிப்பிட்ட அத்தகைய தவறு செய்வதாக மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியுமானால், அந்தத் தகவலை அரசுக்கு அனுப்பலாம். இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். சில தவறுகள் அப்படி ஏற்பட்டு ஒரிரு காண்ட்ராக்ட்களிலெல்லாம் பெனல்டி விதிக்கப்படுகிறது. பெனல்டி விதிக்கப்பட்ட பிறகு, அதைப்பற்றியெல்லாம் பரிசீலிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

THIRU G. SWAMINATHAN: Mr. Deputy Chairman, Sir, besides representations received by me, letters have appeared in the press also. I may even send some of the copies of the letters to the Hon. Minister. What actually happens is this: The unqualified contractors get the certificates from the technical personnel and after giving them a small amount, they get the full amount from the department. May I know whether the Government will see to it that technical people are really employed by the contractors, and whether instead of merely getting the certificates of the qualified personnel at the time of finalising the tender, the Government will introduce checks by authorities concerned to see whether they are continuously working under those contractors?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, எனக்குள்ள சந்தேகம் எல்லாம் அப்படிப் பத்திரிகையில் வரக்கூடிய லெட்டர்கள் எல்லாம் போனஃபைடியா அல்லது போகஸா என்பதுதான். அந்த மாதிரிக் குறைபாடுகளை அரசாங்கத்திற்கு எழுதியனுப்பலாம். குறிப்பிட்ட கான்ட்ராக்டர் தவறு செய்வதாக அரசாங்கத்திற்கு எழுதினால், நிச்சயமாக அரசாங்கம் நடவடிக்கை

எடுக்கும். படித்தவர்கள், பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புகள் கொடுப்பதற்காகத்தான் அந்த விதிமுறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறதே தவிர, காண்ட்ராக்டர்களுக்குச் சலுகை அளிப்பதற்காக அல்ல. அந்த விதிமுறையை நிறைவேற்ற அரசாங்கம் தயாராக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற புகார் பற்றி எந்தத் தகவலும் இல்லை. அப்படி ஏதாவது இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் தகவல் கொடுக்கலாம். அப்படிப்பட்ட காண்ட்ராக்டர்களை லிஸ்டிலிருந்து 'ரிமூவ்' செய்துவிடலாம். அவர்களை லிஸ்டிலே வைத்துக்கொண்டிருக்க வேண்டிய அவசியம் ஒன்றுமில்லை.

THIRU M. RAJAH IYER : Mr. Deputy Chairman, Sir, I find that some contractors call themselves Engineering Contractors, while others call themselves mere contractors. May I know whether there is any distinction officially between these two sections of contractors?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றி எனக்குத் தெரியாது. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் பேராசிரியர். அதுபற்றி அவர் விளக்கங்கள் சொன்னால், ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

State Minor Ports Fund, State Landing and Shipping Funds and State Pilotage Funds

* 57 *Q*.—THIRU V. ISVARMURTHI : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) the total amount available as on date at (1) the State Minor Ports Fund, (2) the State Landing and Shipping Funds and (3) State Pilotage Funds; and

(*b*) the sources of income for these funds?

மாநிலச் சிறு துறைமுகங்கள் நிதி, மாநில இறக்குமதி—ஏற்றுமதி நிதி, மாநில மாலுமிகள் நிதி

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) (1) மாநிலச் சிறு துறைமுகங்கள் நிதி, (2) மாநில இறக்குமதி—ஏற்றுமதி நிதி, (3) மாநில மாலுமிகள் நிதி ஆகியவற்றில் இன்றைய நிலவரப்படி உள்ள மொத்தத் தொகை எவ்வளவு?

(இ) இந்நிதிகளுக்கு எந்தெந்த வாயில்களிலிருந்து வருவாய் கிடைக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) & (இ) விவர அறிக்கை @ மேசையின் மீது வைக்கப்பட்டுள்ளது.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : தலைவரவர்களே, இந்த நிதிகள் துறைமுகங்கள் வளர்ச்சிக்குப் பயன்படுகின்றனவா அல்லது பொது நிதிக்குச் சேர்க்கப்படுகிறதாவென்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இந்த நிதி துறைமுகங்கள் வளர்ச்சிக்குத் தான் பயன்படுகிறது. அந்தந்தத் துறைமுகத்தின் பணமானது அந்தந்தத் துறைமுகத்தில் வளர்ச்சிக்குப் பயன்படுகிறது. பொது நிதியில் சேர்க்கலாமென்று ஆலோசனை இருந்து கொண்டிருக்கிறது.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, இந்த விவர அறிக்கையில் குளச்சல் துறைமுகத்திற்கு 1,31,650 ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் எவ்வளவு தூரம் செலவாகியிருக்கிறது, எஞ்சிய தொகை எவ்வளவு இருக்கிறதென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார். தலைவரவர்களே, இப்போது துறைமுகங்கள் கையில் இருக்கப்பட்ட தொகைதான் இங்கே காட்டப்பட்டிருக்கிறது. தூத்துக்குடி துறைமுகப் பணம் காட்டப்படவில்லை. அதைப்பற்றிக் கேள்வி எழவில்லை. தூத்துக்குடி பணம் 1,56,49,000 ரூபாய் இருக்கிறது.

Loan for Sprinkler Irrigation

* 58 *Q*.—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN) : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether instructions have been issued by the Government to the Land Development Banks to issue loans for Sprinkler Irrigation Units; and

(*b*) if so, the details thereof?

@ 312-313 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

தெளிப்பு முறைப் பாசனத்திற்கு கடன்கள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்) : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தெளிப்புப் பாசன அமைப்புகளுக்கு கடன்கள் வழங்குமாறு நிலவள வங்கிகளுக்கு அரசு கட்டளை பிறப்பித்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, (அ) ஆம்.

(இ) தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்த தேவைப்படுகிற இடங்களில் தெளிப்புப் பாசன முறை, அதாவது ஸ்ப்ரிங்கில் இர்ரிகேஷன் முறைக்கு கடன் வழங்கப்படுகிறது.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : தலைவரவர்களே, இந்தப் பாசன முறை மாநிலத்திலே கடைப்பிடிக்கப்படுகிறதா ? எங்கு பரவலாகக் கடைப்பிடிக்கப்படுகிறதென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இது முக்கியமாக திருச்சி மாவட்டத்தில் கரூர் வட்டத்தில் ஏறத்தாழ 7,360 ஏக்கருக்குப் பயன்பட்டு வருகிறது.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இது போன்ற முறை சட்ட மன்ற உறுப்பினர் விடுதியிலே ஏற்படுத்தி எடுக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணம் என்னவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இதற்கும் இந்தக் கூட்டுறவு நில வள வங்கிக்கும் ஒட்டுறவு இல்லை.

Co-operative Central Bank, Thanavur

* 59 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether it is a fact that a Memorandum was submitted to the District Collector, Thanavur during the last week of August, 1972 by an All Party Committee regarding malpractices in the Co--operative Central Bank, Thanjavur;

(b) if so, the nature of the complaint; and

(c) the action taken by the Government in the matter?

தஞ்சாவூர் கூட்டுறவு மத்திய வங்கி.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர், கூட்டுறவு மத்திய வங்கியிலுள்ள ஊழல் குறித்து அனைத்துக் கட்சிக்குழு, 1972 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் கடைசி வாரத்தில் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் முறையீடு ஒன்றைக் கொடுத்தது என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், புகாரின் தன்மை யாது ?

(உ) இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, (அ) ஆம்.

(இ) தஞ்சை மத்திய கூட்டுறவு வங்கியின் தலைவர் அவ் வங்கியின் பணத்தைக் கையாடல் செய்ததாக மாவட்ட ஆட்சித் தலைவரிடம் புகார் செய்யப்பட்டது. கூட்டுறவுத் துறை அதிகாரிகள் ஏற்கெனவே இதுபற்றி நடவடிக்கை எடுத்திருந்தனர். அரிவாணிப்பட்டி கூட்டுறவு நாணயச் சங்கத்திற்கு கொடுப்பதாகக் கூறப்பட்ட 2,04,000 ரூபாய் உண்மையில் கொடுக்கப்படவில்லை. வங்கியின் தலைவர் அதைக் கையாடல் செய்திருக்க வேண்டும் என்று சந்தேகித்து இன்ஸ்பெக்ஷன் ஸ்டாப் செய்திருந்தனர். இது பற்றி 6 பேர்கள் கைது செய்யப்பட்டு போலீசாரால் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவரவர்களே, செங்கற்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் இருக்கிற ஒரு கூட்டுறவு வங்கி, அர்பன் பாங்க், அதிலே 23 ஆயிரம் ரூபாய் திருடு போய்விட்டதாகக் கூறப்பட்டது. அதன் மீது அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா, அது விஷயமாக அரசுக்குத் தெரியுமாவென்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இந்த வினா அர்பன் பாங்க் பற்றியது. நண்பர் திரு. சி. வி. ராஜகோபால் அவர்கள் கேட்ட வினா அர்பன் பாங்க் பற்றியது. பொதுவாக நகர வங்கிகள் "செல்ஃப் ரிலையன்ட்" தன் காலால்

நிற்பவை. அரசு உதவி செய்வது கிடையாது. பங்கு முதல் கொடுப்பது கிடையாது. கடன் கொடுப்பதும் கிடையாது. இந்த நிலைமை இருக்கிற காரணத்தினால், அர்பன் பாங்குகள் மீது போதுமான அளவிற்குக் கண்காணிப்பு இல்லாமல் பல இடங்களில் அர்பன் பாங்குகளில் கையாடல் நடந்து வருவது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதைப்பற்றிச் சற்றுத் தீவிரமாகக் கண்காணிப்பதற்கு சட்டம் கொண்டுவரும் போது உறுப்பினர்கள் அதை ஆதரிப்பார்களென்று நம்புகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, தஞ்சை கூட்டுறவு மத்திய வங்கியினுடைய தலைவர் கிட்டத்தட்ட 2 லட்ச ரூபாய்க்கு மேல் கையாடல் செய்ததாகத் தெரிய வந்திருக்கிறது. ஆனால் அதிலே முக்கியமான விவகாரம், இந்த மாதிரி நடப்பதற்குரிய விதி முறைகளை மாற்றுவதற்கு அரசு முயலுமாவென்று அறிய விரும்புகிறேன். ஏனென்றால் ஒரு இடத்தில் நடந்தது, பல இடங்களில் நடக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதற்குத் தடையாக இது மாதிரிக் கையாடல் நடப்பதற்குரிய வழிமுறைகள் இருந்தால், அதைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, 2,04,000 ரூபாய் பூராவும் பணம் கையாடல் செய்யப்பட்டு விட்டது என்று நான் சொன்னதாக எடுத்துக்கொள்ளக் கூடாது. 2,04,000 ரூபாய் காணோம். அதிலே 1½ லட்ச ரூபாய் திரும்பப் பெறப்பட்டிருக்கிறது. ஆக, மொத்தம் கையாடல் என்று சொல்லக் கூடியது 54 ஆயிரம் ரூபாய் தான் இருக்கிறது. இது வரவேண்டிய பாக்கி. இதனாலே அந்த வங்கி ஏதோ கெட்டுப் போய்விட்டது என்று யாரும் கருதத் தேவையில்லை. இந்த 54 ஆயிரம் ரூபாய் அல்ல, இதைப் போல பத்து மடங்கு அதிகம் தவறு நடந்தாலும் கூட—தவறு நடக்காது—நஷ்டம் ஏற்பட்டால் கூட, அந்த வங்கி லாபத்தில் தான் நடந்துகொண்டிருக்கிறது. விதி முறைகளைப் பற்றிச் சொன்னார்கள். சென்ட்ரல் பாங்க் விதி முறைகளைப்பற்றி நன்றாக ஆராய்ந்து, அந்த விதி முறைகளை மாற்றுவதற்கு இப்படிப்பட்ட கையாடல்கள் நடக்காமலிருப்பதற்கு வேண்டிய வகையில் விதிகளைத் திருத்த இப்போது அரசின் ஆய்வில் இருக்கிறது. அது ஒரு வாரத்திற்குள் வெளியாகும் என்று கருதுகிறேன்.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, இம்மாதிரி மத்திய பாங்குகளில் 2 லட்சம், 3 லட்சம் ரூபாய் என்று கையாடல் வரும் போது ஒரே நேரத்தில் அல்லது ஒரே மாதத்தில் வருவதல்ல. நடப்பாகவே பல மாதங்களில், வருஷக் கணக்கில் தான் இவ்வளவு தொகை ஏறியிருக்க முடியும். ஆகவே உடனுக்குடன் ஒவ்வொரு மாதத்திலும் தணிக்கை செய்து இம்மாதிரிக் குற்றங்களைக் கண்டு பிடித்து, உடனுக்குடன் நடவடிக்கை எடுப்பதில் என்ன கஷ்டம்? இனிமேலாவது, கண்டிப்பாக தணிக்கைகளை மத்திய பாங்குகளிலும், மற்ற பாங்குகளிலும் செய்து, இம்மாதிரிக் கையாடல்கள் இல்லாமல் செய்வதற்கு அரசு நடவடிக்கைகளை எடுக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, கூட்டுறவு மத்திய வங்கியில் ஏறத்தாழ ரூ. 10 கோடி, ரூ. 12 கோடி வரவு செலவாகிறது. இது கொஞ்சம் கொஞ்சமாக 5, 10 ரூபாயாக நாளடைவில் போனதல்ல. மே மாதத்தில் ஒரு நாள் ஒரு கூட்டுறவு நாணய சங்கத்திற்கு கொடுத்ததாகக் கணக்கில் எழுதி விட்டு, அதிலே தலைவர் கையாடல் செய்ததாகக் கண்டுபிடிக்கப் பட்டு, தணிக்கை செய்யும்போது கண்டுபிடிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. ஆனால் நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கூடியதெல்லாம் இதற்குத் தகுந்த அளவு விதிகள் திருத்தப்பட்டிருக்கின்றன. இன்னும் ஒரு வாரத்திற்குள் வெளியாகும். அதோடு தணிக்கை முறையும் இப்போது நடைமுறையில் இருக்கிறது. ஒரு வேளை உறுப்பினர் அவர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். மாதம் ஒரு முறை கணக்கு என் பார்வைக்கு வர வேண்டுமென்று கூட உத்திரவிட்டிருக்கிறேன்.

திரு. சா. கணேசன் : தலைவரவர்களே, கூட்டுறவு நகர வங்கிகளிலே அரசாங்கம் பணம் போடுவதுமில்லை, நிர்வாகம் பண்ணுவதுமில்லை, அவை தன் காலிலேயே நிற்பது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அங்கு பணம் போட்டு, டெபாசிட் செய்திருக்கிறவர்களுக்கு அரசாங்கம் உத்தரவாதம் கொடுத்திருக்கிறதா, பாதுகாப்பு கொடுத்திருக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, தன் காலில் நிற்கும் வங்கிகளில், நகர வங்கிகளில் டெபாசிட்

செய்கிறவர்களுக்கு அரசு இது வரையில் எந்த விதமான பாது காப்பும் செய்யவில்லை. ஆனால் இப்போது டெபாசிட் காரண்டி ஸ்கீம், டெபாசிட் இன்ஷூரன்ஸ் ஸ்கீம் என்று புகுத்திக்கொண்டு வருகிறோம். அதோடு கூட இங்கே போட்டிருக்கிற பணம் மக்களுடைய பணம், அதனால் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது என்ற அடிப்படையிலே புதிதாக விதிகள் கண்காணிக்கக் கூடிய அளவிற்கு வருகின்றன. அப்போது நண்பர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு போன்றவர்கள் எதிர்க்காமல் இருக்க வேண்டுமென்று இப்போதே முன்கூட்டியே சொல்லிக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவரவர்களே, சாதாரணமாக ஒரு பெரிய கிராமக் கூட்டுறவு சொசைடியிலே 2 லட்சம், 3 லட்சம் ரூபாய் என்று கடன் கொடுக்கிறார்கள். ஆனால் அந்தத் தலைவர் என்ன செய்கிறார் என்றால், போகஸாக மனுக்களைத் தயார் செய்து கடனுக்காக அனுப்பி விடுகிறார்கள். அதைத் தடுக்க வேண்டுமென்பதற்காக அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அப்படி ஏற்பாடுகள் செய்கிற போது நன்றாக, உண்மையாகக் கேட்கிறவர்களுக்குக் கால தாமதம் ஏற்படாதபடி பார்த்துக்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, அந்த விதிகள் விரைவிலே வெளியிடப்படும். அப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயராம ரெட்டியார் அவர்கள் அதைப் பார்த்தால், முன்பைவிட இன்னும் சற்று விரைவாகவே கடன் கொடுப்பதற்கு அதிலே இடமிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்வார்கள்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : தலைவர் அவர்களே, மத்தியக் கூட்டுறவு வங்கியிலே கெசட்டட் ரேங்கிலே ஒருவர் எக்சிக்யூடிவ் ஆபிசராக இருக்கிறார். இரண்டு லட்சத்து நான்காயிரம் ரூபாய் அந்தச் சங்கத்திற்காகக் கடன் கொடுத்ததை தான் எடுத்துக் கொள்வதற்கு ஒன்று அந்த பாங்க் தலைவர் அந்தக் கடன் வாங்கிய சங்கத்தினுடைய தலைவராகவோ சங்கத்தின் மூலமாக அந்தக் கடன் தொகையைப் பெறுவதற்கு உரிமை உள்ளவராகவோ இருந்திருக்க வேண்டும். ஆகையினாலே அந்த சென்ட்ரல் பாங்கினுடைய தலைவர் அந்தச் சங்கத்திற்கு எந்த வகையிலே

பிரதிநிதித்துவம் வாய்ந்தவராக இருந்து அந்தக் கடன் தொகையை வாங்கினார், எக்சிகியூடிவ் ஆபீசர், செக்ரட்டரி என்பவர்கள் எப்படி அந்தக் கடன் தொகையை எடுத்துக்கொள்வதற்கு அனுமதித்தார்கள் அல்லது யோசனை கூறினார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, இப்பொழுது இருக்கப்பட்ட விதிகளின் குறையே அதுதான். இப்போது யார் தலைவர்களாக இருக்கிறார்களோ அவர்களுக்குச் சகல அதிகாரமும் இருக்கிறது. அவர்களே செக்கில் கையெழுத்துப் போடவேண்டும் என்றால்கூட, கையெழுத்துப் போடலாம் என்று விதிகள் இருக்கின்ற காரணத்தால், இப்பொழுது கையாடலுக்கு சற்று இடமிருக்கிறது. கையாடல் செய்யும்போது, பாங்கின் தலைவர்களையே நாங்கள் கைது செய்ய வேண்டிய வேதனையான நிலையில் இருக்கிறோம். இந்தக் கையாடல் சம்பந்தமாக ஏறத்தாழ 6 பேர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்திருக்கிறோம். நாங்கள் அப்படிச் செய்யும்போது, எந்த மகிழ்ச்சியுடனும் அதைச் செய்யவில்லை. ஆனால் இப்போது இருக்கப்பட்ட விதிகள் அப்படித்தான் இருக்கின்றன.

The dominion over the property and the cash is vested with the President

என்று பைலாக்கள் இருக்கின்றன. ஆகையினால் சர்வ அதிகாரமும் அவர்களிடம் இருப்பதை எடுத்துவிட்டு, உத்தியோகப் பற்றில்லாதவர்கள் கொள்கை அளவிலே தீர்மானம் செய்யவும் சம்பளம் வாங்குகின்ற உத்தியோகப் பற்று உள்ளவர்கள் அன்றாட நடவடிக்கைகளைக் கவனிக்கவும் விதிகள் திருத்தி வந்துகொண்டிருக்கின்றன.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையிலே பல லட்சக்கணக்கான ரூபாய் தவறுதலாகக் கையாடல் செய்யப்படுகிறது என்பதால் அரசாங்கம் இந்தச் சட்டத்தை திருத்தப்போகிறது என்று அமைச்சர் அவர்கள் கூறியதை வரவேற்று, அந்தச் சட்டத்திலே அந்தத் தவறுதல்கள் தனிப்பட்ட நபரின் மூலமாக நடப்பதில்லை, ஒரு கூட்டணி மூலமாகத்தான் திருடுதல் நடைபெறுகின்றது, என்பதால் அந்தக் கூட்டணியில் யார் யார் இருக்கின்றார்கள் என்று அரசாங்கம் கண்டுபிடிப்பதற்கு அவர்கள் சொன்னபடி இந்தச் சட்டத் திருத்தத்திலே இடமிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1973 பிப்ரவரி 7

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுத் திருட்டு இனிமேல் நடைபெருவண்ணம் இந்த விதிகள் இப்போது திருத்தப்படுகின்றன. திருத்தப்பட்ட விதிகள், அதிலே இன்னும் ஏதாவது குறைகள் இருந்தால், நீங்கள் சொல்வதாக இருந்தால் நான் அதை வரவேற்பேன். நீங்கள் நல்ல முறையில் அனுபவத்தின் காரணமாக இன்ன விதமாக மேலும் திருத்தப்பட வேண்டுமென்ருல்கூட, அதையும் வரவேற்போம். ஆனுல் இப்போது இருக்கப்பட்ட நிலைமையைப்பற்றி நான் சொல்கிறேன். இப்போது தலைவர் ஒருவருக்கே அத்தனை அதிகாரமும் கொடுத்து பைலாக்கள் இருக்கின்றன.

He has complete dominion over the property and cash

என்று இப்போது பைலாக்கள் இருப்பதை நிச்சயம் நாம் திருத்தியாக வேண்டும். ஏனென்ருல் கெசட்டட் ஆபீசர் ஒருவர் இருக்கிருர். உண்மை. ஆனுல் அவருக்கு இப்போது அதிகாரம் கொடுக்கப்படவில்லை பைலாவிலே. பைலாவிலே எக்சிகியூடிவ் ஆபீசரைப்பற்றி ஒன்றுமே இல்லை. அவருக்கு சகல அதிகாரமும் கொடுக்க வேண்டும் என்றுதான் இனிமேல் விரும்புகிருேம்.

Civil Supplies Transactions.

* 60. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the percentage allowed for storage loss for Civil Supplies transactions;

(*b*) the total storage loss accrued, of the Civil Supplies Department during the financial years, 1968-69 and 1969-70; and

(*c*) out of this, the amount written off by the Government during each financial year?

உணவுப் பொருள் வழங்கு துறையின் வாணிக நடவடிக்கைகள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உணவுப் பொருள் வழங்கு துறையின் வாணிக நடவடிக்கைகளில், சேமித்து வைப்பதினுல் ஏற்படும் சேதாரம் எத்தனை சதவிகிதம் அனுமதிக்கப்படுகிறது?

1973 பிப்ரவரி 7]

(இ) 1968-69, 1969-70 ஆம் நிதியாண்டுகளில் உணவுப் பொருள் வழங்கு துறைக்கு ஏற்பட்ட சேதாரத்தில் மொத்த மதிப்பு எவ்வளவு?

(உ) இதில், ஒவ்வொரு நிதியாண்டிலும் அரசால் தள்ளுபடி செய்யப்பட்ட தொகை யாது?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : கேட்கப்பட்டுள்ள தகவல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

(அ) கிடங்கில் சேமித்து வைக்கும் கால அளவு, தொடக்க நிலை, ஈரம், பூச்சித்தாக்குதல்கள் போன்ற பிற காரணங்களை யொட்டி, சேமித்து வைப்பதனுல் ஏற்படும் சேதார அளவு வேறுபடும். ஆகவே, தள்ளுபடி எவ்வளவு அனுமதிக்கப்படலாம் என்று முடிவாகச் சொல்வதற்கில்லை.

(இ) 1968-69-ல் ஏற்பட்ட மொத்த சேதாரத்தின் மதிப்பு ரூ. 9.68,928.03.

1969-70-ல் ஏற்பட்ட மொத்த சேதாரத்தின் மதிப்பு ரூ. 17,54,884.05

(உ) அரசுக் கணக்கிலிருந்து நீக்கிய மொத்தத் தொகை—
1968-69—ரூ. 28,37,484.11.
1969–70—ரூ. 12,52,753.06.

முந்திய ஆண்டுகளில் ஏற்பட்ட சேதார மதிப்பும் இத்தொகையில் அடங்கும்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, இந்தக் கொள்முதல் செய்கின்றபோது நன்ருகக் காய்ச்சல் ஏற்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் இந்தக் குறைபாடு அதிகமாக ஏற்படுவதற்குக் காரணமில்லை. இப்போது நீங்கள் கொடுத்திருக்கிற நஷ்டக்கணக்கு எத்தனை பர்சென்டேஜ், மொத்தக் கொள்முதலுக்கு என்பதற்கு விளக்கம் தரப்படுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, 1968-69-க்கு 0.21% . 1% 'அலவ்' பண்ணியிருந்தோம் என்ருலும், நான்கில் ஒரு பகுதிகூட ஆகவில்லை. 1969-70-ல் 0.43% தான் ஆகியிருக்கிறது.

[1973 பிப்ரவரி 7

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, 1968-69-ல் 9 லட்ச ரூபாய் அளவுக்கும் 1969-70-ல் 17 லட்ச ரூபாய் அளவுக்கும் உணவு வழங்குத் துறையிலே சேதாரமாக ஆகியிருக்கிறது. அதற்கு முக்கியமான காரணம் உணவுப் பொருள் வாங்குகிறபோது, சரியான நிலையிலே வாங்குவதில்லை என்ற புகார் சொல்லப் படுகிறதே? எனவே இனிமேலாவது ஏதாவது சேதாரம் இல்லாமல் இருப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறியவிரும்புகிறேன். தாங்கள் குறிப்பிட்ட சதவிகிதத்தோடு, 1968-69-ல் வாங்கியது எவ்வளவு, 1969-70-ல் வாங்கியது எவ்வளவு என்ற தொகையையும் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, கொள்முதல் செய்வதிலே, சரக்கு வாங்க வேண்டும் என்பதிலே சர்க்கார் மிகப் பொறுப்போடு கட்டளையிட்டிருக் கிறோம். அதன் காரணமாகத்தான் முதல் ஆண்டு கொஞ்சம் சரியாக இருந்திருக்கிறது. மற்ற ஆண்டுகளிலே வாங்குகிற போது, மழைக் காலமாக இருந்து, அதிலே குறுவை விவசாயி களைக் காப்பற்ற வேண்டும் என்ற நிலையிலே துரிதப்படுத்தி சர்க்காரே சிவில் சப்ளை, மற்றும் கூட்டுறவு முறையிலே வாங்குகின்ற நெல்களிலே ஏற்படுகின்ற சேதாரத்தை உள்ளபடியே தவிர்க்க முடியாது. இது நம்முடைய சொந்த நெல்களிலேகூட ஏற்படுவதுதான். இந்த ஆண்டு 20 நாட்கள் முன்பாக அறுவடை செய்தவர்களுக்கெல்லாம் சரியாகக் கண்டது. பிறகு நன்றாக விளைந்திருந்தால்கூட, மழையின் காரணமாக தண்ணீரினால் சேதாரம் வந்தது. சர்க்காரானபடியால் கணக்கு இருக்கிறது. சர்க்கார் ரொம்ப கவனமாக இருக்கிறது. பர்சென்ட்டேஜ் எல்லாம் வைத்துக் கொள்முதல் செய்கின்றோம். அதற்காக இன்னும் எந்த அளவுக்குச் செய்ய முடியுமோ அதற்கான துரித நடவடிக்கைகளையும் சர்க்கார் எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

1968-69க்கு 0.21% என்று நான் சொன்னேன். அதிலே மொத்தம் கொள்முதல் பண்ணியது 43 கோடி ரூபாய், 24 லட்ச மாகும். அதிலே சேதாரம் 9 லட்ச ரூபாய்.

1969-70-ல் கொள்முதல் பண்ணியது 39 கோடியே 22 லட்ச ரூபாய் ஆகும். சேதாரம் 0.43%.

1973 பிப்ரவரி 7]

திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, இந்த நஷ்டம் அரசாங்க நஷ்டத்தோடு நின்றுவிட்டதா அல்லது எஞ்சிய உணவுப் பொருள்களின் பேரில் அதிகமாக விலை வைத்து விற்பதன் மூலம் சரிக்கட்டப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, கேள்வியைப் பொறுத்த அளவிலே, சேதாரம் எவ்வளவு என்பதுதான் கேள்வி. அதற்குள்ள பதில்தான் இருக் கிறது. ஆகையினாலே கோடவுனிலே ஸ்டாக் செய்தது, வாங்கிய பொருள், இதை வாங்கும்போது போட்ட எடை இவ்வளவு, நாம் எடுத்து கடைசியிலே போட்ட எடை இவ்வளவு, அதில் மொத்தமாக கோடவுனிலே இருக்கிற சேதாரம் இவ்வளவு என்ற கணக்குத்தான்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இப்போது அரசாங்கம் புதிய விதிமுறையை வைத்து லாப நஷ்டமில்லாமல் அரிசி விற்பது என்ற அளவில் முடிவு எடுப்பதற்கு முன் வரையில் கோடவுனிலே ஏற்பட்ட நஷ்டம் அரசாங்க நஷ்டந்தான்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : தலைவர் அவர்களே, இந்த நஷ்டமானது இதையெல்லாம் வாங்கும்போது எடை குறைந்ததால் ஏற்பட்டதா அல்லது ஈரத்தினால் ஏற்பட்டதா அல்லது ஜீவஜந்துக்களான எலிகளால் ஏற்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அத்தனை காரணங்களாலும் ஏற்பட்டது.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், ஈரத்தினால், மழையின் காரணமாக சில சமயத்திலே இந்த மாதிரியான குறை பாடுகள் ஏற்பட்டன என்று. அந்த நெல்களை நாம் சேமித்து வைத்து வினியோகம் செய்கின்றபோது, இந்த மழையிலே அடிபட்ட நெல்லை முதலிலே வினியோகம் செய்ய ஏற்பாடு செய்து விட்டால், அது கெட்டுப்போகாமலிருப்பதற்கு வசதியாக இருக்கும். ஆகையினாலே அந்த அளவிலே வினியோகம் செய்ய ஏற்பாடு செய்வார்களா?

[1973 பிப்ரவரி 7

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, கொள்முதல் செய்வதிலே, அந்தந்த மாதத்திற்கு வாங்கி அந்தந்த மாதத்திற்குச் செலவழிக்கின்ற அளவிலே கொள்முதல் செய்யவில்லை. சென்ற ஆண்டு வாங்கிய ஸ்டாக்குகளே இப்போது நமக்கு ஆயிரக்கணக்கான டன்கள் இருக்கின்றன. ஆகையினால் அதுபோக வாங்குகின்றோம். அந்த வினியோக முறையை எப்படி வைத்திருக்கிறோம் என்றால், நீண்ட நாட்களாக இருப்பதை முதலில் எடுத்துக்கொள்வது என்று வைத்திருக்கிறோமே தவிர, இத்தனை நாட்களுக்கும் வைத்திருப்பவர்களை எடுக்க வேண்டுமென்று முறைப்படுத்தும் அளவிலே ஸ்டாக் செய்ய முடியாது. சில மாதங்களில்தான் சீசன் வருகிறது. எல்லா மாதங்களிலும் கொள்முதல் செய்கின்ற சீசன் நமது மாநிலத்தைப் பொறுத்த வரையிலே இல்லை. ஆதலினாலே அதை ஸ்டாக் வைக்கின்றபோதும் மற்ற நோத்திலேயும் குறை ஏற்பட்டுவிடுகிறது.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : அறுவடை காலங்களில் நாம் கொள்முதல் செய்கிறபொழுது, ஈரமாக இருந்தால் எத்தனை சத விகிதம், எவ்வளவு ஈரம், எந்த நிலையில் இருக்கிறது என்று ஒரு சில நிமிடங்களில் கண்டுபிடிக்கும் கருவிகள் இருக்கின்றன. ஆகவே, எவ்வளவு ஈரம் இருக்கிறதோ, அதற்குத் தகுந்தபடி மொத்த எடையிலிருந்து கழித்துக் கொண்டு கொள்முதல் செய்யும் முறைகளை அரசு கையாளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இந்த ஆண்டு கடுமையான நடவடிக்கை எடுத்தோம். மூட்டையில் ஈரமான நெல்லைக் கட்டுகிறபொழுதே, "மாய்ஸ்சர்" வைத்துப் பார்த்து 18%, 20% இருந்தால் அதற்கென்று அதிகமாகக் கொடுக்கிறோம். இப்பொழுது 57 கிலோ என்றால், 17% என்று கூட்டி 59 அல்லது 58 கிலோ என்று கூட்டித் தருகிறார்கள் என்று சொல்கிறார்கள். இருந்தாலும் நிறுத்துவாங்குகிறோம். இந்த ஆண்டு சரியான முறையில் ஏற்பாடு செய்திருக்கிறோம். இதெல்லாம் கேள்வி கேட்கிறவர்களுக்கு நிச்சயமாகத் தெரியும். நாம் குதிரில் போடுகிற நேரத்தில் அரைக் காய்ச்சலாகக் காய்ச்சி, கட்டி, மறு நாள் விற்பனைக்குக் கிடைக்கிறது. இது மிகக் கஷ்டமாக இருக்கிறது. இது தனிப்பட்டவர்கள் நிலைமை. இது பொதுச் சொத்து.

1973 பிப்ரவரி 7]

பரம்பரையாக பெரும் பெருச்சாளிகள் தின்ற இடம். ஆகவே கட்டுப்பாடு வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் கணக்குக் கொடுத்து வந்தால், ஓரளவு நன்றாகக் கண்காணிக்கப்பட்டு வந்திருக்கும். நம் உணவுத் துறை அதிகாரிகள் கஷ்டப்பட்டு நல்ல முறையில் கவனித்து வருகிறார்கள்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, நான் கேட்ட கேள்வியானது மழை காலத்தில் கொள்முதல் செய்யப் பட்டதை முதலில் வினியோகம் செய்ய வேண்டும். மந்திரி அவர்கள் முன்னால் வாங்கியதை முன்னாலும் பின்னால் வாங்கியதைப் பின்னாலும் கொடுக்கிறோமென்று சொன்னார்கள். மழை காலத்தில் வாங்கியதை முன்னாலேயே கொடுக்கச் சொல்கிறோம்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : கோடவுனில் 'செக்' செய்கிறோம். நல்லது கெட்டதைப் பார்த்துக் கொடுக்கிறோம். எடை குறைவானால், நல்ல அரிசி, கெட்ட அரிசி என்று பார்க்க முடியாது. எடை குறைவு எல்லாவற்றிலும் வரும்.

Products of the Tamil Nadu Khadi and Village Industries Board

* 61. *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Food be pleased to state whether any investigation into the market potentialities of the products of the Tamil Nadu Khadi and Village Industries Board has been undertaken in this State?

தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில்கள் வாரியப் பொருள்கள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில்கள் வாரியப் பொருள்களின் விற்பனை வாய்ப்புகள் குறித்து இம் மாநிலத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : மாவட்டக் கதர்-கிராமத் தொழில் அதிகாரிகள், தங்கள் மாவட்டங்களில் கதர்-கிராமத் தொழில்கள் வாரியத் தயாரிப்புப் பொருட்களின்

[1973 பிப்ரவரி 7

விற்பனை வாய்ப்புகளைப்பற்றி ஆய்வு செய்து தேவைப்படும் பொருள்களை உற்பத்தி செய்வதற்காக அவர்களது தேவைக் குறிப்புப் பட்டியல்களை அனுப்பி வைக்கின்றனர். கதர்-கிராமத் தொழில்கள் (விற்பனை) துணை இயக்குநர், கதர்-கிராமத் தொழில் உற்பத்திப் பொருள்களின் விற்பனையை உயர்த்துவதற்கான வழிவகைகளைக் கண்டறிகிருர்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர்: வினுக்கள் 62 முதல் 65 வரை ஒத்திவைக்கப்படுகின்றன.

வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக் குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

மாநில முழுவதும், குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் மின் சப்ளை நிறுத்தப்படுவதால் ஏற்பட்டிருக்கும் பாதிப்பு குறித்து.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கீழ்க்கண்ட திட்டவட்டமான பொருள் குறித்து விவாதிப்பதற்கென, மேலவையின் அலுவல்களை ஒத்தி வைக்கக் கோரும் பிரேரணை ஒன்றை திரு. என் சுந்தரேசத் தேவர், எம்.எல்.சி., அவர்கள் தந்துள்ளார்கள் :—

"மாநில முழுவதும், குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில், கடந்த ஒரு வார காலமாக மின் சப்ளை இரவு, பகல் நிறுத்தப் படுவதால், தொழில்கள், விவசாயம், வீட்டு உபயோகங்களுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டு, மக்களுக்குப் பெரும் கஷ்டத்தையும் நஷ்டத்தையும் ஏற்படுத்தியுள்ளது குறித்து."

திரு. சுந்தரேசத் தேவர் அவர்களை இது எவ்வாறு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் என்றும், விதிகளின் கீழ் எவ்வாறு வரும் என்றும் விளக்குமாறு கோருகிறேன்.

***திரு. என். சுந்தரேசத் தேவர்:** தலைவர் அவர்களே, கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக மாநிலம் பூராவும் மின்சார வெட்டு அமுல் என்று வந்தபோதிலும் கூட, சுத்தமாக மின்சாரம் வராமல்

1973 பிப்ரவரி 7] [திரு. என். சுந்தரேசத் தேவர்]

தஞ்சையில் கடந்த ஒரு வாரமாக இருந்துகொண்டிருக்கிறது. சென்னையில், வட ஆற்காட்டில் அப்படி இருப்பதாகச் சொல்லு கிருர்கள். பல மாவட்டங்களிலிருந்தும் தந்தி வந்துகொண்டிருக் கிறது. அதிகாலை 3, 4 மணிக்கு வருகிறது என்று சொல்லி, பகலில் மின்சாரம் கிடையாது, இரவு பூராவும் கிடையாது. இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்ட காரணத்தால, விவசாய பம்பு செட்டுகள் ஓடாமல் இருக்கின்றன. குறிப்பாக. தஞ்சை மாவட்டத்தில், வேதாரண்யம் பகுதியில் புகையிலைச் சாகுபடி இந்த சீசனில் செய்வது வழக்கம். பம்புசெட்டு மூலம் விவசாயம் செய்வது பாதிக்கப்பட்டிருக்கின்றது. இந்த நிலைமை ஏன் ஏற்பட்டது? மின்சார வெட்டு என்று அரசாங்கம் சொன்னாலும், அவசியமானதற்கு மின்சாரம் சப்ளை செய்யாத காரணம் என்ன? இந்த நிலை ஏன் ஏற்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன். அத்துடன், அரசாங்க மின்சார வெட்டு ஏற்படாமலிருக்க, ஆரம்ப காலத்தில் நடவடிக்கை எடுக்கத் தவறி விட்டதென்று கருதுகிறேன். சமுதாயத்தின் தேவைக்கெல்லாம் அடிப்படையாக மின்சாரம் அவசியமாக இருக்கிறது என்பதை அறிவோம். அப்படி சமுதாயத்தின் அவசியமான தேவைக்கு வேண்டிய மின்சாரம் கிடைக்காமல் இவ்வளவு மோசமான நிலை ஏற்பட என்ன காரணம்? அரசாங்கத்தின் அசிரத்தையா? இதை நீக்குவதற்கு, பரிகாரம் காண்பதில் கவனம் செலுத்துவதற்கு, இன்றைய தினம் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். தவறு இருக்க முடியாதென்று எண்ணுகிறேன். மிகவும் முக்கியமான நிலையில் மின்சாரம் இருப்பதால், சபையை ஒத்தி வைத்து விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர்: அரசு கருத்தறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, தென் மேற்குப் பருவ மழை பொய்த்ததனாலும், நெய்வேலியில் குறைந்த அளவுக்கே மின் உற்பத்தி செய்யப்பட்டதனாலும், அண்டை மாநிலங்களிலிருந்து நமக்குக் கிடைத்து வந்த மின்சக்தி நிறுத்தப்பட்டுவிட்டதனாலும், இவை அனைத்தும் சேர்ந்து இவ்வாண்டு மின்சக்திப் பற்றாக்குறை ஏற்பட்டது. இதனால்,

1972 அக்டோபர் முதல் 1973 மே திங்கள் வரை நமக்கு 5,530 மில்லியன் யூனிட் மின் சக்தி தேவையாயிருக்க, சுமார் 1,300 மில்லியன் யூனிட் மின் சக்தி பற்றாக்குறை நிலவும் என மதிப்பிடப்பட்டது. எனவே, 1-10-72 முதல் மின்சக்தி பயன்படுத்துவதில் 25% வெட்டினை அரசு கொண்டு வரவேண்டியதாயிற்று. நீர் மின்சக்திக்காக உள்ள நீர்த் தேக்கங்களில் நீர் குறைந்துவிட்டதன் காரணமாக அரசு 1-2-73 முதல் மின்சார வெட்டினை 25% லிருந்து 40% ஆக உயர்த்த வேண்டிய கட்டாயத்திற்கு வரவேண்டியதாயிற்று. ஆயினும் குறைவழுத்த மின் சக்தி பயன்படுத்தும் தொழிற்சாலைகளைப் பொறுத்தமட்டில் 2,000 யூனிட்டுக்குக் குறைவாக மின்சக்தி பயன்படுத்துவதில் 25% அளவுக்கு மின்சார வெட்டு வரையறுக்கப்பட்டுள்ளது. கண்டின்யுவஸ் பிராசஸ், தொடர்ந்து செயல்படும் தொழிற்சாலைகளுக்கும் 25% மின் வெட்டு செயலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. செய்தித்தாள் நிறுவனங்களுக்கு 10% மின் வெட்டு விதிக்கப்பட்டுள்ளது. இன்றியமையாப் பணிகளுக்கும் வீடுகளில் 100 யூனிட்டுகளுக்கும் குறைவாக மின்சக்தி பயன்படுத்துவோர்க்கும் இந்த மின்சார வெட்டிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. மின்சக்தி பயன்படுத்தும் ஏனையோர்க்கும் வணிக நிறுவனங்களுக்கும் 25% மின் வெட்டு விதிக்கப்பட்டுள்ளது. வேளாண்மை விசையேற்றங்கள் அனைத்தும் தொகுதிகளாகச் சேர்க்கப்பட்டு, ஒவ்வொரு தொகுதிக்கும் பகல் நேரத்தில் 6 மணி நேரத்திற்கு மின்சக்தி வழங்கப்பட வேண்டுமென்று விதிக்கப்பட்டுள்ளது. ஆந்திரத்தில் ஸ்டிரைக் நடக்கிற காரணத்தால், 10,000 டன் நிலக்கரி சிங்கரேணியில் இருந்து வந்து சேருவதில் தடை ஏற்பட்டிருக்கிறது. இரயில் ஓட முடியவில்லை. இந்தச் சூழ்நிலையைச் சமாளிக்க உடனடியாக அரசு கப்பல் துறையிடம் தொடர்பு கொண்டு 3 கப்பல் நிலக்கரி வாங்க ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். இன்று கிடைக்கும் மின்சாரத்தை வைத்து எந்த அளவுக்குச் சரி செய்ய முடியுமோ அதை அதிகாரிகள் கவனத்தில் எடுத்துச் செய்து கொண்டிருக்கிறார்கள். 1-ம் தேதியிலிருந்து 4, 5 நாள் நெருக்கடி ஏற்படக் காரணம், நான் சொன்னது போல 49.5 சைக்கிளுக்குக் குறைவாக இருந்ததுதான். ஒவ்வொரு இயந்திரமும் எவ்வளவு வேகமாக இயங்க வேண்டுமென்று ஒரு கணக்கு இருக்கிறது. அதற்கு அதிகமாக மின்சாரம் வரும்பொழுது இயந்திரம் வெடித்து

விடுமென்று சொல்கிறார்கள். எங்கள் பகுதியில் கூட இரண்டு மூன்று நாள் இருட்டடிப்பு இருந்தது. இந்த இக்கட்டான சூழ்நிலையில் அரசு நன்றாகச் செய்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். ஆகவே, மேலும் சபையை ஒத்திவைத்து, விவாதம் செய்யத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

திரு. என். சுந்தரேசத் தேவர் : ஒரு கிளாரிபிகேஷன்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : எப்படி வருகிறது கிளாரிபிகேஷன்? இதிலே விவாதத்தைத் தொடங்கக்கூடாது.

திரு. என். சுந்தரேசத் தேவர் : ஒரு கிளாரிபிகேஷன். மின்சார வெட்டு . . .

மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் விவாதத்தை ஆரம்பிக்கிறார்கள்.

ஆளுநர் அவர்களின் உரைமீது 1973 பிப்ரவரி 5-ம் நாள் முதல் தொடங்கியுள்ள விவாதத்தில் இப்பொருள் குறித்துப் பேசுவதற்கு, உறுப்பினருக்கு நிறைய வாய்ப்பு உள்ளதாலும், அமைச்சர் அவர்கள் விளக்கியிருப்பதினாலும், மேலவை விதிகளின் 44-வது விதியின் கீழ் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு நான் அனுமதி மறுக்கிறேன்.

3. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சா. கணேசன் தமது திருத்தங்களை முன்மொழிவார். 4-50 பி.ப.

திரு. சா. கணேசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்காணும் திருத்தங்களை முன்மொழிகிறேன் :

“இறுதியில் கீழ்க்காணும் திருத்தங்களைச் சேர்த்துக் கொள்ளவும் :—

(1) மின்சாரம் வழங்குவதில் உற்பத்தி அளவு அல்லது வழங்கவல்ல அளவுக்கு மிக அதிகமாக ஏராளமான இடங்கட்கு வழங்க முனைவதால் உள்ள நஷ்டங்களையும் சிரமங்களையும் தீர்க்கத் தக்க வழிவகை கூறாமையையும்;

(2) மாணாக்கர்—காவல் துறை—பேருந்துப் போக்குவரத்துத் துறை ஆகியவர்களிடையில் ஏற்படும் சச்சரவுகள் தீர்த்த வழிவகை கூறாமையையும் ;

(3) பொறியியற் பட்டதாரிகள் உள்பட ஏராளமான பட்டதாரிகட்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்குரிய வழிவகை பற்றிக் கூறாமையையும் வருத்தத்துடன் குறிப்பிடுகிறது ".

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : திருத்தத்தை வழிமொழிவது யார் ?

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : ஆளுநர் உரை மீதான விவாதத்தில் இப்போது திரு. வெங்கடேஸ்வர தீக்ஷிதர் பேசுவார்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே. மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் ஆற்றிய உரை தமிழ் நாட்டு மக்களுக்கு பெரும்பான்மையான ஏமாற்றம் தான் தருகின்றது. எந்தத் துறையாக இருந்தாலும், விவசாயத்திலும் சரி, விலைவாசியைப் பொறுத்த வரையிலும் சரி, மாணவர் வர்க்கத்திலும் சரி, மற்றும் மாநிலத்திலே (லா அண்ட் ஆர்டர்) உயிருக்கும், உடைமைக்கும் பொறுப்புபற்றியும், இப்படி அநேக வர்க்கத்திலே எந்தவிதமான ஒரு பலனும் அடையாத வகையிலே இந்த உரை இருக்கிறதனாலே, தமிழ் நாட்டு மக்கள் நல்ல பலன் அளிக்கும் என்று இந்த உரையை எதிர்பார்த்திருந்தும் இது ஏமாற்றத்தைத்தான் கொடுத்திருக்கிறது. சுருக்கமாகச் சொல்லப் போனால், இது வரையிலே நாம் அவதிப்பட்டுக்கொண்டிருக்கின்ற இந்த மின்சார வெட்டைப்பற்றி ஆளுநர் அவர்கள் அறிக்கை விடுகின்றார்கள். அந்த அறிக்கையிலே குறைப்பட்டுச் சொல்கின்றார். ஆனால் அப்படி குறைகூறிச் சொல்லியிருக்கின்றாரே தவிர, அதை உடனடியாக நீக்குவதற்கான சூழ்நிலைபற்றி அறிக்கையிலும், இந்த உரையிலும் எந்தவிதமான அறிக்கையும் இல்லை. மின்சாரத்தைப் பொறுத்த வரையிலும், 40 சதவிகிதம் வரை இந்த வெட்டை உயர்த்தியிருக்கிறார்கள். இப்போது ஒரு வார காலமாக திடீர், திடீர் என்று விட்டுகள் அணைக்கப்பட்டு இருள் சூழ்ந்துகொண்டிருக்கிறது. காரணம்பற்றி, மாண்புமிகு

அமைச்சர் அவர்கள் வேகமாக எடுத்துச்சொன்னார்கள். இது மாதிரி ஏற்படும் என்ற அறிக்கையை முன்கூட்டியே ஜனங்களுக்குத் தெரிவித்திருக்க வேண்டும். இப்போது 5, 7 தேதிகளில் நடந்த கல்யாணங்களில் எல்லாம் திடீரென்று விளக்குகள் அணைந்துபோய் ஒரே இருளாகக் கிடக்கும் நிலைமைகள் எல்லாம் ஏற்பட்டன. ஜனங்கள் எவ்வளவு அவஸ்தைப்பட்டார்கள் தெரியுமா ? தாலி கட்டுகிற நேரத்தில்கூட விளக்குகள் அணைந்து போய், அது ஒரு அபசகுனம் மாதிரி ஆகி, மக்கள் துன்பப் பட்டார்கள். இந்த மின்சார வெட்டு எதனால் ஏற்பட்டது ? நிர்வாகத்தில் உள்ளவர்களால் இந்த மின்சாரம் சேதம் ஆகிறது என்று வர்த்தக சபைத் தலைவர் போன வாரம் அறிக்கை கொடுத்திருக்கிறார். 40 சதவிகிதம் வரை மின்சாரம் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது என்பதை தென்னிந்திய வர்த்தக சபைத் தலைவர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதைப் போக்குவதற்கான நடவடிக்கையை நாம் எடுக்க வேண்டும். இனிமேலாவது இந்தமாதிரியான சேதாரத்தைத் தடுக்க வேண்டும். போனது போகட்டும், இனிமேலாவது இப்படி மக்களுக்கு ஏற்படுகின்ற கஷ்டத்தைப் போக்கி, 40 சதவிகிதம் சேதாரம் போவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று வர்த்தக சபைத் தலைவர், ஒரு பொறுப்பானவர் சொல்லியிருக்கிறார்.

அடுத்தபடியாக, விலைவாசியைப் பற்றி. விலைவாசி ஏறுகிறது. போன கூட்டத்தில் இருந்த விலையைவிட இந்தக் கூட்டத்தின் போது எத்தனை சத விகிதம் ஏறியிருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். அதற்கு நிவாரணக் கடை வைத்திருக்கிறோம். எங்கேயிருக்கிறது என்றால், பெரிய நகரங்களில் ஓரளவுக்குத்தான் இருக்கிறது. அதில் பருப்பும், அரிசியும் தான் கொடுக்கிறார்கள். இப்போது ஏறியிருக்கிறது எண்ணெய்தான். அதுதான் ஜாஸ்தியாக விலை ஏறியிருக்கிறது. இந்த எண்ணெய் விலையை எப்படிக் குறைக்க முடியும் ? நகரத்தில் மட்டும் நிவாரணம் கொடுத்தால் போதுமா ? கிராமங்களிலுள்ள ஜனத்தொகை எவ்வளவு ? அவர்களுக்கு எப்படி இதைக் குறைத்து நிவாரணம் அளிக்க முடியும் ? எல்லோருக்கும் இதே போல், நகர மக்களைப் போல், கிராம மக்கள், ஏழை மக்களுக்கும் இந்த மாதிரியான நிவாரணம் அளிக்க வேண்டுமென்று நான் கருதுகிறேன்.

அடுத்தபடியாக (லா அண்ட் ஆர்டர்) உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு கொடுப்பது சர்க்கார். சர்க்கார்தான்

மக்களுடைய உயிரையும் உடைமையையும் பாதுகாப்பதற்குப் பொறுப்பு. இந்த நிலைமையில் யாரோ சிலர் கலவரம் செய்கிறார்கள் என்றால், இதில் பொதுமக்கள் தான் கஷ்டப்படுகிறார்கள். இதற்கு இப்போதுள்ள கட்சிகள் மட்டும் காரணமல்ல. இந்த மாதிரியான ஒரு சம்பவம் எங்களுடைய மாவட்டத்தில் புதுக்கோட்டை வட்டத்தில் தி.மு. கழகப் பொதுக் குழுக் கூட்டம் நடக்கிற அந்த 3 தினங்களில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த வட்டாரத்தில் சுற்றுப் பயணம் செய்யும் நோக்கிலே, மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் திரு. நெடுஞ்செழியன் அவர்கள் ஆலங்குடியில் போகும்போது, அங்கே அ.தி.மு.க., கம்யூனிஸ்டுக் கட்சி—இவர்களுடைய எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கு கருப்புக் கொடி காட்டிவிட்டார்கள். அங்கே ஒரு பொதுக் கூட்டத்தில் அமைச்சர் அவர்கள் புதுக் கட்சித் தலைவர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களைப் பற்றிப் பேசுகிறபோது, பொதுக் கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டிருக்கிறது. சலசலப்பு ஏற்பட்டவுடன். அமைச்சர் அவர்களைப் பேசாதே என்றார்கள். அமைச்சர் "தி.மு.க. தோழர்கள் எல்லாம் சும்மா இருங்கள், இந்த சலசலப்புக்குக் காரணமானவர்களைக் காவல் துறையினர் கவனித்துக் கொள்வார்கள்", என்று சொன்னார். இப்படி ஒரு தரம், இரண்டு தரம், மூன்று தரம் கடுமையாக இதைச் சொல்லும்போது, அங்கேயிருந்த காவல் துறையினர் ஒரே பாய்ச்சலாக, அங்கே கூடியிருந்த ஜனங்கள் மேலே பாய்ந்து விட்டார்கள். யாரோ கலகம் பண்ணுகிறார்கள், ஆனால் பழி ஒரு பக்கம் . . .

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் கலந்து கொண்ட கூட்டம்பற்றிச் சொன்னார்கள். நான் அன்று கறம்பக்குடி, ஆலங்குடி—இந்த 2 ஊர்களிலும் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்றேன். கறம்பக்குடியில் கருப்புக் கொடி காட்டினார்கள். அங்கே 100, 150 பேர் கருப்புக்கொடி காட்டினார்கள். அங்கே கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் யாரோ கூச்சல் போடுவதற்கு வந்தார்கள். காவல் துறையினர் ஒரு தோழரை கூட்டத்திலிருந்து அப்புறப்படுத்தினார்கள். கறம்பக்குடியில் அதற்குப் பிறகு கூட்டம் நடந்தது. அதை முடித்துக் கொண்டு, ஆலங்குடிக்கு வருகிறபோது, ஒரு குறிப்பிட்ட இடத்தை அவர்களுக்கு ஒதுக்கினார்கள் அங்கே கருப்புக் கொடி காட்டுவதைத் தடுக்கவில்லை. வேறு வழியாக வந்தபோது, அங்கே

கருப்புக்கொடி காட்டினார்கள். வேறு இடத்தில் ஏற்பட்டதாக உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். மேடையில் நான் பேச ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே கூச்சல் ஆரம்பித்துவிட்டது. பின் எப்படி நான் எம்.ஜி.ஆரைப் பற்றிப் பேச ஆரம்பித்திருப்பேன்? அப்படி நான் கூட்டத்தில் பேச ஆரம்பித்தால் கூட திரு. எம்.ஜி.ஆர். முக்கால் மணி நேரம் கழித்துத்தான் வருவார். முக்கால் மணி நேரத்துக்கு முன்னாலே என் பேச்சில் திரு. எம்.ஜி.ஆர். வரமாட்டார் இந்த உண்மையை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். அதற்குப் பிறகு கூட்டத்துக்கு வந்தவர்கள் கூச்சல் போட்டுக் கொண்டேயிருந்தார்கள்.

தலைவரவர்களே, பொதுக் கூட்டம் நடந்துகொண்டிருந்த இடத்திற்குப் பிறகு ஒரு டிச், அதற்குப் பிறகு ஒரு ரோடு, அதற்குப் பின்னாலே வந்தவர்கள் கூடிக்கொண்டு கூச்சல் போட்டுக் கொண்டிருந்தார்கள். நான் பேசிக்கொண்டேயிருந்தேன். இடையிலே, ரோடிலே போலீசார் இருந்தார்கள். ஆகவே கூட்டத்தில் ஒரு கூச்சலும் கிடையாது. கூட்டம் ஒரு பக்கம் இருக்கிறது. கூட்டத்திற்குப் பின்னாலே கால்வாய் ஓடுகிறது. கால்வாய்க்குப் பின்னாலே ரோடு இருக்கிறது. அதற்குப் பிறகுதான் மில்கள் எல்லாம் இருக்கின்றன. அந்தப் பகுதியில் கூச்சல் போட்டுக் கொண்டிருந்தவர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். அந்த சமயத்தில் அவர்களை அடித்து விரட்டவும் முடியாது, தடுக்கவும் முடியாது. அவர்கள் கூச்சல் போட்டுக்கொண்டேயிருந்தார்கள். நானும் பேசிக்கொண்டேயிருந்தேன். அவர்களை அடிப்பதற்கு கூட்டத்தில் இருப்பவர்கள் விரைந்து கட்டிக்கொண்டு கிளம்பினார்கள். அப்போது தான் அமைதியாக இருங்கள் என்று நான் சொன்னேன். காவல் துறையினர் அமைதியை ஏற்படுத்துவார் 5-00
களென்று சொன்னேன். இதைச் சொல்லாமல் நான் என்ன பி.ப.
செய்ய முடியும்? 'நீங்கள் போய் அடியுங்கள்' என்று சொல்லச் சொல்கிறீர்களா அல்லது 'நீங்கள் கிளம்பி, அவர்களையெல்லாம் ஒரு கை பார்த்து விட்டு வாருங்கள்' என்றோ அல்லது 'போலீசாரெல்லாம் அகன்றுகொள்ளுங்கள், 2 பேரும் ஒரு கை பார்த்துக் கொள்கிறோம்' என்று என்னைச் சொல்லச் சொல்கிறீர்களா? கூட்டத்தில் இருப்பவர்கள் ஆத்திரப்பட்டுக் கிளம்பியபோது, நீங்கள் அமைதியாக உட்காருங்கள், போலீசார் பார்த்துக்கொள்வார்களென்று சொன்னேன். கூச்சல் போட்டவர்கள் கற்களை

வீசினார்கள். வீசிய கற்கள் பாதையைத் தாண்டி, சாக்கடைக் குழியைத் தாண்டி, இடையிலிருந்த போலீசார் மீது விழுந்ததே தவிர ஒரு கல்கூட கூட்டத்திலே விழவில்லை. விழுந்த கல் அத்தனையும் போலீசார் மீது தான். அங்கேயே ஒரு ஹெட் கான்ஸ்டபிள் கல்லடிபட்டு விழுந்து விட்டார். அதற்குப் பிறகு தான் அங்கு போலீசார் தடியடிப் பிரயோகம் பண்ணி, ஓரளவுக்கு அவர்களைக் கலைத்து விட்டார்கள். அதற்குப் பிறகு நான் ¼ மணி நேரம் பேசிவிட்டு, கிளம்பி வந்து விட்டேன். அது வரையில் கண்ணீர்ப் புகை வீசுகின்ற தன்மையோ, வேறு எதுவுமோ ஏற்படவில்லை. நான் வந்ததற்குப் பிறகு கலவரம் ஏற்பட்டு, பிறகு கண்ணீர்ப் புகை வீசிய செய்தியை நான் கேள்விப்பட்டேன். இது நடந்த உண்மை. இதற்குப் பிறகு நடைபெற்றதிலே யார் யார் தவறு செய்தார்கள், யார் யார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை கோர்ட் பார்த்துக்கொள்ளட்டும். அங்கு நடைபெற்ற ஒன்றை மாத்திரம் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : நான் அமைச்சரவர்கள் உத்தரவு போட்டார்களென்று சொல்லவில்லை. அவர் பேசிக் கொண்டிருந்தபோது சலசலப்பு ஏற்பட்டது. அப்போது சலசலப்பு ஏற்பட்டதன் காரணமாக, காவல் துறையினர் கவனித்துக்கொள்வார்களென்று ஒரு முறை, இரண்டு முறை, மூன்று முறை சொன்னபோது, போலீசார் நடவடிக்கையில் வேக மாக இறங்கினார்கள். எந்தவிதமான எச்சரிக்கையுமில்லாமல் நடவடிக்கையில் இறங்கினார்கள். தடியடிப் பிரயோகத்தின்போதும், கண்ணீர்ப் புகை வீசியபோதும் எச்சரிக்கையில்லாமல் இறங்கினார்கள்.

* **மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன விளக்கத்தை மறுபடியும் மாற்றிச் சொல்லக்கூடாது. புரியாமல் பேசுகிறவர்கள் கருத்தைப் புரிந்துகொண்டு பேச வேண்டும். சொல்லப்பட்ட விளக்கப்படி, போலீசார் கூட்டத்தில் இருப்பதனால், மற்றவர்கள் எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காகச் சத்தம் போடுகிறார்கள் என்றும் போலீசாரே அமைதியைப் பாதுகாப்பார்களென்றும் அமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். போலீசார் மீது கல்லடி விழுந்த பிறகும் போலீசார் எச்சரிக்கை கொடுத்து அடிப்பார்களென்று ஒரு முறை கிடையாது. போலீசார் அடிபட்ட பிறகு, 'எங்களை அடித்து

விட்டார்கள், ஆகவே எச்சரிக்கிறோம்' என்று கூறுவது இயல்வதல்ல. உடனே அவர்கள் தற்காப்புக்காக அடிப்பார்கள். அந்த முறையை நாட்டுக்குத் தெரிவிக்க வேண்டுமேயொழிய, அந்த முறையை மாற்றித் தெரிவிக்கக் கூடாது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : போலீசார் எச்சரிக்கை செய்ய வேண்டும். எச்சரிக்கை செய்யக்கூடாதென்பதைப்பற்றிப் பேசுவது ஒருபுறமிருக்கட்டும். கூட்டத்திலே யார் கல் எறிந்தார்கள், அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் என்பதைப் பற்றி நாம் சந்தேகிக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறது. கூட்டத்தில் கல்லை எறிந்தவர்கள் இந்த வம்பை விலைக்கு வாங்க வேண்டும், எதிர்க் கட்சித் தலைவர்களையும், தொண்டர்களையும் கைது செய்ய வேண்டுமென்ற ஒரு காரியத்திற்காக கல் எறிந்ததாகத் தெரியவில்லை. அதைத்தான் சொல்ல வந்தேனே தவிர, வேறொன்றுமில்லை. மதிப்பிற்குரிய அமைச்சரவர்கள் காவல் துறையினருக்குக் கூறினார்கள் அல்லது தடியடிப் பிரயோகம் செய்யச் சொன்னார்களென்று சொல்லவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படியென்றால் கல் எறிந்தவர்கள் யாரென்று நீங்கள் சொல்கிறீர்கள்?

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : கல் எறிந்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள்தானென்று தெரிகிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆக, போலீசார் முன்னேற்றக் கழகத் தொண்டர்களைத்தான் அடித்தார்களென்று சொல்கிறீர்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : கூட்டத்திற்கு வந்தவர்கள் அவ்வளவு பேரும் அடிபட்டார்கள். அதற்குக் காரணமாக இருந்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் . . .

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர்களே, அதற்காகத்தான் அன்று இரண்டு விவகாரமும் இருந்ததென்று சொன்னேன். ஒன்று, கறம்பக்குடி விவகாரம், இன்னொன்று 8 மைலில் உள்ள ஆலங்குடி விவகாரம். கறம்பக்குடியில் கருப்புக் கொடியும் காட்டப்பட்டது, கூட்டமும் நடைபெற்றது. கருப்புக் கொடி காட்டியவர்கள் கூச்சல் போட்டார்கள்.

அவர்கள் அமைதியாக நடந்தார்கள். அங்கே அவர்களை அடிக்க வேண்டிய அவசியமோ, துன்புறுத்த வேண்டிய அவசியமோ ஏற்படவில்லை. 8-வது மைலிலுள்ள கறம்பக்குடியில் எந்தவிதமான நிகழ்ச்சியும் நடைபெறவில்லை. 2½ மணி நேரம் அங்கே கூட்டம் நடைபெற்றிருக்கிறது. அதற்குப் பிறகு ஆலங்குடியிலேதான் இந்த நிலைமைகள். 8 போலீசார் வந்து அவர்களில் ஒரு ஹெட் கான்ஸ்டபிள் அடிபட்டு, கீழே விழுந்துவிட்டார். அதற்குப் பிறகு அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள். நான் வந்ததற்குப் பிறகு அங்கு ஏற்பட்ட கலவரம் காரணமாக, அங்கு கண்ணீர்ப்புகை வீசியிருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தீக்ஷிதர் அவர்கள் ஒரு கூட்டத்திலே பேசி, அதிலே எதிர்க் கட்சிக்காரர்கள் கல்லை வீசி விட்டு போலீசார் ஒன்றுமே செய்யாமல், கூட்டம் முடிந்த பிறகு தீக்ஷிதர் பேசுகிற கூட்டத்தில், தீக்ஷிதர் கட்சியைச் சேர்ந்தவர்கள் தான் கல் எறிந்தார்கள், போலீசார் அதில் தலையிடவில்லையென்று சொல்லிவிடலாமா?

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: நான் நிச்சயமாகச் சொல்கிறேன். இது எதிர்க்கட்சித் தலைவர்களையும், தொண்டர்களையும் கைது செய்ய வேண்டுமென்பதற்காக ஒரு காரணம் காட்ட வேண்டி, இந்த விதமாக எதிர்க்கட்சித் தோழர்கள் கல் விட்டெறிந்து, போலீசார் மேல் படும்படியாகச் செய்திருக்கிறார்கள். அப்படிச் செய்தி வந்ததையொட்டித்தான் இங்கே விளக்கம் தெரிவித்தேனெயொழிய வேறொன்றுமில்லை. மந்திரிகள் ஆலங்குடியில் பேசும்போதுதான் இத்தனையும் நடந்தது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: எனக்கு ஒரு சின்ன விளக்கம் தேவை . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போது ஆலங்குடியில் நடைபெற்ற கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகக்காரர்களே வந்து கல் எறிந்தார்களென்பது தங்களுடைய வாதம். அதைத் தாங்கள் நிரூபிக்கத் தயாராக இருக்கிறீர்களா?

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தகவல் வந்ததைத்தான் சொன்னேன். நான் இருப்பது ஸ்ரீரங்கம் . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உங்களுக்கு இப்படி ஒரு தகவல் வந்தது. எனக்கு ஸ்ரீரங்கத்திலிருந்து தீக்ஷிதர் ஆள் அனுப்பினார்களென்ற தகவல் வந்தது. (மேசை தட்டல்.)

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: திரு பராங்குசம் அவர்கள் தட்டுகின்ற சத்தம் ஆலங்குடியிலேயே கேட்கும்போலிருக்கிறது.

மாற்றுத் தலைவர் (திரு. என். சுந்தரேசத் தேவர்): மேலே பேசுங்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: அதற்குப் பிறகு, இந்த நிகழ்ச்சியையொட்டி, எதிர்க் கட்சித் தலைவர்களையும், தொண்டர்களையும் விரட்டி, விரட்டிப் பிடித்து, சுமார் 40 பேருக்கு மேலே கைது செய்யப்பட்டுள்ளார்கள். கைது செய்யப்படாமலிருக்கும் எதிர்க் கட்சிகளான, ஏ.டி.எம்.கே., ஆளும் காங்கிரஸ், ஸ்தாபன காங்கிரஸ், கம்யூனிஸ்டு கட்சி, ஆகியவற்றின் தலைவர்களையும் தொண்டர்களையும் தேடிக்கொண்டு, இரவு 12 மணிக்கு மேலே சுமார் 500 பேர்கள் கொண்ட கூட்டம் சென்றது. போலீசையும் வைத்துக் கொண்டு, தேடிக்கொண்டு சென்றது. இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். திருவரங்குளம் பேரூராட்சித் தலைவர் அதற்குத் தலைமை தாங்க, அவர்கள் ஆலங்குடி பேரூராட்சித் தலைவர் வீட்டிற்குப் போய், அவரில்லாத சமயத்தில் இரவு 12 மணிக்கு மேலே அவருடைய மனைவியை மிரட்டி, "உன் கணவன் எங்கே, கணவனைக் காண்பிக்காவிட்டால் நாங்கள் செய்கிற வேலையே வேறு", என்று தகாத வார்த்தைகளைச் சொல்லியிருக்கிறார்கள். நான் இது சம்பந்தமாக அங்கு போய் அந்த அம்மாளை விசாரித்தேன். அவர்கள் நேருக்கு நேர் தெரிந்தவர்கள். கட்சி தான் வேறு. மற்ற விதத்தில் ஒன்று தான். இருந்தும் இரவு வேளையிலே போய், அந்த அம்மாளை மிரட்டி, 'உன் கணவனைக் கைது செய்ய விடாவிட்டால் . . .' என்று மிரட்டியிருக்கிறார்கள். போலீஸ் அதிகாரிகள் பக்கத்திலிருக்கும் போது இந்த மிரட்டல் நடந்திருக்கிறது. நாட்டிலே 'லா அண்ட் ஆர்டர்' அப்படியிருக்கிறது. பொறுப்புணர்ச்சியோடு ஜனநாயகம் வளருமென்று எப்படி நம்ப முடியும்? அதோடு விடாமல், அடுத்த படியாக ஸ்தாபன காங்கிரஸைச் சேர்ந்த திரு. வேம்பு ஐயர் என்ற தொண்டர் வீட்டிலே ஒரு மணிக்கு மேல் கூரையைப் பிரித்து கீழே இறங்கி அவரை எவ்வளவு தேடி அடிக்க வேண்டுமோ,

எவ்வளவு குத்து குத்த வேண்டுமோ அவ்வளவும் செய்து உடம்பெல்லாம் வீங்குமளவுக்கு அடித்திருக்கிறார்கள். வெளியே கும்பல் கூடுகிற தருவாயில் அவர்கள் கலைந்திருக்கிறார்கள். இத்தனைக்கும் அங்கேயிருக்கிற போலீஸ்காரர்கள் இதைத் தடுப்பதற்காக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அடுத்தபடியாக, ஆளும் காங்கிரசைச் சேர்ந்த ஒரு முஸ்லீம் சகோதரரையும் அடித்திருக்கிறார்கள். அடுத்த நாளைக்கு இந்த விவகாரமெல்லாம் நடந்து முடிந்தவுடன், இவ்வளவு அட்டூழியங்கள் ஆலங்குடியில் நடந்ததே, இதை விசாரிக்க வேண்டுமென்று எல்லா எதிர்க் கட்சித் தலைவர்களும், தோழர்களும் அங்கே போய் விசாரித்திருக்கிறார்கள். பிறகு இதற்குக் கண்டனம் தெரிவிக்கிற முறையில், 9—1—1973-ம் தேதியன்று கண்டன ஊர்வலம், கூட்டம், ஹர்த்தால் இத்தனையும் நடத்த அவர்கள் யோசனை செய்து, அவைகளை நடத்த அனுமதி கோரியிருந்தார்கள். கூட்டத்திற்கும் அனுமதி கொடுக்கப்படவில்லை; ஊர்வலத்திற்கும் அனுமதி கொடுக்கவில்லை. ஆனால் வியாபாரிகள் சமுதாயமும், பொது ஜனங்களும் சேர்ந்து அந்தக் கடையடைப்பைச் சரியான முறையில் நடத்தினார்கள். இதன் காரணமாக ஆத்திரங்கொண்ட முன்னேற்றக் கழகத் தோழர்கள் இரவு 8 மணிக்கு மேலே, அங்கு சப்-கலெக்டர், டெபுடி-சூப்பரின்டெண்டு. . .

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இது சம்பந்தமாக இரண்டு தரப்பான வழக்குகளும் அங்கே தொடுக்கப்பட்டு, வழக்கு மன்றங்களில் இருக்கின்றன. அரசாங்கம் எடுக்கத் தவறியவைகள் அல்லது அரசாங்கத்தின் மீது சாட்ட வேண்டிய குற்றச்சாட்டுக்களை, வேண்டுமென்றால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுவதில் தவறில்லை. ஆனால் வழக்குக்குள்ளே போய் இதைத்தான் இன்னின்னார் செய்தார்கள் என்று சொல்வது
5-10 வழக்கைப் பாதிக்கக்கூடிய வகையில் அமையும். அதை விட்டு
பி.ப. விட்டு அரசாங்கம் எடுக்கத் தவறியதைச் சொல்லலாம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வா தீக்ஷிதர் : ஒன்பதாம் தேதி அன்றைக்கு பரிபூர்ண ஹர்த்தால் நடத்தியதனுடைய ஆத்திரம் காரணமாக முன்னேற்றக் கழகத் தோழர்கள் சுமார் 8 மணிக்கு மேலே சுமார் நூற்றுக்கணக்கான தோழர்கள், ஸப் கலெக்டரும் சூப்பிரண்டெண்டும் வெளியேறிய பிறகு, அங்கு இருக்கும் கடைகளை சூறையாடியும் மற்றுமுள்ள ஓட்டல்களை சூறையாடி வெறிகொண்டு நடந்துகொண்டிருக்கும் போது, . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : வழக்கு சம்பந்தமாக பேசக் கூடாது. சப்-ஜுடிஸ் ஆகிவிடும்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : இவ்வளவு நடந்தும் கவர்ன்மெண்ட் சரியான முறையிலே மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவில்லை என்பதைத்தான் சொல்லுகிறேன். தமிழ் நாட்டிலே மக்களுடைய உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பு பற்றி கவர்னர் அவர்கள் சரியாகச் சொல்ல வில்லையே என்று சொல்லுகிறேன். இவ்வளவு உரை நடத்தி, பக்கம் பக்கமாக அச்சிட்டு என்ன பிரயோசனம்? நாட்டு மக்களுடைய உயிருக்கும் பாதுகாப்பில்லை, உடைமைக்கும் பாதுகாப்பில்லை. இது எல்லாம் நடந்திருக்கிறதே. இதெல்லாம் என்ன? கேஸ் போட்டால் உங்களுக்கு நான்கு சாட்சிகள் கிடைக்கும், எங்களுக்கு ஒரு சாட்சி கிடைக்கும். ஆக 3 சாட்சிகள் அதிகமாக இருக்கும். அதைப் பொறுத்து தீர்ப்புக் கூறிவிடுவார்கள். அதுபற்றிக் கேள்வியில்லை. இப்போது உயிருக்கும் உடைமைக்கும் சரியான முறையிலே பாதுகாப்பு இல்லை. அது பற்றி கவர்னர் உரையிலும் சரியான முறையிலே சொல்லவில்லையே என்பதைத் தெரிவிக்கலாமே என்றுதான் நான் வருத்தம் தெரிவிப்பதற்கு இங்கே சொல்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயத்தைப் பொறுத்த வரைக்கும் உரங்களைப்பற்றி நேற்றெல்லாம் விரிவான முறையிலே விவாதித் திருக்கிறோம். இன்னும் அதே நிலைமையிலேதான் இருக்கின்றது. நாங்களும் விவசாயிகளுக்கு உரம் கிடைக்கவில்லை என்று சொல் கிறோம். கவர்னர் உரையிலே உரங்கள் கிடைக்கவில்லை என்று அவர் பதில் சொல்லிவிட்டார். நாமும் கிடைக்கவில்லை என்கிறோம், அவரும் கிடைக்கவில்லையென்று சொல்லிவிட்டார்கள். அவரும் நான் சொல்வதையேதான் சொல்லியிருக்கிறார். அவரே, இல்லை, இல்லை என்று சொல்லியிருக்கிறார். வேறு ஏதுவும் இருக்கிறதா என்று தெரியவில்லை.

இதே லால்குடி வட்டாரத்திலே 20 சத விகிதம் கொள்முதல் போட்டு வியாபாரிகள் வாங்குகிறார்கள். இதுபற்றி 'அன்னவுன்ஸ்' பண்ணவுடனே இப்போதிருக்கிற மின்சார வெட்டினாலே ஒரு பாதிப்பு. இப்படி ஆளுக்கு ஆள் பாதித்து விடுகிறது என்றால், தஞ்சாவூரிலே, திருச்சிராப்பள்ளியிலே இருக்கிற விவசாயிகள் தலையிலே வந்து சேர்ந்துவிடுகிறது. ஏற்கெனவே நெல்லுக்கு

கிராக்கி சரியான முறையிலே இல்லாது, இந்த முதல் போகத்திலேயே மழையினாலே பயிர் பாதிக்கப்பட்டு, முளைத்து, அதை வாங்குவோர் அற்று கருப்பு நெல்லாகப் போய், கைக் கடன் வாங்கி, அந்தக் கடனையும் அடைக்க முடியாத நிலவரத்திலே விவசாயிகள் இருக்கிறார்கள். இதைப் போட்டவுடனே நெல்லுக்கு விலை சரிந்து குறைந்தது. அரிசி விலை ஏறி விட்டது. இன்றைக்குப் பத்திரிகையிலே பார்த்தேன். நெல் விலை சரிந்தது, அரிசி விலை ஏறிப்போயிற்று என்றால், அது யாருடைய குற்றம் என்று தெரியவில்லை. ஆகையினால் இப்போது நாட்டில் இருக்கின்ற கஷ்டத்தில் எல்லாத் துறைகளிலும் அவதிப்படுவதற்குக் காரணம் என்ன? இதற்கு என்ன விதமான நிவர்த்தி செய்வது? (சிரிப்பு).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நெல் விலை குறைந்துவிட்டது. அரிசி விலை ஏறிவிட்டது என்று சொன்னார்கள். நெல் என்ன விலைக்கு விற்கிறது, என்ன விலைக்கு வாங்கினார்கள், அரிசி என்ன விலைக்கு விற்கிறது என்ற விவரத்தைச் சொன்னால் அதைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம். ஏதோ விலை குறைந்துவிட்டது. அரிசி விலை ஏறிவிட்டது என்று சொல்வது சரியான விவரமாக இருக்க முடியாது என்றுதான் சொல்லவந்தேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : அதாவது ஒரு படி அரிசி 8 பைசா கூடியிருக்கிறது. லால்குடியைச் சேர்ந்த அமைச்சரவர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். திரு. தர்மலிங்கம் பேசியிருக்கிறார் லால்குடியிலே இன்றைக்கு தினமணி பேப்பரிலே போடப்பட்டிருக்கிறது. 'ஜாஸ்தி இல்லை அரிசி விலை 10 பைசாதான் ஏறியிருக்கிறது நெல் விலை ஏறவில்லை. ஆனால் நெல் விலை குறைந்து வருகிறது. இதற்குக் காரணம் என்ன ?'

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கொள்முதல் விலை 52 ரூபாய் என்று அரசாங்கம் நிர்ணயித்து, 52 ரூபாய்க்குக் கொடுக்கிறார்கள். வெளி மார்க்கெட்டிலே என்ன விலைக்கு விற்கிறதென்று சொல்லுங்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : எங்கள் மார்க்கெட்டிலே 50 படி கொண்டுள்ள மூட்டை விலை 36 ரூபாய். 50 பட்டணம் படி கொண்டது. ஓபன் மார்க்கெட்டிலே அந்த விலையிலே திருச்சியிலே அதை வாங்குவதற்கு ஆள் கிடையாது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : வெளியூரிலே இருக்கிறது என்று சொன்னார். எங்கு என்று சொன்னால் அரசாங்கம் எவ்வளவு வேண்டுமானாலும் வாங்கத் தயாராக இருக்கிறது. நெல் வாங்குவதற்கு ஊரிலே ஆள் இல்லையென்று, சொன்னால், நாளைக் காலையிலே அதிகாரியை அங்கே அனுப்பி நெல் முழுவதையும் வாங்கச் செய்யலாம். ஆனால் போன வாரம் அங்கே என்ன விலை இருந்தது, லெவி முறை போட்டவுடன் என்ன விலைக்குக் குறைந்தது, லெவி போட்டது எதற்காக என்பவைகளை தெரிந்து கொள்ளவேண்டும். அரசாங்கக் கொள்முதல் மட்டுமல்ல. வெளிச் சந்தையிலே அரிசி விலை ஏறிவிடக்கூடாது, நெல் விலை ஏறிவிடக்கூடாது என்பதற்காக லெவி முறை போட்டு அதை 'கண்ட்ரோல்' செய்கிறோம். தஞ்சை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், வெளிச்சந்தையில் திடீரென்று சில நேரங்களில் அரிசி விலை ஏறிவிடுகிறது. குறுவை தீர்ந்துவிட்ட பிறகு, இடைவேளையில் விலை ஏறிவிடுகிறது. உடனே அங்கே கூச்சல் வருகிறது. நான் உற்பத்தி செய்தேன், குறுவை நெல்லுக்கு இந்த விலைக்கு அரிசி விற்கிறதே என்று கேட்கிறார்கள். அதற்கான லெவியைப் போட்டால், அங்கிருந்து வெளியே வருவது நிற்கிறது. தஞ்சை மாவட்டத்திலே இருக்கிறவர்களுக்கு விலை குறைச்சலாகக் கிடைக்கிறதே என்று தஞ்சையில் ஒரு பிரச்சினை. லெவி போடுவது விலையை ஓரளவுக்குக் குறைப்பதற்காகத்தான் பயன்படுகிறதே தவிர, விலை ஏறுவதற்குப் பயன்படுவதில்லை. இப்படி ஒரு புரியாத தத்துவத்தைச் சொல்லியிருக்கிறீர்களே என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அதனால்தான் கேட்டேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : இதிலே தத்துவம் ஏதும் இல்லை.

மாற்றுத் தலைவர் : உட்காருங்கள். மந்திரி ஏதோ சொல்ல விரும்புகிறார்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பத்திரிகையில் வந்திருப்பதை, உங்கள் அனுமதியோடு சொல்கிறேன். சில தினங்களுக்கு முன்னர் "விவசாய அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் முன்னிலையில் தி.மு.க. எம்.எல்.ஏ., எம்.கே.டி. நடராஜன் நெல்விலை சரிந்துள்ளது குறித்து கவலை தெரிவித்தார்" என்றுதான் இருக்கிறதே தவிர நான் நெல்விலை சரிந்துவிட்டது என்றும், அரிசி விலை உயர்ந்துவிட்டது என்றும் பேசவில்லை.

* திரு. எஸ். டி. ஆதித்தன் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையிலே அநேக விஷயங்களைப்பற்றிச் சொல்லிக் கொண்டு வருகின்றபோது ரசாயன உரம் தடைப்பட்டிருக்கிற விஷயமும் அதை வினியோகப்படுத்துகின்ற விஷயத்தில் உண்டாகின்ற கஷ்டங்களும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன.

ரசாயன உரமானது நம்முடைய மாநிலத்திற்கு வேண்டிய கிட்டத்தட்ட இரண்டேமுக்கால் லட்சம் டன்னிலே போன வருஷம் இரண்டே கால் லட்சம் டன் வந்திருக்கிறது. ஆனால் இந்த வருஷம் ஒன்றரை லட்சம் டன் வரையில்தான் வந்திருக்கிறதென்றும் அதற்கு மேலே வரவில்லை என்ற கஷ்டமும் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் முழுமையான ஒரு பரிகாரம் ஏற்பட வேண்டுமானால், ரசாயன உரத்தினுடைய உற்பத்தி அதிகரித்தாலொழிய, இதைச் சரிவரக் கொடுப்பது, ஈடுகட்டுவது மிகவும் கஷ்டமான ஒரு காரியமாக இருக்கும். உரத்தினுடைய உற்பத்தியை நம்முடைய மாநிலத்திலே இன்னும் பல பங்காக, இதை விட எத்தனையோ பங்காக அதிகப்படுத்தவேண்டியிருக்கிறது, ரசாயன உரத்தினுடைய தேவை நாளுக்கு நாள் அதிகப்பட்டுக்கொண்டே வருகிறது. உபயோகிக்கின்றவர்கள் ரசாயன உரத்தை அதிகமாக உபயோகிக்கின்றார்கள். ரசாயன உரத்திலே பலவிதமான உரங்கள் இருந்தபோதிலும்கூட பாஸ்பேட், சல்பேட் என்று பல விதமான உரங்கள் இருந்தபோதிலும்கூட, பல விதமான மிக்ஸ்சர்களும் இருந்த போதிலும்கூட அதிகமாகத் தேவைப்படுவது அதிகமாக ஜனங்கள் விரும்புவது யூரியா உரம். ஆகவே பலவிதமான கலப்பு உரங்கள் இருந்தபோதிலும்கூட, அதையெல்லாம் வேண்டாமென்று பொதுவாக விவசாயப் பெருங்குடி மக்கள் கூறிவிட்டு யூரியா இருக்கிறதா? யூரியா இருக்கிறதா? என்ற கேள்வியைக் கேட்கிறார்கள். ஆகவேதான் குறிப்பாக யூரியாவின் விலை பெருகி, பல மடங்கு ஆகிவிடுகிறது. சுமார் 40, 50 ரூபாய்க்குக் கிடைத்த ஒரு யூரியா மூட்டையானது இன்று 80, 85 ரூபாய் வரையில் அதிகமாக விற்பதற்கு இதுவே காரணம். யூரியாவில் இரண்டு பங்காக நைட்ரேட் இருப்பதுதான் காரணம். விவசாயப் பெருங்குடி மக்கள் இதைத் தேடித் தேடி, கேட்டுக் கேட்டு வாங்குகிறார்கள்.

இது ஒரு புறம் இருக்க இன்று நம்முடைய பிரச்சினை என்னவென்றால் ஏற்கெனவே இரண்டேமுக்கால் லட்சத்திற்கு இரண்டே கால் லட்சம் டன், ஒன்றரை லட்சம் டன் என்று குறைவாக

வந்திருக்கிறது என்ற குறை ஒரு புறம் இருக்க, கையிலே இருக்கப்பட்ட ரசாயன யூரியா உரமானது நல்ல விதமாக வினியோகப்படுத்தப்படுகிறதா என்றால், அதிலேதான் நம்முடைய கவலை, அரசு கையிலே உரம் இருக்கிறது. இது சரியாக கிராமத்திலுள்ள விவசாயப் பெருங்குடி மக்களிடத்திலே போய்ச் சேர வேண்டும். இந்த இரண்டுக்கும் இடையிலே இதை வினியோகப்படுத்தி இது கிராம மக்களிடத்திலே போய்ச் சேரச் செய்ய வேண்டுமென்பதற்காகச் சில முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. இரண்டு மூன்று விதமான முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. அவைகளில் ஒன்றுதான் இந்த மார்க்கெட்டிங் சொஸைட்டி.

மார்க்கெட்டிங் சொஸைட்டி சம்பந்தப்பட்ட மட்டிலே, அது எந்தவிதமாக நடைபெற்று வருகிறது என்பதைப்பற்றிச் சொல்லிக் கொண்டு வருகிறபோது, பெரியவர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு ஒன்றைச் சொன்னார்கள். அவர்களுடைய ஊரிலே குறிப்பிட்ட ஒன்றைச் சொல்லி, “நான் மார்க்கெட்டிங் சொஸைடியிலேயிருந்து கிராமத்தினுடைய சொஸைட்டி செக்கரட்டரி கையிலே கொடுத்துவிட்டேன். அதற்குப் பின்னாலே அவர் களவு செய்துவிட்டாரே, என்ன செய்வது?” என்று கேட்கிறார்கள். இது ஒரு புறம் இருக்க அவர்களுக்கு இன்னொன்றையும்கூடச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இதே மாதிரிதான் சர்க்கரை. “சீனியினை நாம் வினியோகப்படுத்திக்கொண்டு வருகிறோம். அந்த சீனியை வினியோகப்படுத்துகின்ற இடத்திலே கியூ வரிசையிலே நின்று 1½ கிலோ வீதமாக பெரும்பான்மையானவர்கள் வாங்கிக் கொண்டு வருகிறார்கள். அந்த இடத்திலேயே நின்றுகொண்டு அந்த இடத்திலேயே காபி ஓட்டல்காரர்களிடம் கருப்புச் சந்தையிலே விற்றுக்கொண்டு வருகிறார்களே. இது திறந்த வெளியிலே நடந்துகொண்டிருக்கிறதே” என்று கேட்கிறார்கள். இதற்கு ஒரே ஒரு பதில் கேள்வி நான் கேட்க விரும்புவது என்னவென்றால், அந்த இடத்திலே ஒரு போலீஸ்காரரைப் போடுவதா அல்லது அந்த இடத்திலே வேறு ஏதாவது காவல் போடுவதா? சர்க்காரே அந்த இடத்திலே காவல் போட்டு, அந்த இடத்தைப் பராமரித்துக்கொள்ள வேண்டுமென்றால், மற்றவர்கள் எதற்கு இருக்கிறார்கள்? இடையிலே அவர்கள் எதற்காக இருக்கிறார்கள்? இடையிலே உள்ளவர்கள் கமிஷன் வாங்குகிறார்கள். இடையிலே உள்ளவர்கள்

ஏன் லாபம் சம்பாதிக்கிறார்கள்? லாபம் பெறுகிறார்களா இல்லையா? மார்க்கெட்டிங் சொஸைட்டிக்கு கமிஷன் கொடுக்கப்படுகிறதா இல்லையா? இப்படிக் கமிஷனும் வாங்கிக்கொண்டு, இந்தப் பொறுப்பைத் தட்டிக்கழிப்பது என்பதற்கு அவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? இதுதான் இன்று கேட்கவேண்டிய கேள்வி. இது தான் இன்று கேட்கக்கூடிய கேள்வி. அவர்கள், "சட்டப்படி என்னை என்ன செய்ய முடியும். என்னை மிரட்டுகிறீர்களா?" என்று கேட்டார்கள். சட்டப்படி ஒன்றும் செய்ய முடியாது என்று நான் நினைக்கிறேன். சட்டப்படி அவர்களைத் தண்டிக்க முடியாது, வாஸ்தவம் தான்.

பி.ப. 5–20 ஆனால் ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது. 2 ஆயிரம் வருஷங்களுக்கு முன்னாலே சொல்லப்பட்ட ஒரு விஷயம், 2 ஆயிரம் வருஷங்களுக்கு முன்னாலே அது வகுத்துக் கொடுக்கப் பட்டிருக்கிறது. எந்தக் காரியத்தை எடுத்துக் கொண்டாலும், இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து அதனை அவன் கண் விடல் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எடுத்துக்கொள்ளப் பட்ட ஒரு காரியத்தினை வகுத்து, வழிமுறை செய்து, அந்தக் காரியம் என்னவென்று முதலில் வகுத்துக்கொள்ள வேண்டும். அதை எவனிடம் செய்ய ஒப்படைக்கிறோமோ அவனுக்கு அதிகாரமும், கருவிகளும் அளிக்கப்படவேண்டும். அவனிடம் அதிகாரமும், கருவிகளும் இருக்குமானால், அவனுக்குக் கண்டிராக்டர் என்று பெயர். அவனிடம் அவைகள் இல்லையென்றால், நாம் அவனுக்கு அதிகாரமும் கருவிகளும் கொடுக்க வேண்டும். பின்னர், அவன் முடிப்பதற்கு மனது வேண்டும், திராணி வேண்டும். மனதும், திராணியும் இருக்குமானால், அதை அவனிடம் ஒப்படைக்க வேண்டும்.

இப்போதைய கேள்வி, மார்க்கெட்டிங் சொசைடிகளுக்குப் போதுமானபடி பணம் கொடுக்கப்பட்டிருக்கிறதா, அவர்களுக்குப் போதுமான வசதி இருக்கிறதா? போதுமான அதிகாரம் இருக்கிறதா? அவர்களுக்கு விற்கிறதற்கு அதிகாரம் இருக்கிறதா? விற்றது எந்த இடத்தில் போய்ச் சேரவேண்டுமோ, அந்தக் குறிக்கோள் வரையறுத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறதா? அவர்களுக்கு லாபம் மாத்திரமல்ல, கமிஷன் மாத்திரமல்ல, அவர்களுக்கு உரத்தை விநியோகிக்க வேண்டிய கடமை என்று குறிக்கோள் வகுத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் சொந்த உபயோகத்திற்காக

அல்ல. கிராம விவசாயிகளிடம் போய்ச் சேர வேண்டுமென்ற குறிக்கோள் வகுத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு அதிகாரம் இருக்கிறதாவென்றால், அதிகாரம் இருக்கிறது. "இடைத் தட்டிலே யாரோ பிடுங்கிக்கொண்டு போய்விட்டார்கள், போலீசார் வந்து தடுக்கவில்லையே", என்று சொல்வது தகாது, போதாது. ஆனால் இந்தப் பக்கத்தில் இன்னொரு தலைவர் சொன்னார். "நான் கடைப்பிடிக்கிற வழக்கம் உரம் கிராமத்தில் போய்ச் சேருகிறதா வென்று பார்த்துக்கொள்கிறேன்" என்று சொன்னார். ஆகவே இதிலுள்ள முக்கியமான விஷயம், கிராமத்து வரையில் போய்ச் சேருகிறதா, அப்படிப் பார்த்துக் கொள்ள வேண்டுமென்ற கடமை உணர்ச்சி இருக்கிறதா என்பதுதான். அந்தக் கடமை உணர்வு ஏற்கெனவேயுள்ள மார்க்கெட்டிங் சொசைடியில் இருக்குமானால், அந்த மார்கெடிங் சொசைடிகள் விநியோகிக்கலாம். அவ்விதமான உணர்ச்சி இல்லையென்றால், அந்தக் காரியத்தை அவர்களிடம் ஒப்படைக்காது, பிடுங்கிக்கொண்டு வேறு யார் கடமை உணர்ச்சியோடு செய்கிறார்களோ அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். அப்போது தான் சரியாக நடக்குமென்று சொல்லிக்கொள்கிறேன்.

* **திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு:** தலைவரவர்களே, அன்பர் அவர்கள் உர விநியோகம் சம்பந்தப்பட்ட மட்டில், மார்க்கெட்டிங் சொசைடிக்குள்ள கடமை என்ன என்பதைப்பற்றி அவர்களே முற்றிலும் தெரிந்துகொள்ளாமல், தெரிந்துகொண்ட மாதிரியாகப் பேசுகிறார்கள் என்பது என்னுடைய கருத்து. ஒவ்வொரு ஜில்லாவிலும் ஸ்டாக்கிஸ்டு என்று இருக்கிறார்கள். கூட்டுறவுத் துறையிலும் ஸ்டாக்கிஸ்டுகள் உண்டு. கூட்டுறவுத் துறையில் ஸ்டாக்கிஸ்டுகள் முன்னால் இருந்தார்கள். அப்போது நம்முடைய மார்க்கெட்டிங் பெடரேஷன் இருந்தது. பின்னால் அதற்கான ஏற்பாடுகள் வேறு வகைகளிலே கூட்டுறவுத் துறையில் செய்யப் பட்டிருக்கின்றன. மார்க்கெட்டிங் சொசைடி தாலுகா அல்லது வட்டார அளவிலே அவர்கள் அனுப்பக்கூடிய மூட்டைகளை ஹோல் சேலாக இருந்து ரயிலடியிலோ அல்லது லாரியிலோ கொண்டு வந்து, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், அங்கிருக்கக் கூடிய விவசாய விஸ்தரிப்பு அதிகாரி இவர்களெல்லாம் அந்த வட்டாரத்திலே எந்தெந்த ஊர்களில் எவ்வளவு மூட்டை தேவைப்படும் என்று எழுதி அனுப்புகிறார்களோ அந்தச் சங்கங்களுக்குத் தூக்கி அனுப்புவது தவிர, விநியோகிக்கிற அதிகாரம் மார்கெடிங்

சொசைடிக்குக் கிடையாது. நேற்றைய தினம் விவரமாகச் சொல்லியிருக்கிறேன். அனுப்பக்கூடிய மூட்டைகள் அங்கு போய்ச் சேர்ந்ததைா என்ற பொறுப்பை வகிக்கிறார்களா என்று கேட்டார்கள். அம்மாதிரி அன்று இரவு லாரியில் போன மூட்டை அங்கிருக்கிறதா என்று மறு நாள் பார்க்க, அங்கில்லை என்று தெரிந்தது. அங்கே விசாரிகளுக்குக் கொடுத்ததாக இரசீதுகள் போடப்பட்டிருக்கின்றன. அதை மறுநாள் காலையிலேயே கண்டு பிடித்து மறு நாளே நடவடிக்கை எடுத்து பாங்குக்கெல்லாம் தகவல் எழுதி, டிபார்ட்மெண்டுக்கும் எழுதப்பட்டிருக்கிறது. மார்க்கெடிங் சொசைடி அந்தக் கடமையிலிருந்து வழுவவில்லை. வினியோகப் பொறுப்பு மார்க்கெடிங் சொசைடிக்கு இல்லை. ஜீனி வினியோகம் அந்த மார்க்கெடிங் சொசைடிக்கு இல்லை. மார்க்கெடிங் சொசைடி ஜீனிக்கு ஹோல்சேலர் இல்லை என்பதை நம்முடைய அன்பர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். டி. ஆதித்தன் : நான் ஏற்கெனவே சொன்னபடி கடமை உணர்ச்சி அவர்களுக்குத் தேவை. "சட்டப்படி என்ன இருக்கிறதோ அதை மாத்திரம் பார்த்துக்கொண்டிருப்பது தான் தங்களுடைய கடமை. எழுத்தில் என்ன இருக்கிறதோ அதன்படி மட்டும் நடந்து கொள்வது", என்று சொல்வது போதாது. அப்படி நடக்கிறவர்களிடத்தில் இந்த வினியோகத்தைக் கொடுக்க வேண்டாம். சட்டப்படி உள்ள கடமைக்கு அப்பாலே போக மாட்டேன் என்று நினைக்கிறவர்கள் சட்டத்தில் உள்ள எழுத்தை மாத்திரம் பார்த்துக் கொண்டு, 'என்னை பிடிக்கிறீர்களா?' என்று கேட்கிறவர்களுக்கு அந்த மனப்பான்மை இருக்கிற வரையில் அப்படிப்பட்ட சொசைடிகளை அவர்களிடம் கொடுக்க வேண்டாம் என்று சொல்கிறேன். இது நான் எடுத்திருக்கிற வாதம்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : என்ன செய்ய முடியும் என்று கேட்கவில்லை. நேற்றைய நடவடிக்கைகளை வாசித்துப் பார்த்தால் தெரியும்.

திரு. எஸ். டி. ஆதித்தன் : நான் எதிர்காலத்தில் நடக்க வேண்டியதைச் சொல்கிறேன். இந்தப் பக்கத்தில் உள்ள மனப்பான்மையைச் சொல்கிறேன், மனப்பான்மையைச் சொல்ல

வருகிறேன் நான். உங்கள் போல் நான் குற்றஞ்சாட்டுகிறேன் என்று நினைத்துக்கொண்டால், அது தவறுதலாகும். பொதுவாக இத்தகைய மனப்பான்மை இருக்கிற வரையிலும், "எனக்கு இவ்வளவுதான் விதித்திருக்கிறது, இதற்கு மேல் செய்ய மாட்டேன்", என்று சொல்கிற மனப்பான்மை இருக்கிற வரையிலும், இது சரியாக நடக்காது. இது பொதுமக்களுக்குச் செய்ய வேண்டிய கடமை. ஒரு தியாக உணர்ச்சியோடு செய்ய வேண்டிய கடமை. எந்த இடத்திற்குப் போய்ச் சேர வேண்டுமோ, எந்த இலட்சியத்தை எடுத்துக் கொண்டோமோ, அவ்வளவு தூரம் போக வேண்டும். கூடுதலாகப் போக வேண்டுமென்றால், போவோம் என்கிற மனப்பான்மை வருகிற வரையிலும் சொசைடிக்கு உரம் கொடுக்க வேண்டியதில்லை. இல்லாவிட்டால் சொசைடிகளுக்குக் கமிஷன் கொடுத்து அவர்களை இடைத் தரகர்களாக வைத்திருப்பது சரியில்லை என்பது என் வாதம்.

அடுத்து, விலைவாசியைப்பற்றிச் சொன்னார்கள். விலைவாசி ஏறுவதற்கு இரண்டு, மூன்று காரணங்கள் உள்ளன. ஒன்று வியாபாரிகள் பதுக்கல், இன்னொன்று உற்பத்திக் குறைவு, மூன்றாவதாக உள்ளதுதான் இன்று நாட்டிலே அதிகமாக நடந்து கொண்டிருக்கிறது. மூன்றாவது என்னவென்றால் பணத்தினுடைய வீக்கம். பணவீக்கம் என்று சொல்வார்கள். பண வீக்கம் என்றால் ரூபாயினுடைய மெலிவு என்று சொல்லலாம். இந்திய ரூபாயினுடைய மெலிவு எவ்வளவு இருக்கிறதென்றால், உள் நாட்டில் 10 காசுக்கு முன்பு வாங்கப்பட்ட சாமான் இன்று ஒரு ரூபாய் கொடுத்து வாங்கவேண்டுமென்ற நிலைக்கு மாறிக்கொண்டிருக்கிறது என்று அர்த்தம்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : வீக்கம், மெலிவு இரண்டும் ஒரே பொருளுடையது அல்ல.

திரு. எஸ். டி. ஆதித்தன் : 'பண வீக்கம்' என்று உபயோகித்து வருகிறார்கள். ரூபாயின் மெலிவு என்பது பொருத்தமாக இருக்குமென்பது என் அபிப்பிராயம். ரூபாய் மெலிந்து கொண்டிருக்கிறது.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவரவர்களே, ரூபாய் மெலிந்து கொண்டிருக்கிறதா, மலிவாகக் கிடைக்கிறதா?

திரு. எஸ். டி. ஆதித்தன் : எவ்வளவு தூரம் மெலிந்திருக்கிறதென்றால், பொதுவாக வெளி நாட்டிலிருந்து சரக்குகளை வாங்குகிற எக்ஸ்சேஞ்சு சம்பந்தப்பட்ட மட்டில் 100 ரூபாய் 4, 5 மாதங்களுக்கு முன்னால் இருந்தது, இப்போது 100 ரூபாய் அளவிற்கு நாணயமாற்றிலே வந்திருக்கிறது. ரூபாய் மதிப்பு வெளி நாட்டிலும் மெலிந்து போய்விட்டது. உள் நாட்டிலும் மெலிந்து போய் விட்டது. இந்தக் காரியம் எந்த அளவு முக்கியம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்
பி.ப. 5–30 கொள்கிறேன். இப்படி விலை உயர்வதற்கு நாம் சொல்லக்கூடிய வார்த்தை விலைவாசியின் உயர்வு. இன்னும் ஒன்று விலையின் உயர்வு. ஒரு பொருளினுடைய உயர்வு. ஒற்றைப் பொருளினுடைய விலையின் உயர்வு. நாம் கூர்மையாகக் கவனிக்கின்றபோது விலைவாசி உயர்ந்துகொண்டு போகிறது, அதாவது எல்லாப் பொருள்களின் விலையும் ஏறிக்கொண்டிருக்கிறது. எல்லாப் பொருள்களின் விலையும் ஏறிக்கொண்டேயிருக்குமானால், அதைத் தடுத்து நிறுத்துவதற்கு மத்திய சர்க்காருடைய ஒத்துழைப்பு பூரணமாக இருந்தாலொழிய, முடியவே முடியாது. இதைத்தான் ஆளுநர் அவர்கள் ஒரே வரியில் மிக அழகாகச் சொல்லியிருக்கிறார்கள், மத்திய சர்க்காரின் உதவி என்று. இது விலைவாசியின் உயர்வு. ஆனால் விலைவாசியின் உயர்வு ஒரு புறம் இருந்தபோதிலும் கூட வெகு பெருமிதத்தோடு திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லிக்கொள்வது என்னவென்றால், அரிசி முக்கியமான பண்டம் ஆனபடியினாலே, அரிசி விலையை அந்த அளவுக்கு உயராமல் தடுத்திருக்கிறோம். இதைப் பெருமையாகச் சொல்லிக்கொள்ள முடியும், இந்த அரசு. விலைவாசியினுடைய உயர்வு ஏற்பட்டிருக்கிறதே தவிர அரிசியின் விலையினுடைய உயர்வு இல்லை. அரிசியினுடைய விலையைக் கவனிக்கிறபோது, எண்ணெய் விலை உயர்ந்ததைப் போல் உயரவில்லை. துவரம் பருப்பு விலை உயர்ந்தது போல் உயரவில்லை. அரிசியின் விலை உயர்வு சற்றுதான், உயர்ந்திருக்கிறது. அந்தமட்டிலே அது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சாதனை. விலையின் உயர்வைத் தடுக்க நம்மிடம் சக்தி இருக்கிறதே தவிர, விலைவாசியின் உயர்வைத் தடுப்பதற்கு மத்திய சர்க்காருக்கு மாத்திரந்தான் சக்தி இருக்கிறது. அது மத்திய சர்க்காரின் கையிலேதான் இருக்கிறது. ஆகையினால் தான் நம்முடைய கவர்னர் பெருமான் அவர்கள் வெகு அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். விலைவாசியினுடைய உயர்வைத் தடுப்பதற்கு மத்திய சர்க்கார் உதவ வேண்டும் என்று.

ஆகவே நான் இன்று சொன்னது இரண்டே இரண்டு விஷயம். அதற்கு மேல் நேரமும் இல்லை, சொல்வதற்கு மற்ற வாய்ப்புகளும் இல்லை. கிடைப்பதற்கு அரியதாக உள்ள பண்டங்களை விநியோகம் செய்வதற்கு இன்று அரசுக்கு இடைத் தரகர்களாக எந்த எந்த சொசைட்டிகள் இருக்கின்றனவோ, என்ன என்ன அமைப்புகள் இருக்கின்றனவோ அதைக் கூடுமானவரையிலும் குறைத்துவிட்டு அரசே நேரடியாக கிராமவாசிகளிடத்திலே கொண்டுபோய்க் கொடுக்க முடியுமா என்பதைக் கவனிக்க வேண்டியது ஒன்று. இரண்டாவது விலைவாசியின் உயர்வுக்கு நாம் பொறுப்பு இல்லை. அரிசியின் விலையைக் கூடுமான வரையில் ஏறாமல் செய்து வைத்திருக்கிறோம். அது திராவிட முன்னேற்றக் கழக அரசிற்கு மிகமிகப் பெருமை. இதையே நான் எப்போதும் சொல்லி வந்திருக்கிறேன். அது என்றென்றும் பெருமை என்று சொல்லி அதனுடைய விவரத்தை இன்னொரு தடவை நேரம் கிடைக்குமானால் சொல்லிக்கொள்ளவும் தயாராக இருக்கிறேன். இந்த விலைவாசியினுடைய உயர்வு மத்திய சர்க்காருடைய கையிலே இருக்கிறபடியினாலே நமக்கு எந்தவிதமான பொறுப்புகள் தர வேண்டும்? ரூபாயை அதிகமாக நாசிக்கிலே அச்சடிக்கிறபோது, அதை நம்மிடம் கேட்டுக்கொண்டு செய்ய வேண்டும் என்று பல தடவை இந்த அவையிலே சொல்லியிருக்கிறேன். குறைந்த பட்சம் நம்மைக் கேட்டுக் கொண்டு செய்ய வேண்டும் அல்லது அச்சடிக்கின்ற பொறுப்பையாவது நம்மிடத்தில் விடவேண்டும் என்று பலமுறை சொல்லியிருக்கிறேன். அதைப்பற்றி இன்னொரு முறை வாய்ப்பு கிடைக்குமானால் சொல்லிக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. கே. எஸ். கணபதி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரையில் தமிழ் நாட்டின் வருவாயில் ஒரு கணிசமான பகுதி செலவிடப்படுவதாகக் கூறப்படும் ' கல்வி ' பற்றி ஒரு வார்த்தைகூட இடம் பெறாதது எங்களுக்கு அதிர்ச்சியையும், ஏமாற்றத்தையும் கொடுக்கிறது. தமிழ் நாட்டின் பாடத்திட்டத்தில் ஏற்படவிருக்கும் பெருத்த மாறுதலை மனதில் கொண்டாவது ஓரிரு வார்த்தைகள் இடம் பெற்றிருக்குமேயானால், எங்களுக்குச் சற்று ஆறுதலாக இருந்திருக்கும்.

ஆளுநர் அவர்களுடைய உரையில் உள்ள விவரங்களை ஏற்கெனவே அறிந்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இதனை மனதிற் கொள்ளாதது எங்களுக்கு வியப்பாகவே உள்ளது.

[திரு. எஸ். டி. ஆதித்தன்] [1973 பிப்ரவரி 7

கல்வித் திட்டத்திலே பெருத்த மாறுதல் ஏற்பட இருக்கிறது என்று நான் அறிகிறேன். 11 ஆண்டுகளுக்கு ஆரம்பப் பள்ளிகளிலும், நடுநிலைப்பள்ளிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் நடந்துவந்த அந்தப் பாடத் திட்டம் 10 ஆண்டுகளாகக் குறைக்கப்பட இருப்ப தாக நாங்கள் அறிகிறோம். இப்படி உடனடியாகக் குறைப்பதால் ஏற்படும் இடையூறுகள் எண்ணிலடங்காதவை. அவற்றில் ஒரு சிலவற்றை நான் இப்போது குறிப்பிட விரும்புகிறேன்.

இன்று, 1972-73 (அக்கடெமிக் இயரில்) எட்டாம் வகுப்பில் படிக்கும் மாணவர்கள் அனைவரும் 1976 ஆம் ஆண்டு மார்ச் திங்க ளில் எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சைக்கு வருவார்கள். பாடத் திட்டத் தின் மாறுதல் காரணமாக இன்று 7-ஆம் வகுப்பில் படிக்கும் மாணவர்களும் அதே 1976 ஆம் ஆண்டில் எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சைக்கு வருவார்கள். அப்பொழுது சுமார் 5 லட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் 1976 மார்ச்சில் பரீட்சைக்கு வருவார்கள். எனக்கு அந்த எண்ணிக்கையை நினைக்கவே அச்சமாக இருக் கிறது. அதை நாம் எப்படி சமாளிக்கப்போகிறோம் என்றும் எனக்கு விளங்கவில்லை.

அடுத்த நிலை. அவர்களிலே தேர்ச்சி பெற்றவர்களை இந்தக் கல்லூரிகளில் சேர்ப்பது. மாணவர்களுடைய திறனை மனதில் கொண்டோ கொள்ளாமலோ 55 முதல் 60% மாணவர்கள் தேர்ச்சி பெறுவார்கள். இந்தத் திட்டத்தில் பார்த்தோமேயானால், 3 லட்சம் மாணவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. முடித்து, 1966—67 ஆம் ஆண்டு கல்லூரிகளில் சேரத் தயாராக இருப்பார்கள். அவர்களில் இரு பகுதி. ஒரு வகையினர் 10 ஆண்டுகள் படித்தவர்கள். மற்றொரு பகுதியினர் 11 ஆண்டுகள் படித்தவர்கள். நான் அறிந்த வரை யிலே, 1976-77 ஆம் ஆண்டிலோ அல்லது அதற்கு முன்னதாகவோ கல்லூரிகளில் இரண்டாண்டு இன்டர்மீடியட் வகுப்பு புகுத்தப்பட இருப்பதாக அறிகிறேன். அப்படி இன்டர்மீடியட் வகுப்பு புகுத்தப்படுமானால், அத்தனை மாணவர்களையும் இன்டர்மீடியட் வகுப்பில் சேர்க்கப் போகிறோமா அல்லது ஒரு பகுதியினருக்கு பி.யு.சி. யும் மற்றொரு பகுதியினருக்கு இன்டர்மீடியட்டும் வைத்துக்கொள்ளப் போகிறோமா என்று எனக்குத் தெரியவில்லை. அதைக் காட்டிலும் அந்த 3 லட்ச மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு கல்லூரிகளில் இடம் உண்டா? அல்லது அவர் களுக்குக் கல்வி பயிற்றுவிப்பதற்காக ஆசிரியர்கள்தான் இருக் கிறார்களா என்பது எனக்கு விளங்கவில்லை. நான் இவற்றைக்

1973 பிப்ரவரி 7] [திரு. கே. எஸ். கணபதி]

கூறுவதனால், தயவு செய்து, என்னை ஒரு பெசிமிஸ்ட் என்று கருதக் கூடாது. ஏனென்றால் நான் கூறிக்கொள்ள விரும்பும் ஒரு கருத்து-அதிகாரிகள், மாண்புமிகு அமைச்சர்களிடத்திலே உண்மை யான விளக்கங்களைக் கொடுப்பதில்லை. உதாரணமாக முதலமைச்சர் அவர்களோ கல்வி அமைச்சர் அவர்களோ 1974-75 ஆம் ஆண்டிலே கல்லூரிகளிலே இன்டர்மீடியட் வகுப்பு புகுத்தப் படவேண்டும் என்று கூறுகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். உடனடியாக அதிகாரிகள் அனைவரும் அதற்கு ஒப்புதல் தருகி றார்கள். ஒரு வகையில் ஆங்கிலத்தில் சொல்வார்கள் If Ceaser says ' Do this ', it is dne ! பாராட்டுகள் அதிகாரி களுக்கு. ஆனால் விளைவுகளைப் பார்க்கும்போது, நாம் கண்மூடித் தனமாக நடந்துகொள்ளக்கூடாது என்பதே என் கருத்து.

தமிழ் நாட்டு திட்டக் குழு 1972-84 ஆகிய ஆண்டுகளுக்கு பல திட்டங்களைத் தீட்டி, அச்சிட்டு, புத்தக வடிவில் தந்திருக்கிறார்கள். ஆனால் பொறுப்புள்ளவர்களாகக் கருதப்படும் சட்ட மன்ற உறுப் பினர்களுக்கு அப்புத்தகங்கள் வழங்கப்படவில்லை. நான் கல்வி பற்றியுள்ள செய்திகளை அறிந்துகொள்ளலாம் என்று எண்ணி நண்பர் ஒருவரிடம் நேற்று ஒரு புத்தகத்தை வாங்கினேன். நேற்று மாலை பழைய புத்தகக் கடையிலே ஏதாவது புத்தகம் இருக்கிறதா என்று பார்க்கச் செல்லும் போது, பலகாரம் மடிப் பதற்காக வைத்திருக்கும் பேப்பர்களுடன் ' டுவேர்ட்ஸ் எ லேர்னிங் சொசைடி ' Towards a learning Society என்ற இந்தப் புத்தகத்தைப் பார்த்தேன். இதுதான் அந்தத் திட்டக் குழு வெளியிட்ட புத்தகம். இதிலே " ஸ்டிரிக்ட்லி கான்பிடென்ஷியல் ", " ஃபார் அஃபிஷியல் யூஸ் ஒன்லி " என்றெல்லாம் போட்டிருக் கிறது. இது பழைய பேப்பர் கடையிலே எனக்குக் கிடைத்தது. எங்களுக்குச் சட்டமன்றத்திலே வழங்கப்படவில்லை. இதைப் பார்த்தவுடன் எனக்கு ' டுவேர்ட்ஸ் எ லேர்னிங் சொசைடி ' என்பது பழைய புத்தகக் கடையில்தான் ஆரம்பிக்க வேண்டுமோ என்பதுகூட எனக்கு ஐயப்பாடாக இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்தப் புத்தகம் கிடைத்த கடை எந்தத் தெருவிலே இருக்கிறது, எங்கே இருக் கிறது என்ற விவரத்தைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

திரு. கே. எஸ். கணபதி : மைலாப்பூரிலே நேற்று ஒரு புத்தக வியாபாரி, பேப்பர் வாங்குபவர் வந்தார். வேண்டுமானால் அவரை

[திரு. கே. எஸ். கணபதி] [1973 பிப்ரவரி 7

நாளை சந்திப்பேனானால், தங்களுக்குச் சொல்கிறேன். தலையிலே தூக்கிக்கொண்டு, சுமந்து விற்பவர்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : *தாங்கள் சொன்னது, கடைத் தெருவுக்குப் போனேன், அங்கு ஒரு கடையைப் பார்த்தேன், அங்கே பலகாரம் மடிப்பதற்காக இருந்த புத்தகத்தோடு இது இருந்தது என்று சொன்னீர்கள். பிறகு கேட்டதிலே இப்படி தலையிலே தூக்கிவந்தவர் என்கிறீர்கள். இதிலே எது சரி ? எது சரியாக இருந்தாலும், கொஞ்சம் முகவரியைக் கொடுத்தால். எப்படி ஒரு அரசாங்க ரகசியம் வெளியே போய்விட்டது என்பதை அரசாங்கம் அறிந்துகொள்வதற்கு வசதியாக இருக்கும்.*

திரு. கே. எஸ். கணபதி : *மன்னிக்க வேண்டும். கடைத் தெருவுக்குச் சென்றதாகச் சொல்லவில்லை. புத்தகக் கடையில் என்று குறிப்பிட்டேன். தலையில் தூக்கிக்கொண்டு செல்கிறவர் என்று குறிப்பிட்டேன். அடுத்து, பாடத்திட்டத்தை 11 ஆண்டுக்குத் தயாரித்துவிட்டு. . .*

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : *பழைய பேப்பர் வாங்குபவர்களிடம் வீட்டிலே இருக்கிற பேப்பரைத்தான் போடுவார்கள். அவர்கள் கொண்டுவந்த பேப்பரை யாரும் கிளறிப்பார்க்க மாட்டார்கள். அதை எப்படி தாங்கள் பார்க்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது ?*

திரு கே. எஸ். கணபதி : *தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். கிட்டத்திட்ட 200 புத்தகங்கள் அந்தப் பழைய பேப்பர் காரர்களிடத்திலே திருச்சிராப்பள்ளியிலேயும் இங்கேயும் வாங்கியிருக்கிறேன். இது சகஜம்.*

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : *அந்த விலாசத்தைச் சொல்லி விடுங்களேன், தொல்லை இல்லாது போய்விடும்.*

திரு கே. எஸ். கணபதி : *வேண்டுமானால், அவர்களைச் சந்திப்பேனானால் அவருடைய விலாசத்தைத் தருகிறேன்.*

மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனார் : *பழைய புத்தகக்கடை என்றீர்களா, கடை என்றீர்களா ?*

திரு கே. எஸ். கணபதி : *பழைய பேப்பர்காரர் என்றேன்.*

1973 பிப்ரவரி 7]

மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனார் : *பழைய புத்தகக் கடையா ?*

திரு கே. எஸ். கணபதி : *பழைய பேப்பர் வாங்குபவர் என்று* பி.ப
குறிப்பிட்டேன். வேண்டுமென்றால் விலாசம் தருகிறேன். பாடத் 5-40
திட்டத்தை ' 11 ஆண்டுகளுக்கு என்று ' சென்ற ஆண்டு தயாரித்துவிட்டு, இந்த ஆண்டு அதை 10 ஆண்டுகளுக்குச் சுருக்கும்படியாகக் கூறியிருக்கிறார்கள். நான் காய்கறிக் கடைகளில் தான் பார்த்திருக்கிறேன். கூறுகளைப் பரப்பி. உடனடியாகச் சேர்ப்பது என்று. அது போல பாடத் திட்டத்திலும் " 11 ஆண்டு பாடத் திட்டம்," 10 ஆண்டுகளுக்குச் சுருக்கப்படுவதாக இருக்கிறது. அவசரமாக 11 ஆண்டுப்படிப்பை 10 ஆண்டாகக் குறைக்கும் நோக்கத்தை வினவியபொழுது. அகில இந்திய ரீதியில் அனைத்து மாநிலங்களிலும் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை 10 ஆண்டுகளில் முடித்து விட வேண்டுமென்று கருதுவதாகவும், அந்த அடிப்படையில் செயல்படுவதாகவும் தெரிந்துகொண்டேன். அப்படியானால், அகில இந்திய அடிப்படையிலுள்ள மூன்று மொழித் திட்டம், நம் மாநிலத்தில் இரு மொழித் திட்டமாக உள்ளது. அந்த அடிப்படையில் இரு மொழித் திட்டத்தில் பெரும்பாலான மாணவர்கள் நம்மிடம் படித்து, இந்தி பயிலாத காரணத்தாலோ என்னவோ, வெளி மாநிலங்களுக்கு வேலைக்குச் செல்ல முடியவில்லை. எனவே, நம் மாநிலத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக உள்ளது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : *மாண்புமிகு உறுப்பினர் கருத்து 11 ஆண்டுகள் என்று இருக்க வேண்டும் என்பதா அல்லது 10 ஆண்டுகளா ? மற்ற மாநிலங்களில் 11 ஆண்டு இருந்த பிறகு, பி.யு.ஸி. வந்து 10 ஆண்டுகள் நடைபெற்ற மாநிலங்கள் மறுபடியும் 10 ஆண்டுகள் என்று கொண்டு வந்து விட்டன. பக்கத்தில் இருக்கிற கேரளம், ஆந்திரம், மைசூர், வேறு பல மாநிலங்களிலும் அப்படித்தான். இரண்டு, மூன்று மாநிலங்களைத் தவிர, பெரும்பாலான மாநிலங்கள் 10, பிறகு 2, பிறகு 3 ஆண்டுகள் என்று வந்து விட்டார்கள். நாம் இப்பொழுது அப்படிச் செய்ய முடியுமா முடியாதா என்பதல்ல பிரச்சினை. ஆந்திரத்திலிருந்து ஒருவர் வருகிறார் அல்லது இங்கிருந்து அங்கு போய்ச் சேருகிறார் என்றால், 11 ஆண்டுப் படிப்பா அல்லது 10 ஆண்டுப் படிப்பா என்ற தன்மை இருப்பதால், நாம்*

பாடம் சொல்லிக் கொடுப்பது 11 ஆண்டுகளா அல்லது 10 ஆண்டுகளா என்பது கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் எழுப்பப்பட்டது. 10 ஆண்டு, 11 ஆண்டு என்று சொல்லும்போது, இங்கே 11 வது படித்து விட்டுப் போகிறவனை 11 ஆண்டு படித்திருக்கிறான் என்று கணக்கிடுவது இல்லை. இந்தச் சங்கடத்தை நீக்க வேண்டுமென்று இவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றி அகில இந்திய கல்வி மாநாடுகளிலும் சொல்லியிருக்கிறார்கள். கஷ்டத்தைத் தாண்டித் தான் வர வேண்டும். இந்த முயற்சியை எடுத்தால், 4, 5 ஆண்டு கழித்துத் தான் பலன் உண்டு. கல்வித் துறையில் அடுத்த ஆண்டே பலன் காண முடியாது. இப்பொழுது இண்டர்மீடியட் கொண்டு வரும் முடிவை ஆராய்ந்துகொண்டிருக்கிறார்கள். முடிவெடுத்தால், புத்தகம் தயாரிக்க ஒரு ஆண்டு வேண்டும். மறுபடியும் பயிற்சி தருவது எப்பொழுது என்று திட்டம் போட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் 10 ஆண்டு நல்லது என்று கருதுகிறாரா அல்லது இப்பொழுதுள்ள 11 ஆண்டு நல்லது என்று.

திரு. கே. எஸ். கணபதி : நான் பேசுகிறபொழுது மற்ற மாநிலங்களில் 10 ஆண்டுகள் என்று அகில இந்திய ரீதியில் ஒப்புக் கொண்டார்கள் என்றேன். அதில் எனக்குக் கொள்கை வேறுபாடு கிடையாது. ஒப்புக்கொள்கிறேன். சொல்ல விரும்புவது 11 ஆண்டுகளை 10 ஆண்டுகளாகக் குறைப்பதால் ஏற்படக்கூடிய இன்னல்கள் எண்ணில் அடங்கா. அவற்றை மனத்தில் கொண்டு செயல்பட வேண்டும் என்பது தான் என் கோரிக்கை. "டுவார்ட்ஸ் எ லெர்னிங் சொசைடி" என்ற புத்தகத்தில், ஆரம்பப் பள்ளிகளில் 4 ஆண்டு, இடை நிலையில் 3 ஆண்டுகள், உயர்நிலைப்பள்ளியில் 3 ஆண்டுகள். ஆக மொத்தம் 10 ஆண்டுகள் என்று பிரிக்கப்பட்டு திட்டம் வகுக்கப்பட்டிருப்பதைக் கண்டேன். நான் சொல்ல வருவது தவறா உண்மையா என்று தெரியாது. 5, 2, 3 என்று மறுபடியும் பிரித்திருப்பதாக அறிகிறேன். இதில் பொறுப்புள்ளவர்கள் கல்வி இலாகா, மிக்சட் பேசிக் கேடர் தயாரித்து வைத்து இந்தத் திட்டம் மறுபடியும் மாற்றப் படுகிறது. இது போன்ற மாற்றங்கள் ஏற்படும் காலத்தில் சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவைக் கொண்டு பரிசீலனை செய்ய வேண்டுமென்ற விண்ணப்பத்தை வைக்கிறேன்.

இரண்டாவது ஊதியக் குழுவின் சிபாரிசுகள் வந்த பிறகு ஏற்பட்ட குழப்பங்கள் அதிகம். அவற்றைத் தடுக்க முயற்சிக்கும்

அதே நேரத்தில் பல நியாயமற்ற உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு வருகின்றன. பட்டதாரி ஆசிரியர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு மார்ச் திங்களில் இந்த அவையில் கொடுத்த வாக்குறுதி பூரணமாக இன்னமும் நிறைவேற்றப் படாமலிருக்கிறது. அது நிறைவேற்றப்பட வேண்டுமென்று தலைவர் மூலமாக முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இடைநிலை ஆசிரியர்கள், எஸ்.எஸ்.எல்.சி.க்குப் பிறகு இரண்டாண்டு சிறப்புப் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். அதற்கென இரண்டாவது ஊதியக்குழு தனி ஊதிய நிலையை ஏற்படுத்தியது. அப்படி இருந்தும் திடீரென்று இளநிலை எழுத்தருடைய ஊதியம் அந்த ஆசிரியர்களுடைய ஊதியத்தை ஒத்ததாக ஆக்கப்பட்டுள்ளது. எனவே, அந்த இரண்டாண்டுப் பயிற்சிக்கு தனி ஊதியம் ஒன்றாவது கொடுத்து ஊக்கமளிக்க வேண்டுமென்று அரசை வேண்டிக்கொள்ளுகிறேன்.

கவர்ன்மென்ட் 'ஏ' விங்கில் பணியாற்றும் தலைமையாசிரியர் ஒரே வகை தான். அரசிதழ் பதிவு பெற்றவர்கள் இரண்டாவது நிலை கிடையாது என்று கூறப்படுகிறது. அவர்களுக்கு ரூ. 450 ஆக இருந்த ஊதியம் ரூ. 400 ஆகக் குறைக்கப்பட்டது. அது பற்றி உத்தரவு மாண்புமிகு கல்வியமைச்சருக்குத் தெரியுமோ தெரியாதோ, எனக்குத் தெரியாது. எனவே, அதை மறு பரிசீலனை செய்து, ஊதியக் குழு சிபார்சுகளைச் செயல்படுத்தும் முன்னால் 225 ரூபாய் பெற்றவர்களில் ஒரு வகையினர், 400 ரூபாயும் மற்றொரு வகையினர் ரூ. 450ம் என்று 'ஏ' விங்கிற்கு சமீபத்தில் உத்தரவு வந்திருக்கிறது. அவைகளை மறு பரிசீலனை செய்து செயல் படுத்த வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

கடைசியாக, கவர்ன்மெண்ட் 'ஏ' விங், 'பி' விங் இண்டக்ரேஷன் செயல்படாமல் ரொம்ப நாளாக அப்படியே இருக்கிறது. அப்படி இருக்கிறபொழுது 1-4-1970 என்று நாமாகத் தேதியை நிர்ணயம் செய்து, அதற்கு முன் இருப்பவர்கள் 'பி' விங். பின்னடி வருகிறவர்கள் 'ஏ' விங் என்று சொல்லுவது நியாயமாகப் படவில்லை. இண்டக்ரேஷன் பிரச்னையை உடனடியாகத் தீர்க்க வேண்டும். இன்று சொல்லுகிறோம். அன்று குறிப்பிட்டு நாமாகக் கூறிய டேட்டுக்குத் தான் பின்னடி வருகிறவர்கள் 'பி' விங் என்று சொல்லுவது நியாயம். அப்படிச் செய்தால்

1-4-1970க்குப் பிறகு நிலைமையை வைத்து இண்டக்ரேஷன் க்வெஸ்டினுக்கு உடனடியாகத் தீர்வு காண முடியும். அதற்கு முன் அவ்வளவு ஆசிரியர்களையும் ' பி ' விங்கில் சேர்ந்தவர்களாகக் கருத வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன்.

கல்லூரி ஆசிரியர்களுக்கு, அதாவது தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கு பென்ஷன், லீவ் ரூல்ஸ் ஆகியவற்றை மற்றவர்களுக்கு உள்ளது போலவே 'எக்ஸ்டெண்ட்' செய்ய வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆசிரியர் நல நிதி என்று ஒன்று உள்ளது. ஆனால் உண்மையில் கஷ்டப்படுகிற ஆசிரியருக்கு அந்த நிதியால் பலன் கிடைப்பதில்லை. குறிப்பாகக் கூற வேண்டுமென்றால், ஒன்றைச் சுட்டிக்காட்ட முடியும். பல முறை விண்ணப்பம் கொடுத்தும் பலன் கிடக்கவில்லை. திருச்சியில் ஒரு அம்மையார் உடலில் ஆடை அணிய முடியாத படி கொப்புளங்கள் வந்து விட்டன. 6 மாதம் திருச்சி ஆஸ்பிடலில், பரிசீலனை செய்தார்கள். அவர் ஆசிரியர் நல நிதிக்கு விண்ணப்பம் செய்திருந்தார். மூன்று முறை விண்ணப்பம் செய்தும் எந்த விதமான உதவியும் இல்லை. உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியரும் மற்ற ஆசிரியர்களும் 5, 10 ரூபாய் என்று போட்டு ஒவ்வொரு மாதமும் அவர்களுக்கு உதவி வருகிறார்கள். இந்த நிலைமையை மாற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் கல்வி அமைச்சர் அவர்களும் ஆசிரியர் நல நிதி சீர்படுத்தப்பட என்னென்ன முயற்சிகள் எடுக்க வேண்டுமோ அவைகளை எடுத்துக் கொண்டு ஆசிரியர்கள் நலனைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து, அமர்கிறேன்.

* **திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு ஆளுநர் உரையின் மீது பேசுவதற்கான ஒரு வாய்ப்பை இன்று நான் பெற்றிருக்கிறேன். ஆளுநர் உரையில் எனக்கு முன்னால் நண்பர் திரு. கணபதி அவர்கள் கல்வித் துறைபற்றி, கல்வித் துறையில் உள்ள ஆசிரியர்களின் பிரச்சினை பற்றி, மாற்றங்களைப்பற்றி எதுவுமே இல்லாததால் ஏமாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று கூறினார்கள். அந்த ஏமாற்றம் ஆசிரியர் சமுதாயம் பூராவுக்குமே இருக்கிறது, எனக்கும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து, இந்த தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு பாதுகாப்பற்ற நிலை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. இந்தச் சட்ட

மன்றத்தில் ஒரு கமிட்டி போட்டு ஆராய்ந்து சட்டம் கொண்டுவர வேண்டி யிருக்கிறது. அந்தச் சட்டத்தை விரைவில் கொண்டுவர வேண்டும். இந்தச் சட்டத்துக்கு முன் கூட்டிய தேதியிலிருந்தே அதாவது (ரிட்ராஸ்பெக்டிவ்) எஃபெக்ட் கொடுத்து, முன்கூட்டிய தேதியிலிருந்து, 1969-ம் ஆண்டிலிருந்து இந்தக் கமிட்டியைப் போட்டு ஆராய்ந்து சட்டம் வர இருக்கிற நேரத்தில் ஆசிரியர்களுடைய பாதுகாப்பற்ற நிலையைப் போக்க, 1969-ம் ஆண்டிலிருந்தே, முன் தேதி இட்டு சட்டம் அமுலுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதற்கான சட்டத்திற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த ஆளுநர் உரையில் கல்வியைப்பற்றிச் சீர்திருத்தம் செய்து வருகிற இந்த நேரத்தில், கல்வித் துறையில், பல்வேறு மாநிலங்களில் கல்விக்காக பல்வேறு வாரியங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றபோது, இங்கும் தனியாக கல்விக்காக வாரியத்தை ஏற்படுத்த வேண்டும். இப்போது பல்வேறு துறைகளில் வாரியங்களை அமைத்திருக்கின்ற இந்த அரசும் கல்விக்காக இங்கே ஒரு தனி வாரியம் அமைந்து, அது விரைவில் செயல்படுவதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும். தமிழ் நாட்டில் இருக்கிற கல்வித் துறை, நிதானமானது, மெதுவானது, அதில் பிரச்சினைகள் ஏராளம், குறைகளும் ஏராளம். அதில் அவ்வாறு தான் பணியாற்றுகிறார்கள். சிக்கல்கள் இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். இதைச் சொல்வதால் மட்டும் பிரச்சினை தீர்ந்துவிடாது. பிரச்சினைகளைக் களைவதற்கு அடிப்படையான காரணங்களை ஆராய்ந்து, அதை விரைவிலே செயலாற்றுவதற்கான முயற்சிகளைத் துணிந்து எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம். இந்த அரசு பல்வேறு துறைகளில் முன்னேற்றக் காரியங்களில் ஈடுபட்டிருக்கும்போது, இந்தக் கல்வித் துறையில் இன்னும் வேகமாகக் காரியங்களைச் செயலாற்றுவதற்கு முயற்சி இல்லாதது கண்டு நான் வருந்துகிறேன். இனியாவது அதைச் செயல்படுத்த வேண்டும். செயல்படுத்துவார்கள் என்று நம்புகிறேன். கடந்த காலத்தில் இருந்திருக்கிற நடைமுறைகளை வைத்து, எதிர்காலத்தில் இன்னும் எப்படி வேகமாகச் செயல்படுவது என்பதைச் சிந்தித்து, இந்தக் கல்வித் துறை இன்னும் வேகமாகச் செயல்பட்டால், அதில் தான் இந்த நாட்டின் முன்னேற்றம் இருக்கிறது. இந்தக் காரணத்தால், நான் இதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நான் வெளிநாடு சென்றதில்லை. கல்வி அமைச்சர் வெளிநாடு சென்று விட்டு

[திரு. செ. முத்துசாமி] 7 பிப்ரவரி 1973]

வந்து நிலைமையை இங்கே சொன்னார்கள். மாற்றத்துக்கு நாம் தயாராக இல்லாத வரையில், இந்தச் சமுதாயம் நிச்சயமாக முன்னேற முடியாது என்று சொன்னார்கள். இந்தக் கல்வித் துறையைத் திருத்தியமைப்பதற்கு, இந்தச் சமுதாயத்திலுள்ள அத்தனை பேரும் பொறுப்பை ஏற்றுச் செயல்படுத்த வேண்டும். ஆசிரியர் சமுதாயம் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்படி செய்ய வேண்டும். அந்தக் காரியம் செய்தால் நல்லதாக இருக்கும். இந்த ஆசிரியர் சமுதாயத்திடம் இப்படிப்பட்ட பொறுப்பை ஒப்படைக்க வேண்டும். அப்படிச் செய்தால் இன்னும் கல்வித் துறை முன்னேற்றம் அடைய வாய்ப்பு ஏற்படும். இந்த ஜனநாயகத்தில், ஆசிரியர் சமுதாயத்திற்கு முழு சுதந்திரம், உரிமையும் கல்வித் துறையில் அளிக்கவேண்டும். அது சமுதாயத்திற்கு எடுத்துக் காட்டான காரியமாக இருக்கும். இதைக் கல்வித் துறை அமைச்சர் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேன். ஆகவே ஆசிரியர் சமுதாயம் எடுக்கக்கூடிய முடிவுகளை அமுல் நடத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும். அந்த முயற்சி எடுத்து, கோவை மகாநாட்டில் நாங்கள் “கல்வி வாரியம் அமைத்து தனித்து இயங்க (அடானமஸ் போர்டு) ச் செய்ய வேண்டும். அரசியல் குறுக்கீடு அற்ற, அரசியல் குழப்பங்களுக்கு உட்படாத கல்வித் துறை நிபுணர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் அடங்கிய ஆசிரியர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையிலே ஒரு கல்வி வாரியம் அமைக்கப்பட வேண்டும்” என்று தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம். இதை அரசாங்கம் முழு அளவுக்கு செய்தால் சரியாக இருக்கும். இதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த நேரத்தில் பட்டதாரி ஆசிரியர்களுடைய நிலைபற்றி முதல்வர் ஏற்கெனவே மார்ச்சு மாதம் 7-ந் தேதி இதே அவையில் சொல்லியது இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறதென்று தான் கூற விரும்புகிறேன். முதலமைச்சர் அவர்கள் அறிக்கையில் சொல்லியதை நிச்சயம் நிறைவேற்றுவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். செகண்டரி கிரேடு, ஹையர் கிரேடு ஆசிரியர்கள் 2 லட்சம் பேர் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இந்த 2 லட்சம் பேர்களுக்கும், ஏற்கெனவே அவர்கள் நிலைகுறித்துச் செய்த முடிவுகளைப் பரிசீலனை செய்திருக்கிறேன் என்று முதல்வர் என்னிடம் சொன்னார்கள். இதை அவர் உடனடியாகச் செய்ய வேண்டும். எஸ்.எஸ்.எல்.சி.க்கு பிறகு இரண்டாண்டு பயிற்சி படிப்பு படித்த மருந்தாளர்கள் மகாநாட்டில் பேசிய முதலமைச்சர் அவர்கள்

1973 பிப்ரவரி 7] [திரு. செ. முத்துசாமி]

அவர்களுடைய சம்பள விகிதத்தை உயர்த்தி அறிவித்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். எஸ்.எஸ்.எல்.சி. க்குப் பிறகு 2 ஆண்டுகள் பயிற்சி பெற்று பணிபுரிகின்ற செகண்டரி கிரேடு ஆசிரியர்களின் ஊதியத்தை அதேபோல் உயர்த்த வேண்டும். எஸ்.எஸ்.எல்.சி. யில் தவறியவர்கள் இரண்டாண்டு பயிற்சி பெற்று ஹையர்கிரேடாகப் பணி புரிகிறார்கள். அவர்களின் ஊதியம் சரியாக அமைக்கப்படவில்லை. திருத்தி அமைக்கப் படவுமில்லை. இவர்களின் ஊதிய நிலையை உயர்த்துவதற்கும், ஒன்மேன் கமிஷன்'ல் (S.G., H.G.) அவர்களுக்கு என்ன முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அமைச்சர் அவர்கள் முறைப்படி அறிவிக்க வேண்டும். சமநீதி வழங்கும் கொள்கை உடைய அரசு, இந்த ஆசிரியர் சமுதாயத்திற்கும் சமநீதியை வழங்க வேண்டும், இதைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஒரு சமுதாயத்திற்கு வழங்கப்படும் நீதி இன்னொரு சமுதாயத்திற்கும் தரப்பட வேண்டும். இப்போது ஒரு சமுதாயத்திற்கு மட்டும் நீதி வழங்கப்படுகிறது. இன்னொரு சமுதாயம் ஏமாற்றப்படுகிறது என்று கருத இடமேற்படுகிறது. இது நியாயமான அடிப்படை ஆகாது. நம் ஜனநாயகத்தில் ஒவ்வொரு சமுதாயமும், ஒவ்வொரு குடிமகனும் தங்களுக்கிருக்கிற உரிமையைப் பெற வேண்டும் என்பதில் தவறு எதுவும் இருக்க முடியாது. ஒரு சிலருக்குக் கூடியிருக்கலாம் அல்லது குறைந்திருக்கலாம். ஆக இந்த முயற்சிகளை மேற்கொண்டு, இந்த அரசு குறைபாடுகளை நீக்க ஆவன செய்ய வேண்டும் என்று தான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தேர்வு நிலை ஊதியம் என்று ஒன்று இருக்கிறது. உயர்நிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களை நீக்கிதான் பி.டி. ஆசிரியர்களுக்குத் தேர்வு நிலை ஊதியம் அறிக்க வேண்டுமென்ற விதி இருக்கிறது. நடுநிலைப் பள்ளிகளில் S.G. தலைமை ஆசிரியர் ஊதியம் 5,000 பேர்கள் பெறுகிறார்கள். அந்த 5,000 பேர்களுக்கு தனிச் சம்பள விகிதம் கொடுத்துள்ளார்கள். இந்த 5,000 பேர்களை செலக்ஷன் கிரேட் என்று சொல்லி அந்த பட்டியலில் சேர்ப்பதன் மூலம் இந்த 5,000 செலக்ஷன் கிரேடு இடங்களை நீக்கிவிடுகிறார்கள். இதனால் அந்தச் சம்பள விகிதம் 350–15 என்ற அந்த ஸ்கேல் உள்ள சம்பள உயர்வு விகிதம் அந்த ஆசிரியர்களுக்குக் கிடைக்காமலிருக்க நேரிடுகிறது. ஆகலின் நடுநிலைமைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களை நீக்கி மீதியிருக்கக்கூடிய செகண்டரி கிரேடு ஆசிரியர்களை மட்டும் செலக்ஷன் கிரேடுக்கு எடுத்துக்கொள்ளும்

முறையை ஹைஸ்கூல் போலவே, தொடக்கப் பள்ளிகளிலும் புகுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இதன் மூலம் 5,000 பேர் பயனடைவர். நலப்பள்ளிகளில் இன்று வரை செலக்ஷன் கிரேடு ஆணை அமுல் நடத்தப்படவில்லை. கல்வி செயலகத்திலிருந்து இதற்கான உத்தரவைப் போடுகிறார்கள். ஓராண்டு மட்டுமல்ல, 1¼ ஆண்டு மட்டுமல்ல, அதற்குப் பிறகும் உத்திரவு அமுலாவதில்லை. உத்திரவை அமுலாக்க மீண்டும் ஒரு உத்தரவு போடுகிற ஒரு நிலைமை இன்றைக்கு நாட்டிலே இருக்கிறது. போட்ட உத்தரவையே அமுல்படுத்தாது இதற்காகவே இன்னொரு உத்தரவையும் போடும் நிலைமை இருக்கிறது என்பதை நான் கல்விச் செயலாளர் அவர்களிடத்திலேயே சொன்னேன். போட்ட உத்தரவையே அமுல்படுத்துவதற்கு மீண்டும் இன்னொரு ஆணையைப் போடவேண்டும் போலிருக்கிறது என்று அவரும் சொல்கிறார். கல்வித் துறையைப் பொறுத்தவரையில், அதிலுள்ள எல்லாத் துறைகளையும் கண்காணிக்க, அவைகள் எல்லாம் அதனுடைய கண்ட்ரோலில் இருக்க வேண்டும். ஏனென்றால் கல்வித் துறை அவர்களுக்கு நிதி, பணம் என்று கொடுக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆர்.டி.எல்.ஏ. டிபார்ட்மெண்டின் கீழ் இருக்கிற பள்ளிகளை அரசாங்கமே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று திரு. முத்துசாமி அவர்கள் விரும்புகிறாரா என்பதை மட்டும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. செ. முத்துசாமி : பஞ்சாயத்து யூனியன் மட்டுமல்ல, எல்லா நிர்வாகங்களிலும் இருக்கக்கூடிய பள்ளிகளை அரசே ஏற்க வேண்டும் என்பது தான் என்னுடைய கோரிக்கை என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் தெளிவாகக் கூறிக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப உ. சண்முகம் : தலைவர் அவர்களே, சிறு விளக்கமாகத் தான் நான் கேட்கிறேன். அந்த ஆரம்பப் பள்ளிகள் முழுவதையும் எடுத்துக்கொள்வதாக இருந்தால், அந்த ஆரம்பப் பாடசாலையில் இருக்கக்கூடிய ஆசிரியர்களைத் தண்டிப்பதோ அல்லது மாற்றுவதோ என்றால், அதற்கான எல்லாப் பொறுப்புக்களையும் ஒரு டீ.ஈ.ஓ. இடத்தில் கொடுக்க வேண்டிய அவசியம் வரும். அப்படி அந்தப் பொறுப்பை டீ.ஈ.ஓ. இடத்தில் ஒப்படைப்

பதற்கு திரு. முத்துசாமி அவர்கள் ஒத்துக்கொள்கிறார்களா என்பதைத்தான் அறிய விரும்புகிறேன்.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, பள்ளிகளை அரசு எடுத்துக் கொள்வது என்ற முடிவுக்கு வந்துவிட்டால், அதை எப்படி நிர்ணயிப்பது என்ற நிலைமை வருகிறது. அந்தப் பள்ளிகளை எடுத்துக்கொள்வதுபற்றி அமைச்சர் அவர்கள் ஒரு முடிவுக்கு வந்துவிட்டால், அதை எப்படி நிர்வகிப்பது என்பதற்கான ஆலோசனைகளை நாங்கள் அப்போது சொல்கிறோம். அந்தப் பள்ளிகளை நேரடியாக எடுத்துக் கொள்வதில் இந்த அரசுக்கு நம்பிக்கை இருக்க வேண்டும். எடுத்துக்கொள்கிறோம் என்ற முடிவுக்கு வந்துவிட்டால், அதன் பிறகு உட்கார்ந்து பேசி எப்படி நிர்வகிப்பது என்பதுபற்றி ஆலோசிக்கலாம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : சந்தேகத்திற்காகத்தான் கேட்கிறேன். இதற்கு முன்பு ஜில்லா போர்டு இருந்தது. அதற்கு ஜில்லா போர்டுத் தலைவர் இருந்து அதைக் கவனித்து வந்தார். அதற்குப் பிறகு யூனியன் என்று ஆகியது. இந்த யூனியன் ஆரம்பப் பாடசாலைகளை இந்த அரசாங்கம் எடுத்துக்கொள்வது என்றால், மீண்டும் ஜில்லா போர்டு போன்ற ஒரு அமைப்பினிடம் ஒப்படைக்க வேண்டிய அவசியம் வரும். அதை திரு. முத்துசாமி அவர்கள் ஒத்துக்கொள்கிறாரா என்பதைத்தான் கேட்கிறேன். அது தெரிந்தால் மேற்கொண்டு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

திரு. செ. முத்துசாமி : முதலில் அமைச்சர் அவர்கள் நேரடியாகப் பள்ளிகளை எடுத்துக்கொள்வதற்கு ஒத்துக்கொண்டு விட்டால், மற்ற விஷயங்களைப் பற்றி முடிவு எடுத்துவிடலாம். எவ்வளவு சம்பளம் ஆசிரியர்களுக்கு இருக்கும் என்பதிலும், எந்தெந்த நடைமுறையில் டீ.ஈ.ஓ. அதை நிர்வகிப்பது என்பது குறித்தும், அது வட்ட ரீதியிலா அல்லது பஞ்சாயத்து ரீதியிலா அல்லது டெபுடி இன்ஸ்பெக்டர் மாதிரி ஒரு கல்வித் துறை அதிகாரியை வகுத்து நிர்வகிப்பதா என்பது குறித்தும் அரசு பள்ளிகளை நேரடியாக எடுத்துக்கொள்ள ஒரு முடிவு எடுத்து விட்டால், எங்களுடைய ஆசிரியர்கள் இயக்கம், அதை ஒத்துக் கொள்ளத் தயாராய் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தயவு செய்து தெளிவு படுத்தினால் நல்லது. அதை மட்டும்தான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். 'அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவிட்டால், எடுத்துவிட்டால்' என்று சொல்வதை விட, அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதற்குக் கொஞ்சம் ஒத்தாசையாக இருக்க வேண்டும். , அதற்கு நீங்கள் ஒத்துழைத்ததாக இருக்க வேண்டுமென்பதற்காக ஆலோசனை சொல்லுங்கள். பஞ்சாயத்து யூனியன் மட்டத்தில் தேவையில்லையென்றால் எடுத்து விடுவோம். பஞ்சாயத்து யூனியனிடத்தில் தேவையில்லையென்பதை ஒத்துக் கொள்வதாக வைத்துக்கொள்வோம். அடுத்த அமைப்பை வைக்கும்போது, மாவட்ட வாரியாக அமைக்க வேண்டிவரும். அந்த அமைப்பை மாவட்ட வாரியாக வைப்பதற்கு திரு. முத்துசாமி அவர்கள் ஒத்துக்கொள்கிறார்களா? ஒத்துக்கொள்வதாக இருந்தால், அரசு பரிசீலிப்பதிலே எந்தவிதமான ஆட்சேபணையுமில்லை. எனவே அதைப் பரிசீலிக்கலாமா? அதற்கு அவர் ஒத்துக்கொள்கிறாரா என்ற கேள்விக்குத்தான் எனக்கு பதில் வேண்டும்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, டிஸ்டிரிக்ட் பூராவும் ஒரே நிர்வாகமாக வைத்துக் கொண்டால். . .

6-00 பி.ப. * **திரு. கே. ராஜாராம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுப்பினரை அந்த அசோசியேஷன் செகரட்டரியென்ற முறையில் கேட்கிறார்களா அல்லது உறுப்பினர் என்ற தனிப்பட்ட முறையில் கேட்கிறார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, ஆரம்ப ஆசிரியர்களுடைய சங்கத்தின் செயலாளராக இருக்கிறதனால் தான் கேட்கிறேன். தவிர திரு. முத்துசாமி அவர்கள் பேசுகிறார் என்றால், அப்படித்தான் இருக்குமென்று நம்பிக்கொண்டு கேட்கிறேன். அந்தக் கருத்தைப் பிரதிபலிப்பாரென்று நம்புகிறேன். அதைத்தான் தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்கிறேன்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, அமைச்சரவர்களுடைய நம்பிக்கைக்கு மாறாக நான் கருத்தைத் தெரிவிக்க மாட்டேன். அந்த ஆசிரியர் இயக்கத்தின் சார்பாக இருக்கக் கூடியதைத்தான் சொல்கிறேன். ஒரு பஞ்சாயத்து யூனியனிலிருந்து இன்னொரு பஞ்சாயத்து யூனியனுக்கு இப்போது மாறுதல் அளிப்பதிலே, ஆசிரியர்களை ஒரு பஞ்சாயத்திலிருந்து இன்னொரு பஞ்சாயத்தின் கோடியில் போடுகிறார்களென்று ஒரு ரிப்போர்ட் வந்துகொண்டிருக்கிறது. ஆகவே, ஜில்லா பூராவும் மாறுதல் வருவதை ஏற்றுக்கொள்கிறாரா என்று அமைச்சர் அவர்கள் என்னிடம் கேட்பதன் மூலம், ஜில்லா பூராவும் ஒரே நிர்வாகமாக வைத்துவிட்டால், இந்தப் பஞ்சாயத்து யூனியனில் இன்றைக்கு இருக்கிற நடைமுறை மாறுதல், ஜில்லா பூராவும் வந்துவிட்டதென்று ஆசிரியர்கள் சமுதாயத்தின் மத்தியில் சொல்வதற்கு ஏதுவாக அமைய முடியும் என்று அமைச்சர் எதிர்பார்க்கிறார்கள். நான் அதனால்தான் சொல்கிறேன். முதலிலே அரசு ஏற்றுக் கொள்வதைப்பற்றி முடிவுக்கு வந்துவிட்டால், எப்படி நிர்வகிக்க வேண்டுமென்பது அடுத்த நடைமுறையாக வருகிறது;

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மீண்டும் விளக்கமாகச் சொல்கிறேன். அரசாங்கம் ஒரு முடிவு எடுத்துவிட்டதற்குப் பிறகு . . . (குறுக்கீடு)

தலைவரவர்களே, தங்கள் முன் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். அரசாங்கம் ஒரு முடிவு எடுத்துவிட்டதற்குப் பிறகு போராட்டம், கிளர்ச்சியென்று வரக்கூடாது. அதற்கு முன்பு உங்களுடைய மன நிலை எப்படியிருக்கிறதென்பதை அரசாங்கம் தெரிந்துகொள்ள வேண்டும். பஞ்சாயத்து யூனியன் மட்டத்தில் அரசாங்கம் வைத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னால், அரசாங்கம் வைத்துக்கொண்டாலென்ன, பஞ்சாயத்து யூனியன் வைத்துக்கொண்டாலென்ன. அது முடியாது. . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கேட்பது, எந்த நிர்வாக அடிப்படையில் அரசாங்கம் ஏற்றுக்கொள்வது என்பது. அதற்குத்தான் விளக்கம் தேவை.

திரு. செ. முத்துசாமி: நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் 'பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்து யூனியன்' என்று மட்டும் சொல்கிறார்கள். நான் கூறுவது அரசே எல்லாப் பள்ளிகளையும் ஏற்று, பஞ்சாயத்து யூனியன் பள்ளிகள் மட்டுமல்ல,

எய்டட் பள்ளிகள், நலப் பள்ளிகள், நகராட்சிப் பள்ளிகள்—எல்லாப் பள்ளிகளையுமே ஒரு நிர்வாகத்தின்கீழ் கொண்டுவர வேண்டும் என்பது. அந்த நிர்வாகத்தின்கீழ் கொண்டு வருவதற்கு முதலில் அரசு ஒப்புக் கொண்டால், எந்த அடிப்படையில் வைத்துக்கொள்வதென்று வரும்போது, அதை எந்த நேரத்தில் கூப்பிட்டுக் கேட்டாலும், அந்த நேரத்தில் எழக்கூடிய பிரச்சினை யாகும். அதை அந்த நேரத்தில் ஒப்புக்கொள்ளத் தயாராக இருக்கிறோமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். முதலிலே அரசு எடுத்துக்கொள்வதற்கு ஒரு முடிவுக்கு வரவேண்டும். அதாவது 'பாலிசி மேட்டர்'. அதன் பிறகு எப்படி நிர்வகிப்ப தென்று சொல்லும்போது, எந்த நேரத்தில் கூப்பிட்டுக் கேட்டாலும் ஆலோசனை வழங்கத் தயாராக இருக்கிறோ மென்பதை. . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆசிரியர் நிலையினைத் தான் கேட்கிறோம். இதிலே அரசாங்கத்திற்கு அதிகமான செல்வாக்கைத் தேடிக்கொள்ள வேண்டுமென்றோ, அதிகாரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றோ நினைக்கவில்லை. ஆசிரியர்கள் சங்கங்கள், நீங்கள் கோருகிறீர்கள், விரும்புகிறீர்கள். ஆசிரியர்கள் நலனை உத்தேசித்து அரசாங்கம் எடுத்துக்கொள்கிறதென்று சொன்னால், முதலமைச்சரவர்கள் கேட்டது மாதிரி எந்த அமைப்பு முறை உங்களுக்கு வசதியாக இருக்குமென்று சொன்னால், யோசிப்பதற்கு வசதியாக இருக்கும். அதனால்தான் கேட்கிறோம். இல்லாவிட்டால், திரும்பத் திரும்பக் கேட்க மாட்டோம். சொல்வதாக இருந்தால், சொல்லுங்கள்.

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அரசினர் பள்ளிகளெல்லாம் மாநில நிலையிலே நிர்வகிக்கப் படுகின்றன. அந்த நிலையைக் குறைத்திருக்க வேண்டுமென்பது தான் ஆசிரியர்களுடைய எண்ணமாக இருக்குமென்று நினைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசும்போது, ஆரம்பப் பள்ளிகளைப்பற்றிச் சொன்னார்கள். இப்போது இருக்கக்கூடிய அரசினர் உயர்நிலைப் பள்ளிகள் மாநில நிலையில் தான் இருக்கின்றன. அரசே ஏற்றுக் கொள்ளும்போது, அந்த மாநில நிலையில் இருக்குமா அல்லது மாவட்ட நிலையில் இருக்குமா அல்லது வட்ட நிலையில் இருக்குமா என்பது யோசித்து முடிவுக்கு வர வேண்டிய விஷயம். இப்போது பள்ளிகள் என்று கூறும் போது, ஆரம்பப் பள்ளிகளுக்கு மாத்திரம்தான் இந்தக் கதியா

அல்லது உயர்நிலைப் பள்ளிகளும் இதில் சேருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆரம்பப் பாடசாலைகள் தான் இப்போது பஞ்சாயத்தின் கீழ் இருக்கின்றன. பஞ்சாயத் திலிருக்கிற ஆரம்பப் பாடசாலைகள், பஞ்சாயத்துத் தலைவருக்கோ அல்லது யூனியன் தலைவருக்கோ கட்டுப்பட வேண்டியதாக இருக்கும். அது சங்கடமாக இருக்குமென்று ஆசிரியர்கள் புகார் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதை நாம் தவிர்ப்பதற்கு தனியார் பாடசாலையைப்பற்றிச் சொன்னார்கள். அது அடுத்தபடி, இந்தப் படியில் ஊராட்சி ஒன்றியங்களிலிருக்கிற ஆரம்பப் பாட சாலைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும். எடுத்துக் கொள்வதாக இருந்தால், ஒரு அமைப்புத் தேவை. அந்த அமைப்பு முறை டி.இ.ஓ. மட்டத்தில் இருக்கலாமா அல்லது மாவட்ட ஆட்சி மன்றத்திலே இருக்கலாமா என்பதற்குத்தான் விளக்கம் கேட்டேனே தவிர, வேறொன்றுமில்லை.

திரு. செ. முத்துசாமி : துணைத் தலைவரவர்களே, இப்போது கல்வி மாவட்டங்கள் இருக்கின்றன. அவர்கள் சொல்வதிலிருந்து அந்தக் கல்வி மாவட்டங்கள் வாரியாக, அரசுக்கு இதைக் கொண்டு வர வேண்டுமென்ற எண்ணம் இருப்பதாகத் தெரிகிறது. ஆசிரியர் களுடைய கோரிக்கையினால் மட்டுமல்ல, கல்வி விருத்தியாக வேண்டுமென்பதற்காகத்தான் இந்தக் கோரிக்கை வருகிறது. ஆதலால் கல்வி மாவட்ட வாரியாகச் செய்வதற்கு, அப்படிப்பட்ட ஒரு நிர்வாகம் வருவதற்கு அரசு விரும்பினால், நாங்கள் ஏற்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பிரச்சினைகளைச் சுமுகமாக முடித்துக்கொள்ள வேண்டும். இந்த ஆசிரியர்கள் இயக்கம் ஏற்பட்டதிலிருந்து பல நன்மைகளை அரசு செய்திருக்கிறது. இந்த அரசு 1967-க்குப் பின்னால் வந்த பிறகு, இந்த ஆசிரியர் சமுதாயத்திற்குப் பல நன்மைகளைச் செய்திருக்கிறது என்பதை ஒப்புக் கொள்கிறேன். சென்ற முறை ஒரு தவிர்க்க முடியாத சந்தர்ப்பம், சரித்திரக் கட்டாயம், ஒரு போராட்டம் நடந்துவிட்டதைப்பற்றியும், இனி அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படா வண்ணம் நடந்துகொள்ள

[திரு. செ. முத்துசாமி] [1973 பிப்ரவரி 7

வேண்டுமென்பதைப்பற்றிக்கூட இந்த அவையில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இதை மனதில் ஏற்றோம். இன்றைக்கு ஆசிரியர் சமுதாயத்தினுடைய கோரிக்கைகளை வைத்து, மாநில வெள்ளி விழா மாநாடு கோவையில் நடத்தினோம்.

* * * *

அடுத்து, நம்முடைய அமைச்சர் பெருமக்கள், முதலமைச்சரவர்களும், கல்வி அமைச்சரவர்களும், இந்த மாநாட்டிலே கலந்துகொண்டு, ஆசிரியர்களுடைய பிரச்சினைகளை, ஆசிரியர்களுடைய உணர்ச்சிகளை ஏற்றுச் செய்வதற்கான ஒரு வாய்ப்பினை அடிப்படையிலே ஒப்புக்கொண்டிருந்தார்கள். டிசம்பரில் நடைபெறக்கூடிய இந்த மாநாட்டை, ஜனவரி 3-வது வாரத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று ஆலோசனை சொன்னார்கள். அவர்களுடைய நேரத்திற்குத் தக்காற்போல், நாங்களும் ஜனவரி 21-ம் தேதி முதலமைச்சரவர்களையும், கல்வி அமைச்சரவர்களையும் எதிர்பார்த்து வைத்திருந்தோம். கடைசி நாள் வரை எதிர்பார்த்திருந்த எங்களுக்கு எந்தவிதமான தகவலுமில்லை. கடந்த காலம் முதல் இந்தக் காலம் வரை அமைச்சரவர்கள் ஒரு நிகழ்ச்சியை ஒப்புக்கொள்வதானால், கடிதம் மூலமாக ஒப்புக்கொள்ளக்கூடிய நடைமுறைகள் இதுவரையிலேயில்லை. இப்படிச் செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன், பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். உறுதிகளை பெரிய பொறுப்பிலே இருப்பவர்கள் தந்ததற்கிணங்க, ஆசிரியர் சமுதாயம் அவர்களை எதிர்பார்த்து ஒரு மாபெரும் மாநாட்டினை நடத்தியது. அந்த மாநாட்டுக்கு வந்திருந்த ஆசிரியர்கள், அமைச்சர்கள் வருவார்கள், அமைச்சர்கள் வருவார்கள் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் அமைச்சர்கள் வராமல் ஏமாற்றிவிட்டார்கள் என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, 'ஏமாற்றி விட்டார்கள்' என்று சொன்னார்கள். அந்த வார்த்தைக்குப் பதிலாக வேறு வார்த்தை போட்டிருக்கலாம். ஆனால் அவர்கள் அடிக்கடி அப்படிப்பட்ட வார்த்தைகளைப் பயன்படுத்திப் பழக்கப்பட்டிருக்கிற காரணத்தால், நான் அதைக் குறை சொல்வதற்கில்லை. என்னிடம் தேதி கேட்டபோது நான் சொன்னேன். டெல்லியிலே தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டம் இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை, ஒருவேளை நான் கொடுத்த

* Expunged as ordered by the Chair.

1973 பிப்ரவரி 7] [டாக்டர் மு. கருணாநிதி]

தேதியிலே அந்தக் கூட்டம் அமைந்துவிடுமானால், வருவதற்கு இயலாமல் போய்விடுமென்று சொன்னேன். அந்த நிபந்தனைக்குட்பட்டுத்தான் திரு. முத்துசாமி அவர்கள் அந்தத் தேதிக்கு ஒப்புதல் தந்தார்கள். 19, 20 ஆகிய தேதிகளில் டெல்லியிலே தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்திற்கான அறிவிப்பு திடீரென்று வந்துவிட்டது. அதற்காக நான் செல்லவேண்டியிருந்தது. ஆகவே, 21-ம் தேதியன்று, வேறு சில அமைச்சர்களைச் சந்திக்க வேண்டியிருந்ததால், வர இயலவில்லை. அது மாத்திரமல்ல காரணம். அவர்கள் என்னிடத்திலே அந்த மாநாடு எப்படி நடக்குமென்று கூறியது ஒன்று. பிறகு அதற்காக நிகழ்ச்சி நிரலை வகுத்தது வேறொன்று. நானும் கல்வி அமைச்சரவர்களும் அந்த மாநாட்டுக்கு வருவதாக ஒத்துக்கொண்டிருந்தோம். எத்தனையோ மாநாடுகள் அரசு அலுவலர்கள் நடத்தியிருக்கிறார்கள். அதற்கு அமைச்சர்களைக் கூப்பிட்டு அந்த மாநாட்டிலே பல கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். முடிந்த அளவுக்கு. 20 கோரிக்கைகள் வைத்தால், 10, 15 கோரிக்கைகளை, அல்லது 4, 5 கோரிக்கைகளை மாநாட்டிலேயே நாங்கள் நிறைவேற்றியிருக்கிறோம். அப்படி ஆசிரியர்கள் மாநாட்டிலேகூட கோரிக்கைகள் எடுத்துக் கூறப்பட்டிருந்தன. அது புதிதல்ல. ஆனால் அந்த மாநாட்டினை நடத்தியவர்கள், அந்த மாநாட்டினுடைய விளம்பரங்கள், நிகழ்ச்சிக் குறிப்புகள் இவைகளையெல்லாம் அரசியல் ரீதியாகத் தயாரித்திருந்தது உள்ளபடியே வருந்தத்தக்க ஒன்றாக இருந்தன. அனைத்துக் கட்சிகளினுடைய தலைவர்களும் அழைக்கப்பட்டிருந்தார்கள். அதை நான் ஒரு குறையாகச் சொல்லவில்லை. அதிலே சிறை சென்ற (பி.ப. 6–10) ஆசிரியர்களுக்கு விருது வழங்குதல் என்கிற ஒரு நிகழ்ச்சி இணைக்கப்பட்டிருந்தது. சிறை சென்ற ஆசிரியர்களுக்கு விருது வழங்குதல் என்ற நிகழ்ச்சியை இணைக்கப்பட்டதன் காரணமாக என்ன பேசப்படும் என்று பார்த்தேன். எந்தெந்த வகையிலே அது விமர்சிக்கப்படும்? அமைச்சர்களை உட்கார வைத்துக்கொண்டு அல்லது அமைச்சர்கள் கலந்து கொள்கின்ற நிகழ்ச்சியிலே அப்படி ஒரு காரியம் நடைபெறுவதை, எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் வருகின்ற பொறுப்பிலே இருப்பார்களானால், நிச்சயமாக ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அதை நண்பர் திரு. முத்துசாமி உணராதவர்கள் அல்ல. அது மாத்திரம் அல்ல. இந்த அரசாங்கம் ஆசிரியர்களுக்கு பல நன்மைகளை செய்திருக்கிறது என்று இப்போது சொன்னார்கள்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 பிப்ரவரி 7

செய்த நன்மைகள் பற்றி நன்றி உணர்வோடு, இவைகள் எல்லாம் செய்திருக்கிறார்கள், நன்றி தெரிவித்துக்கொள்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால் செய்த நன்மைகள் யாவற்றையும் நாங்கள் வாதாடிப் பெற்றோம், போராடிப் பெற்றோம் என்கின்ற ரீதியிலே அவர்கள் அந்த அறிக்கைகளை வெளியிட்டிருக்கிறார்களே தவிர வேறு இல்லை. கேட்காமலேயே பல கோரிக்கைகளை ஏற்று ஆசிரியர்களுக்காக இந்த அரசு 5 ஆண்டுக் காலத்திலே எவ்வளவோ செய்து முடித்திருக்கிறது. எவ்வளவோ கஷ்ட நஷ்டங்களுக்கு இடையே, பணச் செலவுகளுக்கு இடையே, இந்த அரசு எந்தக் காரியங்களாக இருந்தாலும், செய்து முடித்திருக்கிறது. எந்த உணர்ச்சியோடு அவர்கள் அங்கே கூடினார்கள் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு சொல்ல வேண்டுமானால், நானும் கல்வி அமைச்சர் அவர்களும் செல்லவில்லை என்று செய்தி வந்த பிறகு, அவர்கள் "காணோம், காணோம் கருணாநிதியைக் காணோம்" என்பது போன்ற முழக்கங்களை ஆசிரியர்கள் எல்லாம் அங்கே எழுப்பியிருக்கிறார்கள். ஆசிரியர்களே இப்படிப்பட்ட முழக்கங்களுக்கு உட்பட்டுவிடுவார்களானால், அவர்களால் பயிற்றுவிக்கப்படுகின்ற மாணவர்களுடைய நிலை என்ன ஆகும் என்கின்றது பற்றியும் எதிர்காலத்தைப் பற்றியும் நாம் கவலைப்பட வேண்டியவர்களாக இருக்கிறோம். பத்திரிகையிலே கூட செய்தி வந்திருக்கிறது. கல்வியமைச்சர் நாவலர் அவர்களுடைய தந்தியை திரு. முத்துசாமி அவர்கள் படிக்க ஆரம்பித்தபோது, அதை கிழித்து எறியுங்கள், படிக்க வேண்டாமென்று எல்லா ஆசிரியர்களும் அங்கே முழக்கமிட்டார்கள் என்ற செய்தி வந்திருக்கின்றது. அமைச்சர் அவர்கள் வரவில்லை என்று சொன்னதும், "வர வேண்டாம், வர வேண்டாம்" என்று ஆசிரியர்கள் சொல்லியிருக்கிறார்கள். இப்படி நாங்கள் வர விரும்பாதவர்கள் வேறு ஏதோ உணர்ச்சியோடு அங்கே கூடியிருக்கிறார்கள். இப்படி அன்று அந்த மாநாட்டில் நடக்கும் என்பதற்கான செய்திகளை அறிந்த காரணத்தாலேதான் நான் அந்த மகா நாட்டிற்குப் போவது நல்லதல்ல என்று தவிர்க்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. நாங்கள் போய் அங்கே ஏற்படுகின்ற வேறு பல சூழ்நிலைகள் அமையக்கூடாது என்பதற்காக அதை நாங்கள் தவிர்த்தோம் என்பதனை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் வருத்தத்தோடு சில விஷயங்களைச் சொன்னார்கள். "கிழித்து

1973 பிப்ரவரி 7] [திரு. செ. முத்துசாமி]

எறியுங்கள்" என்று மகாநாட்டிலே சொல்லப்பட்டது என்று எந்தப் பத்திரிகையில் போடப்பட்டிருந்தாலும், அது ஆசிரியர்கள் சொன்னது அல்ல என்பதைத் தான் இந்த அவையிலே தெரிவித்துக் கொள்கிறேன். முதன் முறையாக கல்வியமைச்சர் கொடுத்த தந்திக் கடிதத்தைப் படித்துவிட்டு, இரண்டாம் முறை படிக்கிறேன் என்று சொன்னபோதுதான், படிக்க வேண்டாமென்று சொன்னார்களே தவிர, ஒரு முறை படித்துக் காட்டப்பட்டது. அது தான் அங்கே சொல்லப்பட்டது. "காணோம், காணோம்.". (குறுக்கீடுகள்) நான் உண்மையைச் சொல்கிறேன். நான் அந்த மகாநாட்டின் பொதுச் செயலாளர். ஒவ்வொரு பத்திரிகையிலும் ஒரு அறிக்கை கொடுத்தால் போடும்போது ஒவ்வொரு விதமாக எழுதிவிடுகிறார்கள். நடுநிலைப் பத்திரிகைக்கு ஒரு அறிக்கை கொடுத்தாலும், ஒவ்வொரு பத்திரிகையிலும் அரசியல் நோக்கத்திலே போட்டு விடுகிறார்கள். இதுதான் விஷயம். இந்த மகாநாட்டிற்கு முன்னால் சில நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. "காணோம், காணோம்" என்று முதலமைச்சர் அவர்களைப்பற்றிச் சொன்னதாகச் சொன்னார்கள். அப்படிப்பட்ட கோஷங்கள் மகாநாடு முடியும்வரை எழுப்பப்படவில்லை என்பதை நான் உறுதியாக இந்த இடத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இந்த அரசுக்கு நன்றியே தெரிவிக்கவில்லை என்றார்கள். பாராட்டும், நன்றியும் என்ற ஒரு தலைப்பிட்டு தீர்மானம் இரண்டிலே இந்த மாநாட்டில், ஆறும் ஐந்தும்—பதினொன்று தீர்மானங்களுக்கு மேல் "பாராட்டும் நன்றியும்" என்றே போடப்பட்டிருக்கிறது என்பதை முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இந்த அறிக்கையை நான் அவர்களுக்கும் அனுப்பியிருக்கிறேன். அதிலிருந்துதான் இப்போது படித்தார்கள். ஆசிரியர் சமுதாயத்தில் சில அரசியல் விஷயங்கள் இருக்கின்றன என்பதுபற்றி நான் உணர்ந்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். உண்மையாகவே நான் சொல்லுகிறேன். ஆசிரியர் சமுதாயம் அரசியலுக்கு ஆட்பட்டு விடக்கூடாது என்பதற்காகத்தான் எவ்வளவோ முயற்சிகளை எடுத்து இந்தக் காரியங்களை எல்லாம் நான் செய்தேன். அதை ஒரு வேளை இப்படிப்பட்ட நிகழ்ச்சியாக நடத்துவதன் மூலம் ஒரு வேகமான உணர்ச்சி வந்துவிடும் என்று கருதியிருப்பார்களானால், நான் ஏற்கெனவே முதலமைச்சர் அவர்களிடத்தில் சொன்னேன். **என்.ஜி.ஜி.ஓ.க்கள்** மகாநாட்டிலே நடத்தப்பட்டதே, அதே போலத்தான் நடத்தப்போகிறோம் என்று 'சொன்னேன்.

[திரு. செ. முத்துசாமி] [1973 பிப்ரவரி 7

என்.ஜி.ஜி.ஓ. மகாநாட்டிலே எதிர்க் கட்சித் தலைவர்களை அழைத்திருந்தார்கள் என்பது முதலமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். கல்வி மையத்துக்கு 4 நாட்களுக்கு முன்னே நானே 'போன்' பண்ணிச் சொன்னேன். அப்போது அவர்கள் இந்த நிகழ்ச்சியைப் பற்றிச் சொன்னார்கள். அப்போது நான் சொன்னேன் இந்த நிகழ்ச்சியில் எதையும் இல்லாதது பற்றி நான் உறுதி கூறினேன். எதாவது நடந்தால் என்னுடைய தலைமையிலே நான் இனி ஆசிரியர் சமுதாயத்திற்கு விளக்கம் கொடுக்கத் தயாராக இல்லை என்று உறுதி சொன்னேன். அன்றைக்கு நான் சொல்லி டாக்டர் அவர்களிடமிருந்து செய்தி வந்தபோது. . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர்களுடைய அச்சடித்த பேச்சே இங்கே என்னிடத்தில் இருக்கிறது. அச்சடித்த பேச்சு என்றால் முகவிலேயே எல்லோருக்கும் கிடைத்துவிடும் என்பது இங்கே இருக்கின்ற மாண்புமிகு அங்கத்தினர்கள் எல்லோருக்கும் தெரியும். அன்பன் முத்துசாமி, பொதுச் செயலாளர் என்று போடப்பட்டு, கோவை மகாநாடு பேச்சு அந்த பேச்சிலேயே அமைச்சர்கள் எந்த அளவுக்குக் கருதப்படுகிறார்கள் என்பதற்கான உதாரணத்தை நாம் தெரிந்துகொள்ளலாம். அவர்கள் பொருள்களை எல்லாம் வாங்கிவிட்டார்கள். அதை வைப்பதற்கு இடம் வேண்டும் என்பது கோரிக்கை. கோரிக்கையை கனிவாகவும் தரலாம். அதே நேரத்தில் அமைச்சர்களை மதித்தும் மரியாதை தந்தும் அந்தக் கோரிக்கைகளைத் தரலாம். அவர்களுக்கு இங்கு கவர்ன்மென்ட் எஸ்டேட்டில் ஆசிரியர்களுக்கு ஒரு கட்டிடம் கட்டுவதற்காக இடம் தர வேண்டுமென்று கேட்டபோது, அதைத் தருவதாக வாக்களிக்கப்பட்டிருக்கிறது. அப்படி கிராம பஞ்சாயத்து யூனியனுக்கும் ஒரு இடம் வேண்டும் என்று கூட அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் எந்தெந்த இடத்திலே யார் யாருக்கு ஒதுக்குவது என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். இதற்கிடையிலே திரு. முத்துசாமி அவர்களே என்னையும் நாவலர் அவர்களையும் அதுபற்றி சந்தித்துக் கேட்டபோது. நாங்கள் பரிசீலித்துக் கொண்டிருப்பதாகச் சொல்லியிருக்கின்றோம். ஆனால் அதில் போடப்பட்டுள்ள வாசகத்தைப் படித்துக் காட்டுகின்றேன். அவர் பேசுகின்றார் "அமைச்சர்களைப் பார்த்துக் கேட்கிறது வியக்கும், இவற்றை எங்கே வைப்பது? விடை பகர்ந்தேயாக வேண்டும்". இது எங்களை மேடையிலே உட்கார வைத்துவிட்டு பேச இருந்த பேச்சு, பேசிய பேச்சு, நல்ல

1973 பிப்ரவரி 7] [டாக்டர் மு. கருணாநிதி]

வேளை நாங்கள் இல்லை. இதற்கு அவகாசமோ நாளோ இதற்குச் சொல்ல முடியாது. காரணம் இவற்றைத் தெருவிலே எறிய முடியுமா? ஆகவே அமைச்சர்கள் சென்னையிலே ஒரு இடம் காலி செய்து—அடிநிலம் பெற்று கட்டிடம் கட்டும்வரை—இது பிராக்கெட்டில், ஆகவே ஒரு இடம் காலி செய்து தர இம்மேடை மீதே வழி சொல்ல வேண்டும் என்று வேண்டுகிறோம். நெருக்கடி செய்கிறதாக எண்ண வேண்டாம். ஆசிரியர்களுடைய வேகம் பொருள்களைக் குவித்துவிட்டது. அரசினர் இயந்திரத்தின் ஆமை வேகம் இந்த நெருக்கடியைத் தந்துள்ளது. அடி நிலம் எங்கே? ரூபாய் 3 லட்சம் எப்போது? இது கோரிக்கையா? அமைச்சர் அவர்களை வைத்துக்கொண்டு கேட்கின்ற கோரிக்கையா இது? அப்படியே கால தாமதம் ஆனாலும் கூட நாங்கள் வாக்களித்தபடி அடி நிலம் வாங்க வேண்டுகிறோம் என்று சொல்லக் கூடாதா? அந்த மூன்று லட்சம் அதற்காகத் தருவதாக வாக்களித்தீர்களே, அதைத் தரவில்லை, அதற்காக வருந்துகிறேன், அதை உடனடியாக அளிக்க வேண்டுமென்று கூறக் கூடாதா? இதையெல்லாம், மாணவர்களுக்குக் கற்றுத் தர வேண்டிய ஆசிரியர்களே, அமைச்சர்களை மேடையிலே உட்கார வைத்துக் கொண்டு "அடி நிலம் எங்கே? 3 லட்சம் எப்போது?" என்று அப்போது கேள்விக் கணைகளைத் தொடுக்க, அதை அமைச்சர்கள் உட்கார்ந்து கேட்க, அதற்கு ஆசிரியர்கள் எல்லாம் குரல் எழுப்புகிற நேரத்திலே, கை தட்டி, பதில் சொல், பதில் சொல் என்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டு, இதையும் நாங்கள் பொறுத்துக் கொண்டு உட்கார்ந்துகொண்டு இருக்க வேண்டுமா என்பதையும் யோசிக்க வேண்டும். அதைப் போலவே இதைச் செய்க, அதைச் செய்க என எல்லோருமே எங்களைப் பார்த்துச் சொல்கிறீர்கள் இறைவன் என்கிறீர்கள், நாட்டின் முதுகெலும்பு என்றும் செய்வது தொழில் அல்ல தொண்டு என்றும் சொல்கிறீர்கள். ஆசிரியர்கள் நினைத்தால் எதையும செய்யலாம் என்று சொல்கிறீர்கள். இது எல்லாம் வீணான ஆரவாரமாகும். இது எல்லாம் கட்சித் தலைவர்களுக்கும் ஆசிரிய மக்கள் மகா நாட்டில் தரப்பட்ட மதிப்புரையாகும். "இப்படி நீண்ட காலமாக சென்னை மாநிலம் கல்வித் துறையில் முன்னேற்றம் என்று சொல்லி வந்தது இன்று வெறும் பேச்சாக, உண்மையற்றுப் போய்விட்டது." இதையும் அமைச்சர்களை உட்கார வைத்துக்கொண்டு ஆசிரியர்கள் பேச வேண்டும், நாங்கள் கேட்டுக்கொண்டிருக்க வேண்டும். இது நியாயமா என்பதை மாத்திரம் அவர் சொன்னால் போதும்.

6–20 பி.ப. **திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையிலே ஆசிரியச் சமுதாயத்தினுடைய எண்ணங்களை, மாநாட்டு அறிக்கையாக வடிவெடுக்கக்கூடியதை, சில விஷயங்களில் வேகம் இருப்பதாகவும், இதையே வேறு மொழியிலே, தமிழிலே கனிவாக எழுதியிருக்கலாம் என்றும் ஆலோசனை சொன்னார்கள்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் :

'இனிய உளவாக இன்னாத கூறல் கனி
இருப்பக் காய் கவர்ந்தற்று' என்பது போல.

திரு. செ. முத்துசாமி : எங்களுக்கு வேகமாகவே சொல்லி ஏதாவது சங்கடத்தை உண்டாக்க வேண்டுமென்ற நிலையிலே நாங்கள் இல்லை. எங்களுக்கு வேண்டியது காரியம். அந்தக் காரியத்தை இன்னும் கனிவாகச் செய்ய வேண்டும். உங்களுடைய உணர்ச்சியை எழுதியிருக்கின்றீர்கள். உணர்ச்சிக்குக் கனிவு தேவை என்று சொல்லியிருக்கிறீர்கள். அதை நாங்கள் கடைப்பிடிக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால். . .(குறுக்கீடு) நான் ஒரு ஆரம்பப் பள்ளி ஆசிரியன். நான் புலவன் அல்லன். எனக்குத் தெரிந்த தமிழிலே, நான் அறிந்த சொற்களின் அடிப்படையிலே, முடிந்த அளவுக்கு என்னுடைய உணர்ச்சியை அப்படியே வெளியிட்டிருக்கிறேன். அந்த உணர்ச்சியிலே சிறிது வேகம் தென்படுமானால், இந்த நாட்டை ஆளுகின்ற பெரிய பொறுப்பிலே இருக்கக்கூடியவர்கள் அதை விடுத்து, ஆசிரியர்களுடைய கருத்துக்களை மட்டுமே ஏற்றுக்கொள்ள வேண்டும். நான் சட்ட சபையிலேகூட ஒரு உறுப்பினர் அவர்கள் பேசுவதைக் கேட்டேன். அவர், "யார் சொல்கிறார்கள், எதைச் சொல்கிறார்கள் என்று இந்த அரசு பார்ப்பதில்லை. கருத்து என்ன என்பதைப் பார்த்து செயல்படுகிறது" என்று சொன்னார்கள். நானும் பெருமைப் பட்டேன். அந்த அடிப்படையிலே இதிலே இருக்கக்கூடிய சொற்களைப்பற்றிக் கவலைப்படாமல், அந்தச் சொற்களைக் கவனியாமல், அவர்கள் வேதனைப்பட்டுச் சொன்னதை நான் உணர்கின்றேன். நான் ஏற்கின்றேன். எங்களுக்கு இரண்டு ஆண்டுக் காலமாக. . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆசிரியர்கள் முதலிலே உண்மையைப் போற்ற வேண்டும். உண்மையைக் கற்றுத்தர

வேண்டும். என்னிடத்திலேயும் கல்வி அமைச்சர் அவர்களிடத்திலேயும் சொன்னதாகத்தான் மகா நாட்டிலே ஒன்றைப் பேசியிருக்கிறீர்கள். "இந்த இயக்கம் ஆளும் கட்சிக்கு அடிமையாகவோ, எதிர்க் கட்சிகளுக்கு எடுபிடிகளாகவோ என்றும் செயல்படாது. எங்கள் இந்த இயக்கம் தன் கொள்கைக்கு இணங்க அதுவும் அதன் பொதுக்குழு வகுக்கும் கொள்கைக்கு இணங்க இன்றைக்குச் செயல்படும்", என்று என்னிடத்திலே, நாவலர் இடத்திலே சொன்னதாக, தாங்கள் மகா நாட்டிலே பேசியிருக்கிறீர்கள். என்னுடைய இல்லத்திலே வந்து பேசியதாக எழுதியிருக்கிறீர்கள். எங்கே அப்படிப் பேசினீர்கள்? "ஆளும் கட்சிக்கு அடிமையாகவோ, எதிர்க் கட்சிக்கு எடுபிடிகளாகவோ இருக்க மாட்டோம்". இங்கு அப்படிப் போட்டிருக்கிறது. ஆக ஆளும் கட்சியையும் நீங்கள் மதிக்கவில்லை. உங்களுக்காக சில நேரங்களில் வாதாடுகின்ற எதிர்க் கட்சியையும் நீங்கள் மதிக்கவில்லை. தேவையில்லாத வார்த்தை. நாங்கள் ஆளும் கட்சிக்காகவே இருக்கவும் மாட்டோம், அதற்காக எதிர்க் கட்சிக்காக நாங்கள் அரசியலிலே ஈடுபடவும் மாட்டோம் என்று வாசகங்கள் சொல்லலாம். அதை விட்டுவிட்டு ஆளும் கட்சிக்காக அடிமையாகவும் இருக்கமாட்டோம், எதிர்க் கட்சிகளுக்கு எடுபிடிகளாகவும் இருக்க மாட்டோம் என்று இருக்கிறது. ஆளும் கட்சியும் உங்களுக்குத் தேவையானவைகளைச் செய்கிறது. எதிர்க் கட்சி உங்களுக்காக வாதாடுகிறது. இரண்டு கட்சிகளையும் பகைத்துக்கொள்கின்ற அளவுக்கு நீங்கள் வாசகங்களைப் போட்டிருக்கிறீர்கள். இதை உங்கள் நலத்திற்குத்தான் சொல்லுகிறேன். அது மாத்திரம் அல்ல, என்னிடத்திலேயும் நாவலர் அவர்களிடத்திலேயும் வேறு சொன்னதாக இந்தப் பேச்சிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

திரு. செ. முத்துசாமி : மேலவைத் துணைத் தலைவரவர்களே, நவம்பர் மாதம் 15-ம் தேதி அவரோடு பேசிக்கொண்டிருக்கும் போது நான் இந்தக் கருத்தைச் சொன்னேன். நான் சொன்னதால் தான் எழுதினேன். சில இடங்களில் பக்குவமாகச் சில விஷயங்களைச் சொல்ல வேண்டும், சில விஷயங்களைச் சொல்லக் கூடாது என்கிற நடைமுறையில், வேண்டுமானால் அதிலே விடப்பட்டிருக்கலாமே தவிர, என்னைப் பொறுத்த அளவிலே, அந்த அளவிற்குக் கடுமையாக எதிர்க் கட்சிகளைச் சாடவேண்டும், ஆளும்

ரவர்கள் எவ்வளவு பெரிய சங்கடமான சூழ்நிலைகளையும் தீர்த்துக் கொண்டிருக்கக் கூடியவர்கள். இன்றைக்கு இருக்கக்கூடிய பிரச்சினை இதுதான், எங்களுடைய வெள்ளிவிழா மாநாட்டுத் தீர்மானங்கள் மீது எங்கள் இயக்கத்தினரை அழைத்துப் பேசி எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, சி.டி.டி. நாங்கள் சேமிக்கிறோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அடிக்கடி குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். ஏனென்றால், மாண்புமிகு நண்பர் திரு. முத்துசாமி அவர்கள் ஏதோ வேறு ஒரு கட்சி ஆசிரியர்களை அல்லது வேறு ஒரு தரப்பு ஆசிரியர்களை ஊக்கப்படுத்துவதாகச் சொல்கிறார்கள். இப்போது யார் தங்களுடைய கோரிக்கைகளை முன் வைத்து எங்களுக்கு வசதியான தேதிகளில் எங்களை அழைத்தால் நாங்கள் கலந்துகொள்வோம், அரசு அலுவலர்களாக இருந்தாலும், ஆசிரியர்களாக இருந்தாலும், முடியுமானால் கலந்து கொள்கிறோம், எதிர்க் கட்சிகளுக்கு எடுபிடிகளாக இருக்கமாட்டோம் என்று சொன்னார்கள்? ஆனால் மறைமுகமாக அவர்கள் எந்தக் கட்சியில் தொடர்பு கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு அவர்கள் நடத்துகிற பத்திரிகையிலிருந்தே என்னால் ஆதாரம் காட்ட முடியும். ஆசிரியர் கூட்டணி என்ற மறைமுகமாக அரிவாள், சுத்தியல் இவைகளெல்லாம் அலங்கரிக்கப் கொண்டிருக்கிற அந்தப் பத்திரிகையில் கூட்டணி என்று எழுதப் பட்டிருக்கிறது. எழுத்திலே கோலம் போலப் போட்டு மிக மறைமுகமாக அறிவாள், சுத்தியல் இவைகளெல்லாம் அலங்கரிக் பட்டிருக்கிறது. இரண்டு பிசசுவா கத்திகள் அரிவாள், சுத்தியல் இவைகளெல்லாம் இதிலே இடம் பெற்றிருக்கின்றன. இது அரிவாள், சுத்தியல் அல்ல என்று சொல்வார்களா என்று கேட்கிறேன். நமது மாண்புமிகு கல்வி அமைச்சர் ஒரு மாநாட்டிலே கலந்துகொண்டு, அதிலே பேசும்போது, “ ஒலிம்பிக் பந்தயத்தில் 50 தங்கப் புதக்கங்களை சோவியத் ரஷ்யா தட்டிக்கொண்டு போய் விட்டது. நம் நாட்டிற்குப் பதக்கம் கிடைக்கவில்லை ”, என்று சொன்னார்கள். அப்படிச் சொன்னதை வரவேற்று நாம் அவைகளிலே அதிக கவனம் செலுத்த வேண்டுமென்ற முறையில் நாசூக்காக ஒரு கட்டுரை எழுதியிருந்தால், அதை நாம் பாராட்டலாம். ஆனால் ஆசிரியர் கூட்டணிப் பத்திரிகையில், நண்பர் திரு. முத்துசாமி ஆசிரியராக இருக்கிற பத்திரிகையில், என்ன எழுதினார்கள்

தெரியுமா ? “ தலைமை தாங்கிய கல்வியமைச்சர் ஒலிம்பிக் விளையாட்டுகளில் இந்தியா வெற்றி பெறவில்லை என்று வருத்தப் பட்டார். அவர் ஏன் வருத்தப்படவேண்டுமென்று பக்கத்தில் அமர்ந்திருந்த நண்பர் என்னிடம் கேட்டார். ஆம், உண்மைதான். அவர் வெட்கப்படத்தான் வேண்டும். ஒலிம்பிக் பந்தயத்தில் 50 தங்கப் பதக்கங்களைத் தட்டிச் சென்ற சோவியத் யூனியனுக்கு அது சும்மா வரவில்லை. சின்னஞ்சிறு நாடான கொரியாவிற்கு வல்லரசை எதிர்த்து நின்று போராடி, அதில் தனது வருமானத்தைப் பெரும் பங்கு செலவு செய்கிற வட கொரியாவிற்குக் கூட தங்கப் பதக்கம் கிடைத்துள்ளது. ஆனால் பாரதத்திற்குக் கிடைக்கவில்லை. சும்மா வருமா தங்கப்பதக்கம், கிடைக்கவில்லையே என்று மூக்கால் அழுது என்ன பயன்? ” என்று ஒரு கல்வியமைச்சரைப்பற்றி ஆசிரியர்கள் சார்பாக நடத்தப்படுகிற பத்திரிகையில் வருகிற வார்த்தைக் கோவை இது. இந்த நிலைமையிலே ஒரு கட்சி சார்பை மறைமுகமாக வைத்துக்கொண்டு அவர்கள் இந்த இயக்கத்தை நடத்துகிறார்கள் என்பதற்கு இதைவிட வேறு சான்று எனக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, நம்முடைய முதலமைச்சரவர்கள் எங்களுடைய ஒவ்வொரு விஷயத்தையும் நுணுகி ஆராய்ந்து, இப்படி ஒரு பிரச்சினையைச சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கூட்டணி என்ற வார்த்தைக்கு எங்களுடைய சித்திரபாணி என்பவர் முதலில் இந்த டிராயிங்கை வரைந்தார்கள். பத்திரிகை ஆரம்பிக்கக்கூடிய வேகத்திலே எல்லா எழுத்துக்களையும் போடுவதற்கு தொடங்கியபோது நான் முதலெழுத்தோடு நிறுத்திவிட்டேன். முதன் முதலில் இந்தப் பத்திரிகையை ஆரம்பித்து வைத்தவரே கல்வியமைச்சர் நாவலர் அவர்கள் என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். அன்றைக்கே சொல்லியிருப்பார்களானால், அன்றைக்கே தெரிவித்திருப்பார்களானால், எங்கள் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்குமானால், நாங்கள் நிச்சயமாக நீக்கியிருப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப் பட்ட விமர்சனங்கள் வருவதால், நாங்கள் வேறு ஆசிரியர் கூட்டணித் தலைப்பையே போட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பிச்சுவா, சுத்தியல் பற்றியெல்லாம் சொன்னார்கள். கார்மேகம் வானத்தில் இருப்பதில் என்னென்ன

[திரு. செ. முத்துசாமி] [1973 பிப்ரவரி 7

கட்சியைச் சாடவேண்டுமென்ற நோக்கத்தில் இல்லை. எப்படிப் பார்த்தாலும், நாங்கள் கோரிக்கைகளைக் கேட்கும்போது, எங்கள் பேரில் அரசியல் சாயம் பூசப்படக்கூடிய காரணத்தினால் தான், நாங்கள் இவ்வளவு வேகத்திலே இப்படி ஒரு விஷயத்தைச் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சற்று முன்னர்கூட முதலமைச்சர் அவர்கள் அரசியல் கலந்திருப்பதாக நான் உணரக்கூடிய சந்தர்ப்பங்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அதனால்தான் நாங்கள் அத்தகைய வார்த்தைகளை அதிலே போட சம்மதிக்கிறோமே தவிர, வேறு அல்ல. நாங்கள் கோரிக்கைகளைக் கேட்கும்போது எதிர்க் கட்சிக்காரர்கள் தூண்டிவிடுகிறார்கள், எதிர்க் கட்சிக்காரர்கள் தூண்டிவிடுகிறார்கள் என்று பல பிரச்சினைகளை எழுப்புகிறார்கள். இந்தக் கோரிக்கைகளைச் செயல்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்தக் கோரிக்கைகளைச் செயல்படுத்துவதற்கான முறைகளிலே ஆசிரியர் சமுதாயத்திற்கு ஒரு இயக்கம், தமிழ் நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி என்று இருக்கிறது. அதற்கு எதிராக ஒரு இயக்கம் நடப்பதாகவும் அந்த இயக்கம் செயல்பட்டு வருவதாகவும்கூட சொல்லப்பட்டு, அப்படிச் செயல்பட்டு வரக்கூடிய அந்த மாநாட்டில் அமைச்சர்கள் கலந்து கொள்வார்கள் என்று கூட செய்திகள் வந்திருக்கின்றன. நான் முதலமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இப்படி நடந்திருக்கிற பிரச்சினைகளில், இந்த அறிக்கைகளில் உங்களுக்குச் சங்கடம் இருக்கக்கூடிய விஷயங்கள் இருக்குமானால், அந்த சங்கடத்தை நீக்கிக்கொள்ள வேண்டுமென்று நான் உங்களை இந்த அவையின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர் சமுதாயத்திற்குக் கிடைக்க வேண்டிய நன்மைகளை நீங்கள் செய்ய வேண்டும். அதற்காக இந்த இயக்கத்தினுடைய செயற்குழு இந்தத் தீர்மானங்கள் மீது உங்களைப் பேட்டி காணத் தயாராக இருக்கிறது. இந்தப் பிரச்சினைகள் எவ்வாறு தீர்க்கப்பட வேண்டுமென்பதைக் கவனிக்க எங்களுடைய மாநில செயற்குழு வரவிருக்கிறது என்பதையும் அதற்கான தேதி வழங்கி ஆசிரியர் சமுதாயத்திற்கான இந்த நன்மைகளை நீங்கள் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

1973 பிப்ரவரி 7] [திரு. செ. முத்துசாமி]

அடுத்து, கூட்டுக் கல்வி, ஜாயிண்டு எஜுகேஷன் கவுன்சில் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். ஆசிரியர் பிரச்சினைகள் ஏராளமாக இருக்கின்றன. நான் பட்டதாரி ஆசிரியர்கள் போராட்டம் நடத்தி சமாதானம் ஏற்பட்ட நேரத்தில் முதலமைச்சரவர்களிடத்தில் சொன்னேன். இந்தக் கருத்தை அவர்கள் ஆர்வத்தோடு ஒத்துக்கொண்டார்கள். இந்தக் கூட்டுக் கல்விக் குழு அமைப்பதன் மூலம் ஆசிரியர் சங்கத்தினுடைய பிரதிநிதியும், கல்விச் செயலாளரும், கல்வி அதிகாரிகளும் ஒரு மாதத்திற்கு ஒரு முறையோ அல்லது இரண்டு மாதத்திற்கு ஒரு முறையோ உட்கார்ந்து பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான செயலில் ஈடுபட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இப்போது இந்த ஆசிரியர் இயக்கத்திற்கு எதிராக ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் உள்ள சேர்மன், எம்.எல்.ஏ.க்கள், இன்னும் சில பேர் ஆசிரியர்களைத் தொந்தரவு செய்து வருவதாக இப்போது செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. ஆசிரியர் சமுதாயத்திற்கு உள்ள இயக்கம் இது. ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்பதை முதலமைச்சரவர்கள் கனிவோடு பல இடங்களில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களும் இதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆசிரியர் சமுதாயம் அரசியலுக்கு அப்பாற்பட்டு இயங்க வேண்டுமென்பதை ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது, இந்த இயக்கத்திற்கு எதிராக ஒரு இயக்கத்தை உற்பத்தி செய்து கொண்டிருக்கக்கூடிய முறையிலே மற்றவர்கள் உங்கள் பெயர்களைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். நான் இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்வது இந்த இயக்கத்திலே இருக்கக்கூடிய நடைமுறைகளிலே ஏதாவது தவறுகள் தங்களுக்குத் தென்பட்டால், இந்த உணர்ச்சிகளில், இந்தத் தீர்மானங்களில் ஏதாவது நடைமுறைக்கு ஒவ்வாது என்று தென்பட்டால், தயவுசெய்து எங்களை எந்த நேரத்தில் அழைத்தாலும், நாங்கள் வந்து பேசத் தயாராக இருக்கிறோம். இருக்கக்கூடிய நடைமுறைகள், ஆசிரியர் சமுதாயத்திற்காக இயங்கக்கூடிய இந்த இயக்கம் கோரிக்கைகளைப் பெற்றுத் தர வேண்டுமென்பதற்காகத் தானே தவிர, போராட்டத்திற்காக ஒரு போராட்டம் என்ற நிலையில் இல்லை. அரசு கவனித்துச் செய்யும்போது, நாங்கள் போராட வேண்டிய அவசியமில்லை என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். முதலமைச்ச

பார்ப்பவருக்குத் தெரிகிறதோ அந்த மாதிரியெல்லாம் தெரிவதாக கருதிப் போட்டோம். ஒவ்வொருவரும் குற்றச்சாட்டு சாட்டி வருகிறார்கள். இந்தக் குற்றச்சாட்டிற்கு இடம் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் அந்தத் தலைப்பையே மாற்றியிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே. மூக்கால் அழுகிறார் என்று எழுதுவது ஒரு மரபா? வேறு யாராவது எதிர்க் கட்சியில் எழுதலாம், நான் வேண்டாமென்று சொல்லவில்லை. எத்தனையோ எதிர்ப்புகள், எத்தனையோ ஏசல்கள், வேறு பத்திரிகைகளில் வருகின்றன. அது எதிர்க் கட்சிகளுக்குள்ள உரிமை. ஆனால் நீங்கள் உங்கள் இயக்கத்தை எதிர்க் கட்சியைப் போல நடத்துவதற்குத் தான் விரும்புகிறீர்களாவென்று நான் கேட்க விரும்புகிறேன். கல்வியமைச்சர் மூக்கால் அழுது என்ன பயன் என்று எழுதுகிறீர்களே. மாணவர்கள் படித்தால் கூட அவர்களுக்கு நீங்கள், சொல்லித் தரும்பொழுது, அழுகை கண்ணால் தான் வரும் என்று சொல்லிக் கொடுக்க வேண்டும். மூக்கால் அழலாம் என்று சொல்லிக் கொடுத்தால் அது நல்லதல்ல.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, நாட்டில் வழங்கக் கூடிய பழமொழியை வைத்து, மூக்கால் அழுகிறார் என்று கட்டுரையாளர் இதை எழுதியிருக்கிறார். இப்படிப்பட்ட விஷயங்கள் பொறுப்பிலே இருக்கக்கூடியவர்களைக் கஷ்டப் படுத்துகிறதென்று சொன்னால், அவைகள் எதிர்காலத்தில் நீக்கப் படுமென்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். முதலமைச்சரவர்கள் எங்கள் இயக்கத்தில் என்னென்ன குறைபாடுகள் இருக்கிறதென்று அவர்கள் உணர்ந்ததாகக் கருதுகிறார்களோ, அவைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் அவைகள் அத்தனையையும் அன்போடு ஏற்றுக்கொள்கிறேன் என்பதைச் சொல்லி, அவைகளை மாற்றிக் கொள்ளுகிற முயற்சிகளிலே ஈடுபடுகிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். கொரியா என்ற சின்னஞ்சிறு நாட்டை எடுத்துக் காட்டியதாலே அதிலே ஏதோ இருக்கிறதென்று சொன்னார்கள். என்றால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஏதாவது ஒரு காரணத்தை இட்டுச் சொல்லி தங்களுக்கு ஏற்படக்கூடிய உணர்ச்சிகளைச் சொல்வதென்றால், அது நிச்சயமாக எங்களுடைய குற்றமாக இருக்க முடியாது. எதிர்காலத்தில் இத்தகைய சங்கடங்கள் இல்லாத

அளவிற்கு இந்தப் பத்திரிகை தங்களுடைய வார்த்தைகளை மதிக்கிற அளவிற்குச் செயல்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இது எதிர்க் கட்சியாக செயல்படுமாவென்று கேட்டார்கள். இது எதிர்க் கட்சியாகச் செயல்படாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இது ஆசிரியர் இயக்கமாக, ஆசிரியர் கட்சியாகச் செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆதலால் இந்த ஆசிரியர் சமுதாயத்தில், பஞ்சாயத்து யூனியன், மற்ற இடங்களிலெல்லாம் இருக்கக்கூடிய கஷ்டங்களை நீக்குவதற்கான முயற்சிகளிலே ஈடுபடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த சி.டி.டி. பிரச்சினையில் ஏற்பட்டுள்ள ஊழல்களை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இண்டக்ரேஷன் பிரச்சினையில் 'கம்பிளிட் இண்டக்ரேஷன்' கொண்டு வரவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். 'கம்பிளிட் இண்டக்ரேஷன்' தான் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்குச் சரியான சொல்யூஷன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஹாஸ்டலிலே ஒரு உணவு விடுதி இருக்கிறது. சைவம் சாப்பிடலாம் என்று போனால், அசைவக் கடை வைத்திருக்கிறவர் மறுபடியும் சைவத்திற்கு வந்திருக்கிறார். நான் அதிகமாகத் தங்குகிறேன். முதலமைச்சர் சொல்வார்கள், நீங்கள் தான் இந்த பிரியட்டிலே அடிக்கடி சந்தித்திருக்கிறீர்கள் என்று சொன்னார்கள். அவ்வளவு சந்தித்தும் எங்களுடைய மாநாட்டிற்கு வர முடியாத சந்தர்ப்பம் உருவானதற்காக மெத்த வருந்துகிறேன். எத்தனை தடவை சந்தித்தும்கூட உங்களிடம் தேதி வாங்க முடியவில்லையே என்று சொல்லி, சண்டை போட்டுத் தான் தேதி வாங்குகிறோம். 20-ம் தேதியாக இருந்ததால் சொன்னேனே தவிர, 21-ம் தேதி இந்த டெவலப்மெண்டு கவுன்சில் வந்திருந்தால், சொல்லியிருக்க மாட்டேன் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, உணவு விடுதியைப் பொறுத்த அளவில் சைவ சாப்பாடு போடுகிற மாதிரி, ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. ஜி. என். ராஜு :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மேன்மை தங்கிய ஆளுநர் அவர்களுடைய பேருரைக்கு மாண்புமிகு உறுப்பினர் தோழர் காட்டூர் கோபால் அவர்கள் கொண்டுவந்த நன்றி அறிவிப்புத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுவதைப்பற்றி நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

[திரு. ஜி. என். ராஜு] [1973 பிப்ரவரி 7

பி.ப. 6-30 மாண்புமிகு மேலவைத் துணைத்தலைவர் அவர்களே, நான் இன்று பேசுவது என்னுடைய முதல் பேச்சு. அதைக் கன்னிப் பேச்சு என்று தமிழிலும், மெய்டன் ஸ்பீச் என்று ஆங்கிலத்திலும் கூறுவார்கள். அந்த முறையில் இந்த மேலவையில் கவர்னர் பெருமான் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது இரண்டு மூன்று நாட்களாக இந்த நாடாளுமன்ற முறையிலே அனுபவத்திலே முதிர்ந்தவர்கள் வயதினிலே முதிர்ந்தவர்கள், பேராசிரியர்கள், சிறந்த வழக்கறிஞர், முன்னாள் அமைச்சர்களாக இருந்தவர்கள் அத்தனை பேர்களுடைய பேச்சுக்களையும் நான் மிக நன்றாக, உன்னிப்பாகக் கவனித்து வந்தேன்.

ஆளுநர் அவர்கள் எந்த ஒரு நாட்டிலும், இந்த இந்திய அரசியல் சட்டத்தில் மாத்திரமல்ல, தென் கிழக்கு ஆசிய நாடுகளில், சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளிலும், நமக்குப் பக்கத்திலே உள்ள இலங்கை போன்ற இடங்களிலேயும் ஆளுநர் அல்லது கவர்னர் ஜெனரல் என்று ஒருவர் இருப்பாரேயானால், ஏன் இங்கிலாந்திலும்கூட, இந்த முறைதான் இருக்கிறது. பார்லிமெண்டரி முறை என்று எந்தக் கட்சி அரசை ஓட்டுகின்றதோ, அந்தக் கட்சி அந்த ஆண்டில் இந்த நாட்டுக்கு ஆற்றிய திட்டங்கள், இந்த நாட்டுக்கு ஆற்றிய முறைகள், இவைகளைப்பற்றி எடுத்துச் சொல்லவும், இனி எதிர்காலத்திலே அந்த அரசு எப்படி நடக்கும் என்று எடுத்துச் சொல்வதற்குமாகத்தான் கவர்னர் இருக்கிறார்' கவர்னர் ஜெனரல் இருக்கிறார். இதுதான் உலக வரலாற்றிலே மிக முக்கியத்துவம் வாய்ந்தது. இதைத்தான் நமது அரசியல் சட்டத்திலே உருவாக்கியிருக்கிறார்கள் மறைந்த மாமேதை டாக்டர் அம்பேத்கார் போன்றவர்களெல்லாம். அந்தப் பாரம்பரியத்தை அனுசரித்துத்தான் மேன்மை தங்கிய ஆளுநர் பெருமான் அவர்கள் சென்ற வாரத்திலே வெள்ளிக்கிழமையன்று இரு அவைகளையும் கூட்டி தன்னுடைய உரையை ஆற்றினார்கள். அந்த உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. காட்டூர் கோபால் அவர்கள் கொண்டு வந்தார்கள். அதை ஆதரித்துப் பல பேர் பேசினார்கள். எதிர்த்தும் பல பேர் பேசினார்கள். பேசும்பொழுது கவர்னர் உரையின் மீது எப்படிப் பேசுவது என்பதற்கு ஒரு வரையறை, ஒரு நியதி, ஒரு விதி எந்த நாட்டு நாடாளுமன்ற முறையிலும் இருப்பதாக என்னைப் பொறுத்த வரையிலும் தெரியவில்லை. கவர்னருக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை எதிர்த்தும் பேசலாம்

1973 பிப்ரவரி 7] [திரு. ஜி. என். ராஜு]

ஆதரித்தும் பேசலாம். ஆனால் பேசுபவர்கள், கவர்னர் உரைக்கு நன்றி அறிவிப்புத் தீர்மானத்தைப்பற்றிப் பேசும்போது தங்களுடைய அரசியல் வாழ்க்கை, தாங்கள் அரசியலில் நடந்து கொண்ட தன்மைகள், தாங்கள் தமிழ் நாட்டில் ஆட்சியிலேயிருந்து இறங்கி வந்தது, எப்படியெல்லாம் தாங்கள் அவதிப்பட்டார்கள், தாங்கள் தோல்வியுற்றது, இதையெல்லாம் இவ்வளவு காலம், 5, 6 ஆண்டுகள் ஆகியும்கூட மனதிலே தழும்பாக ஏற்றுக்கொண்டு பெரும் பகையாக வைத்துக்கொண்டு இன்னும் இருக்கின்றனரே, இந்த விரோதத்தை வைத்துக்கொண்டு பேசியதைப்பார்த்து, அதிலும் எனது மதிப்பிற்குரிய முதிர்ந்த வயதுள்ள அருமை நண்பர்கள் பேசுவதைப் பார்த்து, உள்ளபடியே இந்த நாட்டிலே ஜனநாயகம் வளர்வதற்கு இன்னும் ஒரு அரை நூற்றாண்டாவது பிடிக்கும் என்று என்னைப் பொறுத்த வரையில் நான் நம்புகிறேன். ஒரு நாட்டினுடைய அரசியல் கட்சி தோல்வியுறுவதும், இன்னொரு எதிர்க்கட்சி ஆட்சிக்கு வருவதும் உலக வரலாறு கண்ட உண்மை. அந்த வரலாறு கண்ட உண்மையிலேயே இந்த ஆறு ஆண்டுகளாக திராவிட முன்னேற்றக் கழக அரசு என்ன என்ன செய்திருக்கிறது, என்ன என்ன திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறது என்பதை நெஞ்சிலே கைவைத்து மனதார நன்மைகள் செய்திருந்தால், அதைப் பாராட்ட வேண்டும், அதுதான் அரசியலிலே தீர்க்க தரிசனமும், தூரதிருஷ்டியும் வாய்ந்த ராஜதந்திர நிபுணத்துவம் உடைய பேரறிஞர்களுடைய பாரம்பரியத்திலே வந்தவர்களுடைய கடமை.

நேற்றைக்கு முன்தினம் 4-ஆம் தேதியன்று கூவம் மணக்குமா என்று கேட்டார்கள். கூவம் மணப்பது மாத்திரமல்ல, கூவத்தில் உல்லாசமாகப் பொழுது போவதற்கு படகு சென்றது. மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், முன்னாள் அமைச்சர் திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் அத்தனை பேரும் படகிலே உல்லாசமாகக் கூவம் ஆற்றிலே போனார்கள். அந்தத் திறப்பு விழாவிலே முன்னாள் அமைச்சர் திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் எதில் நன்மை இருக்கிறதோ அதை நான் ஆதரிப்பேன் என்று சொன்னார்கள். நான் அப்பொழுது நினைத்தேன், 6 ஆண்டுகள் கழித்து இந்த அம்மையாராவது நான் ஆதரிப்பேன், நன்மை இருக்கிறது என்று ஒத்துக் கொண்டார்களே என்று பெருமூச்சு விட்டேன். எனது மதிப்புக்குரிய எதிர்க்கட்சி நண்பர்கள்

[திரு. ஜி. என். ராஜு] [1973 பிப்ரவரி 7

அத்தனை பேரும் இங்கே இருக்கின்றார்கள். அதுவும் மதிப்புக்குரிய நண்பர் திரு. சா. கணேசன் போன்றவர்கள், இன்னும் அத்தனை பேர்களும் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் மனதிலே நெஞ்சாரக் கைவைத்து யோசித்துச் சொல்ல வேண்டும். எதிர் வரிசையிலே உட்கார்ந்திருக்கிறோம் என்பதற்காக இருக்கிறார்களா அல்லது நெஞ்சத் துடிப்போடு நான் கேட்கிறேன், "எதைச் செய்யவில்லை திராவிட முன்னேற்றக் கழக அரசு?" இந்த நாட்டுக்கு தமிழ்நாடு என்று பெயர் வைத்த ஒன்றே போதாதா?" மெட்ராஸ் ஸ்டேட் சென்னை ராஜ்யம். அன்றைக்கு முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்களைக் கேட்டால், மெட்ராஸ் என்றால்தான் உலகம் பூராவும் புரியும். தமிழ் நாடு என்றால் தெரியாது. தொல்காப்பியம் பிறந்த தமிழ் நாட்டில், தமிழ் நாடு என்றால் தெரியாது, தமிழ் நாடு என்று பெயர் வைப்பதற்கே மதி இல்லாமல் அதையும் பேரறிஞர் அண்ணா வந்துதான் இது உன்னுடைய நாடு. இது தமிழ் மண், உனக்குச் சொந்தம், நாம் இருக்கும் நாடு நமதென்பதறிவோம், இது நமக்கே உரிமையாம் என்பதறிந்தோம் என்ற பாரதியார் வாக்குக்கு இணங்க, தமிழ் நாடு தமிழ் நாடு என்று சொல்லி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் திரு. கருத்திருமன் அவர்களும் சேர்ந்து முழங்கி ஏகோபித்துத் தீர்மானத்தை நிறைவேற்றினோமா இல்லையா? சொல்லுங்கள்
பி.ப. நெஞ்சிலே கைவைத்து. அப்படி இந்த நாட்டிலே ஏழை எளிய
6-40 பாட்டாளி பாமர மக்கள் அத்தனை பேரும் பயன்பெற எத்தனை திட்டங்கள் போட்டோம்? குடிசை மாற்று வாரியம் என்ன சாமான்யமான திட்டமா? அகில உலகும், அமெரிக்க ஐக்கிய நாடு அத்தனையிலேயிருந்தும் வந்தவர்கள் பாராட்டுகிறார்கள். இங்கே அடையாறு ஓரத்திலேயும், கூவம் ஓரத்திலேயும், பக்கிங்காம் கால்வாய் ஓரத்திலேயும் உட்கார்ந்து கொண்டிருப்பவர்கள் என் பாராட்டக்கூடாது? எதிர்க்கட்சிக்காரர்கள் என்ற முறையிலா? எத்தனை வாரியங்கள்? குடிநீர் வாரியம் என்று நியமித்திருக்கிறார்கள். நல்ல சுத்தமான தண்ணீர் கண்டிப்பாக மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்று, லட்சோப லட்சக்கணக்கான கிராமங்களில் குடி நீர் வசதிக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இதையெல்லாம் ஆதரிக்கக்கூடாதா என்று எதிர்க் கட்சியிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்களை என்னுடைய முதல் பேச்சிலேயே நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். நல்லதை ஆதரியுங்கள் நாங்கள் செய்யும் கெடுதலை எதிர்த்துச் சொல்லுங்கள் அதுதானே

1973 பிப்ரவரி 7] [திரு. ஜி. என். ராஜு]

எதிர்க் கட்சினுடைய கடமை. இதைச் செய் என்று சொல்லுங்கள். செய்ததை இப்படி செய் என்று சொல்லுங்கள். நண்பர் திரு. முத்துசாமி அவர்கள் கோவை மாநாட்டைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். அதற்கு முதலமைச்சர் அவர்களே நீண்ட விளக்கங்கள் எல்லாம் கொடுத்து விட்டார்கள். நிச்சயமாக ஒன்று சொல்கிறேன். அதைப்பற்றி அதிகமாகவேகூட மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் எடுத்துச் சொல்லிவிட்டார்கள். நிச்சயமாக அது மாநாடாக என்னுடைய கண்ணுக்குத் தெரியவில்லை. மன்னிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், அது மாநாடு அல்ல ஆசிரியர் மாநாடு அல்ல, யாரோ குஸ்தி பயில்வான்கள் மாநாடு என்று நான் நினைக்கிறேன். நிச்சயமாகச் சொல்கிறேன். அதற்காக நான் சில நிமிடங்களை வீணாக்க விரும்பவில்லை. முதலமைச்சர் அவர்களே சொல்லி விட்டார்கள்.

அடுத்தபடியாக, இந்த விலைவாசி ஏற்றத்தைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். வேளாண்மைத் துறையில் விளைவு அதிகரிக்கவில்லை. விளைகின்ற பொருள்களிலே 90 பங்கு டெல்லியிலேயிருந்து அனுமதி பெற்று வரவேண்டும். அது மாத்திரமல்ல, மதிப்புக்குரிய மாண்புமிகு உறுப்பினர் ஆதித்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள். பணம் வீங்கவில்லை என்று சொன்னார்கள். பண வீக்கமும் ஒரு காரணம். அதை ஆங்கிலத்திலே இன்ஃப்லேஷன் என்று சொல்வார்கள். அவர் என்னமோ பணம் மெலிவுற்றது என்று சொல்கிறார்கள். பணம் வீங்கித்தான் போய் விட்டது. ஒரு நாட்டினுடைய கரன்சி, ஒரு நாட்டினுடைய செலாவணி செய்யக் கூடிய காகிதத்திலே அடிக்கக்கூடிய நோட்டு அதற்கு என்ன மதிப்பு என்பதை, மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக இந்த மேலவைக்குப் பேரறிஞர்களாக இருக்கின்ற பெரியோர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். உள்ளபடியே விலைவாசி ஏற்றத்திற்குக் காரணம் மத்திய சர்க்கார் கோடிக்கணக்கிலே நோட்டு அடித்ததுதான். சும்மா பேப்பர், காகிதத்தில் அடித்தது என்கிறார்கள். எனக்கு நாடாளுமன்ற முறையில் பழக்கமில்லை. தவறு இருந்தால் தெரிவிக்கவும். இந்த ரூபாய் நோட்டை
தெருவில் எறிந்து விட்டால், கழுதைதான் தின்னும். வேறு பி.ப. 4-40
ஒன்றும் சாப்பிடாது. ஆனால், இதே கடுதாசி பத்து ரூபாய் நோட்டாக இருந்தால், வீசி எறிவோமா?

[1973 பிப்ரவரி 7

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கழுதை தின்னுமா?

திரு. கே. ராஜாராம் : கழுதை கண்டால் விடாது.

திரு. ஜி. என். ராஜு : அதை வீசி எறியமாட்டார்கள். அதை எட்டாக மடித்து மடியில் செருகிக் கொள்வார்கள். ஒரு நாணயமான அரசு 200 கோடிக்கு கரென்சி அடிக்க வேண்டுமென்றால், குறைந்தது 200 கோடி ரூபாய் அளவுக்கு நோட் அடிக்க வேண்டுமென்றால், அந்த அளவுக்குத் தங்கம் இருக்க வேண்டும். இது தான் பொருளாதார அரிச்சுவடி, ஏ. பி. ஸி. டி. இந்த சர்க்காராக இருந்தாலும், மத்திய சர்க்காராக இருந்தாலும் சரி, நம்மிடம் பணம். நோட் எதுவுமில்லை. தங்கம், வெள்ளியும் கிடையாது. இந்த நோட் காகிதத்திற்கு என்ன மதிப்பு இருக்கிறது ? சிங்கப்பூரில் நம் நோட்டைக் கொடுத்தால், இந்த நோட் வேண்டாம் போ என்கிறான். பழைய பத்திரிகை மாதிரி நினைக்கிறான். அவனுக்கு டாலர், ஸ்டெர்லிங் என்று அமெரிக்க, இங்கிலாந்து நாணயங்கள் இருக்கின்றன. நம் நோட்டை வீசி எறிகிறான். வெளி நாட்டில் நம் நோட்டுக்கு அவ்வளவு மதிப்பு. ஒரு சாமான் 200 ரூபாய்க்கு வாங்க 245 ரூபாய் கொடுக்க வேண்டும். நம் கரென்சிக்கு மதிப்பு இல்லை. ஏறிக்கொண்டு போகிறது. யார் அதைச் செய்வது? அனைவரும் அப்படித்தான் பேசுகிறார்கள். மனிதனுக்கு காமாலை வந்தால் வீங்கும். பணம் வீங்குமா? உண்மையான விலை ஏற்றத்திற்குக் காரணம் இந்தியத் துணைக் கண்டம் பூராவிலும் இருக்கிற பொருளாதாரச் சரிவு. இந்திய அரசின் கடன் சுமை, இந்திய சர்க்காரின் பொருளாதார முறைகேடு தான் காரணமே தவிர, வேறெந்தக் காரணமுமிருக்க முடியாது என்பதை அருள் கூர்ந்து மேலவை துணைத் தலைவர் மூலமாக மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் அவ்வளவு பேருக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மற்றபடி கவர்னர் உரையில் இப்பொழுது மழையின் சீற்றம் எவ்வளவு கடுமையாக இருந்தது என்று சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய அரசு எவ்வளவோ நன்மைகள் செய்திருக்கிறார்கள். எங்களுடைய கோவை மாவட்டத்தில் பவானி என்று ஒரு நதி. அன்னை பவானி நீலகிரி மாவட்டத்தில் ஒரு கோடியில் உற்பத்தியாகி, கோபிசெட்டிபாளையம், பவானி வழியாக வந்து காவிரி ஆற்றோடு கலக்கிறது. ஏராளமான சேதம் ஏற்பட்டது. அதற்குத் தடுப்புச் சுவர் கட்ட வேண்டுமென்று குறைந்தது பவானி நதி எங்கு காவிரியோடு சங்கமம் ஆகிறதோ

1973 பிப்ரவரி 7] [திரு. ஜி. என். ராஜு]

அந்த இடத்திலிருந்து கோபிசெட்டிப்பாளையம் ஏறக்குறைய 25 மைல் நீளம். அதற்குத் தடுப்புச் சுவர் கட்டுவதற்கு நம் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் சென்ற மாதம் பவானி வந்து துயரால் துடித்துக் கொண்டிருந்த மக்களுக்கு எல்லாம் பணத்தை வாரி வழங்கி ஏராளமாகத் துணி மணிகள் கொடுத்து, அந்த ஆற்றங்காலுக்கு 'ஃபௌண்டேஷன் ஸ்டோன்' அடிக்கல் நாட்ட வழி செய்தார்கள். தடுப்புச் சுவர் கட்டும் விழாவிற்கு அப்பொழுது பத்தாயிரக் கணக்கில் மக்கள் கூடினார்கள். அவர்கள் உள்ளம் என்ன நினைத்தது என்று முக்கியமாகப் பார்க்க வேண்டும். மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் சும்மா பத்திரிகைகளில் பார்த்துக்கொண்டு, எதிர்க்கட்சி என்பதற்காக பேசிக்கொண்டு வீணாக இந்த நேரத்தை வீணடிக்க வேண்டாமென்று துணைத் தலைவர் அவர்கள் மூலமாக எதிர்க் கட்சி உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். அருமை நண்பர் திரு. முத்துசாமி ஆசிரியர்ப் பிரதிநிதி. அவர் கூட 5 நிமிடத்தில் இந்த மன்றத்தில் சொன்னதை 3 நிமிடத்தில் சொல்லியிருக்கலாம். அவர் மாநாட்டுப் பொதுச் செயலாளர். இயக்கம் இயக்கம் தான். இது என்னுடைய கன்னிப் பேச்சு.

மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர் : கன்னிப் பேச்சா? கனிந்த பேச்சுமாகும்.

திரு. ஜி. என். ராஜு : குறுக்கீடுகளை ஏற்றுப் பழக்கப்பட்டவன். இது கன்னிப் பேச்சு. ஆகவேதான் திரு. முத்துசாமியை விட்டிருக்கிறோம்.

திரு. செ. முத்துசாமி : உறுப்பினரை விட்டு வைத்திருக்கிறோம் என்றால் என்ன பொருள்?

திரு. ஜி. என். ராஜு : குறுக்கிடாமல் இருங்கள். ஏன் இந்த அர்த்தத்தைச் செய்கிறீர்கள்? ஆசிரியரை இந்த இடத்தில் குறுக்கிடாமல் விட்டு வைத்திருக்கிறோம். அது தான் தொக்கி நிற்கிறது அங்கே. ஆகையினால், மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த இடத்தில் உங்கள் மூலம் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த நாடு நம் நாடு. இந்த நாட்டில் தி.மு.க செய்தாலும் சரி, எந்த அரசு நன்மை செய்தாலும் சரி, இது நமது எதிர்கால பாரம்பரியத்துக்குள்ள நன்மை. நமது பாரம்பரியம், இந்த

நாட்டில் வெள்ளையர் ஆண்டு போனது. இப்பொழுது நம் தி.மு.க. அரசு வந்துள்ளது? அதை ஏன் நீங்கள் எதிர்க்க வேண்டும்? நியாயமான காரணத்தைக் கூறுங்கள். இன்னின்ன காரியத்தை நாவலர் செய்தார்கள், மாண்புமிகு முதலமைச்சர் செய்தார்கள் என்று கோடிட்டுக் காட்டுங்கள். விளக்கமாகச் சொல்லுங்கள். அதை விட்டு விட்டு மேலவையில், பேரவையில் ஒன்று சொல்லுவது, நிருபர்கள் மாநாட்டில் ஒன்று சொல்லுவது. இதற்கு ஏற்றாற்போல் பத்திரிகைகள் இருக்கின்றன. ஆங்கிலத்தில் 'எல்லோ பேப்பர்' என்று சொல்லுவார்கள். 'மஞ்சள் பத்திரிகை' என்று இந்த மாதிரிப் பத்திரிகைகளும் இருக்கின்றன. அநாகரிகமான பத்திரிகைகள். இந்த மேலவையும் பேரவையும் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டவை. சில குறிப்பிட்ட நிலைக்கு உட்பட்டவை. இங்கே ஜாக்கிரதையாக, உன்னிப்பாக பேச வேண்டும். இங்கே ஒன்று பேசுகிறோம், வெளியில் வேறொன்று பேசுகிறோம். இதையெல்லாம் தான் நான் முதலில், முக்கியமாகக் கன்னிப் பேச்சில் சொல்லுகிறேன். ஆளுநர் உரையில் தீர்க்கதரிசனமாகவும் நல்ல முறையிலும் இந்த அரசு மத்திய அரசிடமிருந்து எப்படி எப்படியெல்லாம் நிதி உதவியைப் பெற முடியுமோ அதைச் சொல்லி, மற்றும் நிதி ஆணைக் குழுவிலிருந்து எப்படிப் பெற வேண்டுமென்று அமைச்சர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நல்லதொரு திட்டத்தை வைத்திருக்கிற நேரத்தில் ஆளுநர் உரை ஏற்பட்டிருக்கிறது. ஆளுநர் உரை மீது மாண்புமிகு உறுப்பினர் திரு. காட்டூர் கோபால் கொண்டு வந்து முன்மொழிந்த தீர்மானத்தை உளப் பூர்வமாக நான் ஏற்று இந்த அளவுக்கு எனக்கு வாய்ப்பு அளித்த உப-தலைவருக்கு நன்றியைக் கூறி, என்னுடைய வார்த்தைகளை முடிக்கிறேன்.

*** திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு நண்பர் திரு. ஜி. என். ராஜு அவர்கள் கனிவான வார்த்தைகளைப் போட்டிருக்கலாம். எனக்குப் பின் பேசிய உறுப்பினர் அவர்கள் ஆசிரியர் சமுதாய மாநாடு கோவையில் கொங்குச் சீமையில் மாநிலம் முழுவதும் இருந்து வந்த ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் கூடிய மாநாட்டை குஸ்தியாளர் மாநாடு என்று சொன்னது நியாயம்தானா, விட்டு வைத்திருக்கிறோம் என்று சொன்னதும் சரி தானா என்பதை முதலமைச்சர் அவர்களும் மாண்புமிகு தலைவர் அவர்களும் கூறவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். முதலமைச்சர் எனக்குச் சொன்ன

அறிக்கையில் கனிவான வார்த்தையைப் போட்டிருக்கலாம் என்று சொன்னபொழுது ஒப்புக்கொண்டேன். இந்தக் கனிவை எனக்குப் பின்னால் பேசிய உறுப்பினர் ஏன் பயன்படுத்தவில்லை? இந்தப் போக்கில் மீண்டும் வேறு சொற்களை வீசுவது சரி தானா? அவர் பேசியது கனிவுதானா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: விட்டு வைத்திருக்கிறோம் என்று சொன்னது சமுதாயத்தை அல்ல. அவர்களே விளக்கமும் சொன்னார்கள். குறுக்கிடாமல் விட்டு வைத்திருக்கிறோம் என்று விளக்கம் சொல்லிவிட்டார். ஆசிரியர் சமுதாயம் மீது விட்டு வைத்திருக்கிறோம் என்று சொன்னது பற்றி, அவரே தன் பேச்சைக் கன்னிப் பேச்சு என்று சொன்னார். மாநாடு குஸ்திச் சண்டை போல இருந்தது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். உள்ளபடியே பத்திரிகையில் வரவில்லை என்று சொன்னார்கள். எல்லா பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. அதில் என்னுடைய பெயரையும் நாவலர் பெயரையும் சொல்லுகிறபொழுது, அமைச்சர் வரவில்லை என்று பேசிய பொழுது, தந்தியைப் படிக்க திரு. முத்துசாமி தொடங்கிய நேரத்தில் முழங்கப்பட்ட முழக்கங்களைப் பார்க்கிற நேரத்தில், வெளியிலிருந்து பத்திரிகை படிக்கிறவர்களுக்கு அப்படித்தான் தோன்றும். திரு. முத்துசாமி அப்படி ஒன்றும் நடைபெறவில்லை என்று விளக்கம் அளித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜு கூட பத்திரிகைகளைப் பார்த்து நம்பக் கூடாதென்று சொன்னார்கள். அவர்கள் அதை நம்பியதற்காக வருந்த வேண்டாம், திரு. முத்துசாமி அவர்கள் விளக்கத்திற்குப் பிறகு.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர்: இத்துடன் 6–50
இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. மன்றம் மீண்டும் நாளை பி. ப.
மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், சட்டமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

4. மன்றத்தின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்

A.—Statutory Rules and Orders.

24. Notification issued with G.O. Ms. No. 3426, Revenue, dated the 19th December 1972 in regard to an amendment to the Religious Institutions (Custody, Investments and Lending or

Borrowing of Moneys) Rules, 1963. [Laid on the table of the House under section 116 (3) of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Tamil Nadu Act 22 of 1959).]

25. Notification issued with G.O. Ms. No. 3405, Revenue, dated the 15th December 1972 making the reduction in rate from three and a half per cent to two per cent multipoint in respect of the tax payable by any dealer under the Tamil Nadu General Sales Tax Act on the sale of polyester staple fibre manufactured by the Indian Organic Chemicals Limited, Madras. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

26. Notification issued with G.O. Ms. No. 3362, Revenue, dated the 13th December 1972, in regard to an amendment to the Tamil Nadu Agricultural Income-tax Rules, 1955. [Laid on the table of the House under section 61 (3) of the Tamil Nadu Agricultural Income-tax Act. 1955 (Tamil Nadu Act V of 1955).]

27. Notification issued with G.O. No. 3125, Revenue, dated the 29th November 1972 exempting from liability to tax payable under the Tamil Nadu General Sales Tax Act the sales to the Voluntary Health Services, Madras by the Union Motors, Madras of a " Standard Twenty "' one-ton truck chassis for use as ambulance van by the said Voluntary Health Services. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

28. Order issued with G.O. R. No. 2720. Revenue, dated the 28th December, 1972, in regard to exemption from liability to entertainments tax, show tax and additional surcharge, the cinematograph film show to be organised by Lyola College, Madras-34 at 6-30 p.m. on 14th January, 1973 at Devi Theatre to raise funds for Midday Meals Scheme for poor students. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

29. Order issued with G.O. R. No. 2674. Revenue, dated the 16th December 1972 in regard to exemption from liability to entertainments tax, one cinematograph film show to be held by the Secretary, Surgical Instruments Plant Officers' Association, Nandambakkam, Madras-89 at 10 a.m. on 24th December 1972 at

Anand Theatre, Mount Road, Madras. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

30. Notification issued with G.O. Ms. No. 2998, Home, dated the 27th November 1972 in regard to exemption from payment of the tax leviable under the Tamil Nadu Motor Vehicles Taxation Act, the seven vehicles belonging to the Port of Madras, subject to the condition that these vehicles solely used for the work connected with the construction of an Oil Jetty and not used for any other work connected with the functioning of the Port of Madras. [Laid on the table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

B.—Reports, Notifications and Other Papers

Nil

Index to
Tamil Nadu Legislative Council Debates

FORTY-FOURTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

3RD, 5TH, 6TH AND 7TH FEBRUARY 1973.

Volume CIII (Nos. 1 to 4)

A

PAGES

ADITANAR, THE HON. THIRU SI. PA.—
Governor's Address, discussion on 95, 96, 97–98, 99, 274–275

ADITYAN, Thiru S. T.—
Governor's Address, discussion on 264–271

ADJOURNMENT MOTION *re*—
Hardship caused to people due to cut in electricity supply 248–251

AGRICULTURAL DEPARTMENT—
Question re reorganisation of District set-up of ... 153–157

AGRICULTURAL INCOME-TAX RULES, 1955—
Amendment to—, notification laid on the table 310

AGRICULTURAL PRODUCE MARKETS ACT, 1959—
Declaration of notified market area for Theni market in respect of paddy, cotton, groundnut and chillies, notification laid on the table ... 115

இணைப்பு.

[19 ஆம் பக்கத்தில் 57 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிடப்பட்ட வினாவின் விடையைக் காண்க.]

நிதியின் பெயர்.		31-5-1972 அன்றுள்ளபடி துறையிடமிருந்த இறுதி இருப்பு.
		ரூ.
1. மாநிலச் சிறு துறைமுக நிதி—		
1908-ஆம் ஆண்டு இந்திய துறைமுகங்கள் சட்டத்தின்கீழ் (சட்டம் 15/1908) அமைக்கப்பட்டது.	(—)	13,34,711.81
2. மாநில இறக்குமதி-ஏற்றுமதி நிதி—		
1885-ஆம் ஆண்டு மாநில இறக்குமதி-ஏற்றுமதிக் கட்டணங்கள் சட்டத்தின்கீழ் (சட்டம் 3/1885) ஏற்படுத்தப்பட்டு ஒவ்வொரு சிறு துறைமுகத்திற்கும் தனியே பேணப்பட்டு வருகின்றது. விவரங்கள் பின் வருமாறு:—		
1. கடலூர் இறக்குமதி-ஏற்றுமதி நிதி		12,33,071.78
2. நாகப்பட்டிணம் இறக்குமதி-ஏற்றுமதி நிதி.	(—)	1,63,473.73
3. தொண்டி இறக்குமதி-ஏற்றுமதி நிதி		3,150.32
4. கீழக்கரை இறக்குமதி-ஏற்றுமதி நிதி		39,415.33
5. பாம்பன் இறக்குமதி-ஏற்றுமதி நிதி		13,784.31
6. இராமேஸ்வரம் இறக்குமதி-ஏற்றுமதி நிதி.		3,35,760.07
7. குளச்சல் இறக்குமதி-ஏற்றுமதி நிதி		1,31,650.31
8. குலசேகரப்பட்டினம் இறக்குமதி-ஏற்றுமதி நிதி.		1,167.56

		31-5-1972 அன்றுள்ளபடி துறையிடமிருந்த இறுதி இருப்பு.
		ரூ.
3. கப்பல் வழிக்காட்டிக் கட்டண நிதி— (பாம்பனுக்கும் கீழக்கரைக்கும் மட்டும் பேணப்பட்டது. ஏனைய துறைமுகங்களுக்குக் கிடையாது.)		
பாம்பன் கீழக்கரை கப்பல் வழிக்காட்டிக் கட்டண நிதி.	(—)	1,50,096.12

(இ) வருவாய் வாயில்கள்—

1. மாநிலச் சிறு துறைமுக நிதி (சட்டம் எண் 15/1908)—
   (i) துறைமுக நிலுவைகள்;
   (ii) நில வாடகை;
   (iii) துறைமுக சிறுமரக்கலக் கட்டணங்கள்;
   (iv) மறுப்புக் கட்டணங்கள்;
   (v) மிகை நேரக் கட்டணங்கள்;
   (vi) அரசு ஈட்டுறுதிப் பத்திரங்களின் மீது வட்டி;
   (vii) பல்வகை.

2. மாநில இறக்குமதி-ஏற்றுமதி நிதி—
   (i) இறக்குமதி-ஏற்றுமதிக் கட்டணங்கள்;
   (ii) நில வாடகை;
   (iii) மிகை நேரக் கட்டணங்கள்;
   (iv) அரசு ஈட்டுறுதிப் பத்திரங்களின் மீது வட்டி;
   (v) பல்வகை.

3. பாம்பன், கீழக்கரை கப்பல் வழிக்காட்டிக் கட்டண நிதி—
   (i) கப்பல் வழிகாட்டிக் கட்டணங்கள்;
   (ii) பாம்பனில் விசை நீராவி இழு படகுக்கான வாடகைக் கட்டணங்கள்;
   (iii) மிகை நேரக் கட்டணங்கள்.
   (iv) பல்வகை.

A—*cont*.

PAGES

AGRICULTURE—

Question *re* driers for groundnut in Tiruchirappalli district, installation of 148–150

ANBAZHAGAN, THE HON. THIRU K.—

Governor's Address, discussion on 256–257, 306

APPRENTICES—

Question *re* recruitment of—through Employment Exchanges, details of Central Government's instruction 136–137

ARUNACHALAM, THIRU T. S.—

Obituary reference *re* death of—, former Member of the Council 1–2

B

BAKKAR, THIRU M. M.—

Condolence Resolution *re* death of Rajagopalachariar, Thiru C., former Chief Minister of Tamil Nadu and former Governor-General of India 15–17

BALARAMAN, THIRU L.—

Governor's Address, discussion on 164, 165–172

BANANA CULTIVATION—

Question *re*—

Acreage under—under intensive export scheme in North Arcot district 152

Collaboration agreement with Indian Council of Agricultural Research by Horticultural Department of Coimbatore Agricultural University 150–152

BRIDGES—

Question *re* New Palakarai overbridge at Tiruchirappalli, estimated cost of construction of—and details of work done, etc. 51–54

B—*cont*.

PAGES

BURMA REPATRIATES—

Question *re* number of—expected during 1971-72 and their rehabilitation 41–42

BUSINESS ADVISORY COMMITTEE—

See Committees.

BYRACON MEDICINE—

Question *re* non-availability of—used to kill insects attacking coconut seedlings 152–153

C

CANNON BALLS—

Question *re* discovery of—in Palayamkottai during August 1972 219–220

CATERING INSTITUTE—

Question *re* efforts taken by Employment Exchanges to find appointment at Star Hotels for candidates coming out of 46–47

CHAIRMAN, MR.—

Announcement *re*—

Business Advisory Committee's decision ... 60–61

Panel of Vice-Chairmen 61

Time-limit for receipt of amendments to the Motion of Thanks for the Governor's Address 61

CINEMA HOUSES—

Question *re* raids on—by officials of Commercial Taxes Department in Madras City during March-April 1972 142–143

CINEMA THEATRES—

Question *re* permission for open air 229–230

CINEMAS (REGULATION) RULES, 1957—

Amendments to—, notification laid on the table 116

C—*cont.*

PAGES

CIVIL SUPPLIES—
Question *re* storage loss in—transactions during 1968–69 and 1969–70 and percentage allowed 242–247

COCONUT—
Question *re* Byracon medicine for killing insects attacking seedlings, non-availability of 152–153

COMMITTEES—
Business Advisory Committee, decision of ... 60–61

CONDOLENCE RESOLUTION *re*—
Death of Rajagopalachariar, Thiru C., former Chief Minister of Tamil Nadu and former Governor-General of India 2–27

CO-OPERATIVE BANKS—
Question *re* Co-operative Central Bank, Thanjavur, memorandum by All Party Committee *re* malpractices in 236–242

CO-OPERATIVE CENTRAL BANK, THANJAVUR—
See Co-operative Banks.

COURT-FEE STAMPS—
Question *re* non-availability of required denomination of—with Stamp Vendors 49–50

COURTS—
Question *re* Tribunals for disposal of appeals under Inams and Minor Inams Abolition Acts, proposal to increase number of 146

CYCLONE—
Question *re* cyclone warning equipments from Japan, installation of 51–54

PAGES

D.

DAMODARAN, THIRU A. R.—
Governor's Address, discussion on 189–196

DEFENCE FUND—
Question *re* non-deposit of—collected from village officers of Kumbakonam Revenue Division ... 221–222

DENATURED SPIRIT METHYL ALCOHOL AND VARNISH (FRENCH POLISH) RULES, 1959—
Amendment to—and Distillery Rules, 1960, notification laid on the table 114

DEPUTY CHAIRMAN—
Adjournment motion *re* hardship caused to people due to cut in electricity supply 248,249, 250
Condolence Resolution *re* death of Rajagopalachariar, Thiru C., former Chief Minister of Tamil Nadu and former Governor-General of India ... 23–27
Governor's Address, discussion on 102,111, 112,163, 165,172, 177,201, 202,269, 274,294, 307
Obituary reference *re*—
Death of Arunachalam, Thiru T. S., former Member of the Council 1–2
Death of Gopal, Thiru P., Member of the Assembly 1–2

DHARMALINGAM, THE HON. THIRU A. P.—
Governor's Address, discussion on 263

DISTILLERY RULES, 1960—
Amendment to—and Denatured Spirit, Methyl Alcohol and Varnish (French Polish) Rules, 1959, notification laid on the table 114

D—*cont.*

	PAGES
DISTRICT MUNICIPALITIES ACT, 1920—	
Extension of term of office of Members of Mettur Township Committee up to mid-night of 3rd February 1973, notification laid on the table.	118
Rules relating to personal conduct of officers and servants of Municipal Councils, amendments to—, notification laid on the table	116

E

ELECTRICITY—	
Adjournment motion *re* hardship caused to people due to cut in supply of	248–251
EMPLOYMENT EXCHANGE(S)—	
Question *re*—	
Efforts taken during 1971–72 by—for appointment of candidates coming out of Catering Institute in Star Hotels	46–47
Law Graduates registered in—up to 1-4-1972, number of	47–48
ENGINEERING GRADUATES AND DIPLOMA-HOLDERS—	
Question *re* bogus consent letters from—, obtaining of—by Contractors	231–234
ENTERTAINMENTS TAX—	
Exemption of film show at Anand Theatre, Madras on 24th December 1972 organised by Secretary, Surgical Instruments Plant Officers' Association, Nandambakkam, Madras-89 from—, notification laid on the table	310
Exemption of film show at Devi Paradise organised by N.S.N. Children's School, Madras-44 on 5-12-1972, from—, notification laid on the table	215

E—*cont.*

	PAGES
ENTERTAINMENTS TAX—*cont.*	
Exemption of film show at Devi Paradise Theatre on 17th December 1972 organised by Dr. R. J. Rajasekhar Reddy, Hony. Surgeon, Government Stanley Hospital, Madras from—and additional surcharge, notification laid on the table ...	116
Exemption of film show at Devi Theatre on 14th January 1973 organised by Loyola College, Madras-34 from—, notification laid on the table	310
Exemption of film show organised by Principal, Voorhees College, Vellore on 17th October 1972 from—, notification laid on the table ...	113
Question *re* raids on cinema houses by officials of Commercial Taxes Department in Madras during March-April 1972	142–143
ERSKINE HOSPITAL, MADURAI—	
See Hospitals (and Dispensaries).	

F

FAMILY PLANNING—	
Question *re* sterilisation of married woman without consent of husband	217–218
FOOD CORPORATION OF INDIA—	
Question *re* sales tax due from—, realisation of ...	218–219

G

GANAPATHY, THIRU K. S.—	
Governor's Address, discussion on	271–278
GANESAN, THIRU SAW—	
Condolence Resolution *re* death of Rajagopalachariar, Thiru C., former Chief Minister of Tamil Nadu and former Governor-General of India	8–10
Governor's Address, discussion on	251–252

PAGES

G—*cont.*

GENERAL SALES TAX ACT, 1959—

List of persons convicted for quarter ended 30th September 1970, notification laid on the table ... 114

GOPAL, THIRU P.—

Obituary reference *re* death of—, Member of the Assembly 1-2

GOVERNOR'S ADDRESS—

Announcement *re* time-limit for receipt of amendments to Motion of Thanks 60

Discussion on 164-214, 251-309

Laid on the table 118

H

HIGHWAYS RESEARCH STATION, MADRAS—

Question *re* cost of Scientific equipments purchased by—for Traffic Survey during last five years ... 147-148

HORTICULTURE—

Question *re*—

Banana cultivation by Coimbatore Agricultural University, details of collaboration agreement with Indian Council of Agricultural Research for 150-152

Banana cultivation under intensive export scheme in North Arcot District, acreage under 152

HOSPITALS (AND DISPENSARIES)—

Question *re*—

Government Erskine Hospital, Madurai, installation of additional technical equipment for treatment of cancer 32-33

PAGES

H—*cont.*

HOSPITALS (AND DISPENSARIES)—*cont.*

Question re—cont.

Rajah Mirasdar Hospital and Thanjavur Medical College Hospital, standards being followed regarding extra beds 29-31

Rajah Mirasdar Hospital, Thanjavur, non-availability of medicines in 31-32

Thanjavur Medical College and hospitals attached thereto, appointment of Dean to 34-35

HOUSING—

Question *re*—

Construction of houses for Harijans in Thirupangur, Thanjavur district where Nandanar was born 46

House-sites for Harijans in Kanchi Kovil, Kolathamvalasu, Chinnaiampalayam Villages in Erode Taluk, acquisition of 45-46

I

INAM ESTATES (ABOLITION AND CONVERSION INTO RYOTWARI) ACT, 1963—

Revenue Department Notification II-I No. 1061 of 1965, dated 12th March 1965, amendment to—, notification laid on the table 113

INAM ESTATES AND MINOR INAMS (ABOLITION AND CONVERSION INTO RYOTWARI) ACTS—

Question *re* Tribunals for disposal of appeals under 146

PAGES

I—*cont.*

INDIAN STAMP ACT, 1899—

Remission of stamp duty on endowment deeds to be executed by the Muslim Orphanage Committee, Tirunelveli in favour of Sadakathulla Appa College Managing Committee, Palayamkottai, Tirunelveli district, notification laid on the table ... 118

Remission of stamp duty on mortgage deed to be executed by Thiru K. S. Chandrasekaran, I.A.S., in connection with additional building advance of Rs. 15,000 (Rupees Fifteen thousand only) sanctioned to him by Government of Orissa, notification laid on the table 117

Remission of stamp duty on settlement deed to be executed by Archbishop of Madurai in favour of De-La-Sallee College, Karumuthur, Madurai district, notification laid on the table 117

INDO-ITALIAN FOOT-WEAR COMPANY—

Question *re* winding up of 48–49

INDUSTRIAL REFINERY—

Question *re* opening of—in Tuticorin by Tamil Nadu Industrial Development Corporation 137–138

INDUSTRIAL TRAINING INSTITUTES—

Question *re* organisation of Industrial Co-operative Societies and Enterprises by unemployed Craftsmen of 135–136

IRRIGATION—

Question *re* water-supply in Delta area, introduction of turn system for 147

ISVARMURTI, THIRU V.—

Governor's Address, discussion on 183–189, 209, 210

PAGES

J

JAYARAMA REDDIAR, THIRU S.-

Condolence Resolution *re* death of Rajagopalachariar, Thiru C., former Chief Minister of Tamil Nadu and former Governor-General of India 10–11

Governor's Address, discussion on 173–179

JUDICIAL DEPARTMENT NOTIFICATION No. 171, DATED 30TH MARCH 1909—

Amendment to—, notification laid on the table ... 117–118

K

KARUNANIDHI, THE HON. DR. M.—

Condolence Resolution *re* death of Rajagopalachariar, Thiru C., former Chief Minister of Tamil Nadu and former Governor-General of India 2–6

Governor's Address, discussion on ... ... 176, 184, 199, 209, 257, 258, 259, 273, 274, 285, 288–290, 292–293, 294, 295, 298–299, 300–309.

KATTOOR GOPAL, THIRU—

Governor's Address, discussion on 62–74, 75–80

KHADI AND VILLAGE INDUSTRIES BOARD—

Question *re* investigation into market potentialities of products of 247–248

KRISHNASWAMY NAIDU, THIRU R.—

Governor's Address, discussion on 86–112, 267–268

PAGES

L

LABOUR OFFICE, MYLAPORE—

Question *re* Deputy Commissioner of Labour not posted to—from February 1972 227–228

LABOUR WELFARE FUND ACT, 1972—

Date of coming into force of—, notification laid on the table 116

LAND DEVELOPMENT BANKS—

Question *re* issue of loans for Sprinkler Irrigation Units by 235–236

LAND(S)—

Question *re* reduction of ceiling for agricultural lands, Centre's recommendation for 143–145

LIGHTNING EXPRESS BUSES—

See Transport.

LOANS—

Question *re* issue of—for Sprinkler Irrigation Units by Land Development Banks 235–236

LORRY TRAFFIC—

Question *re* regulation of—during nights ... 55–58

M

MANI, THIRU K. S.—

Governor's Address, discussion on 108–111, 112

MEMBERS OF LEGISLATURE—

Return of Assets of certain Members of the Council, laid on the table 118

PAGES

M—*cont.*

MEMORANDA PRESENTED TO PRESIDENT OF INDIA BY THIRU M. G. RAMACHANDRAN AND OTHERS—

Reply to—, laid on the table 118

MOTOR VEHICLES RULES, 1940—

Amendments to—, notification laid on the table ... 116

MOTOR VEHICLES TAX—

Exemption of ambulance No. TMP 821, from—, notification laid on the table 114

Exemption of mini bus No. GTE 748 belonging to National Institute of Design, Ahmedabad from payment of—, notification laid on the table ... 113

Exemption of seven vehicles used for construction of Oil Jetty of Port of Madras from—, notification laid on the table 311

Exemption of Vehicle No. TMC 3861 from —, notification laid on the table 114

MUTHUSWAMY, THIRU S.—

Governor's Address, discussion on 164–165, 278–301, 307, 308–309

N

NARAYANASAMY, THE HON. THIRU MANNAI P.—

Governor's Address, discussion on 164–165, 96–97, 167, 168, 171, 176

Questions—Correction of answer to supplementary question under Question No. 83, statement *re* ... 61–62

PAGES

N—*cont*.

NEDUNCHEZHIYAN, THE HON. DR. V. R.—

Governor's Address, discussion on— 186, 188, 213, 254–256, 257–258, 260, 275, 276

NEW PALAKARAI OVER-BRIDGE—

See Bridges

O

OBITUARY REFERENCE *re*—

Death of Arunachalam, Thiru T. S., former Member of the Council 1–2

Death of Gopal, Thiru P., Member of the Assembly. 1–2

P

PANCHAYAT ESTABLISHMENT (APPOINTMENT AND PUNISHMENT) RULES, 1965—

Amendment to—, notification laid on the table ... 114

PANCHAYAT (S)—

Question *re* names of—which do not own school buildings 35–36

PANCHAYATS ACT, 1958—

Palayam Panchayat Union altered as 'Guziliamparai Panchayat Union', notification laid on the table 115

PANEL OF VICE-CHAIRMEN—

Announcement *re* 61

PAGES

P—*cont*.

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—

Agricultural Income-Tax Rules, 1955, amendment to—(G.O. Ms. No. 3362, Revenue, dated 13th December 1972) 310

Agricultural Produce Markets Act, 1959—Declaration of notified market area for Theni Market in respect of paddy, cotton, groundnut and chillies (G.O. Ms. No. 2198, Agriculture, dated 19th August 1972) 115

Cinemas (Regulation) Rules, 1957, amendments to—(G.O.'s Ms. No. 2258, Home, dated 30th August 1972 and No. 2374, dated 14th September 1972) ... 116

Denatured Spirit, Methyl Alcohol and Varnish (French Polish) Rules, 1959 and Distillery Rules, 1960, amendment to—(G.O. Ms. No. 258, Excise and Prohibition, dated 20th September 1972) 114

District Municipalities Act, 1920—

Extension of term of Office of Members of Mettur Township Committee up to mid-night of 3rd February 1973 (G.O. Ms. No. 2278, Rural Development and Local Administration, dated 27th October 1972) 113

Rules relating to personal conduct of officers and servants of Municipal Councils, amendment to—(G.O. Ms. No. 2191, Rural Development and Local Administration, dated 19th October 1972) 116

PAGES

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*

Entertainments tax—

Exemption of film show at Anand Theatre, Madras on 24th December 1972 organised by Secretary, Surgical Instruments Plant Officers' Association, Nandambakkam, Madras-89, from—(G.O. R. No. 2674, Revenue, dated 16th December 1972) 310–311

Exemption of film show at Devi Paradise on 5th December 1972 organised by N.S.N. Children's School, Madras-44, from—(G.O. R. No. 2597, Revenue, dated 4th December 1972) ... 215

Exemption of film show at Devi Paradise Theatre on 17th December 1972 organised by Dr. R. J. Rajasekhar Reddy, Honorary Surgeon, Government Stanley Hospital, Madras from—and additional surcharge (G.O. R. No. 2569, Revenue, dated 29th November 1972) 116

Exemption of film show at Devi Theatre on 14th January 1973 organised by Loyola College, Madras-34 from—(G.O. R. No. 2720, Revenue, dated 28th December 1972) 310

Exemption of film show organised by Principal, Voorhees College, Vellore on 17th October 1972 from—(G.O. R. No. 2275, Revenue, dated 13th October 1972) 113

General Sales Tax Act, 1959, list of persons convicted for quarter ended 30th September 1970 (Government Memorandum No. 141600-CT/II-(2)-70, Revenue, dated 23rd March 1971) ... 114

Governor's Address to Legislature on 2nd February 1973 118

PAGES

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*

Inam Estates (Abolition and Conversion into Ryotwari Act, 1963—

Revenue Department Notification II-I No. 1061 of 1965, dated 12th March 1965, amendment to—(Memo. No. 11387-J2/72-3, Revenue, dated 3rd November 1972) 113

Indian Stamp Act, 1899—

Remission of stamp duty on endowment deeds to be executed by Muslim Orphanage Committee, Tirunelveli in favour of Sadakathulla Appa College Managing Committee, Palayamkottai, Tirunelveli district (G.O. Ms. No. 3122, Revenue, dated 28th November 1972) 118

Remission of stamp duty on mortgage deed to be executed by Thiru K. S. Chandrasekaran, I.A.S., in connection with additional building advance of Rs. 15,000 (Rupees fifteen thousand only) sanctioned to him by Government of Orissa (G.O. Ms. No. 2705, Revenue, dated 13th October 1972) 117

Remission of stamp duty on settlement deed to be executed by Archbishop of Madurai in favour of De-La-Salle College, Karumuthu, Madurai district (G.O. Ms. No. 2956, Revenue, dated 15th November 1972) 117

Judicial Department Notification No. 177, dated 30th March 1909, amendment to—(G.O.'s Ms. No. 2861, Revenue, dated 1st November 1972 and No. 3146, dated 30th November 1972). 117–118

Labour Welfare Fund Act, 1972, date of coming into force of—(G.O. Ms. No. 1438, Labour and Employment, dated 31st December 1972) ... 116

PAGES

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*

Indian Stamp Act, 1899—*cont.*

Memoranda presented to President of India by Thiru M. G. Ramachandran and others, reply to ... 118

Motor Vehicles Rules, 1940, amendment to—(G.O. Ms. No. 2393, Home, dated 16th September 1972). 116

Motor Vehicles Tax—

Exemption of ambulance van bearing No. TMP 821 from—(G.O. Ms. No. 2351, Home, dated 13th September 1972) 114

Exemption of mini bus No. GTE 748 belonging to National Institute of Design, Ahmedabad from —(G.O. Ms. No. 1139, Home, dated 19th April 1972) 113

Exemption of seven vehicles used for construction of Oil Jetty of Port of Madras from—(G.O. Ms. No. 2998, Home, dated 27th November 1972). 311

Exemption of vehicle No. TMC 3861 from—(G.O. Ms. No. 2352, Home, dated 13th September 1972) 114

Panchayat Establishment (Appointment and Punishment) Rules, 1965, amendment to—(G.O. Ms. No. 2101, Rural Development and Local Administration, dated 3rd October 1972) ... 114

Panchayats Act, 1958—

Palayam Panchayat Union altered as Guziliamparai Panchayat Union (G.O. Ms. No. 2363, Rural Development and Local Administration, dated 9th November 1972) 115

Public Service Commission Regulations, 1954, amendments to—(G.O.'s Ms. No. 2197, Public (Services-A), dated 4th September 1972 and No. 2412, dated 4th October 1972) 115

PAGES

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*

Panchayats Act, 1958—

Religious Institutions (Custody, Investments and Lending or Borrowing of Moneys) Rules, 1963, amendment to—(G.O. Ms. No. 3426, Revenue, dated 19th December 1972) 309-310

Returns of Assets of certain Members of the Council as on 31st March 1972 118

Revenue Department Notification II-1 No. 2901 of 1972, dated 19th May 1972, amendment to—

(G.O. Ms. No. 2753, Revenue, dated 20th October 1972) 117

Sales Tax—

Exemption of a "Standard Twenty" one ton truck chassis sold by Union Motors, Madras to Voluntary Health Services, Madras for use as ambulance van from—(G.O. No. 3125, Revenue, dated 29th November 1972) 310

Reduction in rate of—on polyester staple fibre manufactured by Indian Organic Chemicals Limited, Madras (G.O. Ms. No. 3405, Revenue, dated 15th December 1972) 310

Stage Carriages and Contract Carriages (Acquisition) Ordinance, 1973 118

Stage Carriages and Contract Carriages (Acquisition) Ordinance, 1973, making of rules under—(G.O. Ms. No. 20, Transport, dated 14th January 1973) 215

PAGES

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*

(Transferred Territory) Ryotwari Settlement Act, 1964—

Revenue Department Notification II-1 No. 1303 of 1965, dated 20th March 1965, amendment to—(G.O. Ms. No. 3136, Revenue, dated 30th November 1972) 115

Vigilance Commission, Fifth Annual Report from 1st April 1970 to 31st March 1971 117

Village Officers Service Rules, 1970, amendment to—(G.O. Ms. No. 460, Revenue, dated 16th February 1922) 118

Warehouses Act, 1951, inclusion of Agro-Chemicals in Schedule to—(G.O. Ms. No. 375, Food, dated 3rd October 1972) 115

PILOT INTENSIVE RURAL EMPLOYMENT PROJECT—

Question *re* details of 38–41

POLICE—

Question *re* hijacking of taxis in Madras City, number of cases reported 160–161

PORTS—

Question *re* State Minor Ports Fund, State Landing and Shipping Funds and State Pilotage Funds, sources of income for and amount available in. 234–235

PREVENTION OF BEGGING ACT, 1945—

Question *re* strict enforcement of 42–46

PAGES

P—*cont.*

PRIME MINISTER OF INDIA—

Question *re* election tour of—in Tamil Nadu during January and February 1971, expenditure incurred on 157–160

PUBLIC SERVICE COMMISSION REGULATIONS, 1954—

Amendments to—, notification laid on the table. 115

Q

QUESTIONS AND ANSWERS—

Arumugaswami, Thiru M.—

Question *re* Trusts administered by Administrator-General, number of 141–142

Balaraman, Thiru L.—

Question *re*—

Agricultural Department, reorganisation of District set-up of 153–157

Banana cultivation under intensive export scheme in North Arcot district, acreage under 152

New water sources in North Arcot district, investigation of 54–55

Correction of answer to supplementary question under Question No. 83, Statement of Minister for Food 61

Correction of answer to supplementary question under Question No. 223, Statement of Minister for Harijan Welfare 62

PAGES

Q—*cont.*

QUESTIONS AND ANSWERS—*cont.*

Isvarmurti, Thiru V.—

Question *re*—

Banana cultivation by Horticulture department of Coimbatore Agricultural University, details of collaboration agreement with Indian Council of Agricultural Research for ... 150–152

Craftsmen from Industrial Training Institutes, organisation of Industrial Co-operative Societies and Enterprises by 135–136

Cyclone warning equipments from Japan, installation of 51–54

Deputy Commissioner of Labour not posted to Labour Office, Mylapore from February 1972 227–228

Employment Exchanges, efforts taken during 1971–72 by—for appointment of candidates coming out of Catering Institute in Star Hotels 46–47

Government Erskine Hospital, Madurai, installation of additional technical equipment for treatment of cancer 32–33

Hijacking of taxis in Madras City, number of cases reported 160–161

Indo-Italian Footwear Company, winding up of 48–49

Khadi and Village Industries Board, investigation into market potentialities of products of. 247–248

New Palakarai Overbridge at Tiruchirappalli, estimated cost of construction of—and details of work done, etc. 51–54

Open Air Cinema Theatres, permission for ... 229–230

Panchayats which do not own school buildings, names of 35–38

PAGES

Q.—*cont.*

QUESTIONS AND ANSWERS—*cont.*

Isvarmurti, Thiru V.—*cont.*

Question *re*—*cont.*

Prevention of Begging Act, 1945, strict enforcement of 42–45

Recruitment of Apprentices through Employment Exchanges, details of Central Government's instruction 136–137

Repatriates from Burma, number of—expected during 1971–72 and their rehabilitation ... 41–42

State Minor Ports Fund, State Landing and Shipping Funds and State Pilotage Funds, sources of income for—and amount available in 234–235

KUNDRAKUDI ADIGALAR, THAVATHIRU—

Question *re* construction of houses for Harijans in Thirupangur, Thanjavur district, where Nandanar was born 46

MUTHUSWAMY, THIRU S.—

Question *re* travelling allowance to teachers attending Panchayat Union Offices on duty, payment of 223–224

SAKTHI MOHAN, THIRU R.—

Question *re* Lightning Express buses plying from Madras to Madurai, provision of inclined seats with head rest in 59–60

SANKARALINGAM, THIRU M.—

Question *re*—

'Byracon' medicine for killing insects attacking coconut seedlings, non-availability of ... 152–153

Lightning Express Buses, remodelling of seats in 58–59

Q—*cont.*

QUESTIONS AND ANSWERS—*cont.*

SANTOSHAM, THIRU D.—

Question *re*—*cont.*

Question *re*—

Employment Exchanges, number of Law Graduates *registered* in—up to 1st April 1972 ... 47–48

Tribunals *for* disposal of appeals under Inams and Minor *Inams* Abolition Acts, proposal to increase number of 146

SENGOTTUVELAPPA GOUNDER, THIRU S. C.—

Question *re* house-sites for Harijans in Kanchi Kovil, Kolathamvalasu, Chinnaiampalayam villages in *Erode taluk*, acquisition of 45–46

SUNDARESA THEVAR, THIRU N.—

Question *re* Rajah Mirasdar Hospital, Thanjavur, non-availability of medicines in 31–32

SWAMINATHAN, THIRU G.—

Question *re*—

Bogus consent letters from Engineering Graduates and *Diploma* Holders, obtaining of—by Contractors 231–234

Cannon Balls discovered in Palayamkottai during August 1972 219–220

Civil Supplies transactions, actual storage loss during 1968–69 and 1969–70 and percentage allowed 242–247

Co-operative Central Bank, Thanjavur, Memorandum of All *Party* Committee *re* malpractices in 236–242

Court-fee stamps, non-availability of required denomination of—from Stamp Vendors ... 49–50

Defence Fund collected from Village Officers of Kumbakonam Revenue Division, non-deposit of 221–222

Q—*cont.*

QUESTIONS AND ANSWERS—*cont.*

SWAMINATHAN, THIRU G.—cont.

Question *re*—*cont.*

Driers for groundnut in Tiruchirappalli district, installation of 148–150

Prime Minister's election tour in Tamil Nadu during January and February 1971, expenditure incurred on 157–160

Rajah Mirasdar Hospital and Thanjavur Medical College Hospital, standards being followed regarding extra beds 29–31

Reduction of ceiling for agricultural lands, Centre's recommendation for 143–145

Sales tax due from Food Corporation of India, realisation of 218–219

Salt, piling up of—at Vedaranyam during August 1972 due to non-availability of wagons 228–229

Self-employment Scheme, number of persons in Salem district benefited by—during 1971–72. 138–141

Sterilisation of married woman without consent of husband 217–218

Thanjavur Medical College and hospitals attached thereto, appointment of a Dean to ... 34–35

Tiruvalluvar Temple at Mylapore, Madras, stage of renovation of 161–163

Underground Railway in Madras City, discussion by officials during July 1972 *re* construction of 224–227

THANGAPANDIAN, THIRU V.—

Qusetion *re* lorry traffic during nights, regulation of 55–58

THIRUGNANASAMBANDAM, THIRU P.—

Question *re* Drinking water supply scheme for Sivaganga Town, completion of 231–234

PAGES

Q—*cont.*

QUESTIONS AND ANSWERS—*cont.*

VELLAPANDIAN, THIRU S.-

Question *re*—

Industrial Refinery in Tuticorin, opening of—by Tamil Nadu Industrial Development Corporation 137–138

Pilot Intensive Rural Employment Project, details of 38–41

Raids on Cinema Houses by officials of Commercial Taxes Department in Madras City during March–April 1972 142–143

Salt, piling up of—at Vedaranyam during August 1972 due to non-availability of wagons 228–229

Sprinkler Irrigation Units, issue of loans by Land Development Banks for 235–236

Traffic Survey, cost of scientific equipments purchased during last five years by Highways Research Station, Madras, for 147–148

Water-supply in Delta area, introduction of turn system for 147

R.

RAILWAY—

Question *re* Underground—in Madras City, discussion of Officials during July 1972 *re* construction of 224–227

RAJAGOPAL, THIRU C. V.—

Governor's Address, discussion on 196–202, 269

RAJAGOPALACHARIAR, THIRU C.—

Condolence Resolution *re* death of former Chief Minister of Tamil Nadu and former Governor-General of India 2–27

PAGES

R—*cont.*

RAJAH IYER, THIRU M.—

Condolence Resolution *re* death of Rajagopalachariar, Thiru C., former Chief Minister of Tamil Nadu and former Governor-General of India 12–15, 80–84, 85, 86,

Governor's Address, discussion on 286–287

RAJAH MIRASDAR HOSPITAL, THANJAVUR—

See Hospitals (and Dispensaries)

RAJARAM, THE HON. THIRU K.—

Governor's Address, discussion on 74

RAJARAM, THIRU K.—

Condolence Resolution *re* death of Rajagopalachariar, Thiru C., former Chief Minister of Tamil Nadu and former Governor-General of India ... 6–8

Governor's Address, discussion on 198, 210, 284. 306

RAJU, THIRU G. N.—

Governor's Address, discussion on 301–308

RAMACHANDRAN, THE HON. THIRU S.—

Governor's Address, discussion on 178

RAMAN, THE HON. THIRU O. P.—

Adjournment motion *re* hardship caused to people due to cut in electricity supply 249–251

RAMASAMY PADAYATCHI, THIRU S. S.—

Condolence Resolution *re* death of Rajagopalachariar, Thiru C., former Chief Minister of Tamil Nadu and former Governor-General of India 17–18

PAGES

R—*cont.*

RELIGIOUS INSTITUTIONS (CUSTODY, INVESTMENTS AND LENDING OR BORROWING OF MONEYS) RULES, 1963—

Amendment to—, notification laid on the table ... 309–310

REVENUE DEPARTMENT NOTIFICATION II-1 No. 2901 OF 1972, DATED 19TH MAY 1972—

Amendment to—, notification laid on the table ... 117

RULINGS AND OBSERVATIONS OF THE CHAIR—

Adjournment Motion *re*—

Hardship to industries, agriculture and domestic consumers due to stoppage of supply of electricity in the State, especially in Thanjavur district—Consent to raising of the matter withheld since the member would have adequate opportunity to refer to the matter during the discussion on the Governor's Address and since the Minister for Electricity had explained the matter 248–251

Decorum—

Members should address the Chair 201

S

SAKTHI MOHAN, THIRU R.—

Condolence Resolution *re* death of Rajagopalachariar, Thiru C., former Chief Minister of Tamil Nadu and former Governor-General of India ... 19–20

SALES TAX—

Exemption of a "Standard Twenty" One-ton truck chassis sold by Union Motors, Madras, to Voluntary Health Services, Madras, for use as Ambulance van from—, notification laid on the table 310

Question *re* realisation of—due from Food Corporation of India 218–219

PAGES

S—*cont.*

SALES TAX—*cont.*

Reduction in rate of—on polyester staple fibre manufactured by Indian Organic Chemicals Limited, Madras, notification laid on the table ... 310

SALT—

Question re piling up of—at Vedaranyam during August 1972 due to non-availability of wagons. 228–229

SANKARALINGAM, THIRU M.—

Governor's Address, discussion on 203–214

SATHYAVANIMUTHU, THE HON. THIRUMATHI—

Questions—

Correction of answer to supplementary *question* under *Question No.* 223, statement *re* ... 62

SCHOOLS—

Question *re* Panchayats which *do not* own School Buildings, names of 35–36

SELF-EMPLOYMENT SCHEME—

Question *re* number of persons benefited by—in Salem District, during 1971–72 138–141

SHANMUGAM, THE HON. THIRU P. U.—

Governor's Address, discussion on ... ... 85, 87–88, 89–90, 91, 92, 93, 99–100, 101–102, 103–104, 105–106, 107–108, 111, 112, 259, 261, 262, 263, 282–283, 284, 285, 286, 287.

PAGES

S—*cont.*

STAGE CARRIAGES AND CONTRACT CARRIAGES (ACQUISITION) ORDINANCE, 1973—
Laid on the table 118
Making of rules under—, notification laid on the table 215

SUNDARESA THEVAR, THIRU N.—
Adjournment motion *re* hardship caused to people due to cut in electricity supply 248–249, 251

SWAMINATHAN, THIRU G.—
Governor's Address, discussion on 74, 84, 112, 188

T.

TAMIL NADU INDUSTRIAL DEVELOPMENT CORPORATION—
Question *re* opening of Industrial Refinery at Tuticorin by 137–138

TAXIS—
Question *re* hijacking of—in Madras City, number of cases reported 160–161

TEACHERS—
Question *re* travelling allowance to—attending Panchayat Union Offices on duty 223–224

TEMPLE(S)—
Question *re* Tiruvalluvar Temple at Mylapore, Madras, stage of renovation of 161–163

THANJAVUR MEDICAL COLLEGE HOSPITAL, THANJAVUR—
See Hospitals (and Dispensaries)

THENNARASU, THIRU S. S.—
Governor's Address, discussion on 179–182

PAGES

T—*cont.*

TIRUVALLUVAR TEMPLE—
See Temples

TRAFFIC SURVEY—
Question *re* cost of Scientific equipments purchased by Highways Research Station, Madras for—during last five years 147–148

(TRANSFERRED TERRITORY) RYOTWARI SETTLEMENT ACT, 1964—
Revenue Department Notification II-1 No. 1303 of 1965, dated 20th March 1965, amendment to—, notification laid on the table 115

TRANSPORT—
Question *re*—
Lightning Express Buses plying from Madras to Madurai, provision of inclined seats with head rest in 59–60
Lightning Express Buses, remodelling of seats in. 58–59

TRAVELLING ALLOWANCE—
Question *re* payment of—to teachers attending Panchayat Union Offices on duty 223–224

TRUSTS—
Question *re* number of—administered by Administrator-General 141–142

V

VASANTHA PAI, THIRU G.—
Condolence Resolution *re* death of Rajagopalachariar, Thiru C., former Chief Minister of Tamil Nadu and former Governor-General of India 20–23
Governor's Address, discussion on 164

VENKATESWARA DIKSHIDAR, THIRU Y.—
Governor's Address, discussion on 252–263

PAGES

V—*cont.*

VIGILANCE COMMISSION—

Fifth Annual Report, from 1st April 1970 to 31st March 1971, laid on the table 117

VILLAGE OFFICERS SERVICE RULES, 1970—

Amendment to—, notification laid on the table ... 118

W

WAREHOUSES ACT, 1951—

Inclusion of Agro-Chemicals in schedule to—, notification laid on the table 115

WATER SOURCES IN NORTH ARCOT DISTRICT—

Question *re* investigation of new 54–55

WATER SUPPLY—

Question *re* Drinking—Scheme for Sivaganga Town, completion of 281

63079

LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU
GOVERNMENT PUBLICATIONS.

Messrs. Account Test Institute, Egmore, Madras-8.
The City Book Co., Mylapore, Madras-4.
Messrs. Higginbothams (Private) Limited, Madras-2.
Messrs. New Century Book House (Private) Limited, Madras-2.
Messrs. P. Varadachari & Co., Madras-1.
Messrs. C. Subbiah Chetty & Sons, Madras-5.
Sri S. S. Srinivasaraghavan, Royapettah, Madras-14.
The Educational Agencies, Book-sellers, Madras-1.
The Universal Book House, Moore Market, Madras-3
Messrs. C. Sitaraman & Co., Madras-14.
Messrs. Mohan Pathipagam and Book Depot, Madras-5.

IN MUFASSAL OF TAMIL NADU.

Sri E. M. Gopalakrishna Kone, Madurai, Madurai district.
Sri A. Venkatasubban, Vellore, North Arcot district.
Messrs. Bharatha Matha Book Depot, Thanjavur, Thanjavur district
Messrs. P. V. Nathan & Co., Kumbakonam, Thanjavur district.
Messrs. Appar Book Stall, Thanjavur.
Messrs. P. N. Swaminathasivam & Co., Pudukkottai, Tiruchirappalli district
Messrs. S. Krishnaswami & Co., Tiruchirappalli district.
Messrs. Palaniappa Brothers, Tiruchirappalli district.
Sri S. R. Subramania Pillai, Tirunelveli, Tirunelveli district
Messrs Nellai Puthaga Nilayam, Book-sellers 10, Thana Muna Buildings. Tirunelveli Junction.
Sri B. Aruldoss, Villupuram Town, South Arcot district.
Sri V. B. Ganesan, Villupuram, South Arcot district.
Messrs. Vasantham Stores, Book-sellers, Cross Cut Road, Coimbatore.
Messrs. Mercury Book Company, 223, Raja Street, Coimbatore.
Sri S. M. Jagannathan, Book-sellers and Publishers, Nagercoil. Kanyakumari.
Messrs. A. K. Chandriah Chettiar and Sons, Salem-1.
Messrs. Meenakshi Pathippagam, Pudukkottai.
Messrs. K. V. Narayana Iyer and Sons, Dindigul, Madurai district.
Messrs. Balaji Book House, Vellore, North Arcot district.
Messrs. Jayakumari Stores, Nagercoil, Kanyakumari district.
Messrs. Baby Stores, Book-sellers, Villupuram, South Arcot district.
Messrs. Dinamani Stores, Coimbatore-18.
Messrs. Bharathi Puthaga Nilayam, Publishers and Book-sellers, 1-B, Town Hall Road, Madurai-1.

IN OTHER STATES.

Messrs. Jain Book Agencies, New Delhi-1.
Messrs. International Book House, Trivandrum.
Messrs. Firma K. L. Mukhopadhyay, Calcutta-12.
Messrs. Book Links Corporation, Narayanaguda, Hyderabad-29
Messrs. The Book Syndicate, Hyderabad-1.
Messrs. Labour Law Publications, Hyderabad.

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS ON THE AUTHORITY OF THE CHAIRMAN OF THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL

80 RF Ref 61 3508